TEXT FLY WITHIN
THE BOOK ONLY

UNIVERSAL LIBRARY
OU_208075
UNIVERSAL LIBRARY

# மனித வாழ்க்கையும்
# காந்தியடிகளும்

திரு. வி. க.

# மனித வாழ்க்கையும்
# காந்தியடிகளும்

ஆக்கியோர் :

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

ஐந்தாம் பதிப்பு

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை
1946

உரிமை
ஆக்கியோருடையது

விலை
ரூ. 5—0—0

Printed at the Sadhu Press, Royapettah, Madras.
P. I. C. No. M. S. 115—Copies 1000—10-8-46

# முன்னுரை

'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை'—திருவள்ளுவர்

அன்பர் போலக் சென்னையில் ஒருமுறை காந்தியடிகளைப்பற்றிப் பேசிய பேச்சு முதல் முதல் எனது உள்ளத்தில் காந்திய விதை விதைத்தது. பின்னைச் சிறியேன் காந்தியடிகளை நேரே காணவும், அவரியக்கத்தில் சேர்ந்து உழைக்கவும் ஆண்டவன் அருள் கூட்டிற்று. காந்தியடிகள போதனையால் எனக்குளளே நேர்ந்துவரும் மாறுதல் எனக்கன்றோ தெரியும்? இளமையில் யான் பயின்ற சில ஆங்கில நூல்களினதும் தமிழ் நூல்களினதும் பொருளாக மகாதமா காநதி எனனறிவில் இன்று விளங்குகிறார். அவ்விளக்கம், அரணுக நினறு என வாழ்வைப் பண்படுத்தி வருகிறது. 'யான் பெற்ற இன்பம பெறுக இவ் வையகம்' என்பது திருமூலர் திருவாக்கு. காந்தியடிகள் வாழ்வினுள்ள நுட்பத்தையும், அவர் அறிவுறுத்தும அறத்தையும் தமிழுலகம் உணர்ந்து உய்ய வேண்டுமென்னும் அவா இநநூலை விரித்தெழுத என்னைத் தூண்டிற்று. இதனைக் கடனையன்றி வேறெத்தகைக கடனைத் தமிழுலகிற்கு ஏழையேன் ஆற்ற வல்லேன்!

இந்நூலை எழுதப் புகுந்த ஒவ்வொரு போதும, அதன் பொருட்டுக் காந்தியடிகள் அமுத மொழிகளடங்கிய—ஜி. ஏ. நடேசனும், எஸ். கணேசனும் வெளியிட்ட—புத்தகங்களையும் 'யங் இந்தியா' பத்திரிகை இதழ்களையும், பக்கம் பக்கமாக ஊன்றிப் படித்தபோதும், ஆங்காங்குள்ள உயரிய கருத்துக்களை அகழ்ந்தெடுத்தபோதும், பற்பல இடங்களில் பதுங்கிக் கிடக்கும் அவைகளை, ஈயானது பலதிறப் பூக்களினின்றும் தேனைக் கொணர்ந்து கூட்டில் ஒருங்கே சேர்ப்பதுபோல, ஒழுங்காக முறைப்படுத்தியபோதும், அவைகளைத் தமிழில் பெயர்த்தெழுதிய போதும், எனது மனம் பொய்யும் பொறாமையும் பகைமையுஞ்

செறிந்த துன்புலகை மறந்து, மெய்யும் பொறுமையும் அன்பும் மலிந்த இன்புலகில் தவழ்ந்து கொண்டிருக்கும். இவ்வின்புலகி னின்றும் இழியும் நேரங்களில் எனது முன்னைய வாழ்வில் நிகழ்ந்த பல மாறுதல்களுள் இரண்டு, எனது நினைவில் அடிக்கடி உறும். ஒன்று, யான் இரவும் பகலும் ஒரு பெருங் குறிக் கொண்டு சென்னை வெஸ்லி கலாசாலையில் ஆங்கில மயமாக நின்று பயின்று மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் போகுந்தறு வாயில், எனக்குத் தேனென இனித்துவந்த ஆங்கிலத்தை வேம் பெனக் கைக்குமாறுசெய்து, என் மனத்தை அந்தமிழில் தோய்த்த தாண்ட யாழ்ப்பாணம் - நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் கூட்டுறவு; இன்னொன்று, பின்னைப் பலர்பால் தமிழ் பயின்று அவ்வெஸ்லி கல்லூரியிலேயே தலைமைத் தமிழாசிரியனா யமர்ந் திருந்தபோது பற்பல பாடபுத்தகங்கள் எழுதுதற்குச் செய்யப் பெற்ற ஏற்பாடுகளை யொட்டி, அம்முயற்சியில் யான் தலைப்பட்ட நேரத்தில், ஐரோப்பாப் பெரும் போரிடை நமது நாட்டிலெழுந்த சுய ஆட்சிக் கிளர்ச்சியும், அதுபோழ்து நேர்ந்த அன்னிபெஸண்டு அம்மையார் சிறைக்காவலும் அம்முயற்சியைத் தகைந்து, 'தேச பக்தன்' ஆசிரிய பீடத்தை ஏற்குமாறு செய்தமை. இவ்விரு நிகழ்ச்சியும் எனது வாழ்வைக் குலைத்தன என்று உறவினருஞ் சுற்றத்தாரும் இன்றுங் கூறுவதுண்டு. இவ்விரண்டும் நிகழா தொழிந்திருக்குமேல் எனது வாழ்வு நூல் எவ்வாறு திரிக்கப்பட் டிருக்குமோ? காந்தியடிகள் வாழ்வின் வாயிலாக இன்புலகம் இஃதென்று இன்று உணரவும், உணர்ந்தவாறு எழுதவும், அன்று அத்தடைகள் நிகழ்ந்தன போலும்! அப்பழைய நிகழ்ச்சிகள் இந்நூல் எழுதப் புகுந்த வேளையில் நினைவில் உறுவானேன்? நிழலில் நிற்கும் போதன்றோ வெயிலின் கொடுமை நினைவு தோன்றுதலியல்பு?

1917௵ டிசம்பர்௴ 7௳ முதல் 1920௵ ஜூலை௴ 22௳ வரை, யான் 'தேசபக்தன்' ஆசிரிய பீடத்தமர்ந்து, என்னு

வியன்ற தொண்டு செய்து வந்தமை தமிழுலகிற்குத் தெரியும். அக்கால எல்லைக்குள் இரண்டு ஆண்டு மடல்கள் (வருட அநுபந்தங் கள்) வெளிவந்தன. முதலாண்டு மடலில் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னுங் கட்டுரையொன்று என்னால் வரையப் பெற்றது. அக்கட்டுரை பின்னை 1921-ம் ஆண்டு ஐம்பத்தோரு பக்கங்கொண்ட ஒரு சிறு நூலாக முதல் முதல் வெளியிடப் பட்டது.

அப்பதிப்பு முற்றுஞ் செலவழிந்ததும், நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிட உன்னியபோது, 'இதை என் விரித்து எழுதலாகாது' என்னும் விருப்பம் இடையீடின்றி எழலாயிற்று. அவ்விருப்பம், ஐம்பத்தொரு பக்கங்கொண்ட சிறு நூலை, இரண் டாம் பதிப்பில், சுமார் ஐந்நூறு பக்கங் கொண்ட விரிந்த நூலாக எழுதச்செய்தது. ஓர் ஆண்டு மடலில் அடங்கிய கட்டுரை இரண்டாம் பதிப்பிலேயே பெரு நூலாக விரிந்தது.

இரண்டாம் பதிப்பில் நூலை விரித்து எழுதப் புகுந்த நாட் களில் எனக்கு நேர்ந்த இடுக்கண்கள் பற்பல. அவற்றையெல் லாம் ஈண்டு விரித்துக் கூற வேண்டுவதில்லை.

நூலை ஒரே முறையில் தொடர்ந்து எழுதினேனில்லை. எனக்குள்ள பல வேலைகளுக்கிடையே ஓய்ந்த நேரங்களில் நூலை எழுதலானேன். நூலை எழுதுவதினும் அடிகள் அறவுரைகளைத் திரட்டுவதில் பெரும்பொழுது போகலாயிற்று. நூலினூடே ஆங்காங்கே எடுத்துக் காட்டாக ஆண்டுள்ள அடிகளின் மெய் யுரைகள் பெரிதும் 'யங் இந்தியா'வினின்றும், மேற்குறிப்பிட்ட புத்தகங்களினின்றும் திரட்டி மொழிபெயர்க்கப்பட்டன. சிற்சில நினைவிலிருந்து எழுதப்பட்டன. இவையுங் கருத்துக்கு மாறு பட்டிரா என்பது ஒருதலை.

1926-ம் ஆண்டு வெளிவந்த இரண்டாம் பதிப்பு, 1927-ம் ஆண்டிலேயே செலவாயிற்று. மூன்றும் பதிப்பை வெளியிடப் போதிய ஓய்வையும், வாய்ப்பையும் எதிர்நோக்கிக் கொண்டிருந்

தேன். சிறிது ஓய்வும் வாய்ப்புங் கிடைத்த வேளையில், இரண்டாம் பதிப்பிலுள்ள சிற்சில குறைபாடுகளை, மூன்றும் பதிப்பில் களைந்து ஒழுங்குபடுத்தலாம் என்று, அப்பணியில் புகுந்தபோது, என் மனைவி மக்களை அழைத்து, என்னைத் தன்னந்தனியனாக்கிய ஆண்டவன், எங்கள் ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாய், என் தமையனார் - திருவாளர் - திரு. வி. உலகநாத முதலியார்க்கு இன் புதல்வனாய், எனக்கினியனாய், எனக்குப் பின்னே எனது சிறு தொண்டேற்று நடாத்தும் அறிவுந் திறனும் பண்பும் வாய்க்கப் பெற்றவனாய்ச், செங்குருத்தென வளர்ந்து, சென்னை வெஸ்லி கல்லூரியில் இன்டர்மிடியேட் வகுப்பில் படித்துவந்த - என் கண்மணி - திரு. உ. பாலசுப்பிரமணியனையும் அழைத்துக் கொண்டான். இத்துன்பச் சூழலிடைச் சிறியேன் நின்று மூன்றும் பதிப்பை 1928-ல் ஒல்லும்வகை முயன்று ஒழுங்கு படுத்தி ஒருவாறு முற்றுறச் செய்தேன்.

சூழ்ந்து அடர்ந்த துன்பங்களிடைக் காந்தியடிகளின் உரைகளும், அன்பொழுக்கமும் இன்ப இருக்கையெனத் துணை புரிந்தன என்று கூறுவேன். துன்பத்துக்கு மருந்து காந்தியமென்பது அறியற்பாற்று.

நான்காம் பதிப்பில் புதுப் பொருள் சில ஆங்காங்கே சேர்க்கப்பட்டன. முன்னைய பதிப்புக்களை விரைந்து அச்சிட்டு வெளியிடல் நேர்ந்தமையால், ‘பிழை திருத்தம்’ ஓய்ந்து பார்த்துச் செய்யும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இப்பதிப்பில் ஒல்லும் வகை பிழைகள் களையப்பட்டன.

இவ் **வைந்தாம் பதிப்பு** எனது உடலில் உற்ற முதுமையையும், தளர்ச்சியையும், மெலிவையும் கண்டது. இப்பதிப்பில் சிற்சில புதுப் பொருள்கள் சேர்க்கப்பட்டன. மார்க்ஸியத்துக்கும் காந்தியத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பொறிக்கப் பெற்றதை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கிறேன். வேறு சில ஒழுங்குகளுஞ் செய்யப்பட்டன.

இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று. இஃது அவர் வரலாற்றிலுள்ள நுட்பங்கள் மனித வாழ்க்கையோடியைந்து நிற்கும் முறையை உணர்த்துவது—அதாவது **காந்தியத்தை** அறிவுறுத்துவது. இந்நூற்கண் விளங்கும் முதற்பொருள் மூன்று. (க) மனிதன் எவன் என்பது (உ) ஒருவன் மனிதனாக எத்தகைய வாழ்க்கையை நடாத்தல் வேண்டும் என்பது (ங) மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மா காந்தி என்பது.

முதற்பகுதியில் மனிதப் பிறவியின் விழுப்பமும், மனிதன் எவன் என்பதும் ஓதப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் வாழ்க்கையின் புறத்தூய்மைக்கும் அகத்தூய்மைக்கும் உரிய முறைகளும், வாழ்வின் முடிந்த நிலை இன்னது என்பதும், அந்நிலைபெற்ற சில சத்தியாக்கிரகிகளின் வரலாறுகளுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றாம் பகுதியில் காந்தியடிகளின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, தியாகம், உண்மை, தொண்டு, அறம், அன்பு முதலியவற்றினின்றுந் திரண்ட காந்தியம் விளக்கப்பட்டிருக்கிறது.

இந்நூற்கண் ஒரே கருத்துப் பொதுவகைபற்றி முதலிரு பகுதியிலும், சிறப்பு வகைபற்றி மூன்றாம் பகுதியிலும் நுவலப் பெற்றிருத்தலால், ஒவ்வொன்றற்குமுள்ள தொடர்பு பெரிதுங் கருதற்பாலது. நூலை முற்றிலும் வாசித்தாலன்றி அத்தொடர்பு புலனாதலரிது. ஆதலால், நூலை முற்றும் வாசித்து இயைந்த முடிபு காணுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.

நூற்கண் அறிந்தோ அறியாமலோ பிழைகள் நிகழ்ந்திருக்கலாம். அப்பிழைகளை அறிஞர் பொறுத்தருள்வாராக.

இராயப்பேட்டை
5—8—1946

திருவாரூர்-வி. கலியாணசுந்தரன்

# அருளுரை

‘ பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென ’

—இளங்கோவடிகள்

‘ தலைவர்க ளெல்லாந் தனித்தனி வணங்குந்
தலைவனை யின்றுமென் னுளமும்
மலைவிலென் அறிவும் நானும்இவ் வுலக
வழக்கிலே உயிரிரக் கத்தால்
இலகுகின் றனம்நான் என்செய்வேன் இரக்கம்
எனையாயின் என்னவே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கிலென் னுயிரும்
நீங்குநின் திருவுளம் அறியும்’

அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெல்லாம் அறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் **சன்மார்க்கப்** பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடியில் யானும்
உடையாயுங் கலந்தோங்கு மொருமையும்வேண்டுவனே ’

—இராமலிங்க சுவாமிகள்

*

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை முதலியன i—xvi

அடிகள் வாழ்த்து 3

I—*மனிதன்* *5—15*

*மனிதப் பிறவியின் விழுப்பம் - மக்கள் - மாக்கள் - மனிதன் எவன் ?*

II—*வாழ்க்கை* *17—102*

க. கீதா ரகசியம் : 22—28

*கருத்து வேற்றுமை - உரை கண்டவர் - போர்க்களத்தில் இல்லறத்தானுக் கறிவுறுத்தல் - பயன் கருதா அருளறம் - அருச்சுனன் தெளிவு - இருபிறப்பு - இல்லற நோக்கம்.*

உ. திருக்குறள் நுட்பம் : 28—31

*அதிகார முறை வைப்பின் நோக்கம் - இல்லற மாண்பு - அருளறம் - நாட்டு அறநூல்கள்.*

ங. சில முறைகள் : 31—49

*இளமைப் பயிற்சி - நற்பிள்ளைப்பேறு - மார்க்கண்டேயர் - பெற்றோர்ப்பேணல் - கல்வியும் ஒழுக்கமும - மணவாழ்க்கை - தலைவன் தலைவி அன்பில் ஒன்றல் - எளிய வாழ்வு - செல்வன் வாழ்வு - உணவு - உடை - அன்பு வளர்ச்சி - உயிர்ச் சார்பு - இன்பப்பேறு - துறவு - நாயன்மார்.*

ச. உடலோம்பல் : 49—52

*உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு - ஞானிகள் நோக்கம் - உடம்பின் அருமை.*

ரு. வாய்மை : 53—55

*வாய்மையில் பிற அறங்கள் - வாய்மை உயிர்.*

பக்கம்

சு. மெய்யறிவு 55—60

விலங்கும் மனிதனும் - மெய்யறிவின் இயல்பு - மனச் சான்று - பழிக்குப் பழி - இயற்கை வாழ்வில் மெய்யறிவு.

எ. பொறுமை : 60—72

மெய்யறிவில் பொறுமை - பொறுமையுங் கடவுளும் - நான்கு குணங்கள் - அடக்கம் - உள்ள நிறை - உண்மை - அன்பு - பொறுமையாளன் இயல்பு - அரசியல் - இந்திய முறை - வருணாச்சிரமம் - அரசு - இக்கால அரசியல் - பொறுமையாளர் கடன் - பொறுமை - பொருமை.

அ. ஆன்ம சக்தி : 72—76

உள் ஒலி - ஆத்ம சக்தி - முழு ஆத்ம சக்தி - ஆத்ம சக்தி யும் பூத சக்தியும்.

கூ. சத்தியாக்கிரகம் : 76—80

உண்மை கடைப்பிடி - சத்தியாக்கிரகிகள் இயல்பு - துராக் கிரகம் - அச்சுறுத்தல் - தியாகம்.

க0. சத்தியாக்கிரகிகள் : 81—99

ஊடல் - மார்க்கண்டேயர் - பிரகலாதன் - அரிச்சசந்திரன் - வசிஷ்டர் - புத்தர் - ஸோக்ரதர் - கிறிஸ்து - மகம்மது - சீதை சாவித்திரி முதலியோர் - திருநாவுக்கரசர் - மெய்ப்பொருள் நாயனர் - பிரான்ஸிஸ் முனிவர் - தால்ஸ்தாய் - தோரி முதலி யோர் - இயற்கையறம் சத்தியாக்கிரகம்.

கக. சாது நிலை : 100—102

சாது எவன்?

பக்கம்

III—காந்தியடிகள் 103—536

க. மகாத்மா - அடிகள் : 105—110

பொருள் - மகாத்மா - மகான் - சில அடிகண்மார்-புது உலகம் - காரல் மார்க்ஸ் - சிறியவுடலில் பெரிய ஒளி.

உ. பிறப்பு : 110—134

பிறப்பின் பெற்றி - தாய்மைச் சிறப்பு - அடிகள் பிறந்த நாள் - அடிகளின் தாய் தந்தையரியல்பு - அடிகள் அந்தணர் - பண்டைக்கால வருணச்சிரமம் - இடைக்கால வருணச்சிரமம் - காந்தியடிகள் வருணச்சிரமம் - உயர்வு தாழ்வு - உடனுண்ணல் முதலியன - அடிகள் வருணச்சிரம விளக்கம் - தீண்டாமை - அடிகளும் தீண்டாமையும் - பெண் பிறவி - அன்பால் குறை களைதல்.

ங. கல்வி : 134—164

கல்வி எது ? - இயற்கைப் பெருங்கழகம் - நாட்டுக் கல்வி - இயற்கை மொழி - தாய் மொழியும் அடிகளும் - கல்வி அறிவு ஒழுக்கம் - இசை - சிலம்பப் பயிற்சி - பெண் கல்வி - அடிகள் சொல்வழி நிற்றல் - கலையும் சுயராஜ்யமும் - பொது மொழி - ஹிந்தியும் மற்ற மொழிகளும் - தமிழ் - அடிகளுந் தமிழும் - தமிழ் மக்கள் தியாகம் - அடிகள் தமிழ் நாட்டில் பிறத்தல் வேண்டுமென்பது.

ச. பெற்றோர்ப் பேணல் : 164—178

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் - தாய் - தீண்டாமையும் அடிகள் அன்னையாரும் - அடிகள் புலால் உண்ணல் - அடிகளின் மூன்று உறுதி மொழிகள் - இங்கிலாந்தில் அடிகளுக் குற்ற சோதனைகள் - துளசிமணி - அடிகள் தந்தையாரிடங் குறை களை முறையிடல் - ஒழுக்கக் கால்கோள்.

பக்கம்

ரு. இல்லறம் : 179—202

இல்லறமே நல்லறம் - அடிகளும் இல்லறமும் - மணம் - இக்கால மணம் - இளமை மணம் - பெண்ணுரிமை - அடிகளின் இல்லறம் - அடிகளின் இளமை - அடிகளின் மனைவியார் - துறவு நுட்பம் - பெண்மக்களும் அடிகளும் - வழுக்கிய சகோதரிகள் - பிரமசரியம்.

சு. தியாகம் : 202—223

தியாகமும் அன்பும் - அவனன்றி ஓரணுவும் அசையாது - ஆண்டவன் அடிகளைத் தடுத்தாளல் - அடிகள் மனிதராய இடம் - நிறவேற்றுமை - தென்னாப்பிரிக்காத் துன்பக் காட்சிகள் - ஆன்ம நிவேதனம் - பகைவரை நேசித்தல் - அன்புப் போர்.

எ. இயற்கை வாழ்வு : 223—294

செல்வம் நல்குரவு - வாழ்க்கைக் கூறுகள் - கிறிஸ்து மொழிகள் - செல்வ வாழ்வின் சிறுமை - பழைய இந்திய வாழ்வு - மேலைத்தேச வாழ்வு - அடிகள் வாழ்வு - தர்பன் ஆசிரமம் - உடலோம்பல் - உடற்பயிற்சி - பிரமசரியம் - பிரமசரியத்தின் உண்மை - அடிகளும் பிரமசரியமும் - பிரமசரியத்துக்கு வழி - சுவை அடக்கம் - உணவு முறை - உண்ணா நோன்பு - இயந்திரக் கொடுமை - கவியரசரும் ராட்டையும் - ராட்டை மாண்பு - மார்க்ஸியமும் காந்தியடிகளும் - பெண்ணின் இன்றியமையாமை - எளிமை - முனைப்பு - தற்பெருமை அழிவு - கைக்குடையால் காத்த பெண்ணரசி - கன்னி எமிலி ஹாப ஹௌஸ் - அவதாரம் - அடிகளின் வாய்மை - காப்புச் சான்றுகள் - நீதிமன்றத்தில் வாய்மை - ரஸ்டம்ஜி வழக்கும் வாய்மையும் - உண்மையும் அஞ்சாமையும் - அடிகளின் அஞ்சா வினைகள் - மெய்யறிவு.

அ. அஹிம்சை : 295—351

'பரமோ தர்ம:' - அஹிம்சையும் சமயமும் - ஊன் உண்ணாமை - தீண்டாமை - பிறர்பிழை பொறுத்தல் - நோன்

பக்கம்

பிருத்தல் - இடனில் பருவத்துங் கடனாற்றல் - பிறர் பொருட்டு அடிகள் வருந்தல் - சட்டமறுப்பு - இந்தியாவும் அஹிம்சையும் - அஃறிணை உயிர்களிடத்தன்பு - பலி - அஹிம்சையைப்பற்றிய சில ஐயப்பாடுகள் - இராஜ வாழ்த்தும் அஹிம்சையும் - அடிகள் மீது சில பழிகள் - பிச்சையும் அஹிம்சையும் - பாம்பு முதலியன - இயற்கையறம் அஹிம்சை - விருக்ஷ தேவர் - புது உலகம் - மார்க்ஸியம்.

௯. சுதேசியம் : 351—363

சுயராஜ்யமும் சுதேசியமும் - பன்மையில் ஒருமை - சுதேசிய மறப்பாலுறுங்கேடு - சுதேச ஆட்சி - பாரத மக்களும் சுதேசியமும் - காந்தியடிகளும் சுதேசியமும் - சுதேசியமும் உரிமையும்.

௧௦. சுயராஜ்யம் : 363—377

ஆத்ம சுயராஜ்யம் - கடவுள் படைப்பு நோக்கம் - உடலும் நாடும் - தூய்மையும் நாடும் - உரிமை இயல்பு - பாரத நாடும் சுயராஜ்யமும் - இடைக்காலக் கொடுமைகள் - கருத்து வேற்றுமைக்கு மதிப்பு - சாதி சமயப்போர் - நாட்டுத் தொண்டு - அடிகளும் சுயராஜ்யமும்.

௧௧. சத்தியாக்கிரகம் : 378—458

பொருள் - காலம் - தோற்றம் - சத்விளக்கம் - திருத்தவழி முறைகள் - சத்தியாக்கிரகி யார்? - குறைபாடுகள் - உயிர் உடல் வாழ்வு - சத்தியாக்கிரகம் - சத்தியாக்கிரகமும் அடிகளும் - கூர்ஜரப் பாட்டு - கிறிஸ்துவின் மலைப்பொழிவு - சத்தியாக்கிரக ஆசிரம விதிகள் - சட்டமும் சத்தியாக்கிரகமும் - தென்னாப்பிரிக்கா - நீதிமன்றமேறல் - சட்டமீறல் - சாம்பரான் - கெய்ரா - ரௌலட் சட்டம் - சத்தியாக்கிரக நாள் - அறிக்கைகள் - அடிகளின் ஆன்மசக்தி விழுப்பம் - பாஞ்சால எழுச்சியும் கொலையும் - பகைவர்பால் காழ்ப்பின்மை - ஒத்துழையாமை - அதன் இயல் -

பக்கம்

அடிப்படை அன்பு - ஆக்க அழிவு முறைகள் - ஒழுங்கு - தாகூரும் அடிகளும் - அடிகள் இயற்கைப் பாவலர் - சத்தியாக்கிரக விரதம் - பகைமையை அன்பால் மாற்றல் - சட்டமும் அறமும் - சட்ட வரம்பு - சிறைப்பாடுபாடுகள் - சிறையும் உரிமையும் - ஒத்துழையாமையின் தோல்விக்குக் காரணம் - சத்தியாக்கிரக மொழிகள்.

கஉ. சமய வாழ்வு : 458—522

சமயப்பொருள் - உண்மை மனிதன் - முழுமுதற் பொருளுண்மை - சத் சித் ஆனந்தம் - கடவுள் மனிதன் தொடர்பு - அஹிம்சையே சமயம் - சமயப் போர் - சமரசம் - சமய வாழ்வின் அருமை - அவ்வாழ்வுக்குரிய படிகள் - சமய வாழ்வினன் இயல்பு - அடிகள் சமயம் - அடிகள் இளமையில் நண்ணிய மறத்துறையும் அறத்துறையும் - மூடபக்தி - பகவத்கீதையின் உட்கிடக்கை-பாரத நுட்பம் - கடவுளிடத்துறுதி - ஒரே கடவுள் - பல சமயங்களிலும் அடிகள் அறம் - அடிகள் சமயம் சமரச சன்மார்க்கம் - கடவுளுறுதிக்கு அறிகுறி அஞ்சாமை.

கங. சாது நிலை : 523—527

சமய வாழ்வின் பயன் சாது நிலை - உலகமும் சாதுவும் - திலகரும் காந்தியும் - சாது உலகைத் துறத்தல் வேண்டுவதில்லை - சாதுக்களால் உலகம் நடைபெறல்.

கச. தொகுப்பு : 527—536

பிறர்க்குரிய வாழ்வு - பெரியோர் வருகை - அடிகள் வாழ்வு - நூலின் பெரும் பிரிவுகள் - அடிகளின் அறவுரைச் சுருக்கம் - அடிகள் ஞாயிறு - அஞ்ஞாயிற்றின் எழ்கதிர் - இன்பப்பேறு - வாழ்த்து.

# மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

# வாழ்த்து

சாந்தமயம என இலங்குந் தனிபபொருளை உளத்தென்றும்
ஏந்தியுயிர் தமக்கெல்லாம் இனிமைசெய உலகிடையே
போந்தகுண மலையாகும் புனிதநிறை கடலாகுங்
காந்தியடி இணைமலரைக் கருத்திருத்தி வழுத்துவமே.

திரு. வி. க.

மனிதப்பிறவி திடீரென்று முகிழ்த்திராது. எதுவும் திடீரென்று புதிதாக முகிழ்த்தல் அரிது. ஒன்றிலிருந்து ஒன்று முகிழ்ப்பது இயற்கை. புதுமைத் தனித் தோற்றம் எதற்கும் இல்லை. இது விஞ்ஞானியர் கண்ட உண்மை. ஆகவே, மனிதப் பிறவி ஏதேனும் ஒன்றிலிருந்தே தோன்றியிருத்தல்வேண்டும். அவ்வொன்று இன்னதென்று விஞ்ஞானியரால் காணப்பெற்றுள்ளது. அது விலங்கு - குரங்கு.

மனிதத் தோற்றம்

மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ளனவற்றுள் ஒவ்வொன்றாய், அவ்வவ்வளவில் படிப்படியே வளர்ந்தவன்; பின்னே விலங்காகி - குரங்காகி - அதைக் கடந்து முதிர்ந்தவன். இது மனிதனது வரலாற்றுச் சுருக்கம். இதனால் மனிதனுக்கும், அவன்றன் சூழல்கட்கும் உள்ள தொடர்பு விளங்குதல் காண்க.

இத்தொடர்பைக் காணும் அளவில் மனிதன் முயற்சி நின்றதில்லை. அவனது முயற்சி மேலும் மேலும் வளர்ந்து சென்றது. மற்றுமொரு தொடர்பு மனிதனுக்குப் புலப்பட்டது. அத்தொடர்பு, மனிதன்-அவன்றன் சூழல் முதலிய எல்லாவற்றின் தோற்றத்துக்கும் நிலைக்களனாயிருப்பது. அஃது எல்லாவற்றின் தோற்றத்துக்குமட்டுமன்றி, அவற்றின் ஒடுக்கத்துக்கும் நிலைக்களனா யிருப்பது. ஆனால் அதற்கோ தோற்றமுங் கிடையாது; ஒடுக்கமுங் கிடையாது. தோற்றமும் ஒடுக்கமும் உடைய ஒன்று, எல்லாவற்றின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் நிலைக்களனாயிருத்தல் இயலாதன்றோ?

எல்லாவற்றிற்கும் நிலைக்களன்

எல்லாவற்றிற்கும் நிலைக்களனாயுள்ள ஒன்றே இறை என்பது. இறை, மனிதன் உள்ளிட்ட எல்லாவற்றிலும் நீக்கமற நிற்குந் தொடர்பு கொண்டது. இத்தொடர்பற்ற உயிருமில்லை; பொருளுமில்லை; இடமுமில்லை; எதுவுமில்லை. இத்தகைய ஒரு பெருந் தொடர்பைத் தெளிந்த மனிதனுக்கு ஏதாவதொன்று வேறாகத் தோன்றுமோ? தோன்றாது. எதற்கேனுந் தீங்கு செய்ய அவன் மனம் எழுமோ? எழாது. அஹிம்சா தர்மம் அதாவது அருளறம் இன்னது என்று அவனுக்குப் புலனாகும்.

அஹிம்சை

மனிதன் எவன்? உன்னுவோம். மனிதன் தன்னந் தனியனல்லன். அவன் மண் முதல் - இறை வரை - தொடர்புடையவன். மனிதன் அஹிம்சையில் உறைபவன்; அருளாளன்.

அஹிம்சா தர்மம் - அருளறம் விளங்குதற்குக் கருவியாயுள்ளது மனிதப் பிறவி. அப்பிறவி விழுமிய தன்றோ? அது விழுமியதே.

மனிதப் பிறவி விழுமியதென்று கூறாத அறிஞ ரில்லை. பாரிடைத் தோன்றிய அறிஞர் பலரும் 'மனிதப் பிறவி விழுமியது' என்று ஒருமுகமாக உரைத்துப் போந்தனர்.

உலகில் ஒன்றைப்பற்றி ஒருமைக் கருத்து எழுதல் அரிது. அரிதில் ஒன்றெழுமாயின், அஃது எத்தகைமை யுடையதாயிருக்குமென்று சொல்லலும் வேண்டுமோ? அஃது எவரும் ஏற்கத்தக்க உண்மையுடையதாயிருந்தே தீரல்வேண்டும்.

**மனிதப் பிறவியின் விழுப்பம்**

மனிதப் பிறவியின் விழுப்பத்தைக் குறித்து யாண்டும் ஒரே கருத்து உலவுதல் வெள்ளிடைமலை. இஃதொன்றே மனிதப் பிறவியின் விழுப்பத்தை உறுதி செய்தற்குப் போதிய சான்றாகும்.

இவ்விழுமிய ஒருமைக் கருத்து நந்தமிழ்ச் சான்றோர் உள்ளத்திலும் மலர்ந்திருக்கிறது. அவர் மனிதப் பிறவியின் மாண்பைப்பற்றி வாய்மலர்ந்த செம்மொழிகளிற் சில வருமாறு :—

*' மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே '

*' வாய்த்தது நந்தமக்கு ஈதோ பிறவி மதித்திடுமின் '

*' இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே '

†' அரிது அரிது மானுடராதல் அரிது '

பற்பல பிறவிகளுள் மனிதப் பிறவிமட்டுஞ் சிறந்து விளங்குதற்குக் காரணமென்னை ? அப் பிறவியில் அஹிம்சை விளங்குதற்குரிய கருவி கரணங்கள் அமைந்திருத்தலான் அப்பிறவி சிறந்ததாகிறது.

**வேற்றுமையும் அறிவும்**

உயிர்கள் பலநிறம். அவைகளில் எவ்வித வேற்றுமையும் இல்லை. உயிர்கள் உடலைப்பெற்ற பின்னரே அவைகளிடத்துப் பலதிற வேற்றுமைகள் தோன்றுகின்றன. வேற்றுமை, உயிரைப்பற்றியும் நிற்கவில்லை; உடலைப் பற்றியும் நிற்கவில்லை. அஃது உயிரும உடலும் ஒன்றுபட்டு வாழ்க்கையுறுங் காலத்தே உண்டாகிறது.

---

*அப்பர். †ஔவையார்.

உயிரும் உடலும் ஒன்றுபடுங்காலத்து அறிவு விளக்கம் பெறுகிறது. அவ்விளக்கம், உயிர்கள் புகும் உடலுக்கேற்றவாறும், அவ்வுடலுள் அரும்புங் கரணங்கட்குத் தக்கவாறும் மிளிர்ந்து மிளிர்ந்து படிப்படியாக விரிந்து வளர்கிறது. அவ்வவ் வளர்ச்சிதோறும் வேற்றுமை உற்றுக்கொண்டே போகிறது. இதுபற்றியே உயிர்கள் கூட்டம் அறுவகையாக நம் முன்னோரால் பிரிக்கப்பட்டதுபோலும்.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியலில் உயிர்கள் *அறுதிறமாக வகுக்கப்பட்டிருப்பதைக் காண்க. அவை ஓரறிவுயிர்களாகிய தாவரமுதல் ஆறறிவுயிர்களாகிய மனிதர் ஈருக உள்ளன. அவ்வுயிர்களிடை அறிவு விளக்கத்தில் முறை முறையே வேற்றுமை விளங்குதல் கண்கூடு.

மனிதனுக்கு அடுத்தபடியாக உள்ள விலங்குக்கு ஐந்தறிவு உண்டு. மனிதனுக்கோ ஆறறிவு உண்டு. ஆருவது அறிவே மன உணர்வு எனப்படும். மன உணர்வு விலங்குகளிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் விளக்கமின்றிக் கிடக்கும். அவ்வுணர்வு மனிதப் பிறவியி

---

* 'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'

—தொல்காப்பியம் : மரபு - 27

லேயே கூர்ந்து விளங்குகிறது. அது பகுத்தறிவு என்றுஞ் சொல்லப்படும். மன உணர்வுடையோன் மனிதன் என்க.

சுவை (ரசம்), ஒளி (ரூபம்), ஊறு (ஸ்பரிசம்), ஓசை (சப்தம்), நாற்றம் (கந்தம்) என்னும் ஐந்தறிவும் மனிதனுக்கும், விலங்குக்கும் பொதுவாயிருப்பன. பகுத்தறிவென்னும் மன உணர்வு மனிதப் பிறவியில் மட்டுங் கூர்ந்து விளங்குவது. இவ்வொன்றை மனிதன் சிறப்பாகப் பெற்றிருத்தலான், அவன் விலங்கினும் மேலாகப் போற்றப்படுகிறான். அவன் பிறவி விழுமியதென்றுங் கொள்ளப்படுகிறது. இது பொது முறை. இதற்குப் புறனடையும் உண்டு.

'மனித உடல் தாங்கிய அனைவரிடத்தும் பகுத்தறிவு விளங்குகிறதா ? அவ்வறிவு விளங்கப்பெற்ற எல்லாரும் அதன்வழி நின்றொழுகுகின்றனரா ?' எனில் இல்லையென்க. சிலரிடம் பகுத்தறிவு விளங்குவதேயில்லை. அவ்வறிவு விளங்கப் பெறுவோருள்ளும் பலர் அதன்வழி நின்று ஒழுகுகிறாரில்லை. இவ்விருசாராரும் ஓரினத்தவரேயாவர் ; இவரல்லாத பிறரே மனிதராவர்.

இக்காரணம் பற்றியே மனிதவுடல் கொண்டோர் இருதிறமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார். ஒரு கூட்டத்தவர் மக்களெனப்படுவர் ; மற்றொரு கூட்டத்தவர் மாக்களெனப்படுவர். முன்னவர் மன உணர்வென்னும் ஆறாவதறிவுடையவர் ; பின்னவர் அது விளங்கப்பெறாதவர். *'மக்கள் தாமே ஆறறி வுயிரே', †'மாவு மாக்களும் ஐயறி வினவே' என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

மக்கள்
மாக்கள்

*588. †587.

சரித்திர காலத்துக்கு முன்னரே நந்தமிழ் மக்கள் மெய்ப்பாட்டானும், அகத்திணையானும் உயிர்களின் புற நிகழ்ச்சிகளையும் உள் நிகழ்ச்சிகளையும் அளந்து, உயிர்க் கூட்டங்களை, அவைகளின் அறிவு விளக்கத்துக்கேற்ற வாறு வகுத்துத் தொகுத்திருக்கிறார்கள். அத்தகைய தமிழ் மக்களின் நுண்ணறிவு இதுகாலை, 'பாழ்பட்டதே' என்று இரக்கமுறுத வேறென்செய்வது ? மனிதப்பிறவி யில் விளக்கமுறும் மனவுணர்வென்னும் ஆறுவதறிவுவழி நின்றொழுகுவோரே மனிதராவர் ; ஏனையோர் விலங் கனையாரென்க.

ஆறுவது அறிவு விளங்கப்பெற்று, அதன்வழி நிற் கும் மனிதன், தன்னுயிரைப் போலவே மன்னுயிரையும் பார்ப்பன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டுநிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை 'மற்றவர்க்கே' என்று அவன் கருதுவன். அவன் கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐம்பெரும் பாவங் களுக்கு அஞ்சுவன். அவன் கரணங்களெல்லாம் அன்பு வண்ணமாகப் பொலியும். விலங்கியல்பு அவனிடத்தில் தோன்றுதல் அருமை. அன்னான் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வன். இன்னோ ரன்ன இயல்புகள் வாய்ந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

மனித விளக்கம்

மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோர் தமது உட லையே பொருளாக்கொண்டு, தமது நலங்கருதி உலகத் தில் வாழ்தல் தவறு. அங்ஙனம் வாழ்வோர் விலங்கு போன்றவர் ; மாக்கள் எனப்படுவர். அக்கூட்டம் உள்ள

வரை உலகத்தில் போரும் பிணக்கும், நியாயமன்றங்களும், சிறைக்கூடங்களும், மருத்துவச்சாலைகளும், இன்ன பிறவும் பெருகிக்கொண்டே போகும்.

இப்பொழுது உலகத்தில் பலர் மனிதச் சட்டை போர்த்து மாக்களாகத் திரிதல் வெள்ளிடைமலை. அன்னார் இன்னும் மனிதராய் வாழ்கின்றாரில்லை. உலகத்தில் மக்கள் கூட்டம் பெருகல் வேண்டும்; மாக்கள் கூட்டம் அருகல்வேண்டும். அந்நாள் எந்நாள்?

**கடவுள் துணை**

அந்நாள் அணித்தோ? சேய்த்தோ? அதை அணித்தே காண்டல்கூடும். அது மனிதன் முயற்சியைப் பொறுத்து நிற்பது. மனிதன் முயற்சியெனில் கடவுள் என்செய்கிறார் என்று சிலர் கருதலாம். கடவுளைப்பற்றி உலவுந் தவறான எண்ணங்களுள் இஃதும் ஒன்று. கடவுள் துணை என்றும் ஒரு பெற்றியதாகவே யிருக்கும். அதன்கண் மாறுபாடு என்றும் உறுவதில்லை. அதை அடையவேண்டுவது பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் கடமை.

கடவுள் எல்லாவற்றையுங் கடந்தும், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமறக் கலந்தும் நிற்கும் பேரறிவு. அக்கடவுள் உண்மையை எங்ஙனம் உணர்வது? கலந்தநிலை என்னும் இயற்கையின் வாயிலாகவே அதன் உண்மையை உணரல்கூடும்.

உயிர் உடல்போலக் கடவுளும் இயற்கையும் இருக்கின்றன. இத்தொடர்பை நோக்கியே 'கடவுளை அப்பனென்றும், இயற்கையை அன்னையென்றும் புலவர் கூறிப் போந்தனர்.

கடவுள் என்னும் நம் அப்பன், இயற்கை என்னும் நம் அன்னை வாயிலாகவே உயிர்களின் விளக்கத்துக்கு வேண்டப்படுங் கடன்களை ஆற்றியிருக்கிறான். இயற்கையின்வழி மனிதன் நிற்க நிற்க அவன் கடவுளின் அருட்டுணையைப் பெற்று அருளாளனாவன். இயற்கைக்கு மாறுபட்டு நிற்பவன் கடவுள் துணை பெறாது மருளனாய் இடர்ப்படுவன். ஆகவே, கடவுள் என்செய்வார்? கடவுள் செய்வதைச் செய்தேயிருக்கிறார்.

மன்பதை முற்றும் இயற்கைவழி நிற்கும் நாள் எந்நாளோ அந்நாளே அருளுலகம் முற்றும் மலரும் நாளென்க. அந்நாளை அணித்தே காண்டல் மனிதன் கொள்ளும் வாழ்க்கையைப் பொறுத்து நிற்கிறது. அவ்வாழ்க்கை எது?

# II வாழ்க்கை

# II

## வாழ்க்கை

இனி மனித உடல் தாங்கியுள்ளோரை மக்களாக்கும் வாழ்க்கை எது என்பதைச் சிறிது ஆராய்வோம். மனித உடல் பெற்ற அளவில் ஒருவனது பிறவி நோக்கம் நிறைவேறியதாகாது. பிறவிக்கேற்ற வாழ்க்கையில் அவன் நண்ணுதல் வேண்டும். அப்பொழுதே அவனது பிறவி நோக்கம் இனிது நிறைவேறுவதாகும். மனிதப் பிறவியின் நோக்கம் என்னை? மனிதப் பிறவியின் நோக்கம், உயிரை அறியாமையென்னுங் கட்டினின்றும் விடுதலை செய்வித்து, அதை அஹிம்சையில் - அருள் நெறியில் - நிறுத்தி, முழு அறிவுநிலை என்னுங் கடவுள் நிலையை அதற்குக் கூட்டுதல் வேண்டுமென்பது. இதுவே வீடுபேறென்றுஞ் சொல்லப்படும்.

*மனிதப் பிறவியின் நோக்கம்*

இப்பேற்றை உயிர்கட்கு வழங்க இறைவன் வடிவான இயற்கை அன்னை துணை செய்கிறாள். எப்படி? அவள், மரம்-செடி-பறவை-விலங்கு முதலிய உடலங்களை உயிர்கட்கு ஈந்து ஈந்து, அவைகளின் அறியாமையைப் படிப்படியாகக் கல்விக் கல்வி நீக்குகிறாள்; முடிவாகப் பகுத்தறிவு விளக்கத்துக்கு நிலைக்களனான மனித உடலை உயிர்கட்கு நல்குகிறாள். தன்னை இந்நிலைக்குக் கொணர்ந்த இயற்கை அன்னையின் துணையை மறவாது, மேலும் மேலும் அதைப் பெற்றுய்ய, அவள்வழி நிற்கும் வாழ்க்கையில் மனிதன் தலைப்படுதல் வேண்டும். இயற்கையோடியைந்த வாழ்வில் புகும் மைந்தன்மீது, இயற்கை அன்னை தண்ணருள் பொழிந்து, அவனது அறியாமையை முற்றும்

*இயற்கை வாழ்க்கை*

போக்கத் திருவுள்ளங் கொள்கிறாள். உயிர்களின் அறியாமையைப் போக்கி, அவைகளை முழு அறிவுநிலை என்னுங் கடவுள் நிலையில் சேர்க்கத் துணைபுரிவது, இயற்கை அன்னையின் இயல்பு. அவ்வியல்புக்கேற்ற கடனை அவள் ஆற்றியே தீர்வள். அக்கடனை அவள் எப்பொழுது ஆற்றுவள்? அவள் தன்னுடன் இயைந்த வாழ்க்கையில் மனிதன் தலைப்பட்டபோழ்தே தனக் குரிய கடனை ஆற்றுவள். இதை எவரும் மறவாது உலகில் வாழ்க்கை நடாத்தக் கடவர்.

இயற்கை அன்னையின் துணையால் பெற்ற பகுத் தறிவு விளக்கத்தை, வேறு செயற்கைத் துறைகளில் செலுத்தும் மனிதன், தன் முழு அறிவு விளக்கத்துக்கு அவளது திருவருளைப் பெறுதல் அரிது. அவன் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் துன்பச் சேற்றில் வீழ்ந்து வீழ்ந்து நெளிந்துகொண்டே போவன். அவன் பிறவி நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயலாத மறவோன் ஆகிறான். ஆகவே, மனிதன் தன் பிறவி நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள இயற்கையோடியைந்த வாழ்க் கையை நடாத்தப் புகுதல்வேண்டுமென்க.

இயற்கையோடியைந்து ஒருவன் வாழ வாழ, அவன் இயற்கையின் இயல்பை நாளடைவில் பெறுகிறான். இயற்கையின் இயல்பு யாது? இயற்கை தன்னலங் கருதாது உயிர்நலன் நாடி உழைத்தல் உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வியல்பு வாய்ந்த இயற்கையோடியைந்து வாழும் மனிதனும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வோனுவன். மனிதனுக்குரிய வாழ்க்கை இதுவேயாகும்.

**இயற்கையின் இயல்பு**

மனித வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாகவே தொடங்கியது. அவ்வாறே அவ்வாழ்க்கை வளர்ந்திருப்பின், உலகம் இந்நாளில் தெய்வத்தன்மை எய்தியிருக்கும்.

வாழ்க்கையில் மாசு

மனித வாழ்க்கை நாளடைவில் இயற்கை நெறியினின்றும் வழுக்கி வழுக்கி விலகுகிறது. அவ்விலக்கம் வாழ்க்கையில் பலதிறச் செயற்கை மாசுகளை நுழைக்கிறது. செயற்கை மாசுகளைச் செகுத்துத் தன்னெறியில் மக்கள் வாழ்க்கையைச் செலுத்தவேண்டுவது இயற்கை அன்னையின் கடன். இயற்கை அன்னை அவ்வப்போது தன் கடனை ஆற்றியே வருகிறாள்.

இயற்கை அன்னை சிற்சிலர் வாயிலாகத் தனது நெறியை அறிவுறுத்துவது வழக்கம். அச்சிலர் சான்றோர் எனப்படுவர். சான்றோர் எந்நாளிலுந் தோன்றுவர்;

சான்றோர்

இந்நாளிலுஞ் சிலர் தோன்றியுள்ளனர். இயற்கை அன்னை சான்றோர் வாயிலாகவே உலகை நடாத்துகின்றனள். சான்றோர் இல்லையேல் உலகம் ஏது? வாழ்க்கை ஏது?

சான்றோர் கால தேச வர்த்தமானங்கட்கு ஏற்ற வண்ணம் வாழ்க்கை நெறியை அறிவுறுத்துவது மரபாகியது.

நூல்

சான்றோர் அறிவுறுத்தல், நூல்களாகியும் வாழ்க்கை நெறியை ஓம்பி வருகிறது. சான்றோர் நூல்களாய் வழிகாட்டுகின்றனர் என்றுங் கூறலாம்.

சான்றோர் நூல்கள் பல உண்டு. அவைகளுள் மக்கள் வாழ்க்கையுங் காந்தியடிகளும் நெஞ்சில் உறும் போதெல்லாம் சில நூல்கள் நினைவிற்கு வருகின்றன.

இங்கே சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று பகவத் கீதை ; மற்றொன்று திருக்குறள்.

இவ்விரு நூலின் உள்ளக்கிடக்கையையும், (மக்கள்) வாழ்க்கையின் கூறுகளையும், அவைகளை அரண்செய்யும் பிற துறைகளையும் சுருங்கிய முறையில் நிரலே விளங்க் கூற ஒல்லும்வகை முயல்கிறேன்.

## க. கீதா ரகசியம்

பகவத் கீதையின் நுட்பத்தைச் சில உரைகளால் பகர்வது சாலும் என்று கருதுகிறேன். பகவத் கீதையின் கருத்தைப் பலர் பலவாறு கூறுப. பகவத் கீதையைப் பயின்று, எல்லாவற்றையும் வெறுத்து, எவ்வித வினையையும் ஆற்றாது தனித்து வாழ்வோருமுளர். அந்நூலை நன்கு ஆய்ந்து, பிறர்க்குழைப்பதே வாழ்வின் நோக்கம் என்னும் முடிவு கண்டு, தொண்டு செய்வோருமுளர். போரைக் கிளந்து கூறும் நூல் கீதை என்று சொல்வோரு முளர். 1907-ம் ஆண்டு வங்காளத்தில் எழுந்த சுதேசிய இயக்கத்தில் சேர்ந்த தேசபக்தர் பலர், மன எழுச்சிக்குரிய நூலாகக் கீதையைக் கொண்டனர். கீதை பலதிறக் கருத்துக்களைத் தன்னகத்தே அடக்கியுள்ள ஒரு நூல் என்பது அறிஞர் பலர் ஒப்பமுடிந்த உண்மை. காலத்துக்கேற்ற அறத்தை விளக்குவது கீதை என்று சுருங்கச் சொல்லலாம்.

கருத்து வேற்றுமை

கீதைக்கு முன்னாளில் சங்கரர், இராமாநுஜர் முதலியோர் உரை கண்டனர் ; இந்நாளில் லோகமான்ய

பாலகங்காதர திலகர், அரவிந்த கோஷ் முதலியோர் நுண்பொருள் விரித்துள்ளனர். இத் துணைச்சிறப்பு வாய்ந்த நமது நாட்டு நூலொன்றன் உள்ளக்கிடக்கையை உணரவேண்டுவது நமது கடமை.

உரைகள்

பகவத் கீதை போர்க்களத்தில் புகலப்பட்டதென் பதை எவரும் மறத்தலாகாது. அஃதோர் இல்லறத்தா னுக்கு அறிவுறுத்தப்பட்டதென்பதுங் கருதற்பாலது. அந் நல்லறத்தான் அதைச் செவிமடுத்த பின்னர்க் காட்டுக்கோட ஒருப்படாது, போர்முனையில் நின்று போர்புரிந்து வாகைமாலை சூடியதும் உன்னத்தக்கது. இன்னோரன்ன பல குறிப்புக்களைக் கருத்திலிருத்திக் கீதா ரகசியமுணர்ந்து வாழ்க்கையின் நுட்பங்காண முயல்வது அறிவுக்கு அழகு.

நூல் பல விடுத்து, ஈண்டுக் கீதையை முதலாவதாக யான் கொள்வதற்குச் சீரிய காரணமொன்றுண்டு. அஃது, எப்பெரியார் வாழ்வை உன்னி இந்நூல் எழுதப் புகுந்தேனே, அப்பெரியார் வாழ்வைப் பண்படுத்திய நூல்களுள் பகவத்கீதை சிறந்த ஒன்றாதலால், அதன் மீது எனது கருத்துப் பதிந்தமையாகும்.

உலகத்திலுள்ள சிறந்த நூல்களுள் பகவத்கீதை யும் ஒன்றென்பதை எவ்வறிஞரும் மறுக்கமாட்டார். அந்நூலின் திரண்ட பொருள் உலகத்தில் மனிதன் தன் னலங் கருதாது பிறர் நலங் கருதி வாழவேண்டுமென்பது. இவ்வுண்மையை ஈண்டுச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க முற்படுகிறேன்.

அருச்சுனன் முதன்முறை குருக்ஷேத்திர யுத்த களத்தை அடைந்ததும் எதிரிகளைச் சிறிது உற்று

நோக்கினான்; நோக்கியபோது, 'அந்தோ! தோன்றி நின்று அழியுந்தன்மையதாகிய இம்மண்ணுலக வாழ்வின் பொருட்டு என்னருமைப் பாட்டனையும், குருவையும், சகோதரரையுங் கொல்ல என் மனம் ஒருப்பட்டதன்றோ! இவரைக் கொன்று நான் உலகை ஆள எண்ணியது அறியாமை. இவரே உலகை ஆள்க. யான் துறவு பூண்டு காட்டிற்குச் செல்கிறேன்' என்ற எண்ணம் அவனிடம் தோன்றிற்று. அவ்வெண்ணம் அவனது மனத்தை உடைத்தது. அருச்சுனனின் உள்ளந் தளர்ந்தது; வில்லுஞ் சாய்ந்தது. அவனது மன எழுச்சியுங் குன்றியது. அருச்சுனன் சோர்வு தேர்ச்சாரதியாகிய கண்ணபிரானுக்குப் புலனாயிற்று. கண்ணபிரான் அவனை நோக்கி, 'நண்பனே! என்னை? உன்னிடத்தில் ஊக்கம் குறைந்திருத்தல் தெரிகிறது. சிறிது தளர்ச்சி உற்றிருக்கிறாய் போலும்! அத்தளர்ச்சி நிகழ்ச்சிக்குக் காரணமென்னை?' என்று வினவினர்.

**அருச்சுனனும் இரு பிறப்பும்**

அதற்கு அருச்சுனன், 'சுவாமி! நிலையுதலில்லாத இவ்வுலக இன்பத்தை நான் நுகரும் பொருட்டுப் பாட்டன் குரு முதலியவரைக் கொல்ல என் நெஞ்சம் எழவில்லை' என்றான். கண்ணபிரான் புன்னகைபுரிந்து, "நண்பனே! உன்னிலைக்கு இரங்குகிறேன். 'பாட்டன் முதலியோரைக் கொன்று நான் உலகத்தை ஆளல்வேண்டும்' என்ற எண்ணங்கொண்டுள்ள அருச்சுனனை யான் வெறுக்கிறேன். அவன் அழிக. 'கொடுங்கோல் தாங்கி உயிர்களை வருத்திவரும் துரியோதனாதியரைக் கொன்றால் உலகத்தில் அறம் வளரும்' என்னும் எண்ணங் கொள்

ளும் அருச்சுனனை யான் விரும்புகிறேன் ; அவ்வருச்சுனன் எழுக" என்றார். இவ்வருள் மொழிகள் அருச்சுனன் செவியில் உற்றதும், அவன் உள்ளமும் கரணங்களும் ஒருவகை மாறுதலடைந்தன. அவன் உலகத்தில் தன் பொருட்டு வினைகளை (கருமங்களை)ச் செய்தல் அறியாமை என்பதை உணர்ந்து கொண்டான். பிறர் பொருட்டு வினையாற்றுவதே அறிவுடைமை என்னும் பயன்கருதா (அதாவது நிட்காமிய) உணர்ச்சி அவன்பால் அரும்பிற்று. இத்தகைய உணர்ச்சி பெறுவதே இரண்டாவது பிறப்பை அடைவதாகும். இந்நிலை எய்துவோரே இருபிறப்பாளர் எனப்படுவர். (ஆன்மபோத) முனைப்பால் தம்பொருட்டு உலகில் வாழுஞ் சிலரை இருபிறப்பாளர் என்று கூறுவது பெரும் பிழை. கண்ணபிரான் செம்மொழி கேட்டதும் தன் பொருட்டுப் போர் புரிதல் வேண்டும் என்ற அருச்சுனன் மாண்டான் ; பிறர் பொருட்டு வாழ்தல் வேண்டும் என்னும் அருச்சுனன் பிறந்தான்.

அருச்சுனன் தேர்மீதே அமர்ந்திருந்தான் ; அவன் வில்லை ஏந்திய வண்ணமிருந்தான் ; அவன் போர்க்கோலமும், பொன்னணியும், பிற ஒப்பனையும் இருந்தபடியே இருந்தன. அருச்சுனன் நிறத்தில் மாறினானில்லை ; உடலில் மாறினானில்லை ; அமைப்பில் மாறினானில்லை. ஆனால் அவன் எண்ணத்திலும் செயலிலும் மாறுதலடைந்தான். அவன் எண்ணமுஞ் செயலும் பிறர்க்கே பயன்படுவனவாயின.

மனிதன் எத்தகை வழக்கவொழுக்கமுடையனாயினும் ஆக ; எத்தகைத் தொழின் முறையில் ஈடுபட்டவ

ளுயினும் ஆக; அரசனுயிருப்பினும் இருக்க; ஆண்டியா யிருப்பினும் இருக்க; நீதிபதி தொழில் செய்யினுஞ் செய்க; வாயில் காப்பு வேலை புரியினும் புரிக; எவரெவர் எந்நிலையில் நிற்பினும் நிற்க; எக்கோலங் கொள்ளினுங் கொள்க. மெய்யறிவு என்னும் ஞானம் பெற எவருங் காட்டுக்குப் போகவேண்டுவதில்லை. நடு நாட்டில் மனைவி மக்கள் உற்றார் பெற்றார் உறவினர் இவரோடு வாழ்ந்தும், பலவகைத் தொழில்களைச் செய்தும் ஞானியாகவே இருக்கலாம். வேண்டுவது ஒன்றே. அது, 'நாம் பிறர்க்காக வாழ்கிறோம்' என்னும் எண்ணங்கொண்டு வாழ்வதேயாகும்.

ஞானியின் இயல்பு

மனிதன் எவ்வினை நிகழ்த்தப்புகினும் அவ்வினையின் பயன் பிறர் நலம் நாடி எழுவதாயிருத்தல் வேண்டும். மனைவியை மணத்தலும் பிள்ளை பெறுதலுங்கூட தன் பொருட்டென்று அவன் கருதலாகாது. எவனொருவன் இழிவாகிய காமக் கிளர்ச்சிக்கெனப் பெண்ணை விரும்பி மணஞ் செய்கிறானே அவன் நிரையம் எய்துவனென்றும், எவன் ஒருவன் பிள்ளைப் பேறு கருதி மனைவாழ்க்கையில் தலைப் படுகிறானே அவன் அருளாளனாய் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று அழியா இன்பத்தை நுகர்வனென்றும் நமது நாட்டு அறநூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. நம்மவர் எவ்விடத்தில் பயன் கருதாத் தொண்டை அதாவது நிட்காமிய கர்மத்தை நுழைத்திருக்கிறார் என்பதை இந்நாளறிஞர் ஓர்ந்து உண்மை தெளிவாராக. தான் எவ்வாறு உடல்

இல்லற நோக்கம்

தாங்கவும், அவ்வுடல்வழி இவ்வுலக இன்பத்தையும் அதன்வழி வீட்டின்பத்தையும் நுகரவும், தன் தாய் தந்தையர் நடாத்திய இல்வாழ்க்கை கருவியாக நின்றதோ, அவ்வாறே இவனும் அவ்வாழ்க்கையைக் கருவியாக்கொண்டு சில உயிர்களை உடல் தாங்குமாறு செய்து இன்பத்தை நுகர்விக்க வேண்டுமன்றோ? இல்லையேல் இவன் பரோபகாரமென்னும் ஒப்புரவு நெறியை அழித்த பாவியாவன். ஒப்புரவு வளர்ச்சிக்குரிய மனைவாழ்க்கையைத் தனது இன்பத்துக்கு உரிமையாக்கிக் கொள்வது விலங்கு வாழ்வை நடாத்துவதாகும். எதைச் செய்தாலும் பயன் கருதல் என்னும் காமியம் விடுத்துப் பயன் கருதாமை என்னும் நிட்காமிய வழிநின்று செய்தல் வேண்டுமென்பது நம் அறவோர் கருத்து.

மனையறத்தைப் பயன்கருதா வழியில் நடாத்தப் புகும் ஒருவனது வாழ்வு, எவ்வாறு பண்பட்டுத் தூய்மையுறும் என்பதை யான் விரித்துக் கூறவேண்டுவதில்லை. அவனுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் பிறர்நலம் நாடுவோராகவே வாழ்வரென்று சொல்வது மிகையாகாது. பிறர் நலம் நாடுஞ் செந்நெறி வளர்ந்துவரின் ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு தெருவும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு நாடும், உலகமும் ஒப்புரவைக் குறிக்கொண்டே நிலவும். இத்தகைய வாழ்வை அடிப்படையாக்கொண்ட நமது நாட்டிலும் இந்நாளில் எத்தகைய மணங்கள் நடைபெறுகின்றன?—அந்தோ! சொல்லலும் வேண்டுமோ?—

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன் ; அவனது வாழ்க்கையே வாழ்க்கை.

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்வது இயற்கையோடியைந்த வாழ்வென்று மேலே சொல்லப் பட்டது. இயற்கை தன்பயன் கருதி எவ்வினையையும் நிகழ்த்தாததுபோல, அதனுடன் இயைந்து நின்று வாழ்வு நடாத்தும் ஒருவனும் தன்பயன் கருதி ஒன்றையும் நிகழ்த்தான். அவனது வாழ்வே இயற்கை வாழ்வாகும். பகவத்கீதையின் அறிவுறுத்தல், பயன்கருதா இயற்கை வாழ்வை நடாத்தி மக்கள் உய்தல்வேண்டுமென்பது. இதுவே கீதையின் நுட்பம்.

## ௨. திருக்குறள் நுட்பம்

தமிழ் நாட்டு நூல்களில் எவரும் போற்றும் பேறு பெற்றுத் தலைமை நிலை எய்தியுள்ளது திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறள். அத்திருக்குறள்

**வாழ்வே திருக்குறள்**

என்ன அறிவுறுத்துகிறது ? மனிதன் பிறர் நலங் கருதும் அருளாளனாய் வாழ்தல் வேண்டும் என்னும் உண்மையை அறிவுறுத்துகிறது. இதனைத் திறக்குறள் அதிகார முறைவைப்பே இனிது வலியுறுத்தும். திருவள்ளுவனார், பாயிரத்தில் அறத்திறங் கூறுமுகத்தான், 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறம்' என்றும், 'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் - இழுக்கா இயன்ற தறம்' என்றும் அறத்தின் இயல்பு இஃதென விளக்கி, அவ்வறநிலையை எய்துதற்கு உயிர்க

ளிடத்தன்பும், அதன்வழி அருளும் வளர்தற்குரிய வாழ்வு முறைகளைக் கோலிக்கொண்டு போகும் முறைப்பாட்டை உற்றுநோக்குவோர்க்கு 'மனித வாழ்வே திருக்குறள் நூலாகப் பொலிகிறது' என்னும் நுட்பம் இனிது விளங்கும்.

திருவள்ளுவனார் முதலாவது இல்வாழ்க்கையைக் கொண்டதும், அதன்பின் அதற்கு இன்றியமையாத வாழ்க்கைத் துணைநலத்தை அமைத்ததும், அதன்புடை மக்கட்பேற்றைப் புகுத்தியதும், அதன்பக்கல் அன்பைப் பெய்ததும், அதன் சார்பில் விருந்தோம்பலை விளக்கியதும், பிறவும் உயிர்களிடத்து அன்பு படிப்படியே வளர்ந்து வளர்ந்து செல்வதை உணர்த்துவன என்பது ஆராய்ச்சியால் நன்கு புலனாகும். அன்பு வளர்ந்து வளர்ந்து எவ்வுயிரினும் ஆண்டவன் உண்மையைக் காணும் அருள்நிலை கூட்டுவதைத் திருவள்ளுவனார் தொடர்ந்து அறிவுறுத்துவதுங் கருதற்பாற்று. 'மனத்துக்கண் மாசில னாகும்' அறநிலை பெறுதற்கு அன்பெனும் இல்வாழ்க்கையைப் பல அதிகாரங்களால் படிப்படியே வகுத்துக்கூறி, அவ்வற வாழ்க்கை உலகிடை வளர்தற்கு இன்றியமையாத அரசு அமைச்சு கல்வி தொழில் முதலியவற்றையும் திருவள்ளுவனார் பொருளில் புகுத்தினார். இம்முறையில் திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் மனிதனுக்குரிய இயற்கை வாழ்வுநிலை வெள்ளிடைமலையென விளங்குதல் காணலாம்.

அன்பு வளர்ச்சி

'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்'

'அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு'

'இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'

'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு'

'மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை'

எனவரூஉந் திருக்குறட்பாக்களை உற்று நோக்குக.

திருக்குறளின் இயற்கை யற நுட்பத்தை, 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' என்னுந் தலைப்பீந்து யான் எழுதிய ஒரு நூலில் ஒல்லும்வகை முயன்று விரித்துக் கூறியுள்ளேன். திருக்குறளின் நுட்பமும், மனித வாழ்க்கை பிறர்க்குக் கிழமை பூண்டொழுகும் இயற்கை நோக்குடையதா யிருத்தல்வேண்டுமென்பதே.

திருக்குறள் மொழிபெயர்ப்பைத் தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் அடிக்கடி பார்ப்பது வழக்கமாம். இக்காரணத்தானும் திருக்குறள் ஈண்டுக் கொள்ளப்பட்டதென்க.

சிறப்பாக இரண்டு நூற்கருத்துக்களை ஈண்டு எடுத்துக்காட்டினேன். நமது நாட்டு வேறு அற நூல்கள் பலவும் மனிதன் பிறர்க்குக் கிழமை பூண்டு வாழவேண்டுமென்பதைப் பெரிதும் அறிவுறுத்துவன. வேதம் முதல் இதிகாச புராணம் ஈறாகவுள்ள எல்லாக் கலைகளின் உட்கிடக்கையும், பயன் கருதாமை என்னும் நிட்காமிய கருமத்தைக் குறிக்கொண்டு நிற்கிறது. நமது நாட்டு வாழ்வு அத்

கலைகளின் கருத்தொருமை

தகைத்து. வாழ்வுக்கேற்ற நூல்கள் வெளிவரல் இயல்பு. நமது நாட்டுப் பழைய நூல்கள் நம்முன்னோரின் வாழ்வு நிலையை அறிவிக்குங் கருவிகள் என்பதை நாம் உணர்வோமாக; உணர்ந்து நடக்க உறுதிகொள்வோமாக.

கீதையும் குறளும் அறிவுறுத்தும் ஓர் அறத்தையே உலகில் நாலு பக்கங்களிலுந் தோன்றிய அறவோர் பலரும் அறிவுறுத்தியுள்ளனர். அறவோர் அனைவரும் உலகவர்; சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றைக் கடந்தவர். அவர் அருளிய 'தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்தல்' என்னும் அறம் மக்கள் வாழ்க்கையில் படிந்து ஒன்றின், சாதி மதம் முதலியவற்றைப்பற்றி எழுந்த சிறுமைச் சமூகங்களெல்லாம் மறையும்; உலகமே ஒரு சமூகமாகும்; உலகம் ஒவ்வொருவரது தாய்நாடாகும்.

உலகம் ஒரு சமூகம்

## ௮. சில முறைகள்

பிறர்பொருட்டு வாழ்தல் என்னும் இயற்கை வாழ்விற்கு அடிகோலும் முறைகள் பலபடக் கிடக்கின்றன. அவைகளை அறநூல்களிற் காண்க. சிலவற்றை மட்டும் ஈண்டுக் கூற எண்ணுகிறேன். பிறர்பொருட்டு வாழ்தல் என்னும் இயற்கை வாழ்வு நடாத்தலை அரிதாகவுங் கொள்ளலாம்; எளிதாகவுங் கொள்ளலாம். இளமை தொட்டு, ஒப்புரவு உள்ளம் அரும்புமாறு வாழ்வை ஒழுங்குபடுத்துவோர்க்கு அவ்வாழ்வு நடாத்தலில் எவ்

றிற்கு இன்றியமையாதன. தமக்குப் பிறக்கும் மக்கள் பண்புடையவர்களாமாறு அவர்களை நல்வழியில் வளர்க்கத் தாய் தந்தையர் கடமைப்படல் வேண்டும்.

பெற்றோர்ப் பேணல்

இளமையிலேயே பிள்ளைகள் கல்வி கற்குமாறும், கற்கும்வழி நிற்குமாறும், அவர்களைப் பெற்றோர் வளர்த்து வருதல் சிறப்பு. இளையான், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'தந்தை தாய் பேண்' என்பன போன்ற முதுமொழிகளைப் பயின்று, தன்னை ஈன்ற அன்னையையும் அப்பனையுங் கடவுளாகத் தொழுது வழிபட்டு வருவானாயின், அவன் வாழ்வு, பின்னே எல்லா உயிர்களிலும் அம்மை அப்பனாகிய ஆண்டவனைக் காணும் பேறு பெற்று, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் ஒப்புரவில் முடியும். ஆசிரியன் மாணாக்கர்க்கு அறிவுறுத்தத் தக்க முதற்பாடம் தாய் தந்தையரைத் தெய்வமாக வழிபடல்வேண்டுமென்பது. தாய் தந்தையரைத் தெய்வமாகப் போற்றுவது ஒருவனது நல்வாழ்வின் தொடக்கமென்க.

நல்வாழ்வெனும் வான் பயிர் ஓங்கி வளர்வதைத் தகைய அறியாமையினின்றும் பல களைகள் முளைக்கும். அக்களைகளை அவ்வப்போது அறிவால் களைந்து கொண்டே போதல் வேண்டும். களைகளை முளைப்பிக்கும் அறியாமையைக் கல்லி, அறிவு விளக்கம் பெறுதற்கு நன்னூல்களைத் தக்கார்மாட்டுக் கேட்டுத் தெளிவடைவது நல்லது. வயிற்றுக்கும் பட்டத்துக்குமே படிப்பது கல்வியாகாது. உடல் வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்கும் உறுதுணை செய்யுங் கல்வியே வேண்டற்பாலது. கல்வியின் இன்றியமையாமையை என்னென்று கூறுவது? வாழ்விற்குக் கல்வி கண்ணன்றோ? கற்றவரே கண்

கல்வியும் ஒழுக்கமும்

ணுடையார். ஏனையோர் புண்ணுடையார். ‘ கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் ’ என்றார் ஞானசம்பந்தர். ‘ கல்லாத மூடரைக் காணவு மாகாது ’ என்றார் திருமூலர். ‘ விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் - கற்றாரோ டேனை யவர் ’ என்றார் நாயனார். கல்வியில்லா ஒருவன் தன் வாழ்வில் பெறற்கரிய பேற்றை இழந்தவனாகிறான். அவன் எத்துணைச் செல்வம் பெற்றிருந்தாலென்னை ? கல்விச் செல்வத்தின் முன்னே மற்றச் செல்வங்கள் என்னும் ?

கல்வியை இளமையில் பயில்வது பொருத்தம். இளமை கல்விக்கென இயற்கையால் வழங்கப்படுவது. அதனை வேறு வழியில் செலவழிப்பது இயற்கைக்கு மாறுபட்டு நடப்பதாகும். இளமையை மாறுபட்ட வழியில் கழிப்பவனது வாழ்வு முற்றும் இடர்ப்பட்டுக் கொண்டே போகும்.

இளமையில் கல்வி தேவை ; பின்னை அக்கல்விக் கேற்ற வாழ்க்கை - நடை - ஒழுக்கம் - தேவை. ‘ கற்க கசடறக் கற்பவை கற்றபின் - நிற்க அதற்குத் தக ’ என்றார் திருவள்ளுவனார். கல்வியும் ஒழுக்கமும் உடல் உயிர்போல வாழ்விடை வளரல் வேண்டும். இளமையில் கற்கும் கல்வியை ஒழுக்கத்தில் கொணர்தற்கென்று இயற்கையில் அறநெறி என்பது அமைந்துள்ளது. அறநெறியாவது மனைவாழ்க்கை.

கல்வியென்பது (வாழ்க்கைப்) பொருளை உணர்த்துவது. அவ்வுணர்வைச் செயலாக்குவது மனைவாழ்க்கை.

**மனைவாழ்க்கை**

மனிதனிடத்துள்ள விலங்கு நீர்மைகளைப் படிப்படியாக அழித்து அவனை அன்பனாக்குவது அவ்வற வாழ்க்கை. மனிதன் பிறர்க்கு

உழைத்தற்குரிய அறநெறிக்கு வேண்டப்படும் கூறுகளை யெல்லாம் திரட்டி அவன்பால் கூட்டுவது அப்பெரு வாழ்க்கை. மனைவாழ்க்கையில் தலைப்படாத ஒருவன், அன் பின் நீர்மையையும் அருளின் தன்மையையும் எவ்வாறு உணரவல்லான்? அன்பும் அருளும் நூலறிவால் பெறும் பொருள்களல்ல. கூடி வாழ்தல் என்னுஞ் சேர்க்கை வாழ்க்கையில் அச்சீரிய பொருள்களைப் பெறலாம்.

அத்தகைய மனை வாழ்க்கையை வெறுப்பது இயற்கையை வெறுப்பது போலாம். இயற்கையை வெறுத்து மனிதர் எவ்வாறு வாழ்தல் கூடும்? மண் புனல் தீ வளி வெளி வாழ்விற்கு எவ்வாறு இன்றியமையா தனவோ அவ்வாறே ஆணுக்குப் பெண்ணும் பெண் ணுக்கு ஆணும் இன்றியமையாதன. இறைவன் படைப்பு முற்றும் ஆண் பெண் வடிவாயிலங்கும்போது, ஆண் பெண்ணை முனிவதும், பெண் ஆணைக் காய்வதும் இறைவன் ஆணையாம் இயற்கையைப் பழித்து வாழ்வைக் குலைத்துக் கொள்வதாகும். ஆதலால், ஒருத்தி ஒருவ னுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் கூடிவாழும் வாழ்வு இயற்கை வாழ்வெனப்படும். மற்றையது இயற்கைக்கு மாறுபட்ட வாழ்வாம்.

மனைவியொடு வாழும் அனைவரும் இயற்கை வாழ்வு நடாத்துவோர் என்று கூற யான் துணியேன். மனை வாழ்வை இயற்கை இன்பவாழ்வாக்க மனிதன் முயலல் வேண்டும். மனிதன், மனைவியைச் செயற்கை அணி களால் அழகு செய்து, இன்பம் நுகர்வானாயின், அவ் வின்பம் இயற்கை இன்பமாகாது. செயற்கை அணி களில் அழகேது? இன்பமேது? இறைவன் இயற்கை

யாக அமைத்துள்ள பெருவனப்பைக் கண்டு கண்டு மகிழ்ந்து இன்பம் நுகராத ஒருவன் மனைவியொடு வாழ்ந்தாலென்ன? மற்ற இடத்தில் வாழ்ந்தாலென்ன? இயற்கை நுட்பந் தெரியாது மனைவியொடு வாழ்வோனுக்கும், மனைவியின்றி வாழ்வோனுக்கும் பெரிதும் வேற்றுமையில்லை. மனைவாழ்க்கையை இயற்கை வாழ்வாக்கப் பயில்வது அறிவுடைமை.

இயற்கை வாழ்வை நடாத்த ஒருப்படும் ஒருத்தியும் ஒருவனும் உயிர் உடல்போலவும் அரசு அமைச்சர் போலவும் ஒன்றிய அன்பால் விழுங்கப்பட்ட இன்ப வாழ்வை நடாத்துவோராவர். அன்பால் விழுங்கப்பட்ட

காதற்றொண்டு

அன்னார் ஒருவர்க் கொருவர் காதற் றொண்டு செய்துகொள்வது இயல்பே. காதலி தன் காதலனுக்குத் தன் கையால் சோறாக்கி, அச்சோற்றோடு தன் அன்பையுங் கலந்து இன்னடிசில் ஊட்டி இன்புறுவாள். தன் ஆருயிர்க் காதலனுக்கு அட்டிலமைக்க வேலையாளை அவள் தேடுவளோ? வேலையாள் சமைக்கும் உணவில் அன்பிருக்குமோ? இல்லாள் அமைக்கும் அடிசில் வெறும் அடிசிலா? அஃது அன்பன்றோ? அவ் வன்பைப் பருகும் கொழுநனும் இல்லாளுக்குத் தானே பணி செய்வன். அன்பு செறியும் இல்வாழ்வில் உயர்வு தாழ்வு நிகழ்ச்சியுறுதல் அரிது. அன்பால்

அன்பில் ஒன்றல்

பிணிக்கப்பட்ட இருவரும் தமக்கென ஏவலாளரை வேண்டார். ஒருவர்க் கொருவர் பணி செய்துகொள்வர். இருவர் மனமும் அன்பில் தோய்ந்து கிடத்தலால், அம்மனம் எவ்விதச்

செயற்கைக் களியாடல்களிலுந் தோய்தல் அரிது. அம்மன முடையார் இல்லில் எல்லாம் இருக்கும். அன்பில் என்ன இராது? அன்புச் செல்வர் இயற்கைக்கு அரண் செய்யும் எளிய உணவு அருந்தி, எளிய உடை அணிந்து, எளிய வாழ்வு நடாத்தவே விரும்புவர். அவர் ஒரு போதுஞ் செல்வக் கள்ளாட்டயர விரும்பார். தூர்த்த வாழ்வு அவர்க்கு நரகத்துன்பம் போலத் தோன்றும்; செல்வர் வாழ்வு திருடர் வாழ்வு போல அவர்க்குப் புலப்படும்.

**செல்வன் வாழ்வு**

செல்வர் வாழ்வு திருட்டு வாழ்வென்பதில் என்ன ஐயம்? எத்துணையோ பேர் உடுத்தவேண்டிய உடை, உண்ண வேண்டிய உணவு, பயன்படுத்த வேண்டிய பொருள் எல்லாம் ஒரு செல்வன் வாழ்வுக்குத் தேவையாகின்றன! இயற்கை வாழ்விற்கு மேற்பட்ட பொருளை ஒருவன் பெறுவதும், காப்பதும், பயன்படுத்துவதுங் களவல்லவோ? ஆதலால், மனிதன் தன் வாழ்விற்கு மேற்பட்டுப் பொருளீட்டி வாழ்வனேல், அவன் றன் வாழ்வு திருட்டு வாழ்வாக முடியும். இதுபற்றியே இயற்கை இன்ப வாழ்வினர் எளிமையில் நிற்பது வழக்கம்.

ஒருவன் தன் முயற்சியால் ஈட்டும் பொருளை என் செய்வது என்று சிலர் வினவலாம். முதலாவது பொருள் அறவழியில் ஈட்டப்படல் வேண்டும். அவ்வாறு ஈட்டப்படும் பொருள் ஒருவன் வாழ்விற்குப் பயன்பட்டு மிகுந்து நிற்குமாயின், அதை அவன் தூர்த்த வாழ்விற்குப் பயன்படுத்தலாகாது. எஞ்சிய பொருளை

அவன் ஏழைகட்கு ஈதல் அறம். ஏழைகட்கு ஈவதே ஈகை. 'வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாங் - குறியெதிர்ப்பை நீர துடைத்து' என்றும், 'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது - ஊதியம் இல்லை உயிர்க்கு' என்றும் பெருநாவலர் அருளிச் செய்துள்ளனர். மனிதன், மிகுந்த பொருளை உறங்க வைப்பதும், வட்டிக்கு விடுவதும், தீய வழிகளில் செலவழிப்பதும் மறம். மிகுந்து நிற்கும் பொருள் பிறருடையது என்று மகன் கருதி அதைப் பிறர்க்கீதலே நல்லது. இந்நல்லொழுக்கம் பூணாது, இயற்கையின் வரம்பு கடந்த வாழ்வை ஒருவன் விரும்புவது பிறர்க்குரிய பொருளைத் தான் கவர்வதாகும். வேறு பல மறவினைகளும் அவன் வாழ்வில் விரவி நிற்கும். தன் பொருள் பொதுமை இறைவனுடையது என்னும் எண்ணம் மன்பதையில் அற்றுப்போகும் நிலைமை நேருமாயின், அப்பொழுது அறவோர் ஓர் அமைப்பை உண்டாக்கி, அதன்வழிப் பொருளைப் பொதுமையாக்கும் அரசியலை வகுத்தல் வேண்டும். அறவோர் தங்கடனை ஆற்றா தொழிவரேல், இயற்கை அவர் தங் கடனாற்றிப் பொதுமையைக் காப்பள். இயற்கைக்கு மாறுபட்ட வாழ்க்கையால் விளையும் நெருக்கை அவ்வியற்கையே போக்குவது இயல்பு.

இயற்கையின்ப வாழ்வை விடுத்துச் செயற்கைச் செல்வ வாழ்வை நடாத்தப் புகுவோனுக்கு இன்ப நுகர்ச்சி ஏது? அவன் இன்பம் நுகர்கிறானென்று கல்லார் கருதலாமேயன்றிக் கற்றார் கருதமாட்டார். அவன் இன்பம் நுகர்கிறானா இல்லையா என்பதை அவனது உள்ளமே அவனுக்கு உணர்த்தும். திருடனுக்கு இன்

பம் ஏது? அச்சமன்றோ அவனை என்றும் நடுக்குறச் செய்து கொண்டிருக்கும்? செயற்கைச் செல்வத்தில் வீழ்ந்து தூர்த்த வாழ்வு நடாத்துவோன் தன் வாழ்வைக் குலைத்துக் கொள்வதோடு மற்றவர் வாழ்வையுங் குலைக்கும் பாவியாகிறான். அவனைப்போல எத்துணை பேர் நடிக்கத் தொடங்குகிறார்! அவன்பாலுள்ள செல்வத்தைக் கண்டு எத்துணை பேர் அழுக்காறு கொள்கிறார்! எத்துணை பேர் அதைக் கவர நினைக்கிறார்! இன்னோரன்ன மறச்செயல்களுக்குக் காரணமாக நிற்பது செயற்கைச் செல்வ வாழ்வன்றோ? அச்சமில்லா அறவாழ்வே இயற்கை எளிய இன்ப வாழ்வாகும். ஆதலால், இயற்கைவழி நின்று, எளிய உணவுகொண்டு, எளிய உடை அணிந்து, எளிய இன்ப அன்பு வாழ்வை நடாத்த மனிதன் பயிற்சி செய்யக்கடவன்.

**எளிய உணவு**

எளிய உணவு என்பதற்குப் பட்டினி கிடக்க வேண்டுமென்பது பொருளன்று; இயற்கை அளவாக (இயற்கை) உணவுகொள்ள வேண்டுமென்பது அதற்குரிய பொருள். பெருந்திண்டி தின்பது தற்கொலைக்கு வழி தேடுவதாகும். இயற்கை அளவிற்குமேல் எவன் உணவுகொள்கிறானோ, அவன் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு, அழகிய மனைவியின்பமும், யாழினுங் குழலினுமினிய தன் குழந்தை மொழியின்பமும் வெம்மையாகத் தோன்றப்பெற்று, மருந்துங் கையுமாக நின்று, படுக்கை வாழ்வே பெரு வாழ்வாக் கொண்டு, இடர்ப்பட்டு, முடிவில் அகாலத்தில் மரணமாவன். ஆண்டவன் தந்த அரிய உடலைப் பெருந்திண்டி தின்று மாய்ப்பது எத்தகை அறியாமை! இவ்

வுலக இன்பத்தை இயற்கை வழிநின்று நுகராதவன் எங்ஙனம் மனிதனாதல் கூடும்? கேவலம் பெருந்திண்டியாலா உடலை அழித்துக் கொள்வது? இயற்கை அளவாக (இயற்கை) உணவருந்தினால் நூறு வயது உலகிடை வாழ்ந்து இன்பம் நுகரலாம்.

கொழுமையான உணவும், தீய எண்ணங்களை வளர்க்கும் உணவும், இவைபோன்ற பிறவும் விலக்கற்பாலன. மனிதனது இயற்கை அமைப்பையும், பல் குடர் முதலியவற்றையும் நோக்குழி, மனிதன் உதிரும் காய் கனி சருகு தானியம் முதலியவற்றை உண்டு கழிக்கும் வாழ்வுடையனாதல் வேண்டுமென்பது புலப்படும்.

புலால்

புலால் உணவு தள்ளற்பாலதே. புலால் உணவு மனித வாழ்வை விலங்கு வாழ்வாக்குவது. புலையன் உள்ளத்தில் ஒப்புரவு யாண்டிருந்து எழும்? தன்னைப் போன்ற பிறிதோர் உயிரைக் கொன்று உண்பவன், பிற உயிரிடத்தில் எவ்வாறு இரக்கம் செலுத்த வல்லவனாவன்? மனிதன் பிறர்க்கு உழைக்கப் படைக்கப்பட்டான் என்னும் அரிய நோக்கத்தைப் புலால் உண்பவன் எவ்வாறு நிறைவேற்றல் கூடும்? 'தன் ஊன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பான்—எங்ஙனம் ஆளும் அருள்' என்று திருவள்ளுவனார் வினவுவதை அன்பர்கள் கருதுவார்களாக. புலால் உண்ணல், உயிர்க் கொலையைப் பொறுத்திருத்தலானும், உயிர்க்கொலை அருணெறியை அழிப்பதாகலானும், அது மனித வாழ்வைப் பிறர்க்கு உழைக்கும் நெறியில் பண்படுத்தாது என்பது அருளாளர் உள்ளக்கிடக்கை.

புலாலுண்ணாக் குடியில் பிறந்த காரணத்தானும், தொன்று தொட்ட வழக்கத்தானும் சிலர், புலால் தின்

ணாது, உயிர்க்கொலை மட்டும் நிகழ்த்தி வருகின்றனர். இப் புலாலுண்ணாமை பொருளற்றது. புலாலுண்ணாமை - கொல்லாமையை - ஜீவகாருண்யத்தை - அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இதுவே நம் நாட்டார் கண்ட புலாலுண்ணாநெறி. உடல் நலத்துக்கெனப் புலாலுண்ணாமை சிலவிடங்களில் கொள்ளப்பட்டு வருகிறது. புலால் உணவு மனித வாழ்வைக் குலைப்பதாகலான், அதை மனிதன் கொள்ளலாகா தென்பதை ஈண்டு வலியுறுத்துகிறேன்.

**எளிய உடை**

உடையிலும் மனிதன் எளிமை காப்பது நல்லது. எளிய உடை இயற்கை வாழ்வுக்குத் துணை செய்யும். சுமை சுமையாக உடையணிவது தவறு. சுமை, உடல் வளத்தை நாளடைவில் குலைத்துவிடும். நாட்டின் இயற்கை வளத்துக்கு ஏற்ற உடையணிதல் அறிவுடைமை. நம் நாட்டினருள் கற்றவரெனத் தம்மைக் கருதுவோரில் எத்துணை பேர் நாட்டின் இயற்கைக்கு ஏற்ற உடையணிகின்றனர்? அன்னார் மாறுபட்ட உடையணிந்து இடர்ப்படுகிறார்! பரிதாபம்!

மனிதன் தனக்கு வேண்டற்பாலதாய உடையைத் தானே செய்துகொள்ள முயலல்வேண்டும். மனிதன் உடைக்குப் பிறர் துணை நாடுவது சோம்பல் வாழ்விற்கு அடிகோல்வதாகும். பண்டைக் காலத்தில் மனிதர் அனைவரும் தம் உடையைத் தாமே செய்து வாழ்வு நடாத்தினர். அவர் இயந்திர வாழ்வைக் கொள்ளாமையால், நீண்ட காலம் வாழ்ந்து இயற்கை இன்பம் நுகர்ந்தனர். (இயந்திரம் சமூகத்தின் பொதுமையாயின், அதனால்

தொல்லை விளையாது. சமதர்மம் அற்ற இயந்திர காலத்தை-நரகத் துன்பக்காலமெனக் கூறும் அளவோடு நின்று மேலே செல்கிறேன்). மனிதன் கையால் நெய்யப் பட்ட எளிய உடையணிந்து வாழ்வது சிறப்பு.

பட்டாடை முதலியவற்றில் உயிர்க்கொலை உண்மை யால் அவை அணிதற்பாலனவல்ல. உயிர்க் கொலைக் குரிய எதையும் மனிதன் ஏற்றலாகாதென்று சுருங்கச் சொல்கிறேன்.

எளிய உணவும் உடையும் மனித வாழ்வைப் பண் படுத்தும் இயல்பின என்பதற்கு இன்னும் விரிவுரை வேண்டுவதில்லை.

அன்பு வளர்ச்சி

எளிய வாழ்வு கொண்டு ஒருவனும் ஒருத்தியும் இல்லறம் நடாத்தி வருவாராயின், அவர்பால் தேங்கிக் கொண்டிருக்கும் அன்பு, அவர் அளவில் நில்லாது, அவர்க்குப் பிறக்கும் பிள்ளை களிடத்தும், பின்னை உற்றார் உறவின ரிடத்தும் ஊடுருவிப் பாய்ந்து நிற்கும். இவ்வளவில் நிற்கும் அன்பு கட்டுப்பட்டது. கட்டுப்பட்ட அன்பா வது மனிதனால் தனக்கு வேண்டுவோரிடம் மட்டுஞ் செலுத்தப்படுவது. அவ்வன்பை எல்லாரிடத்திலுஞ் செலுத்தி, அதனை எல்லைக்கட்டில்லா இன்பவெள்ளமாக்க மகன் முயலல்வேண்டும். மனைவி மக்கள் உற்றார் உறவி னர் முதலியோர்க்கும் மற்றவர்க்கும் என்ன வேற்றுமை? முன்னவரை நேசித்து உதவி புரிதல்போலப் பின்ன வரையும் நேசித்து ஏன் உதவி புரிதலாகாது? ஆண்ட வன் இருப்பை மனைவி மக்களில் - உற்றார் உறவினரில் - மட்டுங்கண்டு அன்பு செலுத்துவதோடு, அவனிருப்பை எவரிடத்துங்கண்டு, அன்பு செலுத்துவது ஒப்புரவாகும்.

ஒப்புரவு (பரோபகார) நினைவும் செயலும் பெறு தற்கு உயிர்ச்சார்பு இன்றியமையாதது. மனிதன் மற்ற உயிர்களோடு கலந்து வாழ வாழ,

உயிர்ச்சார்பு

அவன்பாலுள்ள தன்னலம் என்னும் பாசம் அறுந்து போகும். உலக வாழ்வில் மனிதன் வீழ்ந்து புரண்டாலன்றி ஒப்புரவு உணர்வு அரும்பாது. உயிர்களோடு கலந்து பழகாமலும், ஆடாமலும், பாடாம லும், இன்ப துன்பமறியாமலும் ஒருபுறம் ஒதுங்கி வாழ்பவன் உள்ளத்தில் விலங்கு நீர்மைகள் முகிழாது ஒடுங்கிக் கிடக்கும். அவைகள் அலர்ந்து காய்ந்து வீழ வேண்டுமானால், மனிதன் இல்வாழ்க்கை ஏற்று மற்றவ ரோடுங் கூட்டுறவு கொள்ளல்வேண்டும். மனிதன் கலந்து வாழும் உயிர்த்தொகையில் சேர்ந்தவனன்றித் தனித்து வாழும் இனத்தில் சேர்ந்தவனல்லன். மனிதன் தன்பாலுள்ள தன்னலமென்னுங் கொடுமையை அகற்ற ஏனைய மக்களோடு கலந்து கலந்து பல வழியிலும் வாழ் வானாக; உழல்வானாக. அங்ஙனம் வாழ வாழ - உழல உழல - அவனுக்குப் பிறர் துன்பமறியும் உணர்வு பிறக் கும். மகனுக்குப் பிறர் துன்பத்தை உணரும் உணர்வு பிறத்தலே போதும். அவ்வுணர்வு, துன்புறும் பிறர்க்கு அவனாலியன்ற உதவிபுரிய அவனைத் தூண்டும். பிறர் துன்பத்தை உணர்வது தன் துன்பத்தைப் போக்க அடி கோல்வதாகும். பிறர் துயரைப் போக்கக் கட னாற்றுகிறவன் தன் துயரைப் போக்கிக் கொண்டவ னவன். மனிதனது துன்பத்தைப் பொன்னும் பொருளும், காணியும் பூமியும், கூடமும் கோபுர மும், மின் விளக்கும் விசிறியும், மோட்டார்

வண்டியும், ஆகாய விமானமும் ஒருநாளும் போக்குவன வாகா. துன்பத்தைக் களையவல்லது ஒன்றே. அஃது ஒப்புரவு. எவ்வுயிரையுந் தன்னுயிரெனக் கொண்டு, உயிர்கள் நலங்கருதி உழைக்கும் ஒருவன் உள்ளத்தில் ஒப்புரவிற்குரிய அன்பாகிய தெய்வம் விளங்கும். அவனே துன்பமறியாத் தூயன். *'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என்றார் நாவுக்கரசர். இன்பத்துக்கு உயிர்ச்சார்பு இன்றியமையாதது.

**போலித்துறவு**

உயிர்கட்குத் தொண்டு செய்யப் புறப்படுவோர் சிலர் மனைவி மக்களைத் தொல்லை என்று தொலைத்துத் 'துறவு' என்னும் பெயரால் வெளியேறுகிறார். இது போலித் துறவன்றி உண்மைத் துறவாகாது. மனைவி மக்களைத் தொல்லை என்று கருதுவோன், பிறவுயிர்கள் சேவையையுந் தொல்லையெனக் கருதும் உள்ள முடையவனாகவேயிருப்பன். இவன் மனமாசுடையவன். மனமாசை நீத்தலே உண்மைத் துறவு. இத்துறவிற்குக் குறிப்பிட்ட கோலம் இடம் முதலியன வேண்டுவதில்லை. இவ்வற

---

* நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

—அப்பர்

வோர் எக்கோலம் பூண்டும் எவ்விடத்தும் வாழலாம். ஆகவே, மனைவி, மக்களைத் தொல்லையென்று கருதி யோடுதல் கூடாதென்க. உலகில் எதையுந் தொல்லை என்று கருதிக்கொண்டிருக்கு மட்டும் தொல்லை மனிதனை விட்டகலாது.

'மனைவி மக்களே எல்லாம்' என்னுங் கட்டுப்பட்ட பற்றுங் கூடாது. அதே வேளையில் அவர்களைத் தொல்லை எனக் கருதி ஓடலுங்கூடாது. மற்ற உயிர்களைப் போல அவர்களையுங் கருதித் தொண்டுசெய்தல் அறம். ஒருவனது உழைப்பின் எல்லை, மனைவி மக்கள் அளவில் கட்டுப்பட்டுக் கிடக்கக்கூடியதாயின், அவன் அவ்வுயிர்கள் அளவில் சேவை செய்துகொண்டுமிருக்க லாம். இதைப் பொது அறமாக எவருங் கொள்ள லாகாது; புறனடையாகவே கொள்ளுதல் வேண்டும். மனைவி மக்களோடு வாழ்ந்து தொழின் முயற்சியில் தலைப்பட்டுப் பொருளீட்டி மற்ற உயிர்களுக்குந்தொண்டு செய்வது சிறப்பு. இதனை வலியுறுத்த நாயன்மார் வரலாறுகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

நாயன்மார்

நாயன்மாருள் பலர் இல்லறமேற்று மனைவி மக்க ளோடு வாழ்ந்தவர்; தொழில் பல புரிந்தவர்; வாணிபஞ் செய்தவர்; செங்கோலோச்சியவர்; பெரும்பொரு ளீட்டியவர். இத்திற வாழ்க்கையிலிருந்தும் அப்பெரியோர் தமக்குள்ள உயிர்ச் சார்பு பொருட் சார்புகளை இறைவனுடைமையாகக் கருதி வாழ்ந்தனர். இவ்வாழ்வே பற்றற்ற வாழ் வென்பது. தொல்லையென்று உயிர்ச் சார்பு பொருட் சார்புகளை வெறுப்பது முழு நேயம் பெற்றதாகாது. ஈண்டு இரண்டோர் எடுத்துக் காட்டு வருமாறு:-

இயற்பகை நாயனார் என்பவர் மனையறத்தி லிருந்தவர் ; பெருஞ் செல்வர். அவர், எவர் எது கருதி வரினும் அது தம்பாலுள்ளதாயின், அதை இல்லை என்று மறுது கொடுத்து உதவுவதைத் தமக்குரிய தொண்டாகக் கொண்டு வாழ்ந்தார். அதனால் அவர், ' இல்லையே என்னாத இயற்பகை ' என்றும் அறிஞரால் அழைக்கப் பெற்றார். அவரது உள்ள நிலையை உலகோர்க்கு உணர்த்த இறைவன், ஒரு 'தூர்த்த' கோலந் தாங்கிப் போந்து, அவரை நோக்கி, ' ஒன்று கருதி வந்தேம் ' என்றான். அதற்கு நாயனார், ' ஐயனே ! அஃது என்பாலுளதாயின், அஃது அடிகள் உடைமை ' என்றார். ' தூர்த்தர் ', ' உன் காதல் மனைவியை விரும்பி வந்தேம் ' என்று கூறினார். ' இல்லையே என்னாத இயற்பகையார் ' மகிழ்வெய்தினார். ஏன் ? அடியார் தம் பாலில்லாப் பொருளைக் கேளாது, உள்ள பொருளைக் கேட்டது குறித்து அவர் மகிழ்வெய்தினார். ' தூர்த்தர் ' விழைந்தவாறே காதலியை அன்பர் ஈந்தனரென்று புராணம் கூறுகிறது.

' இல்லையே ' என்று சொல்லாத தமது நோன்புக்கு இழுக்கு எங்கு நேர்கிறதோ என்று அன்பர் கவன்று கொண்டிருந்தார். உள்ளபொருள் கேட்கப்பட்டதும் நாயனார்க்கு மகிழ்ச்சி பொங்கிற்று. இவ்வடியார் நெஞ்சம் தாங்கொண்ட நோன்பில் படிந்து கிடந்ததன்றிப் பிற வற்றில் படிந்து கிடக்கவில்லை. இந்நுட்பம் ஊன்றி உன்னற்பாலது. மனைவிமீது பற்றுடைய நெஞ்சிற்கு இச்செயல் முற்றும் மாறாகத் தோன்றும். இது நிற்க.

இயற்பகை அண்ணலார் மனையறத்திலிருந்தும், மனைவிமீதாதல் பிறமீதாதல் பற்றுக்கொள்ளாது எல்

லாம் இறைவன் உடைமை என்னும் பேரன்பில் மூழ்கிக் கிடந்தார். வழியில் போகும் ஒருவன் மனைவியைக் கேட்டதும் மனைவியைக் கொடுக்க நெஞ்சம் எழுமா? இயற்பகையார் எதை வெறுத்தார்? ஒன்றையும் வெறுத்தாரில்லை. அதேகாலத்தில் எதன்மீதும் பற்றுக்கொண்டு இடர்ப்பட்டாரில்லை. இவ்வித வாழ்வு வேண்டற்பாலது. (இயற்பகையார், தாங்கொண்ட நோன்புவழி நின்று ஒழுகினர். ஆனால் அவர் காலத்திய சமூகம் எப்படி இருந்தது? சமூகம் நாயனர் செயலை ஆதரித்ததில்லை. அது நாயனர் செயலைத் தடுக்கவே கிளம்பியது. இது கருதற்பலது.)

சிறுத்தொண்ட நாயனர் வரலாற்றைச் சிறிது நோக்குவோம். சிவனடியார் பிள்ளைக்கறி கேட்டதற்குச் சிறுத்தொண்டர் இணங்கா தொழிந்தனரோ? அருமைப் புதல்வனை மனைவியார் பற்றிப்பிடிக்க நாயனர் தங் கையால் கத்தியைக்கொண்டு அறுத்தாரல்லரோ? ஆ! ஆ! எத்தகைச் செயற்கருஞ் செய்கை! சிறுத்தொண்டர், மனைவி மக்களோடு இல்வாழ்க்கையிலிருந்தவரே. அவர் பிள்ளையின் மாட்டும் பற்றின்றி வாழ்வு நடாத்தினர். அவரது பற்றின்மையை என்னென்று பகர்வது?

கண்ணப்ப நாயனர் தமது அருமைக் கண்ணைப் பிடுங்கிக் கடவுள் தொண்டு செய்தார். அவரது அன்பு அவரது உடற்பற்றை அகற்றி நின்றது. கண்ணைப் பிடுங்க எவரே ஒருப்படுவர்? பற்றின்மை என்னதான் செய்யாது? மற்றும் பல நாயன்மார் வரலாற்றைப் பெரிய புராணத்திற் காண்க. அப்பெரியோர் வாழ்வுத் துறைகள் மனிதர்க்குரிய வாழ்வுக்குக் காட்டுக்களாக நிற்கின்றன.

ஆதலால், இல்வாழ்க்கையிலிருந்து தொழில் பல புரிந்து, அறவழியில் பொருளீட்டி, உயிர்ச் சார்புகொண்டு, எவ்வுயிரையும் நேசித்து, இயன்ற உதவி செய்து வாழும் வாழ்வு மக்கட்குரிய வாழ்வெனக் கொள்க.

வாழ்க்கைக்கு அடிப்படையான சில முறைகளே மேலே காட்டப்பட்டன. பிற அவைகளினின்றும் பிறந்து வளர்வன. அவைகளை ஈண்டு முறை முறையே விளந்து கூறவேண்டுவதில்லை. அவைகளுள் நூலின் போக்குடன் பொருந்தி நிற்குஞ் சில ஈண்டைக்குச் சாலும். அவை தனித்தனி வருமாறு:

## ௪. உடலோம்பல்

நல்வாழ்விற்கும், நல்லறம் ஓம்புதற்கும், வேறு பல நற்றொண்டிற்கும் நல்லுடல் தேவை. உடலையோம்பாது வாழ்பவன் இயற்கை இன்பத்தையாதல் - இறை இன்பத்தையாதல் - நுகர்வோனாகான். 'காயமே இது பொய்யடா, காற்றடைந்த பையடா' என்று பாடிக் கண்டதைத் தின்று, கள்ளுண்டு, பொருட்பெண்டிர் இன்பந்துய்த்து, உடலில் ஒன்றரை அங்குல அழுக்கேறி ஊறத் திரிபவன் ஆண்டவன் அன்பனாகான். மனிதன் உடல் கடவுளின் இயற்கைக் கோயில் என்று உலகிற்றோன்றிய பேரறிஞர் பலருங் கூறியுள்ளனர். உடல் கடவுளால் உயிர் விளக்கத்துக்கெனக் கொடுக்கப்பட்ட ஒரு பெரும் உடைமை. உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை என்னென்று கூறுவது? உயிர் நலம் உடல் நலத்தைப் பொறுத்து நிற்பது. உடலைப் பல தீயவழியில் உழற்றி நோய்வாய்ப்

உடல் கோயில்

படுவோனுக்கு அறிவு விளக்கமுறாது. ஒன்றை ஊன்றி உன்னலும் அவனால் இயலாது. அறிவு விளக்கத்துக்கு உறு கருவியாயுள்ள உடலை வெறுப்பது அறியாமை. ஆகவே, மக்கள் நாடோறும் நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கேற்ற இயம நியமாதிகளைக் குறைவற ஆற்றி, உடலையும், அதன் வழி உயிரையும் ஓம்பி வருவார்களாக.

நமது நாட்டு மூதறிஞர் பலர் உடலைப் பழித்துக் கூறியது என்னை என்று நேயர் சிலர் வினவலாம். எந்த அறிஞரும் உடலை வெறுத்து இறப்பை விரும்புமாறு கூறவில்லை. உடலை வெறுத்தலாவது இறப்பை விழைவது. இறப்பை விழைந்து உடலுக்கு இடர் தேடிக் கொள்வது தற்கொலையாகும். எல்லாப் பாவங்களினுங் கொடியது தற்கொலை. ஞானிகள் தற்கொலைக்குத் துணைபோக மாட்டார்கள். அவர்கள் உடலைப் பழித்துக் கூறியதன் நோக்கத்தை உணர்தல் வேண்டும்.

**ஞானிகள் நோக்கம்**

உள்ளுணர்வின்றி உடலையே பொருளாக் கொண்டு வாழ்ந்து வரும் உலகாயத மாக்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தற் பொருட்டு ஞானிகள், உடலைப் பலவாறு பழித்துக் கூறுவது வழக்கம். அந்த ஞானிகள், உயிர் விளக்கத்தின் பொருட்டு உடலை நன்கு ஓம்புமாறு பல உரைகளால் உலகத்தார்க்கு அறிவுறுத்தி யிருத்தல் சிறப்பாகக் கருதற்பாலது. ஞானிகளின் கருத்தை உணராது, உடலை வெறுத்து, அவர்கள்மீது பழி சுமத்துவது தவறு. அஃது இயற்கையை வெறுப்பதாகும். ஆதலால், உடலை ஓம்ப வேண்டுவது நமது இன்றியமையாக் கடமை.

'உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'

எனவரூஉந் திருமூலர் திருவாக்கை ஓர்க.

வைகறைத் துயிலெழுந்து, காலைக்கடனை முடித்து, பரந்த வெளியில் ஞாயிற்றொளியும் காற்றும் உடல்மீது நன்கு படர்ந்து படிய முறைப்படி உலாவி, நீராடி, உண்மை என்னும் அன்புக் கடவுளை உன்னி, மன மாசுகளைக் கழுவி, எளிய உணவுகொண்டு, எளிய உடை அணிந்து, அறத் தொழில் ஏதாயினும் ஒன்றுசெய்து, இல்வாழ்க்கை ஏற்று, அன்பை வளர்த்து, உயிர்கட்குச் செந்தண்மை பூண்டொழுகுவது உடலையும் அதன்வழி உயிரையும் ஓம்புவதாகும்.

**பிறவி நோக்கம்**

இச் செந்நெறி நிற்போர் இடைக்காலத்தில் இறந்து மீண்டும் பிறவார். இவர்தம் பருவுடல் காலத்தில் பிரிந்ததும் நுண்ணுடல் நல்லுலகஞ் சேரும். உடலை நல்வழியில் ஓம்பாதாரது நுண்ணுடல் மீண்டும் இவ்வுலகு நோக்கும். இவ்வாறு பிறந்து இறந்து உழல்வது பிறவியின் நோக்கமாகாது. மீண்டும் பிறவா நெறியை நாடி, அதைப் பெறுவதே பிறவியின் நோக்கம்.

'இக்காய நீக்கி இனியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்

எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள்பெற லாமே'

'பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே'—**திருமூலர்**

செந்நெறி நிற்போர் இடைக்காலத்தில் இறவாரென்றும் மீண்டும் பிறவாரென்றும் சொல்லப்பட்டன. இது பொதுமை. இதற்குப் புறனடையும் உண்டு. பிறவாநிலை எய்திய நல்லுயிர் மீண்டும் தோன்றுவதும் உண்டு. அத்தோற்றம் முன்னை வினையின் தாக்குதலால் உற்றதாகாது. அந்நல்லுயிர் மரணம் பிறப்பென்னும் மயக்கத்தினின்றும் விடுதலை அடைந்தது. அதற்குச் சுவர்க்க நரகங்களில்லை. அதற்கு எல்லாம் வீடே. விரிவு தத்துவ ஞான நூல்களிற் காண்க. இது நிற்க.

பிறவியின் நோக்க நிறைவேற்றத்துக்கு உடலோம்பல் இன்றியமையாதது. உடலோம்பு முறைகள் பலப் பல. அவைகளுள் பரிஇய சில; நுண்ணிய சில. அந் நுண்ணிய சிலவற்றுள் மிகச் சிறந்தது ஒன்று. அதன் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம்.

## ரு. வாய்மை

மனிதன் புறத்தூய்மை காத்து உடலோம்புவதுடன் அகத்தூய்மையுங் காத்துவரல் வேண்டும். புறத்துக்கும் அகத்துக்கும் இயைபு உண்டு. அகமே புறம் என்று அகத்திணை வல்லார் கூறுப. அகத்தூய்மை காவாது புறத்தூய்மை காப்பதால் மனித வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. அகத்தூய்மை காத்தற்குரிய முறைகள் பற்பல. அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும். அகத்தூய்மைக்கு ஆணிபோன்ற ஒன்றை ஈண்டுக் குறிப்பது நலம். அஃது எது? அது வாய்மை என்பது.

அகத்தூய்மை

வாய்மை என்னுஞ் சீரிய அறத்தை ஒருவன் கடைப்பிடித் தொழுகுவானாயின், அவன்பால் பிற அறங்களெல்லாம் தாமே அமையும். வாய்மை, அறத்துள் தலையாயது; ஆணிபோன்றது; உயிர்போன்றது. அஃதுள்ள இடத்தில் எல்லாம் இருக்கும். அதைப் பெறவே மனிதன் பலவித நல்ல வழக்க ஒழுக்க வாழ்க்கையை மேற்கொள்ளக் கடமைப்படுகிறான். ஆதலால், வாய்மையைச் சிறப்பாக ஈண்டுக் குறிப்பிடலானேன்.

வாய்மையைப் போற்றாத நாட்டாரில்லை; அறிஞரில்லை. உலகில் தோன்றிய பெரியோர் அனைவரும் வாய்மையைக் காத்தே பெரியோராயினர். அகத்தை வாய்மை எவ்வாறு தூய்மை செய்யும் என்பதை யான் விளக்கவேண்டுவதில்லை. பொய்யா மொழியார் வாய்மையைப்பற்றி வாய்மலர்ந்த

பெரியோர்

திருமொழிகளிற் சிலவற்றை ஈங்கு எடுத்துக் காட்டு கிறேன்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

இப்பெற்றித்தாய வாய்மையை மனிதன் எவ்விடரி லுங் காத்துவரப் பயிற்சி செய்தல் வேண்டும். அரிச் சந்திரன் வாய்மையின் பொருட்டுப் பதி நிதி மைந்தன் மனைவி எல்லாவற்றையும் இழக்கவில்லையா? அவனது வாழ்வு வாய்மைக்கோர் இலக்கியமன்றே? அவனது வரலாற்றை நோக்குமின்,

வாய்மை இல்லையேல் மனித வாழ்வுமில்லை. அத் தகைய வாய்மையை உயிரென ஓம்புதல் வேண்டும். எவ்வழியில் உழன்றுவது அதைப் பெறுவது மனிதன் கடமை. அஃதொன்று கைவரின் ஏனைய அறங்களெல்

லாம் வாழ்வில் தாமே வலிந்து புகும். 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கியாவது முண்டோ எய்தா அரும் பொருள்' என்றார் இளங்கோ அடிகளும்.

வாய்மையும் வாழ்வும்

வாய்மை உள்ள இடத்தில் கொலை களவு கள் காமம் முதலிய மறங்கள் தலைகாட்டா. பாவங்களையெல்லாம் அரிக்கும் ஆற்றல் வாய்மைக்கு உண்டு. அவ்வாய்மை வளரத்தக்க அறிவு குணஞ் செயலைப் பெறுவிக்குங் கல்வியையும், வாழ்வையும், பிறவற்றையும் இளமை தொட்டே பயிற்சியிற் கொணர்வது அறிவுடைமை.

## ௩. மெய்யறிவு

வாய்மை பதியும் உள்ளமுடையான் (உண்மையுடையான்)பால் மெய்யறிவு மிளிரும். மெய்யறிவு மனிதன்பால் இயல்பாயிருப்பினும், அது பொய்மை பொறாமை அவா வெகுளி முதலிய திரைகளால் மூடப்பட்டிருக்கிறது. வாய்மை அவற்றைக் களைந்ததும் மெய்யறிவு ஒளிரும். மெய்யறிவு ஆறாவது அறிவெனும் மனவுணர்வு. அவ்வறிவு பெறாது ஐந்தறிவோடு வாழ்பவன் மக்கட் பிறவி எய்தாதவனே யாவன். ஐயறிவுடைய விலங்கினுக்கும் மெய்யறிவில்லா ஒருவனுக்கும் என்ன வேற்றுமை? அஃதும் உண்கிறது; உறங்குகிறது; குட்டி போடுகிறது. இவனும் உண்கிறான்; உறங்குகிறான்; பிள்ளை பெறுகிறான். அதுவுந் தன் பொருட்டுப் பிறரை வருத்த எண்ணுகிறது; செய்கிறது. இவனும் அவ்வாறெண்ணுகிறான்; செய்கிறான்.

விலங்கும் மனிதனும

மெய்யறிவு பெறுதவன் வடிவத்தால் விலங்கினின்றும் வேறுபடுகிறனேயன்றி எண்ணத்தால் - செயலால் - வேறுபடுகிறனில்லை. மனித உடல் தாங்கி விலங்கு வாழ்வை நடாத்தலினும் இழிவு வேறென்றுண்டோ? நட்டாற்றில் இருந்துகொண்டு தாகந் தணித்துக்கொள்ள 'நீர் காணேம்; காணேம்' என்று வருந்தும் ஒருவனை, ஆறுவதறிவு விளங்குதற்கு நிலைக்களனுகவுள்ள மனித உடல் தாங்கியும், முயன்று தன்பாலுள்ள அவ்வறிவு காணுது விலங்கு வாழ்வு நடாத்தும் ஒருவனுக்கு ஒப்பிடலாம். ஐந்தறிவுகொண்டு மனிதன் விலங்கனைய வாழ்வை நடாத்தலால் உலகில் போராட்டம் மிகுந்து நிற்கிறது. போராட்டம் ஒருவிதமா! எத்துணையோ விதம்! தனக்குள்ள பசி நோய் பிறர்க்கும் உண்டு என்று எண்ணி மனிதன் வாழ்வு நடாத்தினுல் போதுமே. அவ்வெண்ணமுடையான் தன் என்பையும் பிறர்க்கு உதவ ஒருப்படுவனல்லனே? அந்தோ! இவ்வொப்புரவு நெஞ்சமின்மையால் உலகம் என்ன பாடுபடுகிறது! ஒருவன் பிறனை வருத்துவதும், ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரைப் பற்றுவதும் எற்றுக்கு? தன்னல வாழ்விற்கென்று அஞ்சாது கூறலாம். ஆறுவது அறிவாம் மெய்யறிவு விளக்க முற்றுல் தன்னலப்பேய் ஒடுங்கி ஒழியும். அப்பேயை ஓட்ட ஒவ்வொரு மனிதனும் முயலல் வேண்டுமா? வேண்டாவா? மனித உடல் தாங்கிய ஆருயிர் மக்காள்! உன்னுங்கள்! உலகில் பல தெய்விக மக்கள் தோன்றிப் பல அருனூல்களை அருளிச் செய்ததன் நோக்கம் என்னை? உன்னுங்கள்! மெய்யறிவு விளக்கத்துக்

கென்று பெரியோர் எவ்வெவ் வழியில் உழைத்தனர்! உன்னுங்கள்.

மெய்யறிவால் விளையும் நலங்களைச் சொல்லுதல் முடியுமோ? அவ்வறிவால் மனிதன் தெய்வமாகிறான் என்று சுருங்கக் கூறலாம். தெய்வம் என்பது என்னை? அன்பன்றோ? அன்பனாகிறான் மெய்யறிவுடையான்.

மெய்யறிஞன் இயல்பு

அன்பில் பிறப்பது திருவருள். திருவருள் ஊற்றெடுத்து மெய்யறிவுடையான் உள்ளத்தில் ஓடும். மெய்யறிவுடையான் எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கருதும் நீரனாகிறான். பிறர் துன்பங் காணும்போது மெய்யறிவு வாளா கிடக்குமோ? அவ்வறிவு, தன்னையுடையானை நோக்கி, 'ஐயனே! இவர்க்கும், உனக்கும் என்ன வேற்றுமை? இவர்க்கும், உன் மனைவி மக்கள் உற்றார் உறவினர் முதலியோர்க்கும் ஏதாயினும் வேற்றுமை உண்டா? இவ்வுயிர் வருத்தம் நீக்க வேண்டாவா' என்று கூறுகிறது. அவன் உடனே அருள் உளங் கொண்டு தன்னாலியன்ற உதவி புரிய முயல்கிறான். மெய்யறிவு, தன்னையுடைய ஒருவனை உறங்கவும் விடாது. அஃது எந்நேரமும் பிறர் துன்பங் களையுமாறு அவனைத் தூண்டிக்கொண்டே இருக்கும். பிறர் துன்பங் கண்டு இரங்கித் துணைபுரிய மகனைத் தூண்டுவதோடு வேறு பல நல்லியல்புகளையும் அவனுக்கு அவ்வறிவு நல்குகிறது.

மெய்யறிவுடையான் பெரிதும் மறவினையாற்றான். ஒரு வேளை அவன் பழைய வாசனையால் ஏதாவதொன்றை நிகழ்த்தி விடுவானாயின், அதற்கு அவனைப்

பிறர் ஒறுத்தல் வேண்டுவதில்லை. மெய்யறிவே அவனை ஒறுக்கப் புகும். மெய்யறிவு அவனை எவ்வாறு ஒறுக்குமென்று சொல்லலும் வேண்டுமோ? மெய்யறிவுடையார் உலகிற்கு அரசு எற்றுக்கு? சட்டம் எற்றுக்கு? சேனை எற்றுக்கு? அவர் மனமே எல்லாம். அஃதே அரசு; அதுவே சட்டம்; அதுவே சேனை.

ஒருமுறை மறவினையாற்றி, அதன் பயனாகத் தனக்குத் தானே வருந்தும் ஒருவன், பிறிதொரு முறை அவ்வினையாற்ற ஒருப்படுதல் அரிது. மறவினைக்கு இடந்தாராது காக்குமாறும், ஒருவேளை ஆற்ற நேரின் அதை உடனே தடுக்குமாறும், தன்னைத்தானே ஒறுக்குமாறும் மனத்தைப் பண்படுத்தும் ஆற்றல் மெய்யறிவிற்குண்டு. அம்மனம் பெறாதவன் மக்களினத்தில் சேர்ந்தவனாகான். அவன் இன்னும் மனிதப்பிறவி தாங்கவில்லை என்று சொல்லலாம்.

மனச்சான்று

ஒருவனது உள்ளம், ஒருவன் வாழ்விற்குக் குருபோலவும் அரசுபோலவும் வழி காட்டுவதாயிருத்தல் வேண்டும். அத்தகைய உள்ளத்தைப் பெறும் மெய்யறிவுடையான் தவறுதல் செய்து விடுவானாயின், அதை மறைக்க அவன் சிறிதும் முயலான்; அதை வெளியிடவும், அது குறித்து வருந்தவும், கழிவு தேடவும் முயல்வன். புறத்தே நல்லவன்போல நடிக்க அவன் ஒருபோதும் ஒருப்படான். அகமும் புறமும் ஒத்த வாழ்வை நடாத்தவே அவன் இசைவன். அவனுக்கு அகமே புறம்.

மெய்யறிவுடைய ஒருவன் தனக்குப் பிறன் தீங்கு நினைந்து வினை நிகழ்த்தும்போழ்து என்ன செய்வன்?

தீமை செய்வோனைக் கடிய அவன் முயலான்; முயல்வா னாயின், அவன்பால் மெய்யறிவு விளங்கவில்லை என்றே கூறலாம். பிறர் இன்னா செய்யும்போது, திரும்பி, அவர்க்கு இன்னா செய்ய விரும்புவது விலங்கின் நீர்மையாகும். விலங்கு நீர்மை ஆறுவதறிவெனும் மெய்யறிவுக்கில்லை. பிறர் இன்னா செய்யும்போது, மெய்யறிவு, தன்னை உடையானைச் சீற்ற முறாதவாறு காக்கும்; காப்பதோடு மாற்றான்மீது இரங்குமாறும் ஏவும். மெய்யறிவு, பிறரை ஒறுக்க உடன்படாமையோடு, அவர்தம் இன்னாச் செயலை இனிய முகங்கண்டு ஏற்கவுந் துணை செய்யும். மறந்தும் பிறர்க்குக் கேடு மனத்தாலும் மொழியாலுஞ் செய லாலும் நிகழ்த்தாதவாறு காத்து வருவது மெய்யறிவு. மெய்யறிவு, பிறர் தவறு செய்வதைக் காணும்போது அவரைத் திருத்த அவரைக் கடியாது, தன்னையுடை யானை உண்ணா நோன்பு கொள்ளவும், அதுபோன்ற வேறு பல வினைகளாற்றவும், கூடுமானால் உயிரை விடவும் அறிவுறுத்தும்.

பழிக்குப்பழி

மெய்யறிவு பெற மனிதன் அவா அறுத்தல் வேண்டுமென்றும், மூவாசை துறத்தல் வேண்டு மென்றும், யோகஞ் செய்தல் வேண்டுமென்றும், அதன் பொருட்டுக் காடு மலை ஏறித் திரிதல் வேண்டுமென்றுஞ் சிலர் கூறுப. இம்முறைகளில் சில உண்மைகளிருப்பி னும், இவை பலரால் செயலிற் கொணர்தற்கு உரியனவல்ல. (எல்லார்க்கும் உரிய) இயற்கை வாழ்வாம் மனைவாழ்க்கையின் நுட்பங் கண்டு, ஒருவன் அவ் வாழ்வை நேரிய முறையில் நடாத்தி வருவனேல்,

அவன் அன்பனாய் மெய்யறிவு பெறலாமென்பது எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மை.

## ௭. பொறுமை

மெய்யறிவால் மனிதன் பெறும் நல்லியல்புகள் பலப் பல. அவையெல்லாவற்றையுந் திரட்டி நோக்கினால், அவை யாவும் பொறுமை என்னும் ஒன்றில் அடங்கும். பொறுமையால் மெய்யறிவுபிறக்குமென்றும், மெய்யறிவால் பொறுமை பிறக்குமென்றும் மாறுபட்ட கருத்தை வெளியிடுவோருளர். இது சொற்போர். இப் போர்க்களத்தில் நுழைய என் மனம் ஒருப்படவில்லை. தோற்ற முறைகளைப் பற்றிய கவலை எனக்குச் சிறிதுமில்லை. வாய்மையை அப்பனாகவும், மெய்யறிவை அன்னையாகவும் யான் கொள்கிறேன். இவ்விரண்டுங் கூடி ஈனும் பிள்ளை பொறுமை என்று யான் கூறுவேன். மெய்யறிவு விளக்கத்தில் பொலிவது பொறுமை என்பதொன்றே ஈண்டுக் கருதற்பாற்று.

பொறுமைப் பிள்ளை

மெய்யறிவு விளக்கமில்லாத இடத்தில் விளங்கும் பொறுமை பொறுமையாகாது. மாற்றான் வலிமை கண்டு அச்சத்தால் வகிக்கப்படும் பொறுமை பொறுமை ஆகுமோ? அஃது அச்சம்; கோழைமை. சிலர் உள்ளத்தில் எரிபோல் சினம் மூண்டெழுந்து கனன்று கொண்டிருக்கும். அதை அவர் நடுக்கத்தால் வெளிப்படுத்தாது உள்ளே அடக்கிக் காலங் கழிப்பர். அவர் பொறுமையாளராகி விடுவரோ? அவருக்குப் போதிய துணைவலி

அஞ்சாமையும் வீரமும்

கிடைக்குமாயின், உடனே அவர் பொறுமை இழந்து, பொருமை கொண்டு, பிறரைத் துன்புறுத்த எழுவர். இத்தகையோர் காலத்துக்கு ஏற்றவாறு கையாளும் ஒன்று எப்படிப் பொறுமையின்பாற்படும்? மெய்யறிவு ஈனும் பொறுமை, எத்தகை வலிமை யுடையானைக் கண்டுழியும் நடுக்குறு அஞ்சாமையையும்-எத்தகை இடுக்கண் நேரினும், பிறர் எவ்விதக் கொடுமை செய்யினும், அவர்க்குக் கனவிலும் மறந்துந் தீங்கு நினையாது, அவர் கொடுமைகளை அன்புடன் ஏற்று வெல்லும் வீரத்தையும்-அடிப்படையாகக் கொண்டது. ஆள் வலியும் படை வலியும் உள்ளபோது அஞ்சாது நிற்பதும், அவையிழந்த போது அஞ்சி நடுங்குவதும் அஞ்சாமையின் பாற் பட்டன அல்ல என்பதும், மூண்டெழு சினத்தால் பிறரைத் துன்புறுத்த எழுவது வீரம் அன்று என்பதும் ஈண்டு உற்றுநோக்கத்தக்கன.

மெய்யறிவில் விளங்கும் பொறுமையே பொறுமை. அதன் மாண்பை என்னென்று கூறுவது? மனிதன் எவ்வியல்பையும் முயற்சியால் பயிற்சி செய்தல் கூடும். ஆனால் பொறுமையைப் பயிற்சி செய்தல் அருமையினும் அருமை. பொறுமை என்பது எளிய பொருளன்று. பொறுமையைப் பெற்றவன் கடவுளைப் பெற்றவனாவன்.

**பொறுமையும் கடவுளும்**

பொறுமை வேறன்று; கடவுள் வேறன்று; வேதம், ஈசுரனை, 'சாந்தம் சாந்தம்' என்று கூப்பிடுகிறது. அச் சாந்தமே பொறுமை என்பது. மனிதன் தன் வாழ்வில் முடிவாகப் பெறவேண்டிய செம்பொருள் பொறுமையே. கல்வி பயிறலும், மனைவி மக்களோடு வாழ்தலும், பிறர்க்

குழைத்தலும், வாய்மை காத்தலும், மெய்யறிவு பெறலும் எற்றுக்கு? பொறுமையெனும் பொன்றுப் பொருளொன்றைப் பெறுதற்கன்றோ இத்துணையுழைப்பு? பொறையுடையார் எல்லாமுடையார். பொறையின் பெருமையைத் திருவள்ளுவர் வியந்து வியந்து கூறுகிறார். அவர்தஞ் செம்மொழி வருமாறு:—

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினு நன்று.

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த பொறுமையுடையான் பால் என்ன இராது? அவன்பால் எல்லா நறுங்குணங்களும் பொலியும். அவற்றுள் சிறப்பாக நான்கை ஈண்டுக் குறிக்கிறேன். வேறு சில இயல்புகளைச் சிறப்பாகக் கொள்வோரு முளர். அவையவை அவரவர் வாழ்வின் அடைவை யொட்டி நிற்பன. எனக்குச் சிறப்பாகத் தோன்றும் நான்கு, அடக்கம், உள்ள நிறை, உண்மை, அன்பு என்பன. இவையில்லா ஒருவன் பொறையுடையவனாதல் அரிது.

நான்கு குணங்கள்

அடக்கம் மனிதனிடத்துள்ள முனைப்பை அழிப்பது. மனிதனைச் சிறுமைக் குழியில் வீழ்த்தி இடர்ப் படுத்துவது முனைப்பு. முனைப்பின் வழியன்றோ தற்பெருமை எழுகிறது? தற்பெருமை உள்ள இடத்தில் எல்லாத் தீமைகளும் இருக்கும். தற்பெருமைக்கு முதலாயுள்ள முனைப்பை அழிப்பது அடக்கமெனின் அதன் மாண்பை என்னென்று கூறுவது?

அடக்கம்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

என்றும்,

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

என்றும்,

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்

என்றும்,

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது

என்றும்

பெருநாவலர் பேசிப் போந்தார்.

அடக்கம், உள்ளெழும் அவாவை ஒடுக்கி ஒடுக்கி முடிவில் அவ்வவா தோன்றும் ஊற்றுக் கண்ணையே தூர்த்துவிடும். அடக்கமுடையார் கிடைக்குமளவு உள்ள நிறைகொண்டு வாழ்வார். நிறைகொள்ளாது அவா எழும் வழியெல்லாம் உழல்வோர் வாழ்வு வாழ்வாகுமோ? மனிதனைப் பேயாக்குவது - அரக்கனாக்குவது - மிலேச்சனாக்குவது- விலங்காக்குவது எது? அவாவன்றோ? அவ்வவா உடையான் என்னுடையனாயினும் அவன் நெஞ்சில் அமைதி நிலவுவதில்லை. ஆதலால், அவா உடையான் என்றும் நல்குரவாளனாகவே யிருப்பன். அவாவின்றிக் கிடைத்தமட்டும் நிறைவு கொள்வோனிடம் வறுமை என் செய்யும்? ஆக்கமும் வறுமையும் பொருட் பெருக்கையுஞ் சுருக்கையும் பொறுத்து நிற்பனவல்ல. அவை அவரவர் உள்ள நிலையைப் பொறுத்து நிற்பன. 'நிறை நெஞ் சுடையாரை நல்குரவு அஞ்சும்' என்றார் நம் சான்றோர். நிறைநெஞ் சுடையான், சிறு பொருளுடைய னாயினும், அவன் செல்வனே யாவன். அந்நெஞ்சு பெறாது பெரும் பொருள் பெற்றிருப்பினும் அப்பெரும் பொருளுடையான் வறியனே யாவன். நிறைநெஞ்சம் அவாவை அழிக்கிறது. ஆதலால், பொறுமைக்கு உள்ள நிறை இன்றியமையாதது. இல்லையேல், அவாவெனும் பேய்க்கு இரையாகிப் பொறாமை என்னும் வெந்தீயிடை வீழ்ந்து வருந்தல் நேரும்.

உள்ள நிறை

*அவாஇல்லார்க்கு இல்லாகுந் துன்பம் அஃதுண்டேல்*
*தவாஅது மேன்மேல் வரும்*

என்றார் பொய்யா மொழியார்.

அடக்கத்தால் அவா அற்று உள்ளம் நிறைவெய்து கிறது. அவா அற்ற இடத்தில் உண்மை ஒளிரும். உண்மை அஞ்சாமையை அளிக்கும். பொறுமைக்கு உயிர் போன்றது அஞ்சாமை. அஞ்சாமையை ஈனுவது உண்மையென்று கூறுவது மிகையாகாது. உண்மை இல்லா உள்ளம் என்றும் அச்சத்தால் பிடிக்கப்படுதலையும், அது பொலியும் உள்ளம் அச்சத்தால் பிடிக்கப்படாது அஞ்சாமையில் வீறுகொண்டு நிற்றலையும் விளக்கிக்கூற வேண்டுவதில்லை. அவரவர் அடைவு (அநுபவம்) அவரவர்க்கு இவ்வுண்மையை அறிவுறுத்தும். ஆதலால், பொறுமைக்கு உண்மை இன்றியமையாமை என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குவதொன்று.

**உண்மை**

அடக்கத்தால் முனைப்புக் கெடலும், அதனால் அவா அறலும், அவா அறலால் உண்மை விளக்கமும் உற்ற ஒருவனது நெஞ்சம் பின்னை எதற்குக் கோயிலாகும்? எல்லாங் கடந்த கடவுளாம் அன்பிற்கன்றோ அவ்வுள்ளங் கோயிலாகும்? உண்மையாம் சத்தி இல்லாத இடத்தில் சிவமாம் அன்பு எவ்வாறு திகழும்? அன்புக்கு அடிப்படை உண்மையே. அன்பு, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமை, வருந்தும் உயிர்கட்கு இரங்கி இயன்ற உதவி புரிதல், பிறர் கேடு சூழினும் வைரங்கொண்டு திரும்ப அவர்க்குக் கேடு சூழாது அக்கேட்டையேற்றல் முதலிய நல்லியல்புகளைப் பெறச்

**அன்பு**

செய்கிறது. அன்பில்லாப் பொறுமை பொறுமையாகாது. அன்பின்றிப் பொறுமையுறாது. ஆகவே, பொறுமையர் பால் சிறப்பாக விளங்க வேண்டிய அடக்கம், உள்ள நிறை, உண்மை, அன்பு என்னும் நான்கும் மக்கள் வாழ்வைப் பலவழியிலும் பண்படுத்துமென்க.

இந்நல்லியல்புகளை இளமை தொட்டே பயிற்சி செய்வது நல்லது. இவை பிள்ளைகள் உள்ளத்தில் பதிய வல்ல கல்வியையுங் கூட்டுறவையும் கொடுத்துதவ வேண்டுவது பெற்றோர் கடமை. அறிவு குணம் செயல் அரும்பிப் பண்படாத இளைஞர் காண்பனவும் கேட்பனவும் கருதுவனவும் மேற்போந்த குணங்களை உண்டாக்குவனவாக இருத்தல்வேண்டும். அவர் பேசுவனவும் செய்வனவும் அத்தன்மைகளைப் பயப்பிப்பனவா யிருத்தல்வேண்டும்.

நறுங்குணங்கள் செறியப்பெறூஉம் பொறுமையன் பிறர் நலம் நாடுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பன். அஃதவனது இயல்பாகிவிடும். நெருப்பில் வெம்மை இருப்பதுபோலவும், மலரில் மணம் இருப்பது போலவும் மெய்யறிவு விளங்கப் பெற்ற பொறுமையன்பால் பயன் கருதாது பிறர் நலம் நாடி உழைத்தல் இயல்பாய் அமைந்து கிடப்பதாகிறது.

பொறுமையன் இயல்பு

இவ்வியல்பு வாய்ந்த பொறுமையர் உலகம் வேறு; ஏனையோர் உலகம் வேறு. இவ்விரு வேறு உலகம் இப்பொழுது நிலவிக்கொண்டிருக்கின்றன. பின்னைய உலகம் அழிந்து முன்னைய உலகத்தோடு ஒன்றுபடும் நாளே இவ்வுலகுய்யும் நாள் என்னலாம். இவ்வுலகம் அந்நிலையுறுமா என்று சிலர் கருதலாம். உறும் என்னும் உறுதி எனக்கு உண்டு.

இப்பொழுது பொதுவாக மக்களிடத்தில் பொறுமை உண்டா இல்லையா என்பதை உன்னுக. பொறுமை எல்லாரிடத்திலும் உண்டு. ஆனால் அஃது ஒவ்வொருவர்பால் ஒவ்வோரளவினதாகப் பொலிகிறது. ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் அளவினதாகப் பொறுமை விளங்கலால், அதை முயற்சியால் முற்றும் பெறலாமன்றோ? முளையை மரமாக்க முயன்றால் அது மரமாகாதோ? இவ்வுலகைப் பொறுமைக் கடவுள் வண்ணமாக்கவே பற்பல இடங்களில் குருமார் தோன்றிப் பொறுமைப் பொருளை அறிவுறுத்தினார். அவர்தம் போதனைகள் உலகில் பரவாதவாறு பிற்காலப் போலி அரசியல் அவைகளைத் தகைந்து நிற்கிறது. அரசியலை வேண்டாமென்று நான் கூறுகின்றேனில்லை. அரசியல் மன்பதையைத் தூய்மைப் படுத்துவதா யிருத்தல் வேண்டும். மக்களை விலங்காக்கும் அரசியலால் என்ன பயன்? மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி, அவர்கள் அறநிலை பெறுதற்குத் துணை புரியவே அரசியல் முதல் முதல் ஏற்பட்டது. பின்னை அது மக்கள் அறநிலையைத் தேய்க்குங் கருவியாய்விட்டது.

அரசியல்

உலகிலுள்ள எல்லா நாடுகளினும் நமது இந்தியா மிகத் தொன்மையது. இந்திய நாடு தெய்வத்தன்மையில் பேரும் புகழும் பெற்றதென்று இந்நாளிலுஞ் சொல்லப்படுகிறது. இந்நாட்டார் மக்கள் வாழ்வு பண்படுதற்கு உரிய சில முறைகளைக் கோலியுள்ளார். அம்முறைகள் வழி மக்கள் தங்கள் வாழ்வை நடாத்தினால், உலகில் பொறுமை வளர்ந்து, அது தனது முழுத் தன்மையை ஒரு காலத்தில் எய்தும் என்பது உறுதி.

இந்திய முறை

இந்திய நாட்டிற்றோன்றிய அறிஞர், மக்கள் வாழ்வை இருகூறாக்கி ஒவ்வொன்றிற்கும் நான்கு முறை கோலினர். ஒன்று உலகியலுக்கு உரியது; மற்றொன்று உயிரியலுக்கு உரியது. முன்னையது வருணமென்றும், பின்னையது ஆச்சிரமமென்றும் வழங்கப்படுகின்றன. அவ்விரண்டும் ஒன்றற்கொன்று இயைபுபெற்று, மனிதனை நல்வழியில் நடாத்தி, முடிவில் அவனைச் சாந்த நிலையடையுமாறு செய்யுந் தன்மை வாய்ந்தன. அம்முறைகளைச் சிறிது ஊன்றி நோக்குவோம்.

ஆண்டவன் அருளால் இயற்கை பலவழியிலும் உயிர்களுக்குப் பயன்படுமாறு பன்முகங்கொண்டு பரந்து விரிந்து நிற்கிறது. அதன் வாயிலாகப் பல பொருளைப் பெற்றே மனிதன் வாழ்வை நடாத்தக் கடமைப்பட்டிருக்கிறான். பூமி திருத்தவும், குளந்தொட்டு வளம் பெருக்கவும், உழுது பயிர் செய்யவும் ஒரு மக்கள் கூட்டந்தேவை. உலகில் தோன்றும் மக்கள் அனைவரும் இத்துறையிலிறங்கி உழைப்பாராயின், இவரால் உண்டாக்கப்படும் செழும்பொருள்கள் நாறு பக்கமும் பரவாதொழியும். பொருள்களை நாறு பக்கமும் பரப்ப மற்றொரு கூட்டந்தேவை. இவ்விரு கூட்டத்தாரின் தொழில் முறைகள் வளம்பெற நிகழவும், அவற்றுக்கு இடையூறு விளையாதவாறு காக்கவும், இன்னோரன்ன பிற ஆற்றவும் இன்னொரு கூட்டத்தார் வேண்டற்பாலர். இவ்வளவோடு உலகம் நின்றுவிடின், உலகத்துக்குங் கடவுளுக்குந் தொடர்பின்றி ஒழியும். அத்தொடர்பை உணரவும் உணர்த்தவும் வேறொரு கூட்டத்தார் வேண்டும். இதுவே உலகம் செவ்வனே நடைபெறுதற்கு ஏற்பட்ட உலகியல் முறை.

உயிரியலுக்குரிய முறைப்பாட்டின் நான்கு கூறு வருமாறு :—அவை பிரமசரியம், கிருஹஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்பன. பிரமசரியம் கல்விக் குரியது. கிருஹஸ்தம் கற்றதைச் செயலிற் கொணர் தற்குரியது. வானப்பிரஸ்தம் மனைவியோடு துறந்து தொண்டு செய்தற்குரியது. சந்நியாசம் தனக்கென எப்பற்றுமின்றி எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதி, அவ்வுயிர் நலத்துக்கெனப் பாடுபடும் முடிந்த அறநிலைக் குரியது. எல்லாவற்றையும் வெறுத்துக் காட்டுக்கோடு தல் சந்நியாசமாகா தென்பதும், பயன் கருதாது பிறர் நலம் நாடியுழைப்பதே சந்நியாச நெறியென்பதும் மேலே சுருங்க ஓதப்பட்டுள்ளன. ஆகவே, இரண்டு முறையும் ஒழுங்கு பெற உலகிடை நடைபெற்றுவரின் உலகில் அமைதியே நிலவும்.

இவ்வழகிய முறைப்பாடுகள் தோன்றிய நமது இந்திய நாட்டிலேயே அவைகள் இந்நாளில் தத்தம் நிலை குலைந்து கிடக்கின்றன. வருணமும ஆச்சிரமும் பிறப்பை யொட்டி இயங்கத் தொடங்கிய நாள்தொட்டு உலகியல் நெறியும் உயிரியல் நெறியும் குலையலாயின.

அமைதி காத்து அறநெறி ஓம்புதற்கென்று அரசியல் நெறி காணப்பட்டது. அரசு என்பது, உலகிலுள்ள மக்கள் நன்னெறி பற்றி யொழுகி ஆண்டவன் அருள் பெறுதற்குரிய சாந்த நிலைபெற உறுதுணை செய்வதாகும். 'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா - மான முடைய தரசு' என்றார் திருவள்ளுவனாரும். எல்லா

அரசு

வற்றிற்கும் பெருவேந்தனாக இருப்ப வன் ஆண்டவன். அவன் பதிலியா யிருந்து உலகோம்பி அறநெறிகாப்பவன் உலக மன்னன். இந்நீர்மையுடைய மன்னனைக் கொண்ட அரசும் அதன்

இயலும் வளர்ந்து வந்திருப்பின், உலகம் என்றே கடவுட்டன்மை என்னும் பொறுமை பெற்றிருக்கும்!

இடைநாளில் உலகில் கோன் நெறி மாறலாயிற்று. மன்னர் தாம் கடவுள் பதிலியர் என்பதை மறந்து கூடா ஒழுக்கத்துறை நண்ணலாயினர். அதனால் உலகில் தெய்விக அரசியல் மாண்டு, மிலேச்ச அஞ்ஞான அரக்க அரசியல் துறைகள் தலைகாட்டலாயின. இக்கேட்டால் மக்கள் வாழ்விற்கு ஏற்பட்ட அறத்துறைகள் குலையலாயின. இக்குலைவால் உலகிற்குங் கடவுளுக்கும் இருந்த தொடர்பு அறுந்து வீழ்ந்தது. எங்கணும் பொறுமை அழிந்தது; பொருமை மிக்கது. இக்கால அரசியல் துறைகள் பொருமையையும் அவாவையும் அடிப்படையாகக் கொண்டு நிலவுவன என்பதை விளக்கலும் வேண்டுமோ?

**இக்கால அரசியல்**

பொல்லாத அரசியல் அறிவுப் பெருக்கால், சாந்தமயமான கடவுள் நிலையை அறவுறுத்திய பெரியோரின் பொன் மொழிகள், மக்கள் வாழ்வில் கலவாது தனித்து நிற்கலாயின. அம்மொழிகள் இப்போதைய சமய உலகின் வாயினிடையே பெரிதும் நிற்கின்றன. அவை செயலில் இல்லை என்பது வெள்ளிடைமலை. சமயஞானம் அருகிவரும் இந்நாளில் பொறுமை வளர்தல் அரிதே. இக்காரணத்தால் உலகிடைத் தோன்றியுள்ள அஞ்ஞான அரசியற்றுறைகளை அழித்து, மெய்ஞ்ஞான அரசியலை ஆக்கச் சில அறிஞர் முயன்று வருகின்றனர். அஞ்ஞான அரசியலின் பாற்பட்ட சாத்தான் ஆட்சி முறைகளின் தோற்றமே சாந்த உலக மறைவிற்குக் காரணம். ஆகவே பொறுமையர், பொறுமை எதிர்ப்பால் பேய் அரசாட்சி

**பொறுமையர் கடன்**

களை வீழ்த்திக் கடவுட்டன்மை வளரக்கூடிய அருட் பொறை ஆட்சியைப் புதுக்க முயலல்வேண்டும். இதற்கு இதுபோழ்து மக்களாட்சி என்னும் பொதுமை ஆட்சி தேவை.

உலகம் பொறுமை பொறாமை என இருவேறாகப் பிரிந்துநிற்பினும் பொறுமையே பொறாமையை வெல்லும் என்பது உறுதி. பொறாமையுலகில் வாழும் மனிதன் தன்னாலியன்ற அளவு பறந்து பறந்து முயன்று, தன் முயற்சியால் தனக்கே கேடு விளைவது கண்டு, பொறுமை யுலகில் வாழத் தானே விரும்புங் காலஞ் சேய்மையிலில்லை. இவ்வேளையில் பொறுமை வளர்ச்சிக்குரிய முறைகளை மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்தொழுகக் கடமைப் படல்வேண்டும்.

பொறுமையனுக்கும் பொறாமையனுக்கும் உள்ள வேற்றுமைகள் பலப்பல. பொறுமையன் ஆன்ம சக்தி துணைகொண்டு வாழ்வன்; பொறாமையன் தேக சக்தி துணைகொண்டு வாழ்வன். உண்மையும் அஞ்சாமையும் அவனுக்குரிய கருவிகள். இவனுக்

பொறுமை
பொறாமை

குரிய கருவிகளோ கத்தி, ஈட்டி, துப்பாக்கி, பீரங்கி, எறிகுண்டு முதலியன. அவன் உள்ளத்தில் அருள் என்னுந் தண்புனல் சுரந்து கொண்டேயிருக்கும்; இவன் உள்ளத்தில் வன்கண் என்னும் வெம்மை எரிந்துகொண்டே யிருக்கும். பொறையுடையான் எண்ணமும் சொல்லும் செயலும் பிறர்க்கு நலம் புரிவதில் குறிக்கொண்டு நிற்கும்; பொறையிலான் முக்கரணமும் முற்றும் மாறுபட்ட வினைநோக்கி நிற்கும். பொறையுடையான் பிறர் தன்

னைத் துன்புறுத்தும்போது அத்துன்பத்தைக் களைய வேறு ஒருவர் உதவியையாதல் கருவிகளை யாதல் தேடான். மற்றவன் என் செய்வன்? அஞ்சி ஓடுவன்; அல்லது கருவி கொண்டு எதிர்க்க முயல்வன். பொறையுடைய புனிதன் இனிமை செய்யவே முயல்வன்; பொறையில்லாத புன்மையனோ இனிமை செய்வோர்க்கும் இன்னா செய்யச் சூழ்ச்சி தேடுவன். அவனுக்கும் இவனுக்கும் உள்ள வேற்றுமை கடலினும் பெரிது. அவன் வாழ்வது ஓர் உலகு; இவன் வாழ்வது ஓர் உலகு.

## அ. ஆன்ம சக்தி

பொறுமையன் நல்லியல்புக்குக் கருவியாக நிற்பது அவன்பாலுள்ள ஆன்ம சக்தியே யாகும். ஆன்ம சக்தி விளங்க ஒண்ணாதவாறு அதை மூடிக்கொண்டிருப்பன பொறாமை அவா வெகுளி முதலிய தத்துவக் குப்பைகள். அக்குப்பைகளைக் கல்வியால், இல்லறத்தால், வாய்மையால், மெய்யறிவால் கூட்டிப் பெயர்த்தெடுத்ததும் பொறுமையெனும் மணி ஒளிரும். அதன் வாயிலாக வீசும் உள் ஒளியே ஆத்மசக்தி என்பது.

ஆத்ம சக்தி இயல்

ஆத்மசக்தி கைவரப்பெற்றவன் தனக்கென உடல், தனக்கெனப்பொருள், தனக்கென ஆவி என்று தன்னல வாழ்வு நடத்தாது, அவற்றைப் பிறர்க்கெனக் கொண்டு ஒப்புரவு வாழ்வு நடாத்துவன். உடல் பொருள் ஆவி மூன்றையும் பிறர் நலத்துக்கென அர்ப்பணஞ் செய்தவன், 'எல்லாம் ஆண்டவன் செயல்'' என்றிருக்கும் மெய்யறிஞனாகிறான். அவன் இன்பத்தையும் துன்பத்தையும்

ஒன்றாகக் கருதுவன் ; அவன் இன்பம் வரும்போது இறுமாந்து களித்தலில்லான் ; துன்பம் வரும்போது துயருற்று வருந்தான் ; எல்லாம் ஆண்டவன் செயலென்றிருப்பன்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

எனவரூஉம் திருவாசகத்தை ஓர்க.

இந்நிலையெய்திய ஒருவனுக்குத் தாய் தந்தை குரவன் இறைவனே. நிராசை அவன்றன் மனைவி. எல்லா உயிரும் அவன் பிள்ளைகள். அவனைப்போன்றவர் அவனுடைய உறவினர். ஊரில் அட்டப்படும் சோறெல்லாம் அவனுடையன. பூமியே அவனுக்குப் பாய். இறைவன் பொருளெலாம் அவனுடைமை. அவனுக்குச் சிறை வாழ்வும் பிற வாழ்வும் ஒன்றே. அவன் சென்றது கருதாமலும் நாளை சேர்வது நினையாமலும் வாழ்வன். ஆண்டவன் வடிவாகிய இயற்கை அன்னையோடு நேரே உறவாடும் உரிமையை அவன் பெறுகிறான். இயற்கைக்கு மாறுபட்டு ஒரு வினையையும் அவன் ஆற்றான்.

ஆத்மசக்தி யுடையார் நிலையை மூவிதமாகப் பிரிக்கலாம். மக்கட்கு முத்திற உடலங்கள் ஆண்டவனால் அளிக்கப்பட் டிருக்கின்றன. அவை தூல சூக்கும காரண உடல்கள். தூலத்தை நோக்கச் சூக்குமம் நுண்ணியது ; சூக்கு

மூவிதம்

மத்தை நோக்கக் காரணம் நுண்மையது. இம்மூன்றை யும் உயிர் தாங்கி வினைகளை நிகழ்த்துகிறது.

முதலில் மனிதன் தூல உடல் உணர்வோடு வினைகள் ஆற்றுகிறான்; பின்னைக் கல்வியால் - ஆராய்ச்சியால் - வேறு பலவற்றால், சூக்கும உடல் தன்பாலிருப்பதை உணர்ந்து, அவ்வுடல் உணர்வு பெறுகிறான். சூக்கும உடல் உணர்வு நாளடைவில் காரண உடல் உணர்வைப் புலப்படுத்தும். ஆத்ம சக்தி, உடலுக்கு ஏற்ற இயல்பு பெற்று இயங்கும். தூல உடல் உணர்வால் விளங்கப் பெறும் ஆத்மசக்தி யுடையாரினுஞ் சிறந்தவர் சூக்கும உடல் உணர்வால் விளங்கப்பெறும் ஆத்மசக்தி யுடையார். இவரினுஞ் சிறந்தவர் காரண உடல் அறிவு விளக்கம் பெற்ற ஆத்மசக்தியுடையார். இவரே சாந்த நிலைபெற்ற செந்தண்மையாளர். இவரே இவ்வுலகில் முழு ஆத்மசக்தி பெற்றவராவர். இந்நிலை கடந்த ஒன்றே சாந்தியாதீதம் என்பது. அதை நினைத்தலும் முடியுமோ?

முழு ஆத்மசக்தி கைவரப் பெற்றவன் நினைக்கின்ற வண்ணம் எல்லாம் இயக்கும். அவனை ஐந்து பூதங்களென் செய்யும்? கருவிக ளென்செய்யும்? சேனைகளென் செய் யும்? புலி கரடி சிங்கம் முதலிய விலங்குகளும் அவனைக் காணின் பணிந்து செல்லும. மன்னன் அவன்வழி நிற்பன்; அரசுகள அவன்வழி நிற்கும். சுருங்கக்கூறின் உலகம் அவன்வழி இயங்கும் என்னலாம். அவன் உள்ளத் தில் ஆண்டவன் தயிரில் நெய்போல் விளங்கித் தோன்று வன். அவன் உள்ளம் பெருங்கோயில். அவனைக் கடவு ளாகவுங் கொள்ளலாம்; தொழலாம். அவனே சிவராஜ யோகி; தவராஜ சிங்கம். முழு ஆத்மசக்தி யுடையான் தன் பெருமை தானறியாப் பெரியன். அவன் பெரு மையே பெருமை. அவனே அச்சமறியா ஆண்டகை;

உண்மை யுணர்ந்த உத்தமன். உயிர் உடலங்களெல்லாம் அவன் மயம். அவனலாகாததென்ன ?

ஆத்மசக்தியுடையான்பால் எல்லாம் வல்ல ஆற்றல் பொலிந்து திகழினும், அதை அவன் தீநெறியில் செலுத்தான். ஆத்மசக்தி யுடையானுக்கும் பூதசக்தி (தேகசக்தி) யுடையானுக்கும் இதுவே வேற்றுமை. இதுகாலை மனித உடல் தாங்கினோர் ஐம்பெரும் பூதத்தியல்பை அளந்தளந்து ஆய்ந்தாய்ந்து, அவைகளின் வல்லமைகளிற் சில கூறுகளைக் கண்டு, அவைகளைக் கொண்டு பிறர் நலம் நாடாது, தமதுநலம் நாடிப் பிறரை வருத்துவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம். மேல் நாட்டார் பூதபௌதிக ஆராய்ச்சியிலே பெற்ற தேர்ச்சியால் நச்சுக்காற்றும் எறிகுண்டும் அணுகுண்டும் கண்டு உயிர் வதையை மனமாரச் செய்கிறார். இது பூதசக்தி கைவரப்பெற்றதால் விளையுங் கொடுமை. ஆத்மசக்தி கைவரப்பெற்றோர் செயல், பூதசக்தி கைவரப்பெற்றோர் செயலுக்கு முற்றும் மாறுபடுவதாகும். ஆத்மசக்தி பொய் பொறாமை வெகுளி முதலிய தத்துவங்களைக் கடந்து ஒளிர்வதாகலான், அதனிடத்திருந்து அன்பு அருள் முதலிய நலங்களே பிறக்கும் ; தீமைகள் பிறவா. பூதசக்தியைத் துணைகொள்ளுந் தேகாத்ம வாதிகள் ஒருவேளை அறியாமையால் ஆத்மசக்தி விளங்கப் பெற்றோர்க்கு இன்னா செய்யினும், அவர் அதைக் கடிய ஒன்றுஞ் செய்ய முனைவதில்லை. அஃதும் அவரை ஒன்றுஞ் செய்வதில்லை. ஆத்மசக்தி யுடையார் வைரங் கொண்டு தமக்குக் கேடிழைத்தார்க்குக் கேடிழையார் ; சமயம் நேர்ந்துழி நலமே செய்வர். இஃது ஆத்மசக்தி யுடையார் இயல்பு.

ஆத்ம சக்தியும் பூதசக்தியும்

மனிதன் எற்றுக்குப் படைக்கப்படுகிறான்? ஆத் சக்தி பெறுதற்கன்றோ? அதைப் பெறுதற்குப் பதிலா மனிதன் பரு உடலையே பொருளாக்கொண்டு வாழ்வ னுயின், அவன் வாழ்வின் நோக்கத்தைப் பெறுதொ கிறான். தேகாத்ம வாதிகள் பெருகப்பெருக உலக பேய்க்கு இரையாகிக் கொண்டே போகும். ஆதலா மக்கள் உள்ளொளிபெறுங் கல்வி அறம் முதலிய துை களில் நண்ணி உழைத்தல் வேண்டும். உள்ளொ பெருகப்பெருக அஞ்ஞான இருள் இரிந்தொழியு நம்முன்னோர் நம்மனோர்க்கு ஆத்மஞான விளக்க நெ யையே காட்டிச் சென்றார். அந்நெறிக்கு இடர் இ பொழுது நேர்ந்திருக்கிறது. இடரை ஆத்ம ஞானத்து குரிய பொறுமை எதிர்ப்பால், - அஹிம்சா தர்மமெனு அருளறத்தால் - போக்க முயலல்வேண்டும். பொறுை எதிர்ப்பைக்கொண்ட அஹிம்சா தர்மநெறியெனு அருள் நெறியே, சத்தியாக்கிரகமென்பது.

## க. சத்தியாக்கிரகம்

சத்தியத்தை ஆக்கிரகித்து நிற்பது சத்தியா கிரகம். அதைத் தமிழில் 'உண்மை கடைப்பிடித்தல் என்று சொல்லலாம். தமிழ் மூதாட்டியார் 'உண்ை கடைப்பிடி' என்று நமக்குப் பன்னூறு ஆண்டுகளுக் முன்னரே அறிவுறுத்திப் போந்தா மனிதன் ஒவ்வொருவனும் சத்தியா கிரகியாதல் வேண்டும் என்பதை பற்றி விரிவுரை தேவையில்லை. சத்தியாக்கிரகத்ை வெறுப்போர் எவரும் இரார். ஆனால் அதைச் செயலி

உண்மை
கடைப்பிடி

கொண்ட விரும்புவோர் அரியர். உலகில் சத்தியாக்கிரகம் சமயம் (Religion) போலக் கொள்ளப்படின், அதன் கண் அல்லல் விளைதற்கு இடமே இராது.

சத்தியாக்கிரக நுட்பம் தெரிந்தவர், எங்கெங்கே துராக்கிரகம் தலை காட்டுகிறதோ, அங்கங்கே போந்து அதையொடுக்க முயல்வர். அவர் துராக்கிரகத்தைக் கண்டு வாளா கிடக்கமாட்டார். மனையிலோ குடும்பத்திலோ ஊரிலோ நாட்டிலோ அரசிலோ எதிலோ துராக்கிரகமெழின் அதைச் சத்தியாக்கிரகத்தால் தொலைக்க முயல்வது சிறப்பு. துராக்கிரகம் துராக்கிரகத்தால் ஒடுங்காது. இருசார்பிலும் துராக்கிரகம் பெருகிப் பெருகிக் குட்டிப் போட்டுக்கொண்டே போகும். ஆதலால், துராக்கிரகத்தைச் சத்தியாக்கிரகத்தால் ஒடுக்க முயல்வது அறிவுடைமை. அதனால் ஆன்மநேய ஒருமைப்பாடு வளரும்.

*சத்தியாக்கிரகிகள் இயல்பு*

ஒரு தீயன் தன் மனைவியை என்றுந் துன்புறுத்துவதாக வைத்துக்கொள்வோம். தீயனை நல்வழிப்படுத்த மனைவி என் செய்வது நல்லது? தலைவி இகல்கொண்டு கடுஞ் சொல்லாலோ அச்சுறுத்தலாலோ போராலோ வேறு எம் முரட்டு வழியாலோ தலைவனைத் திருத்த முயல்வது குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்ட கதையாக முடியும். பின்னை, தலைவி என்செயல் வேண்டும்? முதலாவது, தலைவி, தலைவன்மீது இகல் கொள்ளலாகாது; பழிக்குப் பழிவாங்க நினைத்தலுங் கூடாது. இகல் பிரிவை வளர்க்கும். பழிக்குப் பழிவாங்கல் மரம் விதைபோல் அழியா வினையாக - கருமமாக - வளரும்.

தலைவி இகல் கோடலும் பழிக்குப் பழிவாங்க எண்ணு தலுமின்றி, அன்புளங்கொண்டு, பணிகளை வழாது செய்து, தனது நிலையைத் தலைவனுக்குப் புலப்படுத்தல் வேண்டும். அதை அவன் உணராது கிடப்பானாயின், சில பணிகளை அவள் நிறுத்தல் வேண்டும். அதற்கும் அவன் இசைந்து வாரானாயின், எல்லாப் பணிகளையும் அவள் நிறுத்தல்வேண்டும். அதற்கு மேலும் அவன் திருந்தானாயின், அவள் உண்ணா நோன்பு கொள்ளல் வேண்டும். படிப்படியாகச் சத்தியாக்கிரகத்தை மனைவி வளர்த்து வரும் வேளையில் கணவன் இணங்கிவாராது துராக்கிரக வழி நின்று அவளைத் துன்புறுத்துவா னாயின், அப்பொழுதும் அவள் அன்புளங் கொண்டு கொடுமைகளைப் பொறுத்தல் வேண்டும்.

கொடுமைகளைப் பொறுப்பது வீணாவதில்லை. அவை களைப் பொறுக்கப் பொறுக்கப் பொறுமையர் உள்ளத்தில் ஒளி பெருகும். மற்றவர் நெஞ்சும் நாளடைவில் குழைந்து குழைந்து உருகும். இகலுளங் கொண்டு பொறுப்பது எவர் நெஞ்சையும் உருகச் செய்யாது. காழ்ப்பால் பொறுப்பது துராக்கிரகத்தின் பாற்படுவதாகும். அதனால் கருதிய தொன்றுங் கைகூடாது. அன்புப் பொறுமை செய்யாததொன்றில்லை. அப்பொறுமையால் உயிர் துறக்க நேரினும் அது விழுப்பமளிப்பதாகும். பொறுமை காத்துத் தற்கொலை செய்துகொள்ளாது, இயல்பாக உயிர் துறப்பின், அதற்குக் காரணனாக நின்றோன் விரைவில் அன்பனாவன். பொறுத்தோரும் முழு ஒளியில் மூழ்குவர். இன்னோரன்ன முறைகளைக் கொண்டது சத்தியாக்கிரக நெறி.

தலைவி கொடியளாய்த் தான் செய்யுங் கொடுமை வழித் தலைவனை நிறுத்தியாள முயன்று, பணி செய்யாது, உண்ணு நோன்பு கொள்ளல் முதலியன நிகழ்த்துவது சத்தியாக்கிரகமாகுமோ என்று சிலர் வினவலாம். அது, சத்தியாக்கிரக மாகாது. பின்னை என்ன

துராக்கிரகம்

ஆகும்? அது துராக்கிரகமாகும். தன்னலத்துக்கும் தீநெறியாக்கத்துக்கும் பிடிவாத முறைகளைக் கடைப்பிடிப்பது சத்தியாக்கிரகமாகாது. சத்தியாக்கிரகிகள், செந்நெறிக்கு நேரும் இடர் களைய முயல்வரன்றித் தீநெறிக்கு என்றுந் துணைபோகார். ஒரு குடும்பமோ ஓர் ஊரோ ஓர் அரசோ எதுவோ செம்மை நெறி பிறழ்ந்து நடக்குமாயின், அதை ஒழுங்கு படுத்தச் சத்தியாக்கிரக முறைகளைக் கையாளலாம். கொடுங்கோல் அரசன் ஒருவன் அறநெறி விடுத்துத் தன் விருப்பப்படி கொடுமைசெய்து வருவானாயின், அவனை நல்வழிப்படுத்தி நல்லரசாட்சி காணக் குடிமக்கள் சத்தியாக்கிரக முறைகளைப் படிப்படியாக நிகழ்த்தலாம். அறநெறி நிற்கும் நல்லரசனை வம்புக்கு இழுக்க முயல்வது துராக்கிரகமே யாகும்.

ஹிம்ஸை வழி நின்று, ஒருவனை அச்சுறுத்தி, அவனது மனச்சான்றுக்கு மாறுபட்டு நடக்குமாறு அவனைக் கட்டாயப் படுத்துவது சத்தியாக்கிரக

அச்சுறுத்தல்

மாகாது. தான் அஹிம்சா தர்மவழி நின்று, பலதிறத் துன்பங்கட்குத் தான் உட்பட்டும், துன்பங்களை ஏற்றும், பிறனது மனமிளகும் வழி அவனது அக நிலையை மாற்ற முயல்வது சத்தியாக்கிரக மாகும். சத்தியாக்கிரகி தனக்கு எக்கேடு நேரினும்

தான் கொண்ட உறுதியினின்றும் பிறழாது, உண்மை கடைப்பிடித்து, அஹிம்சா தர்மங் காத்து வருவன். உண்மை நெறிக்கும், அருள் நெறிக்கும் மாறுபாடு நிகழும் இடங்களிலெல்லாம் சத்தியாக்கிரகி வலிந்துசென்று தன் கடனாற்ற முற்படுவன். அசத்தியத்தையும் ஹிம்சையையும் ஒழிக்கவே சத்தியாக்கிரகி உலகில் வாழ்கிறான். அதுவே அவனுடைய சமயத் தொண்டு.

**தியாகம்**

சத்தியாக்கிரகத்துக்கு இன்றியமையாதது வேறொன்றுள்ளது. அஃது எது? அது தியாகமென்பது. தியாக உணர்வு இல்லாத இடத்தில் சத்தியாக்கிரகம் பயன் தராது. தியாக உணர்வு ஆன்மசக்தியை எழுப்ப வல்லது. ஆன்மசக்திப் போரே சாத்தியாக்கிரகம் என்பது. ஆதலால், தியாக உணர்வு சத்தியாக்கிரகத்துக்கு இன்றியமையாத தென்க.

சத்தியாக்கிரக முறைகள் காலத்துக்கு ஏற்றவாறு கொள்ளப்படுவன. சத்தியாக்கிரகிகளின் வரலாறுகளை ஆராய்ந்தால் அவர்கள் தம் முறைகளில் பலதிறம் புலப்படும். முறைகள் பலதிறமாயிருப்பினும், அவைகளின் அடியில் உண்மை, அஹிம்சை, பொறுமை, தியாகம், தவம் முதலியன ஒரேவிதமாகவே பொலிந்துகொண்டிருக்கும். இஃது உன்னற்பாற்று. உண்மை முதலியவற்றுள் ஒன்றுள்ள இடத்தில் பிறவும் இருக்குமென்பதும் தெளியற்பாற்று. ஒருவர் வரலாறு, உண்மையை அறிவுறுத்துவதாயிருப்பின், அதன்கண் அஹிம்சை முதலியனவும் விளங்குதல் இயல்பு என்று கோடல் வேண்டும். இவ்வாறே பிறவும்.

## ௧௦. சத்தியாக்கிரகிகள்

உலகில் பல பாகங்களில் பல சத்தியாக்கிரகிகள் வதிந்தார்கள்; வதிகிறார்கள். வெளிவந்த சத்தியாக்கிரகிகளின் தொகையைப் பார்க்கிலும் வெளிவாராத சத்தியாக்கிரகிகளின் தொகை பலவாக இருக்கும். நமது பரதகண்டம் சத்தியாக்கிரகத்துக்குப் பேர்பெற்றது. நமது நாட்டில் ஊடல் ஊடல் என்று சொல்லப்படுவது அன்பர்க்குத் தெரியும். அஃதென்னை? அது சத்தியாக்கிரகத்தின் பாற்பட்டது.

ஊடல்

அன்பை அடிப்படையாகக் கொண்ட பிணக்கே ஊடல் என்பது. அழுக்காற்றையாதல் சினத்தையாதல் அடிப்படையாகக் கொண்டெழுவது ஊடலாகாது. ஊடல் ஒவ்வோர் இல்லத்தும் நிகழ்வது. ஊடலால் உறும் பிணக்கு, பின்னைப் பேரன்பை வளர்ப்பதாகும். பகைப் பிணக்கோ மக்களைக் கொலை முதலிய கொடுமைகளுக்கு உட்படுத்தும். நமது நாட்டுப் பெண் மக்கள் ஊடலால் பிணங்கி மீண்டும் இணங்குவதைத் தங்களுக்குரிய அறவொழுக்கமாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்கள் பகைமையால் பிணங்கித் தலைவனை நீத்து வேறு ஒருவனை அடைவதை அறமாகக் கொண்டார்களில்லை. இல்லங்களிலேயே சத்தியாக்கிரகப் பயிற்சி பண்டைநாளில் செயலிலிருந்தது. அவ்வாழ்வு பின்னைப் பெருஞ் சத்தியாக்கிரக முனிவர் வாழ்வை நல்கி வந்தது.

நமது நாட்டு முனிவரர் பலர் சத்தியாக்கிரக நெறி நின்று பேறு பெற்றவர். முனிவர் என்பதற்குப் பொதுவாக எல்லாத் தீக்குணங்களையும் சிறப்பாகச் சினத்தையும் ஒழித்தவர் என்பது பொருள். 'சினத்தை

நிந்தனை செயுமுனி வரர்தொழ' என்றார் அருணகிரி நாதர். முனிவரர் சத்தியாக்கிரகிகளா யிருந்தமை யால், அவர் காடுகளிலும் மலைகளிலும் விலங்குகளிடை யும் பொல்லாப் பறவைகளிடையும் சிறிதும் அச்சமின்றி வாழ்ந்து நாட்டுக்கு நலஞ்செய்து வந்தனர். மன்னருள் ளும் மற்றவருள்ளும் எத்துணையோ பேர் சத்தியாக்கிரகி களாக இருந்தனர். அந்நெறிபற்றித் தங்கருத்தை முற்றுறச்செய்த பெண் மக்களுமுளர். சத்தியாக்கிரகிகள் இல்லையேல் உலகில் அறமேது ? அன்பேது ? அவர்கள் வழியன்றோ உலகம் நடைபெறுகிறது ? அவர்களிற் சிலரது வரலாற்றிலுள்ள சில குறிப்புக்களை ஈண்டு எடுத்துக்காட்டி மேற் செல்கிறேன்.

மார்க்கண்டேயர்

மார்க்கண்டேயர் என்னும் முனிவரைப்பற்றி அறி யாதாரில்லை. அவர் எவ்வழியில் முயன்று முனிவ ரானார் ? அவர் சத்தியாக்கிரக வழி நின்றே முனிவ ரானார். மார்க்கண்டனார் உலகிற்றோன்றி வளர்ந்து பதினாறு அகவையுற்றபோது, தாம் உண்ணும்போதும், உலவும் போதும், விளையாடும்போதும் தாய் தந்தையர் தம்மை அடிக்கடி நோக்கி நோக்கிச் சோர்வுற்ற மனத்தராய், விம்மிவிம்மி இரங்கி வருந்துவதைக் குறிப்பாலுணர்ந்து, உண்மை தெளிந்து, தாய் தந்தையரைத் தொழுது, 'பெரியீர் ! நீவிர் வருந்தற்க ; எள்ளுக்குள் எண்ணெய் போல் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை வழி பட்டுக் காலனை வெல்வேன்' என்று உறுதிமொழி கூறி, அவர்பால் விடைபெற்றுக் காசியம்பதியை யடைந்து, காலங்கடந்த கண்ணுதற் பெருங்கடவுளை வழுத்தி

விதியை வெல்ல முயன்றார். அதுபோழ்து அவர்க்கு விதி கழியுங்காலங் கூடிற்று ; கூடவே கூற்றுவன் ஆண்டுப்போந்து தன் கருத்தைத் தெரிவித்தான். தவமுதல்வர் அவனை மதியாது, அடியார் மாண்புகளை அவனுக்கு அறிவுறுத்திச் சிவபூசையில் மனத்தைச் செலுத்தினார். இயமன் தன் கடனாற்ற இறுதியில் வெம்பாசத்தை வீசி எறிந்தான். அவ்வேளையில் மார்க்கண்டனார் காலபாசங் கண்டு நடுக்குற்று ஆண்டவனை மறந்தனரோ? உறுதி பிறழ்ந்தனரோ? கொலைப்போர் தொடுக்கமுயன்றனரோ? அவர் தேகசக்தியில்-மூர்க்கசக்தியில்-உறுதியுடையவரா யிருப்பின், அச்சத்தால் தாக்குற்று, மரணமெனும் நர கிடைப் புகுந்திருப்பர். தவச்செல்வர் ஆத்மசக்தியில் உறுதி கொண்டவராதலால் சத்தியாக்கிரகத்தினின்றும் பிறழ்ந்தாரில்லை; இயமனைத் துராக்கிரக வழியில் எதிர்க்க வும் முயன்றாரில்லை. அவர் தமது கடனாற்றுவதில் கண்ணுங்கருத்துமா யிருந்தனர். தவக் குழந்தையின் உள்ளங் கோயில் கொண்டுள்ள சிவநாதன் திருமேனி தாங்கி அந்தகனைத் திருவடியால் உதைத்தான். நடுவனும் வீழ்ந்தான். ஆண்டவனைக் கண்ட மார்க்கண்டேயர் இன்பக்கடலிற் றோய்ந்து, திருவடி பணிய, எம்பெரு மான் குமரனை நோக்கி, 'மைந்த! நீ நம்மை வழிப் பட்டமையால் உனக்கு அந்தமில்லதோர் ஆயுள் தந்தோம்' என்று அருளிப் போந்தான். விதியை வென்ற காண்முளையின் ஆத்மசக்தி என்னே! விதியை யும் வெல்லும் ஆற்றல் ஆத்மசக்திக்கு உண்டெனில், அதன்பாற்பட்ட சத்தியாக்கிரக மாண்பை என்னென்று கூறுவது? மார்க்கண்டனார் 'விதியை வெல்வேன்'

என்று உறுதிகொண்டு அதைத் தவத்தால் முற்றுறச் செய்ததை அன்பர் உன்னுவாராக. சத்தியாக்கிரகத்துக்குத் தவம் சாலச்சிறந்தது. தவத்தால் சத்தியாக்கிரகியாகிய மாாக்கண்டனூர் இன்றும் போற்றப்படுகிறார். அவர் பெயர் வேத வேதாந்தக் கலைகளிலும் நுழைந்து நிற்கிறது.

**பிரகலாதன்**

பிரகலாதன் என்ற சத்தியாக்கிரகி உலகறிந்தவன். அவன் கல்வி பயிலத் தொடங்கியபோது தன் தந்தை பெயர் கருதி, 'இரணியாயநம:' என்று சொல்ல மறுத்து, 'ஹரி ஓம் நாராயணாய நம:' என்றான். ஆசிரியன் பன்முறை வலியுறுத்தியும் பிரகலாதப் பெரியோன், 'ஹரி ஹரி' என்றே முழக்கிக் கொண்டிருந்தான். தந்தை பேர் கூற மறுப்பது அறமோ என்று சிலர் வினவலாம். தந்தைக்குரிய கடனாற்ற இளைஞர்கோன் மறுக்கவில்லை. எழுத்துத் தொடங்கும்போது அதற்குரிய எல்லாம்வல்ல இறைவன் திருப்பெயரைச் சொல்லாது, அதற்குப் பதிலாகத் திமிர்கொண்ட அரக்கன் பெயரை ஆசிரியர் சொல்வது அறமோ? அதைச் சொல்லுமாறு பிறரை வலியுறுத்துவது முறையோ? நெறியல்லா நெறி செல்லச் சத்தியாக்கிரகிகள் என்றும் ஒருப்படமாட்டார்கள். தந்தையாயினுமாக; அரசனாயினுமாக; எவனாயினுமாக. அவர் செம்மை நெறி பிறழ்ந்து நடப்பாராயின், அவர்வழி நில்லாது, அவரைத் திருத்தவும், நெறியைச் செம்மைப் படுத்தவும் சத்தியாக்கிரகிகள் முயன்றே தீர்வார்கள். தீநெறிபற்றி உலகமே உழலினும், சத்தியாக்கிரகி கொல்லாமையென்னும் அறவழி நின்று உலகை எதிர்த்தே தீர்வன். இங்கே

பிரகலாதன் செயல் நோக்கற்பாலது. உலகம் இரணியன் ஆணைக்கு அஞ்சி அக்கொடியனை நாராயணனாகத் தொழு தது. நம் பிரகலாதச் செல்வம் உலகத்தோடொத்து நடக்க மறுத்தது; ஆசிரியன் ஆணைக்குக் கீழ்ப்பட்டு நடக்க இசையவில்லை. சத்தியாக்கிரகிகள் அறமென்னே! திற மென்னே! பிரகலாதன் உறுதியைக் கேள்வியுற்ற கொடிய அரக்கன், அம்மாசிலா மணியை வரவழைத்துப், புதல்வன் என்னும் இரக்கமுமின்றி, அவன் செந்நெறியில் நிற்பதை யும் ஓராது, தனது கடனாற்றத் துணிவுகொண்டான். அவன் அன்று சத்தியாக்கிரக இளவலை எவ்வெவ்வழியில் துன்புறுத்தினான்? எழுதலும் முடியவில்லை. பிரகலாதச் செம்மல் தன் தந்தை செய்த கொடுமைகளை எந்தச் சக்தியால் தடுத்தான்? பிரகலாதன்பால் மூர்க்கசக்தி எழுந்ததோ? அவன் கருவிகளைச் செலுத்தினனோ? சினங்கொண்டு கனன்றனனோ? வெறிகொண்டு திரிந் தனனோ? அவன் உண்மையில் திளைத்து நின்று பொறுத் தல் என்னுங் கொல்லா அறத்தையே கடைப்பிடித்தான். அவனைப் படைகள் என் செய்தன? பூதங்கள் என் செய் தன? யானையும் நஞ்சும் என் செய்தன? ஒன்றுஞ் செய்யவில்லை. ஆத்ம சக்தியின் வலியே வலி! முடிவு என்னவாயிற்று? நரசிம்மமூர்த்தி தூணினின்றும் முளைத்து இரணியனைக் கீறிப் பிளந்து அழித்தனர்.

இங்கே ஒருவித ஐயம் இயல்பாகத் தோன்றலாம். மார்க்கண்டனார் தவமும், பிரகலாதன் உறுதியும் முடிவில் கொலைக்குக் காரணமாக நின்றமையால், அவர்களை அஹிம்சாதர்ம சத்தியாக்கிரகிகளாக எங்ஙனங்கொள்வது என்று சிலர் ஐயுறலாம். மார்க்கண்டனாரால் பிரகலாத

ஞுதல் நேரேகொலைத்தொழில் நிகழ்த்தினரோ என்பதை அன்பர்கள் உன்னுவார்களாக. அவ்விருவரும் ஆத்ம சக்தியில் உறுதி கொண்டனரே யல்லாமல் மறந்தும் மூர்க்க சக்தியில் உறுதி கொண்டனரில்லை. அவர் தம் நிலையினின்றும் பிறழாது சத்தியாக்கிரக நெறி நின்றே நிறை காத்தனர். மார்க்கண்டனும் பிரக லாதனும் ஹிம்சையென்னுங் கொலையை ஒரு நொடிப் போழ்தாவது நினைந்திருப்பாராயின், அன்னார் ஆண்டவ னைக் காணும் பேறு பெற்றிருக்கமாட்டார். ஈண்டுக் கருதவேண்டுவது ஒன்றே. அஃது ஆன்மசக்தி கைவரப் பெற்ற சத்தியாக்கிரகிகள் எக்காரணம் பற்றியும் ஹிம்சையை எண்ணவும் மாட்டார்கள் என்பது. அவர்கள் பயன் கருதாத அறவோர்கள். அவர்கள் தங்களைப் பொறுத்த அளவில் அஹிம்சா தர்மத்தையே கடைப் பிடித்து நிற்பார்கள்; அவ்வறத்தை வளர்க்கவே முயல் வார்கள். இயமனும் இரணியனும் முனைப்பால் ஹிம்சை யைக் கடைப்பிடித்தொழுகினமையால், அவர்கள் வினையே அவர்களை அழித்தது. இயம இரணியர் மரணத்துக்கும் மார்க்கண்டேய பிரகலாதர் சத்தியாக்கிர கத்துக்குந் தொடர்பில்லை.

அரிச்சந்திரன் சத்தியாக்கிரகத்தில் பேர்பெற்றமை உலகறிந்ததொன்று. சத்தியமெனும் இலக்கணத்துக்கு இலக்கியம் அரிச்சந்திரனல்லனோ? அரிச்சந்திரன் சத்தியத்தின் பொருட்டு எத்துணை இன்னலுக்கு உட்பட்டான்! ஒரு

**அரிச்சந்திரன்**

மன்னர் மன்னன் தன் பதியை இழக்க ஒருப்படுவனோ! அதுகுறித்து அவன் எவ்வளவு போர்டுவன்! எவ்வளவு

உயிர்களைப் பலியிடுவேன் ! எவ்வளவு பொருளை அழிப்பன்! தோல்வியுற்றபின்னரும் பதியை வென்றோனுக்கு அளிக்க அவன் மனங்கொள்வனோ? அப்பதியின் பாசத்தை அரிச்சந்திரன் உண்மையின் பொருட்டு அறுத்தானெனின், அவனது ஆத்ம சக்தியை என்னென்று புகழ்வது ? உண்மையின்பொருட்டு அரிச்சந்திரன் பதியொன்றைத் தானா இழந்தான் ? கடந்த ஞானிகளும் அறுக்கமுடியாத பற்றுடைய மைந்தனையும் காதல் கிழத்தியையும் பிறவற்றையும் இழந்தான். சத்தியத்தின் பொருட்டு எல்லாத் தியாகமுஞ் செய்ய ஒருப்பட்ட ஒருவனது சத்தியாக்கிரகம் போற்றற்குரியதன்றோ ?

வசிஷ்டர்

விசுவாமித்திரன் மன்னனாயிருந்தபோது காமதேனுவைத் தன்வயப்படுத்த இயலாது, சினந்து, அதையுடைய தனது குருவாகிய வசிஷ்டரோடு போர்புரிந்து தோல்வியுற்றனன். அவன் விடுத்த அம்புகள் வசிஷ்ட முனிவரை என்ன செய்தன ? அவைகளைத் தடுக்க முனிவர் ஏதாயினும் முயற்சி செய்தனரோ ? முனிவர் ஆத்மசக்தியின் முன்னே மன்னன் மூர்க்க சக்தி என்ன செய்தது ? வேந்தன், அறவோர் ஆத்ம சக்திக்கு முன்னே தனது மூர்க்க சக்தி இரும்புண்ட நீர்போலாயது கண்டு, விசுவாமித்திரன் தானும் ஆத்ம சக்தியை வளர்க்க முயன்று முனிவனாயினன். விசுவாமித்திரன், ஆத்ம சக்தியுடைய முனிவனாகிய பின்னர், அவனை மன்னர் மன்னரும் வாழ்த்தி வணங்கினர். பத்துத் திசையினுந் தன்னாணை செலுத்தி ஆட்சிபுரிந்த தசரதன், விசுவாமித்திர முனிவனைக் கண்டதும், தன் அரியாசனம் விட்டிழிந்து, முடிதாழ வணங்கி, அவனை

அரியாசனத்து இருத்தித், தான் கைகட்டி, வாய்புதைத்துப் பணி செய்தான் என்று இதிகாசங் கூறுகிறது.

மருள் செறிந்த உலகுக்கு அருளொளி வழங்க நமது நாட்டிடைத் தோன்றிய அறச் சுடர் - புத்தர் பெருமான் - வாழ்வும் அறமும் சத்தியாக்கிரகத்தை அடிப்படையாகக் கொண்டனவேயாம்.

புத்தர்

அப்பெரியார் உண்மை காணவேண்டுமெனும் நோக்குடன் அரச வாழ்வைத் துறக்கக்கொண்ட உறுதி, உடலைப் பொருளாகக் கொள்வோர்பால் தோன்றுமோ? அவர் காட்டில் அச்சமின்றி வாழ்வு நடாத்தியதும், உயிர்க்கொலை மலிந்து வழிந்த அந்நாளில் - மன்னர் மன்னரும் அக்கொலையைப் பேரறமாக்கொண்டு துணை புரிந்துவந்த அக்காலத்தில் - அது கடவுள் பெயரால் நிகழ்த்தப்பட்ட நேரத்தில் - 'கொல்லாமையே பேரறம்' என்னும் உண்மையைப் பல்லாற்றானும் அஞ்சாது அறிவுறுத்தியதும் சத்தியாக்கிரகத்தின் கூறுபாடுகளல்லவோ? ஒரு யாகத்தின்போது, 'ஆட்டை வெட்டல் வேண்டா; என் தலையை வெட்டுங்கள்' என்று வேள்வித் தீயிடை மண்டி நின்ற ஒருவரது ஆத்ம சக்தியின் திறத்தை என்னென்று கூறுவது? அவரல்லரோ அந்தணர்! அறவோர்! அவர், 'ஒரு கொலைஞன் ஒரு கூரியவாள் தாங்கி உன் தோள்மேல் ஏறி உன்னைச் சிறுகச் சிறுகக் கொந்தினாலும் நீ அதைத் தாங்கிக்கொண்டு பொறுமையாயிருந்தேயிரு. அவனுக்குக் கேடு சூழாதே' என்று உலகுக்கு அறிவுறுத்தி யிருக்கிறார். இச்செம்மொழி சத்தியாக்கிரக மொழியன்றோ? இம்மொழியாளர் சத்தியாக்கிரகியல்லரோ?

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே ஐரோப்பாவில் கிறீஸ் தேசத்தில் ஒரு சிறந்த சத்தியாக்கிரகி வாழ்ந்தார். அவர் திருப்பெயர் ஸோக்ரதர் என்பது. அப்பெரியார், 'எவன் தனது அறியாமையை உணர்கிருனே அவனே மெய்யறிவுக்கு அடிகோலுகிறவன்' என்று அறிவுறுத்துவதன் வாயிலாக நாட்டைத் தூய்மைப்படுத்த முயன்றார். அவர் உரை, ஆங்குத் தமக்குமேல் ஒப்பாரும் மிக்காரும் இலர் என்று இறுமாந்து கிடந்த பண்டிதர் பாவலர் நாவலர் முதலியோர்க்கு நஞ்செனத் தோன்றிற்று. இளைஞர் பலரும், 'ஸோக்ரதர் செம்மொழியே மக்கள் வாழ்வைப் பண்படுத்துவது' என்று உணர்ந்து அவர் சொல்வழி நிற்கலாயினர். அது கண்ட பண்டிதரும் மற்றையோரும், ஸோக்ரதர் உரை பண்டித உலகுக்கு இடர் செய்வதென்றும், அவர் மொழியால் இளைஞர் கெடுவதோடு அவ்விளைஞர் படித்தவரைப் பழிக்கவுந் தலைப்படுகிறுரென்றும், கிறீஸ் நாட்டுக்கே கேடு நேர்ந்து வருகிறதென்றும் கருதி, ஸோக்ரதர்மீது குற்றஞ் சுமத்தி, அவரை நியாய மன்றமேற்றினர். நியாய மன்றத்தில் ஸோக்ரதர், உண்மை கடைப்பிடித்து, மெய்யுரை பகர்ந்தார். நியாயம் அவருக்கு மாறுபட்டே பிறந்தது. அதுபோழ்து ஸோக்ரதர் மன்னிப்புங் கேட்க மனங்கொள்ளவில்லை; மறைந்து வேற்றூர் செல்லவும் விரும்பவில்லை; உயிர்தப்பியோட அவர் எம்முயற்சியுஞ் செய்யவில்லை; தமக்குள்ள செல்வாக்கைக் கொண்டு எவர்மீதும் போர் தொடுக்கவும் இசையவில்லை. அவர் தாங்கண்ட உண்மையில் உறுதி கொண்டு நியாய மன்றத்தார் தீர்ப்பின்படி நஞ்சுண்டு

ஸோக்ரதர்

சாகவே ஒருப்பட்டார். சத்தியாக்கிரகிகள் உயிரைப் பொருளாக மதியார்கள். உடலினின்றும் உயிர் பிரிவதை அவர்கள் துன்பமாகக் கருதுவதில்லை. ஸோக்ரதர் எவர் தடுத்தும் கேளாது நஞ்சுண்டே சத்தியாக்கிர கத்தை உலகிடை நிலவச் செய்தார்.

கிறிஸ்து

அப்பெரியார்க்குப் பின்னர்ச் சத்தியாக்கிரகத் தெய்வமாகிய ஏசுகிறிஸ்து உலகில் ஆத்மசக்தியின் மாண்பைப் புலப்படுத்தினார். கிறிஸ்துவின் வாழ்வே சத்தியாக்கிரக வண்ணமாகப் பொலிந்தது. கிறிஸ்துவின் வாழ்வில் சத்தியாக் கிரகக் கூறுகளெல்லாம் படிந்திருந்தன என்பது அவர்தம் வரலாற்றால் அறியக்கிடக்கிறது. 'தன்னுயிர்போல் மன்னுயிரைக் கொள்ளல்' என்னும் பேரறத்தை அவர் அறிவுறுத்தியதோடு, அவ்வறவழி நின்று அதைச் செயலில் நடாத்தியுங் காட்டினர். கிறிஸ்து பெருமான் 'பரலோக ராஜ்ய' மெய்ம்மைகளை இகலோக உவமை களால் விளக்கிவந்தார். அவர் இராஜத் துரோகம் பேசிக் கலகமூட்டியதாக வயிற்றுப் பிழைப்புக் குருமா ரும் அரசினரும் அவர்மீது குற்றங் கண்டு அவர்க்குப் பல வழியிலுந் தீங்கிழைத்து வந்தனர். முடிவில் அவ ரைக் கொலைசெய்யக் கருதி, அவர் ஒருநாள் ஓர் அழகிய தோட்டத்தில் இறைவனை நினைந்து நினைந்து உருகிய வேளையில், தீவர்த்திகளோடும் தடி கம்பு வாள்களோடும் அங்குச் சிலர் போந்து அவரைப் பிடித்தனர். அப் பொழுது அவரது அணித்தே நின்றிருந்த பேதுரு என்னும் முதல் மாணுக்கன் வெகுண்டு, வாள்கொண்டு கலகத் தலைவனும் தலைமைக் குரவனுமாகிய ஒருவனுடைய

ஊழியன் மல்காஸ் என்பவனை வெட்டி, அவனது வலது காதைத் துணித்துவிட்டான். பொறுமை வடிவினராகிய கிறிஸ்து, பேதுருவை நோக்கி, 'உன் உடைவாளை அதன் உறையில் செருகு. வாளெடுக்கிறவன் வாளால் மடிவன்' என்று அஹிம்சா தர்மத்தின் நுட்பத்தை அறிவுறுத்தி, ஊழியன் செவியைத் தொட்டுக் குணப்படுத்தினர். 'வாளெடுக்கிறவன் வாளால் மடிவன்' என்னும் பொன்னுரைக்கணுள்ள சத்தியாக்கிரக நுட்பத்தை ஓர்தல்வேண்டும். 'மனிதன் எதை விதைக்கிறானே அதையே அறுப்பான்' என்று அப்பெருமான் வேறோரிடத்தில் கூறியதும் ஈண்டுக் கருதற்பாற்று. கொலையால் கொலையே பெருகுமன்றி வேறென்ன பெருகும்? உலகில் கொலைமுறை வளர்ந்து வளர்ந்து, இப்பொழுது அஃது அரசுகளைப் பற்றி உலகை இடர்ப்படுத்தி வருகிறது. கொலைப் போர் நடைபெற நடைபெறக் கொலைமயமாகவன்றோ உலகமாகும்? கொலையை ஒழிக்கச் சத்தியாக்கிரக எழுச்சி வேண்டற்பாலதே. கிறிஸ்துநாதர் சத்தியாக்கிரக நெறியைத் தமது வாணாள் முடிவிலும் ஓம்பி நின்றார். கிறிஸ்துபெருமான் தம்மைப் பிடிக்க வந்தவரைப் பார்த்து, 'ஐயன்மிர்! ஒரு கொள்ளைக்காரனைப் பிடிக்க வருவோர்போலத் தடிகளையும் கம்புகளையும் வாட்களையும் தாங்கி வந்தீர். நான் நாடோறும் கோயிலில் உம் இடையில் பேசிக்கொண்டிருந்தேன். அவ்வேளைகளில் என்னைப் பிடித்தீரில்லை. இஃது உங்கள் காலம்; அவித்தையின் ஆட்சி' என்றார். பின்னை முரடர்கள் அவரைப்பற்றி அழைத்துச் சென்று அலைத்து அலைத்துத் துன்புறுத்தினார்கள். அவர்கள்

அவர்மீது எச்சில் உமிழ்ந்தார்கள்; அவர் கன்னத்தில் அறைந்தார்கள்; தலையை மூங்கிற் கோல்கொண்டு புடைத்தார்கள்; தலையில் முள்முடி சூட்டி நகையாடினார் கள். என்ன கொடுமை! என்ன கொடுமை! அன்பே வடிவான கிறிஸ்துவின் அருள் உள்ளத்தில் சினம் பொங்கிற்றோ? இல்லையே. 'வலது கன்னத்தில் அறைந் தால் இடது கன்னத்தைத் திருப்பிக் காட்டுங்கள்' என்று அருளிய பெரியார் சினமுறுவரோ? சாந்தமயமான கிறிஸ்து சிறிதும் மனங்கலங்கினாரில்லை; இகல்கொண்டா ரில்லை. தேகாத்மவாதபுத்தியும் மூர்க்க சக்தியும் உடைய ரல்லரோ வெகுண்டு இகல்கொண்டு கொடுஞ் செயலாற்ற முயல்வர்? சத்தியாக்கிரகி அச்செயல் மேற்கொள்வரோ? இறுதியில் கிறிஸ்து பெருமான் சிலுவையில் அறையப் பட்டார். கைகளிலுங் கால்களிலும் ஆணிகள் அறையப் பட்டன. என்ன நிலை! என்ன காட்சி! சிலுவையில் அறையப்பெற்றுப் பெருமான் தொங்கும் வேளையிலும் அவர் நெஞ்சில் இகல் உறவில்லை; பழிக்குப் பழிவாங்கல் என்னுந் தீய பேய் எண்ணம் அவர் உள்ளத்தில் உற வில்லை. அவ்வேளையில், அவர் 'தகப்பனே! (கடவுளே) இவர்கள் என்ன செய்கிறார்களென்று இவர்களுக்குத் தெரியவில்லை. இவர்களை மன்னிக்க' என்று அருளே சுரந்தார்! எந்நேரத்தில் அருள் மொழிகள் பிறந்தன! பாருங்கள்! சிலுவையில் தொங்கும்போது - உயிர்க்கு இறுதிநேரும்போது - அருள்மொழிகள் எழுந்தன! அத்தகை மொழிகள் பகர்ந்த ஒரு சத்தியாக்கிரகியை இவ்வுலகங் கண்டும் இன்னும் இங்கே அருள் நெறி பெருகாதிருப்பது விந்தையே.

அரேபியாவில் தோன்றிய மகம்மதுவும் தமது வாழ்நாளில் பெருந் துன்பங்களால் சூழப்பட்டார். அவருந் துன்பம் நிகழ்த்தியவர்க்குக் கேடு சூழாது அவரை அறவழியில் திருத்த முயன்றார். அவர் வாழ்விலும் சத்தியாக்கிரக நிறைகளுண்டு.

மகம்மது

சீதை, சாவித்திரி, திரௌபதை, மணிமேகலை முதலிய பெண்மணிகள் சத்தியாக்கிரக நெறிநின்று உலகில் அறம் வளர்த்தார்கள். சீதாதேவியார் அசோகமரத்தடியில் கொண்டது சத்தியாக்கிரக விரதமே. சாவித்திரி யமதருமனை விடாது தொடர்ந்து சென்றதும் சத்தியாக்கிரகமே. திரௌபதை தனது துகிலைத் துரியோதனன் அவைக்களத்தில் துர்ச்சாதனன் உறிந்த போழ்து, அவள் மனம் சீற்றச் சேற்றில் வீழாது சத்தியாக்கிரகத்திலேயே படிந்து நின்றது. அவள் வெகுளியால் விழுங்கப்பட்டிருப்பின், அவள் துகில் களையப்பட்டபோது மானமுற்றிருப்பள். அவளது சத்தியாக்கிரகம் அவளது மானத்தைக் காத்தது.

பெண்மக்கள்

மணிமேகலையின் சத்தியாக்கிரகச் செயல்கள் 'மணிமேகலை' என்னும் நூலில் ஓதப்பட்டுள்ளன. மணிமேகலை தவத்தால் அறவோராயவர்; பிறர்க்கு இன்னா செய்யாத பேரறத்தில் உறைநது நின்றவர். பசிப்பிணி தீர்ப்பது அவர்தம் நோன்பு. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய சத்தியாக்கிரகச் செயல் அவர்தம் வாழ்க்கையில் முகிழ்த்தது.

நமது தமிழ்நாட்டிலுஞ் சில சத்தியாக்கிரகிகளிருந் தார்கள். அவர்களுள் இருவர் வரலாற்றிலுள்ள சத்தியக் குறிப்புக்களை ஈண்டு எடுத்துக்காட்டுகிறேன்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு பெரியார். அவர் இளமைதொட்டு அறநூல்களைப் பயின்று தமது உள்ளத்தில் உண்மை எது என்று படுகின்றதோ அவ் வுண்மையைக் கடைப்பிடித்தொழுகும் நீரராய் வாழ்ந்தார். அவர், *'தயாமூல தர்மம்' என்னும் உண்மையைத் தமது திருப்பாடலில் பலவிடங்களில் ஓதியுள்ளார். தயை - இரக்கம் - அருள் - பொலியும் உள்ளமே அஹிம்ஸா தர்மம் விளையும்நிலமாகும். அந்நிலத்தில் முளைக்குஞ் செடியே ஆத்மசக்தி என்னுஞ் சத்தியாக்கிரகம். திருநாவுக்கரசு சுவாமிகள் அஹிம்சா தர்ம சத்தியாக்கிரகப் போர் புரிந்தவருள் ஒருவர். அம்முதியோர் ஆண்டவன் உண்மை கண்ட பின்னர், ஆத்மஞானம் விளங்கப்பெற்று, முனிவராகிப் பாடலிபுத்திரந் துறந்து, திருவதிகை என்னுந் திருப்பதியடைந்து, கட்டின்றி இன்பக் கடலில் திளைத்திருந்தபோது, மன்னன் அவரது

திருநாவுக்கரசர்

* குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் றன்னைக்
குலவரையன் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மம் என்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

ஆன்ம உறுதியை அறியாது, அமைச்சரை ஏவி, அவரை அழைத்து வருமாறு ஆணைதந்தான். அங்ஙனே அமைச்சர் போந்து திருநாவுக்கரசரை அழைத்தனர். அப்பொழுது நாவரசர், *'நாமார்க்குங் குடியல்லோம்' என்னும் வீரத் திருத்தாண்டகத்தை முழங்கியருளினர்; அதன்பின், †'என்று நாம் * * *' என்று அவர் அருளிய அஞ்சா மொழி ஈண்டுச் சிறப்பாகக் கருதத் தக்கது.

அரசன் காரணமின்றித் துராக்கிரக வழி நின்று பிறப்பிக்குங் கட்டளைக்குச் சத்தியாக்கிரகிகள் கீழ்ப்படிய மாட்டார்கள். அக்கட்டளைக்குப் பணிவது பேய்க்கு ஏவல் செய்வதை ஒக்கும். பேயரசு தனது மூர்க்கசக்தியை எழுப்பும்போது, அதற்கு அஞ்சாது உறுதி காட்டவேண்டுவது சத்தியாக்கிரகிகளின் கடமை. திருநாவுக்கரசர் சத்தியாக்கிரக வழிநின்று அஞ்சாமையைத் தெரிவித்தார். பின்னை அமைச்சர் வலியுறுத்தி அவரைப் பாடலிபுத்திரத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆண்டிருந்த வேந்தன் அடிகளைக் கொல்லப் பல சூழ்ச்சி

---

* 45-ம் பக்கம் பார்க்க.

† என்றுநாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே

கள் செய்தான். அம்மன்னன் நஞ்சு கலந்த பாலை அடிகளுக்குக் கொடுத்தான்; யானையை அவர்மீது ஏவினான்; நீற்றறையில் அவரை நிறுத்தினான்; இறுதியில் அவரைக் கல்லோடு பிணித்துக் கடலில் விடுத்தான். இச்செயல்கள் யாவும் மன்னன் என்ற முனைப்பால் செய்யப்பட்டவை. இவைகளை ஏற்றுக்கொண்டவர் எத்தகையினர்? முனைப்பில்லா அன்பர்; பொறுமையாளர்; ஆன்மவலியுடையார்; எப்பொருளிலும் ஈசன் இருக்கும் உண்மையைக் கண்டவர். அவர் முன்னே நஞ்சு பாலாயிற்று; யானை வணக்கஞ் செய்தது; நீற்றறை தாமரைத் தடாகமாயிற்று; கல்லுந் தெப்பமாயிற்று. தமக்குக் கேடுசூழ்ந்த வேந்தனுக்குத் திருநாவுக்கரசர் மன மொழி மெய்களால் எவ்விதக் கேடுஞ் சூழவில்லை. துன்பங்களை அவர் மகிழ்ச்சியோடு தாமே பொறுத்து ஏற்றார். இதுவே பொறுமை எதிர்ப்பு என்பது. ஆன்ம சக்தியின்முன் ஆன்மபோதம் வலியிழந்தன்றோ கிடக்கும்? முனைப்புடையோர் செயல் முனைப்பற்றோரை என்செய்யும்? பின்னே திருநாவுக்கரசரின் பொறுமை எதிர்ப்பு மன்னனையும் ஆட்கொண்டது.

மெய்ப்பொருள் நாயனார்

மெய்ப்பொருள் நாயனார் என்றொரு பெரியார் தமிழ்நாட்டில் வாழ்ந்தார். அவர் மன்னர் பெருமான். அப்பெரியார் நீறு கண்டிகையை மெய்ப்பொருளாக் கொண்டமையான் அவர் மெய்ப்பொருள் என்று உலகத்தவரால் அழைக்கப்பட்டார். அவர் அறநெறி ஓம்பிவருநாளில் முத்தநாதன் என்ற மாற்றரசன் ஒருவன் அவர் திருநாட்டைப் பற்றிக்கொள்ளப் பன்முறை படையெடுத்து

வந்தான். மெய்ப்பொருள் நாயனாரின் அன்பு பாயும் நாட்டைப் பற்ற இயலாது அவன் பரிபவப்பட்டுப் போனான். பின்னே அவன் வஞ்சனையால் உண்மை நாயனாரை வெல்ல எண்ணி, 'மெய்யெலாம் நீறுபூசி, வேணிகள் முடித்துக்கட்டி, கையினில் படைகரந்த வஞ்சகக் கவளி (புத்தகப் பை) ஏந்தி, மைபொதி விளக்கே என்ன மனத்தினில் கறுப்புங் கொண்டு' நாயனார் அரண்மனை நோக்கி நடந்தான். அவன்மீது சிவசின்னம் ஒளிர்ந்தமையால் எவரும் அவனைக் கண்டு ஐயுற்றாரில்லை. அவ்வன்னெஞ்சக் கள்வன் அரண்மனைபுக்கு, ஒவ்வொரு வாயில் கடந்து, கடைவாயில் காத்துநின்ற தத்தன் என்பவன் தன்னைத் தடுத்துங் கேளாது, மன்னர் உறங்கும் அந்தப்புரஞ் சென்றான். ஆங்கே மன்னருடன் துயின்று கொண்டிருந்த மனைவியார் கொழுநனை எழுப்பினார். கண்விழித்த மெய்ப்பொருள் நாயனார், சிவனடியாரைக் கண்டு எழுந்து தொழுது நின்றார். அப்பொழுது வஞ்சகன், 'மன்னரே! உம் சிவபிரான் அருளிய ஆகமங்களுள் எங்கணுங் காணப்பெறாத ஒன்றை உமக்கு உணர்த்தக் கொணர்ந்துள்ளேன்' என்றான். அவ்வுரை கேட்ட மெய்ப்பொருள் இன்பக்கடலில் தோய்ந்து, அவ்வாகமப்பொருளை அறிவுறுத்துமாறு வஞ்சகனை வேண்டினார். அவன், 'ஆகமத்தை யான் அறிவுறுத்தும் வேளையில் நாம் இருவேமும் தனித்திருத்தல் வேண்டும்' என்றான். மன்னர் பெருமான் தமது ஆருயிர்த் தலைவியை வெளியே போகுமாறு பணித்துப் பொய்வேடத்தானை ஒரு பீடத்திருத்தித் தாம் கீழே அமர்ந்து செவிசாய்த்

துப் பணிந்தார். அவர் பணிந்தபோழ்து பாதகன் கவளிகையை அவிழ்த்துப் புத்தகம் எடுப்பான்போல உடைவாளை எடுத்து நாயனாரைக் குத்தினான். நாயனார், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று கள்ளனைத் தொழுதார். இதை உணர்ந்த தத்தன் ஓடிவந்து முத்தநாதனைக் கொல்ல வாளோச்சினான். அந்நிலையில் நம் மெய்ப்பொருள் நாயனார் இகலின்றி, பழிக்குப் பழி வாங்கும் எண்ணமின்றி, அன்புளங்கொண்டு, 'தத்தா! இவர் நம்மவர்' என்று தடுத்து மண்ணில் வீழ்ந்து, தத்தனைப் பார்த்து, 'இச்சிவனடியார்க்கு நமது நாட்டில் எவராலுந் தீங்கு நேராதவாறு காத்து, இவரை நாட்டுக்கு அப்புறங் கொண்டுபோய் விடுத்து வா. இதுவே நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி' என்று ஆணை தந்தார். அவ்வாறே தத்தன், அரசர்பெருமான் ஆணை வழிநின்று கடனாற்றினான். மெய்ப்பொருள் ஆணைவழி நாடும் நின்றது. தத்தன் மீண்டும் போந்து, 'சிவனடியார்க்கு எவ்விதத் தீங்கும் நிகழாதவாறு பாதுகாத்து அவரை நாட்டிற்கு அப்புறங் கொண்டுபோய் விடுத்தேன்' என்று கூறிய மொழியைக் கேட்டபின்னரே நாயனார் உயிர் துறந்தார். தாம் நீறு கண்டிகையை மெய்ப்பொருளாக் கொண்ட நோன்பை உயிர்க்கிறுதி நேர்ந்தபோதுங் காத்தும், தமக்கு ஊறு செய்த ஒருவனுக்கு ஊறு தன்னாணை வழிநிற்கும் பிறராலும் நிகழாதவாறு தடுத்தும் அஹிம்சா தர்மத்தை வளர்த்த மெய்ப்பொருள் நாயனாரின் சத்தியாக்கிரகம் போற்றற்குரியதன்றோ?

இக்காலத்துஞ் சிலர் சத்தியாக்கிரக நெறி வளர்த்தார்; வளர்க்கிறார். பிரான்ஸிஸ் முனிவர், தால்ஸ்தாய்,

தோரி, மாக்ஸ்வினே, ககாவா முதலிய அன்பர்கள் பெயர்கள் நினைவிற்கு வருகின்றன. இவர்களிற் சிலர் சத்தியாக்கிரகத்தைப் போதித்தவர்; சிலர் சாதித்தவர். சாதனையே பெரிதும் சூக்கும உணர்வுவழி ஆத்மசக்தி என்னும் சத்தியாக்கிரகத்தை எழுப்பும்; வளர்க்கும்.

**வேறு சிலர்**

சத்தியாக்கிரகம் மனித வாழ்விற்கு இன்றியமையாதது. உலகிலுள்ள சமய போதனைகளை எல்லாந் திரட்டிப் பார்த்தால், அவற்றில் சத்தியாக்கிரகம் மிளிர்வது காணலாம். மனித வாழ்க்கையைச் செந்நெறியில் நடாத்த ஏற்பட்ட இயற்கை அறம் சத்தியாக்கிரகமென்பது. சத்தியாக்கிரகம், அன்பு தியாகம் பொறுமை எவர்க்கும் இன்னா செய்யாமை முதலியவற்றால் ஆக்கப்பட்டதொன்றாகலின், அது மனித வாழ்க்கையைச் செம்மை செய்யும் நீரதாம்.

*

## கக. சாது நிலை

சத்தியாக்கிரகம் மனிதனைச் செந்நெறியில் நடாத்தி முடிவில் அவனைச் சாதுவாக்குகிறது. சாதுநிலை எய்தியவன் மனித வாழ்வின் எல்லையைக் கண்டவனாகிறான்.

சாது ?

மனிதவாழ்வின் முடிந்தநிலையே சாதுநிலை என்பது. சாதுநிலை பெறாதமட்டும் மனித வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறுவதில்லை. 'சாது, உலகிற்குப் பயன்படாதவன்; பேசாதவன்; மேல்நோக்குடையவன்' என்று சிலர் கருதுவதுண்டு. சில கயவர், வேடத்தால் - கோலத்தால் - சாதுபோல் நடித்துப் பாடற்றொழுக்கத்தில் படிவது கண்டு, சிலர் சாதுநிலையையே வெறுத்தலுமுண்டு. இந்நாளில் 'தாசி', 'தேவடியாள்' என்னுஞ் சொற்கள் பொருளிழந்து கிடப்பதுபோலச் 'சாது' என்னுஞ் சொல்லுந் தன் பொருளிழந்து கிடக்கிறது.

சாதுநிலை உலகத்துக்கு அப்பாற்பட்டதுமன்று; உலகிற்குப் பயன்படாததுமன்று. அந்நிலை உலகிற்குப் பெரிதும் பயன்படுவதொன்று. பொறாமை முதலியவற்றால் பீடிக்கப்பட்டுப் பிறரை வருத்தும்

தீயோன் - நல்லோன்

ஒருவனிலும், அவற்றால் பீடிக்கப் பெறாத குணநலமுடைய ஒருவன் எவ்வளவு உலகிற்குப் பயன்படுவன் என்பது குறித்து விளக்கலும் வேண்டுமோ? தீய குணமுடைய ஒருவனுக்கு உலகைப்பற்றிய கவலையுண்டோ? இவன் உலகு இவனளவில் கட்டுப்பட்டுக் கிடக்கும். நற்குணமுடைய ஒருவன்

உலகமோ பரந்து விரிந்து நிற்பது. இவன், *'மண்ணுலகதிலே உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை ஒருசிறிதெனினும், கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டுங் கணமுநான் சகித்திட மாட்டேன், எண்ணுறும் என்க்கே நின்னருள் வலத்தால் இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம், நண்ணும்அவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்' என்று கவலும் பேருலக வாழ்வுடையவனாகிறான். இவனே சாது. சாது, உலகை வெறாமலும், தனக்கென வாழாமலும், பிறர்நலங் கருதி வாழ்வோன்.

இங்ஙனமாக, உலகை வெறுத்தவன் சாது என்றும், காட்டுக்குப் போகிறவன் சாது என்றும் கூறுவது என்னை? இது, சாது என்னுஞ் சொற்பொருள் உணராதார் கூற்று.

சாதுத் தன்மை

சாது எவன்? உலகுக்கு உழைக்கத் தன்பாலுள்ள குறைகளை அறவழியில் போக்கிக்கொண்டவன் சாது; மனிதனை விலங்காக்கி அலைக்குந் தீய நீர்மைகளினின்றும் விடுதலையடைந்தவன் சாது; பிறர்க்கு உழைப்பவன் சாது. முழுக்குண நலனுடைய ஒருவனைச் சாது என்று சுருங்கக் கூறலாம். சாது எக்கோலமுங் கொள்ளலாம்; எந்நிலையிலும் இருக்கலாம். ஜனகன் வாழ்வு சாது வாழ்விற்கு ஓரிலக்கியம் போன்றது. மனிதன் பிறந்து முயன்று முயன்று கற்பதும் கேட்பதும் வாழ்வதும் எற்றுக்கு? ஒருகாலத்தில் சாதுநிலை எய்துதற்கன்றோ? சாதுவாகாது பிறவிப்பேறெய்தல் அருமை; அருமை. மனித வாழ்க்கையின் முடிந்த நிலையே சாதுநிலை. சாதுநிலை என்பது தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஒன்றென்க.

---

* இராமலிங்க சுவாமிகள்.

இப்பெருநிலையை அளிக்கவல்ல சத்தியாக்கிரகம் மனிதவாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாததென்பது உன்னற்பாற்று. மனித வாழ்க்கைக்குரிய சத்தியாக்கிரக ஒழுக்க நெறியில் நிற்பவர் இந்நாளிலுஞ் சிலர் ஆங்காங்கே இலைமறை காயென வதிகின்றார். அவருள் ஒருவரை உலகம் உணர்ந்திருக்கிறது.

# III காந்தியடிகள்

# III

# காந்தியடிகள்

## க. மகாத்மா - அடிகள்

அவ்வொருவர் யாவர்? அவர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பவர். அவரை மகாத்மா காந்தி என்று உலகம் போற்றுகிறது; காந்தியடிகள் என்று தமிழுலகம் போற்றுகிறது.

மகாத்மா என்பது ஆழ்ந்த பொருளுடையது. அது வெறும் மகான் என்னும் பொருளில் மட்டும் அடங்கிக் கிடப்பதன்று. மகானிலும் மகாத்மா பொருண்மை வாய்ந்தது.

மகாத்மா

மகாத்மா என்பது பெரிய ஆத்மா என்னும் பொருளுடையது. பெரிய ஆத்மா எது? கடவுள் பெரிய ஆத்மா. செயற்கரிய செய்வது கடவுள். கடவுளருளால் செயற்கருஞ் செயல் செய்வோரும் மகாத்மா ஆவர். இவர் கடவுள் நிலை எய்தியவர். கடவுள்நிலை எய்தி வருவோரையும், அதற்குரிய சத்திய ஞானக் காட்சி பெற்றோரையும் மகாத்மா என்று உலகம் அழைக்கிறது. இஃது ஒருவித மரபாகியது என்றுங் கூறலாம்.

மகாத்மாக்கள் தமக்கென்று வாழாதவர்; பிறர்க்கென்று வாழ்பவர். பல துறைகளில் மகாத்மாக்கள் பலரைக் காண்டல் அரிது.

மகான் என்னுஞ் சொற்குப் பெரியவர் என்று பொருள் உரைப்பது உலக வழக்கு. மகான்களால் சிற் சில நற்செயல் நிகழ்த்தல் கூடும். செயற்கரிய செய்தல் அவர்களால் இயலாது. பல துறைகளில் மகான்களைக் காண்டல் அரிதன்று.

காந்தி, மகாத்மா என்று அழைக்கப்படுகிறார். எப் பொருளில்? மகாத்மா என்னும் பொருளிலா? மகான் என்னும் பொருளிலா? இதற்கு விடை, காந்தியடிகளின் வாழ்க்கையையும், தொண்டையும், பேச்சையும், எழுத்தையும், இந்நூலையும், பிறவற்றையும் ஆராய ஆராய இனிது விளங்கும்.

காந்தியை மகாத்மா என்று ஒருவர் இருவரா அழைக்கின்றனர்? அவரை மகாத்மா என்று கற்றார் அழைக்கின்றனர்; கல்லார் அழைக்கின்றனர்; அறிஞர் அழைக்கின்றனர்; அன்பர் அழைக்கின்றனர்; நாடு அழைக்கிறது; உலகம் அழைக்கிறது. இந்நாளில் உலக உள்ளத்தில் மகாத்மாவாகப் பொலியும் ஒருவர் மகாத்மாவா? மகானா? காந்தி மகாத்மா - மகாத்மாவே. 'செயற்கரிய செய்வோரல்லவோ மகாத்மாக்கள்? காந்தி செயற்கரிய செய்கின்றாரா?' என்று சிலர் கேட்கலாம்.

காந்தியின் போதனையாலும் சாதனையாலும் புது உலகம் முகிழ்த்துவரல் கண்கூடு. என்ன புது உலகம்? அஹிம்சா தர்மப் புது உலகம். அப்புது உலக முகிழ்ப்புக்குத் துணை நின்று செயலாற்றல் செயற்கருஞ் செயல் ஆகாதோ? இரண்டோர் அற்புத நிகழ்ச்சிகளினும் விழுமியது புது உலக அமைப்பு என்பது காலக் கொள்கை. இங்கே விரிவுரை வேண்டுவதில்லை

புது உலக முகிழ்ப்புக்குரிய மகாத்மாவின் இயல்கள் காந்தியின் வாழ்க்கையில் கனிந்துள்ளன. அக்கனிவு கண்ட உலகம் அவரை மகாத்மா என்று போற்றுகிறது.

மகாத்மாவுக்குத் தமிழ் என்னை ? அடிகள் என்பது. ஆன்ற ஒழுக்கத்திற் சிறந்த அறவோரை அடிகள் என்று சொல்வது தமிழ்நாட்டு வழக்கு. கவுந்தி அடிகள், இளங்கோ அடிகள், அறவண அடிகள், வாதவூரடிகள், பட்டினத்தடிகள் எனவரூஉம் வழக்காறு

அடிகள்

களை நோக்குக. தமிழ்நாட்டிற் பிறந்த யான் காந்தி மகாத்மாவைக் காந்தியடிகள் என்று அழைத்து மகிழ்வெய்துகிறேன். அன்பு மேலீட்டான் சிலர் மகாத்மா காந்தி அடிகள் என்று சொல்கிறார். மகாத்மா காந்தி என்றோ, காந்தியடிகள் என்றோ கழறுவது பொருத்தம்.

பழைய முனிவரர் இயல்புகளெல்லாஞ் செறியுங் குணமலை நம் காந்தியடிகள். கொல்லாமை அடிகளின் நோன்பு ; பொறுமை அவர் அணிகலன் ; தியாகம் அவர் செல்வம் ; பிறர்க்குழைத்தல் அவர் தொண்டு. தம் பெருமை தாமுணராதிருப்பது அவர் பெருமை.

அடிகள் அமுதம்

அவர் உடல் இயற்கையுடனும், அவர் உள்ளம் இறையுடனும் உறவாடிக்கொண்டிருக்கும். அவரது வெள்ளிய ஒற்றைக் கலையும், அழகிய சிறிய உடலும், என்றும் நீங்காப் புன்முறுவலும், அகன்ற ஆவின் செவியும், கண்ணோட்டமும், எவ்வுயிருந் தம்முயிரென்று கருதி இரங்கும் நெஞ்சமும், உள்ளத்தெழும் ஒளியும் (காண்போர்) மனத்துக்கு அமுதமாகும். ‘ சட்டோ நினைக்க மனத்தமு

தாஞ் சங்கரனை' என்று அன்று மணிவாசகனுர் அருளி னுர். இன்று என் மனஅமுதாகக் காந்தியடிகளை யான் காண்கிறேன். அக்காட்சியான் எனது உள்ளத்துற்ற மாறுதல் எனக்கே தெரியும்.

காந்தியடிகள் போதனையினுலும் சாதனையினுலும் உலகிடை மாறுதல் உற்றுவருங் குறிகள் தோன்றி வரு கின்றன. அம்மாறுதலால் புது உலகம் மலரும் என்று கருதப்படுகிறது. புதுஉலக மலர்ச்சி குறித்துப் பேசாத இடமில்லை; எழுதாத இடமில்லை. பேச்சுக்களும் எழுத் துக்களுந் திரள்வதே புது உலகப் படைப்புக்கு ஓர் அறிகுறியாகும். புது உலகப் பொருளென்னை?

புது உலகம்

மன்பதை இயற்கை வழியே தன் வாழ்க்கையை நடாத்தக்கடமைப்பட்டது. ஆனுல் அது தன் கடமையை என்றும் ஒரு பெற்றியதாய் ஆற்றுவதில்லை. அது சிற்சில போது தன் கடமையினின்று வழுக்கி வீழ்ந்து இடர்ப்படும். தனக்கு நேர்ந்த இடர்ப்பாட்டினின்றும் விடுதலை அடைய இயலாது அது விழிக்கும். அவ்வவ்வேளையில் பெரியோர் தோன்றி மன்பதையின் இடர் களைவது வழக்கம். இடரைக் களைவ தாவது மன்பதையை அதற்குரிய இயற்கை வழியே இயங்கத் துணைபுரிவது. இதுவே புது உலகப் படைப்பு என்று வழங்கப்படுகிறது.

புது உலகம் நிலைபெறுக நிற்பதில்லை. அது தனக் குரிய நெறியினின்றும் வழுக்கி வழுக்கி வீழும். மீண்டும் அது புதுக்கப்படும். இதுகாறும் தோற்றமுற்ற புது உலகங்களைக் கணக்கிட்டு எவரே கூறவல்லார்!

இந்நாளில் மன்பதை பல வழியிலுங் கேடுற்றுக் கிடத்தல் வெள்ளிடைமலை. அதைப் புதுக்கிச் சீர்செய்யப்

பெரியோர் தோன்றுதல் வேண்டுமென்றோ ? பெரியோர் எவரேனுந் தோன்றியுள்ளனரோ ? பலர் சொல்லப்படு கின்றனர். உலகம் பலவிதம். பலருள் சிறந்து விளங்கு வோர் இருவர்.

ஓர் உலகம் காரல் மார்க்ஸைச் சொல்கிறது ; இன் னோர் உலகம் காந்தியடிகளைச் சொல்கிறது. ஈருலகுக்கும் வாதப்போரும் நிகழ்கிறது. வாதப் போர் உண்மையை உணர்த்தியேதீரும். ஈருலகமும் ஒன்றிப் புது உலகை ஈனப்போவது உண்மை.

மார்க்ஸூம் காந்தியடிகளும்

'வட துருவமும் தென் துருவமும் ஒன்றுபடுமா' என்று சிலர் வியப்புறலாம். இவ்வியப்பு அவ்வவ்வுலகில் தனித் தனியே வாழ்வோர்க்குத் தோன்றும். ஈருலகிலும் ஈடுபட்டு வாழ்வோர்க்கு எவ்வித வியப்புந் தோன்றாது. மார்க்ஸியமும் காந்தியமும் ஒன்றிப் புது உலகைப் படைக்குங் காலம் சேய்மையிலில்லை. அக்காலம் அணித்தேயுள்ளது ; மிக அணித்தேயுள்ளது. இதுபற்றி இந்நூலினூடே இடம் நேர்ந்துழி நேர்ந்துழி விளக்கஞ் செய்ய முயல்வன்.

புது உலக ஆக்கத்துக்கென்று இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஒரு பெரும் ஒளி உலகிடைத் தோன்றியது. அவ்வொளி மீண்டும் காந்தி யடிகள் வாயிலாகத் தோன்றியுள்ளது. அது யாண்டும் பரவிநிற்கிறது. அதைக் கண்ணுள்ளோர் கண்டு வருகிறார். சிறிய உடலில் எத்துணைப் பெரிய ஒளி ! அவ்வுள்ளொளி — ஆன்மசக்தி — பிறத்தற்கு நிலைக்களனாயுள்ள காந்தியடிகளின் வாழ்க்கை

ஒளி

புது மனித வாழ்க்கைக்கு ஒரு பெரும் இலக்கியமா யிலங்குகிறது. புது உலக மனிதராக விரும்புவோர் அவ் வடிகள் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பாராக. காந்தி யடிகள் எந்நெறிபற்றி ஒழுகிப் புது உலக ஆக்கத்துக் குரிய வாழ்க்கையைப் பெற்றாரென்பது முறை முறையே ஆராயத்தக்கது.

## உ. பிறப்பு

பிறப்பு இன்பமா? துன்பமா? இன்பமென இறும்பூதெய்துவோர் சிலர்; துன்பமெனத் துயரில் அழுந்துவோர் பலர். யான் பிறப்பை இன்பமெனக் கொண்டு இறும்பூதெய்துகிறேன். என்னிலையை அறியாது கிடந்த யான், இவ்வரிய உடலைத் தாங்கியபின்னரல்லரோ 'நன்று இது' 'தீது இது' என்று பகுத்தறிந்து வாழ்வு நடாத்தும் பேறு பெற்றிருக்கிறேன்? இப்பிறப்பை யான் எவ்வாறு துன்பமென்று சொல்வேன்? 'யானேதும் பிறப்பஞ்சேன்' என்றார் மணிவாசகனார்.

உலகிடைத் தோன்றும் ஒருவன், தன்பொருட்டு வாழ்வானாயின், அவனைத் துன்பம் அடர்ந்து துயருறுத் தும். அவனுக்குப் பிறவி துன்பமாகவே தோன்றும். பிறர் பொருட்டு வாழ்வு நடாத்தும் ஒருவன், பிறவியை இன்பமென்றே கருதுவன்.

இன்பப் பிறவிக்கு நிலைக்களனாயிருப்பது எது? தாய்மை. இவ்வுலகில் தாய் வயிற்றில் பிறவாதவர் யாவர்? உலகொளியாய் விளங்கிக் கடவுள்நெறி ஓம்பிக் கடவுள் நிலை பெற்ற கடவுளர், எல்லாஞ்

செய்யவல்ல இறைமைப் பேறெய்திய தவமுதல்வர், இயற்கை இன்பத்திற் படிந்து எல்லா வற்றையும் பாட்டாகக் கண்டு பாடிய பாவலர், தனிமுடிகவித்து உலகாண்ட மன்னர் மன்னர், போர்வீரர் முதலியோர் அனைவருந் தாயின் வயிற்றிற் பிறந்த மக்கள் கூட்டத்தவரே. தாயின் கருவில் உறையாதவர் யாவர்? தாய்மைக்குரிய பெண்ணினம் வாழ்க; வாழ்க.

தாய்மைச் சிறப்பு

அலைகடல் சூழ்ந்த ஐம்பெருங் கண்டத்துக்கும் இதுபோழ்து ஒரு பெரும் ஒளியாய் இலங்கும் மகாத்மா காந்தியும் ஒருதாயின் வயிற்றில் பிறந்தவரே. இப் பேரொளியை ஈன்ற சிறிய வயிற்றின் தவமே தவம்! உலகிருள் கடிய ஞாயிறு தோன்றுமாறுபோல, இக்கால மக்களின் கொலைபுலையெனும் மருளிருள் கடிய, இக்கீழ் நாட்டிற் றோன்றிய ஞாயிறு நம் மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தி, இத்தொல்லுலகில், உள்ளொளி கண்டு, உயிர்க்குறுகண் செய்யாமையே உயரிய நெறி என்னும் உறுதியில் நின்று, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யா நல்லறம் ஓம்பிய மக்கள் வாழ்ந்த பரத கண்டத்தில், பழைய முறைப்படி ஐம்பத்தாறு தேயங் களுள் ஒன்றாகிய கூர்ஜரத்தில், பனியா என்னும் வைசிய மரபில், காந்தி குடியில் (வமிசத்தில்), சுக்கில ஆண்டு, புரட்டாசித் திங்கள், பதினெட்டா நாள் கூடிய ஆயிரத்தெண்ணூற்று அறு பத்தொன்பதாம் ஆண்டு, அக்டோபர் மதி, இரண்டா நாள், சனிக்கிழமை பிறந்தார். காந்தியடிகளின் தந்தை யார் பெயர் கரம்சந்த் காந்தி; தாயார் பெயர் புத்திரிபாய்.

பிறந்த நாள்

காந்தியடிகளின் பிள்ளைத் திருநாமம் மோகன்தாஸ். தந்தையார் பெயரும், குடிப்பெயரும் உடன் சேர்ந்து மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்று அடிகள் பெயர் வழங்கலாயிற்று. காந்தியடிகளின் பாட்டனார் உத்தம சந்த் காந்தியும், தந்தையாரும் போரிபந்தர், இராஜகோட்டை என்னும் இடங்களில் அமைச்சரா யிருந்து கடனாற்றியவர்.

காந்தியடிகள் இப்பொழுது உலகம் போற்றும் பெருங்குணம் வாய்ந்தவராய் இலங்குதற்கு அவர்தம் தாய் தந்தையரின் நல்லொழுக்கமும் ஒரு காரணமென்று கூறலாம். இது பொதுமுறை. புறனடையாகக் கள்ளி வயிற்றில் அகில் பிறத்தற்போலத் தீயோரிடை நல்லோர் பிறத்தலும் உண்டு. பிள்ளைகளைப் பெறுந் தாய் தந்தை

தாய்தந்தையர் ஒழுக்கம்

யர்க்குள்ள பெரும் பொறுப்பு வேறு எவர்க்கே உண்டு? உலகம் நல்வழிப் படுவதும் தீவழிப்படுவதும் அவர்தம் ஒழுக்கத்தை ஒட்டியே நிகழ்வனவாம். இது குறித்து நூற்றொடக்கத்திலுங் கூறியுள்ளேன். காந்தி யடிகளின் தந்தையார் வரலாற்றில் இரண்டொன்றை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

கரம்சந்த் காந்தி இராஜகோட்டையில் சேவை செய்தபோது, அப்பதி வேந்தர் தாக்கூர் சாகெப் தம் அமைச்சர் திறங் கண்டு வியந்து, பெரு

தந்தை இயல்பு

நிலப்பரப்பொன்று அவருக்குக் கொடுத் தார். கரம்சந்த், அந்நிலத்தை முதலில் ஏற்றுக்கொண்டாரில்லை. மறுத்த கரம்சந்த் பின்னை மன்னர் வேண்டுகோட்கும், உறவினர் முறையீட்டுக்கும்

இணங்கி, நானூறு கஜமுள்ள நிலப்பரப்பை மட்டும் ஏற்றுக்கொண்டார். வாணிபத்தால் பெரும் பொருளீட்டல் வேண்டுமென்னுங் கருத்தே குடிகொண்ட குடியிற் றோன்றியும் கரம்சந்த் ஆசைப் பேய்க்கு இரையாகவில்லை. அப்பேராசையின்மை பின்னைக் காந்தியடிகள்பால் நிராசையாய்ப் பரிணமித்தது போலும் !

ஒருமுறை தம் மன்னர், உதவி அரசியல் ஏஜண்டால் அவமதிக்கப்பட்டதை, அமைச்சர் கரம்சந்த் கடிந்தனர். அது குறித்து அந்த ஏஜண்ட் மனம் பொறாது சினந்து மன்னிப்புக் கேட்குமாறு அமைச்சரை வலியுறுத்தினர். இங்கே அதிகாரத்துக்கு அஞ்சுவதா ? மனச்சான்றுக்கு அஞ்சுவதா ? மனச்சான்றுவழி நடத்தலே அறம். அமைச்சர் மன்னிப்புக் கேட்க இணங்கினாரில்லை. அதன்பொருட்டு அவர் சிலமணி நேரம் காவலில் வைக்கப்பட்டார். இச்சத்தியாக்கிரக நீர்மையும் காந்தியடிகள் வாழ்வில் படிந்து வளர்ந்ததுபோலும் !

காந்தியடிகளை ஈன்ற அன்னையாரோ குணத்திற் சிறந்த கோமகளார். அவ்வம்மையார்க்குச் செயற்கை அணியில் வெறுப்புண்டு. அம் மங்கையர்க்கரசியார் ஆண்டவனிடத்து இடையறாப் பேரன்பு வாய்ந்தவர். அவ்வன்புக்கு அறிகுறியாக அவர் ஏழை மக்கட்கிரங்கித் தம்மாலியன்ற உதவி செய்வர். அவர் நோன்பில் பேர்பெற்றவர். ஏறக்குறைய எல்லா ஹிந்து விரதங்களும் அவரால் அனுட்டிக்கப்பட்டன. சாந்தராயணம் முதலிய பெரிய பெரிய நோன்புகளும் அவரால் கடைப்பிடிக்கப்பட்டன. ஒருமுறை நோய்வாய்ப்பட்டபோதும் சாந்தராயண விரதத்தை

*தாயியல்பு*

அம்மையார் நெகிழவிடவில்லையாம். உலகியல் அறிவு அம்மையார்க்குப் பெரிதுமுண்டு. அப்பெருந் தாயார் இயல்புகள் காந்தியடிகள் வாழ்வில் தோய்ந்து, மரமாய் வளர்ந்து, பயனளித்து வருகின்றன என்றுஞ் சொல்லலாம்.

காந்தியடிகள் பிறப்பால் அவா உற்ற வாணிப மரபில் தோன்றினாலும், சிறப்பால் அவா அற்ற அந்தணராய் வாழ்கிறார். ஆனால் அவர் தம்மை அந்தணர் என்று சொல்லிக்கொள்வதில்லை. உலகம் அவரை அந்தணரெனத் தொழுகிறது.

அந்தணர்

அந்தணர் அரசர் வாணிபர் வேளாளர் முதலிய வேற்றுமைகள் பிறப்பை ஒட்டியன அல்ல. அவை தொழிலைப்பற்றியே நிற்பன. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமையான்' என்றார் திருவள்ளுவனார்.

உலகியல் நன்கு நடைபெறவேண்டி வருணமுறையும், கடவுள் நெறி செவ்வனே நிலவவேண்டி ஆச்சிரம முறையும் வகுக்கப்பட்டன. இவ்வருணாச்சிரமத்தைப் பற்றி முன்னருஞ் சுருங்கச் சொல்லியுள்ளேன். எந்நாட்டிற்கும் உரிய அம்முறைகள் தொடக்கத்தில் தொழிலையொட்டியே கோலப்பட்டன. 'ஒவ்வொருவனும் சூத்திரனாகவே பிறக்கிறான்' எனவும், 'ஒவ்வொருவர் உள்ளத்திலும் வித்தை உண்டு * * * * ஏவன் முயற்சியால் அதை முளைக்குமாறு செய்கிறானோ அவன் தாழ்ந்த கூட்டத்தில் பிறந்தோனாயினும் மேலோனாவன் * * * உயர் குழுவிற் பிறந்தும் தவத்தைக் கைவிடுவானாயின்,

பண்டைக் கால வருணாச்சிரமம்

அவன் தாழ்ந்தோனுவன்' எனவும், 'கிடைத்த அளவு உள்ளநிறை கொள்ளல், பிறர் குற்றம் மன்னிக்கும் நீர்மை, மன அடக்கம், துர்விநியோகத் தடுப்பு, தூய்மை, ஐம்புல அடக்கம், உண்மையில் நாட்டம், வித்தை விருப்பம், வாய்மை, சினமின்மை ஆகிய இப்பத்தும் அறத்தின் குறிகளாகும். இப்பத்தையும் எவர் செவ்வனே பயின்று முறையாகச் செயலில் கொணர்கிறுரோ அவர் எவராயினும் மேலான நிலையடைவர்' எனவும் வரூஉம் மனு மொழிகளைப் பார்க்க. பிராமண தருமத்தை மனு அறிவுறுத்தும்போது, 'பிராமணன் எளிய வாழ்வு நடாத்தக் கடமைப்படல்வேண்டும்; பொருட்செல்வப் போகத்தை உதறித் தள்ளல்வேண்டும். இலௌகிகர் மனத்திலுறும் இழிவான எண்ணம் அவன்பாலுறலாகாது' என்றும், 'பிராமணனது முடிந்த பேற்றிற்குப் படியாக நிற்பது உலகியலில் அவன் ஆசையை வளரவிடாமலிருப்பது. இதற்கு மாறுபட்டு அவன் நடப்பானுயின் அவனைத் துக்கமே துன்புறுத்தும்' என்றுங் கூறியிருத்தல் கருதற்பாலது. பாரதம், 'பிராமண தருமத்துக்குரியது பிறப்பன்று; சம்ஸ்காரமன்று; வேதமோதலன்று; பரம்பரையன்று. நற்றவ ஒழுக்கமேயாகும்' என்று பிறப்பால் உயர்வின்மை உரைத்தல் காண்க. ஈண்டு எடுத்துக் காட்டப்பட்ட ஆன்ருேர் மொழிகளிற் போந்த அந்தண இயல்புகள் காந்தியடிகள்பால் பொலிதல் வெள்ளிடைமலை.

இவ்வாறு சிறப்புவழி நடைபெற்று வந்த வருணச்சிரம முறைகள் இடைக்காலத்தில் பிறப்புவழி நடைபெறலாயின. அவ்வத் தொழிலாளர் கான்முளைகள் பெரிதும்

அவ்வத்தொழில் பயின்றுவந்தமையான், அவரவர் தத்தந் தொழில் முறைகளைப் பிறப்புரிமையாக்கிக் கொண்டனர். இதனால் பிறப்புவழிச் சாதி வேற்றுமைகள் தோன்றலாயின.

**இடைக்கால வருணாச்சிரமம்**

அவ்வக்கால நிலைமைக்கு ஏற்றவாறு நூல் பல எழுதப்பட்டன; பழைய நூல்கள் சில திரிக்கப்பட்டன; புதுக்கப்பட்டன. 'மனு தர்மம்' முதலிய நூல்களில் நாளுக்கு நாள் உயர் வகுப்பார் என்போர் தமது நலங்கருதிப் பல திறச் சிறுமை உரைகளை இடையிடையே செருகிவிட்டனர். பிறப்பு வழியிலுஞ் சிலகாலம் வருணமுறைகள் ஒருவாறு நடைபெற்றுவந்தன. அதன் பயனாக, நாளடைவில் ஒவ்வொரு வருணத்தினின்றுங் கவடுகளும் கோடுகளும் விட்டுப் பல்லாயிரக்கணக்கான சாதிகள் பெருகலாயின. இந்நாளில் சிறப்பை யொட்டியாதல் பிறப்பையொட்டியாதல் வருணாச்சிரம முறைகள் இயங்கவில்லை.

காந்தியடிகள் வாழ்க்கை வருணாச்சிரம தர்மத்தை எவ்வழியில் கொண்டிருக்கிறது என்பதைச் சிறிது நோக்குவோம். மகாத்மா காந்தி தம்மைச் சநாதன ஹிந்து என்று பல இடங்களில் சொல்லியுமிருக்கிறார்; எழுதியுமிருக்கிறார். அவர் தொழிலுக்கு ஏற்றவாறு சாதிகள் அமைக்கப்பட்ட ஒழுங்குமுறையை வியந்து வியந்து பாராட்டுகிறார். 'நான் எப்பொழுதுஞ் சநாதன ஹிந்து என உரிமையோடு சொல்லிக்கொள்வது வழக்கம்' என்றோரிடத்திலும், 'நான் என்னைச் சநாதன ஹிந்து என்கிறேன். ஏனெனில் * * * வேதக் கருத்துப்படி -

**காந்தியடிகள் வருணாச்சிரமம்**

ஆனால் இப்போதுள்ள ஒழுங்கீன முறைப்படியன்று - நான் வருணாச்சிரம தருமத்தை நம்புகிறேன்' என்று மற்றோரிடத்திலுஞ் சொல்லியிருக்கிறார். 'சாதியின் பரந்த அமைப்பு சமூகத்தின் சமய ஞானத்துக்குத் துணை செய்வதோடு அரசியலுக்குந் துணைசெய்வதாகிறது' என்றும், 'சாதி, ஹிந்து மதத்தின் சக்தியும் இரகசியமுமாகும்' என்றும் அடிகள் கூறியிருக்கிறார். 'நால்வகைச் சாதியே சாலும்' என்றும், 'பல பிரிவுகள் வேண்டுவதில்லை' என்றும், 'அவை தடைகளாக இருக்கின்றன' என்றும் பலவிடங்களில் அடிகள் உரைத்திருக்கிறார். இவ்வுரைகளால் காந்தியடிகள் வருணத்தைப்பற்றிக் கொண்டுள்ள கருத்து இன்னதென விளங்குகிறது.

வருணாச்சிரம தருமத்தைக் குறித்து அடிகள் வெளியிட்டுவருங் கருத்துக்களை ஹிந்து மக்கள் தங்கள் தங்கள் கருத்துக்கியையப் பொருள் கொள்கிறார்கள். வருணாச்சிரமத்தைப்பற்றிக் காந்தியடிகள் தெளிவான கருத்து வெளியிடுவதில்லை என்று சிலர் பேச யான் கேட்டிருக்கிறேன். ஆதலால், காந்தியடிகள் வருணாச்சிரமத்தைப்பற்றிக் கொண்டுள்ள கருத்து ஆராயற்பாலதே.

காந்தியடிகள் வருணாச்சிரம தருமத்தில் உறுதியுடையார் என்பதில் ஐயமில்லை. 'வருணாச்சிரமம் மக்கள்பால் இயல்பாக அமைந்துகிடப்பது. ஹிந்து மதம் அதை ஒழுங்குபடுத்தி வெளியிட்டிருக்கிறது' என்றும் 'வருணாச்சிரம தர்மம் மக்கள் ஊக்கத்தை அளவளவாகச் சேமித்து அடக்கம் முதலிய நறுங்

குணங்களை வளர்ப்பது' என்றும் அடிகள் கூறியுள்ள உறுதி மொழிகளால் அவரது உள்ளந் தெள்ளிதிற் புலனாகிறது.

மக்கள் வாழ்விற்கு உறுதுணை செய்யும் நன்முறையாகிய வருணாச்சிரம தருமம் இந்நாளில் மறுக்கப்படுதற்கும், பழிக்கப்படுதற்கும் காரணமென்னை? மனிதன் கடமையை அதாவது அறத்தை மறந்து, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டமையாகும். இங்ஙனம் மனிதன் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்ட நாள்தொட்டு, வருணாச்சிரம தருமத்துக்கும், அதைக் கொண்ட ஹிந்து மதத்துக்கும் இடர் நேரலாயிற்று.

வருணாச்சிரம தருமத்தைப் போற்றுங் காந்தியடிகள், உயர்வு தாழ்வு நினைவை மிக உரமாக மறுக்கிறார். 'நால்வகைப் பிரிவுகள் மனிதன் கடமைகளைக் குறிக்கின்றன. அவை உயர்வு தாழ்வைக் குறிப்பிடவில்லை. ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்று கருதி மற்றவரை இழிவாக நினைப்பது தவறு. ஒருவனுக்கு உயர்நிலையையும் மற்றவனுக்குத் தாழ்நிலையையுங் கணிப்பது ஹிந்து மதத்தின் சிறப்புக்கு மாறுபாடு என்பது எனது கொள்கை. கடவுள் படைப்புக்கு (உயிர்கட்கு)ப் பணிசெய்யவே எல்லாரும் தோன்றியிருக்கிறார்' என்றும், 'தனக்குரிய அறிவு விளக்கத்தால் செருக்கித் தன்னை உயர்வாகக் கொள்ளும் பிராமணன் இழிந்தவனாய் அவ்விளக்கஞ் சுருங்கப்பெறுவன். தத்தங் குணநலங்களைப் பாராட்டி இறுமாந்து பிறரைக் குறைவாக நினைப்போர் வீழ்ந்துபடுவோரேயாவர்' என்றும், 'சூத்திரன் தன் கடனாற்றுகிறான்; பிராமணன் தன் கடனாற்று

உயர்வு தாழ்வு

கிறான்; கடனில் உயர்வு தாழ்வு ஏன் கற்பிக்கப்படல் வேண்டும்? பிறர்க்குத் தொண்டு செய்து உழைப்பதே சிறப்பு' என்றும் அடிகள் அருளிய திருவாக்குக்கள் பல படக் கிடக்கின்றன. 'எனக்குத் தோட்டித் தொழிலில் விருப்புண்டு. எனது ஆசிரமத்தில் பதினெட்டு வயது பிராமணச் சிறுவன் ஆசிரமக் குப்பைகூட்டும் வேலையைக் கற்பிக்கவேண்டித் தான் தோட்டிவேலை செய்கிறான். அவ்விளைஞன் சீர்திருத்தக்காரனல்லன். அவன் வைதிகத்தில் பிறந்து வளர்ந்தவன். அவன் நாடோறுங் கீதை பாராயணஞ் செய்பவன்; சந்தியாவந்தனம் முதலிய வற்றை முறைமுறையே நிகழ்த்துவோன். அவனது வடமொழி உச்சரிப்பு என்னுடையதினும் நன்றாயிருக்கிறது. பூசையில்அவன் பாடும் இனிய பண் உள்ளத்தை உருக்கி அன்புவண்ணமாக்குகிறது. குப்பை கூட்டுந் தொழில் பயில்வது, கடமை நிறைவேற்றத்தில் ஒன்றென்றும், ஆசிரமக் குப்பைக்காரர் செவ்வனே வேலை செய்யவேண்டுமானால் தான் அத்தொழிலில் வல்லவனாயிருந்து வழிகாட்டியாய் இருத்தல்வேண்டு மென்றும் அவன் உணர்கிறான்' என்று மகாத்மா கடமைச் சிறப்பை விளக்கியவாறு காண்க. போருக்கு நிலைக்களனாயுள்ள உயர்வு தாழ்வு வருணாச்சிரமத்தில் இல்லை என்பது காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை. 'பிறப்பையொட்டியும் கர்மத்தையொட்டியும் யான் வருணாச்சிரமத்தை நம்புகிறேன். ஆனால் தோட்டியை யான் இழிந்தவனாகக் கருதுவதில்லை' என்று அடிகள் அருளியிருத்தலை ஓர்க.

ஹிந்துக்களுள் உண்ணல் தின்னல் கொள்ளல் கொடுத்தல் முதலியவற்றைப் பற்றியும் பூசலுண்டு.

இதைப்பற்றிக் காந்தியடிகள் கொண்ட கருத்தென்னை ?

**உடனுண்ணல் முதலியன**

உண்ணல் தின்னல் முதலியன அவரவர் வழக்க ஒழுக்கங்களைப் பொறுத்தன என்றும், உண்ணல் தின்னல் முதலியனவே நாட்டை ஒற்றுமைப்படுத்தி மக்கள் ஆட்சி என்னும் அறத்தை வளர்ப்பன என்று சொல்வதில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும், உண்ணல் தின்னல் முதலியவற்றிற்கும் ஹிந்துமதத்திற்கும் தொடர்பில்லை என்றும் பல முறை பல இடங்களில் காந்தியடிகள் கூறியிருக்கிறார்.

உண்ணல் தின்னல் முதலியன அவரவர் விருப்பப்படி நிகழ்வன என்பதும், அவற்றை வலியுறுத்தல் அறமாகாதென்பதும் காந்தியடிகள் கொள்கை. உடனுண்டு வளர்ந்த பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் போர்மூண்டதையும், உண்ணல் தின்னல் கொள்ளல் கொடுத்தலில் வேற்றுமை பாராட்டாத இங்கிலீஷ்காரருக்கும் ஜெர்மானியருக்கும் பகைமை கனன்றெழுந்ததையும், சிலர் நெஞ்சில் பகைமையை வைத்துக்கொண்டு உடன் உண்ணலையும் ஆடுவதையும் பாடுவதையும் அடிகள் எடுத்துக்காட்டுவது வழக்கம். உடன் உண்ணல் முதலியன இன்றியும் ஆன்ம நேயத்தை வளர்க்கலாம் என்பது அடிகள் கருத்து. ஒருமைப்பட்டு உடன் உண்ணலையும் அடிகள் மறுப்பதில்லை. 'ஒரு சூத்திர சகோதரனோடு ஒரு பிராமணன் உண்டும் அவன் பிராமணனாயிருக்கலாம். ஆனால் அப்பிராமணன் தன் அறிவுத் தொண்டினின்றும் வழுவுதலாகாது' என்று அடிகள் அறைந்து, 'அந்தோ! இந்நாளில் ஹிந்து மதம் உண்ணல் தின்னலில் அடங்கியிருப்பது துரதிர்ஷ்டம்'

என்று இரங்குகிறார். 'பிறரை உடன் உண்ணுமாறு வலியுறுத்தமாட்டேன். யான் உடன் உண்பேன்' என்றும், 'தூய தீம்புனல் ஒரு பஞ்சம சகோதரி அன்போடு கொடுத்தால் யான் பருகுவேன்' என்றும், 'யான் வருணாச்சிரமத்தில் நம்பிக்கையுடையேன். ஆயினும் யான் ஒரு தோட்டியுடன் உண்பேன்' என்றும் மகாத்மாகாந்தி அருளியிருப்பதை அன்பர்கள் ஊன்றி நோக்குவார்களாக.

காந்தியடிகள் பலமுறை பல வகுப்பாருடன் உண்டதை அவரது 'சத்திய சோதனை'யில் அவரே குறிப்பிட்டிருக்கிறார். இங்கிலாந்திலும் தென்னாப்பிரிக்காவிலும் அடிகள் ஐரோப்பியருள்ளிட்ட பல வகுப்பாருடன் கலந்து சாப்பிட்டது உலகறிந்தததொன்று. போனிக்ஸில் அடிகள் தமது இல்லத்திலேயே அன்பிற்சிறந்த காலன்பக், போலக் முதலிய ஐரோப்பியர் வதியுமாறு நடந்தந்தது ஈண்டுக் குறிக்கத்தக்கது. சபர்மதியிலிருந்த சத்தியாக்கிரக ஆசிரமத்தில் இடம் பெற்ற எல்லா வகுப்பாரும் உடனுண்டு பழகிவந்தமை நாட்டவர்க்குத் தெரியும். காந்தியடிகளைப் பொறுத்தமட்டும் அவர் உடனுண்ணல் முதலியவற்றிற்கு மாறுபட்ட கருத்துடையவரல்லரென்பது தேற்றம். உடனுண்ணல் முதலியவற்றிலேயே வீடுபேறு உண்டு என்று எவரையும் வலியுறுத்தலாகாதென்பதும், உடனுண்ணலை அவரவர் விருப்பத்துக்கு விடுதல் வேண்டுமென்பதும் அடிகளின் உட்கிடக்கை.

காந்தியடிகள் கூறும் வருணாச்சிரமத்தைக் கூர்ந்து உன்னுதல் வேண்டும். அவரது வருணாச்சிரமத்தை

வைதிகரும் கொள்வதில்லை; சீர்திருத்தக்காரரும் ஏற்ப தில்லை. அடிகள், 'வருணாச்சிரமம் பிறப்புவழி இயங்கல் வேண்டும்' என்கி றார். அவர், உழவோன் மகன் உழவுத் தொழில் செய்தல் வேண்டுமென்றும், வாணிபன் மைந்தன் வாணிபத் தொழில்புரிதல்வேண்டு மென்றும், இவ்வாறு பிறப்பையொட்டியே மற்றத் தொழின்முறைகளும் நடைபெறுதல் வேண்டுமென்றுங் கூறுகிறார்; இத்தொழின்முறை வேற்றுமைகொண்டு பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுதல் கூடாதென்றுஞ் சொல்கிறார். வருணாச்சிரமத்தைப்பற்றிப் பேசவோ எழுதவோ நேரும்போதெல்லாம், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் அறியாமை என்பதை அடிகள் வலியுறுத்தியே வருகிறார். உண்ணல், தின்னல், மறை யோதல், திருக்கோயில் பூசை முதலியன பிறப்புவழி நிகழ்தல் வேண்டுமென்று அடிகள் அறைவதில்லை. பிறப்புவழித் தொழின்முறைகள் நடைபெற்று வரின், உலகில் போராட்டம் அருகி அமைதி பெருகுமென்பது அடிகளின் கருத்து.

அடிகள் வருணாச்சிரம விளக்கம்

வருணாச்சிரமத்தைப்பற்றி அடிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் பல பொன்னேபோல் போற்றற்குரியன. ஆனல் ஒன்றுமட்டும் எனது சிற்றறிவிற்கு விளங்கவில்லை. அஃதென்னை? அது பிறப்புவழி வருணாச்சிரமம் இயங்க வேண்டுமென்பது. அது குறித்துப் பன்னெடு நாள் யான் உன்னியது உண்டு.

பிறப்பையொட்டித் தொழின்முறைகளைக் கட்டுப் படுத்தல் இயற்கை நோக்கைச் சிறைப்படுத்துவதாகும்.

அவரவர் இயல்புக்கேற்ற தொழில்களை அவரவர் ஏற்றுச் செய்யலாம். அவரவர் இயல்புவழித் தொழில்களை ஏற்றுச் செய்வதே இயற்கை முறை. பிறப்புவழித் தொழில்கள் நடைபெறல் வேண்டுமென்று கட்டுப் படுத்துவது இயற்கையை ஒறுப்பதாக முடியும். விளக்கம் எனது தலைமையுரைகளைக் கொண்ட ‘தமிழ்த் தென்றல்’ என்னும் நூலிற் காண்க. ‘பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யான்’ எனவரூஉந் திருவள்ளுவர் மொழியே இயற்கை நோக்குக்கு அரண்செய்வதாகும். இதுவே சிறியேன் உட்கிடக்கையும்.

பிறப்பில் தீண்டாமை உண்டா இல்லையா என்னும் வாதப்போர் நமது நாட்டிடை நீண்ட நாளாக நிகழ்ந்து வருகிறது. கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்களுக்குள் தீண்டாமை யாண்டிருந்து முளைத்ததோ தெரியவில்லை.

**தீண்டாமை**

எங்கணும் நீக்கமற நிறைந்துள்ள ஆண்டவன் தீண்டாத மக்களின் உள்ளத்திலும் இருக்கிறான். ஆண்டவன் உறையுந் திருக்கோயில்களாகிய ஏழைமக்கள் உடலில் தீண்டாமை ஏது? ஆண்டவன் இயற்கை நிலையங்களைத் தீண்டாத் திருமேனி என்று இகழ்ந்து கூறுவது ஆண்டவனை இகழ்ந்து கூறுவதாகும். கடவுளிடத்து அன்புடையார்க்குத் தீண்டாமையுமில்லை; வேறுமையுமில்லை.

தீண்டாமையை ஒழிக்க மகாத்மா செய்துவரும் முயற்சிக்கு ஓர் அளவில்லை. அவரது வாழ்க்கையில் அவராற்றிய சிறந்த தொண்டுகளுள் தீண்டாமை விலக்கும்-

ஒன்று. காந்தியடிகள் தீண்டாமையைப்பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் பல. அவற்றுள் சில வருமாறு:—

'தீண்டாமை என்பது ஹிந்து மதத்திலுள்ள ஒரு கறை'

'ஹிந்து சமூகம், தன்னால் ஒடுக்கப்பெற்றவரை (தீண்டாதார் என்று சொல்லப்படுவோரை) உயர்த்துவது ஹிந்து மதத்திலுள்ள மாசைத் துடைப்பதாகும். இவ் வகுப்பாரை இப்பொழுது சாதி ஹிந்துக்கள் நடாத்தும் முறை சமய ஞானத்துக்கும் ஜீவகாருண்ய ஒழுக்கத்துக்கும் மாறுபட்டதாகும்'

'இவ்வெண்ணம் (தீண்டாமை பாவம் என்பது) எனக்குப் பன்னிரண்டாவது வயதிலேயே உற்றது. எமது வீட்டு மலங்கழுவும் தோட்டி யுகன் என்பவனைத் தொடுவது எப்படித் தீட்டாகும் என்று என் அன்னையாரை யான் கேட்பது வழக்கம். * * * *'

'தீண்டாமை ஹிந்து மதத்தின்பாற்பட்டதென்று யான் நம்பவில்லை. அஃது அம்மதத்தின்பாற்பட்டதென்று சொல்லப்படின், அந்த ஹிந்து மதம் எனக்குரியதாகாது'

'இது (தீண்டாமை) ஹிந்து மதத்தின் ஜீவாதாரமென என் முன்னிலையில் உறுதிப்படுத்தப்படுமேல், ஹிந்து மதத்துக்கு நேர்மாறாக யான் கிளர்ச்சி செய்யப் புறப்படுவேன்'

'பல நன்மனமுடைய ஹிந்துக்களும் தீண்டாமை ஹிந்து மதத்தின்கூறு என்று கொண்டு, சீர்திருத்தக்காரரை மதத்துக்குப் புறம்பானவரென்று கருதுகிறார்கள். தீண்டாமை, ஹிந்து மதத்தின் ஒரு கூறாயின், என்னை ஹிந்து என்று சொல்லிக்கொள்வதை விடுத்து எனது கோரிக்கைகளை நிறைவேற்றவல்ல ஒரு சமயம் புகுவேன். ஆனால்

தீண்டாமை ஹிந்து மதத்தின் ஒருகூறு என்று எனக்குத் தோன்றவில்லை '

' தீண்டாமைக்கு இடந்தந்தமையால் ஹிந்து மதம் பாவத்துக்கு இடந்தந்ததாகிறது. அப்பாவம் நம்மையும் - முஸ்லிம் உள்ளிட்ட எல்லா இந்தியரையும் - ஏகாதிபத்தி யத்தில் பறையராக்கி யிருக்கிறது '

' ஹிந்துக்கள் வேண்டுமென்று தீண்டாமையைத் தமது மதத்துள் ஒரு பாகமாகக் கொள்ளும்வரை - அவர்கள் தங்களுடன் பிறந்த சகோதரர்களைத் தீண்டுவது பாவம் என்று நினைக்குமட்டும்-சுயராஜ்யப்பேறு பெறுதல் அரிதே '

' நம் சகோதரர்களை ஒடுக்கிய பாவம் நம்பாலுண்டு. அவர்களை நாம் பூமியில் ஊர்ந்து போகுமாறு செய்கிறோம் ; வண்டிகளில் ஏற ஒண்ணாதவாறு தள்ளுகிறோம். இவை களைவிடப் பிரிட்டிஷ் ஆட்சி என்ன கொடுமையைச் செய்து விட்டது ? நம்பாலுள்ள கொடுமைகளை நாம் களைதல் வேண்டும். எளிய மக்களுக்கு ஆதரவு நல்காதவரை சுய ராஜ்யத்தைப் பற்றிப் பேசுவது வீண் '

' எளிய சகோதரர்களை ஒடுக்கும் பாவத்தில் மூழ்கி யிருசகுமட்டும் நாம் விலங்குகளைவிட நல்லவர்களல்ல '

' நான் வீடுபேறு எய்த விழைகிறேன். நான் மீண்டும் பிறக்க விழைகின்றேனில்லை. பிறக்க நேரின், நான் தீண்டாதவனாகப் பிறந்து, அவர்கள் துயரங்களையும் வருத்தங்களையும் அனுபவிப்பதில் பங்காளியாய், என்னையும் அவர்களையும் இரங்கத்தக்க நிலையினின்றுங் கரையேற்ற முயன்றுழைத்தல் வேண்டும். ஆதலால், மீண்டும் பிறப் புண்டேல் நான் பஞ்சமனாகப் பிறக்கவேண்டு மென்பது எனது வேண்டுகோள் '

' தீண்டாமை சமயத்தின் விளைவன்று ; சாத்தான் சூழ்ச்சியால் விளைந்தது '

'என் வாழ்நாளில் எனக்குள்ள ஆசை இரண்டு. ஒன்று தீண்டாமை தொலைத்தல்; இன்னொன்று ஆன் காத்தல். இவ்விரண்டும் நிறைவேறும்பொழுது அங்கே சுயராஜ்யம் நிலவும். எனது வீடுபேறும் ஆண்டே'

'தங்கள் அரசியல் உரிமைப்பேற்றிற்குத் தாழ்ந்த வகுப்பாரைக் கொள்ளையிடும் ஹிந்து சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். தீண்டாமை போக்குவது ஜாதி ஹிந்துக்கள் ஹிந்து மதத்துக்கும் தங்கட்குஞ் செய்யவேண்டிய விரதக்கடனும். அத்தூய்மைக் கடமை நிறைவேற வேண்டிய இடம் ஜாதி ஹிந்துக்கள் சமூகமாகும்; அது தீண்டாத மக்கள் சமூகத்திலில்லை'

'ஒரு சொட்டு நஞ்சு ஒரு கலப் பாலுக்குக் கேடுசூழ்வது போலத் தீண்டாமை ஹிந்து மதத்துக்குக் கேடுசூழ்ந்திருக்கிறது'

**சொல்லும் செயலும்**

காந்தியடிகள் பேச்சளவோடு எழுத்தளவோடு நிற்பவரல்லர். அவர் சொல்வழி நின்று செயலில் எதையுங் கொணர்வோர். செயலில் நிகழ்த்த இயலாததைப்பற்றி அவர் பேசுவதில்லை; எழுதுவதில்லை. அடிகள் தமது வாழ்நாளில் ஒன்றைச் செயலில் கொணர்ந்து பயனுணராது, அதைப்பற்றிப் பிறர்க்குரைக்க மனங் கொள்வதில்லை. காந்தியடிகள் தீண்டாதாரைத் தம்முடன் பிறந்தோராகக் கருதிப் போற்றியதற்குச் சான்றுகள் பல உள. ஈண்டு இரண்டொன்றைக் காட்டுகிறேன்.

காந்தியடிகள் டர்பனில் வக்கீல் தொழில் செய்தபோது, அவருடைய கணக்கர்கள் அவருடன் அவர் வீட்டிலேயே குடியிருந்தார்கள். அவர்

களிற் பல வகுப்பாரிருந்தனர். அடிகள் குடியிருந்த வீடு மேல்நாட்டு முறையில் கட்டப்பட்டிருந்தமையான், அவ்வீட்டின் அறைகளில் சாக்கடைகள் இல்லாம லிருந்தன. சாக்கடைகட்குப் பதிலாக அழுக்கு நீர்ப் பாண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்பாண்டங்களைக் கழுவித் தூய்மை செய்வதற்கெனத் தனி ஆட்கள் அமர்த்தப்படவில்லை. காந்தியடிகளும் அவர்தம் மனைவியாரும் அத்தொண்டு செய்வது வழக்கம். கணக்கர்களும் தங்கள் தங்கள் அறைகளிலுள்ள பாண்டங்களைத் தாங்களே கழுவித் திருத்திக்கொள்வார்கள். ஒரு புதுக் கணக்கர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் கிறிஸ்தவர்; அவருடைய தாய் தந்தையர் பஞ்சமர்; அவர் அழுக்கு நீர்ப்பாண்டங்களைக் கழுவித் திருத்தப் பழகியவரல்லர். ஆகவே, அவர் அறையிலுள்ள பாண்டத்தைக் கழுவித் திருத்தும் பொறுப்பு அடிகட்கும் அம்மையார்க்கும் நேர்ந்துவிட்டது. அம்மையார்க்குப் பஞ்சமர் பாண்டத்தைத் தொட மனமெழுவதில்லை. அடிகள் அப்பாண்டத்தைத் தொடுவதும் அம்மையார்க்குப் பிடிப்பதில்லை. இதனால் அடிகட்கும் அம்மையார்க்கும் பிணக்கு நிகழ்வதுண்டு. ஒருபோது அம்மையார் நெஞ்சங்கலங்கிக் கண்ணீர் உகுத்தவராய் அழுக்குப் பாண்டத்தைக் கையிலேந்திப் படி இறங்குவதைப் பார்த்த அடிகள் வெகுண்டு அம்மையார் கையைப் பிடித்திழுத்து அவரைத் தெருவில் தள்ள முயன்றார். இந்நிகழ்ச்சியை உன்னுவோர்க்கு அடிகளின் உள்ளநிலை இனிது புலனாகும். தீண்டாமையின் பொருட்டுச் சீற்றமறியா அடிகள் உள்ளத்தில் சீற்றமும்

மனைவியைத் தள்ளல்

எழுந்தது; பெறுதற்கரிய காதலியைப் பிடித்துத் தள்ள அடிகள் கையும் எழுந்தது.

சபர்மதியில் சத்தியாக்கிரக ஆசிரமங் காணப் பெற்ற சில திங்கட்குள், அவ்வாசிரமத்தில் குடும்பத்துடன் சேர ஒரு தீண்டாதார் விண்ணப்பஞ் செய்தனர். ஆசிரம விதிகட்குப் கட்டுப்பட்டு நடக்க விண்ணப்பக்காரர் விரும்புவரேல், அவர் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அடிகள் பதிலிறுத்தார். அதற்குத் தீண்டாதார் இணங்கிக் குடும்பத்துடன் ஆசிரமஞ் சேர்ந்தார்; சேர்ந்ததும் ஆசிரமத்தில் சாதிப் புகை எழும்பிவிட்டது. அத்தீண்டாத மக்கட்கு ஒரு வழியிலா துன்பம்! அந்தோ! துன்பம் பலவழியிலுஞ் சூழ்ந்தது. கிணறு முதல் அடுப்பு வரை துன்பம்; விழிப்பு முதல் உறக்கம் வரை துன்பம்; துன்பம்.

**ஆசிரமத்தில் தீண்டாமை**

அத்துன்பச் சூழலிடை நின்று அவ்வன்பரும் குடும்பமும் தாங்கிய பொறுமை அளப்பரிது. வெளியே 'ஆசிரமத்தில் தீண்டாதார் சேர்க்கப்பட்டார்' என்னும் பேச்செழுந்து புயலென வீசிற்று. பொருட்கொடை நிறுத்தப்பட்டது. அதனுல் ஆசிரம நிதியும் வறண்டது. ஆசிரமம் குலைந்துவிடுமென்றுஞ் சிலர் கருதினர். அந்நிலையைக்கண்ட அடிகள் பொருளின் பொருட்டோ பிறர் தூண்டுதற் பொருட்டோ தமது உறுதியினின்றும் பிறழ்ந்தாரில்லை; தீண்டாத மக்களை வெளியே துரத்த அவர் ஒருப்பட்டாரில்லை. தீண்டாதாரிடை ஆசிரமத்தைப் பெயர்த்துக்கொண்டு போகவும் அடிகள் நினைந்ததுண்டு. அவ்வேளையில் எதிர்பாராதபடி ஓர் அன்பர் பதின்

மூன்றாயிரம் ரூபா வலிந்து கொடுத்துச் சென்றார். துன்பத்திடை நின்ற தீண்டாதார்க்கு இலட்சுமி என்னும் ஒரு பெண் குழவியிருந்தது. காந்தியடிகள் அக்குழவியைச் சுவீகாரப் புதல்வியாக வளர்த்தது உலகறிந்த தொன்று.

ஒரிஸாவில் காந்தியடிகள் தொண்டாற்றி வந்த போது, தொண்டுப் பெருக்கால் அவரை நோய் அடர்ந்தது. அந்நோய் கவலைக்குரிய நிலைமையை உண்டாக்கிற்று. அச்செய்தி நாலுபக்கமும் பரவியது. காந்தியடிகளைக் காணச் சிலர் பறந்தனர். அவருள் சி. எப். ஆண்ட்ரூஸும் ஒருவர். ஆண்ட்ரூஸ் சென்ற வேளையில் அடிகள் ஞாயிற்றின் எழுச்சியைப் பார்த்த வண்ணமிருந்தனர்.

**உடல் நோயும் தீண்டாமை நோயும்**

அப்பொழுது தீண்டாதார் என்று சொல்லப்படுவோருள் ஒருவர் ஆண்டுப் போந்து அடிகளுக்கு வணக்கஞ் செலுத்தினர். அவர்தம் பரிதாபநிலை அடிகளின் நெஞ்சைக் குழைத்தது; கண்ணீரைப் பெருக்கியது. அடிகளின் உள்ளம் தீண்டாமை நோயில் அழுந்தியது. உடல் நோய் ஓடிற்று; எங்கேயோ ஓடிற்று. இக்காட்சி கண்ட ஆண்ட்ரூஸின் மனமுங் கவன்றது.

தீண்டாமை நோய் அடிகளின் உடல் நோயை ஓட்டியது. அந்நோய்ப் பேயை ஓட்டவே காந்தியடிகள் வாழ்கிறார். தீண்டாமை நோயை ஒழிக்க வந்தவர் மகாத்மா காந்தி என்று கூறல் மிகையாகாது.

தேர்தலில் சாதி ஹிந்துக்களையும் ஆதிதிராவிடர்களையும் வேறுபடுத்தல் கூடாதென்றும், இருவரும்

ஒன்றுபட்டுத் தேர்தலில் ஒத்துழைத்தல் வேண்டுமென்றும், அம்முறையிலேயே அரசாங்கம் விதிசெய்தல் வேண்டுமென்றும், அதனால் தீண்டாமை உணர்வு மறைதற்கு ஏது உண்டாகுமென்றும் அடிகள் உறுதிகொண்டு எர்வாடாவில் உண்ணு நோன்பிருந்தனர். அந்நோன்பு, சாதி ஹிந்து தலைவர்களையும் ஆதிதிராவிடத் தலைவர்களையும் அடிகள் விரும்பியவாறு ஒப்பந்தஞ் செய்ய உந்தியது. அதுவே பேர்பெற்ற பூனு ஒப்பந்தம் என்று சொல்லப்படுவது. அவ்வொப்பந்தம் தனது வழியே பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் இணங்கச் செய்தது. கலப்புத் தேர்தலால் அடிகள் எதிர்பார்த்த நலன் விளையவில்லை. சாதியார் மனம் இன்னும் மாறுதலடையவில்லை.

**பூனு ஒப்பந்தம்**

ஒடுக்கப்பட்டவர்க்கு வழங்கப்பட்டுவரும் பழைய பெயர்கள் தீண்டாமையை நினைவூட்டுவனவா யிருக்கின்றன என்று காந்தியடிகள் எண்ணி, அவர்களை, ‘ஹரி ஜனங்கள்’ என்றொரு புதுப்பெயரால் அழைக்கலாயினர். காங்கரஸின் பிரசார வேகத்தால் அப்பெயர் நாடு முழுவதும் பரவி வழங்கலாயிற்று. ‘ஹரிஜன்’ என்னும் நற்பெயர் சாதியாரின் மனோநிலையை மாற்றவில்லை. ஏழைமக்கள், முன்னே பறையர் என்று அழைக்கப்பட்டார்கள்; பின்னே பஞ்சமர் என்று அழைக்கப்பட்டார்கள்; இப்பொழுது ஹரிஜனங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். பெயர் மாறுபட்டதேயன்றிப் பொருள் மாறுபடவில்லை. ‘ஹரிஜனங்கள்’ என்பது, தீண்டதார்க்குரிய புதுப் பெயராகவே சாதியாரால்

**‘ஹரிஜன்’ பெயர்**

கொள்ளப்பட்டது. அவர்கள் ஹரியின் ஜனங்களாகக் கொள்ளப்படுகிறார்களில்லை. ‘ ஹரிஜன் ’ என்னும் பெயரும் தமது சமூகத்தைப் பழையபடி ஒரு தனி வகுப்பாகவே பிரித்து நிற்கும் ஒரு கருவியாயிருத்தலான், அப்பெயரை ஆதிதிராவிடர் ஏற்க விரும்பவில்லை.

காந்தியடிகள் முயற்சியால் சில இடங்களில் தீண்டாமை உணர்வு மறைந்து வருதல் உண்மையே. திருவாங்கூர் முதலிய இடங்களில் ஒடுக்கப்பட்டவர்க்கென்று பிணிக்கப்பட்டிருந்த கோயில் தடை நீக்கப்பட்டது.

**கோயில் தடை**

காங்கரஸ் ஆட்சியில் சில இடங்களில் அத்தடை ஓரோவழி விலக்கப் பட்டது; முற்றும் விலக்கப்படவில்லை. ஓரோ வழிக்கும் சாதியார் எதிர்ப்பு வீறிட்டெழுந்தது. மாகாண சுய ஆட்சிக்காலத்திலும், தீண்டாமை சாத்திரச் சம்மதமென்றும், சம்பிரதாயமென்றும் உறுத்தெழுவோர் இருப்பின், தீண்டாமை இந்நாட்டை விடுத்து எப்பொழுது ஒழியும் ? தீண்டாமை உள்ளவரை நாட்டுக்கு விடுதலை நல்க ஆண்டவன் திருவுள்ளங் கொள்வனோ ? மனித முயற்சியால் ஒரு வேளை விடுதலை தலைகாட்டினும், அஃது ஆண்டவனால் தடைப்பட்டொழிவதாகும்.

காந்தியடிகள் வாழ்வு தீண்டாமையைக் களைய வந்த பெருவாழ்வு என்பதற்கு இச்சான்றுகளே சாலும்.

ஐந்தாம் வகுப்பு என்றொன்று வேதத்திலில்லை என்று அடிகள் கூறிய மொழிகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். சுருதி யுக்தி அநுபவங்கட்குப் பொருந்தாத தீண்டாமை என்பது நமது நாட்டை நாசப்படுத்தி வருகிறது. அக்கொடுமையையும் போக்கப் பிறந்த பெரியார் நம் காந்தியடிகள்.

பெண் பிறவி

பெண் பிறவியை இழித்துக்கூறும் மற்றொரு கொடுமை நமது நாட்டில் நிலைத்திருக்கிறது. அதைப் பற்றி மகாத்மா, 'மனிதன் பொறுப்பாளனாயிருந்து நிகழ்த்திய தீங்குகளுள், மன்பதையின் ஒரு பகுதியாகிய பெண்ணினத்தைச் சிறுமைப் படுத்தியதும் ஒன்று. அது நம்மை இழிவு படுத்துவது ; நடுக்குறுத்துவது ; விலங்காக்குவது' என்று கூறியிருக்கிறார். இது வேறிடத்தில் விரித்துரைக்கப்படும்.

பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது தவறு என்பது காந்தியடிகளின் அடிப்படையான கொள்கை. 'எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கருதல்' என்னும் பேரறத்தை உலகிற்கு அறிவுறுத்தப் போந்த பெரியார்க்குப் பிறப்பில் உயர்வு தாழ்வு தோன்றுமோ?

அன்பால் குறை களைதல்

நாட்டிலுள்ள கண்மூடி வழக்க ஒழுக்கங்களில் காந்தியடிகள் உறுதிகொண்டிலரேனும், அவற்றைத் தொலைக்க மக்கள் மனத்தை ஊறுபடுத்துந் துறைகளில் இறங்கி அவர் உழைப்பதில்லை. இன்சொல்லால் மக்கள் உள்ளங்கனியுமாறு தாம் வருந்தலால் குறைகளைக் களைய முயல்வது காந்தியடிகள் வழக்கம். தீண்டாமை தொலைய வைக்கத்தில் தொடங்கப்பெற்ற பொறுமைப் போர் இதற்குச் சான்று கூறும். கண்மூடி வழக்கமுடையார் மனந்திருந்தாதவரை அவர் உணர்வு கலங்காதவாறு மற்றவர் வாழ்தல் வேண்டுமென்பது காந்தியடிகள் வாழ்க்கையில் அறியக் கிடப்பதொன்று.

காந்தியடிகள் பிறந்த குலம் கண்மூடி வழக்க ஒழுக்கங்களில் மூழ்கியதொன்று. அக்குலத்தார், காந்தியடிகள் இளமையில் முதன் முறை இங்கிலாந்து சென்றிருந்தபோது அவரது உறவினரைச் சாதியினின்றும் விலக்கினர். பின்னைக் காந்தியடிகள் திரும்பி வீடு சேர்ந்ததும் அவர் தலைவர் உள்ள நிலைமையை நன்கு விளக்கிக் கழிவு தேடுமாறு அவரை வலியுறுத்தினர். காந்தியடிகள் தமக்குள்ள மேல்நாட்டு அறிவுத் துணைகொண்டு பிணங்கி நில்லாது, தலைவர் ஆணைக்கிணங்கிக் கழுவாய் (பிராயச் சித்தஞ்) செய்துகொண்டார்.

கண்மூடி வழக்க ஒழுக்கம்

மற்றுமொன்று. காந்தியடிகள் திருவாங்கூர் சென்று கன்னியா குமரி போந்தபோது, 'அடிகள் இங்கிலாந்து சென்ற ஒருவர்' என்னுங் காரணங் குறித்துக் கோயில் தலைவர், அடிகளைக் கோயிலுக்குள் நுழையாதவாறு தகைந்தபோது, அன்னார் ஆணைக்கு மகாத்மா இணங்கியே நின்றார்.

கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் நீண்ட காலமாகப் பாய்ந்து உரங்கொண்ட மனோநிலையை மாற்றவேண்டுவது அன்பிற் சிறந்த அறிஞர் கடனே. அக்கடனாற்றக் கொள்ளும் முறைகளுள் தலையாயது சத்தியாக்கிரகம். பிறரை வருத்தாது தான் வருந்துவதிலுள்ள நலனும் பயனும் வேறொன்றிலிருக்குமென்று தோன்றவில்லை.

பிறப்பில் உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை தோன்றப்பெறாது வாழ்வு நடாத்துவோர் வாழ்வே நல்வாழ்வு. காந்தியடிகள் வாழ்க்கை, உயர்வு தாழ்வு

காணுமையோடு, அவ்வுயர்வு தாழ்வெனும் வேற்ற
களைய முயலும் ஆன்மநேயமுடையது. அதன்
சமத்துவத் தேனன்றோ பிலிற்றுகிறது?

## ௬. கல்வி

**பி**றவியாலாகிய பயன் எது என்பதை அறிவுறு
வது கல்வி. மக்கள் உடலுக்கு உணவு எத்தகைத்
அத்தகைத்து மக்கள் அறிவிற்குக் கல்வி. மனி
அறியாமையைக் கல்வி அறிவை விளக்கி அவ
வாழ்வை நேர்மையில் செலுத்தவல்லது கல்வி.

கல்வி என்றதுஞ் சிலருக்கு நூல்கள்மீதும் க
டங்கள் (கல்லூரிகள்) மீதும் நினைவு செல்லும். இ
கையையுந் தம்மையும் ஆராய்ந்து உண்மை கண்ட
யோர் தமது வாழ்வின் அடைவைப் பின்வருவே
எளிதில் உணருமாறு நூலாக எழுதிச் சென்ற

**கல்வி எது?**

அந்நூல் கலைஞானத்தை விளக்கு
யன்றி 'அநுபூதி' (Realisati
என்னும் மெய்யறிவை விளக்குவதாகாது. சில வே
களில் சிலருக்கு நூலறிவு, மெய்யறிவு அவாவை எ
புவதுண்டு. ஆகவே, நூலைக் கல்வியறிவிற்கு ஒருக
என்று கூறலாம்.

ஏடெடுத்துப் பயிலாது, நேரே இயற்கை
பயின்று, கல்வியாலாகிய பயன் பெறுவோர் பலர். ந
நாட்டுப் பெண் மக்களுள் பெரும்பான்மையோர் ஏ
டுத்துப் படித்தவரல்லர். அவருள் பலர், வாழ்வில் க
யாலாகிய பயனை, ஏடெடுத்து இரவு பகல் படித்
பரீட்சையில் தேறிய ஆடவரினும் நிரம்பப் பெற்

கிறார். நூற்பயிற்சியில்லா ஒருவன் ஒழுங்குபட்ட இல் வாழ்க்கை நடாத்திப் புதல்வரை ஈன்று, அன்பை வளர்த்து, உயிர்கட்கு உறுகண் செய்யாச் செவ்விய நெறிபற்றி ஒழுகுவானாயின், அவனிலும் பட்டம்மட்டும் பெற்றுச் செந்நெறி அறியாது வாழ்வோன் எங்ஙனங் கல்வியாளனாவன்? ஏட்டுப் படிப்புமட்டுங் கல்வியாகா தென்பது ஈண்டுக் கருதற்பாற்று. ஏட்டின் எழுத்து மீது கருத்துச் செலுத்தாது, பொருள்மீது கருத்துச் செலுத்தி, அப்பொருளை வாழ்வில் இரண்டறப் படியச் செய்து, அதன்வழி நடப்பதே கல்வி நெறியாகும்.

உண்மைக் கல்வி இயற்கையில் நிலவுகிறது. அதன் ஓவியமே ஏடும் எழுத்துமென்க. காடும் மலையும் ஆறும் கடலும், நடப்பனவும் பறப்பனவும் ஊர்வனவும் நிற்பனவும், ஆண்மக்களும் பெண்மக்களுமாக விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகமெனத்துணைப் பெருங் கழகம்! இக்கழகம் புகுந்து பயிலும் மாணாக்கன் பெருமையை என்னென்று கூறுவது? இக்கழகத்தில் பயின்று பேறுபெற்ற பெரும் புலவர் நம் காந்தியடிகள்.

**இயற்கைப் பெருங் கழகம்**

காந்தியடிகள் இளமையில் நாட்டுப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்றார்; பின்னர் ஆங்கிலப் பள்ளியில் இக்காலக் கல்வி பயின்றார்; தென்னாப்பிரிக்காவில் இயற்கைக் கல்வி பயின்றார். இப்பயிற்சியே அடிகளை எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராக்கியது.

**அடிகள் பயின்ற கல்வி**

இளமையில் காந்தியடிகட்கு நாட்டுக் கல்வி வழங்கப்பட்டது. இந்நாளில் நாட்டுக் கல்விக்குரிய பெரும்

பள்ளிக்கூடங்கள் நகரங்களில் அழிந்துபோயின. நகரக் கழகங்கள் - நாட்டாண்மைக் கழகங்கள் - சார்பாக ஏற்படும் பள்ளிக்கூடங்கள் நாட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்களை விழுங்கிவிட்டன. இக்காலப் பள்ளிகள் குழந்தைகள் உள்ளத்தில் அறவிதை விதைப்பதில்லை. அந்நாளில் திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தமை காந்தியடிகளின் தவப்பயனேயாகும். வீட்டிலுங் காந்தியடிகள், புராணம் முதலிய சமய நூல்களை வாசிப்பாராம்; கேட்பாராம்.

காந்தியடிகள் பின்னர்ப்பெற்ற ஆங்கிலப்பயிற்சியால் எழுந்த அவாவால் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறினார். இக்காலக் கல்வியின் பாழ்நிலை காந்தியடிகட்கு அவரது பின் வாழ்வில் புலனாயிற்று.

அடிகள் தென்னாப்பிரிக்காவில் மக்கள் தொண்டில் இறங்காதிருப்பரேல், அவர்க்கு இயற்கைக் கல்வி இன்பந் தோன்றுதற்கே வழியில்லாமற் போயிருக்கும். உண்மைக் கல்வி நிலை இஃதென விளங்கிய பின்னைக் காந்தியடிகள் இக்காலக் கல்வி முறையின் அழிவுக்கும், நாட்டுக் கல்வி முறையின் ஆக்கத்துக்கும் உழைப்பதில் ஊக்கஞ் செலுத்தலானார்.

ஒவ்வொரு நாட்டின் இயற்கை வளத்துக்கு ஏற்ற வாறு மக்கள் நிறம் மொழி வழக்க ஒழுக்கம் முதலியன அமைந்து கிடக்கின்றன. அவ்வியற்கைக்கு ஏற்றவாறு வாழ்வு நடாத்தவேண்டுவது மக்கள் கடமை. நமது

**இயற்கை மொழி**

நாட்டின் இயல்புக்கு ஏற்றவண்ணம் நமக்கென மொழி முதலியன ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது கவலை செலுத்தாது வாழ்வது இயற்கையை மறந்து வாழ்வதாகும்.

இயற்கையை மறவாத வாழ்க்கையே உயிர்களைச் செம்மைப்படுத்தும். இயற்கையை மறப்பிக்கும் வாழ்க்கை உயிர்களைத் துன்பத்தில் அழுத்தும். இயற்கையை மறவா திருத்தற்கு வழி யாது? அவ்வழி காட்டவல்லது எது? இயற்கைவழிப் பிறந்த நாட்டு மொழி இயற்கைவழி காட்டும். இயற்கை வாழ்விற்கு முதல் முதல் வேண்டற் பாலது நாட்டுமொழி அன்பு. ஒருவனுக்கு நாட்டுமொழி மீது கலந்த அன்பு நிகழுமேல், அவன்மாட்டு மற்ற இயற்கை வாழ்வுத் துறைகளெல்லாம் தாமே அமை வுறும். ஒருவனது இயல்புக்கு ஊற்றாயிருப்பது அவனது நாட்டு மொழியாகும்.

**நாடும் மொழியும்**

நாட்டு மொழி தாய்மொழி என்னும் பெயர் பெற்றிருப்பதன் நுட்பம் என்னை? தாயினிடத்திருந்தல்லவோ எல்லாம் பிறத்தல்வேண்டும்? புலவர் தாய்மொழியில் காவியங்களை ஏன் எழுதிவைத்தனர்? மக்கள், வாழ்வை இயற்கைவழி நடாத்தல்வேண்டு மென்னுங் கருத்துக்கொண்டே அவர் அவற்றை எழுதி வைத்தனர். ஓவியம் இசை முதலிய யாவும் மக்கள் இயற்கை வாழ்வினின்றும் வாழ்க்கைக்கென மலர்ந் தனவேயாம். மக்கட்கு இயற்கை வாழ்வில் வேட்கை எழுப்புதற்கென்று பலதிறக் கலைகள் தோன்றியிருக் கின்றன. அவ்வந் நாட்டு மொழிக்கெனச் சிறப்பாகக் கலைகள் காணப்பட்டதன் நோக்கத்தை உணர்தல் வேண்டும். இயற்கை வாழ்விற்கு அடிப்படை அவ்வந் நாட்டு இயற்கைமொழி என்று சுருங்கச் சொல்லலாம். ஒரு நாட்டின் நலன் அந்நாட்டின் மொழிநலத்தைப் பொறுத்து நிற்கிறது. நாட்டுமொழிப் பற்றில்லா நாடு இன்பம் இழந்துவருதல் ஒருதலை. இந்நுட்பத்தைக்

காந்தியடிகள் தாம் இயற்கை வாழ்வில் தலைப்பட்ட பின்னர் நன்கு உணரலானார்; உணர்ந்தமையால் தாம் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெறும் பொருட்டு நாட்டு மொழியில் நாட்டவர்க்கு அன்பு பிறக்குமாறு மனமொழி மெய்களால் தொண்டு நிகழ்த்தி வருகிறார்.

காந்தியடிகள், என்றும் உரிமை வேட்கை உடையவராக வாழ்தலைப் பார்க்கிறோம். உரிமையின் பொருட்டு அவர் பட்டுவரும் பாடு நமக்குத் தெரியும். உரிமைக்காக அவர் உயிரையும் விட முனைந்து நிற்கிறார். இதற்கு அடிப்படை எது? அடிகள் தாய்மொழிமாட்டுக் கொண்டுள்ள தணியா அன்பேயாகும். தாய்மொழியினிடத்து அன்பில்லா ஒருவன் தாய்நாட்டின் அன்பனாகான். நாட்டன்பிற்கு நாட்டுமொழி அன்பே உயிர் உயிர் என்க.

காந்தியடிகள் தாய்மொழியினிடத்துத் தாங் கொண்டுள்ள அன்பைப் பன்முறை பல இடங்களில் காட்டியிருக்கிறார்; அவ்வன்பைப் பலமுறை பல இடங்களில் அறிவுறுத்தியுமிருக்கிறார். இரண்டொன்றை ஈண்டு எடுத்துக்காட்டுகிறேன்.

காந்தியடிகள் நீண்டகாலம் தென்னாப்பிரிக்காவில் தங்கித் தமது தாய்நாடாகிய இந்தியா போந்தபோது அவரை வரவேற்று நன்றி தெரிக்க ஈண்டிய கூட்டங்கள் பலப்பல. அக்கூட்டங்களில் பெரிதும் தலைவர்கள்

**தாய்மொழி**

நாவில் ஆங்கில மாது அரசு செய்தாள். வரவேற்புரைகளும் பிறவும் ஆங்கில மயமாயிருந்தன. நீண்டநாள் வேறு நாட்டில் வாழ்ந்து

திரும்பிய காந்தியடிகள் தாய்மொழியிலேயே பெரிதும் விடையளித்தார். முதல் முதல் நிகழ்ந்த பம்பாய் வரவேற்பைப்பற்றி அடிகள் தமது 'சத்திய சோதனை'யில், 'விடை இறுக்கும் முறை எனக்கு வந்தபோது நான் கூர்ஜர மொழியிலேயே நன்றி கூறினேன். * * * * கூர்ஜரத்தார் அடங்கிய கூட்டத்தில் ஆங்கிலம் பேசுவதை மறுத்துரைத்தேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் நாட்டில் மாயவரம் என்னும் மயூரத்தில் - மயிலாடுதுறையில் - காந்தியடிகள் முதன்முறை எழுந்தருளியபோது, அவண் அவர்க்கு அளிக்கப்பெற்ற நன்றி தெரிக்கும் அறிக்கைபற்றித் தமது விடையில்,

> 'வரவேற்பு ஆங்கில மொழியில் பொறிக்கப்பட்டிருத்தல் காண்கிறேன். இந்திய தேசீயக் காங்கரஸில் சுதேசித் தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது. நீங்கள் சுதேசிகள் என்று கருதிக்கொண்டு இவ்வறிக்கையை ஆங்கில மொழியில் அச்சிறுத்தினால் நான் சுதேசியல்லன். ஆங்கில மொழிக்கு மாறாக ஒன்றும் யான் சொல்வதற்கில்லை. நீங்கள் உங்கள் நாட்டுமொழிகளைக் கொன்று, அவற்றின் சமாதிமீது, ஆங்கிலத்தை நிலவச்செய்வீர்களாயின், நீங்கள் நன்னெறியில் சுதேசியத்தை வளர்ப்பவர்களாகமாட்டீர்கள் என்று சொல்வேன். (கேளுங்கள் ; கேளுங்கள்) எனக்குத் தமிழ்மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால், அம்மொழியை எனக்குக் கற்பிக்கவும், அதைப் பயிலுமாறு என்னைக் கேட்கவும்வேண்டும். அவ்வினிய மொழியில் அறிக்கையை அளித்து, அதை மொழிபெயர்த்து உணர்த்தியிருப்பீர்களாயின், உங்கள் கடனை ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள்'

என்றும், மற்றோரிடத்தில்,

'தாய்மொழியின்வழிப் பிள்ளைகட்குக் கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய்மொழியை அவமதிப்பது நாட்டுத் தற்கொலையாகும்'

என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

தென்னாப்பிரிக்காவில் இந்திய மக்கள் படும் பாட்டைக் கல்கத்தாவில் அந்நாள் (1901-ம் ஆண்டு) கூடிய காங்கரஸில் முறையிட்டுக்கொள்ள அடிகள் கோபால கிருஷ்ண கோகலே அவர்களுடன் போந்தார். அக் காங்கரஸ் நடைமுறை அடிகள் உள்ளத்தில் படிந்தது. அந்நடைமுறையைப் பற்றித் தாங்கொண்ட கருத்துக்கள் சிலவற்றை அடிகள் தமது வரலாற்றில் வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் ஒன்று தாய்மொழியைப் பற்றியது. 'நமது நிகழ்ச்சிமுறைகளில் ஆங்கிலம் எவ்வளவு வீறுடன் ஆட்சி பெற்றிருக்கிறதென்பதை அந்நாளிலேயே யான் வருத்தத்துடன் நோக்கினேன்' என்று அடிகள் சொல்கிறார். அன்று அவர் கொண்ட மனோநிலை அவர் உரைகளால் புலனாகிறது. அடிகள் அன்று கண்ணீருங் கம்பலையுமாய்க் கலங்கி யிருப்பர். காந்தியடிகள் தம்வழிக் காங்கரஸ் நடைபெற்ற மற்றைஞான்று காங்கரஸில் தாய்மொழி மணங் கமழுமாறு ஒல்லும்வகை முயன்றார்; பயனுஞ் சிறிது விளைந்தது. இந்தியத் தலைவருள் தாய்மொழி வளத்துக்குப் பாடுபட்ட பெருமை மகாத்மா காந்திக்கு உண்டு.

தென்னாப்பிரிக்காவில் பள்ளிக்கூடம் வைத்து இந்தியப் பிள்ளைகட்குக் கல்வியறிவூட்டியபோதும் காந்தியடிகள் தாய்மொழியை மறந்தாரில்லை. அப்பள்ளியில் குழந்தைகட்குத் தமிழ், கூர்ஜரம் முதலிய நாட்டுமொழி

கள் அறிவுறுத்தப்பட்டன. அவ்வவந்நாட்டார் அவ்வந் நாட்டு மொழியை முதலில் பயிலவேண்டுமென்பது காந்தி யடிகள் கருத்து. தாய்மொழிவழி இயற்கை வாழ்வை உலகில் நிலைபெறுத்தத் தோன்றிய பெரியரல்லரோ நம் காந்தியடிகள் ?

நாட்டுக் கல்வியின் இன்றியமையாமையைப்பற்றி யும், அயல் மொழிகளை எவ்வளவில் கொள்ளலாம் என்பதைப்பற்றியும், கல்வியையொட்டிய வேறு பலவற் றைப்பற்றியும் அடிகள் அருளிய மொழிகளிற் சில வருமாறு :—

'நம்மை ஆள்வோர் அக்கலையை (மேல்நாட்டுக் கல்வியை) நம் தாய்நாட்டுக்குக் கொண்டுவருகிறரே, நாம் என்செய்வது என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆள்வோர் தங் கலைஞானத்தை ஈண்டுப் பரப்புகிறர் என்பதை நான் ஒருபோதும் நம்பமாட்டேன். நீங்கள் ஏன் அதை ஏற்க இசைதல்வேண்டும் ? ஆள்வோர் அக்கலையை நம்மிடைப் பரப்புவதாக வைத்துக்கொள்ளினும், அவரை விலக்காது, அக்கலையை விலக்கவல்ல ஆற்றல் நம்மாட்டு உண்டு என்று கருதுகிறேன்.'

'நாம் பெறுவது ஆங்கிலக் கல்வியே. ஐம்பதாண்டு களாகத் தாய்மொழி வாயிலாகக் கல்வி பெற்றிருப்போ மாயின் நாம் எந்நிலையிலிருப்போம் ? நாம் உரிமை இந்தியா வில் வாழ்வோரா யிருப்போம்.'

'ஐம்பதாண்டுகளாகத் தாய்மொழி வாயிலாகக் கல்வி யறிவு பெற்றிருப்போமாயின், நம் மூத்தோரும், ஊழிய ரும், சுற்றத்தாரும் நமது கல்வியறிவில் கலப்புற்றிருப்பர். ஒரு போஸோ ஒரு ராயோ கண்டுவரும் புதுமைகள் இராமாயண பாரதம்போல ஒவ்வொரு வீட்டுச் செல்வங்க ளாகியிருக்கும்.'

'தாய்மொழிக் கல்வி மிக முக்கியம். அம்மொழியிலுள்ள எல்லா நூல்களும் அடங்கிய ஒரு கருவூலம் அமைக்க எண்ணியிருக்கிறேன்.'

'ஆங்கிலம் பயின்றவர்க்குக் கூர்ஜர மொழி (தாய் மொழி) நிறைவிலா மொழிபோலத் தோன்றும். இதற்குக் காரணமென்னை? ஆங்கிலத்திலிருந்து கூர்ஜர மொழியில் பெயர்த்தெழுதும்போது தோன்றும் அருமைப்பாடே. குறை மொழியிலில்லை. குறை மொழிபெயர்க்கும் கடனேற்கும் மனிதன் பாலதே.'

'தாயின் அமுத மொழியால் பெற்ற பயிற்சி, அயல் மொழி வாயிலாகப் பயிற்சி தரும் பள்ளிக்கூடத்தில் அற்றுப்போகிறது. பள்ளிக்கூட வாழ்வையும் வீட்டு வாழ்வையும் பிணித்துள்ள பாசத்தை அறுக்கிறவன் நாட்டின் பகைவன். இத்தகைக் கல்விமுறையில் நாம் வீழ்ந்து கிடப்பதால் தாயை வஞ்சித்தவர் (மாத்ரு துரோகிகள்) ஆகிறோம்.'

'கலெக்டர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் கூர்ஜரம் (தாய்மொழி) தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் நம்மனோர் கொண்டுள்ள வேட்கை அவர்கள் நந் தாய்மொழியில் பெற்ற அறிவைத் துருப்பிடிக்குமாறு செய்கிறது.'

'ஆங்கிலம் பயில நாம் செலுத்தும் பேரவாவினின்றும் விடுதலையடைவது, நமது சமூகத்துக்குப் பெருந் தொண்டு செய்வதாகும். சிறு பள்ளிகளிலும் பெருங் கழகங்களிலும் ஆங்கில மொழி வாயிலாகவே கல்வி கற்பிக்கப்படுகிறது. அது நாட்டின் பொது மொழியாகி வருகிறது. நமது உயரிய கருத்துக்களெல்லாம் அம்மொழியில் வெளியிடப் படுகின்றன. உயர்ந்த குடும்பங்களில் ஆங்கிலம் இனித் தாய்மொழியாகும் என்று லார்ட் செம்ஸ்பர்ட் நம்புகிறார்.

ஆங்கிலத்தில் பயிற்சி பெறல்வேண்டும் என்னும் நம்பிக்கை நம்மை அடிமைப்படுத்திவிட்டது. அது நாட்டுக்கு உண்மைத் தொண்டாற்ற நம்மை அருகரல்லாதாராகச் செய்திருக்கிறது. ஆங்கிலப் பயிற்சி நாட்டின் எளிய மக்கள் கூட்டத்தினின்றும் நம்மைப் பிரித்து நிற்கிறது. நாட்டில் ஆங்கிலம் பயின்ற நம்மவர் பெறும் புதுப் புதுக் கருத்துக்கள் எளிய கூட்டத்தார்க்குப் பயன்படாதவாறு சிறைப்பட்டுக் கிடக்கின்றன.'

'தற்போதைய கல்விமுறை குறையுள்ளது. அது, நாட்டுக்கல்வித் தொடர்பின்றி அயல்நாட்டுக் கல்வியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அக்கல்வி மனத்தையும் கையையும் நெகிழவிடுத்துத் தலையில் (மூளையில்) மட்டும் கட்டுப்பட்டு நிற்கிறது. அயல்நாட்டுக் கல்விவாயிலாக உண்மைக் கல்வி பெறலரிது.'

'அயல்நாட்டுக் கல்விமுறை நம் பிள்ளைகளை நமது நாட்டிலேயே அயலவராக்கிவிட்டது. இக்கால முறை பெருங் கொலைத்துன்பமா யிருக்கிறது. அயல்மொழி வாயிலாகக் கல்வி பெறல் நமது நாட்டு மொழி வளர்ச்சியைத் தடைசெய்து நிற்கிறது. கொடுங்கோல் அதிகாரம் என்மாட்டிருப்பின் ஆண் பெண் மாணாக்கர்களை அயல்மொழி வாயிலாகக் கல்வி பெறுவதினின்றும் நிறுத்தி மாறுதல் நிகழ்த்தவேண்டி ஆசிரியன்மாரை விலக்கிவிடுவேன். பாடபுத்தகங்கள் ஆயத்தப்படுத்துமளவுங்கூட நான் பொறுத்திரேன்.'

'திலகரும் ராம் மோஹனரும் ஆங்கில மொழித் தொற்றுவாய்ப் படாதிருப்பரேல், இன்னும் பெரியவரா யிருப்பர். * * * நான் ஆங்கில மொழியை வெறுக்கவில்லை; அதை ஒழிக்க விரும்புகிறேனில்லை; முறையைத் தகர்க்கவே விரும்புகிறேன். ஆங்கிலத்தை இந்தியநாட்டு முறைக்கு

இணங்கப் படியுங்கள். பொதுமக்கள்பால், சைதன்யர், சங்கரர், கபீர், நானக் முதலியோர்க்குள்ள தொடர்பு திலகர், ராம்மோஹனர் முதலியோர்க்கில்லை. அச் சிங்கங்கட்கு முன்னே இவர் எத்தகையினர்? சங்கரர் ஒருவர் செய்த வேலைக்கிணையாக, ஆங்கிலம் பயின்ற முழுவினத்தார் செய்தல் முடியாது. குரு கோவிந்தர் ஆங்கிலம் பயின்றவரா? * * * ராம்மோஹனரும் திலகரும் இக்கல்வி பயிலாது அவர்க்குரிய இயற்கை வழியில் பயிற்சி பெற்றிருப்பரேல், சைதன்யரைப்போலப் பெருவினைகள் ஆற்றியிருப்பர். * * * ஆங்கிலக் கல்வி நமது ஆண்மையை அழித்துவிட்டது; நமது அறிவு ஊற்றைத் தூர்த்துவிட்டது.'

'ஆங்கிலக் கல்வி இல்லையேல் அரசாங்க வேலை பெற முடியாது என்று நஞ் சிறுர் நினைக்கிறுர். சிறுமியர் மணத்தின் பொருட்டு ஆங்கிலம் பயில்கிறுர். ஆங்கிலேயருடனே ஆங்கிலத்தில் பேசவேண்டுமென்று ஆங்கிலம் பயிலப் பெண்மக்கள் விரும்புகிறுர்களென்பது எனக்குத் தெரியும். தம்முடனும் தம் நண்பருடனும் தம் மனைவிமார் ஆங்கிலம் பேச இயலாமை நோக்கி வருத்தமுறும் நாயகன்மாரிருப்பதும் எனக்குத் தெரியும்.'

'கல்வி என்றுல் ஆங்கிலப் படிப்பு என்று சொல்லப் படுகிறது.'

'தாய்மொழிகள் நசுக்கப்படுவது காண என்னுல் பொறுத்தல் முடியவில்லை. தாய் தந்தையர் தம் குழந்தைகட்கும், நாயகன்மார் தம் நாயகிமார்க்கும் கடிதங்கள் தாய்மொழியில் எழுதாது ஆங்கிலத்தில் எழுத எண்ணுவது குறித்து என் மனம் பொறுக்கவில்லை.'

'குழந்தைகட்கு ஆங்கிலக் கல்வி போதிப்பதைக் குறித்து எனக்கும் அன்பர் போலக்குக்கும் பெரும்

பெரும் வாதம் நிகழ்ந்ததுண்டு. குழந்தைமையிலேயே ஆங்கிலத்தில் கருத்துக்களை நினைக்குமாறும், வெளியிடுமாறும் பிள்ளைகளைப் பழக்கும் இந்திய பெற்றோர் குழந்தைகளையும் நாட்டையும் வஞ்சிக்கிறார் என்பது எனது உட்கிடக்கை. அவர் குழந்தைகளை நாட்டு வழக்க ஒழுக்கங்களினின்றும் விலக்கி நாட்டுச் சேவைக்கே அருகரல்லாதவராகச் செய்கிறார். ஆதலால் யான் குழந்தைகளுடன் தாய்மொழியிலேயே பேசுவதெனை உறுதிகொண்டுள்ளேன்.'

இவ்வுரைகளான் காந்தியடிகள் இக்காலக் கல்வி முறைமீது கொண்டுள்ள கருத்தும், நாட்டுக்குரிய இயற்கைக் கல்விமீது கொண்டுள்ள கருத்தும் இனிது புலனாகின்றன. காந்தியடிகள் ஆங்கில மொழியில் புலமை வாய்ந்தவர் என்பது உலகறிந்ததொன்று. மேல்நாட்டில் வதிந்து அந்நாட்டு வழக்க ஒழுக்க நுட்பங்களைச் செவ்வனே உணர்ந்தவர் நம் காந்தியடிகள். அவ்வநுபவம் வாய்ந்த ஒருவர் வாய்மொழி, பின்வருவோர் வாழ்க்கைக்கு உறுதுணை செய்வதாகும். காந்தியடிகட்கு ஆங்கில மொழிமீது எவ்விதக் காழ்ப்புமில்லை என்பதும், அவர் அம்மொழி பயிலலாகாது என்னுங் கொள்கையுடையவரல்லர் என்பதும் மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள அவர் உரைகளான் நனிவிளங்கும்.

இயற்கைக்கேற்றவாறு ஆங்காங்கே மொழிகளும் கல்வித்துறைகளும் அமைந்து கிடக்கின்றன. வாழ்வில் அவற்றை ஏலாது மாறுபட்ட துறைகளில் மனிதன் வீழ்வதால் அவனது இயற்கை வாழ்வு குலைகிறது. ஒருவன் தனக்குரிய நாட்டுக் கல்வியால் அறிவு பெற்று

நிலைத்த நெஞ்சம் உற்ற பின்னர், அறிவு விளக்கத்துக்கு உலகிலுள்ள மொழிகளையெல்லாம் - கல்வித் துறைகளை யெல்லாம் - பயிலலாம். தாயைக் கொன்று பிற மாதரைப் போற்றுதல் கூடாதென்பதே ஈண்டுக் கருதற்பாலது. நம் நாட்டார் நமது நாட்டுக் கலைகளைக் கொலைபுரிந்து பிற நாட்டுக் கலைகளை வளர்ப்பதில் உலகை வென்றவரால்லரோ? இதுபோழ்து நமது நாட்டில் கல்வியாளர் என்று மதிக்கப்படுவோர் பெரிதும் ஆங்கிலம் பயின்றவரேயாவர். அவர் உடல் பாரத நாட்டினதாயினும் அவர் மனம் இங்கிலாந்துக்குச் சுவீகாரம் போயிருக்கிறது. இம் மாறுபட்ட வாழ்க்கையுடைய 'அண்ணல்'களை இந்தியர் என்றழைப்பதா இங்கிலீஷ்காரர் என்றழைப்பதா என்னும் ஐயம் நிகழ்கிறது. இந்நாட்டு மக்கள் நாட்டைக் கொலை செய்வதுபோல் வேறெந்நாட்டினர் தம் நாட்டைக் கொலை செய்கிறார்? கொடுமை! கொடுமை!! ஒரு நாட்டுக் கலை மாதுக்கு உள்ளத்தை அரியாசனமாக்கி, நாட்டுக்கு அரியாசனமளிக்க அதாவது சுயராஜ்யம் பெறப் பேசுதற்கும் எழுதுதற்கும் பொருளுண்டோ? நாட்டுக் கல்வியில் பற்றில்லாத ஒருவன் நாட்டினிடத்து எவ்வாறு பற்றுடையவனாவன்? காந்தியடிகள் வாழ்க்கையில் கண்ட உண்மைகளுள் இஃதொன்று.

*நாட்டுக் கலையும் பிறவும்*

கல்வி கல்வி என்று பல ஆண்டு பயின்று பெரும் பரீட்சைகளில் தேர்ந்து ஒரு பெருந் தொழின்முறையில் நுழையத் துணைசெய்வதுமட்டும் கல்வியாகாது. கல்வி என்பது அறிவினூடே ஒன்றி வாழ்விற் கலப்பதா யிருத்தல்வேண்டும். கல்வி அறிவு ஒழுக்கம் எனவரும் முறைப்பாட்டை நோக்குக. கல்வியறிவின் பயன் ஒழுக்கமாகும்.

*கல்வி அறிவு ஒழுக்கம்*

யன்னூல் பயின்ற ஒருவன் ஒழுக்கமிலனாயின் அவன் கல்வியாளனாகான். நூலே பயிலாது ஒருவன் ஒழுக்க முடையனாயின் அவன் கல்வியாளனாகிறான். நன்றிக்கு வித்து நல்லொழுக்கக் கல்வியேயாகும்.

ஒழுக்கமே ஒரு வடிவுகொண்டு வந்தாலென்ன இலங்கும் நம் பெருமான் மகாத்மா காந்தி, 'நற்குணத்தை நல்காத கல்வியால் ஒரு பயனுமில்லை' என்றும், 'கல்வியின் முழு நோக்கம் சீலத்தைக் குறிக்கொண்டு நிற்பதாயிருத்தல்வேண்டும்' என்றும், 'கற்ற அறிஞர் குண நலத்தை இழப்பாராயின், மற்றெல்லாவற்றையும் இழந்தவராவர்' என்றும், 'வெறும் ஏட்டுக்கல்வி மனிதனது ஒழுக்கநிலையை உயர்த்துவதாகாதென்பதும் - ஒழுக்க வளர்ச்சி அக்கல்வியினின்றுந் தனித்து நிற்பதென்பதும்-எனது வாழ்வில் எனக்கு நன்றாக அறிவுறுத்தியிருக்கின்றன' என்றும் கல்வியை ஒழுக்கத்தோடு இயைபுபடுத்தி ஓதியிருத்தல் காண்க. காந்தியடிகள் தம் அருமைப புதல்வர்க்கும் இலக்கியக் கல்வி பெரிதும் நல்கினரில்லை. அவர்க்கு ஒழுக்கக் கல்வி புகட்டவே அடிகள் முயன்றுவந்தார். காந்தியடிகள் கல்வியைப்பற்றித் தம் புதல்வருள் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில்,

> 'கல்வி என்பதற்கு நான் கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பது. எழுத்திலக்கணம் பயிறல் கல்வியாகாது.'
>
> 'கல்வி என்பதென்னை? பிறர்க்கென வாழ்ந்து தொண்டு செய்வது; அத்தொண்டு குறித்துத் தன்னைப் பாராட்டாதிருப்பது. உனக்கு வயது ஏற ஏற இவ்வுண்மை விளங்கும்.'

'நீ எவ்வகுப்பில் வாசிக்கிறாய் என்று உன்னை நோக்கி எவராயினுங் கேட்டால் நீ நாணமுறவேண்டுவதில்லை. பாபுவின் - தந்தையின் - (காந்தியடிகளை அவர் உறவினர் நண்பர் முதலியோர் பாபு என்றழைப்பது வழக்கம்) வகுப்பில் வாசிக்கிறேன் என்று சொல். இலக்கியப் பயிற்சியைப்பற்றிக் கவலல் வேண்டா'

என்று எழுதியிருத்தல் ஈண்டு நினைவிற்கு வருகிறது.

சிலர் இடையீடின்றி நூற்களைப் பயின்றவண்ணமிருப்பர். ஆனால் அவரது நூற்புலமைக்கும் வாழ்வுக்கும் எவ்விதத் தொடர்பும் நேர்வதில்லை. இவரை இசைப் பெட்டிக்கு ஒப்பிடலாம். வாழ்வுடன் கலந்து வளர்வதே கல்வியாகும். வாழ்வுடன் தொடர்பு பெறாத கல்வி கல்வியாகாது. வெறும் ஏட்டுப் படிப்பு, கல்வி என்னும் பொருளுக்கு உரியதாகாது. 'நான் பள்ளியில் பயின்றபோது பாட நூல்களையல்லாமல் வேறு நூல்களைப் படித்ததில்லை. வாழ்வில் நண்ணியபின்னைப் படிப்பதற்கு நேரங் கிடைப்பதில்லை. ஆதலின், ஏட்டுப் படிப்பு எனக்குக் குறைபாடென்றே சொல்லவேண்டும். இக் குறைபாட்டால் எக்கேடும் எனக்கு விளைந்ததெனத் தெரியவில்லை. குறைந்த ஏட்டுப்படிப்பால் படித்த அளவு ஜீரணித்துக்கொள்ளல் நேர்ந்தது' என்று அடிகள் தமது வரலாற்றில் எழுதியிருக்கிறார். ஆன்மஞானப் பயிற்சியை வலியுறுத்தும்போதெல்லாம் அடிகள் புத்தகப் படிப்பால் ஆன்மஞானங் கைகூடாதென்றும், அதற்கு வாழ்வுப் பயிற்சியே இன்றியமையாததென்றும் வலியுறுத்திப் பேசிய பேச்சுக்கள் பல; எழுதிய எழுத்துக்கள் பல. கல்வியென்றால்

**வாழ்வும் கல்வியும்**

நூல்கள் - கட்டடங்கள் - முதலியனவல்ல என்பது காந்தியடிகள் வாழ்வில் கண்ட ஓர் உண்மையாகும்.

கல்வி என்பது மனிதன் வாழ்வில் ஊடுருவிப் பாய்ந்து அவனது வாழ்க்கைக்கு உறுதுணை செய்வது. வெறும் எழுத்துக்களை நெட்டுருச் செய்வது கல்வியாகாது. அறிவு விளக்கத்துக்கும், உடல் வளத்துக்கும், மற்ற வாழ்வு நலத்துக்கும் கல்வி வேண்டற்பாலதே. அறிவு விளக்கத்துக்கு இயற்கைக் கல்வியும், உடல் வளத்துக்குச் சிலம்பப் பயிற்சியும், வாழ்வு நலத்துக்குத் தொழிற் புலமையும் இன்றியமையாதன. இத்திறக் கல்விமுறைகள் இறந்துபட்டு வருதல் கண்கூடு. காந்தியடிகள், 'பௌதிக சாத்திரங்கள் மாணுக்கர் வாழ்விற்குப் பயன்படாத முறையில் படிப்பிக்கப்படுகின்றன' என்றும், 'வானக்காட்சிவழி அறிவுறுத்தன்மாலைபதாய வானசாத்திரம், புத்தகங்கள்வழி அறிவுறுத்தப்படுகிறது' என்றும், 'பள்ளிக்கூடத்தை விட்டபின்னர் ஒரு துளி தண்ணீரை ஆராய்ந்து பிரிக்கும் ஆற்றல் மாணுக்கர்பால் இல்லை' என்றும், 'நமது நாட்டுச் சிலம்பப் பயிற்சியும் மற்ற மற்போர்க்களங்களும் மறைந்துவிட்டன' என்றும், 'மேல்நாட்டுப் பந்தாட்டங்கள் மகிழ்ச்சி தரக்கூடியனவாயினும், பொருட் செலவில்லா நமது நாட்டு ஆட்டங்களைக் கவலையீனமாக விடலாகாது' என்றும், 'தொழிற் கல்விமுறைகள் தேவை' என்றும் பல இடங்களில் முழங்கியிருக்கிருர்.

இக்காலக் கல்வியில் இசை இடம்பெருதிருப்பதை அடிகள் சில இடங்களில் எடுத்துக்காட்டி வருந்தியிருக்கிருர். இசை, மனிதனை இசைபட வாழச் செய்வதென்றும், இனிய இசை உயிர்க்கினிமை நல்குவதென்றும், பெருங் கூட்டங்களில்

**இசை**

எழுங் குழப்பங்களை விரைவில் அடக்கும் ஆற்றல் இசைக்குண்டென்றும் மகாத்மா சில இடங்களில் விளக்கியுள்ளார். மனிதப் பிறவி தாங்கிய ஒருவன் இசை ஞானியா யிருத்தல்வேண்டும், அல்லது இசையின்பம் நுகர்வோனு யிருத்தல்வேண்டும். இசையை வெறுப்பவன்மாட்டுக் கொலைக்கொடுமை இருக்குமென்று தயங்காது கூறலாம். காந்தியடிகள் இசை நுட்பத்தை உணர்ந்தவர் என்பது அவர் இசையைப்பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்களால் நன்கு தெரிகிறது. காந்தியடிகள் வாழ்க்கையில் இசையும் இனிமை செய்கிறது.

பெண் கல்வி

பெண்மக்களும் ஆண்மக்களைப்போலக் கல்வி பயில வேண்டுவது இன்றியமையாததென்றும், ஆனால் பெண் மக்களின் இயல்புக்கேற்றவழியில் அவர்கட்குக் கல்வி போதித்தல்வேண்டுமென்றும் அடிகள் அருளியிருக்கிறார். இதைக் கூர்ஜரக் கல்வி மகாநாட்டில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். காந்தியடிகள் பெண்கல்வியில் பொறுமை இல்லாதவர் என்பது தெள்ளிதில் விளங்குகிறது.

நமது நாட்டுக்குரிய இயற்கைக் கல்வி என்னும் வான்பயிரை, நாட்டின் இயற்கைக்கு முற்றும் மாறுபட்ட ஒரு போலிக் கல்வி என்னும் வண்டு அரித்து வருதல் காணும் எவர் மனம் உருகாது? அவ்வந்நாட்டுக்குரிய இயற்கை முறைகள் அழிவுபடுதலைக் காக்கவேண்டுவது அறிஞர் கடமையன்றோ? மகாத்மா காந்தி இந்நாட்டுக் கல்வியை இந்நாட்டினதாக்க முயன்றுவருகிறார். எதையுஞ் சொல்லும் ஒருவன் அதன்வழி நடந்து காட்டல்வேண்

டும். காந்தியடிகள் செயலில் கொணரமுடியாத ஒன்றை எப்பொழுதுஞ் சொல்வதில்லை. சொல்வழி எவர் நடப்பினும் நடவாதொழியினும் அடிகள் தாஞ் சொல்லும்வழித் தாம் நடப்பது வழக்கம். காந்தியடிகள் நாட்டின் உரிமை, நாட்டுக்கலை ஞானவளர்ச்சியில் அடங்கியிருக்கிறது என்று உணர்ந்தநாள்தொட்டு, அவர் அக்கலை வளர்ச்சியில் கருத்துக்கொண்டார். அவர் தம் பிள்ளைகளை இக்காலப் போலிப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியதில்லை. தாம் பெற்ற இன்பம் நாட்டவரும் பெற்றுய்யவேண்டி, அப்பெரியார் பொதுவாக நாட்டுக் கல்வியின் ஆக்கத்துக்குப் பலவழியில் உழைத்துவருவதும், சிறப்பாக ஒத்துழையா இயக்கத்தில் உயிர்த் திட்டமாகிய தாங் கோலிய மூன்றனுள் இக்காலப் பள்ளிவிலக்கை ஒன்றாக அமைத்ததும் நேயர்கட்குத் தெரியும். அடிகளின் ஆணைப்படி மாணாக்கர் அனைவரும் பள்ளி விடுத்து ஓராண்டு சத்தியாக்கிரகப் போர்முனையில் நின்று அறப்போர் புரிந்திருப்பாராயின், நாடு உரிமை பெற்றிருக்கும்; அவ்வழியே நாட்டுக் கலைகளும் உயிர்ப்புப் பெற்றிருக்கும்.

அடிகள் முயற்சி

நாட்டிலுள்ள மாணாக்கர்க்கும் பெற்றோர்க்கும் தியாக உணர்வின்மையான், அடிகள் போதனைக்கு நாடு செவிசாய்க்கவில்லை. நாட்டின் கலைகளும் வழக்க ஒழுக்கங்களும் இறந்துபட்டு அவ்விடத்தில் நாட்டின் இயற்கைக்கு மாறுபட்ட கலைகள் குடியேறியபின்னர்ப் பெறும் சுயராஜ்யம் சுயராஜ்யமாகுமோ? 'அச் சுயராஜ்யம் வேண்டா' என்று காந்தியடிகள் அறைந்துள்ளார். நம் நாட்டார்க்கு இன்

கலையும் சுயராஜ்யமும்

னும் உண்மை விளங்கவில்லை. சுயராஜ்யத்தின் உயிர்நாடி ஓடும் இடந்தெரியாது செய்யப்படுங் கிளர்ச்சி பாழுக்கு உழைப்பதாகும். காந்தியடிகள் தம்மீது ஏறிய அயல் நாட்டு அழுக்கைக் கழுவியதுபோல நாட்டையுங் கழுவ முயன்று வருகிறார். இந்தியா என்னும் ஒரு பெரும் நாட்டை, அதற்குரிய கல்விமுறையால் பழைய நிலைக்குக் கொணர, அன்புநெறி நின்று உழைத்து வருவோர் வாழ்க்கையன்றோ வாழ்க்கை?

நாட்டுக் கல்விக்கு ஆக்கந் தேடும் வாய்ப்பைக் காந்தியடிகள் மிக ஆவலுடன் விரைந்து நோக்கி நின்றனர். அவ்வாய்ப்பு ஒரு சிறிது மாகாண சுயஆட்சியிலே அடிகளுக்குக் கிடைத்தது. காங்கரஸ் ஆட்சி நடைபெற்ற மாகாணங்களில் நாட்டுக் கல்வியை வளர்க்க அடிகள் முயற்சியால் 'வார்தா கல்வித் திட்டம்' என்றொன்று கோலப்பட்டது. அத்திட்டம் சிலரால் குறைகூறப்பட்டது. தொடக்கத்திலே திட்டங்களில் குறைபாடுகளிருத்தல் இயல்பு. குறைபாடுகளை நாளடைவில் களைந்து கொள்ளலாம். வார்தா திட்டத்தின் உள்ளக்கிடக்கையையே நோக்குதல்வேண்டும். உள்ளக்கிடக்கை என்னை? நாட்டுக் கல்விக்கும் தொழின்முறைக்கும் ஆக்கந் தேடுவதாகும். அடிகள் முயற்சி ஐரோப்பாவில் தோன்றிய பெரும்போர் காரணமாகத் தடைப்பட்டுக் கிடக்கிறது.

பொது மொழி

'ஆங்கிலம் இந்தியாவிற்குப் பொதுமொழியாயிருக்கிறது. அதை ஏன் தொலைக்க முயலல்வேண்டும்' என்று சிலர் எண்ணுகிறார். ஒரு நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டற்பாலதே. பண்டைக் காலத்தில் ஒருபோது பிராகிருதமும்,

மற்றொருபோது பாலியும், இன்னொருபோது சம்ஸ்கிருதமும் பொது மொழிகளாக இந்தியாவை ஆண்டன. இவை நாட்டுக்குரிய மொழிகள். ஆனால் ஆங்கிலமோ!

நமது நாட்டுக்குரிய இயற்கைக் கல்வி பீடத்தின் மீது ஆங்கில மாதைமட்டுமன்றிப் பிற மாதர்களையும் இருத்தி வழிபடலாம். சாத்தும் மனோமலர் மட்டும் நம்முடையதா யிருத்தல்வேண்டும். ஆதலால், காந்தியடிகள் இந்திய நாட்டில் பெரும்பான்மையோர் பேசும் மொழியாகிய ஹிந்தியைப் பொதுமொழியாக்க முயன்று வருதல் உலகறிந்ததொன்று. ஹிந்தி பொதுமொழியாக வேண்டுமென்று அறிவுறுத்துங் காந்தியடிகள், அவ்வந்நாட்டு மொழிகளைக் குலைத்துவிடுமாறு அறிவுறுத்தவில்லை.

**ஹிந்தியும் மற்ற மொழிகளும்**

அவ்வந்நாட்டு மொழிகளும் வளரவேண்டுமென்பது காந்தியடிகளின் அடிப்படையான கொள்கை. காந்தியடிகள் அறிவுறுத்துஞ் சுதேசியம் இத்தன்மையதே. பொது மொழி எனக் கொள்ளப்படும் ஆங்கிலத்துக்குப் பதிலாக நாட்டின் ஒற்றுமைக்கும் உலகியல் நடைமுறைக்குமே ஹிந்தியைப் பொதுமொழியாகக் கோடல்வேண்டுமென்பது காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை. அவ்வந்நாட்டுக்குரிய மொழிகளைக் கொன்று ஹிந்தியை வளர்க்கவேண்டுமென்று காந்தியடிகள் கூறுகின்றாரில்லை. அந்நிலை நேரின் ஹிந்தி வேண்டாமென்றே அடிகள் சொல்வர்.

நமது தமிழ்நாட்டை எடுத்துக்கொள்வோம். தமிழ் நாட்டின் மொழியாகிய தமிழ் மிகத் தொன்மையது.

தமிழ்

தமிழிலுள்ள திருக்குறள், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவை, பெரிய புராணம், கம்ப ராமாயணம் போன்ற இலக்கியங்கள் வேறு பல மொழிகளில் இல்லையென்றே கூறலாம். மற்ற மொழிகளில் நூல்கள் தொகையில் பெருகியிருக்கலாம். இயற்கைத்தேவி கோயில்கொண்ட நூல்கள் நம் பழந் தமிழ்நூல்கள். இயற்கைவழி மனித வாழ்வைக் காண வேண்டுமானால் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ்மொழி பயிலல்வேண்டும். இயற்கை இனிமையன்றோ நங் கன்னித்தமிழ்? எம்மொழி பொதுமொழியாக வரினும் இவ்வழகிய கன்னியை எவ்வாறு விலக்கல் முடியும்? எவ்வாறு நீக்கல் முடியும்? பொதுமொழியாக ஹிந்தியும், சிறப்பு மொழிகளாக ஆங்காங்குள்ள மொழிகளும் வழங்கப்படல்வேண்டுமென்னுங் கருத்தைக் காந்தியடிகள் கல்வியைப்பற்றிப் பேச நேர்ந்தபோதெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளத் தெளிய வெளியிட்டிருக்கிறார்.

அடிகளுந் தமிழும்

தமிழ் நாட்டில் பிறந்த அடியேன் தமிழ் மொழியில் காந்தியடிகள் வாழ்க்கை நுட்பத்தைச் செப்பப் புகுந்தமையால், காந்தியடிகள் தமிழைப்பற்றியுந் தமிழ்மக்களைப்பற்றியுங் கொண்ட கருத்துக்களை ஈண்டுப் பொறிக்கும்வாயிலாக, தமிழ்மக்களை முன்னிலைப்படுத்திச் சில உரைகள் பகர விழைகிறேன்.

ஆங்கிலம் பயின்ற தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் தமிழ்த்தாயை மாசுபடர்ந்த துச்சிலில் இருத்தி,

அவளுக்கு உணவும் உடையும் அளியாது, அவளை வருத்தி, அயல் மாதை நடுவீட்டில் அமர்த்தி, அம் மாதுக்கு நல்லுணவும் உடையும் தந்து, மலர் சூட்டி, அவளை வழிபடுதல் எவரும் அறிந்தவொன்று. இது நம் மக்களின் அறிவைப் புலப்படுத்துகிறதா? அறியாமையைப் புலப்படுத்துகிறதா? தமிழ்மக்களே! ஓருங்கள்.

தமிழ் வீடுபேறு

தமிழின் தொன்மை என்ன! தமிழ்ப் பாக்களின் வனப்பென்ன! மயிர் சிலிர்க்கிறது. மிகத் தொன்மை வாய்ந்த ஒரு பெருந் தனிமொழியன்றோ நந் தமிழ்? தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவையுணர்ந்த ஒருவன் வீடுபேற்றையுங் காதலியான். அவனுக்கு வீடுபேறு தமிழ்மொழி இன்பமேயாகும். அவன் மீண்டும் மீண்டுந் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவை மாந்தி இன்புறவே விரும்புவன்.

சிறியேன் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டுத் தொண்டுபுரிந்த காலத்தில் 1921-ம் ஆண்டில் நேர்ந்த ஆறு திங்கள் பெருங் குழப்பத்தில் கத்திகளிடையும் குண்டுகளிடையும் நுழைய நேர்ந்தபோதும் எனது உள்ளத்தில் கலித்தொகையும் திருக்கோவையும் இன்முகங் காட்டி மறைவதுண்டு. அத்தகைக் கலித்தொகையும் திருக்கோவையும் வேறு மொழி நூல்களாக இக்காலத் தமிழ் மக்களுக்குத் தோன்றுகின்றன. இக்காலமன்றோ வறுமைக் காலம்?

துன்பத்தில் தமிழ்

காந்தியடிகள் தம் வாணாளில் தமிழ்மக்களின் கூட்டுறவைப் பெறும் பேறும், அவர்களது மொழியைச்

சிறிதுணரும் பெரும்பேறும் பெற்றதை ஈண்டுக் கழிபே ருவகையுடன் குறிக்கிறேன். நம்பெருமான் தமிழில் பெரும் புலவராய்த் தமிழ் இன்பத்தை முற்றும் நுகர்ந்திருப்பரேல் தமிழராகப் பிறக்கத் தவங்கிடப்பர்.

**அடிகள் மீண்டும் பிறந்தால்**

காந்தியடிகள், 'எனக்கு மீண்டும் பிறப் புண்டேல், யான் பஞ்சமனுகப் பிறத்தல் வேண்டும்' என்று கூறியிருக்கிருர். தமிழ்நாட்டுப் பஞ்சமர் பழந்தமிழ்த் தொல்குடியில் சேர்ந்தவர். அக்குடியில் அடிகள் தோன்றவேண்டு மென்பது எனது முறையீடு.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்தபோது பெரிதுந் தமிழ்மக்களிடையே வாழ்வு செலுத்தினர். ஆண்டு நடைபெற்ற பொறுமைப் போரில் முன்னணியில் நின்று உயிர் துறந்தவர் பெரும்பான்மையோர் தமிழ் மக்களேயாவர். பொறுமைப் போரில் வல்லவர் தமிழ் மக்களென்று காந்தியடிகள் பன்முறை பல இடங்களில் பகர்ந்திருக்கிருர். காந்தியடிகள் சொல்வழி நின்று

**தமிழ்மக்கள் தியாகம்**

சிறை நண்ணி, உணவுங் கொள்ளாது, தோல் வற்ற, நரம்பு தளரக், கொழுமை கறையக், குருதி பொங்க, மெலிந்து மெலிந்து, மிடறடைந்து, நாவெழா நிலையிலும் உறுதி பிறழாது, முடிவில் என்புந் தோலுமாய் உயிர் துறந்த நாகப்பனும் வள்ளியம்மையும் யாவர்? நம் அருமைத் தமிழ்மக்க ளல்லரோ! தென்னுப்பிரிக்காவில் தமிழ் மக்கள் தமக்குப் புரிந்த நன்றியைக் காந்தியடிகள் எவ்வழியில் புலப்படுத்தினர்? தமிழ்மக்களே! நோக் குங்கள். காந்தியடிகள் தென்னுப்பிரிக்காச் சிறையநுபவத்

தில் எழுதிய செம்மொழிகளையே ஈண்டெடுத்துக் காட்டு கிறேன்.

'*** இப்போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல வேறெவ்விந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றி யறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயிலவேண்டுமென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழி பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டைநாளிலும் இந்நாளிலுங்கூட பல அறிஞர் இருந்தனர் - இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பானும், பயிற்சியானும் அறியக் கிடக்கிறது. இந்தியாவில் ஓரினம் ஏற்படவேண்டு மானால் சென்னை மாகாணத்துக்கு அப்புறமுள்ளவரும் தமி ழுணரல் வேண்டும்.'

ஒரு திங்கள் தமிழ்ப் பயிற்சி காந்தியடிகளை இவ் வாறு கவர்ந்ததெனில், முழுப் பயிற்சி அவரை என் செய்யும் ? சபர்மதியினின்றும் அவரைத் தூரத்தித் தாமிரபரணியிலன்றோ கொணர்ந்து சேர்க்கும் ? தமிழ் மக்களைப்பற்றி அவர் சொல்லும்போது,

**காந்தியடிகளின் தமிழ்த் தோற்றம்**

'தமிழ்மக்கள் எனது இரத்தக் கலப் புற்ற உடன்பிறந்தவர்போலத் தோன்று கிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார். அவர் கூர்ஜரத்தில் பிறந்த ஒருவராயினும், அவரது வடிவ அமைப்புத் தமிழ்மகன் வடிவம்போல் தோன்றுத லும் உன்னத்தக்கது.

கோஹத்தில் நடைபெற்ற ஹிந்து - முஸ்லிம் குழப்பங் கேட்டு, இருபத்தொருநாள் உண்ணு நோன்பு

அடிகளும் தமிழும்

அடிகள் ஏற்றபோது, 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்னுந் தமிழ்நாட்டுப் பழமொழியே அவருள்ளத்துற்று, அது பற்றிய கட்டுரையும் 'யங் இந்தியா' வில் எழுதுவித்தது. 'பிறப்புண்டேல் இறப்புண்டு' என்னும் பழமொழியிலும் அடிகட்குப் பெரும் பற்றுண்டாம்.

காந்தியடிகள் கதர்நிதி திரட்டுதற்கெனத் தமிழ்நாடு போந்தபோது அவர்க்குப் பல இடங்களில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தூத்துக்குடியில் அளிக்கப்பெற்ற வரவேற்பறிக்கை (12-10-27) அடிகளைத் தமிழ்மொழி மீதும் திருக்குறள் மீதும் கருத்துச் செலுத்துமாறு தூண்டிற்று. அவ்வறிக்கைக்கு அடிகள் இறுத்த விடையின் சுருக்கம் வருமாறு :—

'தமிழ்மொழிப் பயிற்சியைபபற்றி யான் ஒன்றுங் கூறுவதில்லையென்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என்மீது அபபழி சுமத்த ஒருப்படமாட்டார். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர்த் தமிழ்மொழி பயிலல் வேண்டுமென்று யான் பன்முறை பகர்ந்திருக்கிறேன. 1915-ம் ஆண்டிலேயே ஆங்கிலத்தினும் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டிக்கொண்டேன். இற்றைக்குப் பத்தாண்டுக்கு முன்னர் இந்தியா முழுவதுஞ் சுற்றிச் சுற்றி அயல்மொழி வாயிலாகப் பிள்ளைகட்குக் கல்வி புகட்டலாகாதென்று கிளர்ச்சி செய்தேன்; தாய் மொழியில் பேசுமாறும், தாய்மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்கட்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன். திருக்குறளைப்பற்றிச் சில செம்மொழிகள் உங்கள

வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல்வேண்டுமென்று என்னுள்ளத்தெழுந்த அவாவேயாகும். தமிழ் மொழியில் புலமை பெறுதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினானில்லை. அதுகுறித்து யான் உறும் வருத்தத்துக்கோர் அளவில்லை. அவரவர் அவரவர்க்குரிய தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறல்வேண்டும். தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயிலவேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட முதன்மையாகக் கருதல்வேண்டும். தமிழ்நாட்டில் ஓரிடத்தில் எனக்கு ஆங்கிலத்தில் வரவேற்பறிக்கை வழங்கப்பட்டது. அதை உடனே யான் மறுத்துரைத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். என் மனோநிலையை உணராது அடாதபழியை இனி என்மீது சுமத்தமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.'

இன்னோரன்ன குறிப்புக்கள் பலவற்றை நோக்குழி, 'அடிகட்கு மீண்டும் பிறப்புண்டேல் அவர் தமிழ்நாட்டில் பிறப்பர்' என்னும் உறுதி எனக்கு உறுகிறது. ஆண்டவனே! காந்தியடிகளைத் தமிழ்நாட்டில் பிறக்குமாறு செய்து, அவரைத் தமிழராக்கி, அவர் வாயிலாக எனது அருமைக் கன்னிமொழியை வளர்க்கத் திருவருள் செய்க.

காங்கரஸ் ஆட்சியிலே ஹிந்தியைப் பொதுமொழியாக்கும் முயற்சி விரைந்தெழுந்தது. ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொருவித முறை கொள்ளப்பட்டது. நம் மாகாணத்தில் முதல் மூன்று பாரம்வரை ஹிந்தி கட்டாய

பாடமாகச் செய்யப்பட்டது. அதுபற்றித் தமிழ்நாட்டில் பெருங் கிளர்ச்சி எழுந்தது. ஹிந்தி விருப்பப் பாடமாக்கப்படல் வேண்டு மென்பதும், கட்டாய பாடமாக்கப்படலாகா தென்பதும் கிளர்ச்சிக்காரர் வேண்டுதல். அவ்வேண்டுதலுக்குக் காங்கரஸ் மந்திரிசபை செவிசாய்க்கவில்லை. கிளர்ச்சிக்காரருள் ஏறக்குறைய ஆயிரம்பேர் சிறைக்கனுப்பப்பட்டனர்.

ஹிந்தியைப் பற்றிய கிளர்ச்சி

ஹிந்தி பொதுமொழி என்றதும், முஸ்லிம்கள் உருது பொதுமொழி என்று கிளம்பினர். ஹிந்து - முஸ்லிம் வேற்றுமை பொதுமொழியிலும் நுழைந்து கொண்டது.

ஹிந்தி பொதுமொழி என்று பேசப்பட்டபோது, அதுகுறித்து எவ்விதக் கிளர்ச்சியும் எழவே இல்லை. காங்கரஸ் ஆட்சியில் ஹிந்தியைப் பொது மொழியாக்கும் முயற்சி அரும்பியபோதே அதற்கு மாறுபட்ட கிளர்ச்சி எழுநதது. இனி, இந்தியாவின் பொது மொழி எது ஆகும் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலவில்லை. இந்திய இயற்கை எதை ஏற்கிறதோ அதாகும்.

காந்தியடிகள் நெஞ்சம் செம்மையறத்தில் படிந் திருப்பதால் அவர் எம்மொழியினிடத்துங் காய்தல் உவத்தல் கொள்ளாத வாழ்வில் வளர்ந்து மகாத்மாவாக விளங்குகிறார். அவ்வந்நாட்டுத் தாய்மொழி வாயிலாக முதல் முதல் அவ்வந்நாட்டார் கல்வி பெறல்வேண்டுமென் பதும், பின்னை ஓய்வும் வாய்ப்புங் கிடைக்குமேல் மற்ற மொழிகளைப் பயிலலாமென்பதும் காந்தியடிகளின் கொள்கை.

காந்தியடிகள் கூர்ஜரத்தார். அவரது தாய்மொழி கூர்ஜரம். அவருக்கு ஆங்கிலமும் தெரியும்; ஹிந்தியும் தெரியும். அடிகள் நல்ல ஆங்கிலம் எழுதுகிறாரென்று ஆங்கிலத்தாராலேயே வியக்கப்படுகிறது. ஹிந்தி, இந்தியப் பொதுமொழியாதல் வேண்டுமென்ற முயற்சி அடிகளாலேயே தொடங்கப்பட்டது. அத்தகைய ஒருவர் தமது வரலாற்றை எம்மொழியில் எழுதினர்? ஆங்கிலத்திலா? ஹிந்தியிலா? அவர் தமது வரலாற்றைத் தமது தாய்மொழியாகிய கூர்ஜரத்திலேயே எழுதினர். அது பின்னே மகாதேவ தேசாயால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இஃது உணர்த்துவதென்னை? தாய்மொழியின் பற்றையும் இன்றியமையாமையையும் உணர்த்துகிறது. காந்தியடிகளின் தாய்மொழிப் பற்றை உணர்த்துதற்குரிய சான்றுகள் இன்னும் சில உண்டு.

ஞானக் கல்வி

காந்தியடிகள் பலதிறப் பள்ளியில் பயின்றார்; சான்றோர் நூல்களைப் பயின்றார்; இல்வாழ்க்கையைப் பயின்றார்; இயற்கையைப் பயின்றார். இப்பயிற்சிகளால் அவர்க்கு ஆத்ம ஞானக் கல்வி விளங்கியது. பலவிதக் கல்வியின் பயன் இதுவே.

கல்வியை இரு கூறாகப் பிரிக்கலாம். ஒரு கூறு சடத்தைப் பற்றியது. மற்றொரு கூறு சித்தை (அறிவை)ப் பற்றியது. முன்னையது தேகாத்ம வாதக் கல்வி; பின்னையது ஆத்மஞானக் கல்வி. இரண்டுக்குமுள்ள வேற்றுமை என்னை?

தேகாத்ம வாதக் கல்வி உயிர்களுள் பிரிவை உணர்த்துவது; ஆத்ம ஞானக் கல்வி பிரிவைப் போக்கி ஒருமையைத் தெளிவுசெய்வது. இவ்வொருமை காந்தியடி

கள் வாழ்க்கையில் நன்கு விளங்கியது. எவ்வுயிரையுந் தமது உயிர்போல் கருதி அடிகள் தொண்டாற்றி வருதலை அறியாதாரில்லை. அடிகளின் ஞான மொழிகளில் சிலவற்றை ஈண்டுப் பொறித்தல் போதும்.

'நாம் அனைவரும் ஒருயிர்'

'எந்தக் கெட்ட உயிரிலிருந்தும் என்னைத் தனியே பிரித்தல் இயலாது'

'மனிதன் எல்லா உயிர்களிலுங் கலந்தவன்'

'எங்கும் நீக்கமற நிறைந்துள்ள மெய்ப்பொருளை ஒருவன காண விரும்புகிறான். அவன் என்செய்தல் வேண்டும்? படைப்பில் அமைந்த மிக இழிந்ததையும அவன் தன்னைப போல் நேசித்தல்வேண்டும்? இந்நேசம் எதினின்றும் அவ் வொருவனை ஒதுங்கிநிற்க விடாது.

'கடவுள் தொண்டு எது? உயிர்கட்குச் செய்யுந் தொண்டே. தொண்டாவது தூய அன்பு.'

'அன்பே கடவுள்'

'கடவுள் ஒரு பெரிய ஜனநாயகத் தத்துவர். அவரை யொத்த ஜனநாயகத் தத்துவரை இதுகாறும் உலகங் கண்டதில்லை.'

'உயிரெல்லாம் சகோதரம். இது சத்தியாக்கிரக ஈடுபாட்டால் நன்கு விளங்கும். ஆதலின், சத்தியாக்கிரகத்தில் மனித இனமே ஈடுபடுதல்வேண்டும்'

இச் செம்மொழிகளை உற்றுநோக்குக; நோக்கினால் ஆத்மஞானக் கல்வியின் நுட்பம் இனிது விளங்கும்.

ஆத்மஞானக் கல்விக்குத் தேகாத்ம வாதக் கல்வி தேவையே. தேகாத்ம வாதக் கல்வியுடன் நின்றுவிடுதல் தவறு. இக்கல்வியுடன் நிற்பவர் வாழ்வு பிரிவு பிணக்குக்கு இரையாகித் தொல்லையுறும். இத்தொல்லை

ஆத்மஞானக் கல்வியால் விளையாது. தேகாத்ம வாதக் கல்வியின் பிரிவு உணர்வு, ஆத்மஞானக் கல்வியின் ஒருமை உணர்வால் தொலைந்து விளைத்தல் அரிது. ஒருமையினின்று பன்மை விரிதலும், பன்மை ஒருமையில் ஒடுங்குதலும் ஆத்மஞானக் கலைஞர்க்குப் புலனாகும்.

ஆத்மஞானக் கல்வி எத்தனையோவிதப் பெயர்களால் வழங்கப்பட்டது. அவ்வக்கால நிலைமைக் கேற்றவாறு ஒவ்வொருவிதப் பெயரை அக்கல்வி பெறலாயிற்று. இந்நாளில் அதைச் சத்தியாக்கிரகம் என்று காந்தியடிகள் கழறுகிறார். காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் உயிர்களெல்லாஞ் சகோதரம் என்னும் ஆத்ம ஞானக் கலை என்று சொல்லலாம். அக்கலைக்குரிய கழகம் காந்தியடிகள் என்று கொள்ளலாம்.

கல்வியைப்பற்றி அடிகளது வாழ்க்கையில் அறியக் கிடப்பன :—அவ்வந்நாட்டு இயற்கைக் கேற்றவாறு ஏற்பட்ட அவ்வம்மொழி அவ்வந்நாட்டில் வழங்கல் வேண்டுமென்பதும், ஒரு நாட்டார் இன்னொரு நாட்டுக் கலைகள் அழியும் முறையில் ஆட்சி புரிதலாகாதென்பதும், அவ்வாறு புரிய நேருமிடங்களில் அவ்வாட்சி முறையை மாற்ற முயலல் வேண்டுமென்பதும, வெறும பாடங்களைப் படிப்பது வாழ்க்கைக்குரிய கல்வியாகாதென்பதும், வாழ்க்கைக்குரிய முறையில் இயற்கைக் கல்வி பயிலல் வேண்டுமென்பதும், உலகே பெருநூல் என்பதும், அந்நூலைப் பயின்று எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யா நல்லறத்தை அதாவது கொல்லா அறத்தைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டுமென்பதும், எல்லா உயிர்களையும் சகோதரமெனக் கொண்டொழுகல் ஆத்மஞானக் கல்வி என்பதும, அதை அடைவது மனித வாழ்க்கையின் நோக்கமென்பதும் பிறவுமாம்.

இவ்வுண்மைகளாம் விதையும் மண்ணும் புனலும் காற்றும் ஒளியும் சேர்ந்து வளர்ந்த ஜீவவிருட்சம் நம் காந்தியடிகள். அவரது வாழ்க்கை, பெருங்கல்விக் கழகம். அதன்கண் மனித வாழ்க்கைக்கு வேண்டப் படும் பொருள்களைக் காணலாம்.

## ச. பெற்றோர்ப் பேணல்

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் - நற்றாள் தொழாஅ ரெனின்' என்றார் திருவள்ளுவனார். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பது அம் மறைமொழியின் கருத்து. கடவுளோ மாற்ற மனங் கடந்து நிற்பவர்; மண் புனல் தீ வளி ஒளி திங்கள் ஞாயிறு உயிர் என்னும் எட்டு மூர்த்தியாய் யாண்டும் நீக்கமற நிற்பவர். இவரை எப்படித் தொழுவது?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

முதல் முதல் காணுங் கடவுளராகக் காட்சியளிப்பவர் நம்மை ஈன்ற தாய் தந்தையர். அவர் வழியே பின்னை முயற்சியால் யாண்டுமுள்ள இறைவனை வழிபடுதல் கூடும். இக்கருத்துப் பற்றியே சான்றோர் 'தந்தை தாய்ப்பேண்' என்றும், 'தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வேறில்லை' என்றும் கூறிப்போந்தனர்.

தாய் தந்தை என்னும் இருவருள் தாயே சிறந்தவள். 'ஈன்றாளி லென்ன கடவுளு மில்' என்றார் ஒரு பெரியார். இவ்வுலகில் தாயன்புக்கு, ஒப்பாகவாதல்

தாய்

உயர்வாகவாதல் பிறிதொருவர் அன்பிருக்குங்கொல்! கடவுள் அன்பிற்கு அடுத்தபடியில் நிற்பது தாயன்பே. 'தாயினும் நல்ல

சங்கரன்', 'தாயிற் பெரிய தயாவுடைய தம்பெருமான்', 'பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ' என வரூஉந் தமிழ்மறை மொழிகளைக் காண்க.

'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்பது பழமொழி. காந்தியடிகளின் இளமை வாழ்வு பின்னை அவரது பெருவாழ்விற்குக் கால் கொண்டது. காந்தியடிகள் தம்மை ஈன்ற அன்னையாரைத் தெய்வமாகவும், அவர் மொழியை மறை மொழியாகவும் போற்றி வந்தார். தமக்குத் தவறு என்று தோன்றும் ஒன்று தாயார்க்கு அவ்வாறு தோன்ரு தொழியினும், அடிகள் தாய்மைச் சொல்வழி நிற்கவே ஒருப்படுதல் வழக்கம்.

காந்தியடிகள் பிறந்த குடியுங் குலமும் பழைய கண்மூடி வழக்க ஒழுக்கங்களெல்லாந் திரண்டு உருண்ட ஒரு கூட்டம். அக் கூட்டத்தார் தீண்டாமையைத் தெய்வம் போலக் கொள்பவர். அவரிடைத் தீண்டாமை ஒழிக்கப் போந்த தோன்றல் தோன்றினர். தீண்டாமை பாவம் என்னும் உணர்வு இளமையிலேயே காந்தியடிகள் உள்ளத்தில் இயல்பாகவே அரும்பி இருந்தது. அவர் தமது வீட்டுத் தோட்டி யுகன் என்பவனைத் தொடுதல் பாவமாகாது என்று தம்மை ஈன்ற தெய்வத்தோடு வாதஞ் செய்வாராம். ஆனல் அவர் தாயார் விருப்பத்துக்கு மாறுபட்டு நடந்ததில்லை. 'நான் தீண்டாதாரைத் தீண்டுதலுண்டு. அதை நான் தாய் தந்தையர்க்கு மறைத்துப் பேசுவதில்லை. அத்தீட்டைப் போக்குதற்குச் சுருங்கிய வழி ஒரு முஸ்லிமைத் தொடுவது என்று என் அன்னையார் சொல்வார். அன்னையார்

**தீண்டாமையும் அன்னையாரும்**

மாட்டு எனக்குள்ள அன்பு காரணமாக யான் அவ்வாறு செய்வது வழக்கம். ஆனால் அதை ஒரு சமயக் கடனாக் கொண்டு யான் செய்தேனில்லை' என்று காந்தியடிகளே மொழிந்திருத்தல் காண்க. இஃது அவரது இளமையில் - சத்தியாக்கிரக உணர்வே அரும்பாத காலத்தில் - நிகழ்ந்தது. அன்னையாருள்ளம் புண்படும் வழியில் அடிகள் நடந்ததில்லை. காந்தியடிகள் ஈன்றார் சொல்லுக்கு என்றும் எங்கும் கட்டுப்பட்டு நடந்து வந்தார் என்பதை வலியுறுத்த அவரது வாழ்வில் நேர்ந்த சில நிகழ்ச்சிகளை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

**புலாலும் அன்னையாரும்**

காந்தியடிகள் குலம் புலால் உண்ணாத பெருமை வாய்ந்தது. அடிகட்குப் புலால் சுவை தெரியாது. ஒரு தீய நண்பன் 'புலால் உணவு கொள்வதால் வெள்ளைக்காரர் பருத்து உயர்ந்து திடமாக இருக்கிறார். அத்திடங்கொண்டு அவர் நமது நாட்டையும் பற்றி ஆள்கிறார். அவரைத் துரத்திச் சுயராஜ்யம் பெறவேண்டுமானால் அவரைப் போலப் புலால் உணவு உண்டு கொழுத்தல் வேண்டும்' என்று நாளடைவில் அடிகட்கு அறிவுறுத்தி அவரை மயக்கிப் புலால் உண்ணுமாறு செய்தான். காந்தியடிகளும், 'சுவை கருதிப் புலால் உண்டேனில்லை; சுயராஜ்யங் கருதி உண்டேன்' என்று எழுதியிருக்கிறார். மாலை வேளையில் சிறுவர்களோடு சேர்ந்து புலால் உணவை விலாப்புடைக்கக்கொள்ளுதலால் வீட்டில் அடிகள் அடிக்கடி இரவு உணவைக் கொள்ளாதொழிந்தார். அவ்வப்போது அவர் அன்னையார், 'ஏன் சாப்பாடு வேண்டாம் என்று மறுக்கிறாய்' என்று கேட்

பார். அதற்கு நம் ஐயர் 'அம்மணி! பசியில்லை' என்று உரைப்பாராம். இப்பொய்யுரை அடிக்கடி அடிகள் மனத்தைக் கொந்திக் கொந்திக்கொன்றது. 'அந்தோ! பொல்லாப் புலால் உணவு என்றூர்மாட்டும் பொய்கூறத் தூண்டுகிறதே. என் செய்வது' என்று அன்னையார்பால் பொய் கூற மனமெழாது புலால் உண்பதை நம் மெய்யர் நிறுத்திவிட்டனர். 'புலாலை வேறு காரணம் பற்றி விட்டேனில்லை. அன்னையார்பால் பொய்யுரைக்க மனமெழாது கண்டு அதை விடுத்தேன்' என்று காந்தியடிகள் தமது வரலாற்றில் வரைந்திருக்கிறார். ஈன்றூரிடம் பொய் கூறலாகாது என்னும் உறுதி காந்தியடிகட்கு இளமையிலேயே ஏற்பட்டது.

காந்தியடிகள் நுழைவுத் தேர்வில் அதாவது பிரவேச பரீட்சையில் தேறிக் கல்லூரியிற் சேர்ந்து, எப். ஏ. வகுப்பில் பயின்று வந்தபோது, அவருடைய தந்தையாரின் நண்பர் ஜோஷி என்னும் பார்ப்பனர் தூண்டுதலால் இங்கிலாந்து சென்று சட்ட நிபுணராதல் (Barrister) வேண்டும் என்னும் அவா அவருக்கு எழுந்தது அடிகள் தமது விருப்பத்தை அன்னையார்க்குத் தெரிவித்தனர். அம்மையார் இடிகேட்ட பாம்பாயினர். அருமைப் புதல்வரை இங்கிலாந்துக்கு அனுப்ப அம்மையார்க்கு மனமெழவில்லை. புதல்வர் நெஞ்சமோ இங்கிலாந்திலேயே படிந்து கிடக்கிறது. அதையும் அம்மையார் உணர்கிறார். என் செய்வார்! அவர் இங்கிலாந்து சென்று திரும்பிய இந்திய மக்கள் நிலையைத் தெரிந்துகொள்ள முயன்றார்; இங்கி

**இங்கிலாந்தும் அன்னையாரும்**

லாந்து நோக்கிச் செல்லும் இந்தியர் ஒழுக்க ஈனராய், புலால் உண்பவராய், குடியராய்த் திரும்புகிறார் என்று சிலர் வாயிலாகக் கேள்வியுற்றார். காந்தியடிகட்கு இங்கிலாந்து நினைவெழும்போதெல்லாம், அம்மையார் இம்முக் குற்றங்களைக் குறிப்பிட்டு, 'இவைகட்கு என் சொல்கிறாய்' என்று கேட்பார். அதற்கு அடிகள், 'என்னை நம்பமாட்டீரா? உம்மிடம் யான் பொய் பகர்ந்து உம்மை ஏமாற்றுவேனோ? அம்முக்குற்றங்கட்கு யான் உட்படுவதில்லை என்று சத்தியஞ்செய்து கொடுக்கிறேன்' என்பார். 'மைந்தனே! உன்பால் நம்பிக்கையுண்டு. இங்கிலாந்து மிகச் சேய்மையிலிருப்பது. அச்சேய்மை நாட்டில் உன்னை எங்ஙனம் தனியே விடுவேன்' என்று அன்னையார் அலமருவார். ஒருநாள் அம்மையார், 'எதற்கும் பேசார்ஜி சுவாமிகளைக் கேட்டு வருகிறேன்' என்று அவ்வடிகள்பால் ஏகி உள்ள நிலையைத் தெரிவித்தார். பேசார்ஜி சுவாமிகள் ஒரு சமணத்துறவோர்; காந்தியடிகள் குடும்பத்துக்கு வேண்டியவர். அவ்வறவோர், 'பிள்ளையினிடம் மூன்றற்கும் உறுதிமொழி வாங்கிக்கொள்கிறேன். பின்னை பையனை இங்கிலாந்து செல்லவிடலாம்' என்று அம்மையார்க்குத் தேர்தல் கூறிக் காந்தியடிகளை அழைத்து உறுதிமொழி வாங்குங் கடனாற்றினார். காந்தியடிகள், 'குடி - புலால் - மாதர் என்னும் மூன்று மயக்கத்துக்கும் ஆளாவதில்லை' என்று சூளுரை வழங்கி, அன்னையார்பால் விடைபெற்று இங்கிலாந்து நோக்கினார்.

இங்கிலாந்து செலவும், பாரிஸ்டர் பட்டமும் இளமைக் காந்திக்கு எத்தகைய அவாவை எழுப்பியிருக்

கும்- அவரை எவ்வாறு மயக்கியிருக்கும் - என்று சொல்லால் சொல்ல வேண்டுவதில்லை. இளமையை, அவ்வவா எவ்வாறு முடுக்கி யிருக்குமென்பதையும், அம்மயக்கம் எவ்வண்ணம் நெருக்கி யிருக்குமென்பதையும் அன்பர்கள் நெஞ்சில் நினைந்து நினைந்து பார்ப்பார்களாக. அவா மயக்குகளை அடக்கல் - அதினும் இளமையில் அவற்றை அடக்கி அறிவு வழி நிற்றல் - எத்துணை அருமை! நம் காந்தியடிகள் இளமையிலேயே அவ்வருமையை எளிமையாக்கிக் கொண்டார். பேரவாவும், பேய் மயக்கமும் அடிகளை என்ன செய்தன? அவை அடிகளை விழுங்கி இரையாக்கினவோ? இல்லை. அவற்றால் விழுங்கப்பெற்ற வேளையிலும், நிலைமையிலும் அடிகள் அன்னையாரை அவமதித்தாரில்லை; புலி பேயெனக் கருதினாரில்லை; கருதி வரம்பு கடந்து ஓடினாரில்லை; அடிகள் அன்னையாரின் அகங்குளிரும் வழிகண்ட பின்னரே தங்கருத்து வழி நிற்கலாயினார். அஃதன்றோ இளமைக்கு அழகு? அடிகளின் தாயன்பை உன்னி உன்னி உலகம் திருந்துவதாக.

இங்கிலாந்தைப்பற்றி அம்மையார் கொண்டிருந்த எண்ணம் என்னை! இந்தியாவினின்றுஞ் செல்லுவோர்க்கு இங்கிலாந்து 'மூன்று தீட்சை' செய்துவிடும் என்ற அச்சம் அம்மையார்க்கு உண்டுபோலும்! அம்மையார் குறிப்பிட்ட மூன்றும் மக்களையும் மாக்களாக்கி விடுவன அல்லவோ? அத்தகைய இந்தியத் தாய்மார் இப்பொழுது எத்துணைபேர் இருக்கின்றனர்? பிள்ளையினும், பிள்ளையின் புகழினும், பிள்ளையின் ஒழுக்கத்தையே அம்மையார் பெரிதுங் கருதினார்.

காந்தியடிகள் தாயாருக்கு அளித்த உறுதிமொழிக்கு ஊறு விளைக்கக்கூடிய நிகழ்ச்சிகள் இடை இடையே உற்றன; உற்றும் அடிகள் அவற்றை ஆண்டகைமையோடு எதிர்த்தே வென்றார். இங்கிலாந்து செலவின் போதும், இங்கிலாந்திலும் உற்ற நிகழ்ச்சிகள் சில வருமாறு:

இங்கிலாந்து வழியிடையில் கப்பலில் நண்பராகிய ஓர் ஆங்கிலேயர் காந்தியடிகட்குப் புலால் உணவு மீதுள்ள வெறுப்புக் கண்டு, கப்பல் செங்கடலை உழுது சென்றபோது, 'ஐயா! இதுவரை போய்விட்டது. இனி பிஸ்கே குடாக் கடலில் உமது உறுதியை மாற்றிக் கொள்ளல்வேண்டும். இங்கிலாந்து குளிர்செறிந்த நாடு. ஆண்டுப் புலால் உணவின்றி வாழ்தல் இயலாது' என்று சொன்னார். அது கேட்ட காந்தியடிகள், 'ஊன் உணவின்றியும் அங்கு வாழ்தல் கூடும் என்று கேள்வியுற்றிருக்கிறேன்!' என்றார். 'ஓ! அவையெல்லாம் வெறும் பேச்சு. எனக்குத் தெரிந்தவரை புலால் உண்ணாதவர் ஆண்டு ஒருவருமிலர். நான் குடித்தாலும் உம்மைக் குடிக்குமாறு கேட்கிறேனா? நீர் ஊன் உண்டே தீரல்வேண்டும். இல்லையேல் இங்கிலாந்தில் வாழ்தல் முடியாது' என்று அந்நண்பர் அறைந்தார். அவ்வுரைகள் காந்தியடிகள் நிலையைக் குலைக்கவில்லை. அடிகட்குத் தாயார் நினைவு தோன்றிற்று. அடிகள், நண்பரை நோக்கி, 'உமது அன்பிற்கு நன்றி கூறுகிறேன். புலால் உண்பதில்லை என்று என்னை ஈன்ற தாயாருக்குச் சூளுரை வழங்கி வந்திருக்கிறேன். ஆதலால், புலால் உணவை நெஞ்சி

ஊன் சோதனை

லும் நினையேன். இங்கிலாந்து எனக்குப் பிடியாவிடின், யான் இந்தியாவிற்குத் திரும்பி விடுவேன்' என்று மறுத்துரைத்து உறுதியிலேயே நின்றார்.

இங்கிலாந்தில் காந்தியடிகள் டாக்டர் மேத்தாவுடன் தங்கியிருந்தபோது அவர் அடிக்கடி புலால் உண்ணுமாறு அடிகளை வலியுறுத்துவர். அடிகள் ஒவ்வொரு போதும் அன்னையார் முன்னிலையில் அளித்த உறுதிமொழியை எடுத்துரைப்பர். ஒருநாள் அந்த டாக்டர், அடிகள் உணவின்பொருட்டு அடைந்துவந்த துன்பங் கண்டிரங்கி, அடிகளை நோக்கி, 'நீர் என் தம்பியாயிருப்பின்; உம்மை இந்தியாவிற்கு உடனே ஓட்டிவிடுவேன். எழுத்து வாசனை அறியா மூடத்தாய்முன் கூறிய உறுதிமொழிக்கு ஏதாயினும் மதிப்புண்டா? அஃது இந்நாட்டு நிலை தெரியாக் காலத்தில் வழங்கப்பட்டது. அது சூள் ஆகவே ஆகாது. சட்டப்படி அது சூள் அன்று. அவ்வுறுதி மொழியைக் கட்டி அழுவது மூட நம்பிக்கையாகும். பிடிவாதம் உமக்கு நலன் செய்யாது. முன்னே புலால் உண்டதாகவும், அஃது உமக்குச் சுவைத்ததாகவுஞ் சொல்கிறீர். அநாவசியமான இடத்தில் அதை உண்டீர். அவசியமான இடத்தில் அதை மறுக்கிறீர்' என்று அடிக்கடி பகர்ந்து அடிகளின் உறுதியைக் கலைக்க முயன்றனர். அவர் சில நூல்களையும் படித்துக் காட்டினர். எதுவும் காந்தியடிகளை அசைக்கவில்லை. ஒருநாள் அடிகள் நண்பரைப் பார்த்து, 'நண்பரே! தங்கள் அன்பை நன்கு உணர்கிறேன்; இந்நாட்டில் ஊன் உண்ணலின் இன்றியமையாமையையும் உணர்கிறேன். உணவின் பொருட்டு உறுதியை

உடைத்தல் இயலாது. அது குறித்துத் தங்களுடன் வாதப்போர் நிகழ்த்தவும் விருப்பமில்லை. வாதப்போரில் தங்களை வெல்ல முடியாதென்பதை அறிவேன். மூடன் அல்லது பிடிவாதி என்று என்னை விட்டுவிடுங்கள். என்பால் கொண்டுள்ள அன்பு குறித்துத் தங்களைப் பாராட்டுகிறேன். தாங்கள் எனது நலன் கருதும் நண்பர் என்பதும் எனக்குத் தெரியும். தாங்கள் மீண்டும் மீண்டும் புலால் உணவை வலியுறுத்துவது என் பொருட்டே என்பதை நான் உணராமலில்லை. ஆயினும், யான் என் செய்வேன்! சூள் சூளே! அதைத் தகர்த்தல் இயலாது' என்று பகர்ந்தார். நண்பர் வியப்புற்றார். அன்று முதல் அவர் அடிகள்பால் புலால் உணவைப் பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொண்டார். அடிகட்கு அந்நாளிலேயே உண்மையில் எத்துணை உறுதி நிலைத்திருந்தது என்பதை அன்பர்கள் நோக்குவார்களாக.

ஒருநாள் அந்நண்பர் அடிகளைக் கூத்துக்கழைத்தார். அடிகளும் உடன்பட்டார். அன்று 'ஹால்பார்ன்' உணவுச் சாலையில் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருவரும் சாலைக்குள் நுழைந்தனர். அங்கே முதல் முதல் குழம்பு படைக்கப்பட்டது. குழம்பில் புலால் கலப்புண்டா இல்லையா என்னும் ஐயம் அடிகட்குப் பிறந்துவிட்டது. அடிகள் ஏற இறங்கப் பார்த்தார்; நண்பரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள அஞ்சினார்; படைத்தவனை மட்டும் அழைத்தார். அதைக் கண்ட நண்பர், 'என்ன' என்று சீறினார். 'ஒன்றுமில்லை. குழம்பில் புலால் கலப்புண்டா இல்லையா என்று தெரிந்து கொள்ள இவரை அழைத்தேன்' என்று அடிகள் அச்

சத்துடன் சொன்னார். நண்பர் வெகுண்டு, ' இங்கே சில ஒழுங்குமுறைகள் உண்டு. காட்டு மிராண்டிபோல் விழிக்கிறீர். நாகரிகக் கூட்டத்துக்கு நீர் உரியவரல்லர். முறைப்படி நடந்துகொள்ளத் தெரியாவிடின் வெளியே போய் வேறு சாலையில் உணவருந்தும் ' என்று சொல்லம்பு விடுத்து உறுத்தார். ஆண்டிருந்த மற்றவர் கண்ணோட்டமும் காந்தியடிகள்மீது பாய்ந்தது. எந்நிலையில் அடிகள் நின்றார் ? நண்பருக்கு நடுங்குவதா ? அவணுள்ள மற்றப் புலையருக்கு (புலால் உண்போர்க்கு) அஞ்சுவதா ? தாய்மொழி காப்பதா ? சோதனைக்குக் காந்தியடிகள் அன்று எளியராயிருப்பின், அவர் இன்று மகாத்மாவாகி இருப்பரோ ? இரார் ! இரார் ! சிறு சிறு சோதனைகளுக்கு எளியராகி எத்துணைபேர் மனிதத் தன்மையை இழந்து விடுகிறார் ! காந்தியடிகள், ' இங்கே நேரும் மான அவமானங்கட்கு அஞ்சி, இந்நண்பனைக் களிப்பிக்க வேண்டி, அருமை அன்னையார் மொழியைக் காவாது விடுவது அறமாமோ ? உண்மையைக் கடப்பது நியாயமாமோ ?' என்று எண்ணி, ' என்ன நேரினும் நேர்க ' என்று ஒதுங்கி வெளியே வந்துவிட்டார். என்னே அடிகளின் உறுதி !

அடிகள் இங்கிலாந்திலிருந்த போது உணவைப் பற்றிப் பல நூல்களை ஆராய்ந்தார் ; அவ்வாராய்ச்சியாலும் சிலர் அறிவுறுத்தலாலும் முட்டையில் உயிரில்லை என்னும் முடிவிற்கு வந்து அதை உண்ணத் தொடங்கினார்.

**முட்டை**

ஆங்கு ஊன் உண்ணாத பலரும் முட்டையை மட்டும் உண்பது வழக்கம். முட்டை உயிரற்ற பொருள் என்பது அவர்

தம் கொள்கை. ஒருநாள் காந்தியடிகட்கு ஓர் ஐயம் தோன்றிற்று. அடிகள், 'முட்டையில் உயிருண்டா இல்லையா என்று ஆராய்ந்து உண்மை கண்டு அதை உண்ணும் உரிமைபெற நான் யார்? முட்டையிலும் உயிருண்டு என்னும் நம்பிக்கை தாயார்க்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர் கருத்துவழி நோக்கின், முட்டையும் புலாலின் பாற்பட்டதே' என்று தெளிவுற்று முட்டை உண்பதை அடிகள் ஒழித்தனர். என்றவரை ஏமாற்ற அடிகள் மனச்சான்று இடந்தரவில்லை. ஆராய்ச்சியாளர் கருத்தினுந் தாயார் கருத்துக்கே அதிக மதிப்பு அடிகள் ஈந்தனர். நீண்ட தூரத்திருந்தும் நீண்ட நாளாகியும் தாயார்முன் கூறிய உறுதிமொழி காக்குந் தவநெறி நின்றவர் நம்பெருமான்.

1890-ம் ஆண்டு போட்ஸ் மௌத் என்னும் ஊரில் சைவ உணவு மகாநாடு ஒன்று கூடிற்று. அதற்கு அடிகளும் மற்றோர் இந்திய நண்பரும் அழைக்கப்பட்டனர். இருவரும் ஒரு விடுதியில் தங்கியிருந்தனர். முதல் நாள் மகாநாடு முடிந்தது. இருவரும் வீடுசேர்ந்து உண்டு சீட்டாடத் தொடங்கினர். அவ்வாட்டத்தில் வீட்டுத் தலைவியுங் கலந்துகொண்டாள். சீட்டாட்டத்துடன் மற்ற ஆட்டங்களுந் துவங்கப்பட்டன. அடிகள் சிறிது வரம்பு மீறிச் சென்ற வேளையில் நண்பர்,

**கொடுஞ் சோதனை**

'அப்பா, இப்பேய் யாண்டிருந்து உன்னைப் பிடித்தது? எழுந்து போ; போ; விரைவில் போ' என்று கடிந்தனர். அடிகட்கு நாணம் மேலிட்டது. அதனுடன் தாயாரின் நினைவுந் தோன்றிற்று. அடிகள் என் செய்தார்?

அவ்வூரிலிருந்தால் என்ன நேருமோ என்று ஊரை க்தே அடிகள் ஓடிப்போய்விட்டார். வேட்டை ஞல் துரத்தப்பெற்ற மான்போலத் தாம் ஓடி ;தாக அடிகள் தமது வரலாற்றில் எழுதியிருக்கிருர். ளத்தில் தீக்கிளர்ச்சி தோன்றியபோதே நண்பர் ,தார். பின்னே தோன்றிய தாயார் நினைவு அக் ர்ச்சியைத் தடுத்தாண்டது. மகாநாட்டின் மற்றநாள் ழச்சி முறையையும் பொருட்படுத்தாது ஊரை டே அடிகள் ஓடிவந்ததை நோக்குழித் தாயார்க்கு தகைய மதிப்பு அவர் தந்தார்; என்பது நன்கு ஙகும்.

காமக்கிளர்ச்சிக்கு இரையான முனிவர் எத்துணே ? தேவர் எத்தனை பேர் ? அக்கிளர்ச்சி காந்தியடி என் செய்தது ? தாயார்முன் வழங்கிய உறுதி ாழியை எவ்வேளையில் அடிகள் காத்தார் ? அன்பர் ா ! உன்னுங்கள் ! உன்னுங்கள் ! 'அன்னையார் தியாவிலிருக்கிருர். அவர் இங்கே நாம் செய்வதைப் த்துக்கொண் டிருக்கிருரோ ? இல்லையே. நாம் ;ப்படிப்படி நடக்கலாம்' என்ற தீய - கொடிய - ங்கு எண்ணம் காந்தியடிகள் உள்ளத்தில் தோன் ரு ? மனமென்னும் பேய்க்குரங்கு அவரை அலேத் ா ? நம் ஆண்டகை, மனத்தை அறிவு வழியாக த்தி ஆண்டனர். மனத்தை அறிவுவழி அடக்கி ாதவன் மனிதனுகான். காந்தியடிகள் இளமையில் கிலாந்தில் தாய் மொழியைக் குரு மொழியாக் ாண்டு ஒழுக்கத்தை உயிரினும் பாதுகாத்தது போற் தக்கது.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது அவர் பல கிறிஸ்துவ நண்பரைப் பெற்றனர். அவருள் ஒருவர் அன்பர் கோட்டஸ் என்பவர். இவரும் அடிகளும் சமயங்களைப்பற்றிப் பெரும் வழக்கிடுவதுண்டு. ஒருநாள் அன்பர் கோட்டஸ், 'இவ்வளவு ஞானம் பேசுந் தாங்கள் தங்கள் கழுத்தில் துளசிமணியை அணிந்திருப்ப தென்னை? அஃது எனக்குப் பிடிக்கவில்லை. இம் மூட நம்பிக்கை தங்கட்குத் தகாது. அதைத் தாருங்கள். அறுத்தெறிகிறேன்' என்று மணியைக் கேட்டார். அடிகட்குத் தாயார் நினைவு எழுந்தது. அந்நாளில் தாயார் உயிருடனுமில்லை. அவர் இவ்வுலக வாழ்வு நீத்துப் பல ஆண்டுகளாயின. ஆயினும், அடிகள் ஈன்ற அன்னையாரை மறந்தாரில்லை. அவர் அன்பர் கோட்டஸைப் பார்த்து, 'இஃது என் தாயாரால் அணியப்பட்டது. தாயாரின் அன்புக்கொடையென்று மிகப் புனிதமாக இம்மணியைப் போற்றிவருகிறேன். அதன் உட்பொருள் எனக்குத் தெரியாது. அதை அணியாவிடின், அதனால் கேடுவிளையும் என்று நான் நம்புகிறேனில்லை. அன்னையாரால் அணியப்பெற்ற ஒன்றை வலிந்து அறுத்தெறிய என் மனம் ஒருப்படவில்லை. அது தானே அறுந்துவிழுந்தால் புதியதொன்றை யான் அணிவேன்' என்று சொற்றனர். தாயாரிடம் காந்தியடிகள் கொண்ட அன்புக்கு இன்னுஞ் சான்றுகள் வேண்டுங்கொல்!

துளசிமணி

அடிகள் தந்தையாரிடமும் அன்பு பூண்டு அவரை வழிபடுதலுண்டு. அவர் தந்தையார்க்குப் பலதிறப்

பணிவிடைகள் செய்வார். தந்தையார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோது அடிகள் தந்தையார்க்குக் கைகால் பிடித்தல் முதலிய தொண்டுகளை அன்புடன் நிகழ்த்திவந்ததாக அவரது வரலாறு அறிவிக்கிறது. அடிகள் தந்தையாரை இளமையில் தெய்வமாகப் போற்றினார் என்பதற்கு ஈண்டொரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுவதே சாலும்.

தந்தையார்

தீ நட்புக் காரணமாக அடிகள் இளமையில் சுருட்டுக் குடித்தல் பயின்றார். சுருட்டுக்குக் காசு கிடைப்பதில்லை. வேலைக்காரன் காசை அடிகள் திருடுவது வழக்கம். ஒருமுறை அவர் தமது உடன்பிறந்தார் கைக்காப்பில் ஒரு சிறு பொற்றுண்டை வெட்டி அதை விற்றுக் கடனடைத்தார். இன்னோரன்ன மறச் செயல்கள் நிகழ்த்தியபோதெல்லாம் அடிகளை மனச்சான்று ஒறுத்துக் கொண்டே வந்தது.

சுருட்டும் திருடும்

நன் மனமுடையார் சிறு குற்றமிழைப்பினும் அவர் மனமே அவரை ஒறுக்கும். அவ்வொறுத்தலைப் பொருட்படுத்தாது வாழின் மனிதன் நாளடைவில் இருகால் விலங்காவன்.

காந்தியடிகள் குற்றங் குறித்து வருந்தி வருந்தி முடிவில் குற்றத்தைத் தந்தையார்பால் முறையிட்டே தீரல்வேண்டுமென்று அதை ஒரு கடிதத்தில் பொறித்துத் தந்தையாரிடந் தந்தார். தந்தையார் அதைக் கண்டு கண்ணீர் உகுப்பதை அடிகள் நோக்கித் தாமுங் கண்ணீருங்

முறையீடு

கம்பலையுமானார். அதைப்பற்றி அடிகள் தமது ‘சத்திய சோதனை’யில்,

‘தந்தையாரிடங் கடிதத்தைக் கொடுத்த வேளையில் எனது உடல் நடுங்கிற்று. அவர் கடிதத்தைப் படித்த போது அவர் கண்களில் நீர் முத்து முத்தாகச் சொட்டிற்று. கடிதமும் நனைந்தது. சிறிது நேரம் கண்ணைமூடிச் சிந்தனையிலிருந்தார்; பின்னை விழித்துக் கடிதத்தைக் கிழித்தெறிந்தார். அக்காட்சி எனது மனத்தையும் உருக்கிற்று * * * * என் தந்தையார் கண்ணீர் என் மன மாசைக் கழுவிற்று. அவ்வன்பு நிலை எவர்க்கே தெரியும்? அநுபவித்தவர்க்கன்றோ தெரியும்? அன்று அந்நிகழ்ச்சியில் தந்தையாரின் அன்பைக் கண்டேன்; இன்று அதன்கண் அஹிம்சையின் நுட்பத்தைக் காண்கிறேன். மன்னிக்குந் தன்மை இயல்பாக என் தந்தையார்பால் ஏற்பட்டதன்று. அவர் சினந்து கடுஞ்சொல் பகர்வரென்று எண்ணினேன்; நெற்றியில் அடித்துக் கொள்வரென்று எதிர் பார்த்தேன். அவரது பொறுமை எனக்கு வியப்பூட்டிற்று. இதற்குக் காரணம் யாது? யான் எனது குற்றத்தை மறையாது முறையிட்டதே. மன்னிப்போரிடம் குற்றத்தைக் கரவாது வெளியிடுவதோடு, மீண்டும் அக் குற்றத்தை இழைப்பதில்லை என்று உறுதி கூறுவது கழுவாய் தேடுவதாகும்’

என்று எழுதியிருக்கிறார்.

இவ்வுரைகளால் காந்தியடிகள் தந்தையார்பால் கொண்டிருந்த அன்பு நனி விளங்குகிறது.

‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்னும் முதுமொழிக்குக் காந்தியடிகள் வாழ்வு ஓர் இலக்கியமாக மிளிர்வதை அன்பர்கள் உணர்வார்களாக.

காந்தியடிகள் வாழ்விலுள்ள இச்சில குறிப்புக்களும் மனிதராக விரும்புவோர்க்குப் பெருந்துணை செய்வனவாம்.

## ரு. இல்லறம்

கல்வியும், தாய் தந்தையர் வழிபாடும் மனிதன் பிறர்பொருட்டு வாழ்தல்வேண்டும் என்னும் பெரு வாழ்விற்குக் கடைக்கால் போன்றன. அக்கால்மீது இல்லறமென்னும் நிலையம் எழுப்பப்படல் வேண்டும். அந்நிலையம் எழும்பினதும் அதன்கண் அன்பென்னுந் தெய்வம் கோயில்கொள்ளும். அன்பு அரும்புதற்குரிய இடம் இல்வாழ்க்கை என்று கூறுவது மிகையாகாது. இதைப்பற்றி நூற்றொடக்கத்திலுஞ் சுருங்கச் சொல்லியுள்ளேன். இல்வாழ்வில் தலைப்படாத ஒருவனது உள்ளத்தைக் கதவுகளும் மற்றக் கால்அதர்களும் மூடப்பட்டுக் காற்று நுழையப்பெறாத பாழுங் கட்டடத்திற்கும், ஓட்டமில்லாத நீர் நிலைக்கும் ஒப்பிடலாம். இல்லறம், மனிதன்பால் இயல்பாக அமைந்துள்ள அன்பூற்றினின்றும் அருட்புனல் எழாதவாறு தகைந்து நிற்கும் தன்னலமென்னும் பாறையை உடைத்தெறியும் பெருங் கருவி.

**இல்லறமே நல்லறம்**

ஒருவன் ஒருத்தியோடு வாழ்ந்து இன்புதல்வரைப் பெற்ற பின்னரே அன்புநிலை இன்னதென உணரப் பெறுகிறான். ஏட்டுக் கல்வி பயின்று அன்பைப்பற்றிப் பதினாயிரஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தல் எளிது; பதினாயிரங் கட்டுரைகள் வரைதல் எளிது. இவை ஒருவனை அன்பனாக்குமோ? அன்பு சுரக்குமிடம் இல் வாழ்க்கை இல்வாழ்க்கையே.

அன்பு வளர்தற்கு நிலைக்களனாயுள்ள இல்வாழ்க்கை உலகில் இனிது நடைபெறல் வேண்டுமென்னும் அருட்

பெருக்கால் ஆண்டவன் உயிர்களை ஆண் பெண் வடிவாகப் படைத்திருக்கிறான். ஆணும் பெண்ணுங் கூடிக் குலாவி அன்புநெறி காண்டல் வேண்டுமென்பது ஆண்டவன் படைப்பு நோக்கம். அந்நோக்கத்தை நிறைவேற்ற முயலாதவன் வாயால் கடவுளுண்மை பேசுவதால் என்ன பயன் விளையும்?

**அன்பு சுரத்தல்**

ஒரு தோட்டத்தில் இரண்டு தொழிலாளர் வேலை செய்கின்றனர். ஒருவன் பெரிதும் வேலைசெய்யாது காலங்கழிப்பவன். மற்றொருவன் கருமத்தில் கண்ணாயிருப்பவன். தோட்டமுடையான் ஆண்டு வரும்போது முன்னவன் அவனை எதிர்நோக்கி மாலை சூட்டி வந்தனை வழிபாடு செய்வதில் பெருங்கவலை செலுத்துவான். பின்னவன் அவ்வேடிக்கையில் கருத்தைச் செலுத்தாது அளிக்கப்பட்ட தொழில்மீது கருத்தைச் செலுத்தி வருவான். இவ்விருவருள் எவன் தலைவன் கடனாற்றுபவன்? உலகில் மக்கள் யாக்கை பெற்று இல்வாழ்க்கையில் நண்ணாது கிடப்போர் முன்னவனை ஒப்பர்; இல்வாழ்க்கை ஏற்பவர் பின்னவனை ஒப்பர்.

ஒழுங்குபட்ட இல்வாழ்க்கை நடாத்தும் ஒருவன் கடவுள் ஆணைவழி நிற்பவனாகிறான். 'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் - முயல்வாருள் எல்லாந் தலை' என்றும், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் - தெய்வத்துள் வைக்கப் படும்' என்றும், 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் - பிறன்பழிப்ப தில்லாயி னன்று' என்றும் ஆசிரியர் திருவள்ளுவனார் இல்வாழ்க்கையின்

மாண்பு தெரித்தல் காண்க. ' இல்லற மல்லது நல்லற மன்று ' என்று ஔவைப் பிராட்டியார் மிகச் சுருங்கிய சொற்களால் பெரும்பொருள் குறித்தல் ஓர்க.

காந்தியடிகள் இப்பெற்றித்தாய இல்லறநெறி நின்று, வாழ்வு நடாத்தி, எவ்வுயிரையுந் தம்முயிர் போலெண்ணித் தொண்டு செய்யும் பேறு பெற்றிருக்கிறார். இல்லொழுக்கத்தில் காந்தியடிகள் நுழையாதிருப்பரேல் உலகுய்ய உழைக்கும் அன்புளத்தை அவர் பெற்றிருப்பரோ ? காந்தியடிகளின் தாய் தந்தையர் இல்லறம் பேணுதொழிந்திருப்பரேல் நம்பெரும் அடிகளை இவ்வுலகம் பெற்றிருக்குமோ ? காந்தியடிகளை இவ்வுலகுக்கீந்த இல்வாழ்க்கை ஓங்கி வளர்க ; வளர்க. அருளாளர் தோன்றுதற்கு நிலைக்களனாக உள்ள இல்வாழ்க்கை ஓங்கி வளர்க ; வளர்க.

அடிகளும் இல்லறமும்

இல்வாழ்க்கைக்குரிய மணங்கள் பல. நம் நாட்டார் அவற்றை எட்டுவிதமாகப் பிரித்துள்ளார். அவற்றுள் சிறந்தது நமது அருமைத் தமிழ்மக்கள் கொண்ட களவென்னுங் காதல் மணமேயாகும். அம்மண வாழ்வு இப்பொழுது மாண்டுவிட்டது. இப்பொழுது பெரிதும் நமது நாட்டில் தாய் தந்தையர் பார்த்துக் கொணரும் பெண்ணுக்கு மாலை சூட்டிக்கொள்வது மணமென்னும் பொருளில் வழங்கி வருகிறது. இதற்குப் பெயர் தெய்வ மணமாம் ! காந்தியடிகட்கு இத்தெய்வ மணமே செய்விக்கப்பட்டது.

மணம்

காந்தியடிகள் கஸ்தூரிபாய் என்னும் பெருமாட்டியார்க்கு மாலை சூட்டியபோது அடிகட்கு வயது

பதின்மூன்று. அதுபோழ்து அம்மையார் எவ்வளவு வயது உற்றிருப்பார் என்று சொல்ல வேண்டுவதில்லை. இளமை மணம், இந்நாள் அறிஞர் பலரால் மறுக்கப்படல் எவரும் அறிந்தததொன்று. காந்தியடிகளும் இளமை மணங் குறித்து வருந்திப் பின்னாளில் பேசியிருக்கிறார். பதின்மூன்றாட்டைக் காந்தி என் செய்வார்? பாவம்! அவர் பெற்றோர் ஆணைவழி நின்றார்.

இளமை மணம்

இளமை மணக் கொடுமைகளைப்பற்றிக் காந்தியடிகளுக்குப் பலர் கடிதங்கள் விடுப்பதுண்டு. அவைகட்கு அடிகள் இறுத்த பதில்களும் பல உண்டு. அவைகளுள் ஒரு கடிதத்தின் சாரமும், பதிலின் சுருக்கமும் வருமாறு :—

### கடிதம்

* * * * கார்வாரிலுள்ள சதாசிவ நாட்டில் நெஞ்சைப் பிளக்கவல்ல ஒரு மணம் நடைபெற்றது. மணமகள் வயது பன்னிரண்டு. அவள் ஓர் ஏழ்மைக் குடியில் பிறந்தவள். மணமகன் வயது அறுபது. அவன் முதல் மனைவி மூன்றாண்டுக்கு முன் மரணமடைந்தாள். மணமகன் ஓர் இங்கிலீஷ் பள்ளியைக் கண்ட ஒப்புரவாளன். அவன் கடந்த ஆண்டு ஓர் இளங்கன்னியை மணக்க முயன்றான். அவன் மரபார் பெருங்கிளர்ச்சி செய்தனர். அதனால், முதியவன் முயற்சி கைகூடாதொழிந்தது. இவ்வாண்டு, வேறோரிடம் போந்து, பெண்ணின் பெற்றோர்க்கு இருநூறு ரூபா தந்து, தனது முயற்சியில் முதியவன் வெற்றி பெற்றான். * * * * உள்ளூர் சீர்திருத்தக்காரர் எவரும் மூச்சுவிடவில்லை. என் செய்வது ?

**பதில்**

* * * * இத்தகைக் கொடுமை அடிக்கடி நிகழ்கிறது. இதை அழிக்க வழி காண்டல் வேண்டும். பெண்மையைக் கறைப்படுத்துங் கொடுமையை அஞ்சாது வெளியிட்டுப் பொது மக்களிடைக் கிளர்ச்சி எழச்செய்வது ஒருவித வழி. கடிதத்தில் குறிக்கப்பெற்ற முதியனின் முதன் முயற்சி உள்ளூர்க் கிளர்ச்சியாலேயே வீழ்ந்துபட்டது. அத்தகைக் கிளர்ச்சி பின்னை ஏன் எழவில்லை? இளங்கன்னிக்கு நேர்ந்துள்ள கொடுமையை நீக்கவல்ல கிளர்ச்சி எழாமை குறித்து ஆச்சரியமடைகிறேன். இன்னுங் கிளர்ச்சிக்கு இடமுண்டு என்றே நினைக்கிறேன். பொதுமக்கள் கருத்துத் திரட்டப் படுதற்குப் போதிய காலமுண்டு. * * * * மணமகன் ஒப்புரவாளன் என்று தெரிகிறது. * * * * இளம் பெண்ணை ஓர் அறப்பள்ளியில் சேர்த்துப் படிக்க விடுமாறு கிழவனை அறவோர் தூண்ட ஏன் முந்தலாகாது? கன்னி உற்ற வயதடைந்து பகுத்தறிவு விளங்கப்பெற்ற பின்னை அவள் விருப்பப்படி நடக்க அவளை ஏன் விடுதலாகாது? * * * * * ஆங்காங்குள்ள இளம் பிள்ளைகள் ஒன்றுபட்டுக் குழந்தை மணத்தைத் தடுக்கவும், இளம் கைம் பெண்களின் துயரைக் களையவும் தொண்டுசெய்வது ஜீவ காருண்யமாகும். * * *

இப்பதிலால் அடிகள் இளமை மணத்தை விரும்பவில்லை என்பது விளங்குதல் காண்க.

இளமை மணத்தில் மிகச் சில நலன்களிருக்கலாம். ஆனால் அதன்கண் கேடுகள் பல உண்டு. குளிர் மிகுந்த நாட்டில் வாழ்வோரைப்போல முப்பது நாற்பதில் மன்றல் புரிந்துகொள்வது நமது நாட்டுக்குப் பொருத்தமாகாது. வெம்மை செறிந்த நாட்டினர் இயல்புக்கும்,

மற்ற நாட்டினர் இயல்புக்கும் வேற்றுமையுண்டு. அவ் வேற்றுமை எளிதில் உணரக்கூடியதே.

பன்னீராட்டைச் செல்வியும் பதினாறாட்டைச் செல்வனும் அன்பு மணஞ் செய்துகொள்ளல்வேண்டும் என்னும் விதியை இதுபோழ்து காலநிலை உன்னிப் பதி

வயது மாற்றம்

னாறு இருபதென்று மாற்றிக்கொள்ள லாம். வேண்டுமானால் ஆடவர் வயதை இருபத்தைந்தாகப் பெருக்கிக் கொள்ளலாம். இருபது இருபத்தைந்துக்குள் மணமுடித்தல் நாட்டின் இயல்புக்கு அரண் செய்யும் வாழ்வளிப்பதாகும். இது குறித்துப் 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் நூலில் விரித்துக்கூறி யிருக்கிறேன். விரிவு ஆண்டுக் காண்க.

காந்தியடிகளின் இளமை மணம் அவரது பின்னைப் பெருவாழ்விற்கு இடர் செய்யவில்லை. அஃது இன்ப அன்பு வாழ்க்கையாகவே வளர்ந்து வருகிறது. இதனால் இளமை மணத்தைக் கொள்ளவேண்டுமென்பதே எனது கருத்தன்று. அதைத் தள்ளவேண்டுமென்பதே எனது கருத்து.

இல்லறம் என்பது ஆண் பெண் என்னும் ஈருடலை நடாத்தும் ஓருயிர். ஆண் மகனும் பெண் மகளும் ஒத்த பண்பு ஒத்த நலன் ஒத்த அன்பு ஒத்த கல்வி முதலியன உடையரா யிருத்தல்வேண்டும். இல்லையேல் இவ்வாழ்வு நல்வாழ்வாகாது நரக வாழ்வாக முடியும். இல்லறத்துக்கு இன்றியமையாதவள் பெண் மகளே யாவள். ஆசிரியர் திருவள்ளுவனார் அவளை வாழ்க்கைத்

துணை நலம் என்று கூறுகிறார். அத்துணை நலம் எல்லா வழியிலும் ஆண்மகனோடு ஒத்த உரிமை பெற்றிருத்தல் வேண்டும். அவ்வுரிமை இதுபோழ்து நம் பெண் மக்களுக்குண்டோ? ஆண் மக்கள் அடக்குமுறையால் பெண்மக்கள் தங்கள் நிலை குலையப்பெற்று வீழ்ந்து கிடக்கிறார்கள். ஆண் மகன் தன்னனைய பெண்ணுக்குக் கல்வி கொடாமலும், சம உரிமை வழங்காமலும், அவளைக் காமக்கருவியாக என்று கொண்டானோ அன்றே அவள் வாழ்வு குலைந்தது; அக்குலைவால் இவன் வாழ்வுங் குலைந்தது; இரண்டானும் இல்வாழ்வே குலைந்தது. பெண்ணுலகு சிறுமைப்பட்ட நாள் தொட்டுக் காதல் என்னும் அன்புத் தெய்வக்காட்சியும் அரிதாயிற்று. பெண்ணைக் காமத்தின் பொருட்டுக் கொள்வோன் மனிதனாகான்.

பெண் உரிமை

காந்தியடிகளின் மேல்நாட்டு வாழ்வுபோக, மிகுதியாயுள்ள அவரது பெருவாழ்வு நமது நாட்டுக்குரிய பழைய வழியே வளர்ந்து வருகிறது. அவ்வழியாவது, காமச்சுவை நாடி ஒருவன் ஒருத்தியை மணஞ்செய்து வாழ்தலாகா தென்பதும், மக்கட்பேறு கருதியும் பிற அன்புத் தொண்டு கருதியும் மணஞ்செய்தல் வேண்டுமென்பதுமாம். இருவருங் கூடிப் புதல்வரைப் பெறல், ஆண்டவன் இயற்கை ஆணையை நிறைவேற்றத் தம்மைப் போலப் பிற உயிர்களும் தம் வழித்தோன்றி இன்ப நுகரல் வேண்டுமென்னுங் காருண்யத்தின்பாற் பட்டதாகும். காந்தியடிகள் கஸ்தூரிபாயோடு கலந்து நடாத்

அடிகளின் இல்லறம்

திய இல்லறம் இழிவான காமவேட்கை வழி இயங்கவில்லை.

இல்லறம் அன்பு வளரிடம் என்று யான் பன்முறை கூறி வருகிறேன். காந்தியடிகளது இல்லறத்தின் பயனைப் பாருங்கள். இப்பொழுது காந்தியடிகள் எந்நிலை பெற்றிருக்கிறார்? உலகிலுள்ள உயிர்களைத் தம்முயிரெனக் கொண்டு இயன்ற தொண்டு செய்து வருகிறார். இல்லறத்தாலாய பயன் இஃதன்றோ?

அன்பு வளர்ச்சி

ஒருவரிடத்துக் கட்டுப்பட்டுக் கிடக்கும் அன்பைப் பின்னை இருவரிடத்தும், பின்னைச் சில உயிர்களிடத்தும், பின்னைப் பல உயிர்களிடத்தும், முடிவில் எல்லா உயிர்களிடத்தும் பரப்புந் தன்மையுடையது இல்லறம். காந்தியடிகள்பால் கட்டுப்பட்டிருந்த அன்பு, முறை முறையே கஸ்தூரிபாய் வழியும், அவர்கள் மக்கள் வழியும் வளர்ந்து, இதுபோழ்து எல்லா உயிர்களிடையும் ஊடுருவிப் பாய்ந்து, அருள் வெள்ளமாய் ஓடுகிறது. காந்தியடிகள் தமக்கென்று வாழ்கின்றார்? இல்லை. உலகுய்ய உழைக்கும் வாழ்வாகவன்றோ அவர்தம் வாழ்வு இயங்குகிறது? இப்பேற்றை அவர்க்கு வழங்கியது எது? இல்லறமே. காந்தியடிகள் இல்லற நெறி நில்லாது வேறு வழி நின்றிருப்பாராயின், அவர் வாழ்வு 'தன்னல' வாழ்வாக முடிந்திருக்கும். ஆதலால், ஒழுங்குபட்ட இல்லறமே வாழ்க்கைக்கு வேண்டற்பாலது.

காந்தியடிகள் கஸ்தூரிபாயை மிக இளமையில் திருமணஞ் செய்தமையான், அவர் இளமையாடல்களை வாழ்விற்கு இலக்கியமாகக் கொள்ளுதலாகாது. பதின்மூன்று

வயதுடைய காந்தி, மனைவியை எங்ஙனங் கருதியிருப்பர்? இளமைமனம் சென்றவழியெல்லாம் அவர் உழன்றிருப்பர். மனைவி என்பதற்குப் பொருள் காமக்கூடென்று அந்நாளில் அவர் கருதினர். அக்கருத்துடன் அவர் புரிந்த திருவிளையாடல்களிற் சிலவற்றை அவரே தமது வரலாற்றில் எழுதியுள்ளார். பள்ளியிலுங் கஸ்தூரிபாய் நினைவே அடிகள் நெஞ்சில் படிந்திருக்குமாம்; கஸ்தூரிபாயை 'அங்குப் போதல் கூடாது - இங்குப் போதல் கூடாது' என்று அவர் கட்டுப்படுத்துவாராம்; அடிக்கடி ஐயமும் உறுவாராம். தந்தையாரின் மரணத் தறுவாயில் அவர்க்குக் கைகால் பிடித்த வேளையிலும் தங்கருத்து கஸ்தூரிபாய்மீதே தவழ்ந்ததென்றும், கைகால் பிடித்துப் படுக்கை அறைக்குத் தாஞ்சென்று துயில் நீத்த போது தந்தையார் மரணச்செய்தி தெரியவந்ததென்றும் அடிகள் 'சத்திய சோதனை'யில் குறிப்பிட்டிருக்கிறார். அடிகள் தமது இளமை நடக்கைச் சிறுமைகளைச் சிறிதும் மறையாது வெளியிட்டிருத்தல் கருதற்பாலது. சிறுமைகட்குக் காரணம் இளமை மணமேயாகும். காந்தியடிகள் உற்ற வயதடைந்து தெள்ளியராயபின்னர், அவர் மனைவி என்பதற்குக் கொண்ட பொருளே நம்மாற் கொள்ளற்பாலது.

**இளமைக் குறைபாடு**

'அஹிம்சையின் உள்ளுறையை முற்றும் உணர்ந்த பின்னரே என்பாலிருந்த ஐயக் கோடுகள் நீங்கின. அப்போதே பிரமசரியத்தின் பெருமை புலனாயிற்று. மனைவி என்பவள் கணவனின் அடிமையல்லவென்றும், அவள் அவனது வாழ்க்கைத் துணையென்றும், தோழியென்றும்,

இன்ப துன்பத்தில் எல்லா வழியிலுஞ் சம உரிமை உடையாளென்றும், வாழ்வுத் துறையில் தலைவனுக்குள்ள உரிமைகளெல்லாந் தலைவிக்கும் உண்டென்றுந் தெளிய லானேன்.'

'நீ ஒருத்தியை மணஞ்செய்துகொண்ட பின்னர் அவளை வெறுங் காமப்பொறி என்று நினையாதே; அவளை நட்புடையாளென்றும், பங்குடையாளென்றும், கூட்டுத் தொண்டுக்குரியாளென்றுங் கொள்வாயாக.'

என்று அடிகளே அருளியிருத்தல் காண்க.

காந்தியடிகள் உற்ற வயதடைந்த பின்னைக் கஸ்தூரி பாயை ஒரு காமக்கருவியாக நினைந்து வாழ்வு நடாத்தினா ரில்லை. அவர் மனைவியைக் காமக் கருவியாகக் கொண் டிருப்பின் அவர் பெருநிலை எய்தியிரார். காந்தியடிகட் கும் கஸ்தூரிபாய்க்கும் உற்றுள்ள அன்பு இத்தன்மைத்து என்று எழுத்தால் எழுதல் முடியாது. ஓராவிற்கு இரு கோடு பூத்தாலென ஓருயிரும் ஈருடலுமாக இருவரும் வாழ்ந்தனர்; இன்றும் வாழ்கிறார். ஒருயிர் ஈருடல் என்பதற்கு இலக்கியமாகக் காந்தியடிகளும் கஸ்தூரி பாயும் நின்றார்; நிற்கிறார். காந்தியடிகளை வேறாகவும் கஸ்தூரிபாயை வேறாகவும் எங்ஙனம் பிரித்துக் கூறு வது? காந்தியடிகள் சென்ற வழிகளிலெல்லாம் கஸ்தூரி பாயையும் உலகங் கண்டது. சிற்சில இடங்களில் உடல் பிரிவு நிகழினும் உட்பிரிவு அவ்விருவர்க்கும் நிகழ்ந்த தில்லை.

பண்டை இந்திய மாது சிரோமணிகள் இயல்புக ளெல்லாம் அம்மையாரிடத்தில் பொருந்திக் கிடந்தன. கஸ்தூரிபாயின் கற்பொழுக்கத் திறனை காந்தியடிகளை

மகாத்மாவாக்கிற்று. 'கொழுநனே தெய்வம்' என்னுங் கொள்கையில் அம்மையார் தலைசிறந்து விளங்கினார். அடிகளும் அவ்வாறே கஸ்தூரிபாயைக் கருதினர். அவர், 'என் மனைவியைச் சகோதரியாகவும் தாயாகவும் தெய்வத்தன்மை யுடையவளாகவுங் கொள்கிறேன்' என்று பன்முறை கூறியிருக்கிறார். மகாத்மா இவ்வள வில் நின்றாரில்லை. அவர் 'அவளே (கஸ்தூரிபாயே) அஹிம்சையை எனக்கு அறிவுறுத்திய குருவுமானாள்' என்று அருளியிருக்கிறார். மேலும் அடிகள் கஸ்தூரிபாய் மாட்டுத் தமக்குள்ள அன்பை ஹிந்து மதத்தின் மாண் புரைக்கு முகத்தான் ஓரிடத்தில் விளக்கியிருக்கிறார். 'எனது மனைவியிடம் எனக்கு எவ்வளவு அன்புண்டோ அவ்வளவு அன்பு எனக்கு ஹிந்து மதத்திலுண்டு' என் பது அடிகளின் வாய்மொழி. இவ்வன்பால் விழுங்கப் பட்ட இருவருக்கும் நிகழ்ந்த உள்ளுறு புணர்ச்சியில் எழுந்ததே காதலின்பமென்பது. அவ்வின்பம் பேரின்ப மெனவும்படும். ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'ஒத்த அன் பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்' என்று கூறியிருத்தல் காண்க. உள்ளுறு புணர்ச்சி நிகழாது நிகழும் மெய்யுறு புணர்ச்சி காமத் தின்பாற்பட்டது. விரிவு அகப்பொருள் நூல்களிற் காண்க. உள்ளுறு புணர்ச்சி வழி நிகழும் மெய்யுறு புணர்ச்சியும் பிள்ளைப் பேற்றைக் குறிக்கொண்டதா யிருத்தல்வேண்டும்; காமவேட்கையைக் குறிக்கொண் டதா யிருத்தல்கூடாது. காந்தியடிகளும் கஸ்தூரிபாயும் கூடிக் கலந்து நான்கு உயிரை இவ்வுலகுக்கு ஈந்து பின்னை அருள்வளரும் உள்ளுறு புணர்ச்சியளவோடு நின்றது உலகறிந்ததொன்று.

*'சிவஞ்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான் சிவத்தையீன்றும்
உவந்திரு வரும்புணர்ந்திங் குலகுயி ரெல்லாமீன்றும்
பவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாவள்
தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே'

என்னுந் திருப்பாடல் ஈண்டு நினைவிற்கு வருகிறது.

காந்தியடிகள், மனைவிமாட்டு மெய்யுறு புணர்ச்சி நீத்தாரேனும், அம்மையாரை விடுத்து அவர் காட்டுக் கோடினாரில்லை. உயிரும் உடலும் பிரிந்து எவ்வாறு வாழ்தல் முடியும்? பிள்ளைப் பேறொன்றே இல்லறத்தின் பயன் என்னுங் கருத்துடைய சில நல்லாரும் அப் பேறு பெற்றபின்னர்ச் சில வேளைகளில் மனைவியை விடுத்து மலைக்கோ காட்டுக்கோ ஓடு

துறவு நுட்பம்

வது வழக்கம். பிள்ளைப்பேறு இல்லறத்தின் ஒரு சினையேயன்றி முடிந்த முதன்மையன்று வேறு பல அறத்தொண்டுகளும் இல்லறத்திலுண்டு காந்தியடிகளும் அவர் மனைவியாரும் காட்டுக்கோடாது நாட்டிலிருந்து அவ்வறத் தொண்டுகளாற்றி வரலாயினர் காமச் சூட்டிற்கு அஞ்சிச் சிலர் மனைவியை விடுத்து அங்கு மிங்கும் ஓடி அலைவதுண்டு. பெண்ணைக் காமக்கூடாகக் கருதுவோர் எங்கிருப்பினும் காமத்தால் எரிக்கப்படுவர் பெண்ணைத் தெய்வமாகக் கொண்டு யாண்டுறைந்தா லென்ன?

பெண்ணை விடுத்துத் தனியே வதிவதுமட்டுந் துற வாகாது. துறவாவது மனமாசினின்றும் விடுதலை அடையும் ஒரு பெரும் நிலை. இது பின்னாளில் பெண்ணை

---

* சிவஞானசித்தியார்.

வெறுத்தல் என்று கொள்ளப்பட்டது. பெண்ணுடன் வாழ்ந்து பிள்ளைப்பேறு அடைய அடைய அன்பு படிப் படியே பெருகும். அவ்வவ்வளவில் மனமாசு அகலும். முழு மாசு அகலப்பெற்றோர்க்குப் பெண்ணின் தெய்வக் கலை புலனாகும். இக் கலைக்காட்சி மெய்ம்மையை வளர்க் கும்; ஒழுக்கத்தை ஓம்பும்; எவ்வுயிர்க்குஞ் செந் தண்மை பூண்டொழுகும் அந்தண்மையை எய்துவிக் கும். இது துறவு நுட்பம். இதற்குக் காந்தியடிகள் வாழ்க்கை ஓரிலக்கியம்.

உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது 1942-ம் ஆண்டில் காந்தியடிகளைச் சிறைக்கோட்டம் ஈர்த்தது. அக்கோட்டம் கஸ்தூரிபாயையும் அழைத்தது. சிறை யிலும் காந்தியடிகள் கஸ்தூரிபாயையோ இவர் அவ ரையோ துறந்தாரில்லை. இருவரும் ஆங்கே நாட்டின் விடுதலை குறித்துத் தவங்கிடந்தனர். அந்நிலையில் கஸ்தூரிபாயின் பருவுடல் மறைந்தது. அதனால் அடி களின் புறக்கஸ்தூரி மணங்குன்றியது. அவர்தம் அகக்கஸ்தூரி மணங்குலையவில்லை. அது காந்தியடிகள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்தது. அஃது எங்ஙனங் குலையும்?

கஸ்தூரிபாய் காந்தியடிகளுடன் இன்னும் வாழ் கிறார்; என்றும் வாழ்வார். இருவர்க்கும் உற்ற காதல் எழுமையுந் தொடர்ந்து தொடர்ந்து வளர்வது. காதற்குப் பிரிவு ஏது? துறவு ஏது? கஸ்தூரிபாயின் பருவுடல் பிரிந்த நிலையிலும் அவர் காந்தியடிகளைத் துறக்கவில்லை. இவர் அவரைத் துறக்கவில்லை.

காந்தி - கஸ்தூரி

காந்தியடிகள் தம்முள் கலந்து நிற்கும் கஸ்தூரி பாயின் வரலாற்றை எழுதிவருவதன் நோக்கமென்னை? கஸ்தூரிபாயை மறவாமை - துறவாமையே யாகும். இரு வர்க்குமுள்ள அன்பைப் புலப்படுத்த நாடு ஒன்றரை கோடி ரூபா அளித்தது. அவ்வன்பளிப்பு, அறநிலையங் களாக எழும். அந்நிலையங்கள் காந்தி - கஸ்தூரி காதல் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டுகளாக நிற்கும். வாழ்க காந்தி - கஸ்தூரி! வெல்க அவர்தம் வாழ்க்கை.

அன்பர்களே! காந்தியடிகள் வாழ்வை நோக் குங்கள். அவர் மனைவியோடு வாழ்ந்தார்; மற்றப் பெண்கள் சூழலில் வீற்றிருக்கிறார். அவரைக் காமஞ் சுடுகிறதோ? இல்லையே. அடிகள் பெண் மக்களைக் காமப் பெட்டகமென்று கருதுகிறாரில்லை. அவர், அவர் களை ஆண்டவன் அன்பும் அழகும் பொலியும் அருட்பூஞ் சோலை என்று கருதுகிறார். இக்கருத்துடையரல்லரோ துறவோர்; அறவோர்; சந்நியாசி? அந்தோ! சிலர் பெண் மக்களை எவ்வெவ் வழியில் வெறுத்துத் தள்ளு கிறார். கொடுமை! கொடுமை! பெண் தெய்வங்களைப் பார்த்தல் பாவமாம்! தொடுதல் பாவமாம்! அவர்கள் சோறிடுதல் பாவ மாம்! என்ன கொடுமை! இக் குணமுடையார் பெண்களைக் கழுதை யென்றுங் குதிரை யென்றும் நாயென்றும் பேயென்றும் மலமென்றும் மாயை யென்றும் பேசுகிறார். இவ்வளவிற்குங் காரண மென்ன? இவர்கள் பாழ் மனம் அவர்களைக் காமப் பொருள் என்று நினைப்பதே. குற்றம் எவர்பாலது? 'இச்சந்நியாசிகள்' பாலதா? பெண்மக்கள் பாலதா?

**குறை எங்கே?**

தங்கள்பாலுள்ள குற்றங் களைய முயலாது தெய்வ மணங் கமழும் அன்பு வடிவங்களை ஏனோ பழித்துப் பழித்துப் பாவத்துக்காளாதல் வேண்டும்? பெண் ணுலகை இடர்ப்படுத்தும் ஆணுலகமன்றோ முதல் முதல் தூய்மையுறல் வேண்டும்? ஆணுலகம் தூய்மையுற்றால் பெண்ணுலகில் மாசு படருமோ? காந்தியடிகள்,

'பெண்மக்கள் தூய்மைக்கு நாம் காரணராயிருத்தல் வேண்டும்'

'மனிதன்பாலுள்ள விலங்கு பெண் மக்களைப பொருட் பெண்டிராக்குகிறது'

'காமவேட்கைக்கென ஒரு பெண் மகளை அர்ப்பணஞ் செய்யுங் குணம் நம்பாலுள்ளவரை ஆண் மக்களாய நாமனைவரும் வெட்கத்தால் தலைகுனிய வேண்டியவரே. கடவுளின் உயரிய படைப்பாகிய பெண் மக்களை நமது காமவேட்கைக்கு இரையாக்கி விலங்காவதைப் பார்க்கிலும் மனிதக்கூட்டமே அழிந்துவிடுவது சாலவும் நன்று'

என்று ஆண்மக்கள் கொடுமையை விளக்குதல் காண்க.

ஆண்மக்களின் காம வேட்கையும், பெண்களைத் துறந்து வாழல்வேண்டுமெனும் அவர்களது கொடிய எண்ணமும் உலகில் பெண்ணின்பெருமையைக் குலைத்து விட்டன என்னலாம். பெண்ணமுதம் காமப் பொருளு மன்று; வெறுக்கத்தக்க பொருளுமன்று. இவ்வுலகி லுள்ள எல்லாச் சார்புகளினும் ஆண் மகனுக்கு மிக நெருங்கிய உறவுடைய சார்பு பெண்ணே யாகும். பெண்ணை வெறுத்துக் கூறும் ஆண்மகன் எங்கிருந்து தோன்றினான் என்பதை எண்ணுவானாக. காந்தியடிகள் தமது

**பெண்ணுலகும் அடிகளும்**

அருமை மனைவியையும், மற்றப் பெண்ணினத்தையும் காமக்கூடென்றுதல் வெறுப்புப் பொருளென்றுதல் கருதுவதில்லை. பெண்மக்களிடத்துக் காந்தியடிகளுக்குப் பேரன்பு உண்டு. இதைப்பற்றி அவரது வாழ்க்கையினின்றும் இரண்டொரு குறிப்புக்களை எடுத்துக் காட்டுகிறேன்.

காந்தியடிகள் செல்லுமிடந் தோறும் சகோதரிகள் கூட்டங் கூட்டமாகச் சென்று அவரைக் காண்பதுண்டு. காந்தியடிகள் பெண் தெய்வங்களை அன்புடன் நோக்கி நல்லுரை பகர்வது வழக்கம். ஓரிடத்தில் காந்தியடிகள் தமக்கு அன்பர்கள் சூட்டிய மாலைகளைத் தம்மெதிரில் சூழ்ந்து நின்ற சிறுமியர்களுக்குச் சூட்டி மகிழ்ந்தார்; கவியரசியை (சரோஜினியை) இந்திய கோகிலம் (குயில்) என்று அடிகள் அழைத்திருப்பதுங் கருதற்பாலது. காந்தியடிகளுக்குப் பெண்ணிடத்துள்ள அழகு - பாட்டு - கடவுள் - புலனுகிறது. காமுகர்க்குப் பெண் மக்களின் என்புதோல் போர்த்த பருவுடல் புலனுகும். பெண்மை என்பது அஃதன்று. பெண்மை என்பது ஒரு நுண்மை. அந் நுண்மைப் பெண்மைதான் அழகு - பாட்டு - தெய்வம். அதுதான் எனது தெய்வம் முருகு. விரிவு யான் எழுதிய 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலிற் காண்க. பெண்மையின் நுண்மை உணர்வோர்க்கு மாதர் தெய்வம்போல் தோன்றுவர். காந்தியடிகள், பெண்மக்கள் பெருமையைச் செவ்வனே உணர்ந்தவராகலான், அவர்கட்கு ஆணுலகால் நேர்ந்த சிறுமைகளைப் போக்கப் பல வழிகளிலும் முயன்று வருகிறார். மன்பதையின் ஒரு பங்கு பெண்ணென்றும், அப்பெண்ணைச் சிறுமைப் படுத்துவது மற்றொரு பங்கைச் சிறுமைப்படுத்துவ

மென்றும், பெண் பெருமையுடையா ளென்றும், அவள் சத்தியாக்கிரக உறையுளென்றும், தியாகம் - பிறராறியா வண்ணம் துன்பம் பொறுத்தல்-பணிவு - உறுதி - அறிவு முதலியவற்றில் பெண், ஆணையும் வெல்லுந் திறனுடையா ளென்றும், அவள் எல்லாவற்றிலுஞ் சம உரிமை உடையாளென்றும், ஆணைப்போலத் தேசத்தொண்டு முதலிய தொண்டுகளாற்றப் பெண்ணும் உரிமையுடையா ளென்றும், தொண்டின் பொருட்டுப் பெண்ணினம் சிறை யிலோ பிற இடங்களிலோ மானம்படநேரின், அதைக் கடவுள் காப்பாரென்றும், திரௌபதியின் உறுதி நிலை, அவள் மானபங்கஞ் செய்யப்பட்டபோது கடவுள் துணை பெறுவித்ததென்றும் பல இடங்களில் அடிகள் பெண்பால்மாட்டுத் தமக்குள்ள மதிப்பைப் புலப்படுத்தி யிருக்கிறார். இக்கருத்துக்களைப் பெரிதும் அவர் 'யங் இந்தியா'வில், 'பெண்மக்கள் நிலை', 'நமது வழுக்கிய சகோதரிகள்', 'பெண்மக்கள் பங்கு' முதலிய தலைப்புக்களிட்டு எழுதிய சிறு சிறு கட்டுரைகளில் பரக்கக் காணலாம்.

சிலர் குலமகளிரைப் போற்றி விலை மகளிரைக் காய்வதுண்டு. காந்தியடிகளோ எவரையுங் கடிவதில்லை. பெண் தெய்வங்களிற் சிலரை விலைமகளிராகச் செய்தது எது? ஆண் பேயினிடத்துள்ள விலங்கன்றோ? இவ் விலங்குகளால் முட்டப்பெற்று ஊறடைந்து வீழ்ந்த சகோதரிகளைக் கரையேற்ற வேண்டுவது அருளுடையார் கடமை. 'நோயு ளார்க்கே வைத்தியன் வேண்டும்' என்று அருள் மிகுந்த கிறிஸ்துநாதர் உரை எளிதே

**விலைமகளிர்**

ளைத் தட்டி எழுப்புகிறது. அன்பும் அருளும் பொங்கும் உள்ளமுடையார் தீயார்பொருட்டே உழைக்க முந்து வர். தீயாரிடை நுழைந்து அவண் வதிந்து தொண்டு செய்து, அவரை நல்லோராக்கி அவர்க்கு அருநெறி உணர்த்துவதினுஞ் சிறந்த தொண்டு பிறிதொன்றில்லை. உலகுய்யத் தோன்றிய நம் பெருமான் - காந்தியடிகள் - விலைமாதரென்று பெண்ணினத்தின் ஒரு கூட்டத்தைத் தள்ளுவதில்லை. அவர்களையும் நல்லோராக்கவே அவர் முயன்றுவருகிறார். காந்தியடிகள் பொதுமகளிரைக் கண்டு கண்ணீர் உகுத்து அவர்களும் உய்யுமாறு நிகழ்த் திய தொண்டு கடவுள் உலகில் பதிவதாகும்.

கோகநாடாவிலும் பாரிஸாலிலும் தம்மைக் காணப் போந்த பொது மகளிரைக் காந்தியடிகள் அகமலர்ச்சி யோடு வரவேற்றுப் பேசினார். அத்தாய்மாருந் தங் குறைகளைக் கரவாது வெளியிட மனங் கொண்டார். உள்ளொளி வீசும் பெரியோர் முன்னிலையில் குற்ற வாளிகள் தங்கள் குற்றங்களைத் தங்களை அறியாமலே, முறையிடுதல் இயல்பு. அக்கரவிலா முறையீடு அவர் தம் பாவக்கழிவிற்கு வழி காட்டுவதாகும். தங்குறை பாடுகளை முறையிட்ட பொருட் பெண்டிரைப்பற்றி, 'நமது வழுக்கிய சகோதரிகள்' என்னுந் தலைப்பிட்டு 'யங் இந்தியா'வில் அடிகள் எழுதிய கட்டுரை எனது கருத்தை விடுத்து என்றும் அகலாதவொன்று. அக் கட்டுரைக்கண் அவர் பொறித்துள்ள பொருண் மொழிகள் அவர் சகோதரிகள்மீது கொண்ட அன்பைப் புலப்படுத்துவனவாம். அவைகளுள் சில வருமாறு:—

'மானம் விற்று வயிறு வளர்க்கும் மாதர்களை ஆந்திர தேசத்தில் கோகநாடாவில் முதல்முறை சந்திக்கும் வாய்ப்புக்

கிடைத்தது. ஆங்கு என்பால் பேசப் போந்தவர் ஒரு சிலரே. இரண்டாம் முறை அவ்வினத்தாரைப் பாரிஸாலில் காணல் நேர்ந்தது. நூறு பேருக்கு மேலாக முன்னேற்பாட்டின்படி அவர் போந்தனர். * * * * * * * * *

'அவர் பொருட்டுப் பேசப் போந்தவர் சிறிது தயங்கியே கடிதங் கொடுத்தார். அக்கடிதம் பெறுவதில் எனக்கு உவப்புண்டாமோ காய்வுண்டாமோ என்பது அவரது ஐயம் போலும்! இயலுமேல் எவ்வழியிலாதல், அச்சகோதரிகளுக்குத் தொண்டு செய்தல் எனது கடன் என்று அவருக்கு உறுதி கூறினேன். அச்சகோதரிகளோடு நான் இரண்டு மணி நேரம் பேசியது எனது நினைவில் புதைப்பட்டுக் கிடக்கிறது. * * * * * * *

'அச்சகோதரிகள் பாரிஸால் ஆண்மக்கள் வெட்கக் கேட்டைத் தெரிவித்தார்கள். பாரிஸால் அத்தீமையினின்றும் தன்னைத் தவிர்த்துக்கொள்வது தனது பெரும் பேருக்கு நலந்தருவதாகும். இக்குறை எந்நகரத்திலுமுண்டு. பாரிஸாலை உதாரணமாக இங்கே குறிப்பிடுகிறேன். சகோதரிகளை நன்னெறியில் திருப்புந்தொண்டு செய்யவேண்டிய பொறுப்பு பாரிஸால் இளைஞருடையது. * * *

'மானமுள்ள இந்தியாவில் ஒவ்வோராண்மகனும் தன்னுடைய சகோதரியைப்போல் (மற்றப் பெண்மணிகளைக்) கருதிக்கொண்டால் பெண்மக்களின் நல்லொழுக்கங் காக்கப்படும்.

'இந்திய மக்களை ஒவ்வொருவரும் தம் சகோதரர் என்று கொள்ளும் பேராண்மையே சுயராஜ்யம். * * *

'நாம் நமது வேட்கையை அடக்கப் பயிலல் வேண்டும். அதனால் அப்பெண்மணிகள் மேலான ஒரு தொழில் தேட முயலுமாறு வாழ்வில் அவசியம் ஏற்படல்வேண்டும். * *

'நமது துராசையை ஒடுக்கித் தூயராகா தொழிவமேல், ஒத்துழையா இயக்கம் ஒன்றுமில்லாமற் போகும். * * *

'அச்சகோதரிகள் நாடோறும் சராசரி இரண்டு ரூபா சம்பாதிப்பதாகச் சொற்றூர்கள். மனிதனது வேட்கையை எழுப்புவதில் சிறிது பொருள் செலவாகிறது என்றும், நூற்றலிலும் நெய்தலிலும் அறிவைச் செலுத்தி இயற்கை வாழ்வில் தங்கள் கருத்தைச் செலுத்துவாராஞல், அச் செலவின்றி வாழ்தல் கூடும் என்றுஞ் சொன்ஞர்கள். * *

காந்தியடிகள் அப்பெண்மணிகளோடு பேசிக் கைராட்டினஞ் சுழற்றி, ஒழுக்கம் ஓம்பி, அதஞல் பெறும் வருவாய் கொண்டு, வயிறு வளர்த்து, இயற்கை வாழ்வில் ஈடுபடுமாறு அறிவுறுத்தியதன் நுட்பத்தை உணரும் ஆற்றல் அவர்கட்கிருந்தமை அவர்களது கூர்த்தமதியைப் புலப்படுத்துகிறது. காந்தியடிகள் எல்லாவகைப் பெண்களிடத்தும் பேரன்பு வாய்ந்தவர் என்பதற்கு இன்னுஞ் சான்றுகள் வேண்டுமோ ?

அணிகள்

ஆண்மக்கள் பொருட்டுத் தங்களைச் செயற்கைக் கலன்களால் பெண்மக்கள் மூடிக்கொள்ளலாகாது என்று காந்தியடிகள் சமயம் நேரும்போதெல்லாஞ் சொல்வது வழக்கம். தென்னுப்பிரிக்காவில் அன்புப் பரிசிலாக அளிக்கப்பெற்ற சில அணிகலன்களை அடிகள் திருப்பிப் பொது அறத்துக்கென அளித்தது ஈண்டு நினைவிற்கு வருகிறது.

'பெண்மகள் தன்னை ஆண்மகன் காமப்பொருள் என்று நினைக்குமாறு நடப்பதை அறவே விட்டொழித்தல் வேண்டும். இதற்கு மருந்து ஆண் மக்களினும் பெண்மக்களிடத்திலேயே இருக்கிறது. பெண்மகள் தான் ஆண்

மகனைப்போலச் சம உரிமையுடையவளாக இருக்கவேண்டு மானால் அவள், நாயகன் உள்ளிட்ட எம்மனிதர் பொருட்டுந் தன்னை ஒப்பனை செய்து (அலங்கரித்துக்) கொள்ள மறுத்தல் வேண்டும். ஒப்பனையால் சீதாபிராட்டியார் ஸ்ரீராமனை ஒரு பொழுதாவது மயக்கினர் என்று தெரிய வில்லை'.

என்று அடிகள் கூறியிருத்தல் காண்க.

உரிமை பொது. அஃது ஆணுக்கும் உண்டு; பெண்ணுக்கும் உண்டு. பெண்ணுரிமையை மட்டும் கடிவது இயற்கையாகாது. ஆண் விருப்பப்படி நடமாட லாமாம்! பெண் அவ்வாறு நடமாடுதல் கூடாதாம்! இதற்கு இயற்கையில் ஏதேனும் நியதி இருக்கிறதா? ஆணுலகின் கொடுமை என்னே! விரும்புமிடத்துக்குப் பறவை செல்கிறது; விலங்கு செல்கிறது. இவைகளுக் குள்ள உரிமைகூட ஆறறிவுடைய பெண் மக்களுக்கு இல்லையே! பெண்ணொளி சிறைபட்டுக் கிடக்கிறது; முகமூடியால் மறைபட்டுக் கிடக்கிறது. பர்தாமுறை காந்தியடிகட்குப் பிடிப்ப தில்லை. அதைக் கடிந்து அவர் கூறிய வீரமொழிகளிற் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறேன். அவை காந்தி யடிகளின் கருத்தை விளக்குவனவாகும்.

**பர்தா முறை**

'* * * வங்கம், பீஹார், ஐக்கிய மாகாணம் ஆகிய இடங்களில் பர்தா முறை அதிகம். அவ்விடங்களுக்குச் சென்றபோதெல்லாம் அக்கொடுமை என்னுள்ளத்தை உறுத்துவது வழக்கம். அக்கொடிய முறை மற்றவிடங் களில் அவ்வளவு கொள்ளப்படுவதில்லை. * * * * * * * தர்பங்காவில் ஒரு முறை இரவில் பேசுதல்

நேர்ந்தது. அவ்விடத்தில் நடைபெற்றது ஒரு கால்கோள் விழா. அங்கே பெருங்கூட்டம் திரண்டது. என் முன்னே ஆண்மக்கள் கூட்டம் ஈண்டி நின்றது; பின்னே திரை இடப்பட்டிருந்தது. அதன் மறைவில் பெண்மக்கள் கூட்டம் செறிந்திருந்தது. முதலில் இக்கூட்டமிருந்ததே எனக்குத் தெரியாது. இக்கூட்டத்தை நோக்கியும் பேசு மாறு யான் கேட்கப்பட்டேன். எனது நெஞ்சம் புண் பட்டது; வருந்தியது. ஆணுலகின் அநாகரிகக் கொடுமை நன்கு விளங்கியது. * * * * *

* * * படித்தவர் வீடுகளிலும் பர்தாமுறை கொள்ளப் படுகிறது. அதில் அவர்க்கு நம்பிக்கை இன்மை எனக்குத் தெரியும். ஆனால் கொடுமையை எதிர்த்துப் போரிட்டு ஓட்டும் அஞ்சாமை - வீரம் - ஆண்டகைமை - அவரிட மில்லை. * * * *

ஆண்மக்கள் நுகர்ந்து வரும் உரிமை இன்பத்தைப் பெண் மக்கள் ஏன் நுகர்தல் கூடாது? இவர்கள் பரந்த வெளியில் ஏன் உலவுதலாகாது? தூய நறுங்காற்றைச் சகோதரிகள் முகர்ந்தாலென்ன? * * * * *

* * * கற்பு உரிமையுடையது. அது நான்கு சுவர் சூழ்ந்த சிறைக்களத்தில் - வெம்மை வீட்டில் - சட்டுப் பாட்டில் - வளர்வதன்று. அஃது உள்ளத்தினின்றும் வளர்ந்து ஓங்குதல் வேண்டும். அது பலவித வெளிச் சோதனைகளை எதிர்த்துக் கடந்து வளரும் இயல்பினது. *

* * * உரமான முயற்சியால் பர்தாவைக் கிழித்து எறி வோமாக. இளைஞர் உலகம் அத்தொண்டு புரிய எழுவ தாக; விரைந்து எழுவதாக.

**வரதட்சிணைக் கொடுமையும் நம் நாட்டிலுண்டு. அதையும் காந்தியடிகள் மறுத்துள்ளனர். ‘மணத்தின்**

போது வரதட்சிணையை ஒரு நியதியாகக் கொள்ளும் இளைஞன் அவனது கல்வியையும் நாட்டையும் பெண்மையையும் பழிப்பவனாகிறான்' என்று காந்தியடிகள் கழறியது ஈண்டு நோக்கற்பாலது.

தட்சிணை

மணஞ்செய்துகொள்ள வேண்டாமென்றும், செய்து கொள்ளினும் மெய்யுறு புணர்ச்சி நிகழ்த்தலாகாதென்றும் காந்தியடிகள் மக்கட்குச் சொல்வதென்னை என்று அன்பர் சிலர் ஐயுறலாம். காரணம் பலபடக் கூறலாம். மூன்று சிறப்பாகக் கூறுதல்கூடும். ஒன்று மனிதருள்ளத்துள்ள காமவேட்கைக் கருத்தை மாற்றல் வேண்டுமென்பது; இன்னொன்று நாட்டில் பிரமசரிய விரதத்தை உயிர்ப்பித்து மக்களைச் சுயராஜ்யப் போருக்கு ஆண்டகையாளராக்கல் வேண்டுமென்பது; மற்றொன்று வறுமை மேலீட்டான் உயிர்கள் வருந்துவதைக் கண்டு மனமிரங்கி உயிர்ப்பெருக்கை நிறுத்தல் வேண்டுமென்று கருதுவது. இவை அடியேன் கருத்துப்படி குறிக்கப்பெற்றன. 'மனிதன் உயிர்பபெருக்கையுந் தடுத்தல் வேண்டும்; காமவேட்கையையும் நிறைவேற்றல் வேண்டும்' என்ற எண்ணத்தால் சிலர் கூறுஞ் செயற்கை முறைகள் காந்தியடிகளால் மறுக்கப்பட்டன. எவ்விதச் செயற்கை முறையுமின்றி நேர்படப் பிரமசரியம் காப்பதே சிறப்பு என்று காந்தியடிகள் எழுதிய கட்டுரைகள் பலப்பல. செயற்கை முறைகள் உடல் நலங் கெடுத்துப் பலதிற நோய்களைப் பெருக்குமென்பது ஒருதலை. அதைப்பற்றி ஈண்டு விரித்துக் கூறவேண்டுவதில்லை.

பிரமசரியம்

இல்லற வாழ்வு இயற்கை வாழ்வு. அதற்குரிய பெண்ணினல்லாளது பெட்புணர்ந்து அவளைப் போற்றி ஆண்மகன் வாழ்ந்தால் எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கொண்டு இறைபணியாற்றும் பேறும், அதன்வழி மன மாசகலப் பெற்று அன்பு மயமாகும் பேரின்பப் பேறும் இவ்வுலகிலேயே அவன் பெறலாம். பண்டைக் காலத்தில் நமது நாட்டில் இல்லற இன்பத்தால் ஒவ்வொரு வீடும் கயிலாயமாகவும் வைகுந்தமாகவும் இருந்தது. இப்பொழுது பிறநாட்டு அநாகரிகத் தீட்டால் இந்தியக் குடும்ப வாழ்க்கைகள் கெட்டுவருகின்றன. இக்காலத்தில் காந்தியடிகளின் இல்வாழ்க்கை பண்டை இந்திய வாழ்க்கைக்கு ஓரிலக்கியாக நிற்கிறது. ஆண்மக்கள் காந்தியடிகளின் ஒழுக்கத்தையும், பெண்மக்கள் காந்தியடிகளின் மனைவியாரின் ஒழுக்கத்தையுங் கடைப்பிடித்து வாழ்க்கையை நடாத்துவார்களாக. காந்தியடிகள் இல்லறம் போன்ற இல்லறமும் மனித வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவதாகும்.

## அ. தியாகம்

இல்லறத்தின் உயிர்நிலை தியாகத்தில் பொருந்தியிருக்கிறது. தியாகமில்லாத இல்லறம் இல்லறமாகாது. உடல் பொருள் ஆவி மூன்றையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வே இல்லறம் என்னும் நல்லறம் ஏற்பட்டது. அன்பு வளர்ச்சிக்கு அடிப்படை இல்லறமெனின், அதன்கண் தியாகம் நிகழ்ந்தே தீரல்வேண்டும். தியாகம் முதிர முதிர அன்பு பெருகிப் பெருகிப் பொங்கும்.

தன்னலத்தில் அன்பேது? அருளேது? ஆகவே, இல்லறத்துக்கு இன்றியமையாதது தியாகம்.

தியாகம் ஒருவனது பருஉடல் உணர்வை அரித்து அரித்து உள்ளொளியை (ஆத்ம சக்தியை) ஒளிரச் செய்யும். தனக்குள்ள எல்லாவற்றையும் உவகையோடு பிறர்க்களிக்கும் மனமுடைமை தியாகத்தின் இயல்பு. தனக்கென ஒன்றுண்டு என்று கருதுகிறவன் தியாகியாகான். உள்ளதை ஈந்து உவப்பவன் தியாகி. அவன் பிறர்பொருட்டு வாழ்கிறானாகலின், அவனை உலகம் காரணமின்றியும் போற்றும். என்னை? அவன் எண்ணம் பேச்சு செயல் பிறர்நலங் குறித்தெழுதலால் என்க.

தியாகி

இம்மண்ணுலகில் காந்தியடிகளை மகாத்மாவாக்கியது எது? அவரது தியாகம். அப்பெரும் பெயர் பெறுதற்கு அடிகள் எம்முயற்சியிலாதல் தலைப்பட்டுழைத்தனரோ? இல்லை; இல்லை. அவர் தமக்கென ஒன்றின்றி எல்லாவற்றையுந் தியாகஞ் செய்தமையால் உலகம் அவரை மகாத்மா எனப் போற்றுகிறது. காந்தியடிகள் பாரிஸ்டர் தொழில்புரிந்து பெரும் பொருளீட்டிச் செல்வக் கள்ளாட்டயர்ந்து வதிவரேல் அவரை மகாத்மாவென உலகம் போற்றுது. அடிகள் வாழ்க்கையில் யாண்டு எங்ஙனம் தியாகங் கால்கொண்டது என்பதை ஆராய்வோம்.

காந்தியடிகள் பொருள் வேட்கை மிகுந்த குலத்தில் பிறந்தவர்; செல்வத்திற் சிறந்த அமைச்சர் புதல்வர். அவரது வாழ்க்கை செல்வக் கருவினின்றும் அரும்பி மேல் நாட்டு நாகரிகத்தில் அலர்ந்து நின்றது.

அவர் தொழிலோ பாரிஸ்டர் தொழில். உலகிலுள்ள பொருளெல்லாம் விழுங்கினும் அத்தொழிற் பேய்க்கு வேட்கை தணியாது. இத்துணைச் செல்வக் களிப்பிற்சிக்கி மயக்குற்றுக் கிடந்த காந்தியடிகள் இப்பொழுது கீளார் கோவணத்தோடு ஆண்டியாய் வாழ நேர்ந்தமை ஒரு பெரும் வியப்பென்றே சொல்லலாம்.

ஆண்டி

இத்தகைய வாழ்வு பின்னைத் தமக்கு வரும் என்று காந்தியடிகள் எதிர்பார்த்தனரோ? எதிர்பார்த்திருப்பரேல் அவர் இங்கிலாந்துக்கு ஏகி யிருக்கமாட்டார்; பாரிஸ்டர் பரீட்சைக்குஞ் சென்றிருக்கமாட்டார். நாளை நிகழ்வதை எவரே அறியவல்லார்! எல்லாவற்றையும் அறிய வல்லவன் ஆண்டவன் ஒருவனே. எல்லாரையும் ஆட்டுவிப்பவனும் அவ் வொருவனே. அவனன்றி ஓரணுவும் அசையாது. இந்நாளில் தியாகத்தால் ஆன்மசக்தி மாண்பை உலகுக்கு உணர்த்தப் பிறந்தவர் காந்தியடிகள் என்பது ஆண்டவனுக்குத் தெரியும். அந்நிலை எய்துதற்கென்று தோன்றிய காந்தியடிகளுக்கு முதலில் ஒன்றுந் தெரியாது. எல்லாம் வல்ல இறைவன் அடிகளை எவ்வெவ் வழியில் தண்ணருளால் ஆட்டி அலைத்து ஆன்மசக்தியை எழுப்பினான்! ஆருயிர் நேயர்களே! அமைவுடன் ஆயுங்கள். உலகமே உண்மையென்றும், உடலுக்கு வேறாக உயிர் இல்லையென்றும், பொய் வாழ்க்கை நடாத்தும் மாக்கள் கூட்டம் பெருகிப் பிறரைத் துன்புறுத்தும் பொல்லாப் புலைநெறி பரவிவரும் இந்நாளில், காந்தியடிகள் வழி,

ஆண்டவன் அடிகளை நடுத்தாளல்

உள்ளொளியின் நுட்பத்தையும், எவ்வுயிர்க்கும் மனத் தாலுந் தீங்கு நினையா அருள் நெறியையும் உலகுக்கு அறிவுறுத்தி வரும் ஆண்டவன் அருட்டிறத்தை ஏழை யேன் என்னென்று புகழ்வேன்! என்னென்று போற்று வேன்! இங்கே,

நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக் கடவே னானேதான் என்ன தோவிங் கதிகாரம்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே'

என்னுந் திருவாசகத்தில் 'நான் கலந்து' நிற்கிறேன்; அழுகிறேன். என்னே இவ்வுலகம்! என்னே இவ்வுடல்! என்னே இவ்வாழ்வு! எல்லாம் அவனுடைமை; எல்லாம் அவன் செயல். எனக்கென்ன இங்கே அதிகாரம் உண்டு? இவைகளை எனக்களித்த ஆண்டவனை மறந்து எவ்வாறு வாழ்வேன்? ஆண்டவன் அருள் ஒவ்வொரு வரையும் மாய வாழ்வினின்றுந் தடுத்தாள்கிறது. அவ் வருள்வழி வாழ்வோர் தியாகமூர்த்திகளாய் அகவிளக் கம்பெற்று மற்றவர்க்கென வாழும் பெருவாழ்வு பெறுவர். அவ்வருள்நெறி உணர்ந்தும், அதற்கு மாறு பட்டு வாழ்வோர் உள்ளொளி காணாது தன்னல இருளில் வீழ்ந்து இடர்ப்படுவர். எங்குமுள்ள ஆண்ட வனைக் காணாது எப்படி வாழ்தல் முடியும்? நீக்கமற நம்மிற் கலந்து நம்மை ஆண்டவன் நடத்துகிறான். அவன் செயலை, முனைப்பால் தன் செயலாகக் கொள்ளும் அறியாமை அகக்கண்ணை மறைத்து நிற்கிறது. அறி யாமையின் வன்மை என்ன? நுட்பமுணர்ந்தோர்க்கு அறியாமை புன்மையே. இதோ! ஆண்டவன் காந்தி

யடிகளை எவ்வழியில் தடுத்தாட் கொள்கிறான். பாருங்கள் !

காந்தியடிகள் பாரிஸ்டர் பரீட்சையில் தேறி மிக மிடுக்காகப் பம்பாய் மன்றங்களில் தொழில் புரியப் புகுந்தார். ஆனால் தொழிலில் அவர் வெற்றி பெற்றாரில்லை. முதல் வழக்கிலேயே நடுக்கமும் மயக்கமுந் தோன்றி அவர் ஊக்கத்தைக் குலைத்தன. வக்கீல் தொழிலில் அவருக்கு வெறுப்பு உண்டாயிற்று ; உண்டாகவே காந்தியடிகள் ஆசிரியத் தொழிலை நாடினர். அதுவுங் கூடவில்லை. அடிகளுக்குப் பம்பாய் மன்றத்தில் தோன்றிய நடுக்கமும் மயக்கமும், ஆசிரியத் தொழில் கூடாமையும் ஆண்டவனருளால் தோன்றிய தடைகளாகும். பம்பாயில் தொழின்முறை கூடியிருப்பின் காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா நோக்கியிருப்பரோ ? காந்தி, அடிகளாக வேண்டிய இடம் தென்னாப்பிரிக்கா என்று அவர் தலையில் எழுதப்பட்டுள்ளது. அவர் அதை உணராது உள்ளம் நைந்து நைந்து உருகினர். அந்நிலையில் ஒரு வழக்கை முன்னிட்டுக் காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா செல்லல் நேர்ந்தது. அங்கே காந்தியடிகள் மனிதரானார். காந்தியடிகட்கு மாயையின் கொடுமைகள் திரள் திரளாகப் புலனாயின. அவைகளைக் காணக் காணக் காந்தியடிகட்குப் பொய்யின் புன்மையும் மெய்யின் மேன்மையும் விளங்கின. உண்மை விளங்கியும் பொய்வழி புகுந்துழல்வது ஆண்டவனை மறந்த செயற்கைநெறி பற்றி ஒழுகுவதாகும். செயற்கை நெறிபற்றி ஒழுகுவோர் மனிதப் பிறவிக்குரிய

அடிகள் மனிதரா ய இடம்

வாழ்வு பெறல் அரிது. பொய் வழி என்று ஒன்று புலப்பட்டதும், அதை விடுத்து மனச்சான்று வழி நடப்பது, ஆண்டவன் இயற்கை நெறிபற்றி ஒழுகுவதாகும். இந்நெறி பற்றி ஒழுகுவோர் பின்னை மனிதப் பிறவிக்குரிய இன்ப வாழ்வு பெறுவர். பொய்மை என்று தோன்றும் ஒன்றை விடுத்தகன்று, செம்மை வழிச் செல்லும் பயிற்சியில் காந்தியடிகள் தலைப்பட்டமையால், அவர்க்குத் தியாகத்தில் விருப்பும் ஆன்ம சக்தியில் உறுதியும் ஏற்பட்டன.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நெட்டாலில் வதிந்து தந்தொழில் நடாத்தியபோது, ஆங்கே வெள்ளை நிறத்தார் கறுப்பு நிறத்தாரை இழிவாகக் கருதிப் பேசுவதும், நடாத்துவதும், பிறவும் அவர் உள்ளத்தைக் குழையச் செய்தன. 'தோல்நிறம் எவ்வாறிருந்தாலென்ன? உயிரில் வேற்றுமை இல்லையே. எல்லா உயிர்களும் கடவுள் படைப்பல்லவோ' என்னும் ஆன்மஞான உணர்வு காந்தியடிகட்குத் தோன்றலாயிற்று. முன்னை வினையானும், ஆண்டவன் அருளானும் தோன்றிய அவ்வுணர்வு மறைவுறா வண்ணம் ஆங்கே பலப் பல கொடுமைகள் நிகழ்ந்தன.

நிறவேற்றுமை

தென்னாப்பிரிக்கா நிகழ்ச்சிகள் பற்பல. அவைகளை முறைமுறையே ஈண்டுத் தொகுத்துக் கூறவேண்டுவதில்லை. அவைகளை அடிகள் வரலாற்றிற் காண்க. இந்நூலின் நோக்கிற் கேற்பச் சிலவற்றை ஈண்டுப் பொறித்துச் செல்கிறேன்.

**துன்பக் காட்சி**

காந்தியடிகள் துறைமுகம் நண்ணியபோதே ஆங்குக் கருமைக்குள்ள சிறுமையும் வெண்மைக்குள்ள பெருமையும் அவர்க்குப் புலனாயின. தம்மை எதிர்கொண்டழைக்கப் போந்த வழக்காளர் அப்துல்லா சேத்தினிடமும், பிற இந்தியரிடமும் வெண்ணிறத்தார் நடந்துகொண்ட பான்மை அடிகள் கருத்தை ஈர்த்தது. இதுவே அடிகளுக்குற்ற முதல் 'தீட்சை' என்னலாம்.

மற்றுமொரு 'தீட்சை' வருமாறு :—மகாத்மாகாந்தி டர்பன் சேர்ந்த இரண்டாம் நாளோ மூன்றாம் நாளோ அன்பர் அப்துல்லா சேத், அடிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்று, ஆங்குள்ள சிலருக்கு அவரை அறிமுகஞ் செய்வித்துத் தமது அட்டர்னி பக்கல் அமர்த்தினார். மாஜிஸ்ட்ரேட் சிறிது நேரம் மகாத்மாவை உற்று நோக்கித் தலைப்பாகையை நீக்குமாறு அவருக்குக் கட்டளை யிட்டார். இந்தியர் தலைப்பாகை மாஜிஸ்டிரேட்டுக்கு எங்ஙனந் தோன்றிற்றோ தெரியவில்லை. அடிகள் தம் பாகையை நீக்க மறுத்து வெளியேகி விட்டார்.

**தலைப் பாகைப் போர்**

பின்னைத் தொழில் கருதி ஆங்கில முறையில் தொப்பி அணியக் காந்தியடிகள் எண்ணினார். அன்பர் அப்துல்லா சேத் நிகழ்த்திய தடையால் அடிகள் நீதிமன்றத்தில் தலைப்பாகையைத் தவிர்க்க ஒருப்படாது நிகழ்ந்ததைப் பத்திரிகைகட்கு எழுதினார். சின்னாள் அது குறித்துப் பத்திரிகைப் போர் நிகழ்ந்தது. அதனால் காந்தியடிகள் பெயர் ஒருவாறு விளம்பரமாயிற்று.

தலைப்பாகையைப் பற்றிய வேறொரு நிகழ்ச்சி ஈண்டு நினைவிற்கு வருகிறது. காந்தியடிகள் ஒருநாள் நியாய மன்றத்தில் சிறிது நேரம் தாமதிக்க நேர்ந்தமையான், தமது தலைப்பாகையை ஆங்கிருந்த குல்லாத் தாங்கியில் மாட்டினார்; மாட்டினதும் ஒரு குற்றேவலாளன் ஆண்டுப் போந்து, முகஞ் சிவக்க வெகுண்டு, 'ஏ! அப்பாகையை எடு; கறுப்பர் பாகை மாட்டுதற்கு இஃது இடமன்று' என்று சீறி ஞமலிபோல் விழுந்தான். அமைச்சர் புதல்வர் - பாரிஸ்டர் - ஆங்கில உடையர் - விழிக்கிறார். காந்தியடிகள் எப்பொழுதாயினும் அவ்விழி மொழி கேட்டிருப்பரோ? அச்சொல்லம்பு அடிகள் நெஞ்சை எப்படித் துளைத்திருக்குமென்று சொல்லலும் வேண்டுமோ? எம்பெருமான், 'என்னே இந்தியர் நிலை' என்று எண்ணி எண்ணி ஏங்குவார்; என் செய்வார் பாவம்! இவ்வாறு 'தீட்சைகள்' ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடரலாயின.

வழக்கின் பொருட்டுக் காந்தியடிகள் நெட்டாலினின்றும் பிரிடோரியாவிற்கு முதல் வகுப்பில் அமர்ந்து சென்றார். அணித்தேயுள்ள மாரிட்ஜ்பர்க் நிலையம் வண்டி சேர்ந்ததும் அவ்வகுப்பிலிருந்த ஒரு வெண்ணிறத்தான் கார்டை அழைத்து, 'இவரை வேறு வண்டிக்குப் போகச்சொல்' என்றான்.

**மானக்கேடுகள்**

கார்ட், அடிகளை நோக்கி, 'இம்முதல் வகுப்பில் நீ செல்லலாகாது; வேறு வண்டிக்குப்போ' என்று கட்டளையிட்டான். காந்தியடிகள் முதல் வகுப்புச் சீட்டைக் காட்டி மறுத்தார். உடனே கார்ட் போலீஸ் காரனை அழைத்துச் சொல்ல, அவன் வண்டியை விட்டு

இறங்குமாறு அடிகளைப் பார்த்துச் சொன்னான். அடிகள் மறுத்ததும் அப்போலீஸ் விலங்கு அவரை முட்டித் தள்ளிற்று. வண்டி புறப்பட்டுவிட்டது. பொழுதோ இரவுப்பொழுது! காலமோ பனிக்காலம்! அமைச்சர் புதல்வர் பனியில் நனைகிறார்; பாரிஸ்டர் குளிரால் மெலிகிறார். அவ்வேளையில் காந்தியடிகள் நிறவேற்றுமையின் கொடுமையை உன்னி உன்னித் தம கடனை உணர்கிறார். அடிகள் நெஞ்சம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. 'உரிமைக்காக ஈண்டுப் போர் புரிவதா? இந்தியாவிற்குத் திரும்புவதா? மானக்கேடுகளைப் பொருட்படுத்தாது பிரிடோரியாவில் வழக்கை முடித்துக் கொண்டு தாய்நாடு நோக்குவதா?' என்று அடிகள் நினைக்கிறார்; நெஞ்சஞ் சுழல்கிறது. 'இயற்கைக் கடனை முற்றும் ஆற்றாது திரும்புவது ஆண்டகைமையாகுமா?' என்று அவர் நெஞ்சில் எழுச்சி வீறிடுகிறது. 'கொடுமைகட்குக் காரணம் நிற வேற்றுமையே. இது குறித்துப் போராடுவதே சிறப்பு. அப்போரில் என்ன விளையினும் விளைக' என்னும் உறுதியில் இறுதியாக நம்பெருமான் உள்ளம் புதைந்தது. இங்கேதான் அடிகளின் தன்னல இருள் இரியலாயிற்று; அவர்பால் பிறர் நல ஞாயிறு எழலாயிற்று; தியாகம் கால் கொண்டது.

மாரிட்ஜ்பர்க்கில் அடிகள் சில மணிநேரங் கழித்துப் பின்னை போந்த புகைவண்டியில் ஏறிச் சார்லஸ்டவுன் சேர்ந்தார். அங்கிருந்து ஜோனஸ்பர்க்குக்குப் போக அந்நாளில் புகைவண்டி கிடையாது. அடிகள் ஒரு குதிரை வண்டியிலேறிச் சென்றார். அவ்வண்டித் தலைவன், கரியர் என்னுங் காரணத்தால் அடிகளை வண்டிக்

காரன் பக்கத்தில் இருக்கச் செய்தான். இடையில் அத் தலைவன், 'நான் காற்று வாங்கிச் சுருட்டுப் பிடிக்க வேண்டும். அப்புறம் போ' என்று காற்படியைக் காட்டி, 'இப்படியில் இரு' என்றான். காந்தியடிகள் மறுத்ததும் இரக்கமிலா அவ்வரக்கன் அடிகள் முகத்தில் ஓர் அறை அறைந்தான். அடிகள் கீழே சாய்ந்து கம்பியைப் பற்றிக்கொண்டார். செங்குருதி பொங்குகிறது. நம்பெருமான் அன்று கம்பியைப் பற்றாதிருப்பாரேல் அவரை இன்று மகாத்மாவாக நாம் பார்த்திருக்க மாட்டோம். உலகுய்யத் தோன்றிய ஒருவரை ஆண்டவன் கைவிடுவானோ? அக்காட்சிகண்ட மற்ற வெள்ளையர் அடித்தவனை நோக்கி, 'அவரை அடியாதே; அவர்மீது பிழையில்லை. அவர் இங்கே உள்ளே போந்து எம்முடன் இருக்கட்டும்' என்று சொல்லித் தணிவு செய்தனர். பின்னை அவன் அடிகளை விடுத்து, 'ஸ்டாண்டர்டன் போனதும் பார்' என்று கனன்று சென்றான். அச்சொல் புண்ணில் புளிபெய்ததுபோல் காந்தியடிகளுக்கு உற்றிருக்கும்.

ஜோகனஸ்பர்க்கிலிருந்து பிரிடோரியா நண்ணப்பெரு முயற்சி செய்து முதல்வகுப்புச் சீட்டுப் பெற்று அடிகள் புகைவண்டி ஏறிச் சென்ற வேளையில், வழியில் ஜெர்மிஸ்டன் என்னுமிடத்தில், சீட்டைப் பார்க்கப் போந்த கார்ட், மகாத்மாவின் இந்தியத் தோற்றங் கண்டதும் வெகுண்டு, 'மூன்றாம் வகுப்புக்குப் போ' என்று சுட்டிக் காட்டினான். அடிகள் முதல் வகுப்புச் சீட்டைக் காட்டினார். கார்ட் 'அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. மூன்றாம் வகுப்புக்கு ஓடு' என்று அடிகளை

முடுக்கினான். அங்கே அடிகளுடன் ஒரே ஆங்கிலேய
னிருந்தார். அந்நல்லார் கார்ட்டைப் பார்த்து
'இவரை எதற்குத் தொந்தரவு செய்கிறீர்? இவரிட
முதல் வகுப்புச் சீட்டிருக்கிறது. அதை நீர் பார்க்க
வில்லையா? இவர் இங்கே இருப்பதைப் பற்றி எனக்
எவ்விதத் தடையுமில்லை' என்று அவனைக் கடிந்தா
அம்மொழி கேட்ட கார்ட், 'கூலியுடன் செல்ல நீே
விரும்பினால் எனக்கென்ன?' என்று சொல்லிக் கொண்ே
அகன்றான். பிரயாண காலங்களில் இத்தகைத் தொல்ல
கள் பல நேர்ந்தன.

காந்தியடிகள் கறுப்பு மனிதராதலால் மன்றத்தி
பாரிஸ்டர் தொழில்புரிய ஆணை தரலாகதென்று
வெள்ளைப் பாரிஸ்டர்கள் நீதிபதிக்கு விண்ணப்ப
செய்தார்கள். அவ்விண்ணப்பம் பயன்தாராதொழிந்தது
பாரிஸ்டர் தொழிலிலும் நிறவேற்றுமை கருதப்பட்டது

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் இந்தியரை
கூலிகள் என்றழைப்பது வழக்கம். இக்காரணத்தா
காந்தியடிகளும் கூலி பாரிஸ்டர் என்றழைக்கப்பட்டா

காந்தியடிகள் தெருக்களில் உலாவுவதுகூட வெள்
ளைநிறத்தார்க்குப் பிடிப்பதில்லை. ஒருமுறை அடிக
போலீஸ்காரனால் அடியுண்டு வீழ்த்தப்பட்டார். இவ
ைரன்ன மானக்கேடுகள் ஒன்றா இரண்டா? பலப்ப
மானக்கேடுகள் காந்தியடிகள்பாலுள்ள களிம்பை
போக்குங் கசப்பு மூலிகைகள் போன்றனவாயின
மானக் கேடுகள் நிகழ நிகழக் காந்தியடிகளுக்கு ஆன்ம
ஞான உணர்வு பெருகலாயிற்று. அப் பெருக்கம
அவரைத் தியாக மூர்த்தியாக்கிற்று.

காந்தியடிகள் மானமழிவதைப் பொறுத்துக் கொண்டும், கிறிஸ்துவப் பாதிரிமார் நட்புக்கொண்டும், கிறிஸ்துவக் கோயில்களுக்குப் போய்க் கொண்டும், பைபிலை ஊன்றி ஆராய்ந்தும் காலங்கழித்து வந்தார்.

டால்ஸ்டாய்

அவ்வேளையில் எய்ப்பினில் வைப்பென ருஷ்ய தேசத்து அறிஞர் டால்ஸ்டாய் எழுதிய சில நூல்கள் காந்தியடிகட்குக் கிடைத்தன. அந்நூலாராய்ச்சி காந்தியடிகளை அந்நிலையில் மனிதராக்கிற்று என்றே சொல்லலாம். ரஸ்கின் நூல்களும் அடிகள் வாழ்விற்குத் துணை புரிந்தன.

காந்தியடிகள் ஒரு பக்கம் தென்னாப்பிரிக்கா வெள்ளையர் அஞ்ஞானத்தைக் காண்கிறார்; மற்றொரு பக்கம் டால்ஸ்டாய் ஞானத்தைக் காண்கிறார்; தூர்ந்திருந்த இந்தியக் கலையுணர்வு முன்னே தோன்றுகிறது. இம்மூன்றும் மூர்க்க சக்தியினும் ஆன்ம சக்தியே மேலானது என்னும் மெய்யறிவைக் காந்தியடிகள் உள்ளத்தில் பதித்துவிட்டன. காந்தியடிகட்கு மேல் நாட்டு உடல் வாழ்வில் வெறுப்பும், கீழ்நாட்டு எளிய இயற்கை உயிர் வாழ்வில் விருப்பும் உண்டாயின. இவ்வெறுப்பு விருப்புக்கள் அடிகளைப் பல்லாற்றானும் பண்படுத்தின.

ஆன்ம நிவேதனம்

தென்னாப்பிரிக்கா வெள்ளையரையும், ஆங்குச் சிறுமைப்பட்ட இந்தியரையும் ஆன்ம சக்தியால் ஒரு நிலைக்குக் கொணர்ந்து, அருநெறி ஓம்பல் வேண்டும் என்று எண்ணித் தென்னாப்பிரிக்காவிலேயே தங்கித் தொண்டு செய்ய அடிகள் உறுதிகொண்டார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர் அந்நாளில் உற்றிருந்த நிலையை

எழுத்தால் எழுதல் முடியாது. ஆங்கிலம் பயில் பாரிஸ்டராய் வழக்க ஒழுக்கத்தில் மேல் நாட்டாவ போல வாழ்வு நடாத்திய காந்தியடிகளே அடி உதையும் பட்டாரெனில், ஆங்கிலப் பயிற்சியுமில் மேல்நாட்டு வழக்க ஒழுக்கமுந் தெரியாத ஏழை இந்தி எத்திற இடுக்கணுற்றிருப்பர் என்பதைக் கூற வேண்டுமோ?

தென்னுப்பிரிக்கா வெள்ளையருக்குக் கறுப்பி ஒரு பெருவாரி நோய்போல் தோன்றிற்ரே அல்ல நச்சுக்காற்றுப்போல் தோன்றிற்ரே என்னவோ தெ வில்லை. கறுப்பினமும் கடவுள் படைப்பென்று அ ஞர் நினைக்கவில்லை போலும்! வெண்ணிறத் அணித்தே கருநிறத்தார் போதல் கூடாது; வெள் யர் ஏறும் வண்டியில் கறுப்பர் ஏறுதல் கூடாது; அ நடக்கும் வழியில் இவர் நடத்தல் கூடாது; முதல்-இர டாம் வகுப்புக்களில் கரியர் செல்லலாகாது; இர காலத்தில் இந்தியர் அங்குமிங்கும் உலவலாகா நியாய மன்றங்களில் இந்தியர்க்கு நீதி கிடைப்பதில் நிலையாகவுள்ள இந்தியர்க்கும் வாக்குரிமையில் அந்தோ! நம்மக்கள் பிறப்புரிமையை இழந்து இட பட்டார்கள். அவர்கள் அடிமைகளாக நடத்தப் டார்கள். நம் பாரத புதல்வர்கள், பிறப்புரிமை இழக் கூடிய சீட்டுகளில் தங்கள் பெயர்களையும் வி அடையாளங்களையும் பொறித்து அங்கு வாழவேவ மென்று வலியுறுத்தப்பட்டார்கள். நஞ்சகோதரர் ஊர் ஊராகத் துரத்தப்பட்டார்கள்; காட்டு விலங்குகளை போல வேட்டையாடப் பட்டார்கள் என்றுஞ் சொ

லாம். சில இடங்களில் நம் மக்கள் வீடுகள் கொள்ளை யடிக்கப்பட்டன; சில இடங்களில் தீக்கிரையாயின. காட்டிலாவது விலங்குகளுக்கு உரிமையுண்டு. தென்னுப் பிரிக்காவிலோ மக்களுக்கு அவ்வுரிமையுமில்லை. இது சுருங்கக் கூறல்.

காந்தியடிகள், வெயிலிடைப்பட்ட புழுவெனச் சகோதரர் படுந்துன்பத்தைக் காண்பார்; அவர் மனம் அழலிடைப்பட்ட மெழுகென உருகும்; கண்ணீர் பெருகும். 'நாட்டை விடுத்து, நகரத்தை விடுத்து, உற்றாரை விடுத்து, உறவினரை விடுத்து, தன்னந்தனிய ராய், இந்நாட்டிற் குடியேறிப் பாம்பின் வாய்ப்பட்ட தவளையைப்போல் வருந்தும் சகோதரர்க்கல்லவோ யான் உழைத்தல்வேண்டும்? இஃதன்றோ இறைபணி? இதற் கென நான் படைக்கப்பட்டேன்' என்று அடிகள் எண்ணுவார். 'தென்னுப்பிரிக்காவில் பாரிஸ்டர் தொழில் செய்து பொருளீட்டலாம்' என்று அடிகள் கொண்ட நினைவு கனவாய் மெல்ல மெல்ல மாய்ந்தது. அந்நினைவு, 'பிறர் நலத்துக்கு உழைத்தல் வேண்டும்; அதன் பொருட்டே யான் படைக்கப்பட்டேன்' என்னும் உய ரிய மெய்யறிவாய் மாறிவிட்டது. இம்மாற்றமே இரண் டாம் பிறப்பென்பது. அடிகள் அருச்சுனனைப்போல் இருபிறப்பாளராயினுர்.

மகாத்மாகாந்தி தன்னல வாழ்விற்கெனக் கொண்ட சட்டப் படிப்பையும் பட்டத்தையும் உதறினுர்; நடமாடுங் கோயில்களாகிய உயிர்கட்குத் தொண்டு செய் யப் புறப்பட்டார். காந்தியடிகள் மனிதரானுர். காந்தி யடிகள் சகோதரர் உயிரைத் தம் உயிராகக் கொண்டார்;

அவர் உடலங்களைத் தம் உடலாகப் போற்றினார்; அன்னார் துன்பங்களைத் தந்துன்பமாகக் கருதினார். அடிகள் தம்மிடத்திருந்த பொருளையெல்லாம் சகோதரர்க்குச் செலவழித்தார். பாரிஸ்டர் காந்தி செல்வ வாழ்வைத் துறந்தார்; எளிய வாழ்வை மேற்கொண்டார். அவர் ஓர் ஏழைக் கூலிபோல வாழலானார். ஏழைகள் உறங்குங் குடிசையில் அவர் உறங்கினார். ஏழைகள் பருகுங் கூழை அவர் பருகினார். அவர் டர்பனில் ஓர் ஆசிரமம் அமைத்துத் தம்மைப்போலப் பிறரையும் எளிய இயற்கை வாழ்வு ஏற்குமாறு செய்தார். மனைவி மக்கள் என்னும் பற்றும் ஒழிந்தது. அவர்களையும் மற்ற உயிர்களைப்போல அடிகள் கொண்டார். காந்தியடிகள் தமக்கென ஒன்றுமில்லாப் பெருவாழ்வு பெற்றார்; தியாக மூர்த்தியானார். அடிகளின் சொலற்கருந் தியாகம் ஆண்டிருந்த இந்தியர்க்குப் புத்துயிரளித்தது. இந்தியச் சகோதரர் காந்தியடிகளைத் தம் உயிரெனக்கொண்டனர்; அவர் சொல்வழி நடக்க ஒருப்பட்டனர். ஆண்டவன் அருள், அடிகளைத் தன்னல வாழ்வினின்றுந் தடுத்தாட்கொண்டது. காந்தியடிகளின் உடல் பொருள் ஆவி மூன்றும் ஆண்டவன் உடைமையாயின. ஆண்டவன் வழிநிற்கும் இயற்கை வாழ்வினராயினர் மகாத்மாகாந்தி; அதாவது தியாகியானார் என்று சுருங்கச் சொல்லலாம்.

காந்தியடிகள் நம்மக்கள் குறைபோக்கி உரிமை காத்து அறம் வளர்க்க முதல் முதல் நியாய வரம்பில் நின்று அரசாங்கத்தார்க்கு விண்ணப்பங்கள் ஒருமுறைக்குப் பன்முறை செய்தார். அவை யாவுஞ் செவிடன் காதில் சங்கு முழங்கியது போலாயின. இறுதியில்

காந்தியடிகள் பெரும் போர் தொடங்கினர். அப்போர் எத்தகையது? அது கருவியில்லாப் போர்; இரத்தஞ் சிந்தாப் போர்; பழிக்குப்பழி வாங்கா அறப் போர்; பிறர் குற்றங் களையத் தாம் வருந்தும் அன்புப் போர். அதைப் போரென்று சொல்வது? ஆன்ம நிவேதனம் என்றே சொல்லல் வேண்டும்.

காந்தியடிகள் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற போது, அவர் லண்டனில் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவைகளில் ஒன்று கில்ட் ஹாலில் நிகழ்ந்தது. அதில் காந்தியடிகள்,

> "* * * * என்னை உங்களிற் சிலராதல் 'என்ன காந்தி! உங்கள் உடல்மீது ஒரு போர்வை இருக்கிறதே. எனக்கென்று ஒன்றுமில்லை என்று சொல்கிறீரே?' என்று கேட்கலாம். இதற்கு யான் என்ன விடையிறுத்தல் கூடும்? ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனக்கென்று ஓர் உடல் இருக்கிறது. அஃது இருக்கும்வரை அதற்கு ஏதேனும் ஒரு போர்வைதேவை. இங்குள்ள எவரேனும் இப்போர்வையை விரும்புவாராயின், அவர் இதை எடுத்துக்கொள்ளலாம். போலீஸ் துணையை யான் நாடமாட்டேன்"

என்று குறித்தனர். இஃதும் அடிகளின் தியாக உணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கில்ட் ஹவுஸ் பேச்சு முடிந்ததும், சகோதரி மாட்ரிட் என்பவர் மோட்டாரில் வேறிடம் போதருவதாக அச்சகோதரிக்குக் காந்தியடிகள் தெரிவித்தாராம். பேச்சு முற்றுப்பெற்றது. அடிகள் மண்டபத்தினின்றும் வெளிவந்தார். வெளியே பெருங்கூட்டம் - ஒரே சூழல். மாட்ரிட்டின் மோட்டாரை எளிதில் கண்டு

பிடித்தல் இயலவில்லை. மோட்டாருடைய பலர் தத்தம் வண்டியில் ஏறுமாறு அடிகளை வேண்டினர். அக்காட்சியைச் சகோதரி மாட்ரிட் குறிப்பிட்டெழுதிய ஒரு கட்டுரையின் ஒரு சிறு பகுதி வருமாறு :—

“ * * * * குளிர் அதிகம். மகாத்மா அதிக உடைகளை அணிந்திருந்தாரில்லை. அதிக நேரம் அவர் நிற்றலை என் மனம் விரும்பவில்லை. யான் அடிகளிடம் அணுகி, ‘என் வண்டியை எதிர்பார்த்தல் வேண்டா. ஏதேனும் ஒன்றில் ஏறிச்செல்வது நல்லது’ என்றேன். அதற்கு அடிகள், ‘வேறு வண்டி வேண்டா. உம்முடைய வண்டியை நோக்கிக் காத்திருக்கிறேன்’ என்று வாய்மலர்ந்தார். அவ்வாய்மை என்னைக் குளிர்வித்தது. அவ்வேளையில், ‘அவருக்கென்று ஒன்றுமில்லை. அதனால் எல்லாம் அவருக்கு உரியன’ என்று ஏசுவின் அடியார் ஒருவர் அருளிய செம்மொழி என் நினைவிலுற்றது. மகாத்மாவுக்கென்று ஒரு மோட்டாரில்லை. ஆனால் அவருக்கென்று மோட்டார்கள் சூழ்ந்தன.”

இதுபோன்ற சான்றுகள் இன்னும் பல உண்டு.

மக்கள் உரிமை கெடுக்குஞ் சட்டங்களை மறுக்க நம் பெருமான் உறுதி கொண்டார்; அவ்வாறு தாமே செய்தார். ஏனையோரும் அவர்வழி கடைப்பிடிக்கலாயினர்.

**பகைவரிடத் தன்பு**

சட்டமீறிச் சட்டமீறி நஞ்சகோதரர் அணியணியாகச் சிறை புகுந்த காட்சியை எழுத்தால் எழுதல் இயலாது. இந்நிகழ்ச்சி ஒரு முறையன்று - பன்முறை நடந்தது. காந்தியடிகள் சிறைப்பட்டார்; அடிபட்டார்; உதைப்பட்டார். அடிகள் கல்லுடைத்தார்; மலம் வாரினர்; பலவித இழிதொழிலுஞ் செய்தார்.

இத்துணை இழிவிற்கு உட்பட்டும் எவர்மீதுஞ் சீற்றங் கொள்ளாது - காழ்ப்புக் கொள்ளாது - காந்தியடிகள் பொறுமை காத்துவந்தார். தியாகமும் ஆன்ம சக்தியும் எத்துன்பத்தையும் பொறுக்கும் திறனை நல்கும் இயல்புடையன. துன்பம் பொறாத சில்லோர் போந்து, 'அடிகளே! தோள்வலி கொண்டு எதிர்த்து மாள்வதே நலம்' என்று சொல்லும்போதும், மகாத்மா காந்தி, 'மாற்றார்பால் அன்புகொண்டு அவர் ஆற்றுங் கொடுமைகளைப் பொறுப்பதே சிறந்த போர்' என்று அறிவுறுத்துவார்.

பகைவரை நேசித்தல் என்பதைக் காந்தியடிகள் வாயால் மட்டும் விளம்பி வந்தாரில்லை. அதைச் செயலிலும் அவர் காட்டிவந்தார். சாத்விகப்போர் நிகழ்ந்து வந்தபோழ்து தென்னாப்பிரிக்காவில் இரண்டுமுறை மறப் போர்கள் நடைபெற்றன. ஒன்று போயர் சண்டை; மற்றொன்று ஜுலு வகுப்பார் சண்டை. இருபோதுங் காந்தியடிகள் பகைமை பாராட்டாது பிரிட்டிஷாருக்குப் போதிய உதவி புரிந்தார். போர்க்காலத்தில் காந்தியடிகள் காழ்ப்புக் கொள்ளாது பிரிட்டிஷ் சேனைகளுக்கு உதவி புரிய முற்பட்டதை ஓருங்கால் காந்தியடிகளின் பெருந் தகைமை புலனாகும். ஒருபோது சில ஆப்கானியர் உண்மையுணராது ஐயுற்றுக் காந்தியடிகளை மிக உரமாகத் தாக்கிப் புடைத்துப் பற்களை உடைத்து விட்டனர். அது கண்ட காந்தியடிகளின் ஆருயிர்த் தோழர் காலன்பக் என்னும் ஜெர்மானியர் அக்கொடியரைச் சுட முயன்றார். அதுபோழ்து காந்தியடிகள் குருதி சொரியும் வாயுடன், 'நண்பரே! வேண்டாம்;

அவர் நம் சகோதரர்' என்று தடுத்து உணர்விழந்து கிடந்தார்; சிறிதுநேரங் கழித்தெழுந்து, 'என்னைப் புடைத்த ஆப்கானியருக்கு எவருந் தீங்கு செயல் வேண்டா' என்று ஆண்டிருந்த பலரையும் வேண்டினர். பகைவர் மாட்டெழும் வன்மத்தை ஒடுக்குவதுந் தியாகத் தின்பாற்பட்டதே.

தென்னுப்பிரிக்கா போராட்டத்தின்போது, அங்கே அதிகாரியா யிருந்தவர் ஜெனரல் ஸ்மட்ஸ். அவர் தம் ஆட்சியும் காந்தியடிகளைச் சிறைக்கனுப்பியது. அது காரணமாகக் காந்தியடிகள் ஸ்மட்ஸைப் பகைவராகக் கருதினரில்லை. அவர் தம் நெஞ்சில் இகல் எழவே இல்லை. அடிகளின் அன்பு ஜெனரலையும் அவரைச் சேர்ந்தவரை யும் ஆட்கொண்டது என்று கூறவே என் மனம் விரும்பு கிறது. இதுபற்றிய சில குறிப்புக்களை ஈண்டுப் பொறிக் கிறேன்.

ஜெனரல் ஸ்மட்ஸின் அமைச்சர் ஒருவர் காந்தியடி களைக் கண்டு பேசியபோது,

> '* * * * தாங்கள் ஹிம்சையில் இறங்குவதில்லை; இறங் கினல் தங்களை அடக்கும் வழி எங்கட்குப் புலப்படும். தங்கள் போக்கே வேறுவிதமா யிருக்கிறது. தாங்கள் பகை வர்க்குங் கேடுசூழா நிலையில் இருக்கிறீர்கள். தாங்களே துன்பம் அநுபவிக்கிறீர்கள். என்செய்வதென்று எங்களுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. நாங்கள் திகைக்கிறோம்'

என்று அடிகளின் பகைமையற்ற பண்பை வியந்தனராம்.

ஜான் எச். ஹாப் மேயர் என்பவர், ஸர். இராதா கிருஷ்ணன் வெளியிட்ட ஒரு நூலில் ஓர் அரிய கட்டுரை

வரைந்துள்ளனர். அதன்கண்ணும் ஒரு குறிப்புத் திகழ்கிறது. அதன் சாரத்தை ஈண்டுப் பிழிகிறேன்.

'* * * * ஜோஹன்ஸ் பர்க்குக்கு வெளியில் ஒரு பள்ளி இருக்கிறது. அது தண்டனையுற்ற பிள்ளைகளின் நலத்துக்கென்று அமைந்தது. அஃது ஒருபோது சிறைக் கூடமா யிருந்தது. சில ஆண்டுகட்கு முன்னர் ஒருவருடன் அவ்வழியே சென்றேன். அவர் ஓர் அறையைச் சுட்டிக் காட்டி, 'முப்பதாண்டுக்கு முன்னர் இவ்வறை காந்தியடிகளின் சிறைக்கோட்டமா யிருந்தது. அச்சமயம் யான் மாஜிஸ்டிரேட்டா யிருந்தேன். தத்துவ நூல்களை என் மூலம் ஜெனரல் ஸ்மட்ஸ் காந்தியடிகட்கு அநுப்புவர் என்று சொன்னார். காந்தியடிகட்கும் ஜெனரல் ஸ்மட்ஸுக்குமிடையே நடந்த போராட்டம் பெரிது. அப்போராட்டத்தின் அடியில் பகைமை நின்றதில்லை. அன்பே நின்றது. அவ்வன்பு இன்னும் நிலவுகிறது.

மேற்படி நூற்கண் ஜெனரல் ஸ்மட்ஸின் கட்டுரையொன்றும் மிளிர்கிறது. அதன் உள்ளுறையில் பலதிறப் பொருள்கள் அணிசெய்கின்றன. அவற்றுள் இரண்டை மட்டும் ஈண்டுத் திரட்டிக் காட்டுகிறேன்.

க. யான் காந்தியடிகளுக்கு எதிரியா யிருந்தவன். அவரது எழுபதாவது வயதில் அவரை ஒரு வீரரெனக் கொண்டு வழிபட முற்படுகிறேன். * * *

உ. காந்தியடிகள் சிறைக்கோட்டத்தில் இருந்தபோது எனக்கென்று ஒரு மிதியடி அவரால் செப்பஞ் செய்யப் பெற்றது. அடிகள் விடுதலையடைந்ததும் அம்மிதியடி எனக்கு அனுப்பப்பட்டது. அதை யான் பயன்படுத்தினேன். 'பெரியவரால் செய்யப்பெற்ற மிதியடிமீது என் கால் படலாமா' என்ற எண்ணம் என் நெஞ்சில் ஊறும். * * * எங்கள் போராட்டத்தின் அடியில் பகைமை நெளியவில்லை.

இச்சான்றுகள் எவரிடத்திருந்து பிறந்தன என்பது சிந்திக்கற்பாலது. காந்தியடிகளின் தியாகத்தில் பகைமை இடம் பெறவில்லை. உண்மைத் தியாக நிலையத்தில் என்ன விளையும்? அன்புப் பயிரன்றோ விளையும்!

நெருக்கடி நேருங்கால் பகைவனிடம் பழி தீர்த்துக் கொள்வது உலக வழக்கம். காந்தியடிகள் நெருக்கடியிலும் எதிரிகளிடம் பழிதீர்க்கப் புகுவதில்லை. பழி தீர்க்கப் புகுவது வீரர் செயலும் ஆகாது. காற்றுள்ள போது தூற்றும் இயல்பு அடிகளபால் அமையவில்லை.

1914-ம் ஆண்டு பிரிட்டனுக்கும் ஜெர்மெனிக்கும் போர் மூண்டது. அப்போதும் காந்தியடிகள் போருக்கென்று ஆள் சேர்த்தனர். 1939-ம் ஆண்டில் வீறிட்டெழுந்த பெரும்போரின் போழ்தும் அடிகள் எவ்வித உட்போராட்டத்தையும் கிளப்பிஞரில்லை. அமைதி குறித்து இராஜப்பிரதிநிதிக்குக் கடிதங்கள் அடிகளால் எழுதப்பட்டன. இந்திய சுயராஜ்யப் போராட்டத்தையும் அடிகள் அன்பு முறையிலேயே நடாத்தினர். பிரிட்டிஷாரிடத்தில் அவர் பகைமை கொள்வதில்லை. ‘இந்தியாவை விட்டுப் போ’ (Quit India) என்பதும் மக்களைக் குறிப்பதன்று என்றும், ஆட்சி முறையை உணர்த்துவதென்றும் அடிகளால் விளக்கஞ் செய்யப் பெற்றன. காந்தியடிகளின் அன்பு அவரைப் பகைமையற்ற ஒருவராக்கியது.

‘பகைவரை நேசி’ என்பது கிறிஸ்து பெருமான் திருமொழி. இதற்கு இலக்கியமாக இந்நாளில் திகழ்வது காந்தியடிகளின் வாழ்க்கை.

பல வழியிலும் காந்தியடிகள் தியாகமூர்த்தியாய் இலங்கினர். காந்தியடிகள் 1893 - ம் ஆண்டு முதல் 1913-ம் ஆண்டுவரை தென்னாப்பிரிக்காவில் வதிந்து, எல்லா நலத்துக்கும் அடிப்படை தியாகம் என்னும் உண்மை கண்டு, அதைச் செயலிற் கொணர்ந்து ஆன்ம சக்தியால் சாத்விகப் போர்புரிந்து முடிவில் வெற்றி பெற்றார். வெற்றிக்குக் காரணம் தியாகம் என்பதை எவரும் மறத்தலாகாது. இந்தியாவிலும் அவர் அன்புப் போர் நடாத்துகிறார். வெற்றி விளைதல் ஒருதலை.

பிறர் பொருட்டு என்பைக் கொடுத்தவர் - உயிரைக் கொடுத்தவர் - வரலாறுகள் நூல்களிலிருக்கின்றன. இதோ அத்தகைய ஒருவரை இப்பொழுது கண்கூடாகக் காண்கிறோம். காந்தி என்னுஞ் சொல்லுக்குத் தியாகம் என்றும் பொருள் கூறலாம். தியாகம் காந்தியடிகளை மகாத்மாவாக்கிற்று. தியாகமில்லா வாழ்க்கை வாழ்க்கை யாகுமோ?

## எ. இயற்கை வாழ்வு

தனக்குரிய எல்லாவற்றையுந் தியாகஞ் செய்து தனக்கென ஒன்றின்றிப் பிறர்க்கென வாழும் பெரியோன் வாழ்வு இயற்கைவழி இயங்குவதாகும். இயற்கை வாழ்வு செல்வ வாழ்வுமன்று; வறிய வாழ்வுமன்று.

அறிவிற் சிறந்த சான்றோர், செல்வம் வறுமை என்னும் இரண்டையுங் கடிந்துரைப்பர். அன்னார் செல்வத்தில் விருப்புங் கொள்வதில்லை; வறுமையில் வெறுப்புங் கொள்வதில்லை. ' செல்வமென்னும் அல்ல

விற் பிழைத்தும் - நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும்' என்று வாதவூரடிகளும், 'வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பி' என்று அருணந்தி சிவமும் தெளியக் கூறியிருத்தல் காண்க. செல்வமும் வறுமையும் பொன் விலங்கு இருப்பு விலங்கு போன்றன. அவ்விரு கட்டுக்களினின்றும் விடுதலையடையும் மகனே இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்த வல்லவனுவன்.

**செல்வமும் வறுமையும்**

இயற்கையோடியைந்து வாழ்வோனை இறைவனோடியைந்து வாழ்வோன் என்றுங் கூறலாம். என்னை? இயற்கை, இறைவன் வடிவாகலான் என்க. இறைவன் உண்மையை இயற்கை வழியால் உணர்தல் எளிது; பிற வழியால் உணர்தல் அவ்வளவு எளிதன்று. விரிவு யான் எழுதிய 'முருகன் அல்லது அழகு' முதலிய நூல்களிற் காண்க. இறைவன் கைம்மாறு கருதாது, இரக்கத்தான் இயற்கை வாயிலாக உயிர்கட்குத் துணைபுரிந்து வருகிறுன். உயிராகிய இறையின் தன்மை அதன் உடலாகிய இயற்கையினிடத்திலும் இருத்தல் இயல்பு. ஆகவே, இயற்கைவழி வாழ்வை நடாத்துவோனும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வான் என்று தெளிக. எனவே, தியாகிக்குரிய வாழ்வு இயற்கை வாழ்வென்க. இயற்கை வாழ்வின் இயல்பைப்பற்றித் தொடக்கத்தில் 'மனித வாழ்க்கை'யிலுஞ் சுருங்கச் சொல்லியிருக்கிறேன்.

**இறையும் இயற்கையும்**

காந்தியடிகள் இயற்கை வாழ்வில் தலைப்பட்டுப் பிறர் பொருட்டு வாழ்ந்துவரல் கண்கூடு. தென்னுப்பிரிக்காவில் அடிகள் செய்த தியாகம் அவரை இயற்கை

வாழ்வினராக்கிற்று. இயற்கை வாழ்விற்கு முதலாவது வேண்டற்பாலது எளிமை. எளிமை வேறு வறுமை வேறு என்பது ஈண்டுக் கருதற்பாற்று. எளிய வாழ்வாவது

வாழ்க்கைக் கூறுகள்

ஆண்டவன் இயல்பாக ஒவ்வொருவர்க்கும் அளித்துள்ள முயற்சித் துணையால் வாழ்வதாகும். தன்மாட்டுள்ள முயற்சியை ஒடுக்கி எல்லாவற்றிற்கும் பிறர் துணை நாடுவது எளிய வாழ்வாகாது. அவரவர் முயன்று பெறும் பொருள் அளவில் அவரவர் வாழ்வு நடாத்தினுல் உலகில் செல்வ வாழ்வுமில்லாதொழியும்; வறிய வாழ்வுமில்லாதொழியும். செல்வன் தனக்குரிய அளவிற்குமேல் வாழ்ந்து களிக்க விரும்புகிறுன். அதனுல், அவன் பலர் முயற்சியைத் தன்னலத்துக்குப் பயன்படுத்துவோனுகிறுன். அவனது வாழ்வு எங்ஙனம் இயற்கை வாழ்வினதாகும்? வறியன் தன்மாட்டுள்ள முயற்சியை ஒடுக்கிப் பிறர் துணை நச்சி வாழ்கிறுனுதலின் அவனது வாழ்வும் இயற்கை வாழ்வாவதில்லை. இரண்டுங் கடந்த எளிய வாழ்வே இயற்கையின்பாற்பட்டது. செல்வன் பிறர் உழைப்பால் பெறும் பொருளைத் தான் பெரிதும் பயன்படுத்தலால் அவன் திருடனுகிறுன்; வறியன் தனக்கு இயற்கை வடிவாய இறைவன் அளித்துள்ள ஊக்கத்தை ஒடுக்கி அடக்கி இடர்ப்படலான் அவன் நன்றி கொன்ற பாவியாகிறுன். ஆகலால், எளியனே இயற்கை மனிதன் ஆகிறுனென்க. 'தன் உணவிற்குத் தானே உழைக்குமாறு மனிதனைக் கடவுள் படைத்தார். உழைப்பின்றி உண்கிறவர் திருடர்' என்று காந்தியடிகளும் அருளியுள்ளார்.

ஒருவன் தன் வாழ்விற்குரிய அளவிற்குமேல் பொருள் பெற்று, அப்பொருளைத் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்குமே பெருமிதமாகப் பயன்படுத்துவது இயற்கை வாழ்வாகாது. இச்செயலால் வேறு சிலர் பட்டினி கிடந்து வருந்தல் நேர்கிறது. உலகில் சிலரது அளவிற்கு மேம்பட்ட செலவு பலரை வறுமையில் வீழ்த்துகிறது. இம்முறையே உலகில் வறுமை நிலவுதற்குக் காரணம். ஒவ்வொருவரும் தத்தமக்குரிய இயற்கை அளவில் உண்டு உடுத்து வாழ்வாராயின் நாட்டில் வறுமை ஏது? அந்நாடு பொன்னுடாகுமன்றோ?

'பிறரிடத்திருந்து பணம் உறியும் ஒரு தொழில் முறையில் யான் தலைப்படுவதாக வைத்துக்கொள்வோம். அதனால் நான் பணக்காரனாகிறேன். அப்பொருள் கொண்டு இயற்கை நியதிக்கு மேம்பட்ட முறையில் குடும்பத்துக்கு உதவித் திருப்தியடைகிறேன். இவ்வாறு நடப்பேனாயின் யான் குடும்பத்துக்காதல் நாட்டுக்காதல் சேவை செய்தவனாக மாட்டேன். என் வாழ்விற்கும், என்னைச் சார்ந்தவர் வாழ்விற்கும் வேண்டுவது பெற ஆண்டவன் எனக்குக் கைகால் தந்தான் என்னும் உள்ளங் கொள்வேனாயின் என் வாழ்வையும், மற்றவர் வாழ்வையும் எளிமையாக்கிக் கொள்வேன். இதனால் நான் பிறரை வருத்தாது எனது குடும்பத்தைக் காப்பாற்றுபவனாகிறேன். ஒவ்வொருவரும் இவ்வெளிய முறையில் வாழ்ந்து வருவரேல் அவர் நாடு பொன்னுடாகும்'

என்று காந்தியடிகள் அருளிய செம்மொழிகளைக் காண்க.

ஒருவன் தன் இயற்கை வாழ்விற்கு எவ்வளவு பொருள் வேண்டற்பாலதோ அவ்வளவு பொருளை தனக்குரியது என்று கருதாது, இயற்கை வாழ்விற்கு

மாறுபட்ட செயற்கைக் களியாட்டிற்குப் பெரும்பொருள் செலவழிப்பனேல் அவன் எத்துணையோ ஏழை மக்கள் வயிற்றில் மண்ணிட்டவனாகிறான். இச்செல்வன் எங்ஙனங் கடவுள் எண்ண முடையவனாவன்? உலகத் துன்பத்துக்குச் செல்வ வாழ்வு காரணமாக நிற்கிறது. என் செய்வது? காந்தியடிகள்,

" 'நாளைக்கெனை ஒன்று நினையாதே' என்னுங் கருத்து எல்லாச் சமய வேதங்களிலு முண்டு. * * * * * ஒரு நாட்டின் நிலையை அந்நாட்டிலுள்ள கோடீசுரர் தொகை புலப்படுத்தாது; அந்நாட்டிலுள்ள ஏழை மக்களுள் எத்துணை பேர் பட்டினி கிடக்கிறார் என்பது புலப்படுத்தும். * * * ரோமாபுரி செல்வக் களிப்பில் மூழ்கியிருந்தபோது அஃது ஒழுக்கத்தில் வீழ்ச்சி யடைந்தது. எகிப்தும் அப்படியே. மற்றச் செல்வ நாடுகளின் நிலையும் அத்தன்மைத்தே. பகவான் கிருஷ்ணமூர்த்தியினுடைய பரம்பரையாரும் உறவினரும் செல்வச் சேற்றில் உழன்றபோது வீழ்ச்சியே யடைந்தனர். * * *
* * * தென்னாப்பிரிக்காவில் மக்களோடு நெருங்கி உறவாடிய போழ்துஞ் செல்வம் ஒழுக்கத்தைத் தகைவது கண்டேன். ஏழை மக்கள் பொறுமைப் போருக்குத் துணிந்து நின்றது போலச் செல்வர் நிற்கவில்லை. * * * தற்காலமுள்ள பொருளாதாரப் பாடப்புத்தகங்களைப் பார்க்கிலும் சமய நூல்கள் பொருள் நிலையை நல்வழியில் அறிவுறுத்துகின்றன என்று கருதுகிறேன். * * * இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கிறிஸ்துநாதர் இதுகுறித்துப் பேசினர். இதை மார்க்கு, தாம் எழுதிய *'சுவிசேஷத்'தில் விரித்துக் கூறியிருக்கிறார்.

---

*'ஒருவன் ஓடிவந்து, அவருக்கு (கிறிஸ்துவுக்கு) முன்பாக முழங்கால் படியிட்டு, நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்

*கோடிக்கணக்கான ஏழை மக்கள் பட்டினியால் வருந்த உண்டாட்டு, களியாட்டு, திருமண ஆடல் பாடல் முதலிய வற்றிற்குப் பொருள் செலவழிப்பது பாவம் "*

என்று செல்வ வாழ்வின் சிறுமையை விளக்கிக் காட்டியுள்ளார். ஒருவரது செல்வ வாழ்வு மற்றவர் வறிய

---

*துக் கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.—அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.—விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக, என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.—அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.*

*இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்பு கூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளை யெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றி வா என்றார்.—அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனா யிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்.*

*அப்பொழுது இயேசு சுற்றிப் பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரிய முள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்.—சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு பின்னும் அவர்களை நோக்கி, பிள்ளைகளே, ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையா யிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்*

வாழ்விற்குக் காரணமாக நிற்றலான், எளிய வாழ்வே இன்பவாழ்வு என்பது அறிஞர் கருத்து.

பொருளே கூடாது என்று காந்தியடிகள் அறைகிறாரில்லை. வாழ்க்கைக்குப் பொருள் தேவை. ஆனால் அப்பொருள் திரட்டுவதில் அறமிருத்தல் வேண்டும். பிறரை வறியராக்கும் முறையில் பொருள் திரட்டலாகாதென்பது அடிகள் கருத்து.

---

தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!—ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.—அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்,—இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான். தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று சொல்லத் தொடங்கினான்.—அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும்,—இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.—ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.'

நமது இந்திய வாழ்வுக்கென்று பொருள் தேவை. அப்பொருள் பிறரால் சுரண்டப்படுவது இயற்கைப் போக்குக்கு அரண்செய்வதாகாது. இக்கால இந்தியா தன் செல்வத்தை இழந்தே போயிற்று என்று கூறுதல் மிகையாகாது. இதுபற்றிக் காந்தியடிகள்,

> 'இந்தியா தனது செல்வத்தை இழந்தது. அதனால் விளைந்தது என்ன? மனிதத் தன்மையே ஒழிந்தது; கடவுள் தன்மையும் மாய்ந்தது'

என்று வெளியிட்டுள்ள கருத்துச் சிந்தனைக்குரியது.

பொதுவாக உலகிலும், சிறப்பாக மேல்நாட்டிலும் இயற்கைக்கு மாறுபட்ட ஆட்சி முறைகள் தோன்றித் தோன்றி இப்பொழுது சாம்ராஜ்யங்களாக வளர்ந்து கொழுத்து நிற்கின்றன. சாம்ராஜ்யத்தின் இயல்பு மக்களைச் செல்வரென்றும் வறியரென்றும் இருகூறு படுத்துவது. இவ்விரண்டும் உள்ளமட்டும் உலகில் அமைதிக்குரிய இயற்கை வாழ்க்கை நடைபெறுதல் அருமை. இவ்வருமைப்பாட்டை உணர்ந்தே உலகம் சாம்ராஜ்ய அமைப்பை மாற்ற முயல்கிறது; பொருள், புலம் முதலியவற்றைப் பொதுமையாக்கக் கிளர்ச்சியுஞ் செய்கிறது. பொதுமை அறம் இயற்கை வாழ்க்கையை மீண்டும் புதுக்குவதாகும். செல்வச் செருக்கும் வறுமை இழிவும் இயற்கை வாழ்க்கையை ஓம்பமாட்டா. இவ்விரண்டும் அற்ற ஒன்றே எளிமை என்பது. ஈண்டு எளிமை என்றது பொதுமை அறத்தை என்க.

நமது பழைய இந்திய வாழ்வு அன்பு வளர்ச்சிக்குரிய எளியதா யிருந்தது. நமது நாட்டு நூல்களும், அடியவர் வரலாறும், முனிவர் வாழ்வும் மனித வாழ்

விற்கு இலக்கியச் சான்றுகளாக நிற்கின்றன. 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்பது நம் நாட்டார் மெய்யுரை. நம்முன்னோர் வாழ்வு எளிமையதா யிருந்தமையால், நாட்டில் அறமும் அன்பும் அருளும் ஒழுக்கமும் உருண்டுகோண்டிருந்தன. தெய்வத் திருவருள் கொழித்த நாடன்றோ நமது பாரத நாடு? தெய்வ நிலையைக்கண்ட நாடன்றோ நமது நாடு? மலையெலாம் முருகன்; வனமெலாந் திருமால்; மலரெலாம் இறை மணம்; கிளி வாயில் இறைமொழி; குயில் குரலில் கடவுள் பண்; ஆண் மக்களிடத்தில் கடவுள் வீரம்; பெண் மக்களிடத்தில் கடவுளழகு; இமயமுதல் குமரிவரை ஆனந்தத் தாண்டவம்; இன்பப் பெருக்கு. இவை எல்லாவற்றிற்குங் காரணம் மக்கள் கொண்ட எளிய வாழ்வே. எளிய வாழ்விலுள்ள இன்பப்பெருக்கை என்னென்று சொல்வது? 'யாது மொன்று மென்பக்க லுண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை' என்றன்றோ நம்மவர் வாழ்வு நடாத்தினர்? அவ்வாழ்வு பெற்ற நமது நாடும் இற்றைப்போழ்து மேல்நாட்டுக் கூட்டுறவால் சீரழிந்து வருகிறது.

**இந்திய வாழ்வு**

மேல்நாட்டு வாழ்வு, செல்வத்தை ஒரு கூட்டத்தார்பால் பெருக்கி, மற்றொரு கூட்டத்தார்பால் சுருக்கிக் கடவுளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பை அறுத்து நிற்கிறது. அப்பிளவால் அந்நாட்டில் எளிமைக்குரிய இயற்கை வாழ்வு அற்று உலகாயதம் முற்றி வருகிறது. அங்கே ஆன்மநேய வளர்ச்சியைச் சிதைக்கவல்ல

**மேல்நாட்டு வாழ்வு**

பொறாமை வெகுளி முதலியன, கொலைக்கருவிகளாக உருக்காட்டி, அமைதி கெடுத்து வருகின்றன. எளிய வாழ்வில்லா நாட்டில் எல்லாவிதத் தீமைகளும் நிரம்பி யிருத்தல் இயல்பு. காந்தியடிகள்,

'மேலைநாடுகள் உலகாயத இருட்டால் விழுங்கப்பட் டிருக்கின்றன. அங்கே அன்பொழுக்க ஊற்று அடை பட்டுவிட்டது. அந்நாட்டார் பவுன் ஷில்லிங் பென்ஸ் எண்ணுவதில் தமது வாழ்வின் வளர்ச்சியை அளந்து கொள் கிறார். அமெரிக்கா செல்வத்துக்கு ஒரு பரிமாணமா யிருக்கிறது. அது மற்ற நாட்டார்க்குப் பொறாமை யூட்டு வதா யிருக்கிறது. அமெரிக்கா செல்வத்தைப் பெறல் வேண்டுமென்றும், ஆனால் அதன் முறைகளைத் தள்ள வேண்டுமென்றும், நம் நாட்டார் பலர் பேசக் கேள்வி யுற்றிருக்கிறேன். * * *''

'உலகில் ஒழுக்கத்தில் மேம்பட்டு நிற்குமாறு நமக்கு அறிவுறுத்த வேண்டுமெனத் தலைவர்களைக் கேட்கிறேன். நமது நாடு தேவர் உறைவிடம் என்று நமக்குச் சொல்லப்படு கிறது.'

'ஆன்ற ஒழுக்கத்தை மேல்நாட்டிலிருந்து பெற ஒன்று மில்லை என்பது எனது உறுதியான நம்பிக்கை. நோய்க்கு இரையாக்கும் அந்நாட்டின் தீமைகள் பரவாதிருக்க நாம் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.'

'பொன்னினும் உண்மையிலும், அதிகாரத்தினுஞ் செல்வத்தினும் அஞ்சாமையிலும், தன்னலத்தினும் பிறர்க் குதவலிலும் உறுதி காட்டுவமேல் நாம் உண்மை ஆன்ம ஞான இனத்தவராவோம்'

என்று மொழிந்த மெய்யுரைகளை இக்கால இந்தியர் உற்று நோக்குவாராக.

எளிய இன்ப வாழ்வில் தலைப்பட்டோர் என்றும் இயற்கையோடு உறவாட விரும்புவர். அன்னார் செயற்கைக் கூட்டங்களில் வதியப் பெரிதும் மனங்கொள்வதில்லை. காடோ மலையோ கடற்கரையோ ஆற்றோரமோ அவரது உறைவிடம். அவராடுவது ஓடுநீர்; தேங்குவது தீங்கால்; மூழ்குவது ஏழ்கதிர்; அவர் காண்பது அகல் நிலா; கேட்பது துழனி. அவரது கூத்துக்களன் மயிலும் குயிலும் வண்டும் அருவியும் போதுளிய போதும்பர். இவ்வாழ்வினர் தம்மை வளர்க்கும் அன்னை, இயற்கைத் தேவி என்னும் உணர்வு பெறுகிறார். அவ்வுணர்வு அவரைச் செம்மை நெறியில் செலுத்துங் குருவாகிறது.

**அடிகள் வாழ்வு**

காந்தியடிகள் யாண்டு உறைகிறார்? அவர்க்கென வானளாவிய மாடியில்லை; படுக்கப் பஞ்சணையில்லை; பூட்டப் பெட்டியில்லை. நம்பெருமான் ஓர் ஆற்றங் கரையில் வதிகிறார்; அவர்க்கு நிழல் தருவது ஓர் ஆசிரமம். அது திருடர் கருத்தில் பதிவதில்லை; செல்வர் கண்ணிற்படுவதில்லை. மகாத்மாவுக்கெனப் பொன்னில்லை; பொருளில்லை. ஆனால் அவர் வறியரல்லர். ஆண்டவன் இயற்கை உடைமையெல்லாம் அவருடைமை. அவர் விரும்புவன அளிக்க இயற்கை அன்னை இருக்கிறாள். தன்னை வளர்த்து வரூஉம் இயற்கைத் தாயை மறப்பவனுக்கே வீடும் மாடும் பெட்டியும் பேழையும் வேண்டும்.

இராஜகோட்டையில் மகாத்மாவுக்குப் பொன்னும் பொருளும் அளிக்கப்பட்டன. அவைகளை அடிகள் பெற்றபோது, ' இவைகளை வைக்க எனக்குப் பெட்டியில்லை. இப்பொருள் திருடர் மனத்தைத் தூண்டும்.

இவைகளை ஜம்னலால் பஜாஜ்பால் சேர்த்துவிடுவேன்' என்று சொற்றார். பிறருங் கள்ளராகாதவாறு எளிய வாழ்வு காக்கிறதெனில் அதன் பெற்றியை என்னென் றுரைப்பது? எளிய வாழ்வு மனிதனிடத்திலுள்ள விலங்குத் தன்மைகளை வேரோடு களைந்து அவன்பால் கடவுட்டன்மைகளைப் புகுத்தவல்லது. அவ்வரிய வாழ்விற்கோர் இலக்கியம் நம் காந்தியடிகளின் வாழ்வு.

காந்தியடிகள் எளிய வாழ்விற்குக் கால்கொண்ட இடம் தர்பன். அங்கே அவர் ஓர் ஆசிரமம் அமைத்துத் தமக்கு வேண்டும் உணவு உடைகளைத் தாமே ஆக்கி வாழ்ந்து, பிறரையும் அப்படியே வாழுமாறு அறிவுறுத்தி வந்தார். வண்ணான் அம்பட்டன் வேலைகளையும் அடிகள் தாமே செய்து கொள்வாராம். அவர் சபர்பதி நதிக்கரையில் அமைத்த சத்தியாக்கிரக ஆசிரமத்தின் விதிகள் அவரது எளிய வாழ்வை அறிவிக்கும்.

இங்கிலாந்தில் இரண்டு இடங்களிருக்கின்றன. ஒன்று வெஸ்ட் எண்ட் (West End); மற்றொன்று ஈஸ்ட் எண்ட் (East End). அது செல்வர் உறைவிடம்; இஃது எளியர் வாழிடம்.

காந்தியடிகள் இளமையில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க இங்கிலாந்து சென்றனர். அப்போது அவர்தம் நெஞ்சைக் கவர்ந்தது செல்வர் உறைவிடம். அவர் தமது சட்டைகளைத் தைக்க வெஸ்ட் எண்டை நோக்குவது வழக்கமாம். பின்னை அடிகள் பல ஆண்டு கடந்து உலகறிந்த ஒருவராய், வட்டமேஜை மகாநாட்டுக்கென்று இங்கிலாந்துக்கு ஏகினர். அச்சமயம் அவர்தம் உள்ளத்தைச் செல்வர் உறைவிடங் கவர்ந்ததா? இல்லை. அவர்

தம் உள்ளம் எளியர் வாழிடத்தையே நாடியது. என்னே மாறுதல் !

ஈஸ்ட் எண்டிலே ஓர் அறச்செல்வியார் வதிகிறார். அவர் முரியல் லெஸ்டர் என்பவர். இவ்வம்மையார் 'கிங்ஸ்லி ஹால்' என்றோர் அமைப்பைக்கண்டு அதன் வாயிலாகத் தொழிலாளர் நலன் கருதி உழைத்து வருவோர். அக் 'கிங்ஸ்லி ஹால்' அடிகள் தங்குமிடமாகியது. காந்தியடிகளின் எளிமை ஓர் எளிய தொண்டர் நிலையத்தை நாடச் செய்தது. வெஸ்ட் எண்ட் காந்தி எங்கே? அவர் ஈஸ்ட் எண்ட் காந்தியானார். செல்வச் செயற்கைக் காந்தி எளிய இயற்கைக் காந்தியானார். எளிமை பொதுமையன்றோ?

**உடலோம்பல்**

எளிய இயற்கை வாழ்விற்கு முதலாவது வேண்டற்பாலது உடலோம்பல். உடலோம்பலைப் பற்றி இந் நூல் தொடக்கத்திலுள்ள 'வாழ்க்கை' என்னும் இரண்டாம் பகுதியிலுங் கூறியிருக்கிறேன். விரிவு ஆண்டுக் காண்க. காந்தியடிகள் உடலோம்பலில் கண்ணுங் கருத்துமுடையவர். உடலோம்பாத ஒருவன் உலகில் இயற்கை இன்பத்தையாதல் இறை இன்பத்தையாதல் நுகராத மறவோனாகிறான். அவன் உலகில் ஏன் பிறந்தான்? உடலென்பது கடவுள் கோயில். அதை நன்முறையில் ஓம்பாத ஒருவன் வேறெவ்வினையை உலகில் ஆற்றவல்லான்? காந்தியடிகள் உடலோம்பு முறைகளைப்பற்றி ஒரு நூலும் எழுதியிருக்கிறார். இதனால் உடலோம்பற்கண் அவர்க்குள்ள பற்றுப் புலனாகும்.

உடலோம்பு முறைகள் பலதிறத்தன. அவைகளுள் சிலவற்றைக் காந்தியடிகள் வாழ்வுடன் விரவிவரும்

முறையில் ஈண்டுக் குறிப்பிடல் பொருத்தமாகும். உடலோம்பு முறைகளில் முதல் முதல் உடற் பயிற்சியை எடுத்துக்கொள்வோம். உலகில் இது

உடற்பயிற்சி.

காறும் வழக்கிலுள்ள உடற்பயிற்சி முறைகள் எண்ணிறந்தன. அவற்றில் காந்தியடிகள் எப்பயிற்சி கொண்டு வாழ்ந்து வருகிறார் என்பதைச் சிறிது நோக்குவோம்.

காந்தியடிகள் இளமையில் பள்ளியில் பயின்று வந்தபோது உடற்பயிற்சியில் கலந்து கொள்வதில்லை. காரணம் அவர்பாலிருந்த கூசமே யாகும். 'உடற் பயிற்சி ஆட்டங்கட்கும், பந்தாட்டம் முதலியவற்றிற்கும் யான் போவதில்லை. காரணம் என்பால் இயல்பாக அமைந்திருந்த கூசமே' என்று அடிகள் தமது வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் உடற்பயிற்சியைப் பற்றி அவர் கொண்ட கருத்து வருமாறு :—

> 'உடற்பயிற்சிக்கும் கல்விக்கும் தொடர்பில்லை என்னும் ஒருவிதப் போலிக்கொள்கை அந்நாளில் (இளமையில்) என்னிடமிருந்தது. மனப்பயிற்சியைப் போலவே உடற் பயிற்சியும் பள்ளியில் இடம்பெறல் வேண்டுமென்பதை இந்நாளில் நன்கு உணர்ந்திருக்கிறேன்.'

அன்பர்கள் இச் செம்மொழிகளை உற்றுநோக்கி உடற்பயிற்சியின் இன்றியமையாமையை உணர்வார்களாக.

அடிகள் இளமையில் பள்ளிக்கூடத்தில் உடற் பயிற்சியில் கவலை செலுத்தா தொழியினும், அறவே உடற்பயிற்சியை விடுத்திருந்தார் என்று சொல்ல இடனில்லை. அவர் இளமையில் ஓர் உடற்பயிற்சி முறை

-யைக் கைக்கொண்டிருந்தார். இளமையில் கொண்ட அப்பயிற்சியை அவர் இன்றும் விடுத்தாரில்லை. அஃது எப்பயிற்சி ?

> '(பள்ளியில்) உடற்பயிற்சியில் கலவாமையால் எனக்கு எவ்விதக் கேடும் நிகழவில்லை. இதற்குக் காரணம் பரந்த வெளியில் உலவுவதால் விளையும் நலன்களைப்பற்றி நூல்களில் படித்துணர்ந்தவாறு நீண்ட நேரம் உலாவும் வழக்கத்தைக் கொண்டிருந்தமையேயாகும்'

என்று காந்தியடிகள் விளக்கியிருத்தல் காண்க.

உடற்பயிற்சியில் காந்தியடிகட்குள்ள வேட்கையை விளக்க ஈண்டொரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறேன்.

காந்தியடிகள் கோபாலகிருஷ்ண கோகலேயுடன் ஒரு திங்கள் தங்க நேர்ந்தபோது பலவற்றைப்பற்றி அவர்களிருவரும் பேசுவது வழக்கம். ஒருமுறை அடிகள் கோகலேயை நோக்கி, 'நீங்கள் உலாவவும் போவதில்லை. நீங்கள் பிணியால் பீடிக்கப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது ? பொது ஊழியம் உலவச் செல்லுவதற்குக் கூடவா ஓய்வளியாது ?'' என்று கேட்டார். அதற்குக் கோகலே, 'நீங்கள் என்னுடன் இருக்கிறீர்களே. உலவுவதற்குப் பொழுது கிடைக்கிறதா பாருங்கள்' என்று பதிலிறுத்தார். அதைப்பற்றிக் காந்தியடிகள் கொண்ட கருத்தை அவர் தமது வரலாற்றில் வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு :—

> 'கோகலேயிடம் எனக்குப பெரு மதிப்பிருந்தது. அதனால் வாளாவிருந்தேன். அவர் விடை எனக்குப் பிடிக்கவில்லை. ஒருவன் எத்துணை வேலைச் சூழலில்

நெருக்குண்டபோதினும், அவன் உணவிற்கெனக் காலத்தைக் குறித்துக் கொள்வதுபோல, உடற்பயிற்சிக்கும் ஒரு காலவரை குறித்துக்கொள்ளல் வேண்டும். இந் நம்பிக்கை எனக்கு அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.'

இவ்வுரைகள் காந்தியடிகட்கு உடல் மீதிருந்த கவலையை நன்கு புலப்படுத்துகின்றன.

காந்தியடிகளின் உடல்நலத்தைக் காத்துவருஞ் சீரிய அறவொழுக்கம் ஒன்றுள்ளது. அது பிரமசரியம்.

**பிரமசரியம்**

அடிகள் பிரமசரியத்தைப் பற்றிப் பேசிய பேச்சுக்களும் எழுதிய எழுத்துக்களும் எண்ணிறந்தன. அடிகளின் அப்பேச்சுக்களும் எழுத்துக்களும் வெறுமையினின்றுந் தோன்றியனவல்ல. அவை யாவும் அவரது வாழ்வின் அடைவினின்றும் (அநுபவத்தினின்றும்) தோன்றியவை. உடலோம்பலுக்குப் பிரமசரியம் மிகச் சிறந்ததென்று கூறலாம். உடலோம்பு முறைகள் பல பிரமசரியத்தில் அடங்கிக் கிடக்கின்றன.

பிரமசரியத்தைப்பற்றி நமது நாட்டு நூல்கள் பலபடப் பேசியிருக்கின்றன. அதைப்பற்றி எழுந்துள்ள கருத்து வேற்றுமைகளும் பலதிறத்தன. அவ்வுவர்க் கடல்களில் நாம் ஏன் இங்கு மூழ்கல் வேண்டும் ?

பிரமசரியம் ஆசிரமங்களுள் முதலாவதாக வகுக்கப்பட்டது. வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் இரண்டினும் பிரமசரியம் உண்டு என்று சொல்லப்படுகிறது. கிருகஸ்தத்தில் மட்டும் பிரமசரியம் விலக்கப்பட்டுளது. பிரமசரியத்துக்குப் பெண் கலப்புக் கூடா

நாம். பெண் கலப்பற்ற ஒரு வாழ்வு பிரமசரியம் என்று வழங்கப்படுகிறது. எதிலும் பெண்ணை இழித்து விலக்குவது இந்நாட்டுப் பொது அறமாய்விட்டது.

பிரமசரியம் என்பதற்கு இறைவனுடன் இயைந்து வாழ்தல் என்பது பொருள். (வேறு பல பொருளும் சொல்லப்படுகின்றன) இவ்வாழ்விற்கு இடையூறாக வுள்ள முட்டுக்களைக் களைதற்கெனச் சில ஒழுங்கு முறைகளும் கோலப்பட்டன. பின்னாளில் அப்பொருளும் இவ்வொழுங்கு முறைகளும் நிரலே திரிக்கப்பட்டன. பிரமசரியம் என்பதற்குப் பெண்ணின் கூட்டுறவை விலக்கல் என்று பொருள் கூறப்பட்டது. முறைகள் பெண்ணைக் கடிதற்கும் புலன்களைக் கெடுத்தற்குங் கொள்ளப்பட்டன. நன்மனம் பெறுதற்கு ஏற்பட்ட உணவுக் கட்டுப்பாடு, பெண்கலப்பைத் தொலைப்பதற்கென்று கருதப்பட்டது. இடைக்காலத்தில் எல்லா அறத்துறைகட்குங் கேடு நிகழ்ந்ததுபோலப் பிரமசரியத்துக்குங் கேடு நிகழ்ந்தது. இறைவனுடன் இயைந்து வாழ்தல் என்னும் எண்ணம், பெண்ணைக் கடிந்து வாழ்தல் என்பதாக மாறிற்று.

ஆண்டவனுடன் இயைந்த வாழ்வு பிரமசரியமெனில், அஃது இல்லறத்திலும் இடம்பெற்றே தீரல் வேண்டும். அறத்தின் கூறுகவுள்ள நான்கு ஆச்சிரமங்களில் கிருகஸ்தத்தை மட்டும் இழிவுபடுத்தி, ஆண்டவனோடியைந்த வாழ்வு அல்லது பிரமசரியம் அதன்கணில்லையென்று சொல்வது அறத்தை மறப்பதன்றி வேறென்னை? பிரமசரியம் நான்கு ஆச்சிரமங்களிலும் விரவி நிற்குமொன்று என்பது அடியேன் உட்கிடக்கை.

'இஃதென்ன! முழு மோசம்!' என்று சிலர் வியப்புறலாம்; சிலர் கலக்குறலாம்; சிலர் வையலாம். 'பிரமசரியம் என்பது, பிரமசரியம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் மூன்றில் விரவி நிற்பது என்று சொல்வதற்குப் பொருளுண்டு. கிருகஸ்தத்தில் அது விரவி நிற்கிறது என்பதற்குப் பொருளுண்டா?' என்று பண்டிதர்கள் வாதப்போருக்கு எழலாம்.

மனை வாழ்க்கை வெறுங் கலவிக்கென ஏற்பட்டது என்று கருதுவது மதியீனம். இவ்வறியாமை நாட்டிடைப் பாய்ந்து வேரூன்றி பன்னூறு ஆண்டுகளாயின. இவ்வேரைக் கல்லி வெந்நீர் விடவேண்டு மென்னும் நோக்குடனே 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' என்னும் நூல் எழுதலானேன். எனது முழுக் கருத்தை அந்நூலிற் காண்க. இந்நூற்கண் அதுபற்றி விரித்துக்கூற வேண்டுவதில்லை. சுருங்கச் சிலவுரை கூறி மேற் செல்கிறேன்.

இல்லறம் என்றதும் கலவி என்று கொள்வது மடமை. இல்லறம் ஒரு முதல். கலவி அதன்கணுள்ள பல கூறுகளுள் ஒன்று. அவ்வொரு கூறும் வாழ்நாள் முற்றுங் கொள்ளுந் தகையதன்று. அதற்கெனக் காலவரையுண்டு. கலவியும் பிள்ளைப்பேற்றைக் குறிக்கொண்டதாயிருத்தல் வேண்டும். பின்னை மெய்யுறு புணர்ச்சியின்றி இல்லறம் நடாத்தி வரலாம். கலவியுல்லாத வேறுபல பேறுகளும் இல்லறத்திலுண்டு.

'ஒழுங்குபட்ட இல்லறத்தில் கலவி நேரத்திலா வது பிரமசரியம் ஒதுங்கி நிற்குமன்றோ' என்று அன்பர்கள் வினவலாம். அக்கலவி இயற்கையின்பா

பட்டதா செயற்கையின் பாற்பட்டதா என்று அவ்வன் பர்களை நோக்கிக் கேட்கிறேன். இயற்கைக் கலவி எது? செயற்கைக் கலவி எது? இயற்கை அமைப்பு இரண்டுக் கும் பயன்படுவதா?

ஒருத்தியும் ஒருவனும் அன்பால் விழுங்கப்பட்டுக் காமக் கிளர்ச்சிக்கு இரையாகாது, உற்ற வயதில் பிள்ளைப்பேறு கருதிப் புரியுங் கலவி இயற்கையின் பாற்பட்டது; ஆங்கு இறைவனுடன் கலந்த வாழ்வு அதாவது பிரமசரியம் எங்ஙனம் அறுபடும்? அக்கலவி இயற்கை இறையின் படைப்பு நோக்கத்தை நிறை வேற்றுவது. அஃதில்லையேல் உலகம் எங்ஙனம் வளர்ச்சி யுறும்? இயற்கை இறையின் படைப்பு நோக்கத்துக்குத் துணை செய்யவல்ல பிள்ளைப்பேற்றின் உணர்வற்று, இறையன்புக்கு மாறுபட்ட காமக்கிளர்ச்சி மேலீட்டான் கலவி புரிவோரும், மனைவியின்பால் தாய்மை மலர்ந்த பின்னுங் கலவியில் மூழ்குவோரும், நிறைகெடத் தீ யொழுக்கத்தில் இறங்குவோரும், இவரனையாரும் பிரம சரியத்தை மறந்தவராவர். இவர்தங் கலவி செயற்கையின் பாற்பட்டது. இக்குற்றத்தை நன்மனை வாழ்க்கை நடாத்துவோரிடத்திலும் புகுத்துவது அறமாகாது. இயற்கை அமைப்பை இயற்கைக் கலவிக்குப் பயன் படுத்துவது அறிவுடைமை; பிறவற்றிற்குப் பயன் படுத்துவது அறியாமை. குறை இயற்கை அமைப்பில் இல்லை; அதைப் பயன்படுத்தும் மனிதன் அறியாமையி லிருப்பது.

காந்தியடிகள் இளமையில் காமச்சூட்டுக்கு எளியரா யிருந்த வேளையில், அவர் பிரமசாரியா யிருந்தா

ரில்லை. பின்னே அருளின் பெட்புணர்ந்து மனைவியுடன் வாழ்ந்தபோது, அவர் பிரமசாரியாகவே யிருந்தார் என்பது அடியேன் கருத்து. இந்நுட்பம் காந்தியடிகள் வாழ்வில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. காந்தியடிகள் தமது மூத்த புதல்வர் தம்மைப்போல் இராமைக்கும், தமது இளைய பிள்ளை தம்மைப்போல் இருத்தற்குஞ் சில இடங்களில் காரணங் கூறியிருக்கிறார். அக்காரணம் ஆராயத்தக்கது. காந்தியடிகள் என்ன கூறியிருக்கிறார்? தாம் காமச்சூட்டால் தாக்குண்ட காலத்தில் மூத்த பிள்ளை பிறந்தார் என்றும், அச்சூடு தாக்குறாத காலத்தில் இளைய புதல்வர் பிறந்தார் என்றும் அடிகள் கூறியிருக்கிறார். காந்தியடிகள் வெளியிட்டுள்ள இக்கருத்து எனது கொள்கைக்குப் பேரரண் செய்கிறது.

காந்தியடிகள் மனைவியுடன் சேர்வதில்லை என்னும் விரதம் 1906-ம் ஆண்டு கொண்டதென்னை என்று சிலர் ஐயுறலாம். காந்தியடிகள் தொடக்கத்தில் மனைவியைக் காமக்கூடாகக் கருதி வாழ்ந்தார்; பின்னே காதல் தெய்வமாகக்கொண்டு வாழ்ந்தார். காதலின் ஒரு கூறாகிய கலவி முற்றுப்பெற்றதும் மனைவியைத் தாயாகக் கருதல்வேண்டும். இவ்வுறுதிக்கு அடிக்கடி இடையூறு நிகழ்ந்தமையான், குறிப்பிட்ட ஒருநாளில் அடிகள் விரதந் தாங்கினார்.

கலவியை முற்றும் நிறுத்த முயலும் வேளையில் பழைய வாசனை இடையிடையே வீசுதல் உண்டு. அதை ஆண்டவன் அருள்வலியால் போக்கிக்கொள்ளல்வேண்டும். உணவுக் கட்டுப்பாடு முதலியனவும் அப்பெரு

நோன்புக்குச் சாரம் போன்றனவாம். ஆனால் கொழு கொம்புபோலத் துணைசெய்வது ஆண்டவன் அருள் ஒன்றே

*' மனமெனும் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணு
துனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே '

காந்தியடிகள் பிரமசரியத்துக்கு உணவு முதலிய வற்றை ஒழுங்குபடுத்திக் கொள்வது சாலும் என்று தொடக்கத்தில் கருதினார். நாளடைவில் அவர் கருத்து மாறலாயிற்று. ஆண்டவன் திருவருட்டுணையே பிரம சரியத்துக்கு உயிர்போன்றது என்பதைப் பின்னே அவர் உணர்ந்தார். இது குறித்து அடிகள் அருளிய மொழிகள் பல. அவைகளுள் சில வருமாறு :—

' கூர்ந்து கூர்ந்து ஆய்ந்து ஆய்ந்து, ஆழ உன்னி உன்னி, 1906-ம் ஆண்டு பிரமசரிய விரதம் பூண்டேன். இதுவரை இது குறித்து என் மனைவியிடம் கலந்து சிந்தித்ததில்லை. நோன்பு கொண்டபோதே அவளுடன் கலந்து பேசினேன். அவள் எத்தகைத் தடையுங் கிளத்தவில்லை முடிந்த உறுதிக்கு வருதல் மிக அருமையாயிருந்தது. எனக்குப் போதிய ஆற்றல் இல்லாமலிருந்தது. எனது அவாக்களை எப்படி அடக்கல் கூடும்? மனைவியுடன் கலவியின்றி வாழ்தல் அப்பொழுது வியப்பாகவே தோன்றிறறு. ஆனால் ஆண்டவன் அருட்டிறத்தில் முழு நம்பிக்கை வைத்து முடிவு செய்துகொண்டேன்.'

' இந்தியா சேர்ந்த பின்னரே மனித முயற்சியால் மட்டும் பிரமசரியத்தைக் கடைபபிடித்தல் இயலாதென்

* அப்பர்.

பதைத் தெளிந்தேன். பலதிற அவாக்களை அறுப்பதற்குப் பழ உணவே சாலும் என்னும் மயக்கத்தில் வீழ்ந்து கிடந்தேன். வேறொன்றுஞ் செய்யவேண்டுவதில்லை என்றும் பெருமிதங் கொண்டேன். * * * கடவுளை அடைதல் வேண்டுமென்று பிரமசரிய விரதம் பூண்போர், தம் முயற்சியில் உறுதிகொள்வது போல, ஆண்டவன் அருளிலும் உறுதி வைப்பாராயின், அவர் சோர்வுற வேண்டுவதில்லையென ஈண்டு விளக்கமாகச் சொல்கிறேன்.'

'பிரமசரியத்தை விழைவோர்க்கு ஈண்டோர் எச்சரிக்கை வழங்குகிறேன். உணவுக்கும் பிரமசரியத்துக்கும் நெருங்கிய தொடர்பிருத்தலை உணர்ந்தேனாயினும், மனமே எல்லாவற்றிற்கும் மூலம் என்பதைத் தெளிந்தேன் தெரிந்தே மனத்தைக் குப்பைத் தொட்டியாக்கிக் கொள்கிறவர் உண்ணா நோன்பால் அதைத தூய்மை செய்து கொள்ளல் முடியாது. உணவு மாற்றத்தினாலும் பயன் விளையாது. நெஞ்சில் வேரூன்றிக் கிடக்கும் காம வேட்கையைத் தன்னை ஆராய்வதனாலும், கடவுளிடம் தன்னை ஒப்புவிப்பதாலும், முடிவாக அவனது அருளாலுமே தணித்து அகழ்ந்தெறிதல் முடியுமே யன்றி வேறு வழியால் முடியாது.'

பிரமசரியத்தின் அருமையைப்பற்றி ஒரு நண்பர் அடிகட்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு அடிகள் இறுத்த விடையில் பிரமசரியத்தைப் பற்றிய குறிப்புக்கள் சில இருக்கின்றன. அவை கொள்ளற்பாலன.

### கடிதம்

'* * * நான் அல்லலுறுகிறேன்.' இரவும் பகலும் தொழிற்சாலையிலும், தெருவிலும், படிக்கும் போதும், வேலை செய்யும் போதும் - கடவுளை நினைக்கும்போதுங் கூட - நான் காமக் கிளர்ச்சியால் எரிக்கப்படுகிறேன்.

அலையும் மனத்தை எப்படிக் கட்டி ஆள்வது? ஒவ்வொரு பெண்மணியையுந் தாயெனக் கருதப் பயில்வ தெப்படி? கண்ணைக் கட்டுவது எங்ஙனம்? தீய எண்ணங்களை எவ்வாறு ஒழிப்பது? தங்கள் (பல ஆண்டுகளுக்கு முன்னே) எழுதிய பிரமசரியக் கட்டுரை என்னெதிரிலே இருக்கிறது. அதனால் எனக்குப் பயன் விளையவில்லை.'

விடை

'* * * இந்நிலை நெஞ்சைப் பிளக்கிறது. பலர் இதனால் துன்புறுகிறார். தீய எண்ணங்களைத் தொலைக்க வேண்டு மென்று அவர்களுடன் இடையறாது போர் தொடுக்கும் மனமுடையார் கவலையுறுதற்கு இடமில்லை. கண் தவறி உழலும்போது அதை மூடிக்கொள்ளல் வேண்டும். செவிகளையும் அங்ஙனே. கீழ் நோக்கியே நடந்து செல்லல் நல்லது. இவ்வாறு செல்லின் புலன்கள் தவறான வழியில் உழலமாட்டா. தீய பேச்சு, நீச கீதம் முதலியன விலக்கபடல் வேண்டும். சுவைக்கு நாவை எளிமைப் படுத்தாது அடக்கல்வேண்டும். சுவையை அடக்க இயலாத ஒருவன் காமக் கிளர்ச்சியை அடக்க இயலாதவன் என்பது எனக்குத் தெரியும். நாச்சுவை யடக்கம் மிக அரிய தென்றும் எனக்குத் தெரியும். சுவையை அடக்கப்பயின்றால், பிற புலன்கள் தாமே அடங்கிவிடும். புளி மிளகாய் முதலிய பொருள்கள் கலந்த உணவை முற்றும் விலக்கு வது சுவை மயக்கத்தை வெல்லுதற்கு வழியாகும். நாம் உண்பது உடலோம்பலுக்கன்றி நாச்சுவைக்கன்று என்னும் அரிய விதியைப் பயிற்சியில் கொணரல் வேண்டும். காற் றைக் களிப்புக்கென நாம் கொள்வதில்லை. மூசுகிறதற்கே அதை நாம் கொள்கிறோம். வேட்கை தணியவே நாம் நீர் அருந்துகிறோம். அவ்வாறே பசிக்கென்று நாம் உண்ணல் வேண்டும். ஆனால் நாம் இளமைதொட்டு வேறு வழியில்

வளர்க்கப்பட்டு வருகிறோம். பலதிறச் சுவைகட்கு அடிமையாகுமாறு பெற்றோர் நம்மைச் செய்கிறார். உடல்நலத்துக்கு உணவு என்று அவர் எண்ணுவதில்லை. சுவைத்துக் களிப்புறுதற்கு உணவு என்று அவர் கருதுகிறார். இவ்வாறு நாம் கெடுக்கப்பட்டோம். ஆகவே, நாம் பெற்ற பழக்கத்துடன் நாமே போராடல் வேண்டியதாகிறது.

காமக் கிளர்ச்சியைத் தொலைப்பதற்கு ஒரு பெருஞ் செந்நெறி யிருக்கிறது. அது ராம மந்திரத்தை அல்லது அதுபோன்ற வேறு மந்திரத்தை எந்நேரமும் உச்சரித்துக் கொண்டிருப்பது. துவாதச மந்திரமும் இதற்குத் துணை செய்யும். வேறு எண்ணங்கள் இடையிடையே நுழைந்து இடர்ப்படுத்தினும் நம்பிக்கையுடன் உச்சரிக்கப்படும் மந்திரத்தினால் பயன்பெறலாமென்பதில் சிறிதும் ஐயமில்லை. மந்திரமென்பது ஒருவனது வாழ்வின் சுடர்விளக்குப் போன்றது. அஃது எல்லாத் துன்பங்களையும் இரிந்தோடச் செய்யும். புனித மந்திரங்களைக் காமிய வாழ்விற்குப் பயன்படுத்தலாகாது. அவைகளைச் செம்மை நெறிக்கெனப் பயன்படுத்திவரின் விளையும் பயன் வியக்கத்தக்கதாகும்.

மந்திரங்களைக் கிளிப்பிள்ளையைப்போல் வெறுமையாக முழக்கிக்கொண்டிருப்பதால் ஒரு பயனும் விளையாது. மந்திரத்துடன் நாம் கலந்துவிடல்வேண்டும். கிளி, இயந்திரத்தைப்போல் மந்திரத்தை முழக்குகிறது. தீய எண்ணங்களின் எழுச்சியை அடக்குதல்வேண்டுமென்னும் நோக்குடனும், அப்பயன் பெறலாம் என்னும் உறுதியுடனும் மந்திரத்தை உச்சரித்தல்வேண்டும்.'

காந்தியடிகள் பிரமசரியத்தைப்பற்றி வெளியிட்ட பொன் மொழிகளுள் இன்னும் இரண்டொன்று வருமாறு :—

'பிரமசரியமென்பது புலன்களை மட்டும் இயந்திரக் கருவிகள்போல ஒருவிதப் பழக்கத்தால் அடக்குவதன்று.

எல்லாவித அவாக்களினின்றும் - மனமொழி மெய்களால் நேரும் பாவங்களினின்றும் - முற்றும் விடுதலையடையும் ஆற்றலைப் பெறுதற்கு, அவாக்களையும் பாவங்களையும் எழுப்பும் பொறி புலன்களை நம் வயப்படுத்துவது பிரம சரியமாகும்.'

'பிரமசரியம் என்பதன் உண்மைப் பொருள் பிரமத்துடன் நாட்டங்கொண்டிருத்தல் என்பது. பிரமம் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்திருப்பது. அதை ஆராய்ந்து அறிந்தாகலாம். புலன்களை வயப்படுத்தாது இவ்வநுபூதி நிலைபெறல் அரிது. எப்பொழுதும் எவ்விடத்தும் புலன்கள் தம் விருப்பப்படி உழலாதவாறு அவற்றை முற்றும் வயப்படுத்தி ஆட்சியில் கொணர்வது பிரமசரியமாகும்.'

'பிரமசரியத்தை முற்றும் நடையில் கொணர்ந்த மகனே அல்லது மகளோ எல்லா அவாக்களினின்றும் முழுவதும் விடுதலை யடைந்தவரென்க. அத்தகையினர் கடவுளுக்கு அணித்தே இருப்பவர் அல்லது கடவுள்நிலை பெற்றவராவர்.'

'பிரமசரிய மில்லா வாழ்வு பயனற்றதும், விலங்கனையதுமானது. இயற்கையில் விலங்காகப் பிறந்ததற்குப் புலனடக்கம் என்பது தெரியாது. மனிதனுக்கு அத்திறனுண்டு. அதனுல் அவன் மனிதன் என்னும் பெயர் பெற்றிருக்கிருன். அவன் புலனடக்கத்தைப் பயிற்சி செய்யும் அளவில் மனிதனுகிருன். நமது சமய நூல்கள் பிரமசரியத்தைப் பற்றி நவின்றுள்ள உரைகள் யாவும் உயர்வு நவிற்சி என்றே கருதியிருந்தேன். இப்பொழுது நாளுக்கு நாள் தெளிவு பெறப் பெற அவை யாவும் நேர்மையானவை என்றும், அநுபவத்தில் காணப்பட்டவை என்றும் உணர்கிறேன்.

புலன்களைச் சாருமாறு செய்துகொள்ளாது, அவற்றைச் செம்மை வழியில் நிறுத்தி, மனமொழி மெய்களால் பாவங்கள் நிகழாதவாறு காத்துவரல் பிரமசரியத்தில் புகுவதாகும். இப்புகல் பின்னைப் பிரமசரியத்தின் முழுநிலை கூட்டும். 'புலன்களை வயப்படுத்தல்' என்பது மிக அரிது. அப்பயிற்சிக்கு முதலாவது நாவைச் செயற்கைப் போலிச்சுவைக்கு அடிமைப்படுத்தாத வாழ்வு வேண்டும். இவ்வொன்றில் மனிதன் வெற்றி பெறின், ஏனைய புலன்கள் அவனை ஆளுந் திறனிழந்து, அவனால் ஆளப்பெற இடந்தந்து ஒடுங்கி நிற்கும். இவ்வாற்றலை மனிதன் பெறுதற்கு ஆண்டவன் அருள் இன்றியமையாதது. எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆண்டவன் திருவருளே. அத்திருவருட்பேறு மனிதன் தன்னை ஆண்டவனிடம் ஒப்புவித்தலைப் பொறுத்து நிற்கிறது.

ஒவ்வொன்றுக்கும் படியும் துறையும் இருப்பது போலப் பிரமசரியத்துக்கும் அவை உண்டு. சிலர் விழிப்பில் மனத்தை அடக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பர்; சிலர் உறக்கத்தில் அவ்வாற்றலை இழந்து நிற்பர். முழு பிரமசரிய நிலையைப் பெறல் அரிது; மிக அரிது.

காந்தியடிகள் நீண்ட காலமாகப் பிரமசரியப் பயிற்சியில் தலைப்பட்டு உழைத்து வருகிறார். அவர் எப்படியில் நிற்கிறார்? அவர் உரைகளைக் கொண்டு நோக்குவோம். அடிகள் பல இடங்களில் தமது நிலையைக் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வுரைகளில் சில வருமாறு:—

'மன மொழி மெய்களான் பிரமசரியத்தை முற்றுங் காத்தல் அரிதென்பதில் ஐயமில்லை. முழு பிரமசரிய நிலை

குறித்து எனது வாழ்வில் ஒவ்வொரு நொடியும் யான் முயன்றுவரினும், அந்நிலை இன்னும் எனக்குக் கூடவில்லை என்று சொல்ல வருந்துகிறேன். இப்பிறவியிலேயே அந்நிலையடைதல் வேண்டுமென்னும் உறுதியினின்றும் யான் பிறழ்ந்தேனில்லை.'

'எனது சுவைப்புலனை (நாவை) ஒருவாறு வயப்படுத்திக் கொண்டேன். எனது எண்ணங்களை வயப்படுத்தற்குரிய படிகளை யான் கடத்தல்வேண்டும்.

'விழிப்பில் (ஜாக்கிரதையில்) எண்ணங்கள் ஒன்றோடொன்று முட்டுறுவண்ணம் என்றால் பாதுகாத்தல் முடியும். விழிப்பு நிலையில் தீய எண்ணங்களின் எழுச்சிக்கு மனம் இடந்தாராது நிற்கிறது என்றுஞ் சொல்வேன். உறக்கத்தில் மனதை வயப்படுத்துஞ் சக்தி குறைந்து நிற்கிறது. அவ்வேளையில் பொல்லாத கனவுகளால் பலதிற எண்ணங்கட்கு மனம் இரையாகிறது. இந்நிலையிலுள்ள ஒருவன் முழு பிரமசாரியாகான்.'

'பிரமசரியம் எளியதொன்றன்றென்பதையும், வெறும் உடலளவில் முடிவதொன்றன்றென்பதையும் நான் தெரிந்துகொண்டேன். பிரமசரியம் உடல் சட்டுப்பாட்டையொட்டிக் கருகொள்கிறது. ஆனால் அவ்வுடலளவிலேயே அது முற்றுப் பெறுவதில்லை. முழு பிரமசரியம் ஒரு தீய எண்ணத்துக்கும் இடந்தாராது. உண்மைப் பிரமசாரி பொறி புலன்களை நிறைவு செய்யக் கனவிலுங் கருதான். இந்நிலையை அவன் பெறும்வரை அவன் பல படிகளைக் கடக்க வேண்டியவனா யிருக்கிறான்.'

'உடலளவில் பிரமசரியம் பூணுதற்கும் எனக்கு எவ்வளவோ இன்னல்கள் நேர்ந்தன. இப்பொழுது அவற்றினின்றும் விலகி, என்னைக் காத்துக்கொள்ளும் ஒருவித நிலைபெற்றிருப்பதாக உணர்கிறேன். ஆனாலும் மனத்தை

முற்றிலும் என் வயப்படுத்தும் ஆற்றல் எனக்கு உண்டாக வில்லை. அதுவே இன்றியமையாதது. மனத்தைக் கட்டும் விருப்பமோ அல்லது முயற்சியோ என்மாட்டுக் குறைய வில்லை. தீய எண்ணங்கள் யாண்டிருந்து எங்ஙனம் மூண் டெழுகின்றன என்பது ஆராய்ச்சிக்குரியதா யிருக்கிறது.'

'தீய எண்ணங்களைத் தாளிட்டுப் பூட்டுதற்குரிய திறவு (சாவி) மனிதனிடமிருக்கிறது என்பதில் எனக்கு ஐய மில்லை. ஆனால் அதை ஒவ்வொருவனுந் தானே முயன்று பெறுதல் வேண்டும். மகான்கள் தங்கள் வாழ்வின் அடைவு களை (அநுபவங்களை) நம் பொருட்டு நல்கிச் சென்றார்கள். அவை எல்லார்க்கும் பொதுவாகவும் பொருந்தியன வாகவுமில்லை. முழுமை அல்லது குற்றத்தினின்றும் விடு தலை ஆண்டவன் அருளாலேயே கிடைக்கிறது. அவ்வருள் பெற்ற அடியார் ராமநாமம் போன்ற மந்திரங்களை நமக்கு உதவியிருக்கிறார். அம்மந்திரங்களில் அவருடைய தவ மும் தூய்மையும் பொலிந்துகொண்டிருக்கின்றன. கடவு ளுக்கு முன்னே ஆன்ம நிவேதனஞ் செய்யாதவரை மனத்தை முற்றும் கட்டுப்படுத்தல் இயலாது. சமய நூல் கள் யாவும் இதையே அறிவுறுத்துகின்றன. முழு பிரம சரியத்தைக் குறிக்கொண்டு முயன்றுவரும் ஒவ்வொரு பொழுதும் இவ்வுண்மையை யான் தெளிந்துவருகிறேன்.'

பிரமசரியம் வாழ்வில் முற்றுங் கலந்து படியு மாயின், நோயில்லா உடல் பெறுதல் கூடும். நோயுடல் பிரமசரிய அனுட்டானத்தின் குறைபாட்டை உணர்த் தும். இதையும் அடிகள் விளக்கி யிருக்கிறார்.

'எனது மனத்தை முற்றும் என் வழிப்படுத்தும் ஆற்றல் எனக்கிருக்குமேல் நான் சீதபேதி குடல் நோய் முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கமாட்டேன். நல்லுயிர் நல்

லுடலில் நிலவும் என்பது எனது நம்பிக்கை. உயிர் அவாக்களினின்றும் விடுதலை அடையும் அளவினதாக உடலும் நலம் பெறுகிறது. இதனால் நல்லுடல் என்பது பருத்த ஊன் போர்வை என்று கொள்ளலாகாது. அச்சமறியா உயிர், மெலிந்த உடலிலே பெரிதும் நிலவும். சில நிலைகளுக்குப் பின்னர் உள்ளொளிக்கேற்ற அளவாக ஊன் பெருக்கங் குறையும். முற்றும் நலமுற்ற உடல் ஊன் பொதியற்றதாகவு மிருக்கும். ஊன் கட்டுக்கட்டாகப் பொதுளும் உடல்கூட நோய்க்கு இடந்தருவதா யிருக்கலாம். அவ்வுடல் தற்போது நோய்வாய்ப்படாதிருப்பினும், தொற்று நோய்கட்கு இடந்தராமலிருத்தல் அரிது. உயிர் வளம் பெற்ற நல்லுடல் பீடைகட்கு இரையாகாது.'

இவ்வுரைகளால் பிரமசரிய ஒழுக்கத்துக்கும் நல்லுடற் பேற்றிருக்கும் உள்ள தொடர்பு இனிது புலனாகும். பிரமசரியமும் உடலோம்பலும் ஒன்றுடன் ஒன்று இயைந்து நிற்றலான், அவற்றின் முறைகளிலும் ஒருமைப்பாடிருத்தல் இயல்பு. அவ்வொருமைப்பாட்டைப் பற்றிக் கீழ்வரும் முறைகளை நேயர்கள் கொள்வார்களாக.

மிகூண் கொள்ளலும், குறையூண் கொள்ளலும் பட்டினி கிடத்தலும் உடலோம்பு முறைகளல்ல. இவையல்லாத ஒன்றே இயற்கை முறையாகும். இயற்கையளவில் நின்று உடலை ஓம்புவது அறிவுடைமை. காந்தியடிகள் நாவிற்கு அடிமையாகாது, இயற்கை வாழ்விற்கு ஊறு நிகழா முறையில் உணவுகொண்டு வாழ்கிறார். நாவிற்கு அடிமையாகும் மனிதன் உலகிலுள்ள எல்லாச் சிற்றின்பத் துறைகட்கும் எளிய

**சுவைக்கு அடிமையாதல்**

றுவன். ஒருவன் உலகில் மனிதனாக வாழ்கிறானா இல்லையா என்பதை அவனது நா ஒழுக்கங்கொண்டு அளந்து கூறலாம்.

> ‘ஒருவன் தன்பால் உறுத்தெழும் விலங்கு நசைகளை அடக்கவேண்டுமானால் முதலாவது அவன் நா நசையை அடக்குதல் வேண்டும். ஆனால் அஃது எளிதன்று; மிக அரிது. * * * * தேக்கடை காப்பிக்கடை பலகாரக் கடைகள்மீது ஓடும் மனத்தை அடக்கியாளாதவரை - உடல் நலத்துக்கேற்ற உணவளவில் நிறையுளங் கொள்ளாதவரை - உணவுடன் காரமுள்ள கறியமுதுகளையும் விதவிதமான ஊறுகாய்களையும் விலக்காதவரை - நாம் நம்மாட்டுள்ள விலங்கியல்புகளை அடக்கியாள முடியாதவராகிறோம்’

என்றும்,

> ‘பிரமசரிய விரதத்துக்கும் முதலாக வேண்டற்பாலது நாவைச் சுவைக்கு எளிமைப்படுத்தாதிருப்பது. இவ்வொன்றை முற்றுங் கொண்டால் பிரமசரிய வாழ்வு எளிதாகும்’

என்றும் காந்தியடிகள் நாவிற்கு அடிமையாகாது வாழுமாறு அறிவுறுத்துகிறார்.

**உணவு**

காந்தியடிகள் பிறந்த குலம் சைவ உணவு உண்பது. அதனால் காந்தியடிகள் இளமையில் சைவ உணவே உண்டுவந்தார்; இளமையில் சில தீய நண்பர் கூட்டுறவால், சுயராஜ்ய வேட்கை மேலீட்டான், புலால் உண்ணப் பயின்றார். அதன் பொருட்டுத் தாயாரைப் பொய்சொல்லி ஏமாற்ற மனமெழாக் காரணத்தால் அவர் ஊன் உண்ணலை விடுத்தார். இது முன்னரும் எடுத்துக் காட்டப்பட்

டது. அடிகள் இங்கிலாந்து நோக்கியபோது அன்னையாருக்கு அவர் அளித்த மூன்று உறுதி மொழிகளுள் புலால் உண்ணாமையும் ஒன்று. இங்கிலாந்தில் புலால் உண்ண வாய்ப்புக்கள் நேர்ந்தபோதெல்லாம் உறுதி மொழியை உன்னியே அடிகள் அவ்வுணவு கொள்ளா தொழிந்தார். அடிகள் இங்கிலாந்தில் தங்கியிருந்த போது, சைவ உணவைப்பற்றிய நூல்கள் சிலவற்றைப் படித்தார். படித்ததன் பயனாக அவர் சைவ உணவு, உடல்நலத்துக் குரியதென்றும், ஊனால் அந்நலன் இல்லையென்றும் ஒரு முடிவிற்கு வந்தார். அவர் தம் முயற்சியால் சைவ உணவுக் கழகமொன்றுங் காணப்பட்டது. முதலில் பிறந்த குலம் காந்தியடிகளைப் புலால் உண்ணாதவாறு காத்தது. பின்னை அடிகளின் தாயன்பும், அவர் வாய்மையில் கொண்டிருந்த உறுதியும் புலால் உணவைத் தகைந்து வந்தன. முடிவில் ஆராய்ச்சியால் விளங்கிய அறிவு புலாலுணவின் நினைவையும் அறவே தொலைத்தது. அறிவால் ஒன்றைக் கொள்வதும் தள்வதுமே சிறப்பு. அதுவே வாழ்வில் நிலைத்து நிற்கும். தென்னாப்பிரிக்காவில் சைவ உணவைப் பற்றி அடிகள் படித்த நூல்களும், புரிந்த ஆராய்ச்சியும் புலால் உணவின் புன்மையை அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கச் செய்தன. அடிகளின் மனைவி மைந்தர் முதலியோர் நோய்வாய்ப்பட்ட சில வேளைகளில் மருத்துவர் அவர்க்குப் புலால் கொடுக்க முயல்வர் அடிகள் அம்மருத்துவரோடு அறப்போர் நிகழ்த்துவர் அம்மையாரும் பிள்ளைகளும் 'உயிர் போனாலும் புலால் உணவு கொள்ளோம் கொள்ளோம்' என்று முழங்குவர்

இத்தகை நிகழ்ச்சிகள் சில அடிகள் வாழ்வில் நேர்ந்துள்ளன.

அடிகள் பிரமசரிய விரதந் தாங்கிய நாள்தொட்டுச் சைவ உணவிலுங் கட்டுப்பாடுகள் செய்துகொண்டார். தொடக்கத்தில் கனி பருப்பு முதலியவற்றை அவர் உண்டு வந்தார். பாலையும் அவர் விலக்கினார். பின்னே பல இடங்களில் போந்து தொண்டு செய்ய நேர்ந்தமையால் அடிகள் வெள்ளாட்டுப் பால் பருகலானார். ஆரஞ்சுப்பழமும் அவரால் அருந்தப்படுகிறது. சில வேளைகளில் அவர் கோதுமை அடையும், அரை வேகல் கீரையும் உண்பதுண்டு. பிரமசரிய வாழ்விற் கேற்ற உணவை அடிகள் உண்டு வருகிறார்.

காந்தியடிகள் குறித்த நேரத்தில் உணவுகொள்வது வழக்கம். புளி மிளகாய் காரம் உப்பு அவருக்கு நஞ்சு. விரிவு அவரெழுதிய 'ஆரோக்கிய' நூலிற் காண்க.

**உண்ணா நோன்பு**

காந்தியடிகள் இயற்கை உணவு கொள்வதோடு வாரத்துக்கொரு நாள், சில வேளைகளில் இருநாள், உண்ணா நோன்பிருக்கிறார். ஏகாதசி, பிரதோஷம் முதலிய நாட்களிலும் அடிகள் விரதம் இருப்பதுண்டு. நோன்பு பட்டினியன்றோ என்று சிலர் ஐயுறலாம். நோன்புக்கும் பட்டினிக்கும் வேற்றுமை உண்டு. நோன்பு உடலை வளர்க்கும்; பட்டினி உடலைத் தேய்க்கும். நோன்பு உடல் நலத்துக்கென அன்பால் காப்பது. பட்டினி வறுமையாலோ, வேண்டுமென்றோ, வேறுபல தீக் காரணம்பற்றியோ உடல் வருந்தக் கொள்வது. உடலோம்பலுக்கு நோன்பு இன்றியமையாதது. நோன்பு

வயிற்றிலுள்ள பழைய மல நஞ்சை எரித்து, அன்றாடம் உண்ணும் உணவு சீரணமாகத் துணைபுரிய உள்ளுறுப்புக்களைத் துலக்கித், தூய்மைப்படுத்தி, ஈரலுக்கு (Liver) ஊக்கமூட்டி, குருதி ஓட்டத்தைச் செம்மைப்படுத்துவது. நோன்பின் மாண்பை அதற்குரிய நூல்களிற் காண்க.

காந்தியடிகள் வாரநோன்பு உடலோம்பலுக்கெனப் பொதுவாகக் கொள்ளப்படுவது. வேறு சில போழ்து அவர் கொண்ட உண்ணா நோன்பு மனிதர்பாலுள்ள விலங்கு நீர்மைகளைக் களையும் நோக்குடையது. காந்தியடிகளின் எளிய உணவும் நோன்பும் அவர் உடலைப் பொன்னெனப் பொலிவிக்கின்றன. அடிகள் உடலில் இளமை தவழ்தல் காணலாம். அடிகளின் உண்ணா நோன்பு மேலும் விளக்கப்படும்.

காந்தியடிகள் அணிவது எளிய இயற்கையுடை. எளிய இயற்கை யுடையாவது கையால் நூற்றுக் கையால் நெய்வது. இயந்திரங்களால் நெய்யப்படும் உடையை உடுத்தலாகாதென்பது காந்தியடிகள் கொள்கை. ஏன்? இயந்திரங்களால் விளைந்துள்ள கொடுமைகள் பற்பல என்று அவர் கருதுகிறார்.

**உடை**

இக்காலம் இயந்திர காலமென்பது எவரும் அறிந்ததொன்று. மனிதன் இயந்திரத்துக்கு அடிமையான நாள்தொட்டு அவன் பிறரை வருத்தும் பேயானான். உலக சகோதரத்துவத்துக்குத் தடையா யிருப்பது இயந்திர இயக்கமென்று கூறுவது மிகையாகாது. அவ்வியக்கம்

**இயந்திரக் கொடுமை**

பல மனிதர் வேலைக்குக் கேடு சூழ்கிறது; முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமையை உண்டுபண்ணு கிறது. இயந்திரத்தால் செல்வம் ஒரு கூட்டத்தா ரிடைப் பெருகுகிறது; மற்றொரு கூட்டத்தாரிடைச் சுருங்குகிறது; அதனால் போராட்டம் வளர்கிறது. இயந்திரத்தினால் பெறும் அளவிலாப் பொருள் வகை களை மற்ற நாட்டில் பரப்ப முதலாளிகள் முயல்கிறார் கள். அம்முயற்சியால் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு அடிமைப்படுகிறது. முதலாளி தனது வாணிபத்துக்கும் முயற்சிக்கும் இடையூறு நிகழாதவாறு காக்கத் துப் பாக்கி, பீரங்கி, போர்க்கப்பல், ஆகாய விமானம், நச்சுக் காற்று, எறிகுண்டு, அணுகுண்டு முதலிய கொலைக் கருவிகளைப் புதுப்புது முறையில் கண்டு பெருக்கி வரு கிறான். போர்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இவை எல்லாவற்றிற்குங் காரணம் இக்கால சாம்ராஜ்ய ஆட்சி முறையின் இயந்திர இயக்கமே. சாம்ராஜ்ய ஆட்சி முறையில் எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் கருதிப் போற்றும் பேறம் ஓம்ப உலகிடைத் தோன்றிய மனி தனை, இயந்திரம், பிற உயிரைக் கொல்லும் விலங்காக்கு தல் இயல்பு. மனிதனிடத்துள்ள பேய்க் குணமெல்லாம் சாம்ராஜ்யத்தில் இயந்திர வடிவமாய் பரிணமித்திருக் கின்றன என்று சொல்லலாம். இயந்திர வாழ்வு மனிதனை இயற்கை வாழ்வினின்றும் பிரிக்கிறது. அதனால் அவன் இன்பமிழக்கிறான். இயந்திரம், எளிய இன்ப வாழ்வைக் கெடுத்துத் துன்பச் செல்வ வாழ்க்கையை ஒரு கூட்டத் தார்க்கும், கொடிய வறுமை வாழ்க்கையை மற்றொரு கூட்டத்தார்க்கும் நல்கலால் அது கடியற்பாலதே. இன்

னோரன்ன பல காரணங்களால் மகாத்மாகாந்தி இயந்திரத்தை வெறுக்கிறார்.

> ' இயந்திரத்தால் விளையுங் கேடு சொல்லுந்தகைய தன்று. இயந்திரம் மனிதனை அடிமைப்படுத்துகிறது '
>
> ' (இயந்திரம்) மனிதனது வாழ்வின் உண்மை நோக்கினின்றும் அவனை வேறுபடுத்துகிறது. மனிதனது நாட்டம் ஆன்ம நலத்தின்மீது செல்வதில்லை; வெறும் உடல் நலத்தின்மீது செல்கிறது. தன்னை ஆராய்ந்துணர மனிதனுக்குப் போதிய பொழுதில்லை. பத்திரிகைமீதும் ஆட்டல்கள்மீதும் அவன் எண்ணஞ் செல்கிறது '
>
> ' தற்கால நாகரிகம், சடத்தை ஆராய்ச்சி செய்யவும், அதனால் பொருளைப் பெருக்கும் இயந்திரத்தையும், கொலைக் கருவிகளையுங் கண்டுபிடிக்கவும் துணை செய்கிறது. நம்முடைய நாகரிகம் ஆன்ம ஆராய்ச்சிக்கு நிலைக்களனாயிருப்பது '

என்று காந்தியடிகள் இயந்திர இயக்கத்தை மறுத்துரைத்தல் காண்க.

திடீரென எல்லா இயந்திர வகைகளையும் ஒழிக்குமாறு அடிகள் அறிவுறுத்தப் புகவில்லை. ஆனால் இயந்திரங்கள்மீது அவர் சிந்தை முதல் முதல் நடந்தது. அவைகளைச் சுருக்கக் கையால் நெய்யப்படும் உடை உடுத்துமாறு மக்களுக்கு அவர் அறிவுறுத்துகிறார். இவ்வறிவுறுத்தல் பொதுவாக உலகத்துக்கும் சிறப்பாக இந்தியாவுக்கும் நலஞ் செய்வதென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தியாவிலுள்ள ஆலைகளிலியங்கும் இயந்திரங்கள் இந்தியாவில் செய்யப்படுவனவல்ல. பிற நாடுகளி

னின்றும் அவைகளைப் பெறுவதால் இந்தியாவின் பொருள் எவ்வளவு வெளிச் செல்கிறது? பொருள் போக்கு ஒருபால் கிடக்க. பிறநாட்டுத் துணைகொண்டு மானங்காக்கும் வாழ்வு நாட்டில் பெருகுகிறதன்றோ? அஃதொரு வாழ்வா? இழிவு! இழிவு!! ஆதலால், பொது வாக உலகத்தவரும் சிறப்பாக இந்தியரும், கையால் நூற்றுக் கையால் நெய்த உடையை அணிதல் வேண்டு மென்று காந்தியடிகள் சொல்கிறார்.

காந்தியடிகள் தம் வாழ்வில் ஆற்றிய தொண்டு களுள் தலையாயது கைராட்டினத்தை உயிர்ப்பிக்க ஆற்றியதாகும். இருபதாவது நூற்றாண்டில் - இயந்திர இயக்கம் யாண்டும் பரவி வேரூன்றியுள்ள இந்நாளில் - ராட்டின இயக்கத்தை உயிர்ப்பித்தல் எவரால் முடியும்? காந்தியடிகள் இம்முயற்சியில் தலைப்பட்டு வெற்றி பெற்றுவரல் கண் கூடு. காந்தியடிகள் நாடோறும் ராட்டினத்தில் நூற்பதை ஒரு வழிபாடாகக் கொண்டுள்ளார். அவர் எதை மறந்தாலும் மறப்பர்; ராட்டையை மறவார். இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், கிடக்கும்போதும், உறங்கும்போதும், கனவிலும், எப் போதும் அடிகள் உள்ளம் ராட்டினத்தை மறப்பதில்லை. சிறையிலும் நூற்றல் தொண்டாற்றக் காந்தியடிகள் தவறினரில்லை.

**கைராட்டினம்**

உண்மைக்கு அரிச்சந்திரன், அறத்திற்குப் புத்தர், அன்பிற்குக் கிறிஸ்து என்று உலகோர் சொல்வது வழக்கம். ராட்டைக்குக் காந்தியடிகள் என்று இனி உலகங் கூறும். காந்தியடிகள் தம்மை, ' நான் சர்க்கா பித்தன் '

என்று சொல்லிக்கொள்வது வழக்கம். அவர் சிறை புகுந்த வேளைகளிலும் அன்பர் சிலர் அவர்பால் அணுகி, 'நாட்டார்க்கு என்ன சொல்கிறீர்' என்று வினவிய போது, 'கதர்' என்று கைகாட்டிச் சென்றனர். கைராட்டினத்தை நாட்டிற் பரப்பக் காந்தியடிகள் செய்த முயற்சிக்கோர் எல்லையில்லை.

காந்தியடிகள் காங்கரஸ் திட்டங்களுள் ஒன்றாக நூற்றலைப் புகுத்தினார்; இருபது லட்சம் ராட்டினம் நாட்டில் ஓடவேண்டுமென்று ஒரு முறை முயன்றார். ஒத்துழையாத் திட்டங்களைச் சிலர் மறுத்தபோதும் - அன்னார் அவைகளைத் தொலைக்க முயன்றபோதும் - 'நூற்றலை விலக்காதேயுங்கள்' என்று அடிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டது. காங்கரஸில் நூல் சந்தா விதிக்கப்பட்டது. அது மறுக்கப்பட்டபோது காங்கரஸுக்குள்ளே தனியாக ராட்டினச் சங்கமொன்று அமைக்கப்பட்டது.

பேய்க்குணங்களைப் பெருக்கும் இயந்திர அரக்க இனத்தைத் தொலைக்கவந்த தெய்விகப் பொருள் ராட்டினமென்பது காந்தியடிகள் கருத்துப் போலும்! ராட்டையைப்பற்றிக் காந்தியடிகள் பேசிய பேச்சுக்கும் எழுதிய எழுத்துக்கும் ஓர் அளவில்லை. அவைகளுள் சில வருமாறு:—

> 'குடிசைத் தொழிலில்லையேல் இந்தியக் குடிமகன் நாசமாய் விடுவான். நிலத்தின் விளைவைக் கொண்டு அவன் வாழல் முடியாது. மற்றுமொரு தொழில் அவனுக்கு வேண்டும். எளியதும் நயமானதும் சிறந்ததுமா யிருப்பது நூற்றலேயாகும்.'

'இனிவரும் கல்வித் திட்டத்தில் நூற்றல் கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும்.'

'ஒவ்வொரு வீட்டிற்கும் அடுப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது கைராட்டினம்.'

'கோடிக்கணக்கான இந்தியக் குடிமக்கள் சேர்ப்புத் தொழிலின்றிப் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களது சிறு வருவாயுடன் கைராட்டினமு மிருந்தால், அவர்கள் வறுமையுடனும் வாசியுடனும் போராடலாம். ஆலைகள் அவர்கள் வறுமையைப் போக்கா; கைராட்டினம் ஒன்றே அதைப் போக்கும்.'

'எனக்கு அதிகார மிருந்தால் பள்ளிக்கூடங்களிலும் மற்ற இடங்களிலுமுள்ள எல்லா வேலைகளையும் நிறுத்தி விடுவேன்; நூற்றல் தொழிலைப் பரபபுவேன்; மாணுக்கரை நூற்றல் போதிக்கும் ஆசிரியராக்குவேன்; தச்சரைக் கைராட்டினஞ் செய்யுமாறு ஊக்க மூட்டுவேன்; வாழ் வளிக்கும் இச்சர்க்காவை ஒவ்வொரு வீட்டிற்குங் கொண்டு போய், நூற்றல் போதிக்குமாறு ஆசிரியன்மாரைக் கேட்டுக் கொள்வேன்.'

'விவசாயமும் நூற்றலும் வல இட நுரையீரல்கள் போன்றன' * * * * நூற்கும் ராட்டினத்தை இழந்த தனல் நமது இடது பக்க நுரையீரலை இழந்தோம். அதனல் விரைந்த காசநோயால் வருந்துகிறோம். மீண்டும் ராட்டினத்தைப் பிடிப்பதனல் அந்நோய் போதல்கூடும்.'

'இந்தியாவில் மூன்று கோடிக்கு மேற்பட்ட மக்கள் ஒரு வேளை உணவிற்கும் வருந்துகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினஞ் சுழலுமானல் - ஆயிரக்கணக்கான மக்கள் கைத்தறியில் முயன்று தொழில் புரிவார்களானல் - பட்டினி பறந்து போகும்.'

'அது (நூற்றல்) நம் பெண் மக்களை ஒழுக்கந் தவறுதலினின்றும் காக்கிறது; உணவளிக்கிறது; சோம்பலைப் போக்குகிறது; மனத்தை ஒருமைப் படுத்துகிறது.'

' நூற்றுக்கு எண்பது பேர் விவசாயத் தொழில் செய்வோர் * * * * இப்பெருந் தொகையினர், ஏறக்குறைய ஆறுமாத காலம் பொழுதை வீணே கழிக்கிறார். இவர்க்கு ஏதாயினும் தொழில் தரப்படின், வறுமை நோய் ஒருவாறு தணியும்.' (அத்தொழில் நூற்றல் என்பது கருத்து).

' ராட்டை, எளிமை - தன்னம்பிக்கை - தன்னடக்கம் - மன்பதையுள் வலிந்து கலப்புக் கொள்ளல் - முதலியவற்றிற்கு அறிகுறி. இத்தகைய உறவுகோள் உலகத்துக்கு அச்சமூட்டுவதாயின், கடவுளில்லை அல்லது கடவுள் உறங்குகிறார் என்றே சொல்லுதல் வேண்டும்.'

' நான் தன்னந் தனியனா யிருக்கும்போது எனக்குக் கெழுதகை நண்பனாகவும், தேற்றரவாளனாகவும் ராட்டை திகழ்கிறது. நேயர்கட்கும் அவ்வாறே அது திகழ்க.'

' * * * * * கத்தி அபினியினுங் கொடியது. இந்தியா, ராட்டை எடுத்து நூற்குமேல், அது படைபெருக்கைக் கட்டுப்படுத்துவதோடு, உலகிலும் அமைதி நிலைபெறுத்துமென்று யான் சொல்கிறேன்.'

' ஏழைகளிடத்தில் உழுவலன்பு எங்கே இருக்கிறதோ அங்கே கடவுளுமிருக்கிறார். ராட்டையினின்றும் நான் நூற்றெடுக்கும் ஒவ்வோர் இழையிலுங் கடவுளைக் காண்கிறேன்.'

' கதரில்லாத சுதேசியம் உயிரில்லாத உடல் போன்றது.'

**கவியரசரும் ராட்டையும்**

கவி ரவீந்திரநாத் தாகூர் ஒரு முறை சர்க்காவைப் பற்றி இழித்துக் கூறியது கேட்டு, மகாத்மா அவருக்கு நல்விடை பகர்ந்தார். அவ்விடைக்கண் ஒளிருஞ் சில அழகு மொழிகள் உள்ளத்தைக் கவர்கின்றன. அவைகளுள் சிலவற்றை அகழ்ந்து ஈண்டுத் தருகிறேன்.

'* * * * கவி தாமே படைத்த ஒரு பரந்த அழகிய உலகில் - எண்ண உலகில் - வதிகிறார். யான் மற்றவரின் படைப்புக்கு - ராட்டைக்கு - அடிமைப்பட்டிருக்கிறேன். கவி தமது குழலோசையால் கோபிகளை நடம்புரியச் செய்கிறார். யான் எனது காதலுக்குடைய சீதையை - ராட்டையைத் - தேடி அலைகிறேன்; அவளைப் பத்துத் தலை அரக்கனிடமிருந்து - ஜப்பான் - மான்செஸ்டர் - பாரிஸ் முதலிய இடங்களிலிருந்து - மீட்க முயன்று வருகிறேன். கவி ஒரு கர்த்தர். அவர் படைப்பார்; அழிப்பார்; மீண்டும் படைப்பார். யான் எதையுந் தேடித் திரிபவன்; ஒன்றைக் கண்டால் அதை உடும்பைப்போல் பற்றிக் கொள்வோன். கவி நாளுக்கு நாள் புதிய - கவரத்தக்க - பொருள்களை உலகிற்கு உதவுகிறார். யான், காய்ந்து மறைந்த சில பழமையின் திறங்களைப் புலப்படுத்தல்கூடும். புதுமையும் ஒளியும் ஒளிரும் பொருள்களை உண்டுபண்ணும் மந்திரவாதிக்கு ஓர் உயர்ந்த நிலையை எளிதில் உலகம் வழங்கலாம். என்னுடைய பழங்குப்பைக்கு ஒரு பொந்து பெற யான் வருந்தி உழைத்தல்வேண்டும். * * *'

காந்தியடிகட்குச் சர்க்கா (ராட்டினம்) மீதுள்ள ஆர்வத்தை எவ்வாறு எனது சிறு சொற்களால் எல்லைப்படுத்திக் கூறவல்லேன்? ராட்டையினின்றும் வரும் ஒவ்வோரிழையுந் தமக்குக் கடவுள் காட்சியை வழங்குகிறதென்றும், பிரமசரிய வாழ்விற்குச் சர்க்கா துணைபுரிகிறதென்றும், கொரான் பைபில் கீதை முதலிய தெய்விக நூல்களிலும் ராட்டின மாண்பு பேசப்பட்டிருக்கிறதென்றும், கைராட்டின ஓசை தமது செவிக்கினிய இசை என்றும், அது தெய்வ நெறி காட்டுங் கருவி என்றுங் காந்தியடிகள் சர்க்காவைப் போற்றிப் புகழ்ந்துள்ள உரைகளை விரிக்கிற் பெருகும்.

ராட்டின மாண்பு

சர்க்காரைப்பற்றி ஒரு மாதரசி எழுதிய கடிதம், (29-6-1921) 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. காந்தியடிகள் அக்கடிதத்தை வெளியிட்டு அளவிலா மகிழ்வெய்தினர். அக்கடிதத்தின் பிற்பகுதி வருமாறு:—

'அயலார் இந்தியாவின் விளைவை உண்டு கொழுத்து வர இந்தியப் பெண்மணிகள் ஏன் சோம்பேறிகளாகக் கிடக்கிறார்கள்? இந்தியப் பெண்மக்கள் செய்யவேண்டிய வேலையை அயலார் பிடுங்கிக்கொண்டனர். கைராட்டினம் இந்தியாவிற்கு வேலை நல்கும்; உணவளிக்கும். * * * * யான் ஒரு கவியாயிருப்பின், ராட்டினப் பாட்டுப் பாடுவேன்; அதன் அழகையும் பயனையும் பாட்டிலிறக்குவேன்; அதன் பாவியலையும் தெய்வத் தன்மையையும் புகழ்வேன்; காலத்தில் உதவி புரியுமாறு ஆண்டவனைச் சொன்மலரால் வாழ்த்துவேன்; பசியையும் பட்டினியையும் அவமதிப்பையும் போக்கக் கைராட்டினம் எடுத்துச் சுழற்றுமாறு என் சகோதரிகளைக் (பாட்டால்) கேட்பேன். பாமாலை கோக்கும் பேறு பெற்றேனில்லை. என் ஆன்மாவிற்குள் அப் பா முழங்குகிறது. யான் என் செய்ய வல்லேன்? ராட்டினம் தன் பாட்டைப் பாடட்டும். நான் அதைச் சுழற்றுகிறேன்; மற்றவரையும் அதைச் சுழற்றச் சொல்கிறேன்.'

பழந்தமிழ்ப் பாவலர்கள் இழை, நூல், கதிர் முதலியவற்றைப் பாட்டிலும் உவமங்களிலும் ஆண்டமை ஈண்டு நினைவிற்கு வருகிறது.

'பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத

கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு'

எனவரூஉம் நன்னூல் பாவின் உள்ளக்கிடக்கையை ஓர்க.

கைராட்டினம் தன்னைச் சுற்றுவோர்க்கு உரமளிக்கிறது; செல்வம் நல்குகிறது; அவர்தம் ஒழுக்கங் காக்கிறது. கைராட்டினஞ் சுழற்றும் ஒருவனையோ ஒருத்தியையோ உற்றுநோக்குங்கள். சுழற்றுவோர் விழி ராட்டினத்தில் பதிகிறது. அன்னார் முதுகந்தண்டம் நிமிர்ந்து நிற்கிறது. நரப்புக்கொடிகள் சுற்றியுள்ள அத்தண்டம் உடல் நலத்துக்கு உயிர்போன்றது. முதுகைக் குனித்துக் குனித்து நடப்போர் அல்லது அமர்வோர் விரைவில் முதுமை எய்துவர். மனிதனது வளத்தையும் உரத்தையும் அளந்து காட்டுங் கருவி முதுகந் தண்டம். அதற்கு ஊறு நிகழாதவாறு மக்கள் அதைக் காத்தல் வேண்டும். அதன்பொருட்டுச் சிலர் நிமிர்ந்து நடத்தல், ஓடல், குதிரையேற்றம், நீந்தல், தண்டாலெடுத்தல், உருளை சுழற்றல் முதலிய பயிற்சிகளைச் செய்வர். யோகிகளும் ஓரிடத்தமர்ந்து காற்றை ஈர்க்கும்போது குனிந்து இருப்பதில்லை. முதுகந்தண்டு நிமிர்ந்து நிற்குமாறு அவர் அமர்தல் காண்கிறோம். இப்பயிற்சிகளாலாகும் பயன்களையெல்லாம் ராட்டினஞ் சுழற்றுவோர் பெறலாம். கைராட்டினம் மக்கட்குப் பல வழியிலும் உரமளிப்பதாகிறது.

சர்க்காவைச் சுழற்றும்போது சுழற்றுவோர் மனம் வேறெதன்மீதும் ஓடுவதில்லை. அது ராட்டினத்தில் ஒன்றி நிற்கிறது. அவ்வொற்றுமை மக்களின் ஒழுக்கத்தைக்

காக்கிறது. சிறப்பாகச் செல்வப் பெண்மக்கள் வேலை யின்றிக் கிடக்கும் வேளையில் அவர்கள் மனம் பல துறை களில் ஓடியோடி உழலும். அதனால் கற்பொழுக்கத்துக் கும் சில வேளைகளில் இடர் நேரும். ராட்டினம் அம் மன ஓட்டத்தை ஒருமைப்படுத்தலால் அஃது ஒழுக்கத்தைக் காப்பதாகிறது.

கைராட்டினம் தரும் நூலால் நெய்யப்படும் உடையை அணிவதால் செல்வம் வீட்டிலேயே தங்கும். நாட்டிலுள்ள அனைவரும் இவ்வுடையை அணிவாராயின், நாட்டுச் செல்வம் நாட்டிலேயே நிலவும். இதனால் ராட்டினஞ் செல்வம் பெருக்குவதாகிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த ராட்டினத்தை என்று மறந்தோமோ அன்றே நாட்டின் தோள்வலி, ஒழுக்கம், செல்வம் எல்லாங் குன்றலாயின. நாட்டில் மகிழ்ச்சி இல்லை ; மூத்தாள் குடியேறினள்.

மூதேவியைத் துரத்த மகாத்மா காந்தி முயன்று வருகிறார். நாட்டை மூத்தாள் வயப்படுத்திய இயந்திரச் செயற்கை வாழ்வினின்றும் காந்தியடிகள் தப்பிப் பிழைத்துக் கைராட்டினத்தால் நூற்றுப் பெறும் நூலால் நெய்யப் பெற்ற கதராடை அணிந்து எளிய இயற்கை இன்ப வாழ்வு நடாத்தி வருகிறார். ஏனையோ ரும் அவ்வாழ்வு பெறல் வேண்டுமென்று அவர் உழைக் கிறார் ; தவங் கிடக்கிறார்.

பெறுதற்கரிய பிறவியைத் தாங்கிய மக்கள் இவ் வுலகில் உண்மையாக இன்ப வாழ்வு பெற அவாவுவரேல், அவர்கள் கையால் நூற்ற நூலால் நெய்யப்பட்ட உடையை உடுத்தல்வேண்டும் ; அதற்குரிய கைராட்டின

*இயக்கத்துக்கு ஒல்லும்வகை துணை நிற்றல் வேண்டும். உலகம் இயந்திரத்தால் அடைந்து வருந் துன்பம் போதும்! போதும்!! சாம்ராஜ்ய ஆட்சியுடன் இயந்திர இயக்கம் இன்னும் பெருகி வருமேல் உலகில் சமய ஞானமும் கடவுளன்பும் அருகுமென்பது ஒருதலை. இப்பொழுதே அவை சுருங்கியிருத்தல் வெள்ளிடைமலை. இனி அவை அறவே ஒழியுமாயின் உலகம் என்னும்? மனிதனிடத்துள்ள அன்பும் அருளும் முற்றும் பட்டுப் போகும். மனிதன் விலங்காவன். பெரியோர் அருளிய மறை நூல்களை ஓதுவது ஒழியும். ஆதலால், இயந்திர இயக்கத்தை வீழ்த்த இதுவே காலம். இதுபோழ்து மனிதனை விலங்காக்கி வருந் தற்கால நாகரிகத்தைத் தொலைக்க நல்லுரை பகரல், நூலெழுதல் முதலிய வற்றால் மட்டும் முயல்வதால் பெரும்பயன் விளையாது. அந்நாகரிகத்தை வெட்டி வீழ்த்தவல்ல ஆற்றல் கைராட்டினத்துக்கு உண்டு. ஆதலால், கைராட்டின இயக்கம் ஆக்கம்பெற அறிஞர் முயல்வாராக.*

மறங்கெடுத்து அறம் வளர்க்குந் திருமாலாழி இற்றை ஞான்று காந்தியடிகள் கைராட்டினமாகத் தோன்றியிருக்கிறது போலும்! *பண்டைநாளில் அறநெறி யோம்பப் போந்த சில சான்றோர் பெரிதுங் கொலைக் கருவியால் தங்கடனாற்றினர். காந்தியடிகள் கொல்லாமை வழி அறம் வளர்த்து வருகிறார். அவரது கைராட்டினம் கொல்லா அறத்தை அடிப்படையாக் கொண்டியங்கு வது. அத்தகைய ராட்டின இயக்கத்தை வளர்த்து, அதன்வழி உலகில் இயற்கை வாழ்வை நிறுத்தத் தோன்றிய பெருவாழ்வு நம் காந்தியடிகள். இயற்கை*

வாழ்விற்கு உடையும் ஒரு கருவி என்பது அறியற் பாலது.

விஞ்ஞானம் ஆக்கம் பெறுதற்கு முன்னர் உலகில் கைத்தொழிலே பெருகி நின்றது. பதினேழாம் நூற்றாண்டு முதல் விஞ்ஞான ஆராய்ச்சி பெருகியது. இப் பெருக்கால் இயந்திர இயக்கம் வளர்ந்தது. வளர்ச்சிக்கு அடிப்படையான காரணம் சமூகத்தில் முதலாளி இனம் என்றொன்று தோற்றமுற்றதேயாகும். முதலாளித்துவம் நாளடைவில் சாம்ராஜ்யமாக உருக்கொண்டது. சாம்ராஜ்யம் நாட்டாசை கொண்டு மூர்க்க அரக்கப் போர்களைக் கிளப்பிக்கொண்டே இருக்கிறது; கொலைக் கருவிகளை நவநவமாகக் கண்ட வண்ணம் இருக்கிறது; உலகைப் போர்க்களமாக்கி நிற்கிறது

எல்லாவற்றிற்கும் அடிப்படை இயந்திர இயக்கம் என்று விளக்க வேண்டுவதில்லை. விஞ்ஞானம் நடம் புரியும் இவ்வேளையில் அவ்வியக்கம் மறையுமா? மறையா விடின் உலகம் அமைதியுறுமா? இதுபற்றி வெளி வந்துள்ள கருத்துக்கள் பல. அவைகளைத் திரட்டி இரண்டாக்கலாம். ஒன்று உலகில் பொதுமை அறம் பரவினால் இயந்திர இயக்கத்தால் கேடு விளையாதென்பது. இன்னொன்று இயந்திர இயக்கமே தொலைந்து பழைய கைத்தொழில் முறை உயிர்த்தெழல் வேண்டுமென்பது. முன்னையது மார்க்ஸியம்; பின்னையது காந்தியம். இரண்டுக்கும் போராட்டம் துவங்கி யுள்ளது. இதற்குரிய களஞகை இந்தியா நிற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முடிவு என்ன ஆகும்?

இந்தியாவில் துவங்கப்பெற்றுள்ள போராட்டம் நன்முறையில் முடியும் என்று யான் கனவு காண்கிறேன்.

இப்போராட்டம் சில படிகளைக் கடந்து அறிவு ஆராய்ச்சி நிலை எய்தும். அந்நிலையில் உண்மை விளங்கியே தீரும்.

யான் உடுக்கையினிடையில் உலவும் எறும்பானேன்; சிங்க நோக்கால் மார்க்ஸியத்தையும் பார்க்கிறேன்; காந்தியத்தையும் பார்க்கிறேன். இரண்டையும் ஆராய்கிறேன்; சிந்திக்கிறேன். என் கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளியிட்டு வருகிறேன். யான் இருதலைக்கொள்ளி எறும்பாகவில்லை என்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்க்ஸியத்துக்கும் காந்தியத்துக்கும் உள்ள ஒற்றுமையும் எனக்கு விளங்குகிறது; வேற்றுமையும் எனக்கு விளங்குகிறது. இரண்டுக்கும் அடிப்படையாயுள்ள கொள்கையில் பெரிதும் வேற்றுமை இல்லை என்பதும், கொள்கையை நிறைவேற்றும் முறையில் வேற்றுமை உண்டு என்பதும் எனது ஆராய்ச்சியில் தோன்றும் உண்மையாகும்.

இங்கே சிந்தனையில் நிற்கும் பொருள் இயந்திரம். இயந்திர இயக்கத்தால் தொல்லை உண்டு. எது வரை? ஏகாதிபத்திய முறை வீழ்ந்து சமதர்ம முறை எழும் வரை என்க. இந்நாளில் இயந்திரம் முதலாளி உடைமையாய் நின்று தொழிலாளியை வெறுங் கூலிக்காரனுக்கியிருக்கிறது. இதனால் தொல்லை விளைவதை விளக்க வேண்டுவதில்லை. முதல் - தொழில் என்னும் வேற்றுமை அற்று, எல்லாரும் ஒரு வகுப்பாய் ஒரு சமூகமாய் (Classless Society) இயந்திரம் பொதுவானால் தொல்லைக்கு இடம் ஏது? முதலாளித்துவத்தை ஒழித்துப் பொதுமையை அறிவுறுத்துவது மார்க்ஸியம்.

காந்தியம் என்ன அறிவுறுத்துகிறது? ராட்டையை அறிவுறுத்துகிறது. ராட்டை எதற்கு அறிகுறியாக நிற்கிறது? ஆழ்ந்து ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். ராட்டையின் தத்துவத்தில் முதல் - தொழில் என்னும் வேற்றுமை இல்லை. அது முதல் தொழில் அற்ற பொதுமைக்கு அறிகுறியாக நிற்கிறது. ராட்டைச் சாலைகளை அமைத்து, முதல் - தொழில் வேற்றுமையை வளர்த்து, இலாபத்தைப் பெருக்குமாறு காந்தி-ராட்டை அறிவுறுத்தவில்லை. ஒவ்வொருவரும் தம் தம் வாழ்க்கைக்கென்று ராட்டையை இயக்குமாறு காந்தியம் அறிவுறுத்துகிறது. ஆகவே, காந்தியமும் முதல் - தொழில் வேற்றுமையைப் போக்க எழுந்ததென்பது வெளிப்படை. இங்கே மார்க்ஸியத்துக்கும் காந்தியத்துக்கும் ஏதேனும் வேற்றுமை உண்டா? உன்னிப் பார்க்க. இரண்டும் அறத்தைக் குறிக்கொண்டவை என்னும் முடிவுக்கு யான் வரலானேன்.

'மக்கள் தொகை - நாளுக்குநாள் பெருகுகிறது. பெருக்கத்துக்கேற்ற தேவைகளை எளிதில் இயந்திரம் நல்குமா? இராட்டை நல்குமா? என்னுங் கேள்வி எழுந்தவண்ண மிருக்கிறது; அதற்கு விடையும் பிறந்த வண்ண மிருக்கிறது. விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்நாளில் இயந்திர இயக்கம் ஒடுங்குதல் அரிது. இயந்திர இயக்கத்தினிடையில் ராட்டையும் இயங்க இடமுண்டு. உலகெலாம் பொதுமை அறம் பெருகிப் பரவிக் காலம் ஆக ஆக ராட்டை இயக்கம் ஆக்கம் பெறலாம். ராட்டையில் அமைதி முதலிய நல்லியல்புகள் படிதல் ஈண்டுக் கருதற்பாலது.

மார்க்ஸியத்தின்படி இயந்திரசாலை பொதுவாய், முதல் - தொழில் - வேற்றுமை ஒழியினும் ஒழிக ; காந்தியத்தின்படி ராட்டை இயக்கம் ஓங்கி, முதல் - தொழில் வேற்றுமை ஒழியினும் ஒழிக; அல்லது இரண்டும் சேர்ந்து ஒரே நோக்கத்தை நிறைவேற்றி னும் ஏற்றுக. வாதம் வேண்டுவதில்லை. எவ்வழி போந்தேனும் குறித்த பொதுவிடம் சேர்வதே சிறப்பு. வழியைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை.

பிற 'அஹிம்ஸை' என்னுந் தலைப்பின்கீழ்க் குறிக் கப்படும்.

**பெண்ணுடன் வாழ்தல்**

இயற்கை வாழ்விற்குப் பெண்ணோடு கூடி வாழும் இல்லறம் வேண்டற்பாலது. மனைவியோடு கூடிவாழும் வாழ்க்கையல்லாத மற்ற வாழ்க்கைகள் செயற்கையின் பாற்பட்டனவாகும். பெண்ணோடு இயற்கை இன்பந் துய்க் காது, அவ்வின்பத்தைப் பற்பல செயற்கை முறைளால் அழிக்க முயல்வது இயற்கைக்கு முரண்பட்ட வாழ்வை நடாத்துவதாகும். இயற்கைக்கு முரண்பட வாழ்வோர் உலகில் ஏன் பிறந்தார் ? இவரது செயல், உடற்கட்டைக் குலைத்து, முகவனப்பைச் சிதைத்து, இவரை இயற்கை உலகினின்றும் பிரிக்கிறது. செயற்கை முறையால் உடல் நலமிழந்து, அழகிழந்து, இன்பமிழந்து, இயற் கைக்கு மாற்றாராய்க் கிடக்கும் ஆண் பாலார்க்கும் பெண் பாலார்க்கும் இரங்குகிறேன். அன்னார் பிறவியா லாய பயனை இழந்தமை குறித்து வருந்துகிறேன். கடவுள் அவரை மன்னிப்பாராக. காந்தியடிகள் செயற்கை முறைகளைப் பன்முறை பல கட்டுரைகளால் மறுத்திருக்

கிறார். காந்தியடிகள் வாழ்வு இயற்கைக்கு அரண் செய்து நிற்றலால், அவர் பெண்ணைப் பேயாகக் கருதுஞ் செயற்கை வாழ்வில் வீழ்ந்தாரில்லை. அவர் பெண்ணுடன் வாழும் இயற்கை வாழ்வுடையவர் என்பது உலகறிந்தவொன்று. விரிவு இந்நூல் 'இல்லறம்' என்னுந் தலைப்பின்கீழ்க் காண்க.

எளியஉணவும், எளிய உடையும், இல்லறமும் மனிதனது உள்ளத்தையும் எளிமைப்படுத்தும். எளிமை, புறம் அகம் என்னும் இரண்டிலுந் திகழ்தல் வேண்டும். புறமும் அகமும் ஒத்த வாழ்வே வாழ்வென்பது. ஒருவனது புறச்செயலைக்கொண்டு அவனது அக நிலையை எளிதில் அளந்து கூறலாம். 'அகமே புறம்' என்னும் ஆன்றோர் அநுபவ மொழியும் நோக்கற்பாற்று.

எளிமை

'எளிய உள்ளம்' என்பது புது ஆட்சியாயிருக்கிறது என்று சிலர் கருதலாம். 'நான்' என்னும் முனைப்பற்ற உள்ளமே எளிமையது. அதை இயற்கையமைந்த உள்ளமென்றுங் கூறலாம்.

முனைப்பு

'நான்' என்னும் முனைப்பெழப் பெறுவோன் தற்பெருமை உடையனாகிறான். 'தன்னலத்துக்குப் பிறர்' என்று அவன் நினைக்கிறான்; தன்னலத்துக்குப் பிறரை அடக்கியாளக் கொடுமைகளை நிகழ்த்தவும் புகுகிறான். இவ்வளவிற்குங் காரணம், 'நான்' என்னும் முனைப்பு. இம்முனைப்பு மனிதனது செம்மை நிலையை வேறுபடுத்தலான், அவன் உள்ளம் தனது இயற்கை நிலையினின்றும் பிறழ்கிறது. வாழ்வில் 'நான்' என்னும் முனைப்பெழாதவாறு காத்துவருவோனது உள்ளத்தில்

தற்பெருமை எழுவதில்லை. தற்பெருமை எழாத இடத்தில் பொறை, அடக்கம், இன்னா செய்யாமை முதலிய மனித இயல்புகள் பொலிந்துகொண்டிருக்கும். இத்தகைய உள்ளம் எளிய இயற்கை வழி நிற்பதென்க. இதுவே செம்மை உள்ளம் எனவும்படும். தற்பெருமை முளையா உள்ளம் எளிமையதெனச் சுருங்கச் சொல்லலாம்.

தற்பெருமை இன்மை

காந்தியடிகளின் புறம்போல அகமும் எளிமையில் அமைந்து கிடத்தலை அவர்தஞ் செயல்களைக்கொண்டு அளந்து உணரலாம். சிற்சில சான்றுகளை எண்டுெத்துக் காட்டுகிறேன். அக் காட்டுக்களான் அடிகளின் தற்பெருமை இன்மை விளங்கும்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்க்குள்ள சிறுமைகளை இந்தியாவில் செவ்வனே விளக்கிக் காட்டி, மகாத்மா காந்தி மனைவி மக்களுடன் மீண்டும் 1896-ல் நவம்பரில் தென்னாப்பிரிக்கா நோக்கியபோது, கப்பல் கரைசேர்ந்ததும், டர்பன் நகரில் வெள்ளையர், 'காந்தியை அப்படிச் செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டும்' என்று கூட்டங்களில் பேசி, மூர்க்கர்க்கு வெறியூட்டி, அடிகளை வருத்தக் காத்துக் கொண்டிருந்தனர். காரண மென்னை ? தென்னாப்பிரிக்காவில் இந்தியர் களவாடப்படு கிறாரென்றும், அவர் விலங்குகள்போல் நடத்தப்படுகிறா ரென்றும் அடிகள் இந்தியாவில் பேசியதாக ராய்ட்டர் கட்டிவிட்ட பொய் மூட்டையே தென்னாப்பிரிக்கா வெள்ளையர் வெறிக்குக் காரணம். காந்தியடிகள் கப்பலி னின்றும் காவலோடும் கவலையோடும் இறக்கப்பட்டதும் மூர்க்கர் சிலர் வரம்புமீறி அவரை நையப் புடைத்தனர்.

அமைச்சர் புதல்வர் - அடி உதை கண்டறியா மெய்யர் - மெய்ம்மறந்து வீழ்ந்தார். அவ்வேளையில் அக்காட்சி கண்ட (போலீஸ் சூப்பிரண்டெண்ட்) அலக்ஸாண்டர் மனைவியார் மனங் கசிந்துருகி, அடிகள்பால் போந்து, போதிய துணை புரிந்து, உயிர்க்கிறுதி நேரா வண்ணம் அவரைக் காத்தனர். இப்பேருதவியை, அடிகள் தென் னாப்பிரிக்காவில் பொறுமைப் போர் புரிந்து வெற்றிக் கொடி நாட்டிப் பிறந்த நாடடையத் திருவுளம் பற்றிய போது, ஆண்டுள்ள மக்கள் அவர்க்கு நன்றியறிதல் தெரிவிக்கப் பல கூட்டங்கள் கூட்டி அவர் சேவையைப் புகழ்ந்த வேளைகளிலெல்லாம் அவர் மறவாது போற்றிக் கூறினார். காலத்தில் பிறர் புரியும் உதவியைப் பாராட் டும் உள்ளத்தில் தற்பெருமை எழாது. தற்பெருமை உள்ளம் பிறர் நன்றியை நினையாது.

கைக்குடையால் தமது உயிர் காத்த போலீஸ் அதிகாரியின் மனைவியாரை மட்டுமல்ல - பொறுமைப் போரில் உயிர் போம் வரை உறுதியில் நின்று தமக்குத் துணைநின்ற நாகப்பன் நாராயணசாமி வள்ளியம்மை முதலியோரையும் காந்தியடிகள் என்றும் மறப்பதில்லை. 'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் - விழுமந் துடைத்தவர் நட்பு' என்றார் திருவள்ளுவரும்.

கன்னி எமிலி ஹாப்ஹௌஸ் என்னும் பெருமாட்டி யார் தென்னாப்பிரிக்காவில் இந்திய மக்கள் நலங் கருதி உழைத்தவருள் ஒருவர். அவ்வம்மையார் பிறப்பில் ஆங்கிலேயராயினும், ஆங்கிலேயர் செய்யுந் தீமையைக் கடிவதில் தயங்குவதில்லை. போயர் சண் டையில் ஆங்கிலேயர் நிகழ்த்திய பிழைபாடுகளை அஞ்

சாது எடுத்துக் காட்டி அதிகாரிகள் சீற்றத்துக்கும் அவர் ஆளானுர். அவ்வம்மையார் விண்ணுலக மெய்திய செய்தியைக் கேட்டதும், காந்தியடிகள், 'யங் இந்தியா' வில் அவர் பிரிவைக் குறித்து வருந்தி எழுதிய உரை களில் அடிகளின் உண்மை நிலை, அதாவது தற்பெருமை யற்ற உள்ளம் புலனுகிறது. அடிகள் அம்மையார் மாண்புகளை மனமார எடுத்துக் காட்டி வருந்தி யிருக் கிருர். தற்பெருமை உள்ளம் பிறர்பெருமை நாட எழுமோ? காந்தியடிகள் உள்ளம் தற்பெருமையைக் கடந்து நிற்பது. அவ்வுள்ளம் பிறர் பெருமை பேசச் சுணங்குவதில்லை. கன்னி எமிலி ஹாப்ஹௌஸ், பிறந்த குடி, வகுப்பு, நாடு முதலியவற்றின் காரணமாக நீதி பிறழ்ந்து நின்றவரல்ல ரென்றும், ஜெனரல் போத்தா வுடன் தம்மைச் சந்திக்கச் செய்து தமது வேலைகளைப் பல வழியிலுஞ் சுருக்கி இந்தியர் நலன் நாடி உழைத்தவ ரென்றும், அவர் உடல் நலம் பெருதவராயினும் உயிர் நலம் பெற்றவரென்றும், வல்லரசுகளையும் சேனைத் திமிர் கொண்ட மன்னர் மன்னர்களையும் எதிர்த்து நிற்கும் ஆன்ம சக்தி வாய்ந்தவரென்றும், கடவுளுக்கு அஞ்சி மக்களுக்கு அஞ்சாத வீரத்தாயென்றுங் காந்தியடிகள் அக்கன்னியின் மாண்புகளை யெல்லாங் குறிப்பிட்டுக் கண்ணீர் உகுத்தார். இப்புகழுரை தற்பெருமை நெளியும் உள்ளத்தினின்றும் முகிழ்க்குமோ? தற் பெருமை நாடாத உள்ளம் பிறர் பெருமை பேசுதல் இயல்பு.

மேல்நாட்டினின்றுங் காந்தியடிகளுக்கு அழைப்பு அடிக்கடி வருவதுண்டு. அதற்கு அடிகள் இணங்குவ

தில்லை. மேல் நாட்டினின்றும் அழைப்பு வராமலே அந்நாடு நோக்கித் திரும்ப எத்துணை பேர் தவங்கிடக்கிறார்? மேல்நாடு சென்று திரும்புவது ஒரு பெருஞ் சிறப்பாக இந்நாளில் கருதப்படுகிறது. காந்தியடிகளுக்கு வலிய அழைப்பு வந்தும், அவர் அவண் ஏக ஒருப்படுவதில்லை. காந்தியடிகள், தாம் அறிவுறுத்தும் உண்மையை இந்தியாவே இன்னும் முற்றும் பற்றுக் கொள்ளவில்லையென்றும், இந்தியாவிலேயே அஃது ஆராய்ச்சி நிலையில் இருக்கிறதென்றும், இந்நிலையில் பிற நாடுகள் ஏகுதற்கு இது காலமன்றென்றுஞ் சொல்லி விடுவர். இக்கருத்தெழும் நெஞ்சில் தற்பெருமை நிழலுமில்லை என்று சொல்லலும் வேண்டுமோ?

உலகில் சிலர் தம்மைக் குருவென்றும், கடவுள் அவதாரமென்றும் சொல்லிக்கொள்வதைக் காண்கிறோம். சிலர் தாம் நேரே அவ்வாறு சொல்லாவிடினும் தம் நண்பரை விடுத்தேனும் அவ்வாறு சொல்லிப்பதுண்டு. இக்கயமைத் துறையில் இறங்கிக் கரவுளத்தால் உலகை ஏமாற்றிப் பெரியோரானவரும் உளர். சித்தோ அற்புதமோ ஒன்று ஒருவன் செய்வானாயின், அவனைக் கடவுளென்றும் அவதாரமென்றும் நம நாட்டார் பேசுதல் இயல்பு. கல்வியாலோ மருந்தாலோ மந்திரத்தாலோ வேறு எதனாலோ ஏற்படுஞ் செல்வாக்கால் எத்துணைப் போலிச் சந்நியாசிகள் கடவுள் அவதாரங்களாக உலகில் போற்றப்படுகிறார்கள்? இவ்வறியாமை என்று உலகைவிட்டு அகலுமோ? உலகம் என்று உய்யுமோ? ஆண்டவனே! இவ்வறியாமையை உலகினின்றும் அகற்றுவாயாக.

போலிகளால் பழைய உண்மையாளர் அருட்செயல்களும் இந்நாளில் சிலரால் மறுக்கப்படுகின்றன.

காந்தியடிகள் தமது செல்வாக்கைக் கொண்டு தம்மைக் குருவென்றுதல், சித்தரென்றுதல், அவதாரமென்றுதல் விளம்பரப்படுத்த முயல்வதில்லை. அறியாமையாலோ அன்பாலோ பிறர் தம்மை அவ்வாறு சொல்லக் கேட்பினும் போற்றினும் உடனே அடிகள் அதை மறுப்பது வழக்கம். காந்தியடிகளுக்குள்ள செல்வாக்கோ அளந்துரைக்கும் பான்மையதன்று. நாடோ அவதாரத்தில் நம்பிக்கையுடையது. அடிகள் தமது செல்வாக்கைக் கொண்டு அவர் தம்மை அவதாரம் என்று குறிப்பாகச் சொற்றுலும், அதைப் பலர் நம்புவர். காந்தியடிகள் தற்பெருமை கடந்த உள்ளமுடையராகலான், உண்மையைக் கரந்து கூறுவதில்லை. காந்தியடிகள் தம்மைக் குருவென்றும் அவதாரமென்றும் பிறர் அன்பால் கூறுவதைக் கண்டுங் கேட்டும் மனம் வருந்திக்கூறிய மெய்யுரைகள் பற்பல. அவைகளுள் சிலவற்றை நோக்குக.

'யான் ஞான குருவைக் காண முயன்று வரும்போது யான் எப்படிப் பிறர்க்குக் குரு ஆவேன்'

'ஜன ஊழியன் எச்சிறப்பையும் ஏற்றுக்கொள்ளலாகாது. அவன் தனக்குள்ள எல்லாவற்றையும் மக்களிடம் ஒப்புவித்தவன்; சேவையைச் சமயத் தொண்டாகக் கொண்டவன்; பிறர் பூசனையைக் காமுறுன். காமுறுவனேல் அவன் அன்னே ஒழிந்தான்'

'(வினு விடை)

தாங்கள் மெய்யாகவே மகாத்மாவா? அப்படியாளுல் மகாத்மா என்னுஞ் சொல்லே விளக்குக.

அத்தகைய ஒருவனாயிருக்க யான் சிந்திப்பதில்லை. ஆனால் கடவுள் படைப்புக்கு உட்பட்ட உயிர்களுள் மிகத் தாழ்ந்தவன் யான் என்பது எனக்குத தெரியும்.

மகாத்மா சேர்க்கை பெறாத யான் அச்சொல்லை விளக்க வல்லேனல்லேன்.'

'சிராஜ்கஞ்ஜ் மகாநாட்டில் என் பெயரைப பற்றி நிகழ்ந்த நிகழ்ச்சி வருத்தத்தைத் தருகிறது. 'மகாத்மா' என்னும் பெயரால் நான் அழைக்கப்பட வேண்டுமென்னும் பித்துடையார், அப்பெயரால் என்னையழைக்க விரும்பாத ஒருவரை, அப்பெயரால் என்னை அழைக்குமாறு வலி யுறுத்தியது தவறு. அவர் எனது கொள்கைக்காதல் எனக்காதல் நலஞ்செய்பவரல்லர். * * * * வலி புறுத்தலினால் அப்பெயரைச் சொல்வதைப் பார்க்கிலும் மகாநாட்டை விடுத்து விலகுவது நலம் என்று விலகிய அறிஞர் உறுதி நிலையைப் பாராட்டுகிறேன். என்னைக் குருட்டுத்தனமாகப் போற்றுகிறவரைப் பார்க்கிலும் அவரே எனக்குரியர் என்று கருதுகிறேன். மகாத்மா என்பதை மறந்துவிடுமாறு நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்'

மகாத்மா காந்தி, தம்மைத் 'தேவதூதன்' என்று பொறிக்கப் பெற்ற ஒரு துண்டுச் சீட்டுக் கைவரப் பெற்றபோது, தாம் அப்பெயர்க்குரியரல்ல ரென்றும், தம்மைக் கிருஷ்ணனெனக் கொண்டு படம் வரைந்து சிலர் விற்றலைக் கண்ட ஓர் அன்பர் மனம் நொந்து எழு திய கடிதங்கண்டு வருந்தித் தம்மை கிருஷ்ணனெனக் கொள்வது தேவதூஷணை என்றும், அப்படங்களை உடனே அழித்துவிட வேண்டுமென்றும், வேறொருவர் தம்மை நோக்கிப் புது சமயமொன்று காண விரும்புகிறீரா அல்லது தெய்வத்தன்மை யுடையவ

ரெனச் சொல்கிறீரா என்று வினவியதற்குப் புதிய சமயமொன்று காணத் தமக்கு விருப்பமே கிடையா தென்றும், தம்பால் தெய்வத்தன்மை இருப்பதாகத் தாம் சொல்லிக் கொள்ளவில்லையென்றும், தாம் இந்தியா விற்கும் மன்பதைக்குந் தொண்டுசெய்யும் எளிய ஊழிய ரென்றும் உலகிற்கறிவித்ததும், அடிகள் தம்மைப் புகழா திருக்குமாறு பலவிடங்களில் சொற்றதும், 'ஆண்ட வனே! என்பால் முனைப்பெழாதிருக்கத் திருவருள் செய்க. முனைப்பைக் களைக' என்று வேண்டியதும், தம்மைச் சிலர் சித்தரென்றும் அவதாரமென்றும் கருது வதால் அத்தன்மை தம்பால் இல்லை என்பதை உறுதிப் படுத்தவும் சிறை புகுவதாகத் தாம் சிறைக்கோட்டம் புக்கபோது புகன்றதும் நினைவிலுறுகின்றன. காந்தி யடிகள் ஒரு முறை சிறைக் கோட்டத்தினின்றும் வெளி வந்ததும் முதல் முதலாக ஆமதாபாத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் சுயராஜ்யக் கட்சியார் புரிந்த திருவிளையாடல்களைக் கண்ணுற்றும், தீர்மானம் தமது சார்பாக நிறைவேறியது கண்டும், சில வாக்குகளால் பெற்ற வெற்றி வெற்றி யாகாதென்றும், சுயராஜ்யக் கட்சியாரே வெற்றியுற்றா ரென்றுங் கருதி, (3-6-24) 'யங் இந்தியா' வில் 'தோல்வியுற்றேன் தாழ்வு பெற் றேன்' என்னுந் தலைப்பீந்து எழுதிய கட்டுரை என துள்ளத்தை எழுமையுங் கவர்ந்து நிற்கும். தமக்குற்ற வெற்றியைத் தோல்வியாக் கொண்ட பெருந்தகை மையை நோக்குழி அடிகளது தற்பெருமையின்மை இனிது புலனுரும்.

காந்தியடிகளை உலகம் அஹிம்சா தர்ம மூர்த்தி என்று போற்றுகிறது. அப்போற்றுதலைக் காணும் அடிகள் தற்பெருமைக்கு எளியராகித் தம்மை, 'அவதாரம்' என்று சொல்லிப் பெருமை பெற முயல்கிறாரில்லை. அடிகள் தம்மை எங்ஙனங் கருதுகிறார்? 'உலகிற்கு முழு அஹிம்சா தர்மத்தைப் பயன் விளக்கு முறையில் அறிவுறுத்தும் வாய்ப்பை யான் பெற்றேனில்லை. அப்பெருந் தொண்டுக்கு யான் இன்னும் அருகனாகவில்லை. என்பால் இன்னுஞ் சினமிருக்கிறது. எனக்கு இன்னுந் துவித பாவனை யிருக்கிறது' என்று தமது குறைபாட்டையே அடிகள் முறையிடுதலை ஆய்ந்து பார்க்க.

அடிகளது முனைப்பின்மையை வலியுறுத்த அவரது வாழ்வினின்றும் பல குறிப்புக்கள் எடுத்துக் காட்டல் கூடும். விரிவஞ்சி அவைகளை விடுக்கிறேன். ஆகவே, தற்பெருமை இல்லாத உள்ளம் இயற்கை நலஞ் செறிந்த செம்மையுடைய தென்க. காந்தியடிகள் முனைப்பழிந்த இயற்கை எளிய உள்ளங்கொண்டு வாழ்தலான், அவர் பல செயற்கருஞ் செயல் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார். தற்பெருமையற்ற வாழ்வும் இயற்கையின்பாற் பட்டதாகும்.

முனைப்பாலெழும் தற்பெருமை - தன்னலம் - முதலிய செயற்கைக் குணங்களைச் செகுக்க இளமை தொட்டே பயிற்சி செய்து வரல் வேண்டும். இதற்கு அகத்தூய்மை இன்றியமையாதது. அகத்தைத் தூய்மைப் படுத்துவ தெப்படி? இத்தூய்மைக்குரிய முறைகள் நூல்களில் பலபடக் கூறப்பட்டிருக்கின்றன.

அவைகளுள் தலையாயது வாய்மை காத்தல். வாய்மை

**வாய்மை**

யைப்பற்றி நூல் தொடக்கத்திலுஞ் சுருங்கச் சொல்லியிருக்கிறேன். காந்தியடிகள் வாய்மை கடைப்பிடித்து அகத்தையும் தூய்மை செய்து கொண்டார்.

காந்தியடிகள் இளமை தொட்டே வாய்மை காத்து வந்தார். வாய்மை, உண்மை (உள் மை) யினின்றும் பிறப்பது. உண்மையுள்ள இடத்தில் அஞ்சாமை இயல்

**உண்மையும் அஞ்சாமையும்**

பாய் அமையும். இல்துள்ள இடத்தில் அஃது இயல்பாய் அமையும். ஆகவே அஞ்சாமையையும் உண்மை யுடன் சேர்த்துக் கொள்க. அச்சமுள்ள இடத்தினின்றும் உண்மை எவ்வாறு பிறக்கும்? ஆதலால் இரண்டையும் ஒன்றுபட உடன் சேர்த்துச் செல்வதே முறை.

உண்மை என்பதும் சத்தியம் என்பதும் ஒன்றே. உலகம் 'உண்மை' 'உண்மை' என்று முழங்கியவண்ணமிருக்கிறது. உண்மை எது? இதுபற்றிக் காந்தியடிகள் என்ன சொல்கிறார்? உண்மையே கடவுள் என்பது அடிகளின் உட்கிடக்கை. அவர்,

> 'என்றும் உள்ளது ஒன்று. அது சத். சத்தின் அடியாகப் பிறந்தது சத்தியம். சத்தியமே (உண்மையே) கடவுள்'

என்றும்,

> 'உண்மையின் முழுமையைத் தெளிவது கடவுளை உணர்வதாகும். அதுவே உயிர்கள் அடையத்தக்க முழுநிலை'

என்றும்,

'உண்மையினும் உயர்ந்தது பிறிதொன்றில்லை. அதை அடைய நாம் முயலல்வேண்டும்'

என்றும் அருளியுள்ள மொழிகளை ஆய்க.

காந்தியடிகள் இளமை தொட்டு வாய்மை காத்து வந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள. 'தாய் தந்தையரிடம் யான் எதையும் ஒளித்துப் பேசுவதில்லை' என்று காந்தியடிகளே சொல்லி யிருக்கிறார். சில பள்ளிப் பிள்ளைகளோடு கலந்து நிகழ்த்திய தீவினைகளைப் பற்றித் தாயார் வினவியபோதெல்லாம் அடிகள் அவை களைக் கரவாது தாயார் முன்னிலையில் அறிக்கையிட்டு வந்த நற்பயிற்சி பின்னை அவரை அரிச்சந்திரனாக்கிற்று. காந்தியடிகள் இங்கிலாந்தில் தாய் மொழி காத்ததும் ஈண்டு நினைவிற்கு வருகிறது. அது 'பெற்றோர்ப் பேணல்' என்னுந் தலைப்பின்கீழ் எடுத்துக்காட்டப் பட்டது.

மனைவி மக்களையும் பொய்ம்மையினின்று அடிகள் காத்து வந்தார். காந்தியடிகள் தம் பெரிய புதல்வர் ஹரிலால் என்பவர் கூட்டுச் சங்கம் ஏற்படுத்தச் சில இடங்களில் பொருள் திரட்டியதாகக் கேள்வியுற்று, 'யங் இந்தியா'வில் கடிந்தெழுதியது என்றும் மறக்கத் தக்கதன்று. அக்கட்டுரையில் புதல்வர் என்னும் பற் றின்றிப் பொய்ம்மையை எவ்வாறு கடிந்திருக்கிறார் நம் மெய்ம்மையாளர்! அவர், 'ஹரிலாலுக்கு நான் தகப்பனா யிருக்க நேர்ந்தது * * *' என்றும் வருந்தியிருக்கிறார்.

காந்தியடிகள் இளமையில் தம் தாய் தந்தையர் முத லியோரிடத்தில் வாய்மையைக் காத்து வந்தது போலவே மற்றவரிடத்திலும் அதைக் காத்து வந்தாரென்பது

அவரது வரலாற்றால் தெரிகிறது. 'நான் குழந்தையா யிருந்தபோது ஆசிரியரிடத்தாதல், மாணுக்கரிடத்தாதல் பொய் பேசியதாக எனக்கு நினைவில்லை' என்று அடிகள் தமது வரலாற்றில் எழுதியிருக்கிருர். பள்ளிக்கூடத் தில் குழந்தமையில் மெய்ம்மை என்னும் அறவழி நிற்றல் அரிது என்பதை அன்பர்கள் உன்னுவார்களாக. ஒரு முறை பரீட்சையின்போது, பிறரைப் பார்த்து விடை எழுதுமாறு ஆசிரியர் தங்கால் விரலை மிதித்து உணர்த் தியும், அதை உணர்ந்து நடக்கும் பயிற்சி தமக்கு வர வில்லை என்று காந்தியடிகள் கழறியிருக்கிருர்.

ஞாயிற்றை மேகம் மறைத்த காரணத்தால், அடிகள் ஒரு தடவை காலங் கடந்து பள்ளிக்குச் சென்ருர். அது குறித்து ஆசிரியர் அடிகளை நோக்கிக் கேட்டபோது, அடிகள் உண்மைக் காரணங் கூறினுர். ஆசிரியர் அதை நம்பாது அடிகட்குச் சிறு தொகை அபராதம் விதித்தார். அதைக் குறித்து அடிகள் தமது வரலாற்றில், 'பொய் சொற்றேன் என்று நான் ஒறுக்கப் பெற்றேன். இஃது என்னை ஆற்ருெணுத் துன்பத்தில் அழுத்திற்று. எனது கூற்றை எங்ஙனம் உறுதிப் படுத்துவேன். அதற்கு வழியில்லை. துன்பம் பொருது அழுதேன்' என்று எழுதிய உரைகளைப் பார்க்க. இவ் வுரைகளில் மெய்யின் வேட்கை மீதூர்ந்து நிற்றல் புல ஞகிறது.

அடிகள் வாழ்விடை மேற்கொண்ட தொழில் எது? பாரிஸ்டர் தொழிலன்ருே? அத்தொழில் எத்தன்மை யது என்பதை விளக்கவேண்டுவதில்லை. அத்தொழிலை நடாத்திய வேளையிலும் அடிகள் மெய்யில் நாட்ட

முடையராகவே இருந்தார். பொய்ம்மை ஊற்றில் மெய்ம்மை நீராடல் எளிதோ ? அன்பர்களே ! உன்னுங்கள் ! காந்தியடிகள் ஆடியிருக்கிறார்.

கணக்கைப்பற்றிய மிகச் சிக்கலான வழக்கொன்று நடைபெற்றது. கைத்தவறுதலாக நேர்ந்த பிழையே அவ்வழக்கின் அடிப்படை. காந்தியடிகள் தவறுதலை ஒத்துக்கொண்டு வாதிப்பதே அறமென்று கட்சிகாரர்க்குச் சொற்றனர். இதற்குப் பெரிய வக்கீல் இணங்கினாரில்லை. அவர் 'நமது தவறுதலை நாமே ஒத்துக்கொள்வது நாமே விலங்கிட்டுக் கொள்வதாகும் என்று கட்சிக்காரரை அச்சுறுத்தினர். காந்தியடிகள் உண்மையை மறைக்கச் சிறிதும் உடன்படவில்லை. கட்சிக்காரர் நெஞ்சம் அப்படியும் இப்படியும் அலைந்து அலைந்து முடிவில் காந்தியடிகள் வழியிலேயே நின்றது. இதனால் பெரிய வக்கீல் ஒதுங்கிக்கொண்டார். அடிகள் நீதிபதி முன்னர்க் கைத்தவறுதலால் நிகழ்ந்த பிழையைத் தாமே வலிந்து எடுத்துக் காட்டினார். இவ்வுண்மை, எதிர்கட்சி வக்கீலை, ' இனி உமக்கு ஒரு வேலையும் இல்லை ' என்று அறைந்து அமரச் செய்தது. தொடக்கத்தில் நீதிபதி, காந்தியடிகளின் உண்மை நிலை தெரியாது மயங்கினார். பின்னே அடிகளின் உண்மைநிலை நீதிபதிக்குப் புலனாயிற்று. அவர் நேரிய முறையில் தீர்ப்பளித்தார். இந் நிகழ்ச்சியை உண்மையின்பாற்படுத்திக் கூறுவதா ? வக்கீல் திறத்தின் பாற்படுத்திக் கூறுவதா ? வக்கீல் தொழிலையும் உண்மை வழியில் நடாத்திய பெரியார் நங்காந்தியடிகள்.

இன்னொன்று குறிப்பிட்டு மேலே செல்கிறேன். பார்ஸி ரஸ்டம்ஜீ என்பார் தென்னாப்பிரிக்காவில் வாணிபஞ் செய்துகொண்டிருந்தார். அவர் காந்தியடிகளின் அன்பிற்குரிய நண்பரானர். பார்ஸி ரஸ்டம்ஜியிடம் பல நல்லியல்புகளிருந்தாலும் ஒரு தீ இயல்பு அவர்பால் புரை கொண்டிருந்தது. பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களினின்றும் பலதிறச் சரக்குகள் அவருக்கு வருவதுண்டு. பெரிதும் வரி கட்டாமலே பல சரக்குகளை இறக்குமதி செய்து கொள்வது அவரது வழக்கம். துறைமுக வேலையாட்கள் பலர் அவருக்குத் தெரிந்தவராயிருந்தமையான், எவரும அவரிடம் ஐயங் கொள்வதில்லை. பார்ஸி ரஸ்டம்ஜி காட்டும் பட்டியலை ஒட்டியே துறைமுகத்தார் வரி விதிப்பர். பலநாள் திருடு ஒரு நாள் அகப்படுவது இயற்கை. ரஸ்டம்ஜி ஒரு முறை அகப்பட்டுக்கொண்டார். அவரோ ! பெரிய மனிதர் ! மதிப்பு வாய்ந்தவர் ! காந்தியடிகள் நண்பர் ! என் செய்வார் ! அவர் காந்தியடிகளிடம் ஓடோடிப் போந்து நடந்ததை முறையிட்டார். அதுபோழ்து இருவரும் பேசிக்கொண்டதை அடிகள் தமது வரலாற்றில் வரைந்திருக்கிறர். அவ்வுரைகளிற் சிலவற்றை ஈண்டுச் சுருங்க எடுத்துக் காட்டுகிறேன்.

பார்ஸி ரஸ்டம்ஜீ—அடிகளே ! உங்களை ஏமாற்றிக்கொண்டிருந்தேன். திருட்டு வழியாகப் பல சரக்குகளை இறக்குவது எனது வழக்கம். இன்று அகப்பட்டுக் கொண்டேன். இத்தீப்பழக்கத்தை உங்களிடம் யான் வெளியிட்டதில்லை. என்னைத் துன்பஞ் சூழ்ந்துகொண்டது. சிறைபுக வேண்டு

வதே. இத்துன்பத்தினின்றும் என்னை ஒருவேளை நீங்கள் காத்தல்கூடும்.

காந்தியடிகள்—உங்களைக் காத்தலும் காவாமையும் ஆண்டவன் விருப்பம். எனது போக்கு உமக்குச் செவ்வனே தெரியும். பிழையை உள்ளவாறு முறையிடுவதன் வாயிலாக ஏதாயி னுஞ் செய்தல்கூடும்.

பா—உங்களிடம் உண்மையை முறையிட்டுக் கொண்டேனே; போதாதா?

கா—எனக்கென்ன பிழை செய்தீர்கள்? அரசாங்கத்தார்க்கு நீங்கள் பிழை செய்திருக்கிறீர்கள். ஆகவே, என்பால் முறையிட்டதால் உங்களுக்கு என்ன விளையும்?

பா—உங்கள் வழியையே கடைப்பிடித்து நடக்கிறேன். எனது பழைய வக்கீலிடத்திலுங் கலந்து பேசி வருகிறேன்.

(என்று சொல்லி) அவர் தமது பழைய வக்கீலிடஞ் சென்று நடந்ததைத் தெரிவித்தார். அவர், வழக்கு ஜூரிகள் முன்னிலையில் விசாரிக்கப்படுமென்றும், நெட் டால் ஜூரிகள் இந்தியரை விடுதலை செய்தல் அரிதென் றும், ஆயினும் முயன்று பார்ப்போமென்றுங் கூறினர். பார்ஸி ரஸ்டம்ஜி, 'இவ்வழக்கில் பாரிஸ்டர் காந்தி வழி நிற்க உறுதிகொண்டுள்ளேன். அவருடன் நீங்களும் கலந்துகொள்ளலாம்' என்று சொல்லிக் காந்தியடிகளிடம் திரும்பிவந்தார்.

கா—இவ்வழக்கை நீதிமன்றம்வரை போகாதவாறு தடுப்பது சிறப்பு. கடற் சுங்கத் தலைவரையும், அட்டர்னி ஜனரலை யும் பார்த்துப் பிழையை முறையிடல் வேண்டும். அதற்கு மேல் வழக்கை நடத்துவதும், நடத்தா தொழிவதும் அவர்கள் விருப்பத்தைப் பொறுத்து நிற்கும். அவர்கள் ஒருவேளை

தாங்களே அபராதம் விதிக்கும் அளவுடன் நின்று கொள்ளலாம். இல்லையேல் நீங்கள் சிறைபுகுதல் வேண்டும். பிழை செய்வதே அவமானம் அதற்குச் சிறை செல்வது அவமானமன்று. இஃது என் கொள்கை. பிழை நிகழ்ந்து விட்டது. சிறை புகல் அதற்குக் கழுவாயெனக் கருதிக் கொள்ளல் வேண்டும். இனித் திருட்டு வழியாகச் சரக்குகளை இறக்குவதில்லை என்று உறுதி செய்துகொள்வது பொருந்திய கழுவாய்.

பா—நான் உங்களிடம் தஞ்சம் புகுந்துளேன். விருப்பப்படி செய்க.

காந்தியடிகள் உண்மை வழி நின்றே கடனாற்றினார். வழக்கு நீதிமன்றத்துக்குப் போகவில்லை. சிறு அபராதத்துடன் அது முடிந்தது. ரஸ்டம்ஜி இந்நிகழ்ச்சி முறைகளை ஒரு கடிதத்தில் எழுதிச் சட்டமிட்டு அதைப் பலர் அறியத் தமது வாணிப நிலையத்தில் தூங்க வைத்தாராம். அன்பர்களே! காந்தியடிகள் தொழின் முறையிலும் உண்மை கடைப்பிடித்தலிலேயே கருத்தை இருத்தினார். நட்பின் பொருட்டும் பொருளின் பொருட்டும் உண்மையை மறைக்க அடிகள் உளங்கொண்டாரில்லை. இவரல்லரோ மனிதர்? இவர் வாழ்வன்றோ வாழ்வு?

காந்தியடிகள் கூர்ஜரத்தில் வைசிய மரபில் தோன்றினவர். அடிகள் தென்னாப்பிரிக்காவில் தம் வழி நின்றுழைத்த தமிழ் மக்களைச் சமயம் நேரும்போதெல்லாம் புகழ்ந்து கூறுவது வழக்கம். சிலர் தம் வகுப்பினர் செய்யும் நலனை மட்டும் பாராட்டி, மற்றையோர் பெருநலன் செய்யினும் அதைப் பாராட்டாது மறைப்பது

மரபு. இவர் மெய்ம்மை மறைக்கும் பொய்ம்மையாளர். காந்தியடிகளோ மெய்யுலகில் வாழ்கிறாராகலின், எவர் செயலையும் அவர் உள்ளவாறே வெளியிடுகிறார். அவர் தமிழ் மக்கள் தமக்குப் புரிந்த துணை குறித்து, 'தமிழ்ச் சகோதரர்களையும் சகோதரிகளையும் யான் காணும் போதெல்லாம் இரத்தக் கலப்புடையார் போலத் தோன்றுகிறார். * * * எல்லா இந்திய மக்களினுந் தமிழ் மக்களே பெரிதும் பொறுமைப் போரில் தலைப்பட்டுழைத்தார்கள். அப்போரில் இன்னுயிர் துறந்தவருள் பலர் தமிழர்; * * * சிறை சென்றவருள் பலர் தமிழர் * * *' என்று பல இடங்களில் வியந்தோதியுள்ளார். காந்தியடிகள் தமிழ்மொழியைப்பற்றிக் கொண்ட கருத்தைக் 'கல்வி' என்னுந் தலைப்பின்கீழ்க் காண்க.

தென்னாப்பிரிக்கா பொறுமைப் போர் வெற்றி குறித்துப் பிறர் தம்மைப் புகழ்ந்துரைக்குமிடங்களில் காந்தியடிகள், 'வெற்றி ஏழை மக்களால் விளைந்தது. அப்போர் முனையில் நின்று வருந்தி உயிர் நீத்தவரே உண்மை வீரர்' என்று தம்மை மறந்து மற்றவரைப் பாராட்டிப் பேசுவது வழக்கம். மெய்ம்மையாளர் இயல்பு இதுவே.

காந்தியடிகட்கு நகர சங்கங்கள் நன்றி தெரிக்கும் அறிக்கை வழங்கும்போதும், மற்றுஞ் சில இடங்களிலும் சுகாதாரத்தைப்பற்றிப் பேச நேரும்போதெல்லாம், ஐரோப்பியர் சுகாதார முறைகளையும், அவரது புறத் தூய்மையையும் அடிகள் மனமாரப் புகழ்கிறார். இஃது அவர்பாலுள்ள உண்மை நிலையைப் புலப்படுத்துகிறது. காந்தியடிகள் எதைச் செய்யினும் உள்ளும் புறமும்

ஒத்து வெளிப்படையாகச் செய்வாரேயன்றிப் புறமொன்றாகவும் அகமொன்றாகவுஞ் செய்யமாட்டார். அதனால் அவரிடம் அஞ்சாமை நிலவுகிறது.

அரசாங்கத்தில் நன்மை காணப்படின் அந்நன்மையை நாட்டார்க்கு அஞ்சாது அடிகள் வெளியிடுவர். அதன்கண் தீமை காணப்படின் அதையும் அரசாங்கத்துக்கு அவர் அஞ்சாது எடுத்துக் காட்டுவர். கரந்த திருட்டுச்சூழ்ச்சி காந்தியடிகட்குத் தெரியாது. அவரைத் துப்பாளர் சுற்றித் திரியவேண்டுவது அநாவசியம். 'இழிவான கரவு முறைகளால் இப் பெரிய நாட்டை உயர்த்தல் முடியாது. வெளிப்படை என்னும் கதிரொளியில் வீரமாக நின்று, மறைவு என்பதை உதறித்தள்ளிப் போலீஸ் இலாகாவின் முறையைச் சிதைத்தல் வேண்டும்' என்று காந்தியடிகள் முழங்கியிருக்கிறார். 'இவ்வரசாங்கத்தின்மீது வெறுப்பை உண்டுபண்ண வேண்டுவது எனது கடமை' என்று உண்மை வெளியிடும் உள்ளத்தில் மறைவேது? கரவேது? 'கரவு பேயின் வழி' என்று காந்தியடிகள் அருளியுள்ளார். நீதிமன்றங்களில் அடிகள் விசாரணைக் குட்பட்டபோதெல்லாம் அவர் ஒன்றையும் மறைத்துப் பேசுவதில்லை. 'உங்கள் சட்டங்களின்படி எனது பேச்சுஞ் செயலுங் குற்றமுடையனவே. அச்சட்டங்கள் அறவொழுக்கத்துக்கும் உரிமைக்கும் மாறுபட்டனவாகலான், அவைகளை மீறவேண்டுவது எனது கடன். என்னை விடுதலை செய்தாலும் அக்கடனையே ஆற்றுவேன். ஆகவே உங்கள் முறைப்படி முழுத் தண்டனை

அஞ்சாமை

விதிக்க ' என்றன்றோ நம் பெருமான் கூறுவது வழக்கம் ?

உள்ளும் புறமும் ஒத்த உண்மையாளர்க்கு அச்சம் யாண்டிருந்து முளைக்கும் ? அஞ்சா நெஞ்சினரே உள்ளதை உள்ளவாறு உரைக்கும் ஆன்ம சக்தி வாய்ந்தவர். அந்நீரார் என்றும் நடுநிலை பிறழ்ந்து ஒரு வினையையும் நிகழ்த்த ஒருப்படார்.

மௌலானா மகமத் அலி யாண்டோ ஓரிடத்தில் அஹிம்சா தர்மத்துக்கு மாறுபட்ட உரை பகர்ந்தாரென்று இராஜப் பிரதிநிதி தமக்கு எடுத்துக்காட்டியது கண்ட அடிகள், மௌலானாபால் மன்னிப்புப் பெற்று, அதை இராஜப் பிரதிநிதிக்கு அனுப்பினரெனில் அவரது மேன்மையையும் அஞ்சாமையையும் என்னென்று கூறுவது ? அலி சகோதரர்கள் சேனைகளினின்றும் இந்தியர் விலகல்வேண்டுமென்னுந் தீர்மானத்தை ஓரிடத்தில் ஆதரித்துப் பேசியது குற்றமெனக் கொண்ட அரசாங்க அறிக்கை கண்டதும், இந்தியாவின் பொருள் நிலை, ஒழுக்க முறை, அரசியல்துறை முதலியவற்றைக் குலைத்த அரசாங்கத் தொடர்புடைய சேனையிலோ மற்றெதிலோ சேர்ந்துழைப்பது நாட்டு மாண்புக்கு மாறுபாடு என்றோர் அறிக்கை பிறப்பித்துத் தங் கைச்சாத்திட்டு மற்றவரையுங் கையெழுத்திடுமாறு செய்த வீரர் நம் காந்தியடிகள். காசி சர்வகலாசாலை நாள்கோள் விழாவில் மன்னர்களையும், அஞ்சா நெஞ்சுடைய அன்னி பெசண்ட் அம்மையாரையும் நடுக்குறச் செய்தது காந்தியடிகளின் உண்மையுரையன்றோ? லாகூரிலுள்ள லாரன்ஸ் உருவச்சிலைக் கீழ் ' எழுதுகோல் வேண்டுமா கத்தி

வேண்டுமோ' என்னும் புன்மொழி யிருத்தல் கண்டு, அச் சிலை இந்தியாவின் மானமழிப்பது என்று அதைச் சத்தி யாக்கிரகத்தால் தொலைக்குமாறு லாகூர் மக்களைத் தட்டி எழுப்பியது அடிகளின் அஞ்சாமையன்றோ? காருட்டுக் கோமகன் வரவிலும், வேல்ஸ் இளங்கோவின் வரவிலும் கலவாதிருக்குமாறு நாட்டையே ஏவிய ஆண்டகை காந்தி யடிகளல்லவோ? சட்ட மறுப்புக்குச் சபர்மதியினின்றும் பர்தோலிக்குப் போந்தபோது சௌரி சௌரா கொலை கேட்டுச் சட்டமறுப்பையே நிறுத்த எழுந்த அஞ்சா நெஞ்சம் எவர்க்கு உண்டு? வாள் வலியிலும் தோள் வலியிலும் தமக்கு ஒப்பார் மிக்காரிலர் என்று இறுமாந்து கிடந்த ஜெர்மெனியை முறியடித்த பிரிட்டிஷ் ஆட்சியை ஈராண்டு வாள் வலியின்றித் தோள் வலியின்றிக் குலுக் கித் திகைப்பித்த அடிகளின் திறன் என்னே! என்னே! அடிகளின் அஞ்சாமையை ஏழையேன் எம்மொழியால் கூறவல்லேன்!

'இந்தியாவைச் சுற்றிப் பார்த்தபோது இந்தியர் - படித்த இந்தியர் - அச்சத்தால் பீடிக்கப்பட்டிருத்தல் கண் டேன் * * * * * வெளிப்படையாக எதையுஞ் சொல்ல அவர் அஞ்சுகிறார். இரகசியத்தில் எதையுஞ் சொல்ல அவர் அஞ்சுகிறாரில்லை. * * * * * அவர் மௌன விரதம் பூண்டுகொண்டால் நான் ஒன்றுஞ் சொல்லமாட்டேன். * * * * * கடவுளுக்கு அஞ்சும்போது, மனிதனுக்கு - அவன் எத்தகையனாயினுமாக - அஞ்சவேண்டுவதில்லை. உண்மையை நீங்கள் எவ்வடிவாகவாவது கடைப்பிடித் தொழுகவேண்டுமேல், அதற்கு அஞ்சாமை இன்றியமை

யாதது. * * * கடவுளுக்கு அஞ்சி நடப்பவன் வேறெதற்கும் அஞ்சான்'

'உண்மையைக் கொன்று பெறும் சுயராஜ்யத்தால் பயனில்லை. உண்மையைக் கோறல் நாட்டின் அழிவிற்குக் கால்கொள்வதாகும்'

'நிலையான ஒன்றைப் பெறுதற்கு முன்னர் முதலாவது அதற்கு இன்றியமையாததாக இருப்பது அஞ்சாமை என்பது எனது தாழ்மையான உட்கிடக்கை. இது சமயஞான உணர்வின்றிப் பெறமுடியாதது. (ஆதலால்) கடவுளுக்கு அஞ்சி மனிதனுக்கு அஞ்சுவதை ஒழிப்போம்'

'அஞ்சாமை வேண்டும்; அவசியம் வேண்டும். உடலுக்கு ஊறு உண்டாகுமே, பிணி பிடிக்குமே, மானம் நேருமே, பொருளெல்லாம் போகுமே, குடும்பம் குலையுமே, புகழ் பொன்றுமே என்று அஞ்சுதல் கூடாது * * *'

என்று காந்தியடிகள் உண்மையையும் அஞ்சாமையையுஞ் சிறப்பித்துக் கூறுதல் காண்க.

தற்பெருமையுந் தன்னலமும் அற்ற இடத்திலெழும் உண்மையும் அஞ்சாமையும் மனிதனிடத்துள்ள ஆண்மையை எழுப்புகின்றன. இவ்வாண்மை மனிதனது இயற்கை ஆண்மை. இஃது இயற்கை வாழ்வினர்பால் உறுமேயன்றிச் செயற்கை வாழ்வினர்பால் உறாது. இராஜத தாமத உணவு கொண்டு செயற்கைக் களியாடல்களில் வீழ்ந்து நெளிவோர்பால் சினமும் வன்மமும் காழ்ப்பும் எழுமேயன்றி ஆண்மை எழாதென்க. இவர்க்கு இயற்கை ஆண்மையின்மையால் இவர் அச்சத்தால் நடுக்குற்றுத் தம்முயிர் காக்கவேண்டிக் கருவி தாங்கிப் பிறரைக் கொலை செய்கிறார். அச்சத்தால் கொலைக்கருவி தாங்குவோன் எங்ஙனம் ஆண்மையாள

ருவன்? ஆயுதங் கண்டு அஞ்சாது ஆன்மசக்தியால் எதிர்ப்போனே ஆண்டகையான். சீற்றம் வன்மம் காழ்ப்பு முதலிய குணங்கள் ஆண்மையை அழிக்கும் கூரிய வாட்கள். 'போருக்குரிய கருவிகள் உண்மையும் அஞ்சாமையும்' என்று காந்தியடிகள் - ஓரிடத்தி லன்று - பல இடங்களில் அறைந்திருக்கிறார். உண்மை யும் அஞ்சாமையும் இயற்கை வாழ்விற்குரிய குணங்க ளாகும்.

உண்மையும் அஞ்சாமையும் மனிதனிடத்துள்ள முளைப்பைக் களைதலால் அவன்மாட்டுள்ள மெய்யறிவு விளங்கி அவனை ஆளத்தொடங்குகிறது. விளங்கிய மெய்யறிவு காக்கப்பெறல் வேண்டும். இல்லையேல் இயற்கை வாழ்க்கையால் விளை யத்தக்க பயன் விளையாது. விளங்கிய மெய்யறிவு நிலைத்து நின்று பெருகப் பெருக இயற்கையின் உயிராக உள்ள இறைநிலை கூடும். மெய்யறிவைக் காப்பதற்கும் பெருக்குதற்கும் உரிய வழி யாது? மௌனம் என்று பெரியோர் அருளிச் சென்றனர்.

**மெய்யறிவு**

உண்ணு நோன்பிலும் மௌன விரதங் கொள்ளப் படுவது மரபு. இம்மௌனம் உடலின் புறக்கருவி களிலும் அகக்கருவிகளிலும் எழும்பும் எரியைத் தணிப்பதாகும்.

இதனுடன் கருவி கரண ஓய்வுக்கும் மௌனம் துணை செய்யும். கருவி கரண ஓய்வால் உடல் நலம் பெறும்; ஊக்கம் மிகும்; ஆயுள் வளரும். இவ்வளவில் மௌனத்தின் எல்லை கட்டுப்பட்டு நிற்பதன்று. இயற்கை வாழ்க்கையின் எல்லைக்கல்லா யிருப்பது மோனம் என்று

கூறல் மிகையாகாது. இதுபற்றியே 'மோனமென்பது ஞான வரம்பு' என்றார் ஔவையாரும்.

நம் நாட்டுப் பெரியோர் பலர் பரமாசாரியாராகக் கொண்ட மூர்த்தம் ஒன்றுளது. அது தட்சணாமூர்த்தம். தட்சணாமூர்த்தம் அறிவுறுத்துவதென்னை? மோனம். சான்றோராகிய பலர் வரலாற்றை நோக்குழி அவரனைவரும் அம்மோனநிலையை நாடியது நன்கு விளங்கும். காந்தியடிகள் வாழ்க்கையும் மோனத்திற் படியாமலில்லை. இதைப் பற்றிக் காந்தியடிகள் வெளியிட்ட அநுபவ மொழிகள் பல. அவற்றில் இரண்டொன்றை நோக்குவோம்:

> 'மௌனத்திலே எனக்கு ஏற்பட்ட உறுதி வளர்ந்து விட்டது; நாடோறும் பிரார்த்தனையின்போது யான் மோனத்தில் திளைக்கிறேன்'

> 'மௌனம் இலௌகிகத்துக்கும் வைதிகத்துக்குந் தேவை'

> 'தொடக்கத்தில் வேலைத் தொல்லையினின்றும் விடுதலையடையும் நோக்குடன் மோன விரதம் பூண்டேன். அந்நேரத்தைக் கட்டுரை வரைவதில் போக்கினேன். நாளடைவில் இறைவன் தொடர்பு விளங்கலாயிற்று. இந்நாளில் யான் மௌனத்தின் பொருட்டே படைக்கப்பட்டேன் என்ற உணர்வு தோன்றியுள்ளது.'

காந்தியடிகளின் மௌனத்தைப்பற்றிய புறச்சான்றுகளும் உண்டு. அவைகளில் சில்வற்றையாதல் ஈண்டுக் குறித்தல் பொருத்தமாகுமென்று நினைக்கிறேன்.

> "சகோதரர் கைல்ஸும், பிரான்ஸ் மன்னர் செயிண்ட் லூயிஸும் சந்தித்தனர். ஒருவரை ஒருவர் தழுவி முத்தமிட்டனர். இருவரும் வாய் திறந்து பேசவே இல்லை;

மண்டியிட்டனர். வாய் திறவாமல் மௌனமாகவே பிரிந்தனர். இதுகுறித்துச் சகோதரர் கைல்ஸ் 'நாங்கள் இருவேமும் வாய் திறந்து பேசுவதைப் பார்க்கினும் மௌனத்தால் அதிகம் பேசுதல் இயலும்' என்றருளியுள்ளனர். இதை யான் காந்தியடிகள் முன்னிலையில் அமர்ந்தபோது அநுபவித்தேன்.''—எம். ஜோன்ஸ்

'காந்தியடிகள் லண்டனிலிருந்தபோது என் பள்ளியைப் பார்வையிடப் போந்தார். பிள்ளைகள் அவரை வரவேற்றுச் சூழ்ந்தார்கள். அடிகள் என்செய்தார்? தரையில் அமர்ந்தார்; நூல் நூற்றார். அவரும் மௌனம்; எல்லாரும் மௌனம்; பேச்சே இல்லை.'—மாண்டிஸ்ஸோரி

மோனத்தால் காத்துப் பெருக்கப்படும் மெய்யறிவு, பொறுமை அடக்கம் அன்பு முதலிய அருட்குணங்களை ஈனுகிறது. தன்னலங் கடந்தொளிரும் அவ்வறிவு பிறர் நலங்கருதி உழைக்குமாறு தன்னைப் பெற்றானைத் தூண்டுகிறது.

மெய்யறிஞர் எவ்வுயிரையுந் தம்முயிர்போல் காண்பர். இக்காட்சி பெற்றோர் எவ்வுயிர்க்காதல் தீங்கு நினைப்பரோ? நினையார். தீய நினைவு தம்மைத் துன்புறுத்துவதை அவர் நன்குணர்வர். ஆகவே, அன்னார் தொண்டு எவ்வுயிர்க்கும் எக்காரணம்பற்றியும் மன மொழி மெய்களால் தீங்கு நினையா வழியில் நிகழ்வதாகும். பிறவுயிர் இன்பமே தமக்குரிய இன்பமென அவர் கொள்வர். இஃதே இயற்கை வாழ்வினரது இயல்பமைந்த நல்லறம். எளிய இயற்கை வாழ்வு நடாத்தும் ஒருவனை, அவ்வாழ்வு, முடிவாக அருளறத்தில் அதாவது அஹிம்சா தர்மத்தில் கொணர்ந்து நிறுத்தும். இதற்கு இலக்கியம் காந்தியடிகள் வாழ்வு.

## அ. அஹிம்சை

அஹிம்சா தர்மம் எது? அஹிம்சை என்பது ஹிம்சையின் எதிர்மறை. இதுகொண்டு பிற உயிரை ஹிம்சியாதிருத்தல் மட்டும் அஹிம்சை என்று சொல்லலாமோ? அஹிம்சையின் பொருள் அவ்வளவில் அடங்குவதன்று. அஹிம்சையின் உட்பொருளைத் துருவி ஆராயின், அதன்கண் இன்னும் விரிந்த பொருள் அமைந்து கிடத்தல் காணலாம்.

அஹிம்சை என்பது பிறரை ஹிம்சியாதிருத்தல் மட்டுமன்று; தன்னைப் பிறர் ஹிம்சிக்கும்போது, அவர் மீது காழ்ப்புக் கொள்ளாது, அக்கொடுமையினின்றும் அவரைக் காக்கவேண்டி, அவர்பால் அன்புகொண்டு துன்பம் பொறுத்தலும் அஹிம்சையின்பாற்பட்டது. பிறர்க்குத் தீங்கு செய்யாமையும், பிறர் தீங்கை அன்பால் பொறுத்தலும் அஹிம்சையெனில், அஹிம்சா தர்மத்தில் எவ்வளவு நலன்கள் பொருந்தியிருத்தல் வேண்டும்? பிறர்க்கு உறுகண் செய்யாமையினும், பிறர் உறுகண்ணைப் பொறுத்தல் - அதனிலும் அன்பால் பொறுத்தல் - எவ்வளவு அரிது? இப்பொறுமை எவரிடத்தில் அமையும்? சிற்சில நலன்கள் மிளிரும் உள்ளமுடையார் மாட்டும். இது நிகழ்தல் அரிது. எல்லா நலன்களும் ஒளிரும் உள்ளமுடையார் மாட்டே அன்புப் பொறுமை என்னும் புனிதம் பொலியும். எனவே எல்லா அறமுறைகட்கும் உறையுள் அஹிம்சை என்று சொல்லலாம்.

இக்காரணம்பற்றியே 'அஹிம்சா பரமோ தர்மா' என்று ஆன்ரோர் கூறிப் போந்தார். 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்றார் தமிழ்ப் பெரியார். 'கொல்லா விரதங் கொண்டோரே நல்லோர்' என்றார் தாயுமானார். மற்றோரிடத்தில் இவரே 'கொல்லாமை எத்தனைக் குணக்கேட்டை நீக்கும்' என்றார். எல்லாக் குண நலன்கள் உற்றதும் எல்லாக் குணக் கேடுகள் அற்றதுமா யிருப்பது அஹிம்சா தர்மம். மனிதன் தன்பாலுள்ள குறைகளெல்லாம் நீங்கப்பெற்று அடையும் முடிந்த நிலை அஹிம்சா தர்மம் என்பது.

இந்நிலை எய்தற்கு உலகில் வாழ்வென ஒன்று ஏற்பட்டிருக்கிறது. உலகில் மனிதன் கல்வி பயிறலும், தொழில் புரிதலும், மனைவி மணத்தலும், புதல்வர்ப் பெறலும், ஒழுக்கங் காத்தலும், இன்னபிற கோடலும் எற்றுக்கு? முடிவில் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் பெருநிலை எய்தற்கேயாம். பிறர்மாட்டுக் காழ்ப்புக் கொள்வோனாதல், தீமைக்குத் தீமை செய்வோனாதல் அஹிம்சா தர்மப் பெருநிலை எய்தல் இயலாது. தீமைக்குத் தீமை செய்யாது, அன்புளத்தால் தீமையைப் பொறுமையோடு ஏற்று, ஒல்லும்வகை நலஞ் செய்யும் ஒருவனை தன்னைப்போலப் பிறரையும் நேசிக்க வல்லவனாவன். மனத்திலாவது ஹிம்சை நினைவுறப் பெறுவோன் தன்னைப்போலப் பிறரை நேசிக்கவல்லவனாகான். அஹிம்சைக்கு அகத்தூய்மை மிக மிக இன்றியமையாததென்பது பெரிதுங் கருதற்பாலது. இவ்வஹிம்சா தர்மமே மனிதனது இயற்கை அறம். இயற்கை வாழ்வினர்க்குரிய அறமும் இதுவே.

இவ்வறத்தை அறிவுறுத்தாத சமயங்கள் உலகி லில்லை. பிறர்க்கு இன்னா செய்யுமாறு எச்சமயமும் அறிவுறுத்துவதில்லை. எல்லாச் சமயங்களும் அஹிம்சா தர்மத்தை ஒருமுகமாக அறிவுறுத்துகின்றன. பற்பல பெயர்களால் அழைக்கப்படும் சமயங்களை யெல்லாம் இனி 'அஹிம்சா தர்மம்' என்னும் ஒரு பெயரால் அழைக்க லாம். சுருங்கிய முறையில் தர்மம் என்று சொல்லலாம். அஹிம்சையே தர்மம் என்பது. தர்மமும் அறமும் ஒன்றே.

முன்னை அறம் பல பெரியோரால் ஓம்பப்பட்டு வந்தது; புனித அறம் மனிதர்க்குரிய சமய நெறியாக வளர்ந்து வந்தது. சமயநெறி அரசியல் நெறியாகவுங் கொள்ளப்பட்ட காலமுண்டு. அசோகன் ஆட்சி அரு ளாட்சியாக இவ்வுலகில் இயங்கி நின்றதை எவரால் மறுத்தல் முடியும்?

இவ்வாறு பெருகி வந்த அருணெறி உலகில் இயந் திர இயக்கந் தோன்றிய நாள் முதல சுருங்கலாயிற்று. இப்பொழுது உலகிலுள்ள வல்லரசுக ளெல்லாம் கொலையை-ஹிம்சையை-அடிப்படையாகக் கொண்டியங்கு கின்றன. அவ்வரசுகட்கு ஏற்றவாறு நாடுகளின் வாழ்வு முறைகள் கோலப்பட்டிருக்கின்றன. உலகம் கொலைக்கு இரையாகி வருகிறது.

இந்நாளில் உலகைப் பழைய அருளறத்தில் நிறுத்தச் சில பெரியோர் ஆங்காங்கே தோன்றினர். அவருள் சிறப்பாக இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் ருஷ்யாவில் தோன்றிய டால்ஸ்டாய். மற்றவர் நமது நாட்டிற்றோன்றிய காந்தியடிகள். டால்ஸ்டாய் பெரிதும்

பேச்சளவில் - எழுத்தளவில் - தம்மளவில் - அஹிம்சா தர்மத்தை வளர்த்துச் சென்றார். மகாத்மா காந்தியோ தம்பால் அவ்வறத்தை வேரூன்றச் செய்து, உலகிலும் அதை நிலைபெறுத்த முயன்று வருகிறார்.

மகாத்மா காந்தி வாழ்வில் அஹிம்சா தர்மம் எவ்வாறு வளர்ந்து வந்ததென்பதையும், அவர் உலகில் அவ்வறத்தை நிலைபெறுத்த எவ்வெவ்வழி நின்று உழைத்து வந்தாரென்பதையும் அவர் வரலாற்றிற் பரக்கக் காண்க. இந்நூலின் நோக்கிற்கேற்பச் சிற்சிலவற்றை ஈண்டுக் குறித்துச் செல்கிறேன்.

காந்தியடிகள் பிறந்தகுலம் புலால் உணவு கொள்ளாதது. 'உணவுக்கேற்ற குணம்' என்பது முதுரை.

ஊன் உண்ணாமை

புலால் உண்ணாமையும் காந்தியடிகளை அஹிம்சா தர்மத்திற் செலுத்தியது என்று ஒருவாறு கூறலாம். 'புலால் உண்ணாமையே அஹிம்சா தர்மம்' என்று சிலர் கூறுவர். அஃதும் ஒரு காரணமாயிருக்கலாம் என்று யான் கூறுவேன். புலால் உணவு கொள்ளாத எத்தனை பேர் மனிதக் கொலை செய்கிறாரென்பது உலகுக்குத் தெரியும். புலால் உண்ணாமை பரம்பரை யொட்டிச் சிலரால் கொள்ளப்படுகிறது. இவர் புலால் உணவு மட்டுங் கொள்ளாது மற்றக் கொடுவினைகள் பல நிகழ்த்துகிறார். புலால் உணவு கொள்ளாத காரணத்தால் மட்டும் ஒருவர் அருளாளராகார். புலால் உண்ணாமையின் நோக்க மென்னை? உயிர்வதை கூடாதென்பது. பரம்பரை யொட்டிப் புலால் உண்ணாது உயிர்க்கு உறுகண் செய்வோருங் கொலைஞரே யாவர். 'உறுகண்' என்

பது கொலையை மட்டுங் குறிப்பதன்று. கொலை செய்யாது பிறரை வருத்தல், பிறர் உழைப்பால் வாழ்தல், வட்டியால் பிறரை நெருக்கல், களவாடல், கட்குடித்தல், பிறர்மனை விழைதல், பொய் பேசல் இன்னோரன்ன பிற யாவும் உயிர்வதையின்பாற் பட்டனவே யாகும். ஆதலால், புலால் உண்ணாமையொன்றே காந்தியடிகளை அருணெறியில் நிறுத்தியது என்று சொல்லுதல் கூடாது. புலால் உண்ணாமையோடு, அவரது இல்லறம், தியாகம், இயற்கை வாழ்வு, வெகுளாமை, பொய்யாமை, பழிக்குப் பழிவாங்க நெஞ்சினும் நினையாமை, பொறுமை முதலிய சத்தியாக்கிரக முறைகள் அவரை அறவோர் அல்லது அஹிம்சா தர்ம மூர்த்தியாக்கின.

**தீண்டாமை**

மகாத்மா காந்தி இளமையிலேயே தீண்டாமை குற்றம் என்றுணர்ந்து நடந்ததும் அருள் நெறிக்குக் கால்கொண்டதாகும். மக்கள் இனத்தவருள் ஒரு கூட்டத்தாரைத் தீண்டாதாரெனக் கருதி அவரை வருத்துவதினும் பிறிதொரு மறச்செயலுண்டோ? அருள் பூத்த நெஞ்சினர் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவரோ? பிறரைத் தீண்டாதாரெனக் கருதும் நெஞ்சம் எத்தன்மையதா யிருக்கும்? அஃது இருப்பினுங் கொடியதா யிருக்குமன்றோ? மக்களுள் தீண்டாமை கொள்வோர் எத்தகை நல்லியல்புடையாராயினும் அவர் அருளாளராகார். 'மக்களுள் தீண்டாமையும் உண்டோ? அந்தோ! கொடுமை!' என்று இரங்கும் நெஞ்சினை இளமையிலேயே இயல்பாகப் பெற்றார் நங்காந்தியடிகள். அவ்விரக்கம் அவரை இது போழ்து எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும்

அந்தணராக்கி யிருக்கிறது. தீண்டாமையைப் பற்றிய விரிவை, இந்நூல் 'பிறப்பு' என்னுந் தலைப்பின்கீழ்க் காண்க.

அஹிம்சை கால்கொள்ளும் இடம் எது? இல்லம். இல்லம் எது? ஒருத்தி - ஒருவன் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுவது. அஃது இல்லறம் - இல்வாழ்க்கை - என்று வழங்கப்படுகிறது. இல்லத்தில் கால்கொண்டு எழும் அஹிம்சையே நிலைபெறுக நிற்பதாகும்.

**இல்லம்**

அஹிம்சை, இல்லறத்தை நடாத்தும் ஆண்மகனிடத்திருந்து அரும்புவதா? பெண்மகளிடத்திருந்து அரும்புவதா? இதுபற்றிக் காந்தியடிகள் வெளியிட்டுள்ளதைச் சிறிது நோக்குவோம் :

'* * * * யான் விரும்புமாறு என் மனைவியை நடாத்த முயன்றேன். அதனால் எனக்கு அஹிம்சைப் பயிற்சி உண்டாயிற்று. என் மனைவியின்பால் இரண்டு பண்புகள் விளங்கின. ஒன்று எனது கட்டளையை மறுப்பது; இன்னொன்று எனது மடமையைப் பொறுமையால் சகிப்பது. இரண்டும் என்னுள்ளத்தில் நின்று நின்று நாணத்தை எழுப்பின. அவ்வெழுச்சியால் மனைவியை நம்வழியில் அடக்கியாளல்வேண்டும் என்ற முனைப்பு என்னை விடுத்து அகன்றது. அகன்றதும் என் மனைவி எனக்கு அஹிம்சா தர்மத்தை அறிவுறுத்துங் குருத்தியானாள். அவளது பேச்சற்ற போதனை வளர்ந்து வளர்ந்து சத்தியாக்கிரகமாகப் பரிணமித்தது. தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் யான் புரிந்த சத்தியாக்கிரகப் போர்கட்கு ஊற்றாயிருந்த முதன்மை யான் மனைவியினிடம் பயின்ற அஹிம்சையே.'

இக்காரவற்ற உரை விளக்குவதென்னை? அஹிம்சை பெண்மகளிடத்திருந்து அரும்புவ தென்பதன்றோ? அஹிம்சைக்கு மூலம் இல்லம் - இல்வாழ்க்கை என்று தெளிக.

ஒருவன் ஒருத்தி வாழ்க்கையைக் கொண்ட இல்லம் குடும்பமாகப் பெருகுகிறது. இருபால் வாழ்க்கை அஹிம்சையில் வளர்ந்தால் அவரால் ஆக்கப்பெறுங் குடும்பமும் அஹிம்சையி லேயே வளரும். குடும்பத்தில் வளரும் அஹிம்சை ஊரிடை - நாட்டிடை - உலகிடைப் பெருகுவதாகும். உலகம் ஒரு பெருங் குடும்பமன்றோ? '* * * * அஹிம்சை குடும்பத்திருந்து வளர்தல் வேண்டும்' என்று அடிகள் அருளிய அநுபவமொழி நல்லுலக வளர்ச்சிக்கு வழிகோலுவதாகும்.

குடும்பம்

காந்தியடிகள் வாழ்க்கையில் மலர்ந்த அஹிம்சை அவரளவில் நின்றதில்லை. அஃது உலகுக்குப் பயன் படுவதாயிற்று. இதற்குத் தொடக்கம் எங்கே? தென்னாப்பிரிக்காவில் என்று சரித்திர உலகங் கூறும். அடிகள் ஒருமுறை மாரிட்ஜபர்க் நிலையத்தில் இரவில் பனியில் புகைவண்டியினின்றும் இறக்கப்பட்டது, முன்னே (தியாகத் தலைப்பில்) விளக்கப்பட்டது. அங்கே நிகழ்ந்ததை அடிகளே,

தொடக்கம்

'* * * வண்டி ஓடியது. குளிர் என்னைக் குடைந்தது. உயிர் நீங்குமோ என்றும் அஞ்சினேன். அருகிருந்த ஓர் அறைக்குள் புகுந்தேன். அங்கே ஒரு வெள்ளை உருவம் நின்றது. என் செய்வேன்! பிறந்த நாடு நோக்குவதா? அடிமைத் தளையை உடைக்க முயல்வதா? என்ற எண்ணம்

என் உள்ளத்தில் ஊசலாடிற்று. அந்த நேரத்தில் எனது வாழ்வில் படிந்துகிடந்த அஹிம்சை செயலில் பரிணமித்தது'

என்று கூறியுள்ளார். தென்னுப்பிரிக்காவில் அஹிம்சை அடிகள் வாயிலாகப் பன்முகங்கொண்டு வெளியாகியது. அடிகளுக்குத் தென்னுப்பிரிக்கா வாழ்வு கிடைத்தது உலகத்தின் தவப்பயன் என்றே கூறலாம். அடிகள் தென்னுப்பிரிக்கா நண்ணுதிருப்பரேல், இந்நாளில் அஹிம்சையின் மாண்பு உலகுக்குப் புலனுகி யிருக்குமோ? தென்னுப்பிரிக்கா வாழ்க.

தென்னுப்பிரிக்காவில் பெரும் பொருளீட்டுந் தொழிலைப் பேய்மை எனக் கொண்டு, அதை உதறித் தள்ளி, ஏழை மக்கட்குப் பாடுபடத் தமக்குள்ள எல்லா வற்றையுந் துறந்த அடிகளின் அருட் குணத்தை என்னென்று புகழ்வது? தென்னுப்பிரிக்காவில் வெள்ளையராலும் மற்றவராலும் தாம் புடைக்கப்பட்ட போழ்தும், சிறையில் அடி உதைபட்ட நேரத்திலும், பிறர் மலம் தங்கையால் வார நேர்ந்த வேளையிலும் நம்பெருமான் சீற்றமுற்றாரில்லை; எவரையுங் கடிந்துரைத் தாரில்லை. போலீஸார் தம்மை வழியில் அடித்துத் தள்ளியதைக் கொண்டு வழக்குத் தொடுக்க நண்பர் சிலர் தூண்டியும் அடிகள் வழக்குத் தொடுத்தாரில்லை. தம்மை அடித்து வீழ்த்திய ஆப்கானியரைத் துன் புறுத்தா திருக்குமாறு காலன்பர்க்கை வேண்டிய கருணைமூர்த்தி நங் காந்தியடிகள். தென்னுப்பிரிக்கா வெள்ளையர், மக்கள் உணர்விழந்து இந்திய மக்களை வருத்தியது கண்ட அடிகள் என் செய்தனர்? அவரை

பிழை பொறுத்தல்

இழிவுரையால் வையவோ அடித்துக் கொல்லவோ இந்தியரை அடிகள் ஏவவில்லை. காந்தியடிகள், 'அந்தோ! கடவுள் படைப்புக்குட்பட்ட இவ்வெள்ளை மக்கள் விலங்குணர்வு கொண்டு சகோதர நேயமிழந்து கெடுகிறார்கள். இவர்களைப் பிடித்தாட்டும் விலங்குணர்வைப் போக்கினால் இவர்கள் திருந்துவார்கள்' என்று அவர்கள்மாட்டு இரக்கங்கொண்டு, இந்தியரைப் பொறுமைப் போரில் பயிற்றுவித்தார். தென்னாப்பிரிக்கா வெள்ளையர்க்குச் சகோதர நேயம் பிறப்பிக்கத் தம்மோடு இந்திய மக்களையுந் துன்பம் பொறுக்கும் அருள் வழியில் அடிகள் நிறுத்தினார். காந்தியடிகள் அருளறத்தை மன்பதையில் புகுத்த முயன்றது மறக்கற்பாலதன்று.

அஹிம்சையின்மீது காந்தியடிகட்குள்ள வேட்கை சாலப்பெரிது. அடிகள் தாம் உண்ணா நோன்பு பூணும் வாயிலாகவும் அஹிம்சா தர்மத்தை மக்கள் வாழ்வில் நிலைபெறுத்த முயன்றதை உலகம் ஊன்றி நோக்குவதாக. ஏழை மக்கள் துயரங் கண்டிரங்கும் வாயிலாகவும், அத்துயரம் போக்க, அத்துயரத்துக்குக் காரணராக நிற்கும் மாற்றாரை வருத்தாது அவரை ஈர நெஞ்சினராக்கத் தாம் உண்ணா நோன்பு கொள்ளும் வாயிலாகவும் அடிகள் அருளறத்தை ஓம்பியுள்ளனர்.

உண்ணா நோன்பு

ஆமதாபாத்தில் நெசவுத் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. அவைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை செய்கின்றனர். ஆங்கே 1917-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொள்ளைநோய் (பிளேக்) அதி தீவிரமா யெழுந்து மக்களை வருத்தத் தொடங்கிற்று.

அதனால் ஆண்டுள்ள ஆலைகளில் வேலை செய்து வந்த தொழிலாளருள் பலர் கிராமங்களுக்குச் செல்ல எண்ணி னர். அது கண்ட தொழிற்சாலை முதலாளிகள் தொழிலாளர்க்கு நூற்றுக்கு எழுபது வீதம் சம்பளம் உயர்த்துவதாகக் கூறினார்கள். பணப்பித்துக்கொண்ட தொழிலாளருள் பெரும்பான்மையோர் கிராமங்களுக்குச் செல்லாது நின்றுவிட்டனர். கொள்ளை நோயின் வேகங் குன்றப்பெற்றதும் தொழிற்சாலைத் தலைவர்கள் தாங்கள் தொழிலாளர்க்கு உயர்த்திய சம்பளத்தைக் குறைத்து விட்டார்கள். அது காரணமாக முதலாளர்க்கும் தொழிலாளர்க்கும் பலவகை விவாதங்கள் நடந்தேறின. முதலாளர் நூற்றுக்கு இருபது வீதம் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொன்னார். தொழிலாளர் நூற்றுக்கு ஐம்பது கேட்டனர். இருவரும் எவ்வித முடிவிற்கும் வரவில்லை. காலங்கடந்தே சென்றது. முதலாளிகள் பிடிவாதத்தை விடவில்லை. கலகமும் குழப்பமும் பரவத் தொடங்கின.

அவ்வேளையில் சாம்பரானிலிருந்த மகாத்மா காந்திக்கு இச்செய்தி அநுசூயாபாய் வாயிலாக எட்டிற்று. காந்தியடிகள் ஆமதாபாத் போந்து நிலைமையை நன்கு ஆய்ந்து தொழிலாளர் பக்கம் நியாயமிருத்தல் கண்டனர். தொழிலாளர் பக்கம் நியாயமிருத்தல் கண்ட நடுநிலை யாளர் - அருள் நெஞ்சினர் - அத்தொழிலாளர் துயர் போக்க முயலாது வாளா கிடப்பரோ? அவரது ஆத்ம சக்தி அவரைத் தூண்டாது கிடக்குமோ? ஆமதாபாத் ஆலை முதலாளிகள் பலர் காந்தியடிகளின் ஆருயிர் நண்பர். அந்நட்பு அடிகளின் அற ஒழுக்கத்தை

இம்மியுங் குலேக்கவில்லை. அடிகள் முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் இடை நின்று நியாயம் பேசி ஒரு முடிவு காணமுயன்றார். முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் நேரும் பிணக்கில் மூன்றாவது மனிதர் ஏன் தலையிடுதல் வேண்டுமென்றும் அத்தலையீட்டுக்கு இடனில்லை யென்றுங்கூறி, முதலாளிகள் காந்தியடிகள் வேண்டுகோட்கு இணங்கினார்களில்லை. அதற்குமேல் காந்தியடிகள், எக்காரணம் பற்றியும் மூர்க்கத்துறை நண்ணலாகாதென்றும், விரும்பி வரம்புமீறி வேலைக்குச் செல்வோரை எவருந் துன்புறுத்தலாகா தென்றும், வேலை நிறுத்தத்தின்போது பிச்சையெடுத்து வயிறு வளர்த்தலாகா தென்றும், வேலை நிறுத்தம் எத்துணைநாள் நீடித்தாலும் சரண்புகாது வேறு தொழில் செய்து பிழைக்க வழி தேடிக்கொள்ளல் வேண்டுமென்றுஞ் சில கட்டுப்பாடுகளை விதித்து வேலைநிறுத்தஞ் செய்யுமாறு தொழிலாளரைக் கேட்டனர். கட்டுப்பாடுகட்குத் தொழிலாளர் இணங்கி வேலை நிறுத்தஞ்செய்ய உடன்பட்டனர்.

இரண்டு வாரம் தொழிலாளர் காந்தியடிகள் விதித்த கட்டுப்பாடுகளின் வழிநின்று ஒழுக்கங்காத்து வந்தனர். மூன்றும் வாரம் அவர்க்குள் சோர்வு ஏற்பட்டது. அச்சோர்வால் பெரும்பான்மையோர் வேலைக்குச் சென்றாரில்லை. அவருட் சிலர், வேலைக்குச் சென்ற சிலரைத் துன்புறுத்த முயன்றனர். தொழிலாளர் உள்ளத்தில் மூர்க்கப்பேய் நுழைந்தது என்று சுருங்கச் சொல்லலாம். அது கண்ட அடிகள், 'சிறந்த முடிவொன்று ஏற்படும் வரை, தொழிலாளர் வேலைக்குச் செல்லாமல் உறுதியுடனிருத்தல் வேண்டும்; அல்லது அவர் ஆலைகளையே

அடியோடு மறந்து விடுதல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்று நிறைவேறுதவரை நான் உணவு கொள்வதில்லை' என்று ஒருநாள் பேசினுர். இப்பேச்சைக் கேட்ட தொழிலாளர் அடிகளைத் தம்பொருட்டு உண்ணு நோன்பு கொள்ளாதிருக்குமாறும், தாம் உறுதியுடனிருந்து வேலை நிறுத்தத்தை நடாத்துவதாகவும் உறுதிமொழி கூறினர். அடிகள் அவர்க்கு அறவுரை சில பகர்ந்து உண்ணு நோன்பு பூண்டனர். முதலாளிகள் காந்தியடிகளை மகாத்மா என்று அப்பொழுதே உணரப் பெற்றுர்கள். அவர்கள் வாளாகிடப்பினும், அவர்கள் உள்ளத்துள்ள இறைவன் வாளாகிடப்பனே? உடல் பொருள் ஆவி மூன்றையும் மற்றவர் பொருட்டு அர்ப்பணஞ் செய்தோரைக் காப்பவன் ஆண்டவனல்லனே? ஆண்டவனருளால் முதலாளிகள் தங்களை அறியாமலே ஒரு நன்முடிவிற்கு வந்தார்கள். அதற்குமேல் மகாத்மா காந்தி உணவு கொண்டார். ஏழைகள் பொருட்டு - ஜீவகாருண்யத்தின் பொருட்டு - உண்ணு நோன்பு கொள்வோர் இக்காலத்தில் எத்துணை பேர் இருப்பர்?

மகாத்மா காந்தி தம் பெயரால் பிறர் நிகழ்த்திய கொடுஞ் செயலுக்குத் தாம் உண்ணு நோன்பு பூண்டு தம்மையும் மற்றவரையும் தூய்மைப்படுத்தும் முறையிலும் அருளறத்தை வளர்த்திருக்கிறுர்.

1919-ம் ஆண்டு இந்தியச் சட்ட சபையில் ஜனத் தலைவர்களின் மறுப்புக்கிடையே மக்கள் உரிமைக்கு ஊறு செய்யவல்ல ரௌலட் சட்டம் பிறந்தது. வேறு எம்முயற்சியாலும் அச்சட்டம் ஒழியாமை கண்ட காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கந் தொடங்கினுர். அவ்

வியக்கச் சார்பாக அடிகள் பாஞ்சாலம் நோக்கியபோது, அவர் அந்நாட்டுக்குள் நுழைதலாகாது என்ற அரசாங்க ஆணை அவரைத் தகைந்தது. அவ்வாணை மீறிய அடிகளை அதிகாரிகள் புகைவண்டியில் ஏற்றிச் சென்றார்கள். 'மகாத்மா காந்தி யாண்டோ அழைத்துச் செல்லப்படு கிறார்; அவர் கதி என்னுமோ' என்று ஒன்றுமறியாச் சிறுமைக் கூட்டத்தார் பேசலாயினர். அப்பேச்சு, பாஞ் சாலம், பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களில் கொலையுங் குழப்பமுமாய் முடிந்தது. காந்தியடிகள் குழப்பத்தில் நிகழ்ந்த கொடுமைகளைக் கண்டுங் கேட்டும் வாளா இருக்கவில்லை. அஹிம்சையின் நுட்பந்தெரியாத தலைவர் என் செய்வர்? 'ஆ! ஆ! நம்பொருட்டு இவ்வளவு குழப்பம் நிகழ்ந்ததா' என்று மகிழ்வெய்துவர். அருள் மிகுந்த காந்தியடிகளோ உள்ளங் குழைந்து குழைந்து உருகி, பதைத்துப் பதைத்து, 'இதுவா சத்தியாக்கிரகம்? இது துராக்கிரகத்தினுங் கொடியது. * * * * இப்பாவந் தொலைய மூன்றுநாள் உண்ணு நோன் பிருக்க உறுதிகொண்டேன்' என்று நோன்பு பூண்டு சத்தியாக்கிரக இயக்கத்தையே நிறுத்திவிட்டார்.

ஒத்துழையா இயக்கம் நாட்டில் காட்டுத்தீப்போல் பரவிவந்த வேளையில் இளவரசர் இந்தியா போந்தார். 'அவர் அதிகாரவர்க்க விருந்தினராக வருதலால், அவரது வரவேற்பில் நாட்டவர் கலவாது நிற்பதே அவர்க்குச் சிறப்புச் செய்வதாகும்' என்ற ஆணை காந்தியடிகள் வாயிலாகப் பிறந்தது. இவ்வாணைக்கு மறுப்பும் எழுந் தது. ஒத்துழைப் பாளர் (பெரிதும் பாரஸிகரும் கிறிஸ்துவரும்) இளவரசர் வரவேற்பில் கலந்து

கொண்டனர். அதுகண்ட ஒத்துழையாதார் (பெரிதும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும்) அவரைத் தாக்கி நையப் புடைத்தனர். அதனால் கலகம் மூண்டது. அவ்வேளை யில் அந்நியத் துணிப்பொதியை ஓரிடத்தில் தீக்கிரை யாக்கித் திரும்பிய காந்தியடிகட்குக் கலகம் காட்சி அளித் தது. அதைக் கண்ட அடிகள், 'அமைதி நிலவுமட்டும் நான் உணவு கொள்வதில்லை' என்று எவரும் அஞ்சத் தக்க நோன்பு கொண்டார். அமைதி எவர்மாட்டு நிலவல் வேண்டும்? குழப்பத்தில் கலந்து போரிட்டவருள் அமைதி நிலவல்வேண்டும். காந்தியடிகளின் உண்ணு நோன்பு, நாட்டவர்க்குள் ஏற்பட்ட பகைமையை ஒழித்து, அவரனைவரையும் அவர்பால் வரவழைத்து, 'அமைதி காக்கிறோம்; உணவு கொள்ளுங்கள்' என்று உறுதிமொழி கூறச் செய்தது. அருளறத்தின் வலி என்னே! என்னே! பின்னே உண்ணுநோன்பு நிறுத் தப்பட்டது.

பம்பாய் மூர்க்கச்செயல் ஒத்துழையா இயக்கத்தை ஒட்டி எழுந்தது. அவ்வியக்கத்துடன் எவ்வழியிலுந் தொடர்புபெறாத கொலைவினைகளை முன்னிட்டும் அடி களால் உண்ணு நோன்புவழி அஹிம்சா தர்மங் காக்கப் பட்டது.

ஐக்கிய மாகாணத்தில் கொரக்பூர் ஜில்லாவில் சௌரி சௌரா என்றோர் சிற்றூர் உண்டு. அவ்வூரில் எதன் பொருட்டோ ஓர் ஊர்வலம் நடைபெற்றது. அவ் வூர்வலத்தில் போலீஸாருக்கும் பொதுமக்கட்கும் போர் மூண்டது. போலீஸார் துப்பாக்கியால் மக்களை நோக் கிச் சுட்டுப் போலீஸ் நிலையஞ் சேர்ந்தனர்; மக்கள்

வெகுண்டெழுந்து அடிகள் பெயரை முழக்கிப் போலீஸ் நிலயம் நுழைந்து அதனையும் அதனுள்ளிருந்த சேவகரையும் தீக்கிரையாக்கினார்கள். உயிரோடு மக்களை நெருப்பிலிட்டு எரிப்பதினும் ஹிம்சை வேறொன்றிருக்குமோ? பொல்லாச் சீற்றம் மனிதரை என்ன செய்விக்கிறது? 'சினத்திற் பகையும் உளவோ பிற' என்றார் நம் பெரியார். சீற்றம் நெருப்பாகி மனிதரை எரிக்கிறது! சீற்றமே! மன்பதையை விடுத்து என்று ஒழிவை?

இப்பொல்லாக் கொலைச் செய்தி யாண்டு - எந்நிலையில் - காந்தியடிகட்கு எட்டிற்று? நாட்டின் தவக்குறை! இந்திய மக்களின் துரதிர்ஷ்டம்! பெண்மக்களை வருத்தும் பாவம் - மக்களுள் ஒரு கூட்டத்தாரைத் தீண்டாதாரென ஒதுக்கி வருத்தும் பாவம் - வீண்போமோ? இப்பாவங்களெல்லாந் திரண்டு உருண்டு, வரிகொடாமைக்கென ஒத்துழையாத் திட்டங்களால் - பன்னாள் உழைப்பால் - பல்லாற்றானும் பண்படுத்தப் பெற்றிருந்த பர்தோலிக்குச் சபர்மதியினின்றும் புறப்பட்டுச் சென்று இந்தியாவிற்கு உரிமைப் பேறு வழங்க வல்ல பெரும்போர் துவங்க, நம் சத்தியவீரர் - மகாத்மா காந்தி - உண்மை அஞ்சாமை என்னும் கருவிகள் தாங்கி, அஹிம்சா தர்மப்போர் முனையில் நின்ற வேளையில், இந்திய மக்கள் மனமெல்லாம் ஆங்கே குவிந்து நின்ற நேரத்தில், 'என்னுமோ' என்று பிரிட்டிஷ் சிங்கம் நடுக்குற்று நின்ற போழ்தில், உலக நோக்கமெல்லாம் அவண் பதிந்திருந்த சமயத்தில், 'அடிகளே! சௌரி சௌராவில் தொண்டர்கள் போலீஸ் நிலயத்தைக் கொளுத்தினார்கள். அதனுள்ளே போலீஸார்

தீக்கிரையானார்' என்று மகாத்மாவின் முன்னிலையில் அறிவித்தன. நாட்டிலுள்ள குறைகள் - பொல்லா வினைகள் - நாட்டிற்கு விடுதலையளிக்க விடுமோ? அந் நாட்டிற்கு விடுதலை யளிக்க ஆண்டவனுந் திருவுளங் கொள்வனோ? எவ்விடத்தில் - எந்நேரத்தில் - எந்நிலை யில் - கொலைச் செய்தி அடிகட்கு எட்டிற்று! இந் துண்மை கடவுளிடத்து உறுதியுடையார்க்கே இனிது புலனாகும். மாசிலா மனத்தர் - ஈசனிடத் தன்பர் - கொல்லா விரதங் கொண்ட நல்லார் - காந்தியடிகள் என் செய்தார்? அடிகள் போரை மறந்தார்; பர்தோலியை மறந்தார்; நாட்டை மறந்தார். அவர் உள்ளம் செளரி செளராவிற்கு ஓடிற்று; தீக்கிரையான உயிர்கள்மீது நிலைத்தது. அவ்வுள்ளம் அனலிடைப்பட்ட மெழுகெனக் கசிந்து கசிந்து உருகிற்று; குழைந்தது. அவர் அருள் நெஞ்சம் எவ்வாறு பதைத்திருக்குமென்று எழுத்தால் எழுதலும் வேண்டுமோ? எழுதலும் முடியுமோ? அடிகள் என் செய்தார்? 'ஆண்டவனே! என்னைக் காத்தனை; நல்லறிவுச்சுடர் கொளுத்தினை; அடைக் கலம்; அடைக்கலம்' என்று எல்லாம் வல்ல மெய்ப் பொருளை நினைந்து போரை நிறுத்தினார். அதுகுறித்து அடிகள், 'யங் இந்தியா'வில் எழுதிய உரைகளை நேயர் கள் நோக்குவார்களாக. அவைகளுள் சில வருமாறு:—

'ஆண்டவன் என்பால் பேரன்புடையவனா யிருக்கிறான். ஒன்றிய சட்ட மறுப்புக்குரிய உண்மையும் அஹிம்சையுங் கொண்ட ஒரு நிலையை இன்னும் இந்தியா எய்தவில்லை என்று அவன் எனக்கு மூன்றாம் முறையாக எச்சரிக்கை செய்தான். அமைதி, உண்மை, தாழ்மை, அன்பு, தீச் செயலின்மை, காழ்ப்பின்மை முதலியன கொண்டதே நீதி.'

' 1919-ம் ஆண்டில் ரௌலட் சட்டக் கிளர்ச்சி தோன்றியபோதே ஆண்டவன் என்னை எச்சரிக்கை செய்தான். ஆமதாபாத், வீரமகம், அமிர்தசரஸ், காசூர் முதலிய இடங்களிலுள்ள மக்கள் வழுவி விட்டார்கள். யான் முன் வைத்த காலைப் பின்னிழுத்துக் கொண்டேன்; கூட்டச் சட்ட மறுப்பை நிறுத்தியதோடு என் பொறுப்பில் யானே நிகழ்த்தவிருந்த சட்டமறுப்பையும் நிறுத்திக்கொண்டேன்.'

' இன்னொரு முறை பம்பாய் நிகழ்ச்சி வாயிலாக ஆண்டவன் எனக்கு நடுங்கத்தக்க எச்சரிக்கை தந்தான். நவம்பர் பதினேழாந் தேதி பம்பாய் மடிகள் செயலை என் கண்ணால் பார்க்கும்படி ஆண்டவன் அருள செய்தான். ஒத்துழையாமையின் பொருட்டே மடிகள் அக்கொடுவினை ஆற்றினார்கள். பர்தோலியில் உடனே தொடங்கவிருந்த சட்ட மறுப்பை நிறுத்தவேண்டுமென்று என் விருப்பத்தை வெளியிட்டேன். 1919-ல் நேர்ந்த மானக் கேட்டைப பார்க்கிலும் இது பெரியது. ஆனால் இஃது எனக்கு நலமே செய்தது. போர் நிறுத்தலால் நாடும் நலனடைந்தது. இந்தியா உண்மைக்கும் கொல்லாமைக்கும் துணை போனதாகிறது.'

' பின்னைச் சென்னை நல்ல எச்சரிக்கை செய்தது. ஆனால் அதைக் கவனிக்கவில்லை. ஆண்டவன் சௌரி சௌரா வாயிலாக எனக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தினான். * * * '

' ஹிம்சை எழுச்சியை அஹிம்சையால் அடக்கி ஆள்வது, அஹிம்சையின் வழிச் சுய ஆட்சி பெறுதற்கு அறிகுறி. * * * * '

' உண்மையும் அஹிம்சையுமே என்னால் விரும்பப்படுவன. தெய்விகத்தை யான் விரும்பவில்லை.'

' சௌரி சௌரா நிகழ்ச்சி பர்தோலியைப் பாதியாது என்று வாதிக்கப்படுகிறது. * * * என் கருத்துப்படி

இந்தியாவில் பர்தோலி வாசிகள் அமைதியுள்ளவர்களே. இந்தியாவின் மற்றப் பாகஙகளில் அமைதி நிலவிஞலன்றிப் பர்தோலியின் அமைதி பயன் தராது. கலப் பாலுக்கு ஒரு துளி நஞ்சு சாலுமன்றே? சௌரி சௌரா உமிழ்ந்த நஞ்சம் பர்தோலியைக் கெடுப்பதாகும்.'

சட்டமறுப்பு நிகழுமிடத்தில் அகப்புறத்தூய்மை வேண்டற்பாலதென்றும், வெறியும் ஆவேசமும் அறவே பட்டொழிதல் வேண்டுமென்றும், ஆவேசத்தை அடக்க இதுபோழ்து சட்டமறுப்பும் பிறவும் நிறுத்தப்பட்டமை கூடப் போதிய கழுவாயாகாதென்றும், சௌரி சௌரா கொலை ஒத்துழையாத் தொண்டரல்லாத மற்றவரால் நிகழ்த்தப்பட்டிருப்பினும் - அந்நிகழ்ச்சிக்குந் தமக்குந் தொடர்பில்லாதிருப்பினும் - தம்பெயர் ஆங்கே முழக்கப் பட்டதனுலும் - நாட்டின் ஒரு பகுதியினரால் அவ்வினை ஆற்றப்பட்டமையாலும் - தாம் எவ்வழியிலோ ஒரு வழியில் அவ்வினைக்கு நிமித்தமெனக் கொண்டு தம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், ஒழுக்க உலகிற்குத் தம்மைப் பொருத்தமுள்ள கருவியாக்கிக் கொள்ள வேண்டுமென்றுஞ் சொல்லி அடிகள் ஐந்து நாள் நோன்பிருந்து கழுவாய் தேடியது சிந்தனைக் குரியது.

ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையின்றி நாடு விடுதலை பெருதெனும் உண்மை கண்டு மகாத்மா காந்தி ஒத்துழையாக் காலத்தில் உழைத்து உழைத்து அவ்வொற்றுமைக் கோட்டையைக் கட்டினர். அவர் சிறைக் கோட்டம் நண்ணியபோது அக்கோட்டை தகர்க்கப் பட்டது. ஹிந்து-முஸ்லிம் வேற்றுமை பல இடங்களில்

தலைவிரித் தாடிற்று. சில இடங்களில் கொலைகளும் நிகழ்ந்தன. அடிகள் வெளிப்போந்ததும், இருவகுப் பார் வேற்றுமை உணர்வு கண்டு, கண்ணீருகுத்து, இன் சொலால் அவ்வேற்றுமை களைய முயன்று வந்தார். காந்தியடிகள் ஒரு சமயம் டெல்லியில் மௌலானு மகம்மத் அலி வீட்டில் விருந்ினராய்த் தங்கியிருந்த போது, கோஹத்தில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக் கும் போர் மூண்டது. பலர் இன்னுயிர் துறந்தனர்! கொலையுங் கொள்ளையும் கற்பழிவும் அளவின்றி நிகழ்ந் தன. இந்நிகழ்ச்சிகள் காந்தியடிகள் செவிக்கெட்டின. நாட்டு மக்களுக்குள் எழுந்த பூசலை அடக்கக் காந்தி யடிகள் இருந்த இடம்விட்டு எழவில்லை; பின்னை என் செய்தார்? இருபத்தொருநாள் உண்ணு நோன்பு பூண்டார். பிறரைக் கடிவதிலும் தான் வருந்தும் அஹிம்சா தர்மத்தால் மக்களிடை அன்பு வளருமென்ப தைப்பற்றி விரித்துக்கூற வேண்டுவதில்லை.

உப்புச் சத்தியாக்கிரகத்தை முன்னிட்டுக் காந்தியடி கள் தண்டி நோக்கி நடந்து சென்றபோது, மத்திய மாகாணத்தில் சிலர் தூண்டுதலால் ஹிம்சைப்பேய் வீறிட்டெழுந்தது. அதற்கு அரசாங்கம் தக்க நட வடிக்கை எடுத்தது. அவ்வேளையிலும் ஹிம்சையைக் கடிந்து தமது வருத்தத்தை அரசாங்கத்துக்குத் தெரி விக்க அடிகள் தயங்கவில்லை. ஆண்மையுடன் அடிகள் தமது வருத்தத்தை வெளியிட்டனர்.

தேர்தலில் ஆதிதிராவிடரையும் சாதி ஹிந்துக்களை யும் தனித்தனியே பிரித்து வேறுபடுத்தும் முறையை வீழ்த்தி, இருவரையும் கலப்புறச் செய்யவும், ஆசிர

மத்தில் தோழர்கள் நிகழ்த்தும் பிழைபாடுகளைக் களையவும், இன்ன பிறவற்றை ஒழுங்குபடுத்தவும் அடிகள் உண்ணு நோன்பு பூண்டமையும் ஈண்டுக் குறிக்கற் பாலது.

மக்களின் செயற்கைக்குணமான ஹிம்சை எழும்போதெல்லாம், அதை ஒடுக்கி, அவ்விடத்தில் மக்களின் இயற்கைக் குணமான அஹிம்சையை வளர்க்கக் காந்தியடிகள் பலமுறை உண்ணு நோன்புகொண்டது ஆராயத் தக்கது. அடிகளின் உண்ணு நோன்பு, மக்கள் உள்ளத்தில் கனன்றெழும் நெருப்பை எவ்வாறு தணிப்பதாகிறதென்பது அநுபவத்தில் கண்ட உண்மை.

'பிறராற்றுங் கொலைக்கு மற்றொருவர் கொள்ளும் உண்ணுமை எவ்வழியில் அஹிம்சையை வளர்ப்பதாகும்; இம்மூன்றற்கும் உள்ள தொடர்பென்னை' என்னும் வினு எழுதற்கு இடனுண்டு.

ஒருவன் தன்னளவில் கொல்லா அறம் ஓம்பி வருவதினும், தன்னைப் போன்ற பிறரையும் அவ்வறம் ஓம்புமாறு முயல்வது அருளுடைமையாகும். அம்முயற்சியும் பிறரை வருத்தாத நெறியினதா யிருத்தல் வேண்டும். பிறர் கொலைத் தொழில் புரிவதைக் கண்ணுல் கண்டுஞ் செவியால் கேட்டுங் கொல்லா நோன்பி என்பவன் வாளா கிடப்பானுயின், அவன் அந்நோன்பை ஒழுங்குபெறக் கொண்டவனுகான். ஒருமுறையில் கொலைக்கு அவனுந் துணை போனவனுவன். கொலைஞனைத் திருத்துங் கடன் இந்தக் கொல்லாதானைப் பொறுத்து நிற்கிறது. கொலைஞரை எவ்வாறு திருத்துவது? அஹிம்சா தர்மியின் இயல்பு பிறரைத் திருத்தத்

தான் வருந்துவது. காந்தியடிகள் கொலைஞர்மீது சீற்ற முறாது தாம் உண்ணா நோன்பு கொள்கிறார்; பிறர் மனமிரங்க (அவர் செயல் குறித்து) இவர் வருந்துகிறார். அவ்வருத்தத்தின் பொருளென்னை? இனிக் கொலைஞர் ஹிம்சையில் தலைப்படல் கூடாதென்பது. உண்ணா நோன்பிருப்போர் தாங்கேட்ட கொலைச் செய்தியால் விளைந்த பாவத்தையுந் தம் நோன்பால் கழித்தவராகிறார். இவ்வளவும் அஹிம்சையில் அடங்குதல் காண்க.

> 'எனது உண்ணாவிரதம், பிராயச்சித்தமும் தண்டனையுங் கொண்டது. பிராயச்சித்தம் என்னைப் பொறுத்தியது; தண்டனை மற்றவரை (கொலைஞரை)ப் பொறுத்தியது'

> 'அன்பால் பிறரை ஒறுத்தலுக்குத் தான் வருந்தல் வேண்டும்'

> 'எனது விரதம் கடவுளையும் என்னையும் பற்றியது'

என்று காந்தியடிகள் அருளியிருத்தலை உன்னுக.

அஹிம்சா தர்மத்தை உண்மையாகக் கடைப்பிடித்தொழுகுவோர், அறிந்தோ அறியாமலோ தாமோ தம்மைச் சார்ந்த பிறரோ நன்னெறியினின்றும் வழுவுவாராயின், உடனே தாம் வருந்தல் என்னுங் கழுவாய் தேடிக்கொள்வர். காந்தியடிகள் இத்துறையில் மிகக் கண்ணுங் கருத்துமா யிருத்தல் உலகறிந்ததொன்று. போனிக்ஸ் பள்ளியிலும், சபர்மதிப் பள்ளியிலும் பிள்ளைகளிற் சிலரும் வேறுசிலரும் ஒழுக்கத்தினின்றும் வழுக்கி வீழ்ந்ததை உணர்ந்த அடிகள், அவர்களைக் கடியாது தாம் உண்ணா நோன்பு கொண்டதும் ஈண்டுக் கருதத்தக்கது.

பிறர் பொருட்டு நோன்பி உண்ணுமை ஏற்பதால் அவர் திருந்துவரோ என்னும் ஐயம் சிலர்க்குப் பிறக்க லாம். அப்பிறர் மாற்ருரா யிருப்பின், அவர் திருதத முறல் அரிது. மாற்ருரல்லாத பிறரை ஒருவரது உண்ணு நோன்பு ஒழுங்குபடுத்துமென்பதில் ஐய மில்லை. மாற்ருருள்ளுஞ் சில நன் மனமுடையார் திருந்தினுந் திருந்துவர். இன்னேரன்ன ஐயப்பாடுகள் குறித்துக் காந்தியடிகள், அன்புடையாரைத் திருத்தவே உண்ணு நோன்பு பெரிதும் ஏற்கப்படல்வேண்டுமென் றும், ஒருவரது உரிமையை அநியாயமாகப் பிடுங்க எவ ரும் உண்ணு நோன்பைப் பயன்படுத்தலாகாதென்றும் தந்தையின் குடியை நிறுத்த மைந்தன் உண்ணுமை கொள்ளலாமென்றும், தாம் கொள்ளும் உண்ணுமை அவ்வியல்பினதென்றும், தாம் பம்பாயிலும் பர்தோலி யிலும் உண்ணுநோன்பு கொண்டது தம்மாட்டு அன்புடையார் பொருட்டே என்றும், ஜெனரல் டையர் போன்ருரைத் திருத்த அந்நோன்பைத் தாம் கொள்வ தில்லை என்றும், தன்னலம் நாடிப் பிறரை அநியாயமாகத் துன்புறுத்தும் நோக்குடன் உண்ணுமை ஏற்றல் அறமாகாதென்றும் பல இடங்களில் பேசியும் எழுதியு மிருக்கிருர். அப்பேச்சும் எழுத்தும் அஹிம்சையின் நுட்பத்தை விளக்குவன.

பழிக்குப் பழிவாங்கல், புறங்கூறல், ஆரவாரம், கொடுமொழியால் பிறரை வைதல் முதலியனவும் அஹிம்சா தர்மத்துக்கு மாறுபட்டவைகளாகும். அற நெறி நிற்போர், அவைகளைக் கடிந்தே தீர்வர். காந்தி யடிகள் பஞ்சாபில் படுகொலை நிகழ்த்திய டையர்

முதலிய அரக்கர்கட்குக் கொலைத் தண்டனை விதித்தல் கூடாதென்றும், அவர்களை வேலையினின்றும் நீக்குவதே சாலுமென்றுஞ் சொற்றதும், பம்பாயில் ஒரு கூட்டத்தில் சிலர் பெஸண்ட் அம்மையாரைப் பேசவொண்ணாதவாறு தடுத்ததும் பழித்ததும் மூர்க்கம் நிரம்பிய ஹிம்சையென்று, அவ்விழி வினையில் ஈடுபட்டவரை அஞ்சாது வெளிவருமாறு அழைத்து மேடைமீது நிறுத்தி, மன்னிப்புக் கேட்பித்ததும், வங்காளத்தில் டே என்பவரைக் கொலை செய்த சாஹாவைப்பற்றிய தீர்மானத்தைக் கடைசிமட்டும் காங்கரஸ் கூட்டத்தில் எதிர்த்து நின்றதும், 'ஆரவாரக் கோலம் நமது பலக்குறைவின் அறிகுறி' என்றும், 'கூட்டங்களில் கை தட்டலும், கூச்சலிடலும் மேல்நாட்டுப் பாடங்கள். புது முறையாகிய அஹிம்சா தர்ம ஒத்துழையாமை தோன்றியபோது, பழையமுறை ஒழிந்துபோதல் வேண்டும்' என்றும், 'மூர்க்க ஹிம்சை என்பது அடித்தலுங் கொல்லுதலு மட்டுமன்று; இன்னாச் சொல்லும் அதனுடன் சேர்கிறது' என்றுங் கூறியதும், இன்னோரன்ன பிறவும் அவரது அஹிம்சா தர்ம உறுதியைப் புலப்படுத்துகின்றன. 'நான் பிறந்த இந்தியா தேசம் மூர்க்கத்துறை நண்ணுமேல் அதையும் எதிர்க்கத் தயங்கேன்' என்று காந்தியடிகள் அருளியிருக்கிறாரெனில், ஹிம்சையில் அவர்க்குள்ள வெறுப்பையும், அஹிம்சையில் அவர்க்குள்ள விருப்பையும் சொல்லலும் வேண்டுமோ? அடிகள் தம்மளவில் கட்டுப்பட்டுக் கிடக்கும் அஹிம்சா தர்மத்தை, இந்தியா வாயிலாக, உலகுக்கு

ஹிம்சைக் கூறுகள்

உணர்த்தப் பொறுமைப்போர் - சட்டமறுப்பு - ஒத்துழை யாமை முதலிய இயக்கங்களைச் சமயம் நேர்ந்துழித் தோற்றுவித்தார். ஒத்துழையா இயக்கத்தில் அவர் கோலிய திட்டங்கள் யாவும் அஹிம்சா தர்மத்தை அடிப் படையாகக்கொண்டன. அவைகளைப்பற்றிப் பின்னர்க் கூறுவன்.

மக்களிடத்து மட்டும் அன்புகாட்டிச் சிலர் விலங்கு முதலிய உயிர்களை வதைக்கிறார். இவ்வினையும் ஹிம்சை யின்பாற்பட்டதே. தாவர முதல் மக்கள் ஈறாக உள்ள எவ்வுயிர்க்கும் உறுகண் செய்யாமையே ஜீவகாருண்யமாகும்.

**அஃறிணை உயிர்கள்**

அசோகன் காலத்தில் 'வேட்டையாடல் கூடாது' என்ற அருட்சட்டம் ஆட்சியிலிருந்தது நினைவிற்கு வரு கிறது. காந்தியடிகள் எவ்வுயிர்க்கும் மனத்தாலுந் தீங்கு செய்தலாகாது என்னுங் கொள்கையில் உறைந்து நிற்ப வர். இக்கொள்கையையொட்டி, அடிகளின் வாழ்வில் உற்ற நிகழ்ச்சிகளும், அவர் வெளியிட்டுள்ள கருத்துக் களும் பற்பல.

ஒருமுறை அடிகள் தாமூர்ந்து வந்த வண்டியில் கட் டப்பட்ட மாட்டின் கழுத்தில் குருதி கசிந்தது கண்டு, வண்டியினின்றும் இறங்கிப் போந்த வழியே திரும்பிப் புறப்பட்ட இடத்திருந்து அவ்விடம்வரை அவ்வண்டியை இழுத்துவந்து பாவங் கழித்தனரென்று கேள்வியுற் றிருக்கிறேன்.

ஆவைப்பற்றிக் காந்தியடிகள் எழுதிய கட்டுரைகள் பல. ஆன் காத்தல் ஒன்றைக் குறிப்பிடல் எல்லா உயிர் களிடத்தும் அன்பு காட்டுவதை விளக்குவதாகும். 'ஆன்

உயிர்களின் பிரதிநிதியாகக் கொள்ளப்படல் வேண்டும்.

பசு

ஆன் காப்பில் உறுதியில்லாத ஹிந்து ஹிந்து ஆகான். ஆன் காப்பு என்பது மனிதனுக்கும் விலங்குக்குமுள்ள சகோதர நேயத்தை உணர்த்துவது' என்று காந்தியடிகள் ஆவின் பெருமை பேசியிருத்தலை உன்னுக.

பசுக் கொலையைத் தடுக்க மூர்க்கவழியிலிறங்குதல் தவறென்றும், அன்பு வழிபற்றி உழைக்கவேண்டுமென்றும் காந்தியடிகள் பல இடங்களில் அறிவுறுத்தியிருக்கிறார். காந்தியடிகளின் அருளறம் அலி சகோதரர்களை ஆனிறைச்சி தின்னுதவாறு நோன்பு பூணச்செய்தது; ஓர் அரசாங்கம் பசுக்கொலை நிறுத்துஞ் சட்டஞ் செய்யவுந் துணை நின்றது. கொல்லாமை, கொல்லாமையால் வளருமன்றிக் கொலையால் வளராதென்க. மற்றுமோரிடத்தில் காந்தியடிகள் வேட்டையாடலை மறுத்து, 'விலங்குகள் வாய்திறந்து பேசும் பேறு பெற்றிருப்பின், ஜீவகாருண்யத்தைச் சிதைக்கும் மனிதன்மீது வழக்குத் தொடுக்கும்' என்று கூறியிருத்தல் ஈண்டு நோக்கற்பாலது. எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யலாகாதென்பதே காந்தியடிகளின் கருத்து.

வேள்வியில் ஆடு மாடு முதலிய விலங்குகளைக் கொல்வதும், கோயில்களில் அவைகளை வெட்டுவதும் காந்தியடிகட்குப் பிடிப்பதில்லை. அவ்விரண்டையும்பற்றி அடிகள் அருளியுள்ள செம்மொழிகளை நோக்குக.

பலி

'வேள்வி (யக்ஞம்) அழகும் பொருளும் பொதிந்த ஒரு சொல். அறிவும், அநுபவமும், காலமும் முதிர்ந்து

வளர வளர அதன் பொருளும் வளர்ந்து வளர்ந்து மாறுதலடையும். யக்ஞம் என்பதற்கு வழிபாடு என்பது சொற்பொருள். அதனின்றும் தியாகம் (தன்னை அதாவது முனைப்பைப் பலியிடுதல்) ஏற்படுகிறது. இப்பொருளில் எத்தியாகச் செயலும், எத்தொண்டும் யக்ஞத்தின்பாற்படும். * * * '

'மன்பதை, யக்ஞமென்னுந் தியாகத்தையொட்டி நிலவுகிறது. சாத்திரங்களில் சொல்லபபட்ட எல்லா வேள்விகளையும் உயிர்ப்பித்தல் கூடாது. வேள்வியென்னும் பெயரால் வழங்கப்பெறுஞ் சில சடங்குகட்காகப் பரிந்து போரிடலாகாது. இப்பொழுது சில சடங்குகட்குச் சொல்லப் படும் பொருள், வேதகாலத்தில் ஆட்சி பெற்றிருந்ததா என்று யான் ஐயுறுகிறேன். ஐயத்துக்கு இடமில்லையெனில், அவை ஆராய்ச்சி வழியானும், சீலத்தின் வழியானுஞ் செய்யப் பெறுஞ் சோதனை முன்னே நிற்கமாட்டா.

வேத வித்துக்கள் சிலர், நம் முன்னோர் நரபலி செய்தனர் என்று சொல்கிறார். இப்பொழுது அது முடியுமா? அசுவமேத யாகம் என்பது எள்ளுந்தகையது.'

'* * * கோயிலுக்குள் (கல்கத்தாவிலுள்ள காளி கோயிலுக்குள்) நுழைந்தோம். இரத்த ஆறுகள் ஓடிவந்தன. ஆண்டு நிற்கவும் மனங் கொள்ளவில்லை. அக்காட்சி எனக்கு எரியூட்டிற்று; அமைதி குலைத்தது. * * * ஆட்டுக் குட்டியின் உயிர் மனிதன் உயிரைவிட எவ்வாற்றானுந் தாழ்ந்ததன்று என்பது எனது உட்கிடக்கை. மனித உடலின் பொருட்டு ஆட்டுக் குட்டியின் உயிரைவாங்க யான் இசையேன். * * * * ஏழை உயிர்களைக் காக்கவும், கோயில்களைத் தூய்மைப்படுத்தவும் தெய்வத் திருவருள் கொழிக்கும் ஆற்றல் வாய்ந்த ஓர் ஆண்மகனோ பெண் மகளோ இவ்வுலகில் தோன்றல்வேண்டுமென்று யான் தவங் கிடக்கிறேன்.'

மீராபாய் வேண்டுகோட்கு இணங்கி இராப்போதில் இளைஞர் சிலர், பசுந்தழை சிறிது பறித்துவருதற்குப் பதிலாகத் தழைகளைக் கொத்துக் கொத்தாகப் பறித்து வந்தனர். அவை காந்தியடிகட்குக் காட்டப்பட்டன.

மரம்

அப்பொழுது காந்தியடிகளால் சில மணி மொழிகள் அருளப்பட்டன. அவற்றில் இரண்டொன்றை ஈண்டு அகழ்ந்தெடுத்துக் காட்டுகிறேன். அவற்றை ஊன்றி நோக்குக.

> 'மரங்களும் நம்மைப்போல உயிருடையனவே. அவை நம்மைப்போலவே வளர்கின்றன; முசகின்றன; உண்கின்றன; பருகுகின்றன; உறங்குகின்றன. அவை இரவில் ஓய்வுபெற்று உறங்கும்போது அவற்றின் தழைகளைப பறித்தல் இழிவு. இவ்வளவு தழை எற்றுக்கு? நேற்று ஏழை மலர்களைப்பற்றி யான் சொற்றதை நீங்கள் கேட்டிருப்பீர்களென்று நம்புகிறேன். என்மீது தூவவும், என் கழுத்தில் மாலையாக அணியவும் மெல்லிய மலர்களை மக்கள் பறிப்பது எனக்குத் துன்பூட்டுகிறது. மரம் உறங்கும் போது - அதன் இலைகள் சுருண்டு கிடக்கும்போது - அது துன்புற, அதன் தழைகளைப் பறிக்குமாறு சிலரை அனுப்பியது கருத்தற்றதாகும். அஃறிணை உயிர்களிடத்தும் நாம் அன்பு காட்டுதல் வேண்டும். * * * '

காந்தியடிகள் அறிவுறுத்தும் அஹிம்சா தர்மத்தைப் பற்றி உலகிடைச் சில ஐயப்பாடுகள் தோன்றாமலில்லை. ஐயப்பாடுகள் தோன்றுதல் நல்லது. அத்தோற்றம்,

சில ஐயப்பாடுகள்

ஆழ்ந்த சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும் அறிவு விளக்கத்துக்கும் ஊற்றாகும். அஹிம்சையைக் குறித்து அடிகளைச் சில நன்மக்களுங் கேட்டிருக்கிறார்; சில வம்பரும்

கடாவியிருக்கிறார். அவ்வினாக்கட்கு அடிகள் இறுத்த விடைகள் பலபடக் கிடக்கின்றன. ஒன்றிரண்டை ஈண்டுச் சுருங்கக் குறித்தல் நலம்.

அஹிம்சை, வலிமை இல்லாக் கோழைகட்கு உரிய தன்றிச் செங்குருதியோடும் ஆண்டகையார்க்கு உரிய தன்று என்று சிலர் சொல்வதுண்டு. இவ்வாறு சொல்வோர் அஹிம்சையின் நுட்பத்தை உணராதாரென்க. அஹிம் சைக்குப் பேராற்றல் தேவை; அஞ்சாமை தேவை; உண்மை தேவை. கருவிகொண்டு பிறரைத் தாக்க முயல் வோன் ஆற்றல் உடையவனா இல்லாதவனா என்பது உன் னற்பாலது. உண்மையில் அவனுக்கு ஆற்றலிருக்குமேல் அவன் அச்சத்தால் கருவி தாங்கவேண்டுவதில்லை. கம்பு களையும் கத்திகளையும் குண்டர்களையும் நாடுவது கோழமையா அஞ்சாமையா என்பதை அன்பர்கள் பகுத் துணர்வார்களாக.

'அஹிம்சை அஞ்சாமையின் உச்சியில் நிலவுவது. ஹிம்சையில் தேர்ச்சி பெற்றவர்க்கு அஹிம்சையின் விழுப் பத்தை எளிதில் அறிவுறுத்தி நிறுவிக் காட்டல் என்றால் இயலும். பல்லாண்டு யான் கோழையாயிருந்தபோது மூர்க்க நெறியைக் கடைப்பிடித்திருந்தேன்; எனது கோழமையை உதிர்க்கத் தொடங்கியபோதே, அஹிம்சையையும் போற்றி மதிக்கத் துவங்கினேன்'

'இதனை (அஹிம்சையை) இந்தியாவின்முன் வலிமை யில்லாதார் கருவியாக அல்லாமல் வலியார் கருவியாகக் கிடத்துகிறேன்'

'வலிமை இல்லார்க்கு இவ்வுலகில் இடமில்லை என்று நிருபர் சொல்கிறார். உடல் உரம் இன்மையையே அவர் குறிக் கிறாரென்று நான் நினைக்கிறேன். அங்ஙனமாயின், அவர்

கூற்று உயிராற்றதாகும். மனிதனிலும் உடல் வலிமை வாய்ந்த எத்துணை அஃறிணை உயிர்களிருக்கின்றன? அவைக ளிருபப மனிதனும் உலகில் வாழ்ந்து வருகிருன். எத்துணையோ உடல் உரமுடைய சாதிகள் இறந்துபட்டன; பட்டும் வருகின்றன. ஆதலால், மனிதனைப்பொறுத்தவரை உயிர் ஆற்றல் இல்லாதார்க்கு உலகில் இடனில்லை என்று கொள்ளலாம்'

'அஹிம்சை நம்மைக் கோழைகளாக்கவில்லை என்பதும், அவ்வறத்தை நாம் விடுத்ததே நமது கோழமைக்குக் காரணம் என்பதும் எனது கருத்து'

'அஹிம்சை, கோழை பற்றி நடக்கத்தக்க நெறி அன்று. அது மரணத்துக்கு அஞ்சாதான் பற்றி நடக்கு தகுதி வாய்ந் தது. கையில் வாள் தாங்காதவன் அச்சம் இல்லாதவனே. ஆனால் அவனிலும் அச்சமில்லாத ஆண்டகையாளன் எவன்? தற்காப்புக்கென்று சிறு விரலையும் உயர்த்தாது மரணத்தை ஏற்பவன். வழிமறிக் கள்வர்க்கு அஞ்சித் தனது அரிசிமூட்டை களை அவர்க்குத் தருவோன் கோழை. அவன் அஹிம்சா தர்மத் தொண்டனாகான். அவன் அஹிம்சையைப்பற்றிய உணர்வில் லாதவன்; அதுபற்றி ஒன்றுந் தெரியாதவன். பெண் இழிவு படுதலைப பார்த்தும், மூர்க்கா அடிக்கு அஞ்சி ஓடுவோன் ஆண்மை யுடையவனல்லன்; அதற்கு மாறுபட்டவன். அவன் கணவனா யிருக்கவோ, தந்தையாயிருக்கவோ, சகோதரனா யிருக்கவோ தகுதியில்லாதவன். * * * '

எனவரூஉங் காந்திபடிகளின் அருளுரைகளை நோக்குக.

ஹிம்சையே மனிதன் இயற்கை யென்றும், அஹிம்சை அவனது இயற்கை அன்றென்றும், பிரிட் டிஷ் பொருள்களை விலக்குதலும் ஹிம்சையின் பாற் பட்டதென்றும், மூர்க்கத்தினின்றும் மனிதன் முற்

றும் விடுதலை யடைதல் அரிதென்றும், மனிதன் முழு அஹிம்சையை வாழ்வில் நிகழ்த்தல் இயலா தென்றும் சிலர் அடிகளை நேரிலும் முடங்கல் வாயிலாகவும் கேட்டிருக்கிறார். இவைகட்கு அடிகள் - மனித உலகையும் விலங்கு உலகையும் ஒரே நிலையில் கொண்டால் பல பொதுப்பட இயற்கையின் கீழ் வருமென்றும், இரண்டும் வெவ்வேறுலகினவாயின் எல்லாம் ஒரேவித இயற்கையின்கீழ் வரமாட்டா வென்றும், மனிதன் வளர்ச்சியில் சிறந்து விளங்கு கிறானென்றும், அவ்வியல்பு விலங்கின்மாட் டில்லை யென்றும், மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிற தென்றும், மனிதன் விலங்கைப்போல வெறும் உண்டு கழித்தலே வாழ்வென்று கருதுவதில்லையென்றும், மனி தன் கடவுள் உண்மை காணவும், கடவுளைத் தொழவும், கடவுளை அடையவும் பகுத்தறிவைப் பயன்படுத்து கிறானென்றும், மனிதன் விலங்கினும் பல வழியில் மேம்பட்டவன் என்பதை நாம் உணர்வோமானால் மனித இயல்புக்கும் விலங்கியல்புக்கும் வேற்றுமை புலனாகுமென்றும், அவ்வேற்றுமை அஹிம்சை மனித னுக்கு உரிய இயல்பென்பதை உணர்த்துமென்றும், மனி தன் விலங்கியல்பினின்றும் விடுதலை யடைதல் மனித இயல்பென்றும், அவ்விடுதலை மனித இயல்பைக் கடந்து நிற்பதன்றென்றும், மனிதன் இயல்பே ஹிம்சையென்ப தாயின் இவ்வுலகம் ஒரு நொடியில் அழிந்துபடுமென் றும், உலகம் போலீஸ் முதலிய கட்டுப்பாடின்றி அமைதியாக நிலவுகிறதென்றும், சில கயவர் கல்வி யறிவில்லாதவர்க்குச் சினம் ஊட்டும் வேளையில் அவர்

ஹிம்சையில் இறங்குகிறாரென்றும், கொடுஞ் செயல் புரிந்த சில நேரத்துக்கெல்லாம் அவர் தமக்கியல்பாக வுள்ள அமைதியில் நிலைத்துவிடுகிறாரென்றும், அவர் அமைதி குலைவிற்குக் காரணம் மற்றவரது தீ மூட்டலென்றும், அத்தீமை அகன்றதும் மருண்டு கனன்றெழுந்தவர் பழையபடி மக்களாகிறாரென்றும், பிரிட்டிஷார் துணிகளை விலக்குமாறு தாம் ஒருபோதாவது சொன்னதில்லை யென்றும், பொதுப்பட அந்நியத் துணிகளை விலக்கவேண்டுமென்று தாம் சொல்லிவருதல் உண்மையென்றும், ஆங்கிலேயரிடம் தமக்கு வெறுப்பாதல் பகைமையாதல் இல்லையென்றும் - இறுத்த விடைகள் 'யங் இந்தியா'வில் பலபடக் கிடக்கின்றன.

அடிகள் அஹிம்சா தர்மத்தை எவ்வளவு தூரம் பற்றி ஒழுகுகிறார் என்பதற்கு ஈண்டொன்றை எடுத்துக் காட்டுகிறேன். அடிகள் முன்னர்க் குழந்தைகட்கு இராஜ வாழ்த்துச் சொல்லிக் கொடுப்பது வழக்கம். அடிகள் அஹிம்சையின் நுட்பமுணர்ந்த பின்னை அவ்வாழ்த்தின் சில கூறுகள் அவர்க்குப் பிடிக்கவில்லை. அக்கூறுகள் வருமாறு :—'அவள் (அரசியின்) பகைவரைச் சிதறடிக்க ; அவரை வீழ்த்துக ; அவர் அரசியலைக் குலைக்க ; அவர் வஞ்சச் சூழ்ச்சிகளை நொறுக்குக.'

**இராஜ வாழ்த்தும் அஹிம்சையும்**

இவ்வுரைகளை அடிகளின் அருள்நெஞ்சம் ஏற்க ஒருப்படவில்லை. இதுகுறித்து அடிகள், 'இம்மொழிகள் எனக்கு விருப்பூட்டவில்லை. எனது உட்கிடக்கையை டாக்டர் பூத் என்பவருக்குத் தெரிவித்தேன். அஹிம்சையில் நம்பிக்கையுடைய ஒருவர்க்கு இப்பகுதி

யைப் பாட விருப்பமெழாதென்பதை அவர் ஒப்புக் கொண்டார். 'ஒன்னலர்' எங்ஙனம் 'வஞ்சகர்' ஆவர்? பகைவர் என்பதால் அவர் தவறு செய்தற்குக் கடப்பாடுடையவராவரோ? ஆண்டவனிடத்திருந்து நாம் நியாயம் மட்டும் வேண்டலாம். டாக்டர் பூத் என்னுடன் முற்றும் உடன்பட்டுத் தமது திருச்சபைக்கெனப் புதிய முறையில் ஓர் இராஜவாழ்த்து யாத்துக்கொண்டனர்' என்று தமது வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். இக்குறிப்பால் அடிகள் நெஞ்சம் அருளறத்தில் எவ்வளவு தூரம் படிந்திருக்கிறதென்பது புலனாகும்.

அடிகள் அறிவுறுத்திவரூஉம் அஹிம்சா தர்மத்தினின்றும அவரே வழுக்கி வீழ்ந்ததாகச் சிலரால் கருதத்தக்க நிகழ்ச்சிகள் அவர் வாழ்வில் உற்றுள்ளன. அவைகளில் நான்கைச் சிறப்பாக ஈண்டுக் குறிக்கிறேன்.

பழிகள்

ஒன்று வெறி நாய்களைக் கொல்லுமாறு அடிகள் ஆணை தந்தது; இன்னொன்று ஆசிரமத்தில் நோய்வாய்ப்பட்ட ஒரு கன்றைக் கொல்லுவித்தது; மற்றொன்று கெய்ரா ஜில்லாவில் ஐரோப்பாப் பெரும் போர்க்கு ஆள் சேர்த்தது; வேறொன்று ஒத்துழையா இயக்கத்தின் போது அந்நியத் துணிகளைத் தீக்கிரையாக்கியது. இவைகளைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் பல உண்டு. அக்கடலில் படிய என்னுள்ளம் ஒருப்படவில்லை.

இச்செயல்களைக் கொண்டு காந்தியடிகளின் நிலையை அளந்து கூறல் அறிவுடைமையாகாது. காந்தியடிகளின் உள் நோக்கத்தையே கருதல் வேண்டும். இவ்வினைகளை அடிகள் அருள் கனிந்த நெஞ்சங்கொண்டு (அஹிம்சா

தர்ம நோக்குடன்) நிகழ்த்தினரா அல்லது வன்கண் படிந்த உளங்கொண்டு (ஹிம்ஸை நோக்குடன்) நிகழ்த்தினரா என்பதை முதலாவது ஆராய்ந்துணரல் வேண்டும். உட்கிடக்கை, காலம், நிலை முதலியவற்றையோராது வெறுஞ் சொல்லையும் புற நிகழ்ச்சியையும் மட்டுங் கொண்டு ஒருவர்மீது அடாதபழி சுமத்துவது கூடாதென்பது அடியேன் கருத்து. இதனால் நடுநிலை பிறழ்ந்து அடிகள்மீதுள்ள அன்பால் அவர்தஞ் செயலைத் தாங்கிச் சிறியேன் பேசுவதாக எவருங் கருதவேண்டுவதில்லை. வருணாச்சிரம தர்மத்தில் அடிகளுடன் அடியேன் சிறிது மாறுபடுதலைப் 'பிறப்பு' என்னும் அதிகாரத்தில் விளக்கி யிருத்தலை அன்பர்கள் நோக்குவார்களாக.

காந்தியடிகள் அடிக்கடி தாம் மனிதரென்றும், மனிதன் குற்றத்தினின்றும் எளிதில் விடுதலை யடைவது அரிதென்றும், தமக்கு இன்னுந் துவித பாவனை யிருக்கிறதென்றும் பன்முறை எழுதி யிருத்தலும் ஈண்டுக் கருதத்தக்கது. தாமிழைத்தது குற்றம் என்று பிறராலோ பின்னை தாமாகவோ உணரப் பெற்றதும், அடிகள் அதுகுறித்து வருந்திக் கழுவாய் தேடுவது வழக்கம். மேற்போந்த நிகழ்ச்சிகள் அறத்தின்பாற்பட்டனவாகவே இன்னும் அடிகட்குத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவைகளெல்லாமோ சிலவோ அல்லது ஒன்றோ பிழைபாடாகத் தோன்றப்பெறும் அறிஞரும் இருக்கலாம்.

வெறி நாய்க் கொலையைப்பற்றி அடிகள் 'யங் இந்தியா'வில் எழுதிய கட்டுரைகள் பல. அவற்றைப் படிப்படியே ஆய ஆயப் பல நுட்பங்கள் பெறலாம்.

வெறி நாய்கட்கெனப் பாதுகாப்புக்கள் இன்னின்ன வழிகளில் செய்ய வேண்டுமென்று அடிகள் முறைகளைத் தொகுத்துக் காட்டி யிருக்கிறார். வெறி நாய்கட்கென ஒன்றுஞ் செய்ய இயலாத இடத்தில்-அவற்றால் மனிதர் கடியுண்டு இறக்கும் இடத்தில் - அவற்றைக் கொல்லலாமென்பது அடிகள் கருத்து. விரிவு 'யங் இந்தியா'வில் பார்க்க.

வெறி நாய்கள் அறிவிழந்து, காப்பின்றி, உணவின்றி, அடியுதையுண்டு, நோய்வாய்ப்பட்டு, மனிதர்க்குத் தீங்கிழைத்துக் கொண்டிருப்பதினும், மாண்டு விடுதல் சிறப்பு என்று காந்தியடிகள் உள்ளத்தெழுந்த இரக்கமே - அஹிம்சையே-அந்நாய்களைக் கொல்லுவிக்குமாறு அவரைத் தூண்டியிருக்குமென்று யான் உணர்கிறேன். அடிகள் மனோநிலைமீது கருத்துச் செலுத்தாது, செய்மையிலிருந்து நாய்க்கொலையைமட்டும் யான் நினைப்பனேல், எனதுள்ளமும் வருந்துவதாகும். சிறுத்தொண்டர் தாம் பெற்ற பிள்ளையை அறுக்கத் துணிந்த காலம் - நிலை - இன்றியமையாமை முதலியவற்றை உன்னாது, இப்பொழுது அச்செயலை மட்டும் நினைந்து பார்ப்பின், அத்தொண்டர் செயல் இரக்கமற்ற தொன்றாகவே தோன்றும். அவர் மனோநிலையில் சிறிது ஊன்றி நின்று, ஆய்ந்தால் ஒருவித உண்மை சிலர்க்கு விளங்கும். 'காந்தி அஹிம்சை அஹிம்சை என்று ஊருக்குச் சொல்லித் தாம் நாய்க்கொலை செய்யத் துணை நின்றார்' என்று ஏசித் திரிவோரைப்பற்றிய நினைவும் ஈண்டு வேண்டுவதில்லை.

சபர்மதி ஆசிரமத்தில் வருந்திக்கொண்டிருந்த ஓர் ஆன் கன்றுக்கு மருத்துவரைக் கொண்டு ஊசியின்

வாயிலாக நஞ்சிறக்கி அதைக் கொல்வித்ததைப்பற்றியும் ஈண்டு விரிவுரை எற்றுக்கு ? மேலே கூறியதையே திருப்பித் திருப்பி ஏன் கூறிக்கொண்டிருத்தல்வேண்டும் ? ஆன் கன்று எந்நிலையிலிருந்தது ? சேய்மையிலுள்ளவர்க்கு என் தெரியும் ? அக்கன்று படுக்கையில் கிடநதது. நோயின் கொடுமையால் அது பட்டபாடு கடவுளுக்கே தெரியும். அதன் உறுப்புக்களில் புழுக்கள் குடில் அமைத்தன. அஃது உயிருடன் மண்ணுக்கு இரையாகவேண்டிய நிலையுற்றது. அந்நிலைகாணும் அருள்நெஞ்சம் அத்துன்பம் பொறுக்குமோ ? அடிகள் அக்கன்றை உய்விக்கப் பலவழியிலும் முயன்றார் ; எத்துணையோ மருத்துவரை அழைத்துக் காட்டினார். எம்முயற்சியும் பயன் அளிக்கவில்லை. கன்றின் துன்பத்தை எங்ஙனந் தீர்ப்பது ? துன்பந் தீர்க்குந் துறையில் அடிகள் இறங்கினார். அத்துறை நண்ணுதற்கு அடிப்படையா யிருந்ததென்னை ? அழுக்காறன்று ; வெகுளியன்று ; வெறுப்பன்று ; வன்கணன்று—இரக்கம் இரக்கமே.

மற்ற இரண்டு நிகழ்ச்சிகள் அஹிம்சைக்கு மாறுபட்டன என்று அறிஞர் ஆண்ட்ரூஸால் எடுத்துக் காட்டப்பட்டன. அவ்விரண்டுள் ஒன்றாகிய கெய்ரா ஜில்லாவில் ஐரோப்பா யுத்தத்துக்கு ஆள் சேர்த்ததைப் பற்றி இதுகாறுங் காந்தியடிகள் செவ்வனிறை இறுத்தாரென்று சொல்வதற்கில்லை.

தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் போருக்குத் தாம் துணை நின்றதைப்பற்றி அடிகள் ஒருவித சமாதானஞ் சொல்வது வழக்கம். போருக்குத் தாம் துணை நிற்க ஒருப்படவில்லை என்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய

ஆட்சியால் சில நலன் உண்டென்று தாம் நம்புவதாகவும், அவ்வாட்சிக்கு ஊறு நேர்ந்தால் தமது அஹிம்சா தர்மப் பேச்சுக்கே இடமில்லாமற் போகுமென்றும், அவ்வாட்சிக்குத் தீங்கு நேராதவாறு காப்பின் அஹிம்சா தர்மப் பிரசாரத்துக்கு இடமிருக்குமென்றுங் கருதித் தாம் துணை நின்றதாகக் காந்தியடிகள் சொல்வதுண்டு.

நான்காவதற்கு அடிகள், 'பொதுமக்கள் உள்ளத்தில் பகைமைக் கனல் மூண்டு கொண்டிருக்கிறது. மனிதர் மீதுள்ள அதைப் பொருள்மீது மாற்றுகிறேன்' என்று விடையிறுத்தார். இவ்விடை அறிஞர் ஆண்ட்ரூஸுக்கும் கவியரசர் தாகூருக்கும் பிடிக்கவில்லை.

காந்தியடிகள் எந்நிலையிலிருந்து இவ்வினைகளை ஆற்றினரோ தெரியவில்லை. அவை தவறு என்று அடிகளுக்குத் தோன்றியிருப்பின், அவர் உடனே கழுவாய் தேடியிருப்பர். அத்துறையில் அவர் இறங்காமையால் அவர் மனச்சான்றுக்கு அவ்வினைகள் கொடியனவாகத் தோன்றவில்லை என்பது இனிது விளங்குகிறது. 'யானைக்கும் அடிவழுக்கும்' என்று சொல்வோருமுளர்.

'என்பொருட்டு நாட்டில் மூர்க்க சக்தி கிளம்பியதெனச் சிறையில் செவியுறுவனேல், என் தலையைச் சுவரில் முட்டி உயிர் துறப்பேன்' என்பது மகாத்மாவின் மெய்ம்மொழி. அஹிம்சா தர்மம் தாம் வெளியிலில்லா வேளையிலும் நாட்டில்வளரவேண்டுமென்னுங் கருத்தோடு உறைந்தவர் நங்காந்தியடிகள். அடிகளின் மனோநிலையைக் கருதாது, பிறவற்றைக் கருதி, அவர்மீது பழி சுமத்தலாகாது. அவர் செயலைப்பற்றி அறிஞரிடைக் கருத்து வேற்றுமை நிலவல் இயல்பு. புறச்செயலினும் மேம்பட்டு

நிற்பது உள் நோக்கம். எல்லாருங் கொள்ளத்தக்க ஒன்றை நிகழ்த்தல் இவ்வுலகில் எவராலும் இயலாது.

அஹிம்சையென்னுஞ் சொல்லைமட்டுங் கொண்டு அதைத் தீமைக்குப் பயன்படுத்தல் கூடாதென்பது அடிகளின் கொள்கை. எடுத்துக் காட்டாக ஈண்டொன்று குறிக்கிறேன். சோம்பர் சிலர், சந்நியாசிகள்-சாமிகள் - என்னும் பெயரால் பிச்சை எடுத்தே வாழ்க்கை நடாத்துகிறார். இவர்க்கு உதவி செய்வது அறமா? மறமா?

**அஹிம்சையும் பிச்சையும்**

இதுகுறித்துக் காந்தியடிகள் கொண்டுள்ள கருத்துப் பொன்னேபோல் போற்றத்தக்கது. 'நேரிய முறையில் உழைத்து உண்ணக்கூடிய நல்லுடலுடையார்க்கு அன்னதானஞ் செய்வதை எனது அஹிம்சா தர்மம் ஏற்றுக்கொள்ளாது. எனக்கு அதிகாரமிருந்தால் ஒவ்வொரு சதாவர்த்தியையும் நிறுத்திவிடுவேன்' என்று அடிகள் முழங்கியிருத்தல் காண்க.

காந்தியடிகள் தங்கருத்துக்கு இயைந்தவண்ணம் அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வருகிறார். அதனால் அவர்க்கு ஆத்மசக்தி நாளுக்குநாள் ஓங்கி வளர்ந்து வருகிறது. அருள் வழியில் நிற்போரைப் பிற கொடிய உயிர்களும் தீங்கு செய்யமாட்டா. முழு அருள் விளங்கப்பெற்ற பெரியோரைக் கொடிய விலங்கு பாம்பு முதலியனவும் வழிபடுமென்று ஆன்றோர் பலர் கூறிப்போந்தனர். போனிக்ஸிலும் சபர்மதியிலும் ஆசிரமங்கள் கட்டப்பட்டபோது, பெரிதும் பாம்புகள் மலிந்த இடங்களில் வாழ்தல் நேர்ந்ததென்றும், பாம்பு என்னும் அச்சத்துட

**நச்சுயிர்கள்**

னுஞ் சிலர் வதிந்தனரென்றும், பாம்பு முதலிய நச்சுயிர்களையுங் கொல்வதில்லை என்ற பொது விதிக்குக் கட்டுப்பட்டே நண்பர்கள் வாழ்வு நடாத்தினர்களென்றும், பாம்புக்கடியால் எவரும் இறக்க நேர்ந்ததில்லையென்றுங் காந்தியடிகள் தமது வரலாற்றில் குறிப்பிட்டிருத்தலை ஓர்க.

காந்தியடிகள் அஹிம்சையைப் பற்றி எழுதிய உரைகளும் பொழிந்த சொற்களும் பலப்பல. அவற்றுள் சில வருமாறு :—

'அஹிம்சையாவது அயராத அன்பு. அதுவே செந்நெறி. அதன் வாயிலாகவே மனித சமூகத்தைக் காத்தல் இயலும்.'

'அஹிம்சை கோழையின் ஆயுதமன்று; அது வீரனின் ஆயுதம். அஹிம்சையில் உறுதி யுடையவன் ஆண்டவனிடத்தில் உறுதியுடையவன்.'

'கொள்ளையாலும் கொலையாலும் ஒரு நலனும் விளையாது. கொள்ளையுங் கொலையும் இந்தியாவிற்கு முற்றும் அந்நியமானவை. அவை இங்கே வேர் கொள்ள மாட்டா. அவை நிலை பேறாக நிற்கவும் மாட்டா. கொலைகளால் நலம் விளைந்தது என்று சரித்திரங்கள் நிரூபிக்கவில்லை. இத்தேசத்தின் மதம் ஹிந்துமதம். அஃது உயிர்க்கொலை செய்தலாகிய ஹிம்சையினின்றும் விலகி நிற்பது. எல்லா மதங்களின் மூலக்கொள்கையும் அதுவே. தீங்கிழைப்போனையும் வெறுக்குமாறு ஹிந்துமதஞ் சொல்லவில்லை. அவனைக் கொல்ல எவருக்கும் உரிமையில்லை என்று அம்மதம் அறிவுறுத்துகிறது.'

'* * * இவ்வியக்கம் (ஒத்துழையாமை), எவர்மீதும் பகைமை கொண்டதன்று என்று பதினாயிரம் முறை

திருப்பித் திருப்பிச் சொல்வேன்; ஆனால் இப்போதைய இந்திய அரசாங்கத்தை இயக்கும் முறையைத் தகர்க்குங் குறியுடையது.'

'நான் தாக்கி வருவது ஆட்சி முறையையே. ஆங்கில மக்களுடன் எனக்குச் சண்டையில்லை.'

'தடியையோ, கல்லையோ உபயோகிக்க மக்களை விடுவதைப் பார்க்கிலும் என் தலையை உடைக்க அவர்கட்கு இடந்தருவது சிறப்பு. மனிதன்பாலுள்ள தெய்விகத்தைச் செருக்குங் கொடிய பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கால நாகரிகத்தினின்றும் பயில வேண்டுவது ஒன்றுமில்லை.'

'அராஜகனது தேசபக்தியைக் குறித்து அவனைப் போற்றுகிறேன்; அவன் தேசத்தின் பொருட்டு உயிர் துறக்க அச்சமின்றி விரும்புவதைக் குறித்தும் அவனைப் போற்றுகிறேன். ஆனால் அவனை நோக்கி, 'கொலை போற்றுந் தகையதா என்று கேட்கிறேன்.' (கொலை கூடாது என்பது கருத்து.)'

'அரசியல் வாழ்வினின்றும் இந்நாளில் இவ்விதந் துறக்கப் போவதாக யான் எவரிடமுங் கூறியதில்லை. என்னுடைய அறிவுறுத்தலை (அஹிம்சா தர்ம போதனையை) இந்தியா நெகிழ விடுத்து, இரத்தப் புரட்சியை விரும்புமேல், அதனின்றும் யான் விலகி விடுவேன் என்று வலியுறுத்திச் சொல்கிறேன். இரத்தப் புரட்சி இயக்கத்தில் யான் கலக்க மாட்டேன். ஏனெனில் அதனால் இந்தியாவிற்கோ உலகிற்கோ நலனுண்டு என்று யான் நம்பாமை.'

'உண்மையும் அஞ்சாமையும் அஹிம்சையின் தற்கிழமைப் பொருள்கள்.'

'அஹிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்திற் சிறந்த வீரரின் அறம்.'

'இறக்க அஞ்சுகிறவன் மஹாவீரரையோ புத்தரையோ வேதங்களையோ பின்பற்றுபவனல்லன். * * * * *

* * * மஹா வீரரும் புத்தரும் போர் வீரர். டால்ஸ்டாயும் அவ்வினத்தவரே.'

'இவ்வாரம், தூய்மைக்கும் தற்சோதனைக்கும் தியாகத்துக்கும் ஒழுங்குக்கும் உரிய நாட்டு வாரமாயிருத்தல் வேண்டும். மனக் கசப்பாதல் இன்னாச் சொல்லாதல் இருத்தல் கூடாது. ஆனால் அஞ்சாமையும் உறுதியும் முற்றுமிருத்தல் வேண்டும். * * * உண்மையையும் அஹிம்சையையும் நம்புகிறவர்க்கு இவ்வாரம் சத்தியாக்கிரக வாரமாகும்.'

'மன மொழி மெய்யாகிய மூன்றிலும் ஹிம்சை தலை காட்டலாகாது'.

'தீமையை மூர்க்க சக்தியால் வெல்ல நமக்கு உரிமையில்லை. தீமையினின்றும் நாம் விலகித் தீமையை எதிர்த்தல்வேண்டும். ஒருவன் தனது கொடுமையை உணர்ந்து கழிவிரக்கங் கொள்வானாயின், அவனை அன்பால் ஏற்றுக் கொள்ளல்வேண்டும். பிறரைத் தாக்குந் தாக்கிலும் அன்பிருத்தல் வேண்டும்.'

'ஆங்கிலேயர்க்கும் இந்தியர்க்கும் இடையில் மனக் கசப்புறுத்தாது, அமைதியும் தூய்மையுங் கொண்ட முறையில் நியாயம் பெறுதல் கூடும்'

'தாம் சிறுபான்மையோரா யிருந்தும் தம் வசத்திலுள்ள போர்க்கருவிகளால் தாம் உயிர்காப்புப் பெறவில்லை யென்றும், தம்முள் பிறழ்ந்து நடப்போருடைய உயிருக்கும் இந்தியாவுக்கும் உறுகண் செய்ய மறுப்பதால் தாம் உயிர காப்புப பெற்றிருபபதாகவும் இங்கிலீஷ்காரர் உணரும் அந்நொடிப் பொழுதில் இந்தியாவைப் பற்றி அவர்பால் என்ன மாறுதல் நிகழும் என்றும், அதுபோழ்து இந்தியாவிலுள்ள ஆயுதங்களெல்லாம் துருப்பிடிக்குமென்றுஞ் சொல்லலும் வேண்டுமோ?''

'அஹிம்சையைப் பற்றி எனது கொள்கையில் எவ்வித மாறுதலும் நிகழ்த்தவில்லை என்று ஸர் நாராயணனுக்கு உறுதி கூறுகிறேன். உயிர்களைப் படைக்கும் உரிமை

பெறாத மனிதன், எந்தச் சிறு உயிரையும் அழிக்கும் உரிமை பெற்றிருக்கிறானில்லை. * * * * * அஹிம்ஸை யாவது பிறர்க்குத் தீங்கு செய்யாதிருப்பது மாத்திரமன்று என்பதையும், தீங்கிழைப்போனுக்கு நலம்புரியும் அன்பை யும் அஃது உடன்கொண்டிருப்பது என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். தீங்கிழைப்போனுக்கு நலம் புரிதல் என்பது அவனைத் தீச்செயல் நிகழ்த்துமாறு உதவி புரித லன்று ; அஹிம்சையின் அடிப்படையான அன்பால் அவனோடு கலந்துழைப்பதை நிறுத்திக்கொள்வது. உதவி மறுத்தலால் என்ன விளையினும் விளைக. என் குமாரன் மானக்கேடான வாழ்வு நடாத்தி வருவானாயின், அவன் அவ்வாழ்வை நடாத்திக் கொண்டிருக்க யான் துணை புரியா திருக்கலாம். அவன்பாலுள்ள எனது அன்பு அவனுக்கு யான் செய்துவரும் உதவியை மறுக்குமாறு சொல்கிறது. அதனால் மரணம் நேரினும் நேரலாம். அவன் மனந்திரும்பி என்பால் அணையின், அதே அன்பு அவனைத் தோளில் அணைக்கச் செய்யும். மூர்க்க சக்தியால் என் குமாரனைத் திருத்த யான் வலியுறுத்த மாட்டேன்.'

'ஹிம்சையிலும் அஹிம்சையே விழுமியது. தண்டித்த லினும் மன்னித்தல் ஆண்டகைமை. மன்னிப்பு வீரனை அணி செய்கிறது. தண்டிக்கும் அதிகாரம் உள்ளபோது மன்னிப்பதே மன்னிப்பதாகும். * * * * * மன்னிப்பு என்பது முழு வல்லமையைக் கொண்டது.'

'நான் கனவு காண்பவனல்லன். * * * * அஹிம்சா தர்மம் ரிஷிகளுக்கும் மகாத்மாக்களுக்கும் மட்டும் உரிய தன்று. அஃது எல்லா மக்களுக்கும் உரியது.'

'ஹிம்சையின் இடையில் அஹிம்சையைக் கண்ட ரிஷிகள், நியூடனைப் பார்க்கிலும் அறிஞர்கள் ; அவர்கள் வெல்லிங்டனைப் பார்க்கிலும் போர்வீரர்கள். அவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றவர்களா யிருந்தும், அவைகளின்

பயனின்மைகண்டு, உய்வு, ஹிம்சையிலின்றி அஹிம்சையி லிருப்பதை உலகுக்கு உணர்த்தினார்கள். '

'இந்தியா வாள் தாங்குமேயானால், அது நிலையில்லாத வெற்றி பெறலாம். ஆனால் அப்பொழுது இந்தியா எனது உள்ளக் கோயில் கொள்ளாது. யான் இந்தியாவோடு பிணிக்கப்பட்டிருக்கிறேன். யான் பெற்றனவெல்லாம் இந்தியாவினுடையன. உலகிற்குப் போதிக்கத் தக்கபோதம் இந்தியாவிற்கு உண்டு. அஃது ஐரோப்பாவினின்றும் ஒன்றும் பெறவேண்டுவதில்லை. இந்தியா வாள் வலியில் உறுதிகொண்டு போர் ஏற்குமானால் அஃது எனது சோதனைக் காலமாகும். தர்ம இந்தியாவின் மீதுள்ள எனது அன்பு அதாம இந்தியாவின்மீது போர்புரியச் செய்யும். ஹிந்து மதத்தின் உயிர்நாடி என்று யான் நம்பும் அஹிம்சா தர்மத்தால் இந்தியாவிற்குத் தொண்டு செய்ய என் வாழ்நாள் அர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கிறது.'

'அஹிம்சை தாழ்மையில் கொண்டு போய்விடும். அஹிம்சை என்பது கடவுள் சார்புடையது. அவருடைய உதவி பெற வேண்டுமானால் தாழ்மையோடும் கசிவோடும் அவர்பால் அணுகல் வேண்டும்.'

'இயற்கையில் கலைவுக்குரியது போதியதிருப்பினும், அஃது அன்புச் சேர்க்கையால் இயங்குகிறது. உழுவலன்பு இயற்கைக்குப் பிடிப்புண்டாக்குகிறது. அழிவுக் குணத்தால் மனிதன் வாழ்தல் முடியாது. தன்னேசம் பரநேசத்தை வலியுறுத்துகிறது. தனித்தனி மனிதருக்குள் அன்னியோன்ய நேசமிருப்பதால் நாடுகளுக்குள் ஒற்றுமை நிலவுகிறது. குடும்ப தர்மத்தைத் தேச தர்மமாக்கியதுபோலத் தேச தர்மத்தை உலக தர்மமாக்க முயலல் வேண்டும். அத்தகைய தர்ம தேசமாக இந்தியாவை ஆண்டவன் செய்திருக்கிறான்.'

'இந்தியா மூர்க்கத்தை விடுத்தாலன்றி விடுதலை பெறும் நாடாகாது.'

'இந்தியாவின் நன்மைக்காக யான் இங்கிலாந்தையோ ஜெர்மெனியையோ துன்புறுத்தமாட்டேன்.'

'காலங்காலமாக இந்தியா பலாத்காரத்துக்கு மாறுபட்ட பயிற்சியே பெற்றிருக்கிறது. ஹிம்சையைப் பார்க்கிலும் அஹிம்சையையே இயற்கைக் குணமாகப் பெரும்பான்மையோர் கொண்டொழுகுமாறு இந்தியாவில் மக்கள்நிலை ஓங்கி நிற்கிறது.'

'ஒருவன் அஹிம்சா தர்மவானாக இருக்க வேண்டுமானால், அவன் தனக்கு ஊறு செய்தவன்பால் சீற்றங் கொள்ளாதிருக்கக் கடமைப்படல் வேண்டும். அவன் இவனுக்குத் தீங்கு நினைத்தல் கூடாது; நன்மையே நினைத்தல் வேண்டும்.'

'சிந்தும் இரத்தம் நம்முடையதா யிருப்பதாக. பிறரது இரத்தத்தைச் சிந்தாமல் பிறர் வாளால் நீ இறக்கத் துணியும் வீரத்தில் அஹிம்சையுண்டு.'

'அஹிம்சையாவது முற்றும் மாசினறியிருத்தல். பூரண அஹிம்சையாவது உலகிலுள்ள எல்லாரிடத்தும் - விஷமுள்ள பூச்சி விலங்குகளிடத்தும்-பகைமை கொள்ளாமை.'

'அஹிம்சை என்பது எல்லா உயிர்களிடத்தும் இரக்கங் கொள்வது.'

இச்செம்மொழிகளில் அஹிம்சையைப் பற்றிய கூறுபாடுகளெல்லாம் மருவியிருத்தல் காண்க. உலகுய்யத் தோன்றிய பெரியோர் பலர் அருளிய மறைமொழிகளின் விரிவுரையெனக் காந்தியடிகளின் மெய்ம்மொழிகள் திகழ்கின்றன என்று கூறல் மிகையாகாது.

எதையும் சொல்வது எளிது. அதைச் செய்வது எளிதன்று. அஹிம்சா தர்மம் என்னும் அருள்நெறியைப் பற்றிப் பேசுவோர் - எழுதுவோர் - பலரை

உலகம் கண்டிருக்கிறது. ஆனால் அந்நெறி நின்று ஒழுகுவோர் பலரை உலகம் கண்டிருக்கிறதா? ஓர்மின்! அறவொழுக்கத்தில் நிற்பவர் தொகை பெருகிவிடின், உலகிடைப் பலதிறப் போராட்டங்கள் எழுதற்கே இடமில்லாதொழியும்.

**அடிகள் நிலை**

காந்தியடிகள் எத்தகையினர்? வெறும் பேச்சாளரா? நேரிய செயலாளரா? அடிகள் எதைப் பிறர்க்குச் சொல்ல விரும்புகிறாரோ அதன்படி நடந்துங் காட்டுவோர் என்பதை அவர்தம் வாழ்வு நம்முன் நின்று சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது. தமது நடக்கையில் - செயலில் - ஒழுக்கத்தில் - கொணர இயலாத ஒன்றை அடிகள் பிறர்க்குச் சொல்வதில்லை. இஃது உலகறிந்ததொன்று. ஆகவே, காந்தியடிகள் சொல்வழி நின்றொழுகும் நேரிய செயலாளரென்க.

அஹிம்சா தர்மத்தை - அருளறத்தை - வாழ்வில் கடைப்பிடித் தொழுகலின் அருமைப்பாட்டை விளக்க வேண்டுவதில்லை. அருமைப்பாடுடைய நெறியில் அடிகள் தமது வாழ்வைச் செலுத்தி வெற்றிபெற்று வருதல் கண்கூடு. ஹிம்சையில் வெற்றி பெறுதல் எளிது; அஹிம்சையில் நேரிய வெற்றி பெறுதல் எளிதோ? காந்தியடிகள் அஹிம்சை வாழ்வு நடாத்துவதில் வெற்றி யடைந்தே வருகிறார். அவர்தம் பெருமை என்னே!

அரிய அஹிம்சா தர்மத்தைத் தம்மளவில் ஓம்பி இன்புறக் காந்தியடிகள் விரும்பவில்லை. உலகம் அத் தர்ம மயமாதல் வேண்டும் என்பது காந்தியடிகள்

விருப்பம். அதற்கெனத் தமது வாழ்வையே அடிகள் அர்ப்பணஞ் செய்துள்ளனர். 'நான் பெற்ற இன்பம் பெறுக வையகம்' என்பது திருமூலர் திருவாக்கு.

அஹிம்சா தர்ம ஆக்கத்துக்கென்று பண்டை மூதறிஞரால் கொள்ளப்பட்ட முறைகள் பலவிதம். அவை நூல்களில் பொலிவு செய்துகொண்டிருக்கின்றன. காந்தியடிகள், சிறந்த அஹிம்சா தர்மத்தை - விழுமிய அருளறத்தை - பொல்லாத அரசியல் உலகில் நுழைத்துச் சோதனை செய்து வருகிறார். பொல்லாத ஓர் உலகம் தூய்மை அடைந்தால் மற்ற உலகங்களெல்லாம் தூய்மை அடையும் என்பது அடிகள் கருத்துப் போலும்! அரசியல் உலகில் அடிகள் நிகழ்த்துஞ் சோதனை வெற்றி பெறுமென்று அரசியலார் பலர் அறைந்துகொண்டே யிருக்கின்றனர். அதனால் அடிகள் தமது கொள்கையினின்றோ முயற்சியினின்றோ வழுவுவதில்லை; சோர்வின்றித் தருமத்தை வளர்க்க முனைந்தே நிற்கிறார்.

**அரசியலில் சோதனை**

சோதனை முதல் முதல் தொடங்கப்பெற்ற இடம் தென்னாப்பிரிக்கா. பின்னே அஃது இந்தியாவில் சில முறை நிகழ்த்தப்பட்டது. இந்தியாவில் நிகழ்த்தப் பெற்ற சோதனைகளுள் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று பஞ்சாப்படுகொலையை ஒட்டி எழுந்தது; மற்றொன்று உப்புச் சத்தியாக்கிரகம் என்ற பெயரால் எழுந்தது. இரண்டு போரிலும் பல்லாயிரம் பேர் ஈடுபட்டுச் சிறைபுகுந்தனர். சிறை புகுந்த அனைவரும் அஹிம்சா தர்மத்தில் உறுதியுடையவரா என்பது

கருதற்பாலது. காந்தியடிகளே இரண்டொரு முறை, 'முந்நூறு பேர் அஹிம்சா தர்மத்தில் உறுதிகொண்டு சிறை புகுந்திருந்தால் சுயராஜ்யம் மலர்ந்திருக்கும்' என்னுங் கருத்துப்பட அருளியதை ஈண்டுக் குறித்தல் சாலும்.

இந்நாளில் ஒரு சிறந்த சோதனை நேர்ந்தது. அச் சோதனையில் தேர்ச்சிபெற்றவர் எத்துணை பேர்? வெட்கம்! உலகில் இந்நாளில் ஒரும்பெரும் மூர்க்கப் போர் நடைபெற்றது. அதில் பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் ஈடுபட்டன. அடிகள் போரின்போது அஹிம்சா தர்மத்தை அறிவுறுத்தினர். எந்த நாடுஞ் செவி சாய்க்கவில்லை. அஹிம்சா தர்மப் போரால் பிரிட்டனுக்குத் துணைபுரியத் தாம் சித்தமாயிருப்பதாக அடிகள் இராஜப்பிரதிநிதி மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத் துக்குத் தெரிவித்தனர். நற்பதில் கிடைக்கவில்லை.

உலகப் போரில் ஈடுபட்டவரையும் மற்றவரையும் முற்படுத்தி அடிகள் அறிவுறுத்திய அறமொழிகள் பற் பல. அவைகளிற் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டு கிறேன்.

"பகைவன் என்னைத் தாக்குகிறான். அப்பொழுது அவனை யான் தாக்குதலாகாது. தாக்குவதென்பது ஹிம்சை யின்பாற்படும். பகைவன் என்னைத் தாக்குங் காலத்தும் அவனை யான் நேசித்தல்வேண்டும். இஃது அஹிம்சை.

வல்லரசுகள் தங்களை ஜனநாயகங்கள் என்று சொல் லிக் கொள்கின்றன. அவ்வாறு சொல்லிக்கொள்ளும் அவ் வரசுகள் ஆயுதங்களை எறிந்துவிடுமா? எறிந்தால் அச்செயல் ஹிட்லரின் கண்ணைத் திறக்கும். அவரும் நிராயுதபாணி

யாவர் * * * ஒரு திண்ணிய உலோகத்தின்மீது வெம்மை ஏற்ற ஏற்ற அஃது உருகும். இதேபோல் எத்தகைய கடுநெஞ்சமும் அஹிம்சையால் உருகியே தீரும். இவ்வாற்றல் அஹிம்சைக்கு உண்டு. * * * அஹிம்சையால் யான் ஏமாற்றம் அடைந்ததே இல்லை. 'அந்தத் தர்மம் என்னை நட்டாற்றில் விட்டதே' என்று அலமரும் நிலைமையை என் வாழ்க்கை கண்டதில்லை."

'சர்வாதிகாரிகளைப் பண்படுத்தல் இயலாதென்று நீங்கள் நினைத்தல் வேண்டா. மக்கள் இயல்பு எங்கும் ஒருதன்மையதே. * * * அவ்வதிகாரிகள் இதுகாறும், கொலைக்குக் கொலையையே பெற்றுவருகிறார்கள். அவர்கள் பொறுமை எதிர்ப்பைச் சந்தித்தார்களில்லை. சந்தித்தால் கொலைப் போரினும் பொறுமை எதிர்ப்பு, ஆற்றல் வாய்ந்தது என்று உணர்வார்கள்.'

'வல்லரசுகளெல்லாம் கொலைக் கருவிகளை உதறுக. உதறினால் உலகில் அமைதி நிலவும். கொல்லாமையைக் கடைப்பிடிப்பதில் எனக்கு ஐம்பதாண்டு அநுபவம் உண்டு. இவ்வநுபவத்தால் யான் பெற்றதென்னை ? மன்பதையைக் காக்கவல்லது கொல்லாமை என்னும் அஹிம்சை என்பது யான் பெற்ற அநுபவம்.'

'* * * எல்லைப்புறப் பட்டாணியர் நிலைமை எப்படி இருந்தது ? இப்பொழுது எப்படி இருக்கிறது ? அவர் ஹிம்சை நோக்குடையவராய், குடும்பச் சண்டையில் பேர்பெற்றவராய், சீறுவதில் புலியை வென்றவராய், துப்பாக்கி, கத்தி முதலிய கொலைக் கருவிகளைத் தாங்கியவராய், அதிகாரிகளைக் கண்டு அஞ்சி ஓடுபவராய் இருந்தனர். இப்பொழுது அவரிடம் சகோதர நேயம் பரவி வருகிறது ; அவர் பொறுமையில் பசுவை ஒத்தவராயினர் ; அவர்தம் உள்ளத்தில் அஞ்சாமை நிலவுகிறது. அப்துல் காபர்கானின்

அஹிம்சாதர்ம போதனை பட்டாணியர் இயல்பையே மாற்றியது. அஹிம்சையின் வெற்றி என்னே!'

'கொடுங்கோலரின் வாளை மழுங்க வைப்பேன். எதனால்? கூரிய மற்றொரு கொடுவாளால் அன்று; அஹிம்சையால் - ஆத்ம சக்தியால்.'

நீண்டகாலமாக அஹிம்சா தர்ம உணர்வின்றி மூர்க்கப்போரில் மூழ்கியுள்ள அயல் நாட்டவர் நிலைமையைப் பற்றி வியப்புற வேண்டுவதில்லை. அஹிம்சா தர்ம வீரர் தோன்றி அஹிம்சையை வளர்த்த இந்தியாவில் பிறந்து, ஏறக்குறைய இருபத்தைந்தாண்டு காந்தியத்தில் நடமாடி வந்த சிலர், அஹிம்சையை அலட்சியஞ் செய்யப் புகுந்த நிலைமையைப் பற்றியே வியப்புறல்வேண்டும். மூர்க்கத்தில் உறுதியுடையார் அஹிம்சையை ஏற்க மறுப்பது இயற்கை. காலமெல்லாம் அஹிம்சை அஹிம்சை என்று கூக்குரலிட்டு, நல்ல சமயத்தில் அதைக் கைவிடுவது இயற்கையாகாது; அது கரவே யாகும்.

காந்தியத்தைக் கரவு வழியில் பயன்படுத்திவந்த 'ஒரு திருக்கூட்டம்', 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளல்வேண்டும்' என்று, பிரிட்டன் போர்நெருக்கில் அழுந்திக் கிடந்த வேளையில், இந்தியாவில் சத்தியாக்கிரகப்போர் துவங்குமாறு அடிகளைத் தூண்டிற்று.

**அடிகள் உறுதி** அஹிம்சா தர்ம நுட்பமுணர்ந்து, அதை ஒழுக்கத்தில் வளர்த்துப் பண்பட்ட அறவோர் - அந்தணர் - காந்தியடிகள், உறவு காரணமாகவோ - நட்புக் காரணமாகவோ - பிற காரணமாகவோ தயங்காது, அஞ்சாநெஞ்சங் கொண்டு, உண்மையில் உறைந்து நின்று, 'இச்சமயத்தில் சத்தியாக்

கிரகப் போர் துவங்குவது அஹிம்சையாகாது' என்று பதிலிறுத்தனர். இது மூர்க்க நெஞ்சமும் அஹிம்சா வேடமும் பூண்டு நடித்துவரும் கூட்டத்துக்குப் பிடிக்கவில்லை.

போர்க்காலத்தில் டெல்லியில் காங்கரஸ் காரியக் கூட்டம் நடைபெற்றது. அதில் அடிகள் தமது அஹிம்சா தர்மக் கொள்கையை வலியுறுத்தினர். அதற்குக் காரியக்கூட்டம் மாறுபட்ட முறையில் நடந்து கொண்டது. உட்குழப்பமோ புறப்படை எழுச்சியோ நிகழும் நிலைமை நேரினும் - அவ்வேளையிலும் - அஹிம்சா தர்மத்தினின்றும் வழுவுதல் கூடாதென்பது அடிகளின் உறுதி. இதற்குக் காரியக்கூட்டம் இணங்கவில்லை. காந்தியடிகளைச் சூழ்ந்து உறவும் நட்பும் கொண்டமையால், அஹிம்சைப் போரில் பண்பட்டவரென்று உலகங் கருதிய சிலரும் காந்தியடிகள் கருத்துவழி நிற்க ஒருப்படவில்லை. இதனால் அடிகளின் அஹிம்சா தர்மம் அவரளவிலேயே நிற்கிறதென்பதும், அவருடன் நெருங்கிப் பழகியவரிடத்தும் அத்தர்மம் வேர்கொள்ளவில்லையென்பதும், இவர் அனைவரும் இதுகாறும் காந்திய நாடகமே நடித்து வந்தனரென்பதும் செவ்வனே விளங்கலாயின. இவரெல்லாம் மனந்திரும்புமாறு ஆண்டவன் அருள் செய்வானாக.

அடிகள் அளவில்

உலகப் போர் நெருக்கில் - இந்தியாவில் - 1942-ம் ஆண்டில் காந்தியடிகள்வழி ஒரு நன்மொழி பிறந்தது. அஃது 'இந்தியாவை விட்டு அகல்க' என்பது. இஃது அகில இந்திய காங்கரஸ் குழுவிலும் தீர்மானமாக நிறை

வேறியது. அந் நன்மொழியின் உள்ளுறை என்னை ? 'வெள்ளையனே ஓடிப் போ' என்பதா ? அன்று. பின்னை என்னை ? 'வெள்ளை ஆட்சி அகல்க' என்பதே யாகும்.

அரசாங்கம் காந்தியடிகளை ஐயுற்றுச் சிறைக்கு அனுப்பியது. அவ்வேளையில் நாட்டில் சில இடங்களில் மூர்க்க சக்தி எழுந்தது. அச்சக்தி, காங்கரஸ் பெயரால் - காந்தியடிகள் பெயரால் - அடாத செயல்களை நிகழ்த்தியது. அது, புகைவண்டியை எரித்தது ; தண்டவாளத்தையும் தந்திக்கம்பிகளையும் நொறுக்கியது ; தபால், போலிஸ் முதலிய நிலையங்களை நீறாக்கியது ; சில உயிர்களையுங் கொன்றது. அம்மூர்க்க அரக்கம் சண்டதாண்டவம் புரிந்தது என்று சொல்லலாம்.

அவ்வேளையில் உலகங் கலங்கியது ; நாடு அலமந்தது. 'ஹிம்சைக்கா காந்தியடிகள் ஆதரவு' என்னும் ஐயமும் மக்களிடைப் பிறந்தது. அடிகள் சிறைக் கோட்டத்தினின்றும் வெளிவந்தார் ; வந்ததும் என்செய்தார் ? நிகழ்ந்த மூர்க்கத்துக்கும் காங்கரஸுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று முழங்கினார். அம்முழக்கம் அணித்தே கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கரஸ் குழுவை 1942-ன் நடைமுறையை வெறுக்க ஏவியது ; அஹிம்சையை வலியுறுத்த உந்தியது. எந்நிலையிலும் காந்தியடிகள் அஹிம்சையினின்றும் வழுக்கி வீழ்வதில்லை. அஹிம்சை அவர்தம் மனமொழியெல்லாம். அஃது அவர்தம் உயிர்.'

'இக்கால இந்தியாவைப் பலதிறத் தீமைகள் சூழ்ந்து கொண்டன. இவைகளை ஒழிக்கவல்லது அஹிம்சையே.

இதற்கென்று ஆண்டவன் என்னை ஒரு கருவியாகத் தெரிந்தெடுத்தான். அஹிம்சையில் எனக்கு அசையாத உறுதி உண்டு. நாட்டின் தேவைகளை அஹிம்சையால் பெறலாம்; நிறைவேற்றலாம். இந்தியா அஹிம்சையால் தன்னைக் காக்கலாம்; இரத்தக் கொலைக்கு இரையாகிவரும் மேனாட்டையுங் காக்கலாம்.

இத்திருமொழிகளை வாய்மலர்ந்த அடிகளா அஹிம்சையைப் புறக்கணிப்பார்? பொல்லா உலகம் நல்லோரையும் சிற்சில சமயம் ஐயுறுகிறது! அறியாமை! காங்கரஸ் அன்று - காங்கரஸ் தலைவரல்ல - நாடு முழுவதும் - ஹிம்சையில் புகுந்தாலும், அடிகள் - அந்நிலையிலும் - ஹிம்சையை அஞ்சா நெஞ்சுடன் எதிர்த்தே நிற்பர்; அஹிம்சையை வலியுறுத்தியே தீர்வர்.

உலகப் போர் முற்றுப்பெற்றது என்று சொல்லப்படுகிறது. இது வெறுஞ் சொல்லே. அரசுகள் - வல்லரசுகள் - காந்தியடிகள் போதனைவழி நின்றிருத்தல் வேண்டும்; நின்றிருந்தால், கோடிக்கணக்கான உயிர்கள் பலியாகியிரா; மக்கள் உழைப்பாலாகிய பல்வகைப் பொருள்கள் கோடிக்கோடிக் கணக்கில் வீணாகியிரா. உலகில் சகோதர நேயம் பெருகும்; அமைதி நிலவும்; குலவும்.

பிரிட்டிஷ் அரசாங்கம் போர்க் காலத்தில் காந்தியடிகளைச் சிறைக்கோட்டத்தில் அடைத்தது தவறு; பெருந்தவறு. இனியாதல் அது மனந்திரும்பி அடிகள் வழி நிற்க உறுதி கொள்வதாக.

எந்நிலையிலும் அடிகள் அஹிம்சா தர்மத்தில் உறுதி கொண்டு நிற்றல் கருதத்தக்கது. அஃது அவர்தம்

கொள்கை; சமயம். ஐரோப்பாப் போர் நெருக்கும், கெழுதகை நண்பர் நெருக்கும் அடிகளின் அஹிம்சா தர்ம உறுதியைக் குலைக்கவில்லை. அடிகள் அஹிம்சா தர்ம மூர்த்தியாகவே விளங்குகிறார். காந்தியடிகள் வாழ்க; அவரது அருளறம் வெல்க.

மனிதப் பிறவி அஹிம்சைக்கென்று உருக்கொண்டது. அதை ஹிம்சைக்குப் பயன்படுத்தினால் அதன் நோக்கம் நிறைவேறாது. மனிதன் தன்னை உடல் என்று நினைக்குமட்டும் அவனை ஹிம்சை சூழ்ந்தே நிற்கும். மனிதன் உடல் அல்லன்; உயிர். அவன் தன்னை உயிரென்று நினைந்தால் அவன்பால் அவனது இயல்பாகிய அஹிம்சை விளங்கும்.

காந்தியடிகள் மனிதனை உடலாகக் கொள்ளவில்லை. அவர் அவனை உயிராகவே கொள்கிறார். உயிர் விளக்கத்துக்கு உடல் ஒரு கருவி என்பது அவர்தம் உட்கிடக்கை. இந்நுட்பம் அஹிம்சையைக் கடைப்பிடிக்கப் பிடிக்க விளங்கிக் கொண்டே போகும் என்பது அவர் கண்ட உண்மை. அஹிம்சை விளக்கத்துக்குச் சத்தியம் அடிப்படை என்று அடிகள் வலியுறுத்துவது ஈண்டுக் கருதற்பாலது. அவர்தம் செம்மொழிகளிற் சில வருமாறு:—

'மனிதனை உடலென்று கருதுகிறோமா? இல்லை. அவனை உயிரென்றே கருதுகிறோம். அவனது உயிர்விளக்கத்துக்கென்று உறுகருவியாய்த் துணைபுரிவது அவனது உடல்.'

'ஆத்ம சக்தியை ஆராயுங்கள். அதைத் தேகசக்தியால் காத்தல் இயலுமா? இயலும் என்னும் உணர்வு

உள்ளவரை ஆத்ம சக்தியின் திறத்தை உணர்தல் எளிமைய தாகாது.'

'மனிதன் ஹிம்சைச் சூழலிடை நிற்பவன். அவனது குறிக்கோள் அஹிம்சையாயிருத்தல்வேண்டும். குறிக்கோளை யொட்டி ஒழுக்கமும் நிகழ்ந்தால் மனிதத்தின் அழகு புலனாகும். மனிதனது இயல்பு அஹிம்சை; ஹிம்சை யன்று.'

'எந்தப் பெரியோன் சத்தியஞான தரிசினியாகிறானோ அவன் ஹிம்சைச் சூழலிடை அஹிம்சையைக் காண்பவனாவன். அவனுக்கு ஹிம்சை அநித்தியமாய், அஹிம்சை நித்தியமாய்த் தோன்றும்.

'சத்தியத்தின் உயிர்நாடி அஹிம்சை'

அஹிம்சா தர்மப் பயிற்சிக்கும் முயற்சிக்கும் இன்னும் உலகம் உண்டு; காலமும் உண்டு. அப்புனித அறம் தோல்வி அறியாதது. தோல்வி யுறுவது மூர்க்கமே. மூர்க்கப்பேய் தலைவிரித்தாடி ஒடுங்கும். அதன் விளைவு அஹிம்சா தர்ம எழுச்சி என்பதை உலகம் உணர்வதாக.

அஹிம்சா தர்மம் மனிதனுக்குரிய இயற்கை அறம். தனக்குப் பிறர் தீங்கிழைக்க எவனாவது கருதுவனோ? கருதான். இது மனிதன் இயல்பு. இவ்வியல்புடையான் பிறர்க்குத் தீங்கிழைக்க நினைக்கலாமோ? நினைப்பனேல் அந்நினைப்பு இயற்கைக்கு மாறுபட்டதாகும். தன்னைப் போலப் பிறரைக் கருதலே மனிதனது இயல்பெனக.

**மனித இயல்பு**

'தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறு போல் - மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்' என்றார் திருத்தக்க தேவர். இந்நிலை

எய்திய பெரியோர் உள்ளமே ஆண்டவன் உறைவிடமாகும்.

‘ எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார் யாவரவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான்
தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன் சிந்தைமிக
விழைந்த தாலோ ’

எனவரூஉம் இராமலிங்க சுவாமிகளின் அருண்மொழியை உன்னுக. “ ‘அஹிம்சை’ என்னும் ஞாயிறு எழும்போது, பகைமை, சீற்றம், காழ்ப்பு முதலிய இருட்குழாங்கள் இரிந்தோடும்” எனவரூஉங் காந்தியடிகளின் செம்மொழியையும் சிந்திக்க.

சரித்திர உலகை நோக்கினால், அஹிம்சை பரம தர்மம் என்று முதல் முதல் உலகில் அறிவுறுத்தியவர் விருஷபதேவர் என்று தெரிகிறது. பின்னே புத்தர், சோக்ரதர், கிறிஸ்து, திருவள்ளுவர், திருநாவுக்கரசர், பிரான்ஸிஸ் முனிவர், டால்ஸ்டாய் முதலியோரால் அத்தர்மம் காலத்துக்கேற்றவாறு அவ்வப்போது வளர்க்கப் பெற்றது. இந்நாளில் அஹிம்சா தர்மத்தை அரசியலில் நுழைத்து உலகைப் பண்படுத்த முயன்று வருவோர் மகாத்மா காந்தி என்பது உலகறிந்தொன்று. அன்று விருஷபதேவர் கண்ட கனவு, இன்று காந்தியடிகளால் நினைவாய்ச் செயலாய்ப் பரிணமிக்கிறது. இதனால் புது உலகம் மலரும் என்று கருதப்படுகிறது.

புது உலகப் படைப்பைப்பற்றி முன்னரும் புகன்றுள்ளேன் ; ஈண்டுஞ் சிறிது குறித்துச் செல்ல விரும்புகிறேன் ; மேலும் சமயம் நேர்ந்துழி நேர்ந்துழி நினைவூட்டிக் கொள்வேன். காந்தியடிகளின் புது உலகம் அஹிம்சா தர்ம நிலையமாகவே காட்சியளிக்கும். அந் நிலையத்தின் கல் மண் சுண்ணம் நீர் முதலியனவெல்லாம் அஹிம்சைக் கூறுகளே. அதன் கால், சுவர், கூரை முதலிய யாவும் அஹிம்சையாகவே அமைந்து வருகின்றன.

புது உலகம் மார்க்ஸியத்திலும் பேசப்படுகிறதன்றோ ? நிலமும் பொருளும் அறிவும் பொதுவாயின், புது உலகம் நன்முறையில் அமையுமென்றும், அவ்வுலகம் அஹிம்சை வண்ணமாகப் பொலியுமென்றும் மார்க்ஸியம் கூறுகிறது. உலகம் இந்நிலை எய்தாதவாறு முதல் - தொழில் என்னும் வர்க்க வேற்றுமை தடை செய்கிறது என்று அது சாற்றுகிறது. தடையைப் போராட்டத்தால் கடத்தல்வேண்டுமென்பது மார்க்ஸியத்தின் உள்ளம். அது குறிக்கும் போராட்டத்தில் இரத்தஞ் சிந்தாமை காணேம். மார்க்ஸியம் ஹிம்சையை வெறுக்கவில்லை. அதன் உள்ளப்படி இரத்தப் போரும் இரத்தப் புரட்சியும் நிகழ்ந்துவரல் கண்கூடு. மார்க்ஸியம் போராட்டத்தைக் கடந்து முதுமை எய்துங்கால் பட்டாளம், கொலைக்கருவிச்சாலை, போலிஸ் முதலியன இரா. உலகெலாம் அஹிம்சாதர்ம மணமே கமழும். மார்க்ஸியம் குறிப்பிடுந் தடையையும் அஹிம்சையால் அதாவது சத்தியாக்கிரகப் போரால் கடத்தல்வேண்டுமென்று காந்தியம் கழறுதல் ஈண்டு உன்னற்பாலது.

காந்தியத்தின் அடிப்படையான நோக்கம் உலகம் அஹிம்சை மயமாதல்வேண்டுமென்பது. மார்க்ஸியத்தின் நோக்கமும் அதுவே. அடிப்படையில் இரண்டுக்கும் எவ்வித மாறுபாடுமில்லை ; இவ்வாறே முடிவிலும் இரண்டுக்கும் மாறுபாடில்லை என்றே தெரிகிறது. இடையில் இரண்டும் ஹோயாங்கோ - யாங்டிஸ் கியாங் என்னும் ஆறுகளைப்போலப் பிரிகின்றன. இப்பிரிவைப்பற்றி வாதங்கள் நிகழ்கின்றன. நன்னோக்கத்தை நிறைவேற்ற எம்முறையைக் கொள்வது என்பது குறித்து வெளி வந்துள்ள கருத்துக்கள் பலதிறம்.

காந்தியடிகள் விருஷபதேவர் வழிவழி வந்தவர் ; மார்க்ஸ் அவ்வழிவழி வந்தவரல்லர். ஆதலின் கையாளப் படும் முறையில் இரு சார்பிலும் வேற்றுமை விளைந்தே தீரும். மேலைநாடு ஹிம்சையில் இறங்கியே அஹிம்சை யைக் காணும் ; இந்தியா ஹிம்சையில் இறங்கவேண்டுவ தில்லை. மேலைக் காற்றால் இந்தியா கேடுறாதவாறு காந்தியம் காத்துவருகிறது. மார்க்ஸியம் மேலைநாட்டில் ஓங்கி வளர்ந்து பரவி இந்தியாவில் புகுங்கால், அது காந்தியத்தில் ஒன்றும் என்று யான் எண்ணுகிறேன்.

காந்தியடிகள் செயற்கை நரகமாகிய ஹிம்சையில் வீழ்ந்து வருந்தும் உலகை, இயற்கை இன்ப அஹிம்சை யால் உய்விக்கத் தோன்றிய பெரியார். அவர் மன மொழி மெய்களில் அருள் என்னும் அஹிம்சா தர்ம மணம் கமழ்ந்துகொண்டே யிருக்கிறது. முழு அஹிம்சா தர்மமே ஒருவனது இயற்கை வாழ்வின் முடிந்த நிலை யாகும். இவ்வருளறத்தை இயற்கைவழி நின்று இந்

நாளில் ஓம்பிவருங் காந்தியடிகள் வாழ்வை ஓர் இலக்கிய மாக நாம் கொள்வோமாக.

## ௬௦. சுதேசியம்

மனிதன் இயற்கைக்கு அரணுகுமாறு தனது வாழ்வை நடாத்தல் வேண்டுமென்று மேலே சொல்லப் பட்டது. இயற்கையின் காரணம் ஒன்ருயினும் அதன் காரியம் இடத்துக்கேற்ற வண்ணம் மாறுபட்டிருத்தல் எவரும் அறிந்ததொன்று. அம்மாறுபாட்டிற் கேற்ப உலகிடை மொழிகளும், வழக்க ஒழுக்கம் முதலியனவும் பலதிறத்தனவாய் நிலவுகின்றன. அத்திறத்தின்படி நாடுகள் பிரிவுற்றிருக்கின்றன. அவ்வந்நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு அமைந்துள்ள மொழி பயின்று, கல்வி கற்று, வழக்க ஒழுக்கமேற்று, உணவு கொண்டு, உடையணிந்து, அரசு கண்டு, அறம் வளர்க்க வேண்டுவது மனிதனது கடமை. நாட்டின் இயற் கைக்கு மாறுபட்டு வாழ்வு நடாத்துவோன், பிறப்புரி மையையும், அதனாலாய இன்பத்தையும் இழந்த பாவி யாவன். ஆகவே, இயற்கை வாழ்வென்பது நாட்டுக் குரிய இயற்கை நிலையைப்பற்றியதென்க. நாட்டுக்குரிய இயற்கை வாழ்வே சுதேசியமேன்பது.

சுதேசியமென்பது நாட்டுக்குரிய எல்லாம் அடங் கப்பெற்றது. ஒரு நாட்டுக்கு இயல்பாய் அமைந்துள்ள மொழி, வழக்க ஒழுக்கம், அரசு, அறம் முதலிய யாவுஞ்

சேர்ந்த ஒன்றே சுதேசியமாகும். ஒரு நாட்டிற் பிறந்த ஒவ்வொருவனும் அந்நாட்டு வாழ்வுடையவனா யிருத்தல் வேண்டும். அத்தகைய நாடே சுயராஜ்ய இன்பம் துய்ப்பதாகும். சுதேசியத்துக்கும் சுயராஜ்யத்துக்குந் தொடர்புண்டு. தொடர்பெனில் எத்தகைத் தொடர்பு? பிரியாத தொடர்பு. சுதேசியம் வேறன்று; சுயராஜ்யம் வேறன்று. சுதேசியம் காரணம்; சுயராஜ்யம் காரியம். எனவே, சுயராஜ்யம் என்பது சுதேசிய முகையினின்றும் அரும்புவதென்க.

**சுயராஜ்யமும் சுதேசியமும்**

இயற்கை, பல திறமாகக் காரியப்பட்டுப் பலவகை வழக்கமும் ஒழுக்கமும் பிறவுமுடைய பலவித நாடுகளாக ஏன் உலகைப் பிரித்தல் வேண்டும்? என்று சிலர் வினவலாம். ஒரு துறை நண்ணற்கு உலகில் பலவழி காண்டல் இயல்பு. உலகில் சமயங்களும், அரசியல் நெறிகளும், பிறவும் பலதிறத்தனவாய் ஏன் விளங்கல் வேண்டும்? பன்மை, உணர்வையும் ஊக்கத்தையும் எழுப்பிப் பின்னை ஒருமை இன்பத்தைக் கூட்டும் இயல்புடையது. பன்மையை மனிதன் பகைமைக்குப் பயன்படுத்தலால் உலகிடைக் கேடு நிகழ்கிறது. உடல் உறுப்புக்கள் பலவாயிருப்பினும் அவைகளை ஓர் ஒருமை ஏந்தி நிற்கிறது. பலவகைப்பட்ட உறுப்புக்கள் தங்கள் தங்கள் இயல்புவழி நில்லாது பிணங்குமேல் விளைவது யாது என்று சொல்லலும் வேண்டுமோ? பிணக்கிடை உறுப்புக்களைத் தாங்கி நிற்கும் ஒருமை நிலை என்னும்? இவ்வாறே பிறவும் நாடுகளும். அவ்வந்நாடு தன் தன் இயல்புக்குரிய

**பன்மையும் ஒருமையும்**

கடனாற்றி வருமாயின், ஒரு நாட்டுடன் மற்றொரு நாட்டுக்குப் பிணக்கோ பூசலோ உண்டாகாது. ஆகவே, இயற்கை, பன்மையாகப் பரிணமித்திருப்பதனால் கேடு நிகழாதென்க. பன்மை உறுப்புக்களைத் தாங்கி நிற்கும் ஒருமை என்னும் உயிரை, மக்கள் மூளைப்பால் - சீவபோதத்தால் - மறப்பதால் விளையுங் கொடுமைகள் உலகை இடர்ப்படுத்தி வருகின்றன.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் கடவுள் பிள்ளைகளேயாவர். ஓரே இடத்தினின்றுந் தோன்றும் பிள்ளைகள் இயற்கை அன்னையின் பலதிறப்பட்ட உறுப்புக்களிலமர்ந்து பலவகை வழக்க ஒழுக்கங்களை ஏற்கிறார்கள். இப் பன்மைப்பட்ட வழக்க ஒழுக்கங்கள் மக்களின் ஆன்மநேய ஆராய்ச்சிக்கு உறுகருவிகளாய்த் துணை புரிய அமைவன. இயற்கைக் காரியப்பாட்டில் வேற்றுமைகள் இல்லாதொழியுமேல், மக்கள் தங்களை ஆராயும் அறிவிழந்து நிற்பார்கள். ஆன்மநேய ஆராய்ச்சிக்குக் கருவிகளாகப் பெற்ற வேற்றுமைகளைப் போருக்கும் பிணக்குக்கும் பாழ்படுத்துவது அறியாமை. மனிதன்பாலுள்ள விலங்கு நீர்மை கழலுமட்டும் அவன் வேற்றுமைகளால் இடர்ப்படுவன். இது குறித்து ஈண்டு விரித்துக் கூறல் மிகையாகும்.

ஆண்டவன் அருளால் எவரெவர் எவ்வெந் நாட்டில் தோன்றுகிறாரோ அவரவர் அவ்வந்நாட்டு இயற்கையுடன் அரணுமாறு வாழ்ந்து சுதேசியத்தை ஓம்புதல்வேண்டும். இதுவே கடவுளின் படைப்பு நோக்கம். இந்நோக்கத்துக்கு உடன்பட்டு வாழ்வோர் கடவுள் ஆணையாம் இயற்கையோடு நேர்பட வாழ்வோ

ராவர்; மாறுபட்டு வாழ்வோர் தம்மையும், தம்மைச் சூழ்ந்த இயற்கையையும், இயற்கை வடிவான இறைவனையும் மறந்தவராவர். ஒரு நாட்டிற் பிறந்தோர் அந்நாட்டிற்குரிய கல்வி வழக்க ஒழுக்கம் உணவு உடை முதலியவற்றை வாழ்வில் விலக்கிவிட்டு மேல், அன்னார் பிணி வறுமை முதலியவற்றால் பீடிக்கப்பட்டு உரிமையின்ப மிழந்து வருந்துவர். அவர் நாடு அந்நிய ஆட்சிக்குரிய அரசை அழைத்தவண்ணமிருக்கும். ஒரு நாடு அந்நிய அரசாட்சிக்கு உட்படுதற்குள்ள பல காரணங்களில் தலையாயது அந்நாட்டினர் தமக்குரிய சுதேசியத்தை மறந்தொழுகுவதாகும். சுதேசியத்தை மறக்கும் நாட்டார் தாங்கெடுவதோடு தமது நாட்டின்மீது காமுறுமாறு பிற நாட்டினரைத் தூண்டும் மறத்துக்கும் ஆளாகிறார். நாட்டுக்குரிய சுதேசியத்தை மறப்பதால் - கைவிடுவதால்- அந்நாட்டிற் பிறந்தோர் தமது நாட்டைப் பிறர் ஆட்சிக்கு விடுத்து அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்த நேர்தலால், அவர் ஆண்டவன் அருளுக்குரியராதல் எங்ஙனம்? தன்னை ஈன்ற தாய்வழி நில்லாது, அவளைமறந்து, அவளைப் பிறர்பால் விடுவதினும் கொடிய பாவம் பிறிதொன்றுண்டோ? அறியாமையால் சுதேசியத்தை மறந்த நாட்டை மற்றொரு நாட்டார் பற்றி அந்நாட்டு முறைகளைக் கோறலும் பெரும் பாவம். ஒரு நாட்டை மற்றொரு நாட்டார் பற்றுவதால் உலகில் அறநெறி வளர்ச்சிக்குக் கேடு நிகழும்.

சுதேசிய மறப்பாலுறுங் கேடு

சுதேசியத்தால் அரும்பும் சுதேச அரசாட்சியில் அறமும் அன்பும் அருளும் மக்கள் வாழ்வுடன் ஊடுருவி

நிற்கும். சுதேசிய வீழ்ச்சி எல்லாக் கொடுமைகளையும் தோற்றுவித்து, அவைகளை நிலைபெறச் செய்யும். சுதேசிய தர்ம ஆட்சியில் அறத்துறைகட்கெல்லாம் அடிப்படையாக நிலவும் ஆன்மநேயம் வளருமென்பது திண்ணம். நமது நாட்டில் ' ராமராஜ்யம் ' என்றும், ' அசோகன் அரசு ' என்றும் அவ்வரசுகள் இன்றும் போற்றப்படுதற்குக் காரண மென்னை ? அந்நாளில் மக்கள் சுதேசியத்தைப் போற்றி வந்ததை நினைவூட்டுவதாகும். சுதேசிய தர்மத்தைக் காக்கவேண்டுவது மக்கள் கடமை என்பதற்கு விரிவுரை வேண்டுவதில்லை.

சுதேச ஆட்சி

சுதேசியத்தை மறத்தலால் ஒருநாடு பிற நாட்டுக்கு அடிமைப்படுகிறது. அடிமைப்பட்ட நாடு எப்படி விடுதலை பெறுவது ? ஆள்வோர் காலில் வீழ்ந்து அவர் ஏவல்வழி நின்றுகொண்டிருப்பதால் அவர் நாட்டை விட்டுச் செல்லார். பின்னை என்செய்தல் வேண்டும் ? மறந்த சுதேசியத்தை மீண்டும் நினைந்து போற்றி அத்தெய்வத் துக்கு வழிபாடு செய்தல்வேண்டும். அவ்வழிபாடாவது, நாட்டுக்கு இயல்பாயமைந்துள்ள கல்வி வழக்க ஒழுக்கம் உணவு உடை முதலியவற்றை மீண்டுங் கொண்டு, இடையில் நாட்டிடைப் பரவிய பரதேசிய முறைகளை மறந்துங் கொள்ளாதிருப்பது. இவ்வறநெறி நாட்டுக்கு விடுதலை நல்குமென்பது ஒருதலை.

ஒரு நாட்டார் மற்றொரு நாட்டைப் பற்றியாளும் போது, அவரைத் துரத்த முயல்வது அருளுடைமை யாகுமோ என்று கேட்போருமுளர். இவர் அருளுடை

மையின்பெற்றியை உணராதவரேயாவர். ஒரு நாட்டை மற்றொரு நாட்டார் எந்நோக்குடன் பற்றுகிறார்? நோக்கைக் கருதல்வேண்டும். ஒரு நாட்டிற் பிறந்தோர் தமது நாட்டு வழக்கம் ஒழுக்கம் முதலியவற்றை மறந்து வாழ நேரின், மற்றச் சகோதர நாட்டார் அந்நாட்டிற் போந்து, அதற்குரிய வழக்க ஒழுக்கங்களை அந்நாட்டார் கொள்ளுமாறு அன்புவழியில் அறிவு கொளுத்துவது இயற்கை நெறிக்குத் துணைபோவதாகும். அவ்வாறின்றிப் பொருள்பறிக்கும் நோக்குடன் ஒரு நாட்டார் இன்னொரு நாட்டைப்பற்றி, அந்நாட்டுக் கலையுணர்வு முதலியவற்றைக் குலைத்து, அந்நாட்டுணர்வையே மாற்றல் இயற்கைக்கு மாறுபட்டு நடப்பதாகும். இந்நோக்குடையார் உள்ளத்தில் அவா பொறாமை பகைமை முதலிய விலங்கு நீர்மைகள் செறிந்து நிற்கும். இந்நீர்மைகள் அவரிடமிருந்து அகலுமாயின், அவர் தமது மறவினை யுணர்ந்து, பிறர் மண்பறித்துண்ணலை நிறுத்தித் தமது நாட்டின் இயற்கை வாழ்வில் நிற்பர். மீச்செயல் புரிந்து இயற்கை அன்னையை மறந்தோர்மீது, மற்றவர் பகைமைகொண்டு கொலை முதலிய மறத்துறைகளிலிறங்காது, அவர்பால் அன்புகொண்டு, அவர்க்குரிய சுதேசியத்தைக் கடைப்பிடித்தொழுகுவிப்பது தம்மாட்டும் அவர்மாட்டும் அருளை வளர்ப்பதாகும். சுதேசியமாவது அருணெறியோம்பல் என்க. பிறவற்றைச் சத்தியாக்கிரகத் தலைப்பின்கீழ்ப் பார்க்க.

உலகில் சுதேசியத்தை மறந்து பரதேசியத்துக்கு இடந்தந்து வருந்தும் நாடு யாண்டுளது என்று ஆராய

வேண்டுவதில்லை. யான் பிறந்த என்னருமைப் பாரத நாடே அதற்கு இலக்கியமா யிலங்குகிறது. பாரத மக்கள் சுதேசியத்தை

பாரத நாடு

மறந்து வாழ்வதைப்போல வேறு எந்நாட்டு மக்களும் வாழ்கிறார்களில்லை. பாரத மக்களின் வாழ்வில் பரதேசிய நஞ்சு கலந்து, அவர்களது வாழ்வை இடர்ப்படுத்துகிறது. பரதேசியம் பழமலம்போன்றது. பழையமலம் ஒருவனை எவ்வாறு வருத்துமோ அவ்வாறே பரதேசியமும் ஒரு நாட்டைவருத்தும். பாரதமக்கள் வழக்கம் ஒழுக்கம் முதலியவற்றில் பரதேசிகளாக மாறி வருகிறார்கள். அதனால் அவர்கள் அடிமை என்னும் நோய்வாய்ப்பட்டுத் துன்புறுகிறார்கள். பாரத மக்கள் சுதேசியத்தை மறந்து சுயராஜ்யமிழந்து வருந்துவதை என்னென்றெழுதுவது? வருந்தியும், அவர்கள் சுயராஜ்யத் திறவு சுதேசியம் என்று உணர்கிறார்களில்லை. பாரத மக்களிற் பலர் சுயராஜ்யம் பெற முயல்கிறார். அவராதல் சுயராஜ்யத்துக்குப் பிறப்பிடம் சுதேசியம் என்று உணர்ந்து சுதேசிய தர்மத்தை வளர்க்க முயல்வரேல், சுயராஜ்யத்துக்கு வேறு துறை புகுந்து அவர் உழைக்கவேண்டுவதில்லை. சுதேசியத்தை மறந்து, 'சுயராஜ்யம்', 'சுயராஜ்யம்' என்று கூக்குரலிடுவதால் என்ன பயன்விளையும்? அஃது ஆகாயக் கோட்டை கட்டப் போந்தவன் கதையாகவன்றோ முடியும்? சுதேசிய நுட்பமுணராது, சுயராஜ்யத்துக்கு முயல்வது, பர ராஜ்யத்துக்கு வாழ்த்துக் கூறுவதாகும். பாரத நாட்டின் விடுதலை சுதேசியத்திலிருப்பதை யுணர்ந்து ஒரு சிலர் உழைத்து வருகிறார். அவருள் தலையாயவர் நங் காந்தியடிகள்.

நமது நாட்டில் வதிவோருள் எவரும் சுதேசிய நுட்பத்தைக் காந்தியடிகள்போல் உணர்ந்து பணிசெய்ய வில்லை என்று கூறுவது மிகையாகாது. அடிகளது முன்னுரை தாங்கிய ஒரு சுதேசிய நூல், முன்னை நாளில் உலகை உய்விக்கப் பல தெய்விக அவதாரங்கள் மனித வடிவா யுற்றன என்றும், இந்நாளில் அவ்வவதாரம் சுதேசிய மாகப் பரிணமித்திருக்கிறது என்றும் கூறுகிறது. அடிகள் சுதேசிய நுட்பத்தை உணர்ந்த திறத்தை ஏழையேன் விளக்க அருகனல்லேன். காந்தியடிகள் சுதேசியத்தைத் தமது உயிரென - தமது வாழ்வென - தமது சமய மெனப் போற்றி வருகிறார். காந்தியடிகள் சுதேசியத் தைத் தாங்கொண் டொழுகுவதோடு பாரத நாட்டையும் உலகையும் அதன் வழிப்படுத்த முயன்று வருகிறார். சுதேசியத்தை உயிர்ப்பிக்க வந்த பெரியாரென்றும் அவரைப் போற்றுகிறேன். காந்தியடிகள் என்னும் ஒரு ஞாயிறு தோன்றாதிருக்குமேல், அந்தோ! பாரத நாட்டைப் பரதேசிய இருளும் பனிப்படலமும் நடுக் குறுத்தி அழித்திருச்குமல்லவோ? பாரத நாட்டுக்கு உயிர்ப்பிச்சை அளித்த பெருமான் காந்தியடிகள் என்று அஞ்சாது கூறுவேன்.

**காந்தியடிகளும் சுதேசியமும்**

காந்தியடிகள், நாட்டுக்கல்வி - தொழில் - அரசு - அறம் முதலியவற்றை நிலைபெறுத்த எவ்வெவ் வழியில் முயன்று வருகிறார் என்பதை அவரது வாழ்வில் காண லாம். பரதேசியப் பற்றை அறுக்கவும், சுதேசியப் பற்றைப் பெருக்கவும் அடிகள் ஒத்துழையாமை கோலி யது உன்னற்பாலது. காந்தியடிகள் கொண்ட சுதேசிய

முறைகளில் நாட்டுக்கல்வி, கைராட்டினம், இயற்கை வாழ்வு முதலியன மேலே விளக்கப்பட்டுள்ளன. ஈண்டுப் பொதுவாகச் சுதேசியமென்று குறித்து மேற்செல்கிறேன். காந்தியடிகள் சுதேசியத்தைப்பற்றி அருளிய மொழிகளுள் சில வருமாறு :—

'சுதேசியமில்லாதவரை, சுயராஜ்யமுமில்லை.'

'சுதேசியமென்பது மிக ஆழ்ந்தபொருளுடையதாக எனக்குத் தோன்றுகிறது. அதை நமது சமய வாழ்வில், அரசியல் வாழ்வில், பொருளாதார நிலையில் பொருத்தி வாழக் கூறுவேன். சில வேளைகளில் சுதேசிய உடை அணிவது மட்டும் சுதேசியமாகாது.'

'வாணிபத்தை முற்றிலும் வெளியூர்களிலிருந்து இந்தியாவுக்குப் பொருள்கள் வாராதொழியுமேல், இந்தியா பாலும் தேனும் பரந்தோடும் நாடாயிருக்கும். ஆனால், இந்தியா அப்படி யிருக்கமுடியவில்லை. நமக்கும் பேராசையுண்டு; இங்கிலாந்துக்கும் அஃதுண்டு. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு பிழைபட்ட சித்தாந்தக் கால்கொண்டு நிற்கிறது. அச் சித்தாந்தங் கொண்டு இங்கிலாந்து நிலவுதல் கூடாது. இந்திய மக்களின் பொறுப்பு இங்கிலாந்துக்கு ஒப்படைக்கப்பட்டதென்பது அத்தேசத்தின் உறுதியான அறிக்கை. இஃதுண்மையானால் லங்காஷையர் ஒதுங்கி நிற்றல்வேண்டும். இப்போது சிறிது நடுக்கு உற்றாலும், லங்காஷையர் துன்பமின்றி ஒதுங்கிவிடலாம். சுதேசியம் வன்மத்தால் கொள்ளும் ஒருவித பகிஷ்கார முறையன்று என்று நான் கருதுகிறேன். சமய ஒழுக்கமாக அதை எல்லோரும் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்பது எனது கருத்து.'

'சென்னையிலே பிறந்து சென்னையிலே வளர்ந்து உங்கள் வீட்டருகே நின்று ஒருவன் வாணிபஞ் செய்யும்

போது, பம்பாயினின்றும் ஒருவன் போந்து இங்கே வாணிபஞ் செய்வானுனல், இவனிடம் நீங்கள் பொருள் பெறுவது நியாயமாகாது. சுதேசியத்தைப்பற்றி யான்கொண்ட கருத்து இது. சென்னையினின்றுங் கைதேர்ந்த ஓர் அம்பட்டன் உங்கள் கிராமத்துக்கு வந்தாலும், நீங்கள் கிராம அம்பட்டனையே ஆதரித்தல் வேண்டும். சென்னை அம்பட்டனைப்போல உங்கள் கிராம அம்பட்டன் தொழிலில் திறம் பெற்றவனுக வேண்டுமானல், அவனைச் சென்னைக்கனுப்பித தேர்ச்சி பெறுமாறு செய்யுங்கள். அதைச் செய்யும்வரை நீங்கள் வேருேர் அம்பட்டனை நாடி ஓடுவது நியாயமாகாது. இது சுதேசியம்.'

'யான் சுதேச உடை அணிந்திருக்கிறேன். என்? அஃது இயற்கையானது; இந்தியனுதற்குரியது. ஐரோபபியரைப் பின்பற்றி அவரது உடை அணிவது நமது ஈனத்துக்கும், மானக் கேட்டுக்கும், பலக் குறைவிற்கும் அறிகுறியாகும். எளிமைக்கும், விலைக் குறைவிற்கும், சுகாதாரத்துக்கும் உரிய நாட்டு உடையை விலக்குவது சிறந்த தேசியப் பாவம்.'

'1918-ல் அந்நியத் துணிக்கு அறுபது கோடி ரூபா நாட்டினின்றும் நாம் அனுப்பினேம. இவ்வாறு அந்நியத் துணியை வாங்கி வருவோமானல், அதற்குரிய வருவாயைப பெருதவாறு அவ்வளவு இந்திய நெசவுக்காரரையும் நூற்போரையும் தகைவோராகிருேம். அச் சகோதரர்க்கு மாற்ருக ஏதாயினும் வேறு தொழில் கொடுத்திருக்கிருேமா? அஃதுமில்லை. ஜனத்தொகையில் பத்திலொரு பங்கினர் அரைவயிறு உண்டும், மிகுதியில் பெரும் பான்மையோர் போதிய உணவு கொள்ளாமலுமிருத்தல் வியப்பன்று. மத்திய வகுப்பினர் குறையுணவு உண்டு வருகிருர். குழந்தைகட்குப் போதிய பால் கிடைப்பதில்லை. கண்ணுள்

ளோர் இதைக் காண்பாராக. வழங்கப்பட்டுள்ள சீர்திருத்தத் திட்டம் எவ்வளவு தாராளமானதாயினும், அது சமீபத்தில் நமது துன்பத்தைப் போக்குவதாகாது. சுதேசியம் துன்பத்தைப் போக்குவதாகும்.'

'உடலுக்குப பழைய மலம் எத்தன்மைத்தோ அத்தன்மைத்து இந்தியாவிற்கு அயல்நாட்டுத் துணி.'

'சுதேசிய அமைபபுக்கள் திறம்படக் கோலப்படின், அவை சுதேசியததை வளர்ப்பதோடு, சுதேசியத்தின் பயனாய சுயராஜ்யத்தையும் அளிப்பனவாகும்.'

'அநநியத் துணியின்மாட்டுள்ள நயம் அந்நிய ஆட்சியை நிலைபெறுத்தி யிருக்கிறது; நாட்டில் வறுமையை வளர்த்து வருகிறது; இன்னுங் கொடிய ஒன்று, அதாவது பல வீடுகளில் மானம் விற்கபபடுதல். கத்திவாதத்தில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த நெசவுக்காரர் நூற்றுக கணக்கானவர் பம்பாய் முனிஸிபாலிடியில் தெருப்பெருக்குவோராயினர்.'

இவ்வுரைகளால் காந்தியடிகள் சுதேசியத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தும் பற்றும் பிறவும் விளங்கும். காந்தியடிகள் கூறுஞ் சுதேசியம் மக்கள் கூட்டுறவைக் குலைப்பதென்றும், அவரவர் நாட்டில் அவரவரைச் சிறைப்படுத்தித் தாளிடுவதென்றும் சிலர் மறுத்துக் கூறுகிறார்.

கடவுள் ஆணைப்படியே படைப்பு நிகழ்ந்து வருகிறது. மக்கள் பல நாட்டில் படைக்கப்படுகிறார்கள். அவ்வந்நாட்டுக்கென மொழி வழக்க ஒழுக்கம் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. அவைகட்கு மாறுபட்டு நடப்போர் இயற்கைக்கு மாறுபட்டு நடப்போராவர். இவருக்கு இயற்கையின்ப நுகர்ச்சி கூடுமோ? கூடாது. இது

கண்ணிருந்துங் குழியில் விழுவோன் வினைபோன்றதாகும். அவரவர் அவ்வந்நாட்டின் இயற்கையாளராக வாழுமாறு காந்தியடிகள் கூறுகிறார். அவ்வந்நாட்டு இயற்கையாளராய் வாழ்வோர் வேறொரு நாட்டிற்குப் போகலாகாதென்றுதல், அந்த நாட்டவரோடு உறவு கொள்ளலாகாதென்றுதல் காந்தியடிகள் கூறுகிறாரில்லை. ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரைப் பற்றி ஆளுதல் கூடாதென்பதும், அவர் தமது நாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து இவர் நாட்டில் நிரப்பி, இவர் நாட்டின் பொருளாதாரநிலை சுருங்கச் சுரண்டலாகாதென்பதும் காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை. கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்கள் ஆன்மநேய உரிமைப்பாடு கருதி யாண்டுப் போந்தாலென்ன? வந்தாலென்ன? வதிந்தாலென்ன? காந்தியடிகளின் உட்கிடக்கையைத் தேறாது அவர்மீது பழிசுமத்துவது அறிவுடைமையாகாது.

**சுதேசியமும் உரிமையும்**

காந்தியடிகள் பொருட்டுறையாலும் அறத்துறையாலும் மட்டும் சுதேசியத்தை வளர்க்க முயன்று வருகிறாரில்லை. அவர் நாட்டு மக்களுக்குள்ளுஞ் சுதேசியத்தை வளர்த்துவருகிறார். காந்தியடிகள் ஆறிவுறுத்தும் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, வேசையர் சேவை முதலியனவுஞ் சுதேசியத்தின்பாற்பட்டனவே.

**அகச்சுதேசியம்**

ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரு மனிதன்போல் வாழ்தல்வேண்டும். பிறப்பாலோ வேறு எதனாலோ வேற்றுமை நிகழின் அது நாட்டைக் கொலை

செய்யும். ஆதலால், மக்கள் மன ஒற்றுமை சுதேசியத்தின் உயிர்போன்றது அவ்வொற்றுமையில்லா நாட்டில் சுதேசியம் வளரல் அரிதே.

சுதேசியம் பொருட்சார்பு உயிர்ச்சார்புகளிலும் வளரவேண்டுமென்பது காந்தியடிகள் கொள்கை. மக்களுக்குள் அக ஒற்றுமையின்றிப் புறத்தில் சுதேசியத்தைப் போற்றுவதால் என்ன பயன் விளையும்? அகமும் புறமும் சுதேசியவயப்பட்டிருத்தலே இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவதாகும். சுதேசியமென்பது இயற்கைத் தொடர்பன்றி வேறென்னை? இயற்கைத் தொடர்புடைய வாழ்வே மனிதனுக்குரியதாகும். காந்தியடிகள் அவ்வாழ்விற்கோர் இலக்கியமாக விளங்குதல் கண்கூடு

## ௬௦. சுயராஜ்யம்

சுதேசியத்தின் காரியமே சுயராஜ்யமாகலான், சுயராஜ்யம் மனித வாழ்வுக்கு இன்றியமையாததொன்று. ஆதலால், சுயராஜ்யத்தைப்பற்றி ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சுயராஜ்யமென்பது ஒவ்வொருவரது பிறப்புரிமை. இவ்வுரிமைபெறாது வாழ்பவன் பிறவி எய்தாதவனாவன். பிறப்புரிமை இழந்தவன் உயிரிழந்த பிணம்போன்றவன். பிறப்புரிமை இழந்து வாழ்வது வாழ்வாகாது. வாழ்விற்கு அணி பிறப்புரிமை. இவ்வுரிமையின் பெற்றி நோக்கியே, 'நாமார்க்குங் குடியல்லோம்' என்றார் நாவுக்கரசர்; 'சுயஆட்சி எனது பிறப்புரிமை' என்றார் திலகர் பெருமான்.

சுயராஜ்யத்துக்கு அடிப்படை அகத்தூய்மை. அகத் தூய்மையில்லா ஒருவன் பல கேடுகளுக்கு அடிமையாவன். உலகில் எத்துணைபேர் பொய்மை, பொறாமை, சீற்றம், காமம் முதலியவற்றிற்கு அடிமையாளராய் உரிமை இழந்து நிற்கிறார் என்பதை விளக்க வேண்டுவதில்லை. இக்குற்றங்களினின்றும் விடுதலை அடைவது ஆத்ம சுயராஜ்யமென்பது. இச் சுயராஜ்யம் பெறவே மக்கள் படைக்கப்படுகிறார்கள். இதற்குப் புற சுயராஜ்யம் அதாவது உலக சுயராஜ்யம் இன்றியமையாதது.

படைப்பு நோக்கம்

ஆண்டவனால் மக்களுக்குத் தனு கரண புவன போகங்கள் வழங்கப் படுவதன் நோக்கமென்னை? அவற்றைத் துணைக்கருவிகளாகக் கொண்டு உரிமை வாழ்வு பெற்றுத் தீய குணங்களினின்றும் மக்கள் விடுதலை பெறுதல் வேண்டு மென்பதன்றோ? மாயையின் காரியமாகிய தனு கரண புவன போகங்கள் எவ்வாறு மக்களைத் தூய்மைப் படுத்தி உரிமைப் பேற்றை வழங்கும் கருவிகளாகும் என்று சிலர் வினவலாம். மக்கள்பாலுள்ள அஞ்ஞானத்தைச் செருக்கக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஞானக் கருவிகள் மாயையின் காரியமாகிய தனுமுதலியனவென்க. அஞ்ஞானத்தில் வீழ்ந்து உரிமை இழந்து தன்னிலை உணராது கிடக்கும் உயிருக்கு ஆண்டவன் செய்யும் உதவி யாது? தனு முதலியவற்றை வழங்கி அறிவை விளக்கி உரிமை உணர்வை நல்குவது. ஆண்டவனருளால் தனு கரணங்களைப் பெறும் உயிர், புவனத்திற் போந்து போகத்தைத் துய்க்கும் வேளையில், அது தன்

முன்னிலையை உணராமலும், ஆண்டவன் தனக்குப் புரிந்த பேருதவியை மறந்தும் வாழ்தலால், அதனை அஞ்ஞான மெனும் அடிமைத் துன்பஞ் சூழ்கிறது. எவ்வுயிர் ஆண்டவன் புரிந்த துணையை நினைந்து நினைந்து அவனது திருவருளைப் புகழ்கிறதோ அஃது உரிமை இன்பத்தில் மூழ்கியிருக்கும். ஆண்டவன் நினைவோடு வாழ்வோருக்குத் தனுகரண புவன போக மென்னும் மாயை ஞான விளக்காகத் துணை புரியும். ஆண்டவன் நினைவின்றி வாழ்வோருக்கு மாயை இருளாகத் தோன்றும். தனு கரண புவன போகங்கள் ஆண்டவனால் அளிக்கப்பட்ட இயற்கை உடைமைகள். இவைகளைப் பற்றி விரித்துக் கூறல் ஈண்டைக் கேற்புடைத் தன்றாகலின், இவ்வளவோடு நின்று மேற்செல்கிறேன்.

ஆண்டவன் ஒவ்வோருயிர்க்கும் எவ்வாறு தனு கரணங்களை நல்குகிறானோ அவ்வாறே அததற்குப் புவன போகங்களையும் நல்குகிறான். ஒருவனுக்குத் தனு கரணம் எத்தன்மையனவோ அத்தன்மையன அவனுக்குப் புவன போகங்களும்.

ஒருவன் தனது தனுவெனும் உடலுக்கு ஊறு நிகழாதவாறு அதைக் காப்பது போலவே, அன்னான் தான் பிறந்த நாட்டுக்கும் ஊறுநிகழாதவாறு அதைக் காத்தல்வேண்டும்.

உடலும் நாடும்

ஒருவனது உடலுக்கும் அவனது நாட்டுக்கும் வேற்றுமையில்லை. உடலினும் நாட்டைப் போற்றலவேண்டு மென்றுங் கூறுவேன். நாடு வறுமைக்கும் பிணிக்கும் இரையானால், உடல் நலத்தை எவ்வாறு காப்பது? தனு கரணங்கட்குப் புவன

போகங்கள் இன்றியமையாதன என்பது கூர்ந்து கூர்ந்து துருவித் துருவி ஆராயற்பாற்று.

ஒருவன் எவ்வாறு தனது அகத்தைப் பொய் பொறாமை முதலியவற்றிற்கு அடிமைப்படுத்தாது வாழ விரும்புகிறானே, அவ்வாறே ஒரு நாட்டில் வாழும் மக்களும் தங்கள் பொது வாழ்வில் பொய்மை பொறாமை முதலியவற்றைப் புகுத்தி நாட்டை அடிமைப்படுத்தாது காக்க விரும்புதல் வேண்டும். ஒவ்வொருவருந் தூயராய் வாழ்ந்தால் அவர் வாழும் நாடு அடிமை இருளில் வீழ்வதாகாது. உலகியற்றுறையில் ஒவ்வொருவரும் தூய்மை காக்க இயலாது வழுவினும், பொது வாழ்விலாதல் அவர் தூய்மை காக்கக் கடமைப்படல் வேண்டும். இதனால் தனிப்பட்ட வாழ்வில் தூய்மை காத்தல் வேண்டுவதில்லை என்று எவருங் கொள்ளலாகாது. தனிமையின் ஈட்டமே பொதுமையாகலான், தனித்தனித் தூய்மை பொதுத் தூய்மையாகப் பரிணமிக்கும். புறனடை கொண்டு ஒல்லும்வகை பொதுவாழ்விலாதல் தூய்மை காப்பது நாட்டுக்கு நலந்தருவதாகும் என்று குறிப்பிடலானேன். இதையே விதியாகக் கோடலாகாது. பொது வாழ்வைத் தூய்மை நெறியில் செலுத்தல் நாட்டை அடிமைக் குழியில் வீழாது காப்பதாகும்.

தூய்மையும் நாடும்

ஒரு நாட்டில் வாழுஞ் செல்வர் செல்வச்செருக்கால் வறியரை வருத்தலாகாது; வலியர் மெலியரை வருத்தலாகாது; கற்றோர் கல்லாரை அறிவால் துன்புறுத்தலாகாது; உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் துன்புறுத்தலாகாது; ஆணினத்தார் பெண்ணினத்தாரை ஒறுத்த

லாகாது; குருமார் சீடரை ஏமாற்றலாகாது. ஒவ்வொருவருந் தாம் தாம்பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறுதல் வேண்டும் என்னும் அருள் மனமுடையராய் வாழ்வது அறம். ஒருவன் தனக்குத் தானே ஊறு செய்துகொள்ள முயலாததுபோல, ஒரு நாட்டார் தம்முடன் பிறந்த மற்றவர்க்கும் ஊறுசெய்யக் கனவிலுங் கருதாது வாழ்வது நல்லது.

ஓரினத்தவரின் வழக்க ஒழுக்கம்-கடவுள் வழிபாடு-முதலியன, மற்ற இனத்தவரின் வழக்க ஒழுக்கம் - கடவுள் வழிபாடு முதலியவற்றுடன் ஒவ்வாதனவாய்த் தோன்றின், அவ்வினத்தார் மாறுபட்ட இனத்தவரைத்

உரிமை

தமது வழக்க ஒழுக்கம் முதலியவற்றைத் தழுவுமாறு வலியுறுத்தல் கூடாது; அச்சுறுத்தல் கூடாது. அன்பு நெறிநின்று அறவுரையால் அவர் மனத்தை மாற்றஞ் செய்ய முயல்வது அறிவுடைமை. ஒவ்வொருவர் பேச்சுக்கும் எழுத்துக்கும் உரிமையிருத்தல் வேண்டும். ஒருவர் உள்ளத்தில் இயற்கையா யெழுங்கருத்து வெளிவராதவாறு மற்றவர் தமக்குள்ள வன்மையால், அடக்குமுறையாலோ, வேறு எவ்வழியாலோ அதைத் தடுத்தல் பெரும்பாவம். ஒருவர் தமது கருத்தை உரிமையுடன் வெளியிடப்பெறாத நாடு எவ்வாறு உரிமையின்பத்தை நுகர்வதாகும்?

நாட்டை மறந்து, சாதியில்-வகுப்பில்-சமயத்தில் மனத்தைச் செலுத்திக் கலாம் விளைத்தலும் உரிமைக்கு ஊறுதேடுவதாகும். ஒரு நாட்டில் வாழ்வோர் அந்நாட்டில் தோன்றும் பலவிதக் கருத்து வேற்றுமைகட்கும் இடங்

தரும் பெருந்தகைமையுடையரா யிருத்தல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாடும் ஒழுகின், உலகில் ஆண்டவன் அருணெறியெனுஞ் சகோதரத்துவம் மருவி நிற்கும். ஒருவன் தன்னைப்போலவே தான் பிறந்த நாட்டையும், ஒரு நாட்டார் தம் நாட்டைப்போலவே பிறர் நாடுகளையும் நேசித்து வருவரேல், ஆண்டவன் படைப்பு நோக்கம் நிறைவேறும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

தனிப்பட்ட வாழ்விலோ அல்லது நாட்டிலோ அல்லது உலகிலோ உரிமைக்குக் கேடு நிகழின், அதன் பொருட்டுக் கொலைமுறையைக் கையாளல் அறியாமை. அன்பால் துன்பம் பொறுத்து, மக்கள் உள்ளத்தெழும் எரியை அருளால் தணித்து, உரிமைக் கடவுள் காட்சி காண முயல்வது அறிவுடைமை.

சகோதர உரிமைகொண்டு வாழும் நாடு அடிமைப் படுதலில்லை. உரிமை பெற்ற நாட்டில் வாழ்வோர், உலகியல் துன்பத்தால் பீடிக்கப் பெறாது, நல்லுணவு கொண்டு, நல்லுடை உடுத்து, உலக இன்பந்துய்த்து, ஓய்ந்த நேரத்தை உலகு உயிர் கடவுள் ஆகிய பொருள்களை ஆராயும் வழியில் கழிப்பர். மக்கள் ஆன்ம ஆராய்ச்சிக்கும் இன்பப் பேற்றிற்கும் நாட்டுரிமை கருவியாகும். ஆதலால் ஒருவன் தனக்கு ஆண்டவனளித்த தனுவைப் போற்றிக் காப்பதுபோல அவனுக்கு அவ்வாண்டவனளித்த புவனத்தையும் அவன் போற்றிக் காத்தல் வேண்டும்; காவானேல் அவன் கடவுள் ஆணைமீறிய பொல்லாத பாவியாவன்

உலகில் ஒரு நாடு தனது அறியாமையால் மேலே குறிப்பிட்ட குற்றங்கள் போன்ற குற்றங்களிழைக்கு

மானால், அது சுயராஜ்யமிழந்து வருந்தும். இதற்கு உலக சரித்திரம் சான்று கூறும். நாம் பிறந்த இப்பாரத நாடு எடுத்துக் காட்டாக நிற்கிறது. பாரத நாட்டில் என்ன

பாரத நாடும் சுயராஜ்யமும்

இல்லை? எல்லாமுண்டு. பாரத நாடு இயற்கை வளமெலாம் பெற்றிருக்கிறது; செயற்கை நலமெலாம் உற்றிருக்கிறது. மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத எல்லாக் கல்வித் துறைகளும் நம் பாரத நாட்டிலுண்டு; எல்லா அறிவுக் கொள்கைகளும் நம் பெரும் நாட்டிலுண்டு. இவையெல்லாம் பொலிவுற்றமையால் நமது நாடு உயிர்க்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு காணும் பேறுபெற்றது; இப்பேற்றால் எளிய இயற்கை வாழ்வும் அருநெறியும் மக்கள் வாழ்விற்கு உரியன என்னும் உண்மை கண்டது. நேயர்களே! நம்பண்டை முனிவரர் வாழ்வை உற்றுநோக்குங்கள்; உபநிடதம் திருக்குறள் முதலிய நூல்கள்மீது கருத்தைச் செலுத்துங்கள்; நோக்கின் - செலுத்தின் - என்ன பெறுவீர்கள்? எளிய இயற்கை வாழ்வையும், அருநெறியையும் பெறுவீர்கள். வாழ்வின் முடிந்த நிலை கண்ட இந்நாடு இந்நாளில் உரிமை இழந்து வருந்துவதென்னை?

இந்தியா சுயராஜ்யம் இழந்ததற்குக் காரணங்கள் பலபடக் கூறலாம். இந்தியா எளிய இயற்கை வாழ்வையும் அருநெறியையும் அதாவது அஹிம்சா தர்மத்தையும் தனக்குரிய நாட்டு வாழ்வாக் கொண்டமை அஃது அயலவர் வயப்பட்டதற்குச் சிறந்த காரணமென்று சிலர் கூறுவர். இக்காரணம் எனது சிற்றறிவிற்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. மக்கள் பிறவியால் அடையக்

கூடிய பயனுக்கு உரித்தாகிய உண்மைநெறியை இந்தியா கண்டது பிழைபாகாது. அந்நெறி வளரவொண்ணாதவாறு நாட்டிற் றோன்றிய சில்லோர் செய்த சூழ்ச்சியால் விளைந்த ஊழை இப்பொழுது நாடு அனுபவித்து வருகிறது என்று யான் கூறுவேன்.

இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணங்களாக உள்ளனவற்றுள் சிறப்பாகப் பெண்ணுரிமை கடிந்தது, பிறப்பால் சாதி வேற்றுமை வகுத்து உயர்வு தாழ்வு கற்பித்தது, மக்களுள் தீண்டாமை என்றொரு கூட்டத்தாரை ஒதுக்கிச் சிறுமைப் படுத்துவது, நன்னெறி வளர்த்து வந்த சமண பௌத்த சமய அறவோரைக் கொலை செய்தது முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

**இடைக்காலக் கொடுமைகள்**

இவைகளை அடிக்கடி இந்நூற்கண் கூறிவருவது குறித்து நேயர்கள் மன்னிப்பார்களாக. கொடுமைகளைப் பன்முறை குறிக்கவேண்டுமென்பது எனது கருத்து. இடைக்காலத்தில் நம் முன்னோர் இயற்கை அழகின்மீதும் வேதாந்தத் தெளிவின் மீதும் கருத்தைச் செலுத்தாது, வேதாந்தத்தின் பெயரால் பல கொடுமைகள் நிகழ்த்தியிருக்கின்றனர். சமயச் சண்டைகளும், சாதிச் சண்டைகளும், நூற் புரட்சிகளும் நாட்டில் மலியலாயின. சமண பௌத்த அறவோரைத் தடிந்த சைவ வைணவ குருமாருள் நிகழ்ந்த போர்கள் எண்ணில; கொலைகள் எண்ணில; வெளிவந்துள்ள மறுப்பு நூல்கள் எண்ணில; நூற் புரட்சிகள் எண்ணில; கோயில்களை இடித்த மறச்செயல்கள் எண்ணில. அந்நாளில் நம்மவர் எழுதிய சமயக் கண்டன நூல்களை இது போழ்து வாசித்துப் பார்த்தால்,

அவர் வஞ்சனையையும் பொறாமையையும் கடவுளாக வழிபட்டனரா அல்லது தத்துவங் கடந்த தனி முதற் கடவுளாம் அன்பை வழிபட்டனரா என்பது புலனாகும். மன்னர் அவ்வப்போது தழுவிய சமயத்தின்மீது பற்றுக்கொண்டு சமயவாதிகள் மற்ற சமயத்தவரை வருத்திய கொடுமை சொல்லொணாதது. சமயப் பொறை என்பது நாட்டில் அரிதாய் அருகிவிட்டது.

சமயப்போர் மற்ற நாடுகளில் நிகழவில்லையோ என்று சிலர் கருதலாம். மேல் நாட்டிலும் சமயப் போர்கள் நடந்திருக்கின்றன. அவைகளின் பயனை அந்நாடு அநுபவித்து விரைவில் தெளிவுபெற்று விட்டது. மேல் நாட்டார், பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கச் செவ்வனே பயின்றிருக்கிறார். கருத்து வேற்றுமையை மக்கள்மீது கொண்டு அவர்களை வருத்த அன்னார் முயல்வதில்லை. நமது நாட்டில் இதுபோழ்தாதல் கருத்து வேற்றுமை குறித்து மனிதரைத் தாக்குந் தீயொழுக்கத்தை நம்மவர் விடுத்திருக்கிறாரா? இல்லையே.

**கருத்து வேற்றுமைக்கு மதிப்பு**

பழைய சமயப்போரும், சாதிப்போரும், பிறவும் இப்பொழுது அரசியல் கட்சிப்போராகவும், பத்திரிகைப் புரட்சியாகவும், பிறவாகவும் உருக்கொண்டிருக்கின்றன. சமயப் பொறையும்; பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாமையும், பெண்ணைச் சமமாகக் கருதலும், நாட்டு மக்கள்பால் பொறாமை கொண்டு அவர்கட்குக் கேடு சூழாமையும், இன்னோரன்ன பிறவும் நாளை நாட்டில் உருக்கொண்டு தாண்டவம் புரியுமாயின், நாளை அன்றைக்குச் சுயராஜ்யம் அரும்புவது திண்ணம். நமது நாட்டில் இடைக்காலத்

தில் எழுந்த கொடுமைகள் வாழையடி வாழையென வளர்ந்து வருகின்றன. அவைகளை ஒழித்துப் பண்டை மூதறிஞர் கண்ட எளிய இயற்கை வாழ்வையும், எவ்வுயிர்க்கும் மனத்தாலும் உறுகண் செய்யா அருநெறியையும், பொது நோக்கையும் பெற நம்மவர் முயலல் வேண்டும். இதற்குச் சுதேசியம் இன்றியமையாதது.

புறக்கோலத்தில் மட்டுஞ் சுதேசியங் காட்டுவதால் பயனில்லை. அகத்தில் சுதேசிய அறக்கடவுள் கோயில் கொள்ளுமாறு உழைத்தல்வேண்டும். அதற்கு முதலாவது நாட்டு மக்களிடத்தில் ஒருமைப்பட்ட உளங்கொண்டு அன்பு பூண்டொழுகும் பெருந்தகைமை வேண்டற்பாலது. நாட்டில் தம்முடன் பிறந்தாரை நம்பாது அவர்பால் சூழ்ச்சிசெய்யும் நீர்மை நாட்டிலுள்ள மட்டும் நாடு உரிமை பெறல் எங்ஙனம்? நாட்டில் எத்துணைக் கருத்து வேற்றுமைகள் எழுந்தாலென்ன? காட்டில் எத்துணைப் பூக்கள் மலர்கின்றன? பன்மையில் ஒருமை காண்டலன்றோ அறிவுடைமை? இடைக்காலத்தில் நாட்டின் இயற்கைக்கு முற்றும் மாறுபட்டுத்தோன்றிய கொடுமைகள் - மருணெறிகள் - பேயெண்ணங்கள் நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணங்களென்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இவைகளே மூலகாரணங்கள். ஏனைய ஒருபுடை. மூலம் திருந்தினால் பிற தாமே ஒழுங்குபடும்.

மனிதன் தன் வாழ்வில் தன்னுரிமை குறித்து உழைப்பதுபோலத் தன்னைச் சூழ்ந்துள்ள நாட்டவர் உரிமை குறித்தும் உழைத்தல் வேண்டும். இது

**நாட்டுத் தொண்டு**

மனிதன் தன் வாழ்வில் கொள்ளத்தக்க ஒழுக்க முறைகளுள் ஒன்று; சிறந்த ஒன்று என்றுங் கூறலாம். தான் பிறந்த நாடு அடிமைக் குழியில் வீழ்ந்து இடருறும் வேளையில்,

தன் உரிமை குறித்துப் பாடுபடும் ஒருவனது செயல், செடியின்மீது ஞாயிற்றொளி படாதவாறு மூடியுள்ள தூறுக்கு நீர் வார்த்தவன் செயல் போன்றதாகும். நாட்டுக்கு உழைப்பது மனித வாழ்வின் ஒரு பகுதி என்று கூற என் மனம் எழவில்லை; பெரும்பகுதி - முழுப் பகுதி - என்று கூறவே என்மனம் எழுகிறது. தன்னலம் நாடாது தூய உளங்கொண்டு நாட்டுக்குத் தொண்டு செய்வதினுஞ் சிறந்த கடவுட்டொண்டு பிறிதொன்றில்லை என்பது எனது கருத்து.

**காந்தியடிகளும் சுயராஜ்யமும்**

மனித வாழ்விற்கு இலக்கியமாக யான் கொண்டுள்ள காந்தியடிகளின் வாழ்வில் சுயராஜ்ய சேவை விரவியிருப்பது உலகறிந்த தொன்று. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் பிறர் நலம் நாடி உழைக்கப் புகுந்த நாள்தொட்டு, இன்றுவரை, சுயராஜ்ய சேவையே செய்து வருகிறார். சுயராஜ்ய சேவைக்கு இன்றியமையாத நாட்டுக்குரிய இயற்கை வழக்க ஒழுக்கம், அகத்தூய்மை, ஜீவகாருண்யம் முதலிய பண்புகளை மகாத்மா தமது வாழ்வில் பெற்றிருப்பது மேலே பல இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அஹிம்சா தர்மத்தின் பொருட்டு, உயிரையும் பொருட்படுத்தாது, உண்ணாவிரதங்கொண்ட ஒருவர் எண்ணும் எண்ணத்திலும், பேசும் பேச்சிலும், எழுதும் எழுத்திலும், புரியுந் தொண்டிலும் அஹிம்சை அத்துவிதமாகக் கலந்து கொண்டிருக்கும். பிறர்க்கு உறுகண் நினையாத அருள் நெஞ்சினரே உரிமை நுட்பந் தெரிந்தவராவர். மகாத்மா காந்தி போன்றார் உரிமை குறித்து உழைக்குந் திற

னுடையார் என்று சொல்வது உயர்வு நவிற்சியாகாது. காந்தியடிகளின் தொண்டிற்கு அன்பும் - பொறுமையும் - உண்மையும் - அஞ்சாமையும் - நான்கு கால் கொண்டு நிலவலால், அவர் செயலில், வரும்வினை அதாவது ஆகாமிய கர்மம் வளர்வதில்லை. காழ்ப்பு-பொறாமை-பொய்மை - அச்சம் - முதலியவற்றை அடிப்படையாகக் கிடத்தி நிகழ்த்துந் தொண்டுகள் ஆகாமிய கர்மத்தை வளர்ப்பனவாகலான், அவைகள் உரிமைப் போருக்கு உரியனவாகா. 'அறிவொடு கலந்த அஹிம்சை இந்தியாவின் பொது அறமாயின், சுயராஜ்யம் சேய்மையிலிராது என்பது எனக்குத் தெரியும்' என வரூஉம் அடிகளின் மொழியை உற்றுநோக்குக.

மகாத்மா காந்தி பிறருள்ளத்தெழூங் கருத்துக்கு உரிமை வழங்குவதில் முன்னணியில் நிற்பவர் என்பது அவர் வாழ்வில் கனிந்திருக்கிறது. "பிறர் கருத்துக்கு உரிமை நல்கல்வேண்டும்; எவர் பேச்சையும் அமைதியாகக் கேட்டல்வேண்டும். 'மாற்றார்' என்று, ஒருவர் பேசும்போது கூச்சலிட்டும், கல்லெறிந்தும், வேறு பல கொடிய வழி நின்றும், அவர் பேச்சைத் தகைவது கூடாது. அஃது உரிமை விரும்புவோர் செயலன்று" என்னுங் கருத்துப்பட அடிகள் பன்முறை பேசியிருக்கிறார்: எழுதியிருக்கிறார். மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மையார் ஒரு முறை பம்பாயில் பேசியதைத் தகைந்த மாணாக்கருக்கு மகாத்மா அறிவுச்சுடர் கொளுத்தியது மேலே ஓரிடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. 'தம்மைக் குறைகூறவும் மறுக்கவும் பிறர்க்கு உரிமையுண்டு' என்று கூறும் பெருமையைக் காந்தியடிகள்

பெற்றிருப்பதை ஈண்டுக் கழிபேருவகையோடு குறிக்கிறேன். தாம் உரிமை யின்பம் நுகர்வதுபோலத் தமது நாடும் அவ்வின்பம் நுகரல் வேண்டுமென்னுந் தவமன்றி வேறு தவம் மகாத்மா காந்திக்கு உண்டோ ?

அடிகள் சுதேசிய தர்மங் குறித்து ஒத்துழையாமை கோலியது கருதற்பாலது. நாட்டவர்க்குள் அன்பு நிலவ வேண்டிப் பெண்மக்கள் உரிமைக்கும், தீண்டாமை விலக்கிற்கும், ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கும் அவர் உழைத்து வருதல் கண்கூடு. இவைகளைச் சுயராஜ்யத் தூண் என்று மகாத்மா அடிக்கடி சொல்வர்.

சுயராஜ்யம் ஒருவர் கொடுக்க மற்றொருவர் வாங்குவதன்றென்பதையும், அது நாட்டவர் முயற்சியில் தானே மலர்வதென்பதையும் மகாத்மா காந்தியைப்போல் பலர் அறிவுறுத்தினாரில்லை. நாட்டில் இடைக்காலத்தில் தோன்றிய உரிமைக்கேட்டின் முறைகளை அறவே களையவல்ல திட்டங்களை மகாத்மா காந்தியைப்போல் எவருங் கோலிக் காட்டினாரில்லை. இந்தியாவை இந்தியாவாகக் காண்டல் - கொள்ளல் - செய்தல் - சுயராஜ்யம் என்பது காந்தியடிகள் கொள்கை. சுயராஜ்யத்தைப்பற்றி அடிகள் வெளியிட்ட கருத்துக்களிற் சிலவற்றையாதல் ஈண்டு எடுத்துக் காட்ட வேண்டுவது எனது கடமை.

> 'ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை, கதர், தீண்டாமை விலக்கு என்னும் இம்மூன்றும் என்னுடைய சுயராஜ்யத்தின் கடைக்கால்.'
>
> 'அரசாங்கத்துக்கு எதிராக - பொதுமக்களின் பிரதிநிதிகளாக - அரசியலாராகிய நாம் நிற்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இஃதொரோவழி பொருந்தியதாயினும்,

பொதுமக்கள் தங்களைப் பண்படுத்திக் கொள்வதற்கு முன்னர், அவர்களை நாம் பயன்படுத்துவமேல், நாம் அவர்களின் பிரதிநிதிகளாக மாட்டோம்.'

'நம் தேசத்தாருள் இழிந்தவரெனப் படுவோரும் உரிமை பெறுவதே, யான் சுயராஜ்யம் என்பதற்குக் கொண்ட பொருள்'

'தீண்டாமையை யான் தொலைத்தல் வேண்டும். ஏன்? அதன் அழிவு சுயராஜ்யத்தின் இன்றியமையாமை. எனக்குச் சுயராஜ்யந் தேவை.'

'நமது கிளர்ச்சி மேனாட்டு முறையை அடிப்படையாகக் கொணடிருக்கிறது. இப்பொழுது நம்மவர் விரும்பும் சுயராஜ்யம் மேல்நாட்டார் உரிமைப்பேறு போன்றது. அவா எண்ணத்திற்கேற்ப இந்தியா மேல்நாடுகளோடு போட்டி போடல் வேண்டும். அதைவிட வேறு வழியில்லையென்று பலர் கருதுகிறார். நான் அங்ஙனங் கருதுகிறேனில்லை. இந்தியா, ஐரோப்பா அன்று - ஜபபான் அன்று - சீனு அன்று - என்பதை நான் மறத்தல் முடியாது. இந்தியா 'கர்மதேசம்' எனபதும், பிற 'போகபூமிகள' என்பதும் தெய்விக வாக்கு. இந்தியாவின போக்கு மற்ற நாடுகளினின்றும் மாறுபடுவதென்று யான் உணர்கிறேன்.'

'சுயராஜ்யம் எனபது ஒவ்வொருவரும் உரிமை பெறுவது.'

"'அஹிம்சை வழிச் சுயராஜ்யம்' என்பது, இடையில் கலகத்துக்கும அராஜகத்துக்கும் இடந தருவதன்று. அஹிம்சை வழிச் சுயராஜ்யமாவது, அமைதியான புரட்சியால், செழுமையாக வளர்க்கப்பட்ட மரத்தினின்றும் தானே இயல்பாக விழும முதிர்ந்து கனிந்த பழம்போல, அதிகாரம், ஜனப்பிரதிநிதிகளிடம் நெருங்கி நெருங்கி உறவுகொண்டு மாறுவது."

'சுயராஜ்யம் கடவுளாலுங் கொடுக்கப்படுந்தகைய தன்று. அதை நமக்கு நாமே (முயன்று) பெறல்வேண்டும். சுய ராஜ்யம் என்னுஞ் சொல்லியல்பே பிறர் கொடையிலில்லை என்பதைக் குறிக்கும்.'

'காங்கரஸ் விரும்பும் சுயராஜயம் இங்கிலாந்து விரும்பு மாறு கொடுக்கப்படுவதன்று. அது தேசத்தார் விரும் பும் வண்ணம், தென்னாப்பிரிக்காவைப்போலப் பெற வேண்டுவது.'

'மரண பயத்தினின்றும் விடுதலை பெறுவது சுயராஜ் யம். மரணத்துக்கு அஞ்சும் நாடு சுயராஜ்யம் பெறாது.'

'சுயராஜ்யம் கோழைகளின் உடைமையன்று; அஞ்சா நெஞ்சினர் உடைமை.'

இந்தியாவின் நோக்குடன் இந்திய உரிமை பொருந்தியதாக இருத்தல்வேண்டுமென்றும், 'சர்வம் பரவசம் துக்கம், சர்வம் ஆத்மவசம் சுகம்' என்பது இந்தியாவின் நோக்கென்றும், இதை நிறைவேற்ற மேல்நாட்டு முறைப்படி மகாநாடுகள் முதலியன கூடுவ தால் பயன் விளையாதென்றும், உயிர்கட்குத் தொண்டு செய்யும் வழிக் கடவுளுக்குத் தொண்டு செய்வதென் பது இந்திய அறமென்றும், இவ்வறத்துக்குரிய இந்தியா வின் சுயராஜ்யப் பேறு, இங்கிலாந்தின் சுயராஜ்யப் பேறாய் உலக சுயராஜ்யப்பேறாய் முடியுமென்றும், ஆங்கிலேயரைத் துன்புறுத்திக் கொன்று பெறுவது இந்தியாவிற்குரிய தர்ம சுயராஜ்ய மாகாதென்றும் அடிகள் அருளிய செம்மொழிகளின் நுட்பங்களை அன் பர்கள் உணர்ந்து ஒழுகுவார்களாக.

## ௧௧. சத்தியாக்கிரகம்

வாழ்விற்குச் சுயராஜ்யம் இன்றியமையாதது. சுயராஜ்யமில்லாத வாழ்வு வாழ்வாகாது. சுயராஜ்யப் பேற்றிற்குரிய வழி யாது? சத்தியாக்கிரகம். சத்தியாக்கிரகத்தை அடிப்படையாக் கொண்ட எம்முறையும் சுயராஜ்யப் பேற்றை வழங்குதல் ஒருதலை. ஆகவே, சத்தியாக்கிரகத்தின்மீது நமது கருத்தைச் செலுத்துவோம்.

**சத்தியாக்கிரகம்**

இயற்கைத் தொடர்புடைய வாழ்வில் அறியாமை காரணமாகச் சிற்சில வேளைகளில் ஊறு நிகழ்தல் காண்கிறோம். தந்தைக்கும் மைந்தனுக்கும், தலைவனுக்கும் தலைவிக்கும், குருவிற்குஞ் சீடருக்கும், மற்ற மற்றவர்க்கும், குடும்பத்துக்குள்ளும், நாட்டுக்குள்ளும் ஏற்பட்டுள்ள இயற்கைத் தொடர்பிற்கு எக்காரணத்தாலோ ஊறு நிகழின், அதைப் போக்க வழி யாது? அவ்வழி இயற்கைக்கு மாறுபட்டதா யிருத்தலாகாது. மாறுபட்ட வழியைக் கொள்வது மேலும் மேலும் துன்பத்தைப் பெருக்குவதாகும். இயற்கை வாழ்வை நமக்கு ஈந்த ஆண்டவன், அதற்கு இடர் நேரும்போது, அதைக் காப்பதற்கும் ஓர் இயற்கை அறநெறியை நமக்குக் கோலியுள்ளான். அஃது எது? அது சத்தியாக்கிரகமென்பது.

சத்தியாக்கிரகமென்பது சத்தியத்தை ஆக்கிரகித்து நிற்பதென்றும், அது தமிழில் உண்மை கடைப்பிடித்தல் என்னும் ஆன்றோர் ஆட்சி பெற்றிருக்கிறதென்றும் இந்நூற்றொடக்கத்தில் சொல்லப்பட்டுள்ளன. ஈண்டுக் கூறியது பொதுவகை பற்றியது.

சத்தியாக்கிரகமென்பது காந்தியடிகளால் காணப் பெற்ற ஒருவித அறப்போர் என்று சிலர் கருதுகிறார். அது தவறு. சத்தியாக்கிரகம் தொன்று தொட்டு நிலவி வருவது. சத் என்னுஞ் செம்பொருள் என்று தொட்டு உண்டோ, அன்று தொட்டுச் சத்தியமும் உண்டு; சத்தியாக்கிரகமும் உண்டு. சத்தியம் காலவரை கடந்தது; சத்தியாக்கிரகமும் காலவரை கடந்ததே. இது காலவரை கடந்ததொன்றாக லான், இதை அநாதி என்று அறிஞர் கூறுப.

காலம்

சத்தியாக்கிரகம், பிரகலாதன் முதலிய பல பெரியோரால் கடைப்பிடித்தொழுகப்பெற்ற ஓர் அற முறை. காந்தியடிகளும் அவ்வற வழியில் நின்று, உலகையும் அவ்வழியில் நிறுத்த முயன்று வருகிறார். அறமுறை ஒன்றாயினும் அதை விளக்குஞ் சொல்லும் சொற்றொடரும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதப் பெயர்பெற்று வருகின்றன.

உலகிலுள்ள சமயங்களெல்லாம் சத்தியத்தை ஆக்கிரகித்து நிற்பனவே. சத்தியத்தை ஆக்கிரகியாத சமயம் ஆத்மஞானத்துக்கு உரியதாகாது. உண்மையும் அஞ்சாமையும் அன்பும் அருளும் உடையோரனைவரும் சத்தியாக்கிரகிகளேயாவர். உண்மையும் அஞ்சாமையும் அன்பும் அருளுங் கொண்ட ஒன்றைச் சத்தியாக்கிரக மெனக் காந்தியடிகள் அழைத்தார். நம் முன்னோர் அதை உண்மைநெறி என்றும், அருணெறி என்றும், திருநெறி என்றும், நல்லாறு என்றும், சன்மார்க்கம் என்றும் அழைத்துப் போந்தனர். காந்தியடிகள் அப் பெருநெறிக்குச் சத்தியாக்கிரகமெனும் பொருள் பொதிந்த பெயர் சூட்டினார்.

தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் பொறுமைப் போர் தொடங்கியபோது, அப்போருக்குச் 'சாத்வி எதிர்ப்பு' என்னும் பொருள் அளிக்கு பாஸிவ் ரேஸிஸ்டேன்ஸ் (Passiv Resistance) என்னும் ஆங்கில

சொற்ருெடர்த் தோற்றம்

பெயரிட்டு வழங்கி வந்தார். அச்சொற்ருெடரிலுள்ள நுட்பந் தேருத வெண்ணிறத்தார் அதற்குக் கொண்ட பொருள் பலவிதம். பொறுமைப் போர் என்பது வலிமையில்லாத கோழைகளுடைய தென்றும், அதன் அடிப்படையில் பகைமை உண்டென்றும், என்ருயினும் அது மூர்க்க நெறியாக மாறுமென்றும் அவரால் ப திறப் பொருள் வழங்கப்பட்டன. அப்பொருள்களை கேட்ட காந்தியடிகள் தங்கருத்தைச் செவ்வனே விளக்கவல்ல தாய்மொழிச் சொற்ருெடர் காண முயன ருர். பொருந்திய சொற்ருெடர் காண்போர்க்குப் பரிசி அளிக்கப்படுமென்று, 'இண்டியன் ஒப்பினியன்' என ணும் பத்திரிகையில் விளம்பரஞ் செய்யப்பட்டது. மகன லால் காந்தி, 'சதாக்கிரஹம்' என்னுஞ் சொற்ருெட கண்டு பரிசில் பெற்ருர். அச்சொற்ருெடரில் தெளிந் பொருள் பொலியுமாறு அதைச் சத்தியாக்கிரகம் என் அடிகள் மாற்றினர். இது சத்தியாக்கிரகச் சொ ருெடர்த் தோற்ற வரலாருகும். இச்சொற்ருெடரின் கருத்து, தொன்று தொட்டுப் பற்பல பெயரால் உலகி டலவி வருகிறது.

சத் என்பது, என்றும் அழியாமல் ஒரு பெ றித்தா யிருப்பது. அதை 'உண்மை' என்று தமி

உரைப்பர். அதற்கு என்றும் இருத்தல் என்பது பொருள். சத்தெனுஞ் செம்பொருள் யாண்டும் நீக்கமற நிலவுவது. அவ்வாறு நிலவும் அதை மறந்து வாழும் மனிதனது அறியாமை என்னை!

விளக்கம்

மனிதன்பாலுள்ள அறியாமை அவனை அசத்தின்பாற் செலுத்தி, அலைத்து அலைத்து, இடர்ப்படுத்துகிறது. அறியாமையால் எழும் பொறாமை முதலியன, தனித் தனி மனிதர்க்குள்ளும், குடும்பத்துக்குள்ளும், நாட்டுக்குள்ளும், உலகத்துக்குள்ளும் அல்லலை எழுப்பி, மக்கள் மாட்டு இயற்கையா யமைந்துள்ள சகோதர உணர்வைக் கெடுக்கின்றன. ஓரினத்தார் மற்றோரினத்தாரையும், ஒரு சமயத்தார் இன்னொரு சமயத்தாரையும், ஒரு நாட்டார் வேறொரு நாட்டாரையும் மாற்றாரெனக் கருதிப் போராடும் துராக்கிரகத்தை என்னென்று சொல்வது? உலகம் அசத்துக்கு இரையாகி அழிகிறது! அந்தோ! சத்தெனும் ஒரு செம்பொருளினின்றும் போந்த சகோதரர்கள் தங்கள் நிலை மறந்து போரிடுவது இயற்கை நெறியாகுமோ?

சத்தெனுஞ் செம்பொருளோடு உயிர்களைத் தொடர்புபடுத்துவது இயற்கை. இயற்கை, சத்தெனுஞ் செம்பொருளின் உடல். இயற்கைத் தொடர்பினின்றும் உயிர்கள் வழுவுதலாகாது; வழுவின் பொறாமைப் போர் கால்கொள்ளும். இயற்கைத் தொடர்பு சுதேசியம் என்று, 'சுதேசிய'த் தலைப்பில் விளக்கப்பட்டதை நினைவூட்டிக்கொள்க. ஆகவே, இயற்கைத் தொடர்பினின்றும் உயிர்கள் வழுவி வீழ்வது பொறாமைப்

போருக்குக் காரணமென்க. (அதாவது சுதேசியத்தினின்றும் வழுவுவதெனக் கொள்க). இயற்கைத் தொடர்பினின்றும் வழுக்கி வீழ்ந்த உயிர்களை மீண்டும் அதன்பால் சேர்க்க, அவ்வுயிர்கட்குச் சத்தின்மீது நினைவூட்டி, அதை ஆக்கிரகித்து நிற்குமாறு செய்வது அறிஞர் கடமை. சத்தை உடையது சத்தியம். அதை ஆக்கிரகித்து (கடைப்பிடித்து) நிற்பது சத்தியாக்கிரகம்.

சத்தியாக்கிரகத்துக்கு அடிப்படை உண்மை. உண்மையுள்ளவன் எதற்கும் எவர்க்கும் அஞ்சான். உண்மையும் அஞ்சாமையும் பெற்ற ஒருவன் பிறர்க்குத் தீங்கு செய்ய ஒருப்படான். ஒருப்படுவனேல் அவன் சத்தெனும் உண்மையினின்றும் வழுவிய பொய்யனாவன். தன்னையும் பிறரையும் தாங்கி நிற்கும் சத்தெனும் மூலங் கண்ட ஒருவன் பிறருக்குத தீங்கு செய்ய எவ்வாறு ஒருப்படுவன்? செய்வனேல் அவன் தனக்குத் தானே தீங்கு செய்பவனாவன். ஒரு மரக் கிளையில் இருவர் அமர்ந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவருள் பகைமை நேர்ந்து, அதனால் தாம் அமர்ந்துள்ள கிளையை மறந்து, சினத்தால் அவர் அக்கிளையை முறித்தால் என்ன நிகழும்? சத்துக்குரிய சத்தியத்தில் நிற்போன் பிறர்க்குத் தீங்கு நினைப்பதென்பது சத்தியத்தை மறப்பதன்றி வேறென்னை? சத்தியமென்பது அன்பருளோடு நீக்கமின்றி விரவி நிற்பது. ஒன்றுள்ள இடத்தில் மற்றொன்றுமிருக்கும். இவைகளை மறந்தவன் உள்ளம் துராக்கிரகத்தைத் தழுவி நிற்கும்.

துராக்கிரகத்துக்கு எளியனாயுள்ள மனிதனையோ குடும்பத்தையோ அரசாங்கத்தையோ வேறு எதையோ

எப்படித் திருத்துவது? பொய்க்குப் பொய்மையையும், பொறுமைக்குப் பொறுமையையும், கொலைக்குக் கொலையையும் கொள்வது இயற்கை அறமன்று. அவ்வாறு கொள்வது அத்தீமைகளை மேலும் மேலும் பெருக்குவதாகும். பின்னை என் செய்வது? உண்மை - அஞ்சாமை - அன்பு - அருள் - கொண்ட சத்தியாக்கிரகத்தால் துராக்கிரகத்தை ஒழிக்க முயல்வது அறம். துராக்கிரகத்தை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் கொள்ளும்போது, கொள்வோனுக்குப் பலதிறச் சோதனைகள் நிகழும். துராக்கிரகிகள் செய்யும் அடாத செயல்களை அன்புளத்தால் தாங்கும் பொறுமை சத்தியாக்கிரகிக்கு இருத்தல் வேண்டும். பொறுமையால் துன்பமேற்கும்போது சத்தியாக்கிரகி, எக்காரணம் பற்றியும் பிறர்க்குத் தீங்கு மனத்தாலும் நினைத்தலாகாது. சத்தியாக்கிரகத்தின் அருமை இங்கே தான் காக்கப்படல் வேண்டும்.

**திருத்த வழி**

ஒருவன் மற்றொருவனை அடிக்கிறான். அடிபட்டவன், தன்னை அடித்தவனைத் திரும்ப அடிப்பானாயின், வன்மம் வளர்ந்து வளர்ந்து பெரும்போராகப் பெருகிப் பெருகிப் பெருங் கன்மமாக ஊற்றெடுத்து ஓடிக்கொண்டே யிருக்கும். அடிபட்டவன், அன்புளத்தால் பொறுமையோடு அடியேற்று, அஞ்சாது நிற்பானாயின், அடித்தவன் உள்ளத்தில் என்ன தோன்றும்? இரக்கம் தோன்றும். அவ்விரக்கம் அவன் மாட்டுள்ள தீக்குணத்தைக் கல்லுவதாகும். பொறாமையும் சினமும் பகைமையும் ஒருபோதும் நலஞ்செய்யா என்பது திண்ணம். அடிபட்டவன், பொறுமையின்றி, அன்பின்றி, தன்னை

அடித்தவனை எதிர்த்தடிக்கப் போதிய வலியின்றி, அச்சத்தால் நடுக்குற்றுப் பேசாமலிருப்பது சத்தியாக்கிரகமாகாது. அது கோழைமையின் பாற்படும். நூற்றொடக்கத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள சத்தியாக்கிரகிகள் வரலாற்றை நோக்குக.

சத்தியாக்கிரகம் பல முறைகளாகக் கொள்ளப்படலாம். அவை ஆங்காங்கே எழும் துராக்கிரக நிலையைப் பொறுத்து நிற்கும். சில இடத்தில் சிறிது வருந்தலாகவும், சில இடத்தில் உயிர் துறத்தலாகவும், சில இடத்தில் உதவி மறுத்தலாகவும், சில இடத்தில் சட்ட மறுப்பாகவும், சில இடத்தில் உண்ணு நோன்பாகவும், இன்னோரன்ன பிறவழிகளாகவும் சத்தியாக்கிரகமெழும். எம்முறை கொள்ளினும் அம்முறையில் பொறாமை பகைமை முதலியன இருத்தலாகாது.

முறைகள்

சத்தியாக்கிரகம் பிறர் குற்றங் களையமட்டுங் கொள்ளப்படுவதாயிருத்தல் கூடாது; தன்னை ஏற்பவன் குற்றங் களைவதாகவும் பயன்படுதல் வேண்டும். சத்தியாக்கிரகங் கொள்வோன் முதல் முதல் தான் நேரிய சத்தியாக்கிரகியாதல் வேண்டும். சத்தியாக்கிரகம் செயலில் தன்பால் கைவரப் பெறாத ஒருவன் சத்தியாக்கிரகப் போரில் தலைப்படுதலாகாது. தன்பாலுள்ள துராக்கிரகத்தைக் களைய இயலாத ஒருவன் பிறர்பாலுள்ள துராக்கிரகத்தை எங்ஙனம் களைய வல்லவனாவன்?

சத்தியாக்கிரகி யார்?

மனிதப் பிறவி தாங்கியுள்ள ஒவ்வொருவரிடத்திலும் உண்மை அன்பு அருள் பொறுமை முதலிய

சத்தியாக்கிரகக் குணங்களுமுண்டு; இவைகட்கு மாறுபட்ட பொய்மை வன்மம வன்கண் பொறாமை முதலிய துராக்கிரகக் குணங்களுமுண்டு. மனிதப் பிறவி தெய்வத்துக்கும் விலங்குக்கும் இடையில் நிற்பதாகலின், மனிதன்பால் தெய்வத்தன்மையும் விலங்கு நீர்மையும் விளங்குதல் இயல்பு. எவனெவன்பால் எவ்வெக்குணம் மீதூர்ந்து செல்கிறதோ அவனவன் அவ்வக் குணத்தனாவன்.

மனிதன் நிலை

குணநிலை: கல்வி, அறிவு, ஒழுக்கம், உணவு, சேர்க்கை, வாழ்க்கை, தொண்டு முதலியவற்றைப் பொறுத்து நிற்பது. ஒரு மனிதனிடத்தில் துராக்கிரகம் சத்தியாக் கிரகம் என்னும் இரண்டுமிருக்கும். ஒருநாளில் ஒரே மனிதன் சில போழ்து துராக்கிரகியாகவும், சில போழ்து சத்தியாக்கிரகியாகவும் இருப்பதுண்டு. ஒருவனது உள்ளமே இரண்டுக்கும் களனாக - போர்க் களனாக - நிற்கிறது. அவன் போராட்டத்தில் நுழைந்து சத்தியாக்கிரகியாகத் தன்பால் தெய்வத் தன்மை ஓங்கி வளரவே முயலல் வேண்டும். அவனிடம் துராக்கிரகச் செயல் மீக்கொண்டு ஓடுமாயின், அவன் பிறவிப்பேற்றை இழந்தவனாவன். அவனையும் ஒழுங்குபடுத்தவேண்டுவது சத்தியாக்கிரகியின் கடமை.

குறைபாடு

உலகில் முழுச் சத்தியாக்கிரக நிலை எய்தி வாழ்வோர் அரியர். உலகிடை வாழும் மக்களுள், சத்தியாக் கிரகிகள் என்று சொல்லப்படுவோருள் பெரும்பான்மையோரைப் பெரிதுந் துராக்கிரக வழி நில்லாதார் என்றே கொள்ளுதல் தகுதி. அவர், தம்முள் ஒதுங்கி ஒளித்து நிற்கும் துராக் கிரகத்துக்குச் சிற்சில வேளைகளில் இரையாதல்

நேரினும் நேரும். அவ்வேளைகளில் அவர் ஒல்லும் வகை முயன்று தம்மைக் காத்துக்கொண்டே போதல் வேண்டும். காவ இயலாதாரும் இருப்பரல்லவோ ? அவர் கதி என்ன ? அவர் அறிவால் துராக்கிரகத்துடன் போராடவோ, அதை மனத்தளவிலாதல் வெறுக்கவோ, அதை வெல்ல இயலாமை குறித்து வருந்தவோ பழகுதல் வேண்டும். அப்பழக்கம் உய்வுக்கு வழிகாட்டும்.

முறையீடு

ஒருவன் தான் செய்த மறச் செயல் குறித்து வருந்தி வருந்தி அழுதல் நல்லது; ஆண்டவனை நோக்கி மன்னிக்குமாறு கேட்பது சிறப்பு. தன் குற்றத்தை மன்னிக்குமாறு ஆண்டவனைக் கேட்டோன், பிறர் குற்றத்தை மன்னிக்கும் அருளாளனாகத் தன்னைச் சீர்படுத்தல் ஒழுங்கு. தன் குற்றமுணர்ந்து உண்மையில் வருந்துவோன் மீண்டும் அக் குற்றத்துக்கு ஆளாதல் அரிது. அவன் உய்ய வழியுண்டு. சத்தியாக்கிரகிகள் சிறு சிறு தவறுதல்களுக்கு உட்பட நேர்ந்தால், அவர்கள், வருந்தலால்-நோன்பால்-ஆண்டவனை நோக்கி வழுத்தலால் - கழுவாய் தேடித் தேடி, மீண்டும் அத்தவறுதலுக்கு ஆளாகா வழியில் நிற்க முயல்வார்கள்.

பெரிதும் துராக்கிரகத்தால் விழுங்கப்பட்டவன், குற்றங் குறித்து வருந்தாது, மேலு மேலும் குற்ற மிழைத்தலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வரின் அவன் திருந்துவது எப்படி ? அவன் தானே திருந்த முயலான். அவனைத் திருத்தச் சத்தியாக்கிரகியே

சத்தியாக்கிரகியின் கடமை

முயன்று தீரல் வேண்டும். துராக்கிரகி செய்யுங் கொடுமைகளைப் பொறுமையால் ஏற்று ஏற்று, அவனைப் பண்படுத்துங்கடப்பாடு சத்தியாக்கிரகிக்கு உண்டு. சத்தியாக்கிரகி

யின் பொறுமையும் இரக்கமும் துராக்கிரகியின் நோய்க் குரிய மருந்தாகும். *அம்மருந்து பிறவி நோயையும் தீர்க்கும் பண்புடையது.*

உயிருக்கு உடல் எத்தன்மைத்தோ அத்தன்மைத்து வாழ்விற்குச் சத்தியாக்கிரகம். *ஒவ்வொருவரும் சத்தி யாக்கிரகியாக வாழ்வரேல் எவ்வகைப் போரும் நிகழ் தற்கு இடமிராது. ஒருபால் துராக்கிரகம் எழின், மற் றொருபால் சத்தியாக்கிரகம் எழுதல்வேண்டும். துராக் கிரகத்தைக் கண்டு சத்தியாக்கிரகி வாளா யிருத்தல் கூடாது. வாளா இருத்தல் தீமைக்குத் துணை போவ தாகும். அஃதும் (வாளாகிடத்தலும்) ஒருவித துராக் கிரகமேயாகும். துராக்கிரகத்தை ஒடுக்க எழும் ஆசை யன்றி வேறு ஆசை சத்தியாக்கிரகிக்கு இருத்தல் கூடாது.*

*பிறர்பாலெழும் துராக்கிரகத்தை ஒடுக்க உடனே சத்தியாக்கிரகப் போர் துவங்குதலுந் தவறு. முதல் முதல் நியாயவரம்பு முறைகளை எவ்வளவு தூரம் கையாளலாமோ அவ்வளவு தூரம் கையாள்வது நலன். அதனுல் பயன் விளையாதொழியின், பின்னரே அன்புப் போரில் தலைப்படல் அறம். ஒரு*

**போருக்கு முன்**

*வர் மற்றொருவர் மீதோ, ஓரினத்தார் வேறோரினத்தார்மீதோ, ஒரு நாட்டார் இன்னொரு நாட்டார்மீதோ பொறுமைப் போர் தொடங்க எழுமுன் னர்த் தம்முள்ளத்தில் - தம்மினத்தாரிடத்தில் - தம் நாட்டாரிடையில், ஒருமை - ஒற்றுமை - உண்டுபண்ண வல்ல முறைகளை - ஆக்க முறைகளைக் கொள்ளல்வேண் டும். இரத்தம் சிந்தும் போருக்குக் கொலைக் கருவி*

களையும் பிறவற்றையும் ஒழுங்குபடுத்துவதுபோல, சத்தி யாக்கிரகப் போருக்கும் உண்மை அஞ்சாமை அன்பு அருள் முதலியவைகளோடு பொறுமை துன்பஞ்சகித்தல் தியாகம் முதலிய அருட்கருவிகளை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்கு என்பது சத்தியாக்கிரக உயிர்க்கு உடல்போன்றதென்க.

காந்தியடிகள் வாழ்வில் சத்தியாக்கிரகம் எவ்வாறு கனிந்தது என்பதைப் பற்றியும், அதனை எவ்வாறு எழுப்பி உலகை அதன் வழிப்படுத்த அவர் முயன்றார் என்பதைப் பற்றியுஞ் சிறிது ஆராய்வோம்.

**சத்தியாக்கிரகமும் அடிகளும்**

காந்தியடிகள் இளமையில் கொண்ட தாயன்பு, தீண்டாமையில் வெறுப்பு, வாய்மை, ஒழுக்கத்திலுணர்வு முதலியன அவரது பின்னைய சத்தியாக்கிரக வாழ்வு நிலையத்துக்குச் சாரமாக நின்றன. காந்தியடிகளுக்குச் சத்தியாக்கிரக உணர்வு அரும்பிய இடம் தென்னாப்பிரிக்கா என்பது உலகமறிந்த ஒன்று. அதற்குக் காரணமாக நின்றது ஆண்டுள்ள வெள்ளையர் துராக்கிரமமே யாகும். சத்தியாக்கிரக விதை முன்பின் காந்தியடிகள் உள்ளத்தில் வீழாது, அது திடீரெனத் தென்னாப் பிரிக்காவில் அவர்பால் அரும்பியிராது. இளமையில் அவருள்ளத்தில் அவ்விதை நல்வினைப் பயனால் விழுந்தது. பின்னை அவர் தென்னாப்பிரிக்கா போம்வரை, அவர் வாழ்வாம் நிலத்தில் தூறுகள் கிளம்பி மூடினும், அவைகளால் சத்தியாக்கிரக விதைக்குப் பழுது நேரவில்லை. அஃதொருபால் ஆண்டவன் அருளொளி பெற்று முளைவிட்டு வளர்ந்தே வந்தது. அவ்விதை

விழுந்த வரலாற்றைக் காந்தியடிகள் ஒருவரிடம் கூறியுள்ளார்.

காந்தியடிகள் வரலாற்றை முதல் முதல் ஆங்கிலத்தில் எழுதப் புகுந்தவர் அன்பர் ஜோஸப் டோக் என்பவர். அன்பர் டோக், அடிகள் வரலாற்றை எழுதப் புகுந்தபோது, அவர் அடிகளை நோக்கி, 'சத்தியாக்கிரக உணர்வு தங்கள்பால் எவ்வாறு அரும்பிற்று' என்று வினவினர். அதற்கு அடிகள்,

"யான் குழந்தையா யிருந்தபொழுது, பள்ளிக்கூடத்தில் வாசித்த வேளையில், ஒரு கூர்ஜரப் பாட்டின் ஒரு வாக்கியம் என்னுள்ளத்தில் படிந்தது. அதன் உள்ளுறை வருமாறு:—

'ஒருவன் உனக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் அதற்குப் பதிலாக நீ அவனுக்குத் திருப்பித் தண்ணீர் கொடுக்கிறாய். இதில் ஒன்றுமில்லை. தீமைக்கு மாறாக நலஞ்செய்வதில் உண்மை அழகு உண்டு'

இத்திருமொழி எனது குழந்தைப் பருவத்தில் என்னைத் தன்வயப்படுத்திற்று. பின்னை கிறிஸ்துநாதர் மலைமீதிவர்ந்து பொழிந்த அருண்மொழி என்னை ஆண்டது"

என்று விடை இறுத்தினர். இறுத்ததும், அன்பர் டோக், 'பகவத்கீதையன்றோ முதலில் போந்திருத்தல் வேண்டும்?' என்று கேட்டார். அக்கேள்விக்குக் காந்தியடிகள் இறுத்த பதில் வருமாறு:—

"இல்லை. சத்தியாக்கிரகத்தின் நேர்மையையும், பெருமையையும் உணர்த்தி, என்னை விழிக்கச் செய்தது புதிய ஏற்பாடே. கிறிஸ்துநாதரின் மலைப்பொழிவை யான் வாசித்தபோது, அதிலுள்ள '(தீமையைத்) தீமையால்

எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு (மத் - 5 : 39)' என்பதையும், ' உங்கள் சத்துருக்களில் அன்பு கூருங்கள் ; உங்களை இம்சைப்படுத்துகிறவர்களுக்காக ஜெபஞ் செய்யுங்கள் ; இப்படிச் செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். (மத் - 5 : 44 - 5)' என்பதையுங் கண்ட வேளையில், எனக்கு மகிழ்ச்சி வரம்பின்றிப் பொங்கித் ததும்பி வழிந்தது. இவ்வெண்ணத்தை என்னுள்ளத்தில் பின்னை பகவத்கீதை வலியுறுத்திற்று ; அதன் பின்னை தால்ஸ்தாய் எழுதிய ' பரலோக ராஜ்யம் என்னுள்ளத்திருக்கிறது ' என்னும் நூல் பசுமரத்தாணிபோல் பதியச் செய்தது "

காந்தியடிகள் வாழ்விற்கு வாழ்வளித்த கிறிஸ்துநாதர் மலைமீதிருந்து பொழிந்த தெய்வத் திருவருட் சத்தியாக்கிரக மொழிகளை நோக்குக ; ஊன்றி நோக்குக ; அவைகளில் படிக ; திளைக்க. கிறிஸ்துவின் மலைப் பொழிவு ஒரு காந்தியையா ஆண்டது ? எத்துணை எத்துணைக் காந்திகளை ஆண்டது ! உலகிலுள்ள மாக்களை மக்களாக்க எழுந்த செம்மொழி யன்றோ அம்மொழி ? மனிதன் ஆன்ம விளக்கம் பெறுதற்குரிய பொருளெலாம் அதன்கண் பொலிகின்றன. எல்லாச் சமயங்களின் முடிந்த நிலையை அதன்கண் காணலாம். என் வாழ்வில் அத்திருவாக்கு எனக்குப் புரிந்துவருந் துணையை யான் அறிவேன். மன்பதை உய்ய எழுந்தது தெய்வத் திருமலைப்பொழிவு என்று அறுதியிட்டுக் கூறலாம். அப்பொழிவில் அன்பர்கள் மூழ்கி இன்புறுவார்களாக. (மத்தேயு - அதிகாரம் - ரு, சா, எ பார்க்க),

கிறிஸ்து நாதரின் திருவாயினின்றும் பிறந்த எளிய அருண்மொழியில் என்ன இல்லை? காந்தியடிகள் வாழ்வைப் பண்படுத்திய அத்திருமொழி என்னையும் பண்படுத்தல் வேண்டும்; என் நேயர்களையும், என் நாட்டாரையும், உலகோரையும் பண்படுத்தல் வேண்டும். எனது உள்ளங் கோயில் கொண்டுள்ள மெய்ப்பொருளே! எனது வேண்டுதலை நிறைவேற்றுவாயாக.

**சத்தியாக்கிரக ஆசிரமம்**

தென்னாப்பிரிக்காவில் எழுந்த நல்லுணர்வு, காந்தியடிகளது வாழ்வில் கலந்து ஊறிக் கனிந்துவிட்டது. தம்மாட்டுக் கனிந்துள்ள சத்தியாக்கிரக உணர்வு, உலகமெலாம் பரவ வேண்டுமென்று காந்தியடிகள் இதுபோழ்து தவங்கிடக்கிறார். காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தை ஓம்பப் பல வழியில் முயன்று வந்தார்; வருகிறார். அம்முயற்சிகளுள் ஒன்று, சபர்மதியில் சத்தியாக்கிரக ஆசிரமம் அமைத்தது. பின்னை அவ்வாசிரமப் பெயரும், சில விதிகளும் மாற்றப்பட்டன. மாற்றத்துக்குக் காரணம் சில விதிகளின் அருமைப்பாடென்று சொல்லப்பட்டது. அணித்தே ஆசிரமமே கலைக்கப்பட்டது. அதைப்பற்றிய சிந்தனை ஈண்டு வேண்டுவதில்லை. ஈண்டு நமக்கு வேண்டற்பாலது காந்தியடிகளின் அறமேயாகும். அவ்வற வளர்ச்சிக்கென்று ஆசிரம விதிகள் அடிகளால் செப்பஞ் செய்யப்பட்டன. பழைய விதிகளே இந்நூலுக்கு ஏற்புடையன. அவற்றை ஊன்றி நோக்கினால் சத்தியாக்கிரக வாழ்விற்குரிய முறைகளைக் காணலாம். அவ்விதிகள் வருமாறு :—

## நோக்கம்

'இவ்வாசிரமத்தின் நோக்கம் தாய்நாட்டுக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதைப் பயில்வதும், அதற்குச் சேவை செய்வதுமாகும்.

## பிரிவு

இவ்வாசிரமம் முத்திறத்தாரைக் கொண்டது. அவர் கருமவினைஞர், அவராக அபேட்சிப்பவர், மாணாக்கர் என்பவர்.

### I கருமவினைஞர் (காரிய நிருவாகர்)

இவர் நாட்டுக்குத் தொண்டு செய்வதெப்படி என்பதைப் பயிலத், தம் வாழ்வில் கீழ்வரும் முறைகள் நுழைந்து கலப்புறல் வேண்டும் என்னும உறுதியுடையராய், சில காலமாக அவைகளின்படி வாழ்வு நடாத்துவோர்.

#### (க) வாய்மை

ஒருவன் பொய்யாமையோடு கலவாது வாழ்தல் மட்டும் போதாது. நாட்டுக்கு நலந்தரத்தக்க ஒன்றாயினும் அதன் மாட்டுக் கரவுமுறை கையாளலாகாதென்பதை அவன் உணரல் வேண்டும் ; தாய் தந்தையரும், மற்ற முதியவரும் அறநெறி பிறழ்வரேல், அவரையும் எதிர்க்க வாய்மையைப் பயன்படுத்தல் வேண்டும். இதற்குப் பிரகலாதன் சான்றாக நிற்றல் காண்க.

#### (உ) கொல்லாமை

ஒருயிரைக் கொலை செய்யாதிருப்பது மட்டும் போதாது. இக்கொல்லா விரதங் கொண்டோன், பிறர்செயல் தனக்கு அநியாயமாகத் தோன்றினும், அவன் இவரைத் துன் புறுத்தலாகாது. அவன் இவர்பால் சினமுறாது இவரை நேசித்தல் வேண்டும். இவ்வாறு தாய் தந்தையரோ அர

சாங்கத்தாரோ எவரோ கொடுமை நிகழ்த்தும்போது அக் கொடுமையை அன்பால் எதிர்த்தல் வேண்டும். கொடிய னுக்கும் உறுகண் செய்யலாகாது. வாய்மையையுங் கொல் லாமையையுங் கொண்டோன் கொடுமை செய் வோனை அன்பால் வெல்லவல்லான். அவன் கொடிய னது விருப்பத்திற்கிணங்கி நடவாது, அதற்குமீறி நடந்து, உயிர்க்கிறுதி நேரும்வரைக் கொடியனால் விதிக்கப்படுந் தண்டனைகளேற்று, அக்கொடியவன் தோல்வியுறு மட்டும் (மனம் திருந்தும் வரை) வருந்துவன்.

### (ங) பிரமசரியம்

பிரமசரியவிரதம் பூண்டாலன்றி மேற்போந்த இரண்டு நோன்புகளைக் கடைப்பிடித்தலும் அரிது. இவ்விரதத்துக் குக் காமநோக்கோடு ஒரு மாதினைப பாராததுமட்டும் போதாது. காம உணர்வு எண்ணத்தளவிலும் உறாதவாறு தன்பாலுள்ள விலங்கியல்பை மகன் அடக்கியாளல் வேண் டும். மணம் செய்தவனாயின், அவன் தன் மனைவிபால் தூர்த்த மனங்கொள்ளாது, அவளை வாழ்நாள் நட்புடைத் தோன்றலாகக் கருதி, அவளோடு தானும் தூய ஒழுக்க உறவினை உறுதிப்படுத்திக் கொள்ளல்வேண்டும்.

### (ச) நாச் சுவையடக்கம்

ஒருவன் நாச்சுவைக்கு எளியனாகாதவாறு தன்னைக் காத்துக்கொண்டாலன்றி அவன் மேற்போந்த விரதங்களையும் சிறப்பாகப் பிரமசரியத்தையும் கடைப்பிடித்தல் அருமை. ஆதலால், நாச்சுவையடக்கல் ஒரு தனி நோன்பாகக் கணிக் கப்படுகிறது. நாட்டுப்பணி ஆவல் மேலீட்டான், அது குறித்து உடலோம்புங் குறிக்கொண்டு, உணவின் அவசிய முணர்வோன் நாளடைவில் உணவை ஒழுங்குபடுத்தி,

விலங்குணர்வைக் கிளர்ந்தெழுப்பக் கூடியதும் அநாவசிய மானதுமான உணவை ஒல்லும்வகை ஒழித்தல்வேண்டும்.

### (ரு) கள்ளாமை

உலகில் மற்றவர் பொருளைக் களவாடாதிருத்தல் மட்டும் கள்ளாமை என்னும் நோன்பைக் கொள்வதாகாது. வாழ்விற்கு அநாவசியமாகவுள்ள பொருள்களைப் பயன்படுத்தலுந் திருடாகும். நமக்குப் போதுமானதை நாடோறும் இயற்கை உதவுகிறது. அதற்குமேல் வேறொன்றும் வேண்டுவதில்லை.

### (சு) பொருளுடைமை

அளவை மீறிப் பொருளீட்டாமையை மட்டும் இந நோன்பு அறிவுறுத்தாது. நமது தேவைக்கு முற்றும் அநாவசியமான பொருள்களை வைத்துக்கொள்ளாதிருத்தல் அவசியம். நாற்காலியின்றி ஒருவன் வாழக் கூடுமாஞல் அவன் அங்ஙனே வாழ்தல்வேண்டும். ஆதலால் இந்நோன்பைக் கடைப்பிடித் தொழுகுவோன் அடிக்கடி நிலைமையை ஆழ உன்னித் தனது வாழ்வை எளிமைப்படுத்துவாஞக.

## கூட்டுத்துணை

மேற்போந்த விரதங்களினின்றும் இரண்டு தெருட்டப் படுகின்றன. (ஒன்று சுதேசியம்; மற்றொன்று அஞ்சாமை.)

### (க) சுதேசியம்

பொருளாக்குவோர் வாயிலாகவோ, மற்றெவ்வாயிலாகவோ மோசம் பொருந்தத்தக்க பொருள்களைப் பயன்படுத்தல் மெய்ம்மைக்கு மாறுபடுவதாகும். ஆதலால் உண்மை கடைப்பிடித்து நிற்போன் மான்செஸ்டரில் - ஜெர்மெனியில் - அல்லது இந்தியாவில் இயந்திரசாலைகளில் செய்யப்பட்ட பொருள்களை உபயோகித்தல் கூடாது. ஏன் ? அவைகளில்

மோசமில்லை என்று அவனுக்குத் தெரியாமையால் என்க. மேலும் இயந்திரசாலைகளில் தொழிலாளர் பெரிதும் வருந்து கின்றனர். இச்சாலைகளில் தொழில் புரியும் மக்கள் அகால மரணமடைகிறார்கள். இம்மரணத்துடன் சாலைகளில் தீ உபயோகித்தல் பல உயிர்களின் அழிவிற்குக் காரணமாயிருக் கிறது. அந்நிய சாமான்களும், இயந்திரத்தால் செய்யப் பட்ட சாமான்களும் அஹிம்சா தர்மவான்களை அத்தர்மத்தி னின்றும் விலக்கித் தள்ளுவனவாயிருக்கின்றன. இச் சாமான்களின் உபயோகம் கள்ளாமைக்கும் பொருள் திரட் டாமைக்கும் நேர்மாறாக நிற்பது. கைத்தறியால் நெய்யப் படும் நமது எளிய துணிகளுக்குப் பதிலாக அந்நியத் துணி களை உடுத்துகிறோம். வழக்கமென்பது அழகை அளிப்ப தாகக் கொள்ளபபடுவதே இதற்குக் காரணம். உடலைச் செயற்கையால் அணி செய்வது பிரமசரியத்துக்குத் தடை யாகும். பிரமசாரி எளிய உடை தவிர மற்றெதையுந் தள் ளக்கடவன். பொததான், அந்நியவெட்டு முதலிய யாவற்றை யும் தவிர்ப்பதற்கும், எளிய உடை அணிவதற்கும், எளிய வாழ்வுக்கும் சுதேச விரதம் வேண்டற்பாலது. ஆதலால், வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் சுதேசியம் மருவல் வேண்டும்.

### (உ) அஞ்சாமை

அச்சத்தால் பீடிக்கப்படுவோன் உண்மையையாதல் அஹிம்சையையாதல் கடைப்பிடித்தொழுக இயலாதவனா வன். மன்னர், மக்கள், சாதி, குடும்பங்கள், திருடர், ஆறலைக் கள்வர் முதலியவரின் பயத்துக்கும், புலி போன்ற கொடிய உயிர்களின் பயத்துக்கும், மரண பயத்துக்கும் காரிய நிரு வாகிகள் அஞ்சுவதினின்றும் நீங்கி வாழ முயலல்வேண்டும். உண்மை அஞ்சா நெஞ்சன், தனது சத்திய சக்தி அல்லது

ஆத்மசக்தி வாயிலாக எதையும் எதிர்த்துத் தானே தன்னைக் காப்பன்.

## நாட்டு மொழிகள்

நாட்டுமொழிகளை விலக்குவதால் எந்நாடும் வளர்ச்சியுறுதென்பது காரிய நிருவாகிகளின் நம்பிக்கை. ஆதலால், அவர்கள் தங்கள் தங்கள் தாய்மொழியைக் கற்பார்கள்; மற்ற இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள சகோதரர்களோடு கெழுதகைமைகொண்டு, முக்கியமாயுள்ள இந்திய மொழிகளைப் பயில்வார்கள்; இந்திய மொழிகள் பலவற்றிற்கும் சம்ஸ்கிருதம் திறவு ஆதலால் அதையும் பயிற்சி செய்வார்கள்.

## கைத்தொழில்

கைத்தொழில் மன்பதைக்கொரு கடமையாக இயற்கையால் அருளப்பெற்றதென்று காரிய நிருவாகிகள் உறுதிகொள்கிறார்கள். ஆதலால், நம்பொருட்டுக் கைத்தொழில் செய்யக்கடவோமாக. அறிவு உழைப்பையும், ஆத்ம உழைப்பையும் மற்றவருக்கென அர்ப்பணஞ் செய்தல்வேண்டும். உலகிலுள்ள பெரும்பான்மையோர் விவசாயிகளாகலான், காரிய நிருவாகர் தமது நேரத்தில் சிறிதுபொழுது பயிர்த்தொழில் புரிவர். அஃது இயலாதபோது அவர் வேறு தொழின் முயற்சியில் நுழைவர்.

## கைத்தறி

பருத்தி நூற்கும் ராட்டையையும் கைத்தறியையும் மறந்தமை நாட்டின் வறுமைக்கு முக்கிய காரணங்களுள் ஒன்றெனக் காரிய நிருவாகிகள் நம்புகிறார்கள். ஆதலால், அவர்கள் தங்கள் கரங்களால் அத்தொழில் செய்து அதை உயிர்ப்பிப்பார்கள்.

## அரசியல்

அரசியல், பொருளாதார வளர்ச்சி முதலியன கல்வியின் கூறுகளாகக் கருதப்படமாட்டா. அவை சமயத்தில் ஊடுருவி நிற்பன. ஆதலால் அரசியல், பொருளாதாரம், சமூக சீர்திருத்தம் முதலியன சமய சம்பந்தமான முறையில் கற்பிக்க முயற்சி செய்யப்படும். இவைகளில் சம்பந்தப்பட்ட வேலைத்துறை ஊக்கத்துடனும், அன்புடனும் காரிய நிருவாகிகளால் ஓம்பப்படும்.

## II. அபேட்சகர்

மேற்போந்த விரதங்களைக் கொள்வதில் விருப்புடையவராய், ஆனால் அவைகளை உடனே தாங்கிச் செயலிற் கொணர இயலாதவராயுள்ளவர் அபேட்சகராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர் ஆசிரமத்திலுள்ளபோது மேற்போந்த விரதங்களை ஏற்று நடக்க ஒருப்படாதொழியினும், அவைகளின்படி இசைந்து நடக்கவேண்டுவது இவர் கடமை. இவ்விரதங்களேற்று நடக்கும் பேறு பெறும்போது இவர் காரிய நிருவாகிகளாவர்.

## III மாணாக்கர்

க. நான்கு வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் குழந்தைகள் சேர்க்கப்படுவார்கள்.

. உ. தாய் தந்தையர், குழந்தைகளின்மீதுள்ள தம் ஆட்சியை முற்றும் ஆசிரமத்துக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

ந. கல்விக்குரிய காலவரை முடியுமட்டும் குழந்தைகள் தாய்தந்தையரைப் பார்த்துவர அனுப்பப்பட மாட்டார்கள்.

ச. காரிய நிருவாகிகள் அனுஷ்டிக்கும் விரதங்கள் யாவும் மாணாக்கர்க்குப் போதிக்கப்படும்.

ரு. சமய உண்மைகள், விவசாயம், கைந்நெசவு, இலக்கியங்கள் அவர்க்குப் போதிக்கப்படும்.

௬. மாணுக்கர்க்குரிய தாய்மொழியின் வழியே கல்வி கற்பிக்கப்படும். சரித்திரம், பூகோளம், கணிதம், பொருளாதாரம் முதலியன போதிக்கப்படும். சம்ஸ்கிருதம், ஹிந்தி, திராவிட மொழிகளில் ஏதாவதொன்று கட்டாயம் போதிக்கப்படும்.

௭. ஆங்கிலம் இரண்டாந்தரமாகப் போதிக்கப்படும்.

௮. மாணுக்கர்க்கு உருது, வங்காளம், தமிழ், தெலுங்கு, தேவநாகரலிபி போதிக்கப்படும்.

௯. இப்பயிற்சி பத்தாண்டில் முற்றுப்பெறுமெனக் காரிய நிருவாகிகள் நம்புகிருர்கள். மாணுக்கர் உற்ற வயதடைந்ததும், முதற்பகுதியிற் போந்த விரதங்களை ஏற்று நடக்கக் கேட்டுக்கொள்ளப்படுவர். அவர் அதற்கிணங்காது போயின், அவர் ஆசிரமத்தினின்றும் விலகல் வேண்டும்.

௧௦. தாய் தந்தையர் அல்லது போஷகருடைய உதவியை எதிர்பாராத நிலையைப்பெற்ற பின்னரே மாணுக்கர் இக்கேள்வி கேட்கப்படுவர்.

௧௧. 'யான் உற்ற வயதடைந்து சுவாதீனம் பெறும் போது பிழைப்புக்கு என்செய்வேன்' என்னும் அச்சம் குடிகொள்ளாதவாறு தொடக்கத்திலிருந்து மாணுக்கர்க்கு அதுகுறித்து அறிவுறுத்த எல்லாவித முயற்சியுஞ் செய்யப்படும்.

௧௨. வயதுற்றவரும் மாணுக்கராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

௧௩. விதிப்படி எல்லாரும் ஒரேவித எளிய உடை அணிவர்.

௧௪. உணவு மிக எளியது. மிளகாய் முற்றிலும் விலக்கப்படும். உப்பு மிளகு மஞ்சள் தவிர மற்ற மசாலைகள் பெரிதும உபயோகிக்கப்படமாட்டா. பாலும், அதன் பரிணமங்களும், பிரமசரிய வாழ்விற்குத் தடையாயிருத்த

லானும், அடிக்கடி எலும்புருக்கி நோய்க்குக் காரணமாக நிற்றலானும், புலால் உணவு போலக் கிளர்ச்சியூட்டலானும் (உபயோகிக்க நேரின்) அவைகள் அரிதே உபயோகிக்கப் படும். உணவு மும்முறை அளிக்கப்படும். உலர்ந்த பழங் களும் பசிய பழங்களும் பெருமிதமாக வழங்கப்படும். ஆசிர மத்துள்ள அனைவருக்கும் சுகாதார முறைகள் போதிக்கப் படும்.

கரு. சட்டப்படி ஆசிரமத்தில் விடுமுறை கிடையாது. பிள்ளைகள் தங்கள் தங்கள் சொந்த வேலைகளைக் கவனிக்க வாரத்துக்கு ஒன்றரை நாள் ஒதுக்கப்படும்.

கசு. உடல் வளம் பெற்றுள்ள மாணாக்கர், ஆண்டில் மூன்றுமாத காலம், இந்தியாவின் பல பாகங்களைப் பெரி தும் கால்நடையாகச் சென்று பார்க்கலாம்.

கஎ. மாணாக்கர்க்காதல் அபேட்சகர்க்காதல் சம்பளம் விதிப்பதில்லை. ஆனால் ஆசிரமச் செலவிற்காகத் தாய் தந்தையரோ அல்லது அங்கத்தவரோ தம்மாலியன்றவரை உதவி புரியலாம்.

## நிர்வாகம்

நிர்வாகம், காரிய நிர்வாகர்களால் நடத்தப்படும். பிள்ளை களைச் சேர்த்தல் முதலிய பொறுப்பு, காரிய நிருவாகத் தலைவருடையது. நன்கொடையாகப்பெற்ற பொருளாலும், ஆசிரம நேயர்கள் கொடுக்கும் பொருளாலும் வினைகள் நிகழ்த்தப்படும்.

## அறிவிப்பு

ஆசிரமத்துக்கு வருவோர் ஒல்லும் வகை ஆசிரம விதி களைக் கவனித்து நடத்தல்வேண்டும். அவர்க்கு வசதியளிக்க முயற்சி செய்யப்படும். அவர் படுக்கை, சமயல் சாமான்கள் கொண்டு வருவது நலம். பிள்ளைகளை ஆசிரமத்துக்கு

அனுப்ப விரும்புந் தாய் தந்தையர் ஆசிரமத்தை வந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். பிள்ளைகளின் அறிவு ஒழுக்கம் முதலியவற்றை ஆராயாது எப்பிள்ளையையும் சேர்ப்பதில்லை.

இவ்விதிகள் சத்தியாக்கிரக நெறியை வளர்க்கும் முறையை ஒருவாறு அறிவுறுத்துகின்றன. சபர்மதி ஆசிரமத்தில் முறைப்படி பயின்ற மாணாக்கரின் பின்னை வாழ்வு பேரின்பமாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

'சத்தியாக்கிரக' ஆசிரமம் ஒவ்வொரு வீட்டிலும் பொலியவேண்டுமென்பது எனது விருப்பம். மனிதனை விலங்காக்கும் இக்கால நாகரிகமென்னும் நஞ்சு - பேய் - பூதம் - சண்டமாருதம் - இந்தியாவை விட்டு அகல வேண்டுமாயின், காந்தியடிகள் கோலிய விதிகளின்படி சத்தியாக்கிரக நெறியில் ஒவ்வொருவரும் நின்று ஒழுகுவாராக. அதில் ஒழுகுவோர் அனைவரும் காந்தியாவர் என்பது உறுதி. அப்பொழுது இக்கால இந்தியா-அதாவது போலி இந்தியா - ஒழிந்து, பழைய இந்தியா - உண்மை இந்தியா - புதுமையில் மீண்டும் பிறக்கும்.

சத்தியாக்கிரக நிலையம் எங்கணுங் காணப் பெறல் வேண்டும். தேசபக்தர் அனைவரும் - அறத்தை விரும்புவோர் அனைவரும் - சத்தியாக்கிரக வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் முயற்சி செய்தல்வேண்டும். இந்தியாவின் முழு உரிமை - பூரண சுதந்திரம் - சத்தியாக்கிரகத்தைப் பொறுத்து நிற்கிறது. மற்றைய வழிகளும், முயற்சிகளும் இந்தியாவிற்கு முழு விடுதலை வழங்கமாட்டா என்று உறுதி கூறலாம். இந்தியாவின் எதிர் கால நிலையை ஒழுங்குபடுத்தி, உரிமைபெற்று, மக்களாக

வேண்டுமென்னும் எண்ணமுடைய இளைஞர், சத்தியாக்கிரக நெறியில் நின்று ஒழுகி ஆன்மவிளக்கம் பெற முந்துவாராக.

சத்தியாக்கிரகக் கல்லூரிகள் யாண்டும் மல்கினால் உலகம் எந்நிலை எய்தும்? உலகிலுள்ள பள்ளிக்கூடங்களெல்லாம் சத்தியாக்கிரக நிலையங்களாக விரைவில் மாற வேண்டுமென்று கடவுளை வழுத்துகிறேன்.

காந்தியடிகள் சத்தியாக்கிரகப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருப்பதால் மறம் தலைகாட்டும்பொழுதெல்லாம் அதை ஒடுக்க நிலைமைக்கேற்றவாறு சட்டமீறலோ, உதவி மறுத்தலோ, வரி கொடாமையோ, சிறைபுகலோ ஏதோ ஒரு சத்தியாக்கிரகத் துறையில் நின்று அறப்போர் புரிய முற்படுகிறார். அவரது வாழ்வில் அம்முயற்சி பன்முகங்கொண்டு மலர்ந்து மணம் வீசி வருகிறது. அவைகளுள் சிலவற்றை ஈண்டுக் காட்டுவது நலம்.

**தென்னாப் பிரிக்கா சத்தியாக்கிரகம்**

முதல் முதல் பொறுமைப்போர் நிகழ்ந்த இடம் தென்னாப்பிரிக்கா என்பது எவர்க்குந் தெரியும். இது முன்னருங் கூறப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் வெண்ணிறத்தார் தமக்குள்ள செல்வாக்குக் கொண்டு, கருநிறத்தார் உரிமையைப் பறிக்க முயன்றனர். அப்பொழுது ஏழைக் கருமக்கள் சினந்தெழுந்து தங்கள் உரிமையைக் காக்க வீறிட்டெழுந்தார்கள். அவ்வேளை ஆங்கிருந்த காந்தியடிகள் உள்ளத்தில் ஒடுங்கிக் கிடந்த சத்தியாக்கிரக உணர்வு அரும்பிற்று. அவ்வுணர்வுகொண்டு காந்தியடிகள், 'இஃதென்ன! இருசாராரும் துராக்கிரகப் பேயால் பிடிக்கப்படுகிறார். ஒரு

கூட்டத்தார் தமக்குள்ள செல்வாக்கால் தீநெறி செல்கிறார். இன்னொரு கூட்டத்தார் செல்வாக்கின்மையால் தீமையைத் தீமையால் களைய முயல்கிறார். இது தவறான முறை. எளியார் பொறுமையால் வலியார்க்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தலே இருவருந் திருந்துதற்குரிய வழி' என்று எண்ணி, வலியார் தவறுதலே உணர்த்த அதிகாரிகட்கு விண்ணப்பித்தும், லண்டன் நகர்போந்து ஆங்குள்ள அதிகாரிகளைக் கண்டு பேசியும், வேறு பல சட்ட வரம்பு வழிநின்று கிளர்ச்சிசெய்தும் பயன்படாமை கண்டு, முடிவில் சட்டமீறிச் சிறைபுகும் பொறுமைப்போர் தொடுத்தார்; மற்றவரையும் அப்போரில் பயிற்றுவித்தார். காந்தியடிகள் சட்டமீறிப் பன்முறை சிறைபுகுந்தார். அவரது அடிச்சுவட்டைப் பற்றி மற்றவருஞ் சிறை சென்றனர். சத்தியாக்கிரகம் என்னும் மெய்ந்நெறி, காந்தியடிகள் வாயிலாகப் புத்துயிரும் உருவும் பெற்று, 1907-ம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் கால்கொண்டது. ஆங்கிருந்தே உலகில் சத்தியாக்கிரக உணர்வு மீண்டும் எழுந்து யாண்டும் பரவலாயிற்று.

இந்தியர் பதிவுசெய்து வாழவேண்டுமென்றும், இல்லையேல் நாடு கடத்தப்படுவரென்றும் நிறுவப்பெற்ற கொடிய சட்டத்தைத் தவிர்க்க முதன் முறையாகத் தொடுக்கப்பட்ட போரில் காந்தியடிகள் பிடிக்கப்பட்டார்; நீதிமன்றங்கொண்டு போகப்பட்டார். ஆங்கே நடந்த நிகழ்ச்சி முறையிலுள்ள சில சத்தியாக்கிரகக் குறிப்புக்களை நோக்குவோம் :

**காந்தியடிகள்** :—யான் குற்றவாளியே. சான்றுகள் வேண்டுவதில்லை. குறுக்கு விசாரணையும் வேண்டா. ஓர் அறிக்கை செய்ய விரும்புகிறேன்.

மாஜிஸ்டிரேட்:—அதற்கு யான் செவிசாய்க்கமாட்டேன். சட்டமிருக்கிறது. அதை மீறி நீங்கள் நடந்திருக்கிறீர்கள். ஆதலால் இங்கே அரசியல் பேச்சு ஒன்றும் வேண்டா.

கா :—அரசியல் சொற்பொழிவு நிகழ்த்தப்போவதில்லை.

மா :—கேள்வி இதுதான். நீங்கள் பதிவு செய்து கொண்டீரா? இல்லையா? பதிவு செய்யவில்லையெனில் அங்கே விடயம் முற்றுப்பெறுகிறது. டிரான்ஸ்வால் அரசாங்கத்தால் நிறுவப்பெற்று அரசர் பெருமான் அங்கீகாரம் பெற்ற சட்டமிருக்கிறது. அச்சட்டப்படி நடக்க வேண்டுவது எனது கடமை. * * *

கா :—சட்டத்துக்குட்பட்டு எச்சான்றுங் கூறப்போவதில்லை.

மா :—சான்று வழி நின்று சட்டப்படி நடப்பதே எனது வேலை. 'நீங்கள் என்ன அறிக்கை செய்யப் போகிறீர்கள்? சட்டம் நியாயமானதென்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மனச்சான்று வழிநின்று நான் அதை எதிர்த்து மீறினேன்'. இதுதானே நீங்கள் சொல்லப் போவது?

கா:—ஆம்; அது முழு உண்மை.

பின்னைக் காந்தியடிகள் தாம் விரும்பியதை வெளியிட இடம் பெறாமையால், 'சொல்ல ஒன்றுமில்லை' என்றார். மாஜிஸ்டிரேட், 'நாற்பத்தெட்டு மணிநேரத்துக்குள் நீங்கள் நாட்டைவிட் டகலல் வேண்டும்' என்று கட்டளையிட்டார். சட்டத்தை அநியாயமெனக்கொண்ட ஒருவர், அச்சட்ட வழிப் பிறந்த கட்டளைக்கு இணங்குவரோ? அக்கட்டளைக்கு இணங்கிக் காந்தியடிகள் நடக்கவில்லை. மீண்டும் அவர் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கொண்டுவரப்பட்டார். காந்தியடிகள் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கூறியதாவது :—

'பிரிடோரியாவில் என் தோழர் பலர் மூன்று மாதக் கடுந்தண்டனையும், பெருந்தொகை அபராதமும் விதிக்கப்

பெற்றாரென்ற செய்தி இப்பொழுது கிடைத்தது. அபராதஞ் செலுத்தத் தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவலாம். அவர் குற்றஞ் செய்திருப்பரெனில், அதினுஞ் சிறந்த பெருங்குற்றம் யான் செய்திருக்கிறேன். ஆதலால் எனக்கு முழுதண்டனை விதித்தல்வேண்டும்.'

மா :—முழுத் தண்டனையா விரும்புகின்றீர் !

கா :—ஆம் ; ஐயா !

மா :—நீங்கள் விரும்புமாறு முழுத்தண்டனை - அதாவது ஆறுமாதக் கடுங்காவலும் ஐந்நூறு பவுன் அபராதமும் விதிக்க யான் இணங்கேன். * * * உங்களுடைய குற்றம் (28-12-1907) நியாயமன்றக் கட்டளையை மீறியதே. ஆதலால் இரண்டுமாத வெறுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

அடிகள் தண்டனை ஏற்றுச் சிறைபுகுந்தார்.

பின்னை 1913-ம் ஆண்டில் மூன்று பவுன் வரி கட்ட மறுக்குமாறும், அச்சட்டம் ஒழியும் வரை வேலை நிறுத்தஞ் செய்யுமாறும், இந்திய மக்களை ஏவியது குறித்து மற்றுமொரு வழக்கு அடிகள்மீது கொணரப்பட்டது. அவ்வழக்கில் காந்தியடிகள், தாம் வக்கீல் தொழில் செய்பவர் என்றும், சட்டம் கொடியதாயிருத்தலால் அதை நீக்க வேண்டுமென முதலாளிகளுக்கு விண்ணப்பஞ் செய்திருப்பதாகவும், அச்சட்டத்தின்மீது மக்களுக்குள்ள மனக்குறையைக் காட்ட வேலை நிறுத்தஞ் செய்யத் தொழிலாளர்க்குச் சொல்வதும் அவர் அவ்வாறு செய்வதும் நியாயமென்றும், வருந்தாது துன்பத்தைப் போக்க முடியாதெனத் தாம் அவர்க்குப் போதித்ததாகவும் கூறினார்.

காந்தி போன்ற பெருந்தகையார்க்குத் தண்டனை விதிப்பது வருத்தந் தருவதென்றும், காந்தியே குற்ற மென்று ஒத்துக்கொண்டமையால் சட்டப்படி நடப்பதை விட வேறு வழியில்லையென்றும் மாஜிஸ்டிரேட் சொல்லி, ஒவ்வொரு குற்றத்துக்கும் இருபது இருபது பவுன் அபராதமென்றும், தொகையைச் செலுத்தத் தவறினல் மும்மூன்று மாதக் கடுங்காவலென்றும், ஒன்றன்பின் ஒன்ருகத் தண்டனை ஏற்கவேண்டுமென்றுந் தீர்ப்பளித் தனர்.

காந்தியடிகள், 'யான் சிறைபுகுதலையே ஏற்றுக் கொள்கிறேன்' என்று சிறைபுக உறுதிகொண்டு, 'மூன்று பவுன் வரி தள்ளப்படும்வரை வேலை நிறுத்தம் நிறுத்தப்படலாகாது. அரசாங்கம் என்னைச் சிறைப் படுத்தினமையால் அவ்வரியை நீக்குதல் கூடும்' என்ற செய்தியை மற்றவர்க்கு அனுப்பிச் சிறைக்கோட்டம் நண்ணினர்.

'சட்டமீறல் நியாயமா' என்று சட்டவழி நிற் போர் கேட்பது வழக்கம். சட்டமென்பது யாது?

**சட்டமும் சத்தியாக்கிரகமும்**

சட்டம் மக்களிடை அன்பு அருள் ஒற்றுமை அமைதி முதலியன நிலவுமாறும், கொலை களவு கள் காமம் பொய் முதலியன நிகழாதவாறும், இயற்கை அறத்துக்கு முரணுகாதவாறும் காக்க அரசாங்கத்தால் செய்யப்படுவது. அரசாங்கம் இயற்கை அறத்துக்கு மாறுபட்டு, உரிமையை அழிக்கவல்ல சட்டங்களை நிறுவு மேல், அச்சட்டங்கட்கு உடன்பட்டு மக்கள் நடத்தல் அறக்கடவுளுக்கு மாறுபட்டு நடப்பதாகும். அறவோர்

அச்சட்டங்களை ஒழிக்க நியாயவழி நின்று கிளர்ச்சி செய்வர்; நியாயம் பிறவா தொழியின் அவைகளை மீறி நடந்து அறநெறி காக்கமுயல்வர். அநியாயச் சட்டங்களை மீறிநடந்து அரசைத் தூய்மைப்படுத்தவேண்டுவது அறவோர் கடமை. ஈன்ற தந்தை மைந்தனைக் கள்ளருந்து மாறு கட்டளையிட்டால், 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்று, மைந்தன் அத் தீநெறியில் நடக்கவேண்டும் போலும்! நன்று! நன்று!! மைந்தன் என்செயல் வேண்டும்? அவன் தந்தையின் கட்டளையை மீறியே நடத்தல் வேண்டும். தாய் தந்தையராயினும், அரசராயினும், எவராயினும் அறநெறி பிறழ்ந்து கட்டளை பிறப்பிப்பாராயின், அறவோர் தாம் வருந்தியேனும், அவரைத் திருத்தி நல்வழிப்படுத்த அவர்தம் மறக் கட்டளையை மீறவே உறுதிகொள்வர். இஃது அறவோர் இயற்கை.

பகைமை பொறாமை முதலிய தீமை செறிந்த உள்ளங்கொண்டு, கொடுஞ் சட்டங்களை மீறுவது சத்தியாக்கிரகமாகாது; அன்பு பொறுமை முதலிய நன்மை நண்ணும் உளத்தால் கொடுஞ் சட்டங்களை மீறுதல் சத்தியாக்கிரகமாகும். சத்தியாக்கிரகத்துக்கு இலக்கியமாகக் காந்தியடிகள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் இன்னுஞ் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுகிறேன்.

**சாம்பரான்**

பேஹாரிலுள்ள சாம்பரான் என்னுமிடத்தில் தொழிலாளர் மேல்நாட்டு முதலாளிகளால் துன்புறுத்தப் படுவதாகக் காந்தியடிகள் கேள்வியுற்று உண்மை தேற ஆண்டுச் சென்றார். காந்தியடிகளின் உண்மை நிலையை உணராத ஜில்லா மாஜிஸ்ட்ரேட், அவர் வரவால் சாம்பரானின் அமைதி

குலேந்து கேடு விளைந்துவிடுமென்று கருதி, அடுத்த வண்டியிலேயே (Train) அவரைப் புறப்பட்டுச் செல்லுமாறு ஒரு கட்டளை பிறப்பித்தார். மகாத்மா, கட்டளையைக் கண்டார்; உற்று நோக்கினர். 'யான் இறைபணி செய்ய (ஏழைகளுக்கு உழைக்க) ஈண்டுப் போந்துளேன்; இவ்வூரைவிட்டுப் போகேன்; மாஜிஸ்டிரேட் கட்டளையை மீறியதற்கு நேருந் தண்டனையை ஏற்கச் சித்தமா யிருக்கிறேன்' என்று காந்தியடிகள் பதில் இறுத்தார். காந்தியடிகள் ஆன்மஞான உறுதியுடையவர் என்பதை வலியுறுத்த இஃதும் ஒரு சான்றாக நிற்கிறது. 'பிறர் பொருட்டு வாழவேண்டுவது பிறவிப் பயன்' என்ற மெய்ஞ்ஞானத்தைப் பெற்றுள்ள காந்தியடிகள் காரணமின்றிப் பிறந்த கட்டளைக்குக் கீழ்ப்படிவரோ? அக்கட்டளைக்குக் கீழ்ப்படிதல் ஆண்டவன் ஆணைக்கு மாறாக நடப்பதன்றோ? இங்கே ஆண்டவன் ஆணை, ஏழைகள் துன்பத்தைக் கேட்டு அதை ஒழிக்குமாறு காந்தியடிகளைத் தூண்டுகிறது; அதிகாரி ஆணை அதை மறிக்கிறது. எதைக் கொள்வது? எதைத் தள்வது?

காந்தியடிகள் ஆண்டவன் ஆணைவழி நின்றார். ஆன்ம சக்தி கைவரப்பெற்றோர் அறத்திற்கு மாறாக எவர் கட்டளை பிறப்பினும் அக்கட்டளைக்கு அஞ்சார்; கீழ்ப்படியார். இச்செயல் மனித வாழ்க்கைக்கு உரியது. ஓர் அதிகாரியின் ஆணைக்கு அஞ்சி, ஒன்பதினுயிரம் ஏழைகளை வஞ்சிப்பது பெரும்பாவமன்றோ? ஏழைகள் பொருட்டு எத்தகைத் துன்பம் வரினும் அதைத் தாங்க விரைந்து நிற்பவர் கடவுளிடத்தன்புடையவராவர். அறத்திற்கும்

உண்மைக்குங் கட்டுப்பட்டுச் சிறை புகுவது துறக்கத் துக்குச் செல்வதையொக்கும். அதிகாரியின் ஆணைக்கு அஞ்சி மனமுடைந்து ஆண்டவன் பணிக்கு இடையூறு செய்வோர் தன்னலமுடையோராவர்.

சாம்பரான் மாஜிஸ்ட்ரேட் தம் கட்டளையை மீறிய காந்தியடிகள்மீது விசாரணை தொடங்கினார். காந்தியடிகள் வழக்கை வளர்த்துக்கொள்ளவில்லை; வக்கீல்களைத் தேடவில்லை; வலிந்துவந்த வக்கீல்களையும் தமக்காகப் பேசவொண்ணுதவாறு தடுத்துவிட்டார். மாஜிஸ்டிரேட் எதிரில், பொறுமைப் பொருளாகிய காந்தியடிகள் நின்று, 'யான் எனது கடமையைச் செலுத்த வந்தேன். அதைத் தடுக்கத் தங்கள் கட்டளை பிறந்தது. உலக ஆட்சி முறை வழியாகப் பிறந்த கட்டளைக்கு யான் கீழ்ப்பட்டு நடக்க உடன்படாதது குற்றமே' என்று கூறினார். காந்தியடிகளின் வாயினின்றும் பிறந்த பொருண்மொழியை மாஜிஸ்டிரேட் செவிமடுத்தார்; தீர்ப்பைச் சொல்லாது நிறுத்திவிட்டார். சின்னாள் கடந்ததும், காந்தியடிகள்மீது பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டளையை விலக்கிவிடுமாறு மேல்அதிகாரிகளிடமிருந்து மாஜிஸ்டிரேட்டுக்கு ஆணைபிறந்தது. மாஜிஸ்டிரேட் என்செய்வார்? பொறுமை எதிர்ப்பிற்கு முன் பிற எதிர்ப்புக்கள் என்செய்யும்? அதற்குமேல் காந்தியடிகள் சாம்பரான் தொழிலாளர் துன்பங்களை விசாரணை புரியும் உரிமை பெற்றார். பின்னர்ச் சாம்பரான் தொழிலாளரது துன்பம் ஒருவாறு ஒழிந்தது.

காந்தியடிகள் ஜில்லா அதிகாரியின் ஆணைக்கு அஞ்சிச் சாம்பரானுள் நுழையாது திரும்பியிருப்பா

ராயின், தொழிலாளர் துன்பம் ஒழிந்திருக்குமோ ? ஈசன் பணிக்கு எவர் இடையூறிழைப்பினும் அஞ்சுதலாகாது. ஈசன் பணியாவது, பயன் கருதாது பிறர்க்குத் தொண்டு செய்வது.

இன்னொன்று கெய்ரா ஜில்லாவில் நிகழ்ந்தது. அது வரி கொடாமை வழி நிகழ்ந்ததாகும். பம்பாய் மாகாணத்தில் கெய்ரா என்றொரு ஜில்லா இருக்கிறது. 1918 - ஆகஸ்டில் அந்த ஜில்லாவில் விளைவு குறைந்தது. அரசாங்கத்தார் விளைவு குறைவைக் கருதாது வழக்கம்போல வரி திரட்டத் தொடங்கினர். ஏழைக் குடிமக்கள் என்செய்வார்கள்! அவர்கள் துயரைக் கேட்டு மகாத்மா காந்தி கெய்ரா ஜில்லா சென்று உண்மை கண்டு விளைவுக்குத் தக்கவாறு வரி வாங்குதல் அறமென்று அரசாங்கத்தாரிடம் முறையிட்டார்; நியாயப்போர் புரிந்தார். அரசாங்கத்தார் காந்தியடிகள் உரைக்குச் செவி சாய்க்க ஒருப்படவில்லை. அதைக் கண்ட அடிகள் தமது ஆத்ம சக்தியைக் கெய்ரா ஜில்லா முழுவதும் வீசினார். எல்லாரும் பொறுமை எதிர்ப்பைக் கொண்டனர். பெண் மக்களும் காந்தியடிகள் சொல் வழி நின்றார்கள். அரசாங்கத்தார் நிலங்களையும், வீடுகளையும், மாடுகளையும், தட்டுக்களையும், முட்டுக்களையும் ஏலத்திற்கு விட்டுத் தம் விருப்பப்படி நடந்தனர். எதற்குங் கெய்ரா ஜில்லா அசையவில்லை. இறுதியில், 'தீர்வை கட்டக்கூடியவர் கட்டலாம்; முடியாதவர் கட்டவேண்டுவதில்லை' என்ற கட்டளையை அரசாங்கம் பிறப்பித்தது. காந்தியடிகளின் ஆத்மசக்தி ஒரு ஜில்லாவையும் கட்டுப்படுத்தி, அரசாங்கத்தாரையும்

கெய்ரா

இணங்கச் செய்தது. உண்மையையும் அஞ்சாமையையும் நோன்பாகக் கொண்டவரால் நிகழ்த்த முடியாத செயலுமுளதோ ?

காந்தியடிகள் இவ்வினையாற்றியதைக் கொண்டு அரசாங்கத்தாருக்கு மாறாக அவர் நடந்தாரென்று கொள்வது அறியாமை. அரசாங்கத்தார் முறை பிறழ்ந்து செல்லுங்காலத்து, அவருக்கு உண்மை கொளுத்தி, அவரைத் திருத்தவேண்டுவது அறவோர் கடமை. அரசாங்கத்தாருக்கு அஞ்சி மறவழி கடைப்பிடிப்போர் எவராயினும் அவர் கீழ் மக்களே யாவர். அவரை இராஜபக்தி இல்லாதவர் என்றுங் கூறலாம். மகாத்மா, கடமை என்பதை நன்கு உணர்ந்தவர். அவர் எவ்வெக் காலத்து எவ்வெக் கடமையைச் செய்யவேண்டுமோ அவ்வக் காலத்து அவ்வக் கடமையைச் செய்யும் பெரியார் என்பதை உலகம் அறிவதாக.

1919-ம் ஆண்டு 'ரௌலட் சட்டம்' என்றொரு சட்டம் இந்தியச் சட்டசபையில் நிறைவேறிற்று. ஐயுறுவோரை இரகசியமாக விசாரணை புரிந்து ஒறுத்தல், அதற்குமேல் நியாயம் பெறல் (அப்பீல்) இன்மை முதலிய கொடுமைகள் அச்சட்டத்தில் பொருந்தியிருந்தன. சத்தியாக்கிரகிகள் அக்கொடுஞ் சட்டங்கொண்டு வாளா கிடப்பரோ ? காந்தியடிகள் அதுபோழ்து இராஜப் பிரதிநிதியாயிருந்த லார்ட் செம்ஸ்பர்டைக் கண்டு எச்சரிக்கை செய்தார். தேக சக்தியில் உறுதியுடைய ஒருவர், ஆன்ம சக்தியில் உறுதியுடையார் சொல்லைப் பொருட்படுத்தல்

ரௌலட் சட்டம்

அரிதன்றோ? பின்னைக் காந்தியடிகள் அச்சட்டத்தை ஒடுக்கப் பெருஞ் சத்தியாக்கிரகப் போர் தொடுத்தார்.

ரௌலட் சட்டத்தை ஒழிக்கும் வாயிலாக இந்தியாவையே பழைய சத்தியாக்கிரக நாடாக்கக் காந்தியடிகள் முயன்றது போற்றத்தக்கது. காந்தியடிகள், அது போழ்து மெலிந்த உடலுடையராய், பிணியால் பீடிக்கப் பட்டவரா யிருந்தும், அவர் கடனறி காட்சியாளராகலான், இந்தியாவின் நாலுபக்கமும் போந்து, மற்றத் தலைவரோடு கலந்து பேசிப் பேசி ஆங்காங்கே சத்தியாக்கிரக சங்கங் கண்டார். 'இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார் - கடனறி காட்சி யவர்' என்பது பொய்யாமொழி. அப்பொழுது காந்தியடிகள், ரௌலட் சட்டம் அழிக்கப்படும்வரை, அதையும், அதுபோன்றதையும், சத்தியாக்கிரகக் கூட்டத்தவரால் குறிக்கப் படும் வேறு சில சட்டங்களையும் தொண்டர் மீறி நடக்க வேண்டுமென்றும், மீறும் வேளையில் ஒழுங்கு காக்கப்பட வேண்டுமென்றும், உண்மையினின்றும் பிறழலாகாதென்றும், எவ்வுயிருக்கோ, எப்பொருளுக்கோ கேடுநிகழுந் துறையில் அதாவது ஹிம்சையில் இறங்கலாகாதென்றும் ஓர் அறிக்கை விடுத்தார். இப்பெருஞ் சத்தியாக்கிரகப் போர் இந்தியாவில் முதன் முறையாகத் தொடங்கப்பட்டதாகலின், காந்தியடிகள் அவ்வப்பொழுது ஹிம்சையை மறுத்தும் அஹிம்சையைப் போற்றியும் எழுதிய கட்டுரைகளும் பேசிய பேச்சுகளும் பலப்பல. பரந்த ஒரு பெருங் கண்டம் போன்ற நாட்டை ஆன்ம சக்திப் போரில் நிறுத்துவது எவ்வளவு அருமை என்பதைச் சொல்லலும் வேண்டுமோ? காந்தியடிகள் சட்டமீறலைத்

துவங்குவதற்கு முன்னர் நாட்டைத் தூய்மைப்படுத்த முயன்றார்.

ரௌலட் சட்டத்தைப்பற்றி எழுந்த சத்தியாக்கிரக அறிக்கை ஒன்றில், 'ரௌலட் விசாரணைக் கூட்டத்தார் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதனால் இந்தியாவில் மூர்க்கத்தில் உறுதியுடைய ஒரு சிறு கூட்டத்தார் - மிக மிகச் சிறு கூட்டத்தார் - இருக்கின்றாரென்று தெரிகிறது. அக்கூட்டம் நாட்டுக்கு இடர் விளைப்பதே. அதன்பொருட்டு முழு இந்தியாவைக் குலுக்கத் தக்க ஒரு சட்டத்தை அரசினர் நிறுவுவது அவ்விடரினும் பேரிடர் விளைப்பதாகும். உலகிலுள்ள அனைவரினும் இந்தியாவிலுள்ள கோடி கோடி மக்கள் இயல்பிலேயே சாதுக்கள் என்னுஞ் சரித்திர உண்மையை விசாரணைக் கூட்டத்தார் முற்றும் உணராமற் போயினர்' என்று அடிகள் குறிப்பிட்டிருத்தலில் எத்தகைய உண்மையிருக்கிறதென்பதை அன்பர்கள் நோக்குவார்களாக. மற்றுமோர் அறிக்கையில் பொருட்காப்புக்காகவும் உயிர்க்காப்புக்காகவும் ஏற்பட்டுள்ள மூலச்சட்டங்களை ஒருவர் மீறல் சத்தியாக்கிரகமாகாதென்றும், மக்கள் உரிமை கெடுக்கவல்ல ரௌலட் சட்டம்போன்ற சட்டங்களையே மீறி நடத்தல் வேண்டுமென்றும் மகாத்மா குறிப்பிட்டதுங் கருதற்பாலது.

சத்தியாக்கிரகப் பொதுக் கூட்டங்களைப் பற்றிச் சில அறிக்கைகள் அவ்வப்போது அடிகளால் வழங்கப்பட்டன. அவைகளில் கைதட்டல், கூக்குரலிடல், 'வெட்கம் - வெட்கம்' என்று கூச்சலிடல், பிறரைக் குறை கூறல், வைதல் முதலியன கூடா என்று அடிகள் குறிப்

பிடுவது வழக்கம். கூட்டங்களில் அமைதி என்பதும், மாறுபட்ட கருத்துடையார் தங்கருத்தை எவ்விடுக்கணு மின்றி வெளியிடுவதும் நாட்டில் சிறிதளவாதல் நிலவிய தற்குக் காரணம் காந்தியடிகள் அறிவுறுத்தலேயாகும்.

அடிகள் இந்திய நாடு முழுதுஞ் சுற்றி, ஒருவாறு நாட்டைப் பண்படுத்தி, நாடு முழுவதும் ஒன்றிய உளத்தால் சத்தியாக்கிரக நினைவும் பேச்சும் செயலும் பெற வேண்டி, ஒருநாள் குறிப்பிட்டு, அந்நாளைச் சத்தியாக்கிரக நாளாக மக்களைக் கொண்டாடுமாறு கட்டளையிட்டார். நாடும் அவர் ஆணைவழி நிற்க ஒருப்பட்டது. அந்நாள் குறித்துக் காந்தியடிகள் வெளியிட்ட அறிக்கை வருமாறு :—

'பல கூட்டங்களில் யான் விளக்கிக் கூறியபடி சத்தியாக்கிரகம் ஒரு சமய சம்பந்தமான இயக்கமே. அது தூய்மைக்கும் கழுவாய்க்கும் உரிய முறையாகும்; தனக்குத் தானே வருந்துவது, சீர்திருத்தத்தையோ அல்லது துக்க நிவர்த்தியையோ நல்கும். ஆதலால் இராஜப் பிரதிநிதி (1919-ம் ஆண்டு எண் 2) மசோதாவிற்குச் சம்மதமளிக்கும் வாரத்தில், வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமையை, (அதாவது ஏப்ரல் 6) நம்மை இழிவுபடுத்திய நாளாகவும், அது குறித்து ஆண்டவனை வேண்டும் நாளாகவும் கொள்ளுமாறு சொல்லத் துணிகிறேன். நமது மனோநிலையைத் திறம்பட வெளியிடும் வழியில் செவ்வனே ஒழுங்காக அந்நாளைக் கொண்டாடச் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

(க) சமயக்கொள்கை காரணமாகவாதல், உடல்நிலை காரணமாகவாதல் நேரும் முட்டுக்கு உட்படுவோர் தவிர மற்ற வயதுற்ற அனைவரும் முன்னாள் இரவு உணவு

கொண்ட நேரத்திலிருந்து இருபத்துநான்கு மணிநேரம் நோன்பிருத்தல் வேண்டும். அவர், பட்டினிகுறிக்கும் முறையிலாவது, அரசாங்கத்தை வருத்தும் நோக்குடனாவது நோன்பைக் கொள்ளலாகாது. சத்தியாக்கிரக அறிக்கையில் கையெழுத்திட்ட சத்தியாக்கிரகிகளால் இந்நோன்பு, தங்களைச் சட்ட மறுப்புக்குத் தக்கவர்களாக்க ஒழுங்குபடுத்துங் கருவியாகக் கொள்ளப்படல்வேண்டும்; மற்றவர்களால் இது தங்கள் மனவருத்தத்தை வெளியிடுவதாகக் கொள்ளப் படல் வேண்டும்.

(உ) பொது நலத்துக்கு இன்றியமையாத சில வேலைகள் தவிர மற்ற வேலைகளெல்லாம் அன்று நிறுத்தப்படல் வேண்டும். சந்தையும், மற்ற வாணிப நிலையங்களும் மூடப் படல் வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை செய்வோர் முன்னரே ஓய்வு கேட்டுப் பெற்று வேலை செய்யாமலிருக்கலாம்.

இவ்விரண்டும் அரசாங்க ஊழியராலும் கொள்ளப்படல் வேண்டுமென்று தயங்காது கூறுவேன். அரசியல் வாதங்களிலும் கூட்டங்களிலும் அவர் வெளிப்படையாகத் தலையிடமுடியாமற் போயினும், முக்கியமான சிலவற்றில் ஒருவரம்புக்குள் நின்று, தம் மனோ நிலையை வெளிப்படுத்தலாமென்று யான் கருதுகிறேன்.

(ரூ) அன்று இந்தியா முழுவதும், கிராமங்களும் பொதுக் கூட்டங்கள் கூட்டிக் கொடுஞ் சட்டங்கள் திரும்ப வாங்கப் படல் வேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றல் வேண்டும்.

இவை ஏற்கக் கூடியனவாயின், ஆங்காங்குள்ள சத்தியாக்கிரக சங்கத்தார் தக்க ஏற்பாடு செய்யும் பொறுப்புடையவராகிறார். மற்ற மற்ற சங்கத்தாரும் இம்முயற்சியில் தலைப் பட்டுழைப்பாரென நம்புகிறேன்.'

இவ்வறிக்கையை உற்று நோக்குழிக் காந்தியடிகள் நாட்டையும் அரசையும் எவ்வாறு தூய்மைப் படுத்த முயன்றார் என்பதும், காந்தியடிகளென்னும் பேராசிரியர் முப்பது கோடி மாணுக்கரடங்கிய பாரதக் கல்லூரியில் சத்தியாக்கிரகக் கல்வியைப் படிப்படியாக எவ்வாறு அறிவுறுத்தினார் என்பதும் புலனாகும். சத்தியாக்கிரக ஆட்சிக்கு வேண்டற்பாலனவாய ஒழுங்கு அமைப்புக்களை அடிகள் கோலினார் என்று கூறல் மிகையாகாது. ஒழுங்கும் அமைப்பும் வாழ்விற்கு இன்றியமையாதன என்பதையும் அடிகள் புலப்படுத்தினார்.

நாட்டவர் அனைவரும் அன்புளத்தால் நோன்பிருப்பதும், கூட்டங் கூடுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் வரம்புக்கு உட்பட்ட முறைகளேயாகும். இவைகளில் வரம்பழிக்கும் மீச்செயல் ஒன்றுமில்லை. மக்கள் ஒன்றிய மனங்கொண்டு வேண்டுதற்கு ஜனநாயக அரசு இணங்கியே தீரல்வேண்டும்; இணங்காதொழியுமேல் வேறு வழி என்னை? சட்டமீறல் ஒன்றே வழி. காந்தியடிகள் வரம்பு கடந்த முறையைக் கொள்ளவில்லை என்பது ஈண்டுச் சிறப்பாகக் கருதற்பாற்று. தூய்மையும் நோன்பும் அரசாங்கத்தை உருகச் செய்யாதொழியினும், அவை மெய்ப்பொருளாகிய ஆண்டவன் உள்ளத்தைக் கனியச் செய்யும் என்பது அடிகள் உள்ளக்கிடக்கை. உண்மையாகச் சத்தியாக்கிரக நோன்பால் முடியாத தொன்றுமில்லை. வருத்தத்துடனே, கடமையொட்டியோ, பெருமை கருதியோ, தன்னலங்கொண்டோ ஏற்கப்படும் நோன்பு ஒரு பயனையும் அளியாதென்பது திண்ணம். நோன்பு, பழைய இந்தியாவின் உடைமை. அதை இப்

புதிய இந்தியாவிற்கு அணிய மகாத்மா காந்தி முயன்று வருவதைக் கண்ணுள்ளவர் கண்டே வருகிறார்.

'சத்தியாக்கிரகத்தைத் தன்னலத்துக்காகக் கொள்ளல் கூடாது. அதைப் பிறர் நலத்துக்கே கொள்ளல்வேண்டும். சத்தியாக்கிரகி துன்பம் பொறுத்தலுக்கும் பொருள்நட்டத்துக்கும் எப்பொழுதுஞ் சித்தமாயிருத்தல் வேண்டும்'

என வரூஉங் காந்தியடிகளின் செம்மொழிகளை நோக்குக.

காந்தியடிகள் சத்தியாக்கிரக நாள் வரும் வரை, 'கூட்டங்களில் சினமாகப் பேசலாகாது; கடைகளை மூடுமாறு எவரையும் வலியுறுத்தலாகாது; நமது நோக்கம் விழுமியது; கடவுள் தொடர்பு கொண்டது; பொறுமை வேண்டும்; அன்பு வேண்டும்' என்று அடிக்கடி எச்சரிக்கை செய்துகொண்டே வந்தார். சத்தியாக்கிரக நாளன்று மகாத்மா காந்தி பல இடங்களுக்கு அனுப்பிய செய்திகளிலும் சத்தியாக்கிரக நுண்மைகள் பொலிந்தன. காந்தியடிகள் ஏற்ற பொறுப்பு எத்தன்மைத்து? அன்பர்களே! கூர்ந்து ஓருங்கள்.

காந்தியடிகள் வேண்டுகோளுக்கு நாடு செவி சாய்த்தது. 1919-ஆம் ஆண்டு, ஏப்ரல் ஆறாம் நாள் ஞாயிற்றுக்கிழமை, இமயம் முதல் கன்னியா குமரி வரை அலைபற்ற கடல்போலிருந்தது. சேனையும் மெய்காப்புமில்லா ஒருவரது அன்பு ஆணையின் ஆற்றல் என்னே! நாற்பது கோடி மக்களைக்கொண்ட பாரத பூமி ஒரு காந்தியின் திருவடி நிழலில் நின்றது! மக்கள் கடைகளை மூடியதும், வேலை செய்யாது நின்றதும், நோன்பு பூண்டதும், அமைதியாகக் கூட்டங் கூடித்

**ஆன்மசக்தியின் விழுப்பம்**

தீர்மானங்கள் நிறைவேற்றியதும எவருள்ளத்தைக் கவரா? நீண்ட நாள் கடவுளை மறந்திருந்த இந்தியா அன்று கடவுள் நெறியைக் கண்டது என்றுங் கூறலாம். இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லிம்கள் மற்றவர்கள் எல்லாரும் ஒரு மனிதரைப்போல் விளங்கிய காட்சியை ஒரு மகாத்மா நமக்குப் புலப்படுத்தினர். அன்று இந்தியா சுயராஜ்யம் பெற்றிருந்தது என்று கூறல் மிகையாகாது. காந்தியடிகள் ஆத்மசக்தி வாழ்க.

இந்தியா எங்கணும் அமைதியாகச் சத்தியாக்கிரக நாள் கொண்டாடப் பட்டதையும், அவ்வொன்றிய வேண்டுகோளுக் கிணங்க அரசாங்கம் ஒருப்படாததையுங் காந்தியடிகள் ஓர்ந்து, சட்டமீறல் துவங்க எண்ணி, அரசாங்கத்தார்பால் பதிவுபெறாத 'சத்தியாக்கிரகி' என்னும் பத்திரிகையை வெளியிட்டனர். வேறு சில மாகாணத்துள்ள தலைவர் சிலரும் அத்தொண்டில் ஈடுபட்டனர். போர் தொடங்கிய அடிகள், 'எப்பொழுதாயினும் எனது உடல் சிறைப்படும்' என்று சிறை நோக்கி நின்றனர்.

இவ்வேளையில் பாஞ்சாலத் தலைவர்களிடத்திருந்து காந்தியடிகளுக்கு அழைப்பு வந்தது. அவ்வழைப்புக்குக் காரணம் ஆங்குள்ள மக்களின் நிலை பிறழக் கூடியதாயிருந்ததும், அது போழ்து ஆங்கே கவர்னராயிருந்த ஓட்வியர் என்பவரின் சிறுமைச் செயலுமேயாகும்.

**பாஞ்சால எழுச்சி**

பாஞ்சாலம் ஏப்ரல் ஆறு நாளைக் கொண்டாடிய சிறப்புச் சொல்லுந் தன்மையதன்று. அக்கொண்டாட்டம் ஹிந்து-முஸ்லிம்களை ஓரினத்தவராக்கிற்று என்றுஞ்

சொல்லலாம். அப்பொழுது ஆங்கு நிகழ்ந்த ஸ்ரீர நவமி விழாவில் இஸ்லாமானவருங் கலந்து கொண் டெனில் வேறென்ன கூறல் வேண்டும்? இவ்வொற்றும ஓட்வியர் உள்ளத்தில் கனல் மூட்டியது போலும்! அ தம் உள்ளக் கனல், புகை விட்டுக் கொண்டேயிருந்த புகை எழுநாவிட்டு எரியும் வாய்ப்பு நேர்ந்தது.

பாஞ்சாலத் தலைவர்கள் அழைப்புக்கிணங்கி மகாத் காந்தி அத்திசை நோக்கினார்; நோக்கி வந்த மகாத காந்தியை அரசாங்கத் தடை உத்திரவு தகைந்த மகாத்மா காந்தி அரசாங்கக் கட்டளையை மீறிச் செல்வ கண்ட அதிகாரிகள் அவரைப் பிடித்து வண்டியேய திருப்பிவிட்டார்கள். 'காந்தியடிகள் பிடிக்கப்பட எங்கேயோ கொண்டுபோகப்படுகிறார்' என்ற செய் யாண்டும் பரவலாயிற்று. அச்செய்தி தில்லி, அமிர்தசர பம்பாய், வீரமகம், ஆமதாபாத் முதலிய இடங்கள துராக்கிரகத்தை எழுப்பிற்று. துராக்கிரகம் பாஞ்சால தில் தலைவிரித்தாடிற்று.

சத்தியாக்கிரக நாளை அமைதியாகத் திறம்பட கொண்டாடிய பாஞ்சாலத்தில் ஏன் துராக்கிரக மெழுத வேண்டும்? ஆண்டுத் துராக்கிரகம் எழா திருப்பி காந்தியடிகள் படிப்படியாகச் சத்தியாக்கிரகப் போர நடாத்தி நாட்டுக்கு வாகைமாலை சூட்டியிருப்பர். நிலை எய்துக் தவம் நாட்டில் நிறைவேறவில்லை. பெ மக்கள் கண்ணீர், தீண்டாதார் மனவருத்தம், பௌத் சட்ட அடிகண்மாரை வதைத்த வதை முதலிய ம செயல்கட்குக் கழுவாய்தேட ஒருப்படாத நாடு உரிமை பெற ஆண்டவன் திருவுளங் கொள்வனோ? எழுதற்கா சத்தியாக்கிரகப் போர் எழுந்தது! அதை நடாத்

புத்தர்போன்ற ஓர் அறவோர் முன்னணியில் நின்றார்! எழுந்தும் நின்றும் என்ன பயன் விளைந்தது? எழுச்சியின் மீதுங் குறையில்லை; தலைவர் மீதுங் குற்றமில்லை. நாட்டின் தீயூழ் குறுக்கிட்டு நின்றது.

பாஞ்சாலத்திலெழுந்த துராக்கிரகம், 'சத்தியாக்கிரகப்போர் இதுபோழ்து வேண்டா' என்று அதைத் தடுப்பதாகியது. துராக்கிரகங் கலந்த சத்தியாக்கிரகம் நஞ்சு கலந்த பால் போன்றதன்றோ? அத்தகைய ஒன்றையா காந்தியடிகள் நாட்டுக்களிப்பர்? காந்தியடிகள் நாட்டின் நிலைமை ஓர்ந்து சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தினார். அவ்வேளையில் சத்தியாக்கிரக சங்கக் காரியதரிசிகளுக்கு அடிகள் எழுதிய கடிதம் பொன்னேபோலப் போற்றத்தக்கது. அக்கடிதத்தில் அடிகள் ஆமதாபாத், வீரமகம், பஞ்சாப் முதலிய இடங்களிலுள்ள ஏழை மக்கள், தம்மீது கொண்ட அன்பு காரணமாக வீறிட்டெழுந்து, துராக்கிரக வினையை நிகழ்த்தினார்களென்றும், அரசாங்கத்தார் தம்மைத் தில்லியில் நுழையாதவாறு தடுத்ததே அத்தீய எழுச்சிக்குக் காரணமென்றும், அதற்கும் சத்தியாக்கிரக இயக்கத்துக்கும் தொடர்பாதல் கலப்பாதல் இல்லையென்றும், இருப்பினும் சத்தியாக்கிரக இயக்கத்தின் போது நாட்டில் அமைதி நிலவவேண்டுமென்றும், அமைதி காக்க அரசினர்க்கு இடந்தரல் வேண்டுமென்றும், ரௌலட் சட்டத்தைப் பற்றித் தமது கருத்து எவ்வித மாறுதலுமடையவில்லை யென்றும், இப்போது சத்தியாக்கிரகப் போரை நிறுத்துவதே நலமென்றும் எழுதி, அதில் ஓரிடத்தில்,

'சத்தியாக்கிரகம் பல கிளைகளையுடைய ஆலமரம் போன்றது. அக் கிளைகளுள் ஒன்று சட்ட மறுப்பென்பது.

> சத்தியமும் அஹிம்சையும் சேர்ந்த ஒன்றே அம்மரத்தின் தண்டு. அதினின்றும் பல கவடுகோடுகள் எழுகின்றன. சத்தியமும் அஹிம்சையும் ஒன்றும்பட்டத்திருந்து சட்டமறுப்பு எழும். நாம் அஞ்சாது சத்திய அஹிம்சா தர்மத்தைப் பரப்பிய பின்னரே சத்தியாக்கிரகப் போர் தொடங்க வல்லவராவோம்'

என்று சத்தியாக்கிரக நுட்பத்தை விளங்கக் கூறினார்.

பஞ்சாப்பில் ஒரு மூலையில் எழுந்த துராக்கிரகம், அதிகாரவர்க்கத்தின் முழுத் துராக்கிரகத்தையும் எழுப்பி விட்டது. ஜெனரல் டையர், ஜான்ஸன், ஸ்மித் முதலிய கோழைகள் நிகழ்த்திய அரக்கச் செயல்கள் மரஞ் செடிகளின் மனத்தையும் உருகச்செய்யும். ஜெனரல் டையர் என்பான், ஜாலியன்வாலா பாக்கெனும் நான்கு மதில்சூழ்ந்த ஓரிடத்தில், சொற்பொழிவு கேட்க ஈண்டிய ஒன்றுமறியா மக்களைத் தன்பாலிருந்த தோட்டாக்கள் ஒழியும் வரை ஓயாது சுட்டுச் சுட்டுக் கொன்றதை; இந்தியா என்றேனும் மறக்கும்? கயவர்கள் பெரும் பெருந் தலைவர்களை விலங்கிட்டுப் பிணித்துத் தெருவில் ஓடுமாறு துரத்தி அடித்ததையும், ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குச் செல்வோரைக் காலால் நடந்து போகாதவாறு தடுத்து, அவர்களை மார்பால் பாம்புபோல் ஊர்ந்து போகுமாறு துன்புறுத்தியதையும் நமது நாடு என்றேனும் மறக்கும்? சாதுக்களின் உடலில் சுண்ணும்படித்து கையாடியும், பெண்மணிகளது நிறை கெடுத்தும், வானத்திருந்து குண்டுகளெறிந்துங் கொலைஞர் புரிந்த கொடுமையைப் பாரதபூமி மறக்குமோ? வேறு பல அட்டூழியங்களை நினைக்கும் போதே உள்ளங் குழை

பஞ்சாப் படுகொலை

கிறது. விரிவு பஞ்சாப் படுகொலையைப் பற்றிப் பலர் எழுதிய நூல்களிற் காண்க.

இத்தகைய கொடுமை குறித்து எழுந்த கிளர்ச்சியின் பயனாகப் படுகொலை நிகழ்ச்சியின் உண்மை காண லார்ட் ஹண்டர் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு விசாரணைக் கூட்டம் தோன்றித் தன் வேலையைத் தொடங்கிற்று. அக்கூட்டத்தைப் பலர் வெறுத்தும், மகாத்மா காந்தி, 'இனியாவது நியாயம் பிறக்குமா' என்றெண்ணி, அதன் முன்னர்ச் சான்று கூறினார். அக்கூட்ட விசாரணையால் நலன் விளையாதெனக் கண்ட காங்கரஸ்காரர் வேறொரு கூட்டம் அமைத்து விசாரித்து ஓர் அறிக்கை வெளியிட்டனர், இதிலும் அடிகள் ஓர் உறுப்பினராக வீற்றிருந்தார். ஹண்டர் கூட்ட அறிக்கையாலும், மற்ற அறிக்கையாலும் பயன் ஒன்றும் விளையவில்லை. ஓட்வியர், டையர் முதலியோர் ஆறுதல் சம்பளம் பெற்று இங்கிலாந்துக் கேகினர். அங்கே அவர்கள், 'பிரிட்டிஷ் ஆட்சி காத்த தெய்வங்கள்' என்று போற்றப்பட்டார்கள். டையர் என்னும் பெரும்பாவிக்கு ஒரு வீர வாள் பரிசலாக அளிக்கப்பட்டது. திலகர் முதலிய சில பெருந் தலைவர்கள், டையர் முதலியோர் எவ்விடத்தில் பாரதமக்களைச் சுட்டுக் கொன்றனரோ அவ்விடத்திலேயே அக்கொடிய பாவிகளையும் பலியிடல் வேண்டுமென்று அவ்வாண்டு அமிர்தசரஸில் கூடிய காங்கரஸ் மேடையில் பேசினார்கள். பொறுமைப் பொருளாகிய காந்தியடிகள், 'கொலைக்குக் கொலை கூடாது' என்றும், 'கொலைஞரை வேலையினின்றும் விலக்குவதே சாலும்' என்றும் கூறிவந்தார். அவர் விருப்பப்படியே காங்கரஸ் கூட்ட அறிக்கையும் அறைந்

**பகைவர்பால் காழ்ப்பின்மை**

தது. திலகர் முதலிய பெருந்தலைவர்களின் கூற்றையும் அடிகள் ஏற்றுக் கொண்டாரில்லை. 'கொலைக்குக் கொலை கூடாது' என்னுஞ் சத்தியாக்கிரக நிலையினின்றும் அடிகள் பிறழ்ந்தாரில்லை. எந்நிலையில் காந்தியடிகள் பகைவர்மாட்டு இரக்கங் காட்டினார்? நேயர்களே! நோக்குங்கள்! நாடு முழுவதும், 'டையரா! ஓட்வியரா! கொல்லுங்கள்' என்று வீறிட்டு நின்றபோது, நமது பொறுமைப் பொருள் கொல்லா அறத்தை அறிவுறுத்திற்று. காந்தியடிகள் வேறு எதை அறிவுறுத்துவார்? அவர் அகத்தில் பொலிவது என்ன? தயாமூல தர்மமன்றோ? மனிதன் வாழ்வில் பெறவேண்டிய செம்பொருள் அஃதன்றோ? அதை நெருக்கடி நேரும் பொழுதும் அச்சத்தாலோ, நட்பாலோ, எக்காரணத்தாலோ நெகிழ விடலாகாது. காந்தியடிகள் அம்மூலப் பொருளை எந்நிலையில் எச்சமயத்தில் பாதுகாத்தார் என்பது பெரிதுங் கருதற்பாற்று. அப்பொருளை அடிகளிடத்திருந்து பறித்தல் திலகராலும் இயலாமற் போயிற்று.

கொடியரை வேலையினின்றும் நீக்கக் கூறியது மட்டும் அருட்டன்மையாமோ என்றும், அக்கூற்றுள் காழ்ப்பு இல்லையோ என்றும் சிலர் வினவலாம். கொலைக்கும் வேலை நீக்கத்துக்கும் வேற்றுமையுண்டு. வேலை நீக்கம் கொடுஞ்செயல் நிகழ்த்தியவர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதாகும். தீயர் நல்லறிவு பெற்று மனந்திரும்பித் தஞ்செயல் குறித்து இரங்குதலுமுண்டு.

**கொலையும் இரக்கமும்**

மனந்திரும்பிக் கழிவிரக்கமுற ஒருவனுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். இவ்வாய்ப்பு, கொலையால் எங்ஙனம் உண்டாகும்? மனந்திரும்புதற்கு வாய்ப்பளியாமை

கடவுள் நோக்குக்கு மாறுபட்டு நடப்பதாகும். ஆதலின், கொலை கொள்ளற்பாலதன்றென்க. உலகில் கொலை செய்வோரைக் கொலை செய்வது விரும்பத்தக்கதன்று. கொலைஞரை மனந்திருந்தும் முறையில் பண்படுத்த முயல்வதே அறிவுடைமை. இது நிற்க.

பெருங்கொலை புரிந்தோரை வேலையினின்றும் விலக்குதல் எவ்வளவு எளிய தண்டனை? எளிய தண்டனையும் விதிக்க அரசாங்கத்தார் ஒருப்பட்டாரில்லை. பிரிட்டனில் கொலைஞர் போற்றப்பட்டனர். இன்னோரன்ன செயல்கள் இந்தியாவில் எரி மூட்டின. எரி, இந்தியாவில் கனன்று மூண்டெழுந்து புகைந்த வேளையில், அதில் நெய்விட்டாலென ஐரோப்பாப் போர்க் காலத்தில் பிரிட்டிஷ் முதலமைச்சர் கிலாபத்துக்குக் கூறிய உரைப்படி நடவாத செய்தியும் இந்தியாவிற்கு எட்டிற்று.

**ஒத்துழையாமை**

காந்தியடிகள் பஞ்சாப் படுகொலைக்கும், கிலாபத்துக்கும் நியாயம் பிறவாமையைக் காரணமாகக் கொண்டு ஒத்துழையா இயக்கத்தைத் துவங்கினார். அடிகள் துவங்கிய போருக்குக் காங்கரஸும் துணை நிற்க இசைந்தது.

பஞ்சாப் படுகொலைபோன்ற கொடுமைகள் நடைபெறுதற்கும், அவை குறித்து நியாயம் பிறவாமைக்கும் காரணம், நாடு சுயராஜ்யமிழந் திருப்பதென்றும், ஆதலால ஒத்துழையாப் போரைச் சுயராஜ்யப் போராகக் கொள்ளல் வேண்டுமென்றுங் காங்கரஸ் கருதிற்று. அதற்கு மகாத்மா காந்தி உடன்பட்டார். சுயராஜ்யமாவது சுதேசியவழி முற்றும் நின்றொழுகுவதென்று

மேலே சொல்லப்பட்டது. இக்குறிகொண்டு மகாத்ம
காந்தி ஒத்துழையா அன்புப் போரைச் சுதேசியத்தை
வளர்க்கும் முறையில் நடாத்தினார். விளக்கம் கீழ்வரு
ஒத்துழையா முறைகளிற் காண்க.

ஒத்துழையாமை, காந்தியடிகளால் காணப்பட்
புதியதொன்று எனில், அன்று என்று பதிலிறுக்
ஒத்துழையாமை ஒத்துழைப்பு என்பன அநாதிய
நிலவுவன. இயற்கை தோன்றிய நாட்

**ஒத்துழையா இயல்**

அளந்துகூறல் எவ்வாறு இயலாதோ
அவ்வாறே ஒத்துழையாமை ஒ
துழைப்பு என்பன தோன்றிய நாளையும் அளந்துகூற
இயலாது. இயற்கையெனும் ஒன்றில் பிரிக்குந் த
மையுமுண்டு; கூட்டுந்தன்மையுமுண்டு. பிரிவுங் கூட்டு
ஒன்றையே பற்றுக் கோடாக்கொண்டு நிகழ்வன
உலகிலே பிணக்கு இணக்கு, ஊடல் கூடல், புலவி கல
என்பன ஒருயிர்க்கண் நிகழ்தல் காண்கிறோம். பிரிவு
கூட்டும் தொன்றுதொட்டு இயற்கையில் அமைம
இரண்டு இயல்புகளாகும். அவைகளைப்பற்றி ஈண்
விரித்துக்கூற வேண்டுவதில்லை. ஒத்துழையா இயக்க
இயற்கைக்கு முரண்படுவதன்று என்பதொன்றே ஈண்
நோக்கற்பாற்று.

இயற்கையிலுள்ள கூட்டுந்தன்மை, ஒரு பொரு
கண் தன் கடனாற்றி முற்றுறச் செய்த பின்னர், அப்ப
பட்ட பொருட்குப்பழுது நேருமேல், அப்பழுதை ஒழுங்
படுத்த அதைச் சிதைத்தல் மரபு. வீட்டுச் சுவர்கள்
ஆண்டுக்கொருமுறை சுண்ணமிடுதற்கு முன்னர்க் கொ
லன் பழுதுபட்ட பழைய சுண்ணப் படைகளைச் சிதைத்

பின்னர்ப் புதுச் சுண்ணங் கூட்டிச் செப்பஞ் செய்வதை நாம் பார்க்கிறோம். உறுப்பில் உறும் ஊறுக்கு மருத்துவர் கொள்ளும் முறைகளும் ஈண்டு நினைக்கற்பாலன. அவ்வாறே பழங் கூட்டுப் பொருளைப் பண்படுத்தப் பிரிவு இன்றியமையாதது. இல்லற நடாத்துந் தலைவி ஊடல் கொள்வதன் விளைவென்னை ? பின்னைக் கூடலன்பு மேல் மேல் வளர்தற்கன்றோ ? ஊடலின் பின்னர் நிகழுங் கூடலில் விளையும் அன்புப்பெருக்குக்கு ஓரளவும் உண்டோ ? ஊடல் என்பது பகைமை காரணமாகப் பிரிவதன்று. அஃது அன்பை அடிப்படையாகக் கொண்டது. விரிவு அகப்பொருள் நூல்களிற் காண்க.

காந்தியடிகள் நிகழ்த்திய ஒத்துழையாமை அன்பை அடிப்படையாகக் கொண்டதென்பதை எவரும் மறத்தலாகாது. ஒத்துழையாமையை அடிகள் அடிக்கடி, 'அஹிம்சா தர்ம ஒத்துழையாமை' என்று கூறுவதன் நுட்பத்தை ஆராய்ந்து பார்க்க. பிரிட்டிஷ் மக்களிடத்தில் வன்மங் காட்டவேண்டிப் பகைமையைக் கால்கொண்டு அடிகளது ஒத்துழையாமை இயங்கவில்லை. அன்பினின் றெழும் ஊடல் போன்றது அடிகள்கொண்ட ஒத்துழையாமை. 'நமக்கு மாற்றாரில்லை. இம்மண்ணில் ஒருயிர் மீதாதல் நமக்குக் கெட்ட எண்ணங்கிடையாது. நமது துன்பத்தால் பிறரைத் திருத்துவது நமது கடன்' என்று அடிகள் பலமுறை அருளியுள்ளதை உன்னுக.

**அன்பு அடிப்படை**

பாரதநாட்டில் நடைபெற்றுவரும் தற்போதைய ஆட்சி முறையால், நாட்டில் சுதேசியங் குன்றி, உருமாறி, உலுத்து வருவது கண்டு, காந்தியடிகள் சுதேசியத்துக்கு

ஊறுசெய்யும் ஆட்சிமுறையோடு ஒத்துழையாதிருக்குமாறு நாட்டார்க்கு அறிவுறுத்தினர். இவ்வொத்துழையாமை பாரத நாட்டின்மீது கொண்ட அன்பு காரணமாக எழுந்ததன்றிப் பிரிட்டிஷார்மீது கொண்ட காழ்ப்புக் காரணமாக எழுந்ததன்று. பகைமையால் ஒத்துழையாமைகொண்டு கோறல் முறையை (இரத்தப் புரட்சியை)க் கையாளல் வெறுக்கத்தக்கது. கொலையால் விளையுந் தீமை முன்னே சில இடங்களில் விளக்கப்பட்டது.

பல்லாண்டு பரதேசிய ஒத்துழைப்பால் நமது சுதேசியம் ஒடுங்கியதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்து, ஒத்துழையாமைக்கென ஒரு திட்டங் கோலினர். அத்திட்டம், அழிவு ஆக்கம் என்னும் இரண்டையுங் கொண்டது. முதலாவது, 'சுதேசியம் அழியும் இடம் எது? பரதேசியம் வளரும் இடம் எது?' என்பதை ஆராய்க; ஆராய்ந்தால் 'அரசாங்கச் சார்பு பெற்ற கல்லூரிகள்' என்று உணரலாகும். ஆதலால் அக்கல்லூரிகளை விலக்குமாறு அடிகள் அறைந்தார். இரண்டாவது, 'நாட்டு வளம் அருகுதற்கும் பரதேசியம் பெருகுதற்குங் காரணம் யாது?' என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க; பார்த்தால் இக்கால 'நீதிமன்றங்கள்' என்னும் முடிவுபெறலாம். இவ்வுண்மை கண்டு காந்தியடிகள் அந்நீதிமன்றங்களை விலக்குமாறு விளம்பினர். மேலும் அவர் பரதேசியக் கலப்புக்கும், நாட்டின் இயற்கைக்கு மாறுபட்ட சட்ட நிறுவலுக்கும் பிறப்பிடமாயுள்ள சட்ட சபைகளை விலக்குமாறுஞ் சாற்றினர். இம்மூன்று அழிவு வேலைகளோடு, நாட்டுக்

ஆக்க அழிவு முறைகள்

கல்லூரி, நாட்டுப் பஞ்சாயத்து, காங்கரஸ் சபை ஆகிய மூன்று அமைப்புக்களையும் ஆங்காங்கே காணுமாறு மகாத்மா காந்தி கழறினர். நாட்டின் பொருளாதார நிலையைக் காக்கவேண்டி அந்நியத் துணிகளை விலக்குமாறும், நாட்டுக் கதராடையை உடுக்குமாறும் அவர் நவின்றார். 'இவ்வாட்சி முறையில் சார்பில்லை' என்பதை உணர்த்தப் பட்டந் துறத்தல் முதலிய முறைகளையுங் கொள்ளுமாறு அடிகள் நாட்டாரைக் கேட்டுக் கொண்டார். இன்னோரன்ன முறைகளைக் கொண்ட அரிய ஒத்துழையாமைக்கு எத்தகைய நிராசை, தியாகம், பொறுமை முதலிய நறுங்குணங்கள் தேவை என்பதை ஈண்டுத் தெருட்டிக் கூற வேண்டுங்கொல்! இத்தகைய ஒத்துழையா உணர்வுஞ் செயலும் நாட்டிலுள்ள மக்களுள் நூற்றுக்கு அறுபது பேரிடைப் பரவினுல் ஒத்துழையாப் பகுதிகளில் சிறந்ததாகிய வரி கொடாமை மிக எளிதில் நடைபெறும். இச்சிறந்த ஒத்துழையாப் பகுதி நிறைவேறுங்கால், வாள்வலியும் தோள்வலியும் மிக்க எவ்வரசாங்கத்தால்தான் என்செய்தல் முடியும்? வாளுக்கு வாள் வீசலாம். தோளுக்குத் தோள் முட்டலாம். நிராசை, தியாகம், பொறுமை, அன்பு முதலியவற்றைக் கொண்ட ஒத்துழையாமைக்கு எவரே என் செய்ய வல்லார்? இத்தகைய நல்வழியை நமக்கு அறிவுறுத்திய காந்தியடிகளை எச்சொல்லால் வழுத்துவது? மனமொழி மெய்களால் அவரை வணங்குகிறேன். காந்தியடிகளின் அறநெறியாம் ஒத்துழையாமை ஒழுங்குபட நிறைவேறியிருப்பின், நமது நாட்டில் சுதேசிய மணங்கமழ்ந்து, சுதேச அரசாம் சுயராஜ்யம் அரும்பியிருக்கும்.

ஒத்துழையாமைக்கு ஒழுங்கும் ஒற்றுமையும் இன்றியமையாதன. ஒத்துழைப்பில் கொள்ளப்படும்

ஒழுங்கு

ஒழுங்கு, ஒத்துழையாமையிலும் கொள்ளப்படுதல் நல்லது. ஒழுங்கில்லா இடத்தில் ஒத்துழையாமை வாய்ப் பேச்சாகவே உலவும். ஒழுங்கிற்கு ஒற்றுமை உயிர் போன்றது. அதனால் மகாத்மா காந்தி ஒழுங்கு ஒழுங்கு என அறைகூவி வந்ததோடு ஒற்றுமைக்கும் உழைத்து வந்தார். அவர் அறிவுறுத்திய ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையும், தீண்டாமை விலக்கும், பெண்மக்கள் முன்னேற்றமும் நாட்டில் செயலில் நிறைவேறியிருப்பின், அவை ஒற்றுமையை உருப்படுத்தி, ஒத்துழையாமையை வளர்த்து, நாட்டை நாடாக்கி யிருக்கும். நாட்டார் 'தீண்டாத' மக்களையும் பெண்மக்களையும் வருத்தி ஏற்றுள்ள தீயூழ் இன்னும் நாட்டைவிட் டகலவில்லை. என்செய்வது?

காந்தியடிகள் தம்மால் ஆற்ற முடியாத ஒன்றை உலகத்தார்க்கு அறிவுறுத்துவதில்லை என்பது உலகறிந்த தொன்று. காந்தியடிகளின் நிராசை, தியாகம், பொறுமை முதலியன அவர் வாழ்வின் அணிகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. அடிகள் அரசாங்கத்தார் தமக்களித்த பட்டத்தையும், வேறு அரசாங்கப் பற்றையும் விலக்கித் தம்மைப் பொறுத்த அளவில் ஒத்துழையாப் போருக்குத் தம்மை ஒழுங்கு செய்துகொண்டது அவர் வாழ்வில் காணக்கிடக்கிறது.

ஒத்துழையாமை கொள்வோர் 'எக்காரணம் பற்றியும் காழ்ப்பு, பகைமை, பொறாமை முதலியன மன உணர்விலும் அரும்பாதவாறு பயிற்சி பெறல்வேண்டும்.

இதுகுறித்து அடிகள் பன்முறை நாட்டார்க்கு எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆட்சிமுறைமீது கருத்தைச் செலுத்தல் வேண்டுமென்றும், பிரிட்டிஷ் மக்கள்மீது எக்காரணம் பற்றியும் பகைமை பாராட்டல்கூடாதென்றும் காந்தியடிகள் பேசிய பேச்சுக்கும் எழுதிய எழுத்துக்கும் அளவில்லை. ஒத்துழையாக் காலத்தில் இங்கிலீஷ் மக்களுக்குக் காந்தியடிகள் எழுதிய திறந்த மடலில் (பகிரங்கக் கடிதத்தில்) 'எனது அன்பார்ந்த நண்பர்களே' என்று அவர்களை அடிகள் விளித்தமை காண்க.

காந்தியடிகள் ஒத்துழையாமையைப்பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்; பல கட்டுரைகள் வரைந்துள்ளார். அவைகளுள் சில உரைகளை ஈண்டெடுத்துக் காட்டுகிறேன்.

'மக்கள் தங்கட்குத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்வார்களாக. ஆட்சி முறையின் தீமையில் அவர்கள் கலந்துகொள்ளா திருப்பார்களாக. அங்ஙனஞ் செய்யின், ஆட்சிமுறை தானே மறையும்.'

'எது மருந்து? (அரசியல்) சீர்திருத்தமா? தன்னைத் தூய்மைப்படுத்தலா? ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்த ஆட்சிமுறையினின்றும் தன்னை விடுவித்துக்கொள்வது ஒத்துழையாமையின் பெருங்கொள்கை.'

'ஒத்துழையாமை அராஜகமன்று; ஒழுங்கீனமுமன்று. அரசாங்கத்தோடு ஒத்துழையாமை என்பது மக்களோடு நெருங்கிய ஒத்துழைப்புக் கொள்வதாகும். ஒத்துழையாமை உள்ளது சிறத்தற்குரிய (Evolution) முறை. அஃது உள்ளதைச் சிறப்பிக்கும் ஒரு புரட்சி என்று பொருத்தமாக வருணிக்கப்பட்டிருக்கிறது.'

'நம்முடைய விருப்பத்துக்கு மாறுபட்டு ஆட்சி புரியும் அரசாங்கத்திலுள்ள நமது கலப்பைப் பல இடர்கட் குட்பட்டாதல் நாமே வலிந்து விலக்கிக்கொள்ளல் வேண்டும். அநியாய அரசாட்சியில் அதிகாரமும் பொருட் செல்வமும் பெறல் குற்றமென்றும், அவ்விடத்தில் வறுமை ஏற்படுதே சன்மார்க்கமென்றும் தோரோ என்பவர் சொல்லி யிருக்கிறார்.'

'தந்தை அநியாயஞ் செய்வானானால், அவன் வீட்டை விடுத்து வெளியேகவேண்டுவது அவன் பிள்ளைகள் கடன். தலைமை ஆசிரியன் தன் பள்ளிக்கூடத்தைக் கூடா ஒழுக்க நெறியில் நடத்துவானாயின், மாணாக்கர் அப்பள்ளியை விடுத்து அகல்வது சிறப்பு. நகரசபைத் தலைவனொருவன் லஞ்சக் காரனாயிருந்தால், அங்கத்தவர் தூய்மை கருதி அச்சபையி னின்றும் விலகல் நல்லது. அவ்வாறே ஓர் அரசாங்கம் சொல்லொணா அநியாயத்தில் வீழுமாயின், குடிமக்கள் அதற்கு முற்றுமோ அல்லது ஒருபுடையோ, ஆள்வோர் தமது கொடுமையை உணர்ந்து திருந்தும்வரை, உதவி மறுத் தலை ஏற்பது அறம். யான் குறிப்பிட்ட முறைகளால் உடலள விலோ உணர்வளவிலோ துன்பம் நிகழும். அத்துன்பமின்றி உரிமை பெறல் இயலாது.'

'ஒத்துழையாமை மருட்டன்று; உருட்டன்று; வெற் றுரையன்று. அது நமது உண்மையைச் சோதிப்பது. அதற் குத் திடமும் அமைதியும் கலந்த தியாகம் தேவை. தேசத் தொண்டாற்றுதற்கு நமக்கு நேர்மையும் திறமையும் உண்டா என்பதை அவ்வியக்கம் தெரிப்பது. அந்த எண்ணத்தைச் செயலில் மாற்றும் இயக்கமாகும்.'

'கடவுளுக்கு அஞ்சுவோரே உண்மை ஒத்துழையாதா ராதல் கூடுமென்று யான் நினைக்கிறேன்.'

'ஒத்துழையாமை கோடல் மக்கள்மீதன்று; முறை மீதேயாகும். * * * கவர்னர்கள்மீது அது செலுத்தப்படுவ

தன்று; ஆனால் அவர்கள வயத்துள்ள ஆட்சிமுறைமீதே அது செலுத்தப்படுவது.'

'நமது ஒத்துழையாமை ஆங்கிலேயர்மீதோ மேல்நாட்டார்மீதோ இயங்குவதன்று; ஆங்கிலேயரால் நாட்டப்பெற்ற ஆட்சிமுறையுடன் - உலகாயத நாகரிகத்துடன் - வலியார் எளியார் பொருளைத் திரட்டும் பேராசையுடன் - நாம் ஒத்துழையாமை கொள்கிறோம்.'

'தீமையை மூர்க்க சக்திகொண்டு களைய நமக்கு உரிமையில்லை. அத்தீமைக்கும் நமக்கும் தொடர்பின்றி நாம் ஒதுங்கி நிற்றல்வேண்டும். ஒருவன் தனது தீச்செயல் குறித்து வருந்தி இரங்குவானாயின், அன்னே அவனோடு அன்பால் கலந்துகொள்ளல் வேண்டும். பிரிவதிலும் அன்பிருத்தல்வேண்டும்.'

**தாகூர் மறுப்பு**

கவியரசர் என்று போற்றப்படும் ரவீந்திரநாத் தாகூர் ஒத்துழையா இயக்கத்தைப்பற்றிப் பல முறையில் மறுத்து மறுத்துக் கூறினர். அவர், சர்க்காரைக் குறை கூறி, ஒத்துழையாமை உலகைக் கட்டுப் படுத்தியுள்ள அன்பு நெறியை அரிப்பதென்றும், அஃது எதிர்மறையையும் மறுப்பையும் பிரிவையுங் கொண்டதென்றும், அதன் சொல் முழக்கமே தமக்குப் பிடிக்கவில்லையென்றும் தங்கருத்தை வெளியிட்டார். அதற்குக் காந்தியடிகள் விடுத்த விடைகளில் சில வருமாறு:—

'* * * சண்டை நடக்கும்போது பாடகன் தனது வீணையையும், சட்ட ஞானி தனது சட்ட அறிக்கைகளையும் பள்ளிப் பிள்ளைகள் தங்கள் புத்தகங்களையும் கீழே போட்டு விடுகிறார்கள். சண்டை முடிந்ததும் பாடகன் வீணையை எடுத்து வாசிப்பான்; மக்களுக்குள் கலாம் நிகழும்போது

நியாய தூரந்தரனுக்குத் தனது சட்ட புத்தகத்தை அணுகச் சமயம் வாய்க்கிறது; பிள்ளைகள் புத்தகங்களைத் தொடுவார்கள். வீடு நெருப்புப்பற்றி எரியும்போது, வீட்டிலுள்ள அனைவரும் வெளியேயோடித் தீ அணைக்கவேண்டி, ஒவ்வொருவரும் குடமேந்தித் தண்ணீர் நாடிச் செல்வர். என்னைச் சூழ்ந்துள்ள உயிர்கள் உணவின்றிச் சாகும்போது, பசிப்பிணி போக்க உணவூட்டவேண்டுவது எனக்குரிய வேலையாகும். இந்தியா தீப்பற்றிய வீடுபோலிருக்கிறது. இந்தியாவின் ஆண்டகைமை ஒடுங்கிவருகிறது. இந்திய மக்கள் உணவுபொருள் பெறப் போதிய வேலையில்லாமல் கிடக்கிறார்கள். * * * * * * * இந்தியா நாளுக்கு நாள் வறுமைப பிணியால் பீடிக்சபபட்டு வருகிறது என்பது எனது அனுபவத்தில் பெற்ற உறுதி. இந்திய மாதின் இரத்தவோட்டம் அடியிலும காலிலும் ஏறக்குறைய நின்றுவிட்டது. நாம் அவள்மீது கவலை செலுத்தாவிடின், அவள் அழிந்துபடுவாள்.'

"* * கவியரசர் 'பொறுமையா யிருங்கள்' என்று இனிய பாட்டுப் பாடுவது ஏற்றுகொள்ளத் தக்கதன்று. போர் மூண்டிருக்கிறது. அவர் வீணையைக் கீழே கிடத்திவிட்டு எழுவாராக; பின்னர்ப பாடலாம்."

'கவிஞர் நாளைக்கு என்னும் பாட்டுப பாடுவர்; அவ்வாறே நம்மையும் நடக்குமாறு சொல்வர். இது கவிஞரின் இயற்கையறிவு என்பது உண்மை. விடியற்காலையில் வானத்தினூடே இனிய கீதங்களைப பாடிக்கொண்டு போகும் அழகிய பறவைகளின் காட்சியை நமது கண் கவருமாறு அவர் (பாக்களில்) வழங்குகிறார். இப்பறவைகள் நாளில் நல்லுணவு பெற்று, முனனிரவு நரம்புக்குழல்களின் வழிப் புதுக்குருதி பாய்ந்து உரமளித்த சிறகுகளால் உயரப் பறக்கின்றன. ஆனல் இங்கிதத்துக்கும் சிறகசைக்க முடி

யாது வன்மை இழந்துகிடக்கும் பறவைகளைக் காணும் பேற்றை யான் பெற்றிருக்கிறேன். இந்திய வானத்தூரும் இம்மனிதப்பறவைகள் விழிப்பின் பின்னரும் களைப்புறுகின்றன. கோடிக்கணக்கானவைகள் (பசிப்பிணியால்) என்றும் விழிததவண்ணம் அல்லது உணர்விழந்தவண்ண மிருக்கின்றன. பசிப்பிணியால் வாடுவோரைக் கபீர்தாஸரின் ஒரு பாட்டால் தணிவிப்பது அருமை என்று தோன்றுகிறது. பசியால் வாடும் கோடிக்கணக்கானவர் ஒருபாட்டு வேண்டுகிறார். அதுதான் உணவு.'

**அடிகள் இயற்கைப் பாவலர்**

இவ்விடையை நோக்குழிக் காந்தியடிகள் இயற்கைப் பாவலர் என்பது விளங்கப்பெறும். தாகூர் பறவைகளின் புறங்கண்டு அவைகளின் அழகைச் சொல்லோவியமாகப் பாக்களெழுதுகிறார். காந்தியடிகளோ பறவைகளின் உள்ளத்தை அளந்து அவைகளின் நிலை காண்கிறார். இவருள் இயற்கைப்பாவலர் யாவர்? பாட்டென்பது மகிழ்ச்சியினின்றும் எழுவது. உணவின்றி வருந்தும் மக்களிடம் மகிழ்ச்சியிருக்குமோ? அவர்கள் முன்னே பாட்டையா பாடுவது? வீணையையா முழக்குவது? மக்கள் வடிவமே பெரும் பாட்டு. பசிப்பிணியால் - பட்டினியால் - அவ்வடிவங் குலைந்துபோம் போது அதன்மாட்டுள்ள பாட்டுஞ் சிதையுமன்றோ? அப்பாட்டுக் குலைவு எவருக்குப் புலப்படும்? இயற்கையோடு வாழ்வு செலுத்தும் இயற்கைப் பாவலர்க்கல்லவோ புலப்படும்? அக்குலைவைப் போக்க அப்புலவர் முயல்வர். மக்கள் பாவூரும் படிவம் பெறுமாறு பசிப்பிணி போக்குந் துறைநின்று ராட்டின வீணையை

வாசித்தவண்ணமிருப்பவர் எத்தகைப் புலவர்? தாகூரை யும் நரப்பு வீணையை எறிந்து, ராட்டின வீணையை முழக்குமாறு அவர் கூவியழைக்கிறார்.

இயற்கைப் பாவடிவமாகிய மக்கள் பசியால் மெலிந்து அழுகிழத்தற்குக் காரணமாயுள்ள செயற்கை யோடு ஒத்துழைப்பது அறமாகுமா? அன்பாகுமா? அவ் வேளையில் இயற்கைவழி நிற்போர் என்செயல்வேண்டும்? இயற்கைத் தன்மையின் ஒரு கூறாகிய ஊடலை அதாவது ஒத்துழையாமையையேற்றே தீரல்வேண்டும். அஃது இயற் கைச் சிதைவுகளை நிறைவுபடுத்தும். ஆதலால், மகாத்மா காந்தி ஏற்ற ஒத்துழையாமை அன்புக் கட்டைக் குலைப்பதென்றோ இயற்கைக்கு மாறுபட்டதென்றோ கொள்ளற்க.

அறப்போர் வழி நாட்டைத் தூய்மைப் படுத்தி வந்த வேளையில் மகாத்மா காந்தி பஞ்சாப் படுகொலையை மறந்தாரில்லை. ஆண்டுதோறும் அதை நினைவூட்ட ஏப் ரல் ஆறும்நாள் முதல் பதின்மூன்றும் நாள்வரை சத்தியாக்கிரக வாரமென்று ஒரு வாரத்தைக் கொண்டாடுமாறு அவர் நாட்டாரைக் கேட்டுக் கொண்டார். சத்தியாக் கிரக வாரக் கொண்டாட்டத்தின் வாயிலாகவும் நாட் டைப் பண்படுத்த நம்பெருமான் முயன்றார். நங்காந்தி யடிகள் சத்தியாக்கிரக வாழ்வை மக்கள் பெறல் வேண் டும் என்னும் கருணையால் விழுங்கப்பட்டவராய்ச் சத்தி யாக்கிரக வாரத்தைப்பற்றி எழுதிய மெய்யுரைகளுள் சில வருமாறு :—

**சத்தியாக்கிரக விரதம்**

(10—3—1920)

'ரௌலட் சட்டத்தின் ஆற்றலை வீழ்த்தி உதைத் துரும் பிடிக்கச் செய்த நாள் ஏப்ரல் ஆறு. ஏப்ரல் பதின்மூன்று அஞ்சத்தக்க கொலைக் காட்சியையும், ஹிந்து - முஸ்லிம் குருதி ஆறாக ஓடியதையுங் கண்டு ஒற்றுமையை உருப் படுத்திய நாள்.'

'இவ்விரு நிகழ்ச்சிகளையும் எவ்வாறு நினைந்து கொண் டாடுவது? ஏப்ரல் ஆறும் நாளில், இருபத்து நான்கு மணி நேரம் நோன்பிருந்து, மாலை ஏழு மணிக்கு ஆங்காங்கே தேசத்தார் கூட்டங்கூடி, ரௌலட் சட்டம் உள்ளவரை நாட்டில் அமைதி நிலவுதல் அரிதென்றும், அச்சட்டம் அழிக்கப்படல் வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றல் வேண்டும். (ரௌலட் சட்டம் செயலின்றித் துருப்பிடித் துக் கிடந்தாலும், அது சட்டமாக உறங்கலால், அஃது அழிக்கப்படல் வேண்டும்).'

'வார முழுவதும் அதாவது பதின்மூன்றும் நாள்வரை ஜலியன் வாலாபாக் நினைவுக் குறிக்காகப் பொருள் திரட் டல் வேண்டும். இது பன்னிரண்டாம் நாளுக்குள் முற்றுப் பெறல் வேண்டும்.'

'பதின்மூன்றும் நாள், நாட்களிற் சிறந்த நாள். அந்நாள் விரதத்தாலும் ஜெபத்தாலும் கழிக்கப்படல் வேண்டும். அந் நாளில் மக்கள் உள்ளத்தில் பகைமையாதல் சினமாதல் ஊர்தலாகாது. அன்று உயிர் துறந்த ஒன்றுமறியா நம் மக் களை நினைந்து சீராட்டல் வேண்டும்; அன்று நிகழ்ந்த கொடுஞ் செயல்களை நினைத்தல் கூடாது. நாடு தியாகத்துக் குச் சித்தமாக எழவேண்டுமேயன்றிப் பகைமை பாராட்டிப் பழிக்குப் பழிவாங்க இகல்கொள்ளலாகாது. அன்றுங் கூட் டங் கூடிப் பஞ்சாப் படுகொலை போன்ற நிகழ்ச்சி மீண்டும்

உறுதவாறு நடக்க இந்திய அரசாங்கத்தையும், ஏகாதிபத்திய அரசையும் கேட்டுக் கொள்ளல் வேண்டும்.'

'ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தும் பொருட்டு ஏப்ரல் பன்னிரண்டில் வெள்ளிக்கிழமையில் மாலை ஏழு மணிக்கு இரு வகுப்பாரும் கலந்த கூட்டங்கூடி முஸ்லிம்கள் விருப்பப்படி கிலாபத்துக்கு நியாயம் பிறப்பிக்கக் கேட்குமாறு சொல்வேன்.'

'இவ்வாறு இந்நாட்டு வாரம், தூய்மைக்கும், தற்சோதனைக்கும், தியாகத்துக்கும், முழு ஒழுங்கிற்கும், நாட்டு விருப்ப வெளியீட்டுக்கும் உரியதாயிருத்தல் வேண்டும். காழ்ப்பு, இன்னாச்சொல் சிறிதுந் தலைகாட்டலாகாது. ஆனால் அஞ்சாமையும் உறுதியும் நிலைத்து நிற்றல் வேண்டும்.'

(23—3—1921)

'ஏபரல் ஆறும் பதின்மூன்றும் வரப்போகின்றன. ஆறு, இந்தியாவின் விழிப்பைக் கண்டநாள்; பதின்மூன்று, துன்பத்தைக் கண்டநாள். இவ்விரண்டு நாளையும் சென்ற ஆண்டு இந்தியா ஊக்கத்தோடு கொண்டாடிற்று. * * * சென்ற ஆண்டு நம்மக்களின் இரத்தஞ் சிந்தப்பெற்ற இடத்தை விலைக்கு வாங்கும்பொருட்டு நிதி திரட்டுவதில் கருத்துச் செலுத்தினோம். பின்னே பெருநிகழ்ச்சி நேர்ந்திருக்கிறது. இப்பொழுது கிலாபத்துக்கும் பஞ்சாப்புக்கும் நியாயம் பிறப்பிக்கவும், சுயராஜ்யத்தை நிலைபெறுத்தவும் நாடு உறுதி கொண்டு நிற்கிறது. டிசம்பர் காங்கரஸ், ஓராண்டிற்குள் சுயராஜ்யம்பெறத் தான்கொண்ட விருப்பத்தை வெளியிட்டிருக்கிறது. * * * * (இம்முறை) ஆறுவித கருமங்கள் ஆற்றல் வேண்டும்.

(க) நம்மை நாம் அடக்கி ஆளுந் திறன் பெறல்வேண்டும்; சாந்தமும் அமைதியும் தயையும் முற்றும் அலர்ந்து நிற்கும்

தன்மையுடையராதல் வேண்டும்; ஒருவர்மீது நாம வழங்கியுள்ள அன்பில்லா ஒவ்வொரு மொழியையோ அல்லது நிகழ்த்தியுள்ள ஒவ்வொரு செயலையோ குறித்து மன்னிப்புக் கேட்டல் வேண்டும்.

(உ) நாம் இன்னும் நமது உள்ளத்தைத் தூயமைபடுத்தல் வேண்டும். ஹிந்து - முஸ்லிம்களாகிய நாம ஒருவரை ஒருவர் ஐயுறுவதை அறவே ஒழித்தல் வேண்டும். நமக்குள் ஒருவருக்கொருவர் பிழைபாடு நிகழ்த்திக்கொள்ள இயலாதவா என்னும் உறுதிபெறல் வேண்டும்.

(ந) ஹிந்துக்களாகிய நாம், நம்மினும் தூயமையில்லாதவன் அல்லது இழிவானவன் அல்லது தாழ்ந்தவன் என்று ஒருவரையும் நினைத்தலாகாது. ஆதலால் ' பறையர் ' வகுப்பினரைத் தீண்டாதாரெனக் கருதுவதை அறவே விட்டொழித்தல் வேண்டும். நம்முடன் பிறந்த ஒருவனைத் தீண்டாதானென எண்ணுவது பாவமென்று கொள்ளல் வேண்டும்.

இவை மூன்றும் அகநிலை மாற்றத்துக்குரியன. இவைகளின் பயனை நமது நித்திய நடைமுறையில் காணலாம்.

(ச) குடியை நிறுத்த இவ்வாரத்தில் ஒவ்வொருவரும் பெருமுயற்சி செய்யல் வேண்டும். * * * * எதற்கும் மூர்க்கத்துறை நண்ணல் கூடாது. உறுதிகொண்ட அமைதியான முயற்சி வெற்றியளிக்கும்.

(ரு) ஒவ்வொரு வீட்டிலும் இராட்டை சுழற்றலும், கதராடை பெருக்கலும் அணிதலும், அந்நிய ஆடையை அறவே தொலைத்தலும் நிகழல் வேண்டும்.

(சா) இடையீடின்றித் திலகர் சுயராஜ்ய நிதிக்குப் பொருள் திரட்டல் வேண்டும்.

**அன்பார்ந்த சகோதரர்களே! காந்தியடிகள் சத்தியாக்கிரக நெறி வளர்க்க எவ்வெவ் வழியில் முயன்றார் -**

முயல்கிறார் என்பதை உன்னுங்கள்; உன்னி, அவ்வழி நடக்க உறுதிகொள்ளுங்கள். மனிதப் பிறவி தாங்கிய நாம் நமது வாழ்வில் பெற வேண்டுவதென்னை! சத்தியாக்கிரகம் - சத்தியாக்கிரகம். இந்நுட்பங் கண்ட சிலர் தாம் மட்டும் அதனால் விளையும் இன்பம் நுகர்ந்து செல்கிறார். காந்தியடிகளோ அதை எவ்வெவ் வழியில் மற்றவரிடைப் பரப்புகிறார் பாருங்கள்! ஆசிரமத்தின் வழியாக, அரசியல் வழியாக, அரசுக்கும் குடிகட்கும் நேரும் பிணக்குத் தீர்க்கும் வழியாகச் சத்தியாக்கிரக நுட்பத்தை நம்பெருமான் பரப்புகிறார்.

பகைமையை அன்பால் மாற்றல்

பஞ்சாப் படுகொலை நினைவு எழுந்ததும் இந்திய மக்களுக்குப் பொதுவாக என்ன தோன்றும்? பகைமையும் வன்மையும் பழிக்குப்பழி வாங்கலும் தோன்றும்; அவை கொழுந்து விட்டெரியும். அவை எழாதவாறு மகாத்மா காத்தார். பஞ்சாப் படுகொலை வாரத்தைச் சத்தியாக்கிரக வாரமாக அடிகள் மாற்றிய நுட்பத்தையும் திறத்தையும் என்னென்று பகர்வேன்? மக்களிடத்துள்ள விலங்கு நீர்மையைக் களைய இந்நாள் தோன்றிய பெரியார் காந்தியடிகளினும் வேறு யாவருளர்? பகைமை நினைவூட்டும் நாளை அன்பு நாளாக மாற்றிப் பண்படுத்தியது தவறிழைத்த அரசாங்கத்தையும் தூய்மைப்படுத்துவதன்றோ? பழிக்குப்பழி வாங்க நாடு புறப்பட்டால் அரசு என் செய்யும்? பிற என் செய்யும்? அரசு ஆயுதபலத்தால் கிளர்ச்சியை அடக்கவே முயலும். இருபக்கமும் எழ இருந்த துராக்கிரகத்தை ஒடுக்கிய பெருமை காந்தியடிகளுக்கு உண்டு. சத்தியாக்கிரக வாயி

லாக ஆள்வோரும் ஆளப்படுவோரும் திருந்தப்பெறின், உலகில் துராக்கிரக எழுச்சிக்கு இடம் ஏது? அரசியற் போரில் சத்தியாக்கிரகத்தை நுழைத்த முதல்வர் நங் காந்தியடிகளேயாவர். இவ்வழியில் தம்மையும் பிறரையும் தூய்மைப்படுத்த முயல்வோர் வாழ்வன்றோ வாழ்வு? காந்தியடிகள் வாழ்வு மனித வாழ்விற்குப் பேரிலக்கியமாக நிற்பதென்று பன்முறை சொல்லினும் எனது வேட்கை தணியாது.

ஒத்துழையாமை வழி மனித வாழ்விற்கு இன்றியமையாத தியாகம், பொறுமை, உண்மை, அஞ்சாமை, அஹிம்சை முதலியவற்றை நாட்டில் மகாத்மா காந்தி நிலை பெறச் செய்தார். பஞ்சாப்புக்குள் நுழையாதவாறு காந்தியடிகள் தடுக்கப்பட்டபோது நாட்டில் சில இடங்களில் துராக்கிரகம் எழுந்தது. அத்துராக்கிரக உணர்வைப் பின்னை ஒத்துழையாமை வாயிலாக அடிகள் போக்கிய திறத்தை என்னென்று புகழ்வது? மனித வாழ்விற்குரிய முறைகளை ஒத்துழைப்பா இயக்கத்தில் திட்டங்களாக அமைத்து, நாட்டைச் சத்தியாக்கிரக வழியில் நம்பெருமான் நிறுத்திய பெருமையை என்னென்று போற்றுவது? துராக்கிரகத்தில் கருத்துக் கொண்டிருந்த நாட்டார், சத்தியாக்கிரகத்தில் கருத்துக் கொண்டு கூட்டங் கூட்டமாகச் சிறை புகுந்தது சரித்திரத்தில் பதிந்து கிடக்கிறது. ஒத்துழையாப் போரின் பயனைக் காந்தியடிகள் பிடிபட்டபோதும், சிறைப்பட்ட போதும் நாட்டில் துராக்கிரகம் எழுந்ததோ? 'காந்தியடிகள் மறிக்கப்பட்டார்' என்ற செய்தி கேட்டதும், முன்னை சினந்தெழுந்த நாடு, 'காந்தியடிகள் பிடிபட்

துராக்கிரக ஒடுக்கம்

டார்; சிறைப்பட்டார்' என்ற செய்தி கேட்டபோது, பின்னே அலையற்ற நீர்போல் அமைதி காத்தமை எதை அறிவுறுத்துகிறது? 'காந்தியடிகள் சிறைப்படப் போகிறார்' என்ற வதந்தி எழுந்தபோதும், தாம் பிடிபட்டபோதும், நியாயமன்றத்தில் நின்றபோதும், சிறை நோக்கியபோதும் காந்தியடிகள் நாட்டார்க்கு அறிவுறுத்திய முன்னுரைகள் பொற்றகட்டில் மாணிக்கத்தாலெழுதிப் போற்றுந் தகையன.

'அரசாங்கத்தார் செயலால் இரத்த ஆறு ஓடினும் யான் நடுக்குறேன். அவ்வினை மக்களால் என் பொருட்டு அல்லது என் பெயரால் ஆற்றப்படின் அது வருத்தந்தருவதாகும். என்னைக் கைது செய்வதைப்பற்றி மக்கள் தங்கள் நிலையை இழப்பது அவமானம். என்மீது கவலை செலுத்துவதால் நாடு முன்னேற்றமடையாது. யான் காட்டிய வழியுணர்ந்து, அவ்வழிபற்றி நடந்தால் நாடு முன்னேற்றமடையும். மக்கள் அமைதி காக்கவேண்டுமென்பதும், யான் கைதியாகும் நாளை மகிழ்ச்சிக்குரிய பெருநாளாகக் கொள்ள வேண்டுமென்பதும் எனது அவா.'

'என்னைக் கைது செய்வதில் அரசாங்கத்துக்குள்ள நோக்கம் யாது? அரசாங்கத்தார் என் பகைவரல்லர். அரசாங்கத்தினிடத்தில் தினையளவும் எனக்குப் பகைமை இல்லை. கிளர்ச்சிக்குத் தலைவன் யான் என்றும், என்னை மக்களிடத்திருந்து பிரித்துவிட்டால் ஆள்வோர் ஆளப்படுவோரிடை அமைதி நிலவுமென்றும், மக்கள் குருட்டுத்தனமாக என் வழி நிற்கிறார்களென்றும் அரசாங்கம் நம்புகிறது. சில தலைவர்களும் இவ்வாறே நினைக்கிறார்கள். மக்கள் நிலையை அரசாங்கம் எப்படி உணர்வது? என்னைக் கைதுசெய்து பார்ப்பதன்றி வேறு வழியில்லை. * * * அரசாங்கத்தார்

> தமது பிழைபாட்டை உணர மாட்டார்; உணர்ந்தாலும் ஒத்துக்கொள்ளமாட்டார். பின்னை மக்கள் ஒற்றுமை நிலையை அளந்து பார்க்கும் ஒரே வழி அவர்க்குண்டு. அதற்குரிய வழி என்னைப் பிடிப்பதே. மக்கள் அச்சத்தால் விழுங்கப் படின் பஞ்சாப் படுகொலையையும் கிலாபத் அநியாயத்தையும் பெற வேண்டியவர்களே. அவர்கள் மூர்க்கப் போரில் நுழைவது அரசாங்கத்துக்கு உதவி புரிவதாகும்'

என்று தொடங்கி, அமைதி காக்கவேண்டுமென்றும், ஹார்த்தால், கூட்டங் கூடல் முதலியன வேண்டாமென்றும், ஒத்துழையாத் திட்டங்களாகிய ஆக்க அழிவு வேலைகளைச் செய்யவேண்டுமென்றும் அடிகள் அறிவுறுத்தினர். மற்றுமொருமுறை இதைப்பற்றி அடிகள் எழுதியபோது, மேற்போந்ததை மீண்டும் வலிவுறுத்திக் கீழ்வரும் உரைகளால் முடித்துள்ளனர்.

> ' * * * * முதலாவது, என்னை எல்லாம் வல்ல சித்தனென்று சில கண்மூடிகள் நினைப்பது ஒழியும். இரண்டாவது, என்னுடைய செல்வாக்கால் மக்கள் ஒத்துழையாத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்களென்றும், அவர்கட்கு அதன்கண் தனிப்பட்ட பற்று இல்லை என்றும் சிலர் நம்புவது பொய்ப்படும். மூன்றாவது, திட்டங்கோலிய தலைவரில்லா வேளையிலும் திட்டத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றல் நாட்டார்க்குண்டு என்பதைப் புலப்படுத்தும் வழிச் சுயராஜ்யத்துக்கு நாம் உருகர் என்பதை உறுதிப்படுத்துவது. நான்காவது, என்னைப்பற்றியதாயிருப்பது; அதாவது ஓய்வெடுத்துக் கொள்வது.'

நியாயமன்றத்தில் நீதிபதி, 'நீங்கள் குற்றவாளியா' என்று கேட்டபோது, காந்தியடிகள் 'நான் குற்றவாளி' என்று ஒத்துக்கொண்டு, நீதிபதி விரும்பிய வண்ணம் அவர் அவண் செலுத்திய அறிக்கையின் சாரம் வருமாறு :—

**சட்டமும் அறமும்**

'இப்போதுள்ள ஆட்சி முறையினிடம் அன்பு மிகுந்த ஒத்துழைப்பாளனாக இருந்து இப்பொழுது அதன்மீது அன்பிழந்த ஒத்துழையாதானாக மாறியதற்கு என்ன காரணம் என்பதை விளக்க வேண்டுவது எனது கடமை. எனது பொது வாழ்வு 1893-ல் தென்னாப்பிரிக்காவில் தொடங்கப் பட்டது. இந்திய மனிதர் உரிமையிழந்த நிலையை முதல் முதல் கண்டேன். முதல் முதல் ஆட்சி முறையைக் கண்டித்துக்கொண்டு அரசாங்கத்துக்கு என்னாலியன்ற உதவி செய்து வந்தேன். போயர் சண்டை, ஐரோப்பா யுத்தம் இக்காலங்களில் ஒல்லும் வகை துணை நின்றேன். கெய்ஸர்ஹிந்த பதக்கமும் எனக்கு வழங்கப்பட்டது. மனித உரிமையைக் கொலையவல்ல ரௌலட் சட்டமும், பஞ்சாப் படு கொலையும், கிலாபத்துக்கு நியாயம் பிறவாமையும் எனது மனோ நிலையை மாற்றின. ஆயுதமிழந்த இந்தியா தனது துன்பத்தினின்றுந் தன்னைக் காத்துக்கொள்ளவும், ஏழை இந்தியா தனது பஞ்சத்தினின்றுந் தன்னைக் காத்துக் கொள்ளவும் இயலாத நிலை பெற்றிருத்தல் வெள்ளிடை மலை. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் இந்தியா நெசவுத் தொழிலாலும் விவசாயத்தாலுஞ் செழுமையுற்றிருந்தது. இந்தியாவிலுள்ள ஏழைமக்கள் எப்படிப் பட்டினியால் வாடி வாடி வாழ்வை இழக்கிறார்கள் என்பது நகர வாசிகளுக்குத் தெரியாது. நகர வாசிகள் அந்நிய வியாபாரத்துக்

குத் துணைநிற்பதால் கிராம வாசிகள் இரத்தம் உறிஞ்சப்படு கிறது. இவ்வாணிபத்துக்கு ஆட்சிமுறை குறுக்கிடுவதில்லை. கடவுள் ஒருவர் இருப்பாராயின், அவர் முன்னிலையில் இங் கிலாந்து மக்களும் இந்தியாவில் பட்டணவாசிகளும் இந்த ஜீவகாருண்யமற்ற செயலுக்கு உத்தரவு சொல்லவேண்டிய வர்களே. சட்டங்கள் அந்நிய வியாபாரத்துக்குத் துணைபுரி கின்றன. நியாயமோ நூற்றுக்குத் தொண்ணூறுபேருக்குப் பிறப்பதில்லை. யான் குறிப்பிட்ட இக்குற்றங்களுக்குத் தாம் ஆளாதலை, இங்கிலீஷ் — இந்திய உத்தியோகஸ்தர் உணர்வதில்லை. என்மீது பெய்துள்ள 124 - எ சட்டம், அரசியல் சட்டங்களுள் அரசுபோன்றது. அன்பு என்பது கையால் செய்யப்படுவதன்று; சட்டத்தால் ஒழுங்குபடுத் துவதன்று. ஒருவனிடத்திலோ ஒரு முறையினிடத்திலோ மற்றொருவனுக்கு நேசமில்லாவிடில், அவன் பகைமை சீற் றம் முதலியவற்றிற்கு இரையாகாத நிலையிலுள்ளமட்டும், அவன் தனது நேசமின்மையைத் தாராளமாக வெளியிடும் உரிமைபெறல்வேண்டும். (அரசாங்கத்தின்மீது) நேசமின்மை வெளியீட்டின் காரணமாக யானும் ஸ்ரீ பாங்கரும் குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறோம். இச் சட்டத்தின்படி இந்திய தேசபக்தர் சிலர் தண்டிக்கப்பட்டது எனக்குத் தெரியும். தனிப்பட்ட எந்த அதிகாரிமீதாதல் அரசர்பெருமான்மீதாதல் எனக்கு வெறுப்பில்லை. முன்னைய ஆட்சி முறைகளினும், இப்பொழுது இந்தியாவிற்குத் தீமை விளைத்துவரும் இவ் வாட்சிமுறைமீது நேசமின்மை காட்டல் சன்மார்க்கமென் பது எனது கொள்கை. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந் தியா ஆண்மையையும் இழந்துவிட்டது. இன்னோரன்ன காரணங்கள்கொண்டு இவ்வாட்சிமுறைமீது பற்றுக்கொள் வது பாவம் என்று கருதுகிறேன். ஒத்துழையாமையால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் தொண்டு செய்தவனுகி

றேன். தீமையோடு பிணங்குவது நன்மையோடு இணங்குவதையொத்தது என்பது கருத்து. முன்னைய காலங்களில் கொலை வழியாக ஒத்துழையாமை காட்டப்பட்டது. கொலை வழி ஒத்துழையாமை தீமையையே பெருக்குமென்று, தீமையோடு ஒத்துழையாத ஓர் அன்பு நெறியை யான் அறிவுறுத்துகிறேன். எனது கடனை யான் செய்தேன். சட்டத்தில் எனது செயல் குற்றமென்றிருத்தலால், அதன்படி என் மீது முழுத் தண்டனை விதிக்கலாம். நீதிபதியாகிய தாங்கள் இங்கே கருதவேண்டுவதொன்றுண்டு. யான் மனச்சான்று வழி அறத்தொண்டு ஆற்றினேன் என்று தங்கட்குத் தோன்றினால், தாங்கள் வேலையை விடுத்துத் தீமையினின்றும் விலகுதல்வேண்டும். ஆட்சிக்குத் துணைபுரியுஞ் சட்டம் நல்லது என்று தங்கட்குத தோன்றினால், என்னைத் தண்டித்தல்வேண்டும். இரண்டில் ஒன்று செய்க.'

இம்மொழி கேட்ட நீதிபதி கூறிய தீர்ப்பு என்னை ?

'சட்டம் மனிதர்க்குரிய சிறப்பை நண்ணாது. என் முன்னிலையில் தங்களைபபோன்ற ஒருவர் விசாரணைக்கு வந்ததுமில்லை; இனி வரப்போவதுமில்லை. நாட்டின் கோடி கோடி மக்கள் தங்களைப பெருந் தேசபக்தராகவும் பெருந் தலைவராகவும் போற்றுவதை மறைத்தல் முடியாது. அரசியற்றுறையில் தங்களோடு மாறுபடுவோரும் தங்களை உயரிய நோக்குடையவரென்றும், பெரியவரென்றும், மகாத்மாவென்றுங் கருதுகிறார். யான் இங்கு ஒன்றன்மீதே கருத்துச் செலுத்தப்போகிறேன்; அதாவது தங்களைச் சட்டத்துக்குட்பட்ட மனிதராகக் கருதுவது. சட்டத்துக்கு மாறுபட்டு நடந்ததாகத் தாங்களே ஒத்துக்கொண்டீர்கள். ஒவ்வொரு குற்றத்துக்கும் இரண்டிரண்டாண்டாக ஆறாண்டு வெறுந் தண்டனை விதிக்கிறேன். நிலைமை மாறி, இக்கால எல்லைக்

குள் தாங்கள் விடுதலையடைய நேரின், அதுகுறித்து என்னினும் மகிழ்வுறுவோர் மற்றவரிரார்.'

இத்தீர்ப்புச் சட்டத்தின்படி பிறந்தது. காந்தியடிகளின் அறத் தொண்டு குறை கூறப்படவில்லை. காந்தியடிகள் உணர்த்தியவாறு சட்டத்தின் நிலையையோர்ந்து வேலையினின்றும் விலக அவர் ஒருப்படாதது அவர்பால் சத்தியாக்கிரக உணர்வு போதிய அளவு அரும்பாமையேயாகும். ஆனாலும், அவர்தம் மொழிகளால் அவர் சத்தியாக்கிரக நுட்பம் உணர்ந்தவர் என்பது புலனாகிறது. காந்தியடிகள் அறிக்கையிலோ காந்தியம் பொலிகிறது.

இப்பெரிய இயக்கத்தைச் சட்ட வரம்பு கடந்த தென்று குறைகூறுவோர் இல்லாமற்போகவில்லை. சட்ட வரம்பாவது மனித வாழ்விற்குரிய பல துறைகளுள் ஒன்று. முதலில் அவ்வரம்பில் நின்று கிளர்ச்சி செய்தல் அறம். நியாயம் பிறந்தால் கிளர்ச்சி நிறுத்தப்படல் வேண்டும். நியாயம் பிறவாது, மேலும் மேலும் மறமும் தீமையும் கொடுமையும் மலியுமேல், சத்தியாக்கிரகப் போர் தொடங்குதலன்றி வேறு என்செய்வது ? காந்தியடிகள் தென்னப்பிரிக்காவிலும் மற்ற இடங்களிலும் போர் தொடங்குதற்கு முன்னர் எத்துணை எத்துணை விண்ணப்பம் அதிகாரிகட்குச் செய்தனர் ? எத்துணை முறை இங்கிலாந்து ஓடிக் குறைகளை முறையிட்டனர் ? காந்தியடிகள் மாண்டேகு - செம்ஸ்பர்ட் முன்னிலையில் சான்று கூறியதும், ஹண்டர் கூட்டம் முன்னிலையில் சான்று பகர்ந்ததும், பம்பாய் தில்லி இவ்விடங்களில் ஐரோப்பா யுத்தத்தைப்பற்றிக்

**சட்ட வரம்பு**

கூடிய அரசாங்க மகாநாடுகளில் கலந்துகொண்டதும், போயர் சண்டையில் பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்ததும், ஐரோப்பாப் போருக்கு (1914 - 1918)க் கெய்ரா ஜில்லாவில் சேனை திரட்டியதும், அமிர்தசரஸ் காங்கரஸில் மாண்டேகுவுக்கு நன்றி கூறல்வேண்டுமென்று மன்றாடியதும் அவரது வாழ்வில் அரும்பிய செயல்களல்லவோ? மகாத்மா, ஒத்துழையாமை துவங்குதற்கு முன்னர், லார்ட் செம்ஸ்பர்டுக்கு விண்ணப்பஞ் செய்ததும், ஆங்கிலேயரை 'அன்பார்ந்த நண்பரே' என்று விளித்து இருமுறை கடிதம் விடுத்ததும், ஒத்துழையாக் காலத்தில் மாளவியர் வேண்டுகோட்கிணங்கி லார்ட் ரெடிங்கைக் காண விரும்பியதும், மாளவியர் மற்றுமொருமுறை விழைந்தவண்ணம் ஸர் சங்கரன் நாயர் தலைமையின்கீழ்ப் பம்பாயில் கூடிய மகாநாடு போந்து பேசியதும், உள்ள சட்டங்களுக்கிணங்கித் தம்மைக் குற்றவாளியென்று சொல்லிக்கொள்வதும், இன்னோரன்ன பிறவும் என்ன காட்டுகின்றன?

சத்தியாக்கிரகப் போர் முதலியன, உலகச் செயற்கைக் கொடுஞ் சட்டங்கட்கு முரணாகத் தோன்றினும், அவை இயற்கை அறச் சட்டங்களை அரண்செய்யும் நியாய வரம்புடையனவே யாகும். காந்தியடிகளின் வாழ்வே நியாய வரம்புவழிநின்று இயங்குவதென்பது, அவரது வாழ்வின் நுட்பம் உணர்வோர்க்குப் புலப்படாமற் போகாது.

சத்தியாக்கிரக வக்கீல்களைப்பற்றிப் பிறந்த ஆமதாபாத் ஜில்லா நீதிபதியின் கடிதத்தை 'யங் இந்தியா'வில் அடிகள் வெளியிட்டதும், அதைப்பற்றி அவர்

எழுதியதும் நியாயமன்ற அவமதிப்பாகும் என்ற குற்றம் அவர்மீது சாட்டப்பட்டபோது, பம்பாய் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்குமாறு நண்பர் பலர் அவரை வேண்டினர். அவ்வேண்டுதலுக்கு மகாத்மா இணங்கினரில்லை. அதைப்பற்றி மகாத்மா, 'மன்னிப்புக் கேட்டல் கூடாது என்னும் பிடிவாதம் எனக்கில்லை. மூலத்தில் ஒரு தர்மமிருக்கிறது' என்று கூறிப் பத்திராசிரியர் உரிமைக்கும் சட்டத்துக்கும் ஊறு நிகழா முறையில் நடந்துகொள்ளல் வேண்டுமென்னுங் குறிப்போடு ஓர் அறிக்கை செலுத்தியதும் ஈண்டுக் கருதத்தக்கது.

இனிச் சத்தியாக்கிரகத்தின் ஒரு கூறாகிய ஒத்துழையாமையில் சட்டமீறிச் சிறைபுகலுக்கும், மனித வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டா என்பது ஆராயற்பாற்று. வாழ்க்கை என்பது எவ்விதக கட்டுப்பாடுமின்றி இயல்பாக மலர்வது. அவ்வாழ்க்கைக்கு ஏதாயினுங் கட்டுப்பாடு நேருமாயின், அதன் உரிமைக்கும் ஊறு நேர்வதாகும். உரிமையைக் கட்டுவது சிறை எனபது. உலக வாழ்வில் ஒருவரை ஒருவர் சிறைப்படுத்தும் முறைகள் பற்பல. நம் நாட்டார் ஒரு காலத்தில் பெண்கல்வியை மறுத்துப் பெண்மக்களை அடக்கியது ஒருவிதச் சிறை; தீண்டாமை மற்றொருவிதச் சிறை; சில உரிமைகள் சில இனத்தார்க்கே உரியன என்பது வேறொருவிதச் சிறை. இப்போது நிற வேற்றுமையால் சிலவிதச் சிறைகள் ஏற்பட்டிருக்கின்றன. சட்டங்களாலுஞ் சிறை நேர்தலுண்டு. ஒரு நாட்டுக்கு மற்றொரு நாடு

**சிறைப் பாகுபாடுகள்**

சிறைப்படலையுங் காண்கிறோம். அறியாமைக்கு உலகமே சிறைப்பட்டுக் கிடக்கிறது. ஆசிரியன் மாணாக்கனையும், தந்தை மைந்தனையும், அண்ணன் தம்பியையும், மாமி மருகியையும், முதலாளி தொழிலாளியையும் சிறைப்படுத்தும் முறைகள் பலப்பல உண்டு. இச்சிறைகளினின்றும் விடுதலையடைய அவரவர் முயலல்வேண்டும். முயற்சியில் தலைப்படாதவர் வாழ்வு உரிமை யுடையதாகாது. தைத்த முள்ளை முள்ளால் வாங்குவதுபோலச் சிறையைச் சிறையால் நீக்குவது ஒரு முறை; அதாவது அன்புவழி நின்று ஒத்துழையாமை கொண்டு துன்பம் பொறுத்துச் சிறைப்படல். இச் சிறைப்பாடு, உடலை மாற்றார் வயப் படுத்தி, உயிரை ஆண்டவனிடத்தில் ஒப்புவிப்பது. இஃது ஆன்மசக்தி எனவும் படும். ஆன்மசக்தி கைவரப் பெற்றோர் தேகத்தை ஆன்மாவாகக் கொண்டவரல்ல. துன்பஞ் சகிக்கும் பொறுமைப் போருக்குத் தேகாத்ம வாதிகள் உரியவர்களல்ல. இவர் தமது துன்பந் துடைக்கப் பிறர்க்குத் துன்பமளித்து உலகில் துன்பம் பெருக்குவோர். ஆன்மசக்தி கைவரப் பெற்றோர், துன்பத்தைத் தாமேற்றுத் தந் துன்பத்தையும், பிறர் துன்பத்தையுந் துடைக்க முயல்வர். ஆதலால், துன்பத்துக்குத் துன்பமேற்கும் முறை மனித வாழ்விற்கு உரியதென்க. இது தொடக்கத்திலுஞ் சொல்லப் பட்டது.

ஒத்துழையாமை நாட்டின் உரிமை கருதித் தொடங்கப்பட்டது. நாட்டின் சிறையை எவ்வாறு நீக்குவது? ஒத்துழையாப் போர்க்களத்தில் நின்று, அதற்குரிய ஆக்க அழிவு வேலைகளை நிகழ்த்தி, முடிவில் சட்ட

மீறிச் சிறை புகப்புக, நாட்டின்சிறை நீங்கிக்கொண்டே போகும். ஒவ்வொருவரும் அல்லது மூவரில் இருவர் சிறை புகுவாராயின், நாடே சிறை புகுவதாகும். நாடு முற்றுஞ் சிறை புகுந்தால் நாட்டின் உரிமைநீக்கச் சிறை தானே அகலும்.

இந்திய நாடே இதுபோழ்து சிறைப்பட்டிருக்கிறது. சிறையாவது மக்கள் சுதேசியத்தை மறந்து பரதேசியத்தில் வெறிகொண்டிருப்பது. சிறையை எப்படி நீக்குவது ? கதர் அணிதல் ஓரளவு சிறை மீட்சி; தீண்டாமை விலக்கல் மற்றோரளவு; சட்ட சபை விலக்கு இன்னோரளவு. இவ்வாறு ஆக்கம் அழிவால் சிறையறுத்து வரும் வேளையில் எழும் அடக்கு முறைக்கு அஞ்சாது சிறைபுகுதல் முழுச்சிறை விலக்காகும். இச்சிறைக்கும் குற்றவாளிகள் சிறைக்கும் வேற்றுமையுண்டு. இருசாராரும் ஒரே இடத்திலிருப்பினும் முன்னவர்க்குச் சிறைக்கோட்டம் தவக்கோட்டமாகும். மற்றவருக்கு அது தண்டனைக் கோட்டமாகும்.

அநியாயத்துக்கும் மறச் செயலுக்கும் கொடுஞ் சட்டங்கட்கும் உடன்பட்டு வாழ்வது சிறப்பாகாது. நீதி, அறம், சட்டம் முதலியவற்றை விரும்புவோர் அநீதி முதலியன தம்முடன் வளர ஒருப்படார். அவர் சிறைக்கோ தூக்குக்கோ குண்டுக்கோ இரையாகும்வரை அநியாய முறைகளோடு கலந்து வாழார். ஆதலால், ஆத்ம சக்தியாளர் தமது உடலுரிமையுள்ளமட்டும் அநியாய விதிகளை மீறி மீறிச் சிறைக்களன் நண்ணிக் கொண்டே யிருப்பர். இம்முறையில் சிறை புகுதல்

**உரிமையும் சிறையும்**

மனித வாழ்விற்குரியதாகும். 'உரிமையில்லாத தேசத்தி லுள்ள தேசபக்தர்களின் உறைவிடம் சிறைக்கோட்டம்' என்றும், 'தேச உரிமை குறித்து, ஒரு தேசபக்தன் சிறையில் நுழைவானாயின், அவனது ஆன்ம சக்தி மின்சாரம்போலெழுந்து நான்கு சுவரையும் முட்டி ஊடுருவி வெளிப்போந்து வெளியிலுள்ளவரையும் தட்டி எழுப்பும்' என்றும் அறிஞர் கூறியிருத்தல் காண்க. சிறையைப்பற்றிக் காந்தியடிகள் கழறிய மொழிகளில் இரண்டொன்று வருமாறு :—

'சத்தியாக்கிரகிகள் சிறை வீட்டை மறுமை வீடாகக் கொள்ளச் சித்தமா யிருத்தல்வேண்டும்.'

'தீய அரசாட்சியில் சத்தியாக்கிரகிகள் வெளியே இருத் தல் அவ்வாட்சிக்கு உடன்பட்டு வாழ்வதாகும்.'

'நாமெல்லோருஞ் சிறைபுகுந்தால் சுயராஜ்யம் பெறலாம்; அல்லது அரசாட்சியை நமது விருப்பப்படி நடத்த அதைத் திருத்தினும் சுயராஜ்யம் பெறலாம்.'

'நமக்கு மாண்புதரும் இல்லம் சிறையே.'

'ஒவ்வொரு முறை சிறைபுகுதல் அவ்வவ்வளவு நமக்கு ஆற்றல் அளிக்கிறது.'

'யான் பறவையைப்போல மகிழ்ச்சியா யிருக்கிறேன். எனது சிறைவாழ்வின் நோக்கம் புற உலகத்தினின்றும் பிரிந்து நிற்பது.'

சிறையைப்பற்றியும், சிறைச்சாலை அநுபவங்களைப் பற்றியும் காந்தியடிகள் பல கட்டுரைகள் எழுதியிருக்கி றார். அவை புத்தகங்களாகவும் திரட்டப்பட்டிருக்கின் றன. சிறை வாழ்விலும் காந்தியடிகள் ஒழுங்கு காத்து நடந்த வரலாறுகள் பல உண்டு.

காந்தியடிகள் சொற்படி ஒத்துழையாமை வழி நின்று, ஆக்க அழிவு வேலைகளை அஹிம்சையில் உறுதி கொண்டு ஆற்றிச் சிறைபுகப் பல்லோர் முன்வந்திருப்பின், அவர் குறிப்பிட்ட ஓராண்டிற்குள் சுயராஜ்யம் மலர்ந்திருக்கும். காந்தியடிகள் ஆன்மசக்தி, ஒருமுறை ஏறக்குறைய இருபத்தையாயிரவரைச் சிறைபுகச் செய்தது; மற்றொரு முறை எண்பதினாயிரம் பேரைச் சிறை புகச் செய்தது; இன்னொருமுறை ஒன்றரை இலட்சம் பேரைச் சிறை நுழையச்செய்தது. இவர் ஒவ்வொருவரும் ஆன்ம சக்தியில் உறுதி கொண்டவரா யிருப்பின், அவரவர் ஆன்ம சக்தி வேறு பல்லாயிரவரை ஆண்டிருக்கும். ஒத்துழையாக்காலத்தில் சிறைபுகுந்த நண்பர் பலர் அரசியற் பொருள்ளங்கொண்டும், பதவி வேட்கை கொண்டும், வேறு பல நலங்கருதியும் கடனாற்றினர் என்பது பின்னை அவரவர் பேச்சாலுஞ் செயலாலுந் தெரியலாயிற்று. ஆன்ம சக்தியில் உறுதியில்லாதார் காந்தியடிகளின் அன்புப் போரில் கலத்தல் கூடாது. அவர் உள்ளே ஹிம்சை கொண்டு, வெளியே அஹிம்சைப் போரென்று சிறை நுழைந்தால் காந்தியடிகளின் நோக்கம் எங்ஙனம் நிறைவேறும்? உள்ளொன்றும் புறமொன்றுங் கொள்ளல் மனித வாழ்விற்கு உரியதன்று. அக்கரவு, ஆன்ம சக்தியை எவ்வழியில் எழுப்பும்? கரவாடும் நெஞ்சினர் - பெரிதும் தலைவரெனத் திரிவோர் - கலப்பால் பெரும் அறப்போருக்கே முட்டு நேர்ந்தது. இதற்குக் காந்தியடிகள் என் செய்வார்? அவர் கொண்ட போர்முறை என் செய்யும்? காந்தியடிகள் விரும்பியவாறு ஆக்கம்

**தோல்விக்குக் காரணம்**

அழிவு என்னும் இருவழியில் ஒத்துழையாமை இயங்க இருக்குமேல், சுதேசியத்துக்குற்ற புரை பொன்றி, அவ் விடத்தில் சுயராஜ்யம் அரும்பி இருக்கும்.

சத்தியாக்கிரகத்தை அடிப்படையாகக் கொண்ட எம்முறையும் இயற்கைச் சுயராஜ்யத்தை அளிப்பது உறுதி. சுயராஜ்யமில்லாத வாழ்வு வாழ்வாகாது. சுய ராஜ்யப்பேற்றை அளிக்கவல்ல சத்தியாக்கிரக மாண்பை எவ்வாறு உணர்த்தவல்லேன்! சத்தியாக்கிரகமென்பது, ஆன்மாவிற்குங் கடவுளுக்கும் உள்ள தொடர்பு நெறி யைக் காட்டுவதென்றும், அதுவே மக்கள் உய்யுநெறி காட்டும் சமயமென்றும் அடிகளால் அடிக்கடி சுருங்கிய முறையில் சொல்லப்படுவது வழக்கம். எண்ணம், பேச்சு, எழுத்து, செயல், வாழ்வு முதலியவாற்றான், சத்தியாக்கிரக மயமா யொளிரும் காந்தியடிகள் அதைப் பற்றி வெளியிட்டுள்ள கடலனைய கருத்துக்களுள் சில திவலைகளை முகந்து இங்குப் பெய்கிறேன்.

'சத்தியாக்கிரகம் என்பது ஒரு குழுக்கு உரியதன்று. அது வாழ்விற்கு உரிய ஒழுங்கு முறை. சத்தியமில்லா ஒவ் வொன்றும் உயிரில்லாப் பிணம்போல் தோன்றுகிறது.'

'சத்தியமும் அஹிம்சையும் கொண்டது சத்தியாக் கிரகம்.'

'அஹிம்சையோடு கூடிய சத்தியத்தால் உலகை அடிக் கீழ்ப்படுத்தல் ஆகும்.'

'சத்தியாக்கிரகம் என்னும் பெயர் தென்னாப்பிரிக்காவில் என்னால் சூட்டப்பட்டது. அது சத் (உண்மை) என்னுந் தாதுவினடியாகப் பிறந்த பொருள் கொண்டது. அது சத் - சக்தியுமாகும். அதை நான் அன்பு எழுச்சி அல்லது ஆத்ம சக்தி என்றுஞ் சொல்வதுண்டு. சத்தியம் ஹிம்சையைக்

கொள்ளாதது என்று தொடக்கத்திலேயே கண்டேன். * * இதற்குப் பொறுமையுங் கனிவுந் தேவை. பொறுமை யாவது தானே துன்பஞ் சகித்தல். சத்தியத்தை ஆக்கிர கித்தலாவது மாற்றாரை வருத்துவதன்று; தனக்குத்தானே வருந்தல்.'

'சத்தியத்தினுஞ் சிறந்த சமயம் ஒன்றில்லை என்பது பிறழாத உறுதி.'

'கடவுளே! இந்தியாவைச் சத்தியவழியில் நடத்துவா யாக.'

'அன்பு எங்கே உண்டோ அங்கே உயிர் உண்டு. அன் பிலா உயிர் என்பு தோல் போர்த்த உடல்.'

'ஒரு நாணயத்தின் ஒருபக்க முத்திரை அன்பு. மற்றொரு பக்க முத்திரை உண்மை.'

'பலாத்காரத்தால் தாக்குவது தேக சக்தியின்பாற்படும். பொறுமைப் போர் ஆத்ம சக்தியின்பாற்பட்டது. ஏசு கிறிஸ்து, தானியேல், சோக்ரத்தர் ஆகிய இவர்கள் பொறுமைப்போரெனும் தூய ஆத்மசக்தி வழிநின்றவர்கள். இவர்கள் தங்கள் ஆன்மாவிற்கு முன்னே தங்கள் உடல் களைத் துரும்பாகவும் மதிக்கவில்லை.'

"'தீமையை எதிர்த்து நில்லாதே' என்பது, தீமைக்குத் தீமை செய்யாது, தீமைக்கு நன்மை செய்வது என்னும் பொருள் தருவது; அதாவது இன்னொரு மொழியில் தேக சக்தியைத் தேகசக்தியால் எதிராமல் அதை ஆன்ம சக்தியால் எதிர்த்து நிற்றல் வேண்டுமென்று சொல்லலாம்."

'சட்ட மறுப்பே சத்தியாக்கிரகம் என்று நினைக்கிறவன் சத்தியாக்கிரக நுட்பத்தை உணர்ந்தவனல்லன். சத்தியாக் கிரகம் என்பதில் சட்ட மறுப்பு அடங்காமலில்லை. சட்டத் துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் தேர்ச்சி பெற்றவனே சட்டத்துக்குக் கீழ்ப்படியாது நடக்க அருகனாவன்.'

“ எனது மனச்சான்றுக்கு ஒவ்வாத ஒரு சட்டத்தை என் தந்தையார் நிறுவினும், ‘ அதற்கு யான் கீழ்ப்படியேன் ’ என்று மொழிந்து நடக்கும் வழியில் எனது அன்பைப் புலப்படுத்துவேன். ”

‘ சத்தியாக்கிரகம் அரசாங்கத்துக்கு மாருக மாத்திரம் கொள்ளப்படுவதன்று. குடும்ப சமூகங்களிலும் அதைக் கொள்ளலாம். சுருங்கக் கூறின், தலைவன் தலைவியருள்ளும், தந்தை மைந்தருள்ளும், நண்பருள்ளும் சத்தியாக்கிரகங் கொள்ளலாம். துன்பக் குறைகளைப் போக்கச் சத்தியாக்கிரகக் கருவியை எவரிடத்திலும் எவ்விடத்திலும் செலுத்தலாம். ’

‘ நம்மால் ஹிம்சை சிறிதும் நேராத முறையில் இவ்வியக்கத்தை (சத்தியாக்கிரகத்தை) நடாத்த இயலாமற் போயின், இதை நிறுத்திவிட வேண்டும்; அல்லது இன்னும் கடினமான ஒழுங்குக்குட்படுத்தி நன்முறையில் நடத்தல் வேண்டும். இன்னும் ஒருபடி கடந்துஞ் சொல்வேன். நமக்குள்ளாகவே சத்தியாக்கிரகங் கொள்ளும் ஒரு நிலையில் யான் நிற்குங் காலமும் வரலாம். ’

‘ யான் ஓர் அரசாட்சியை நடாத்தும் பொறுப்பேற்றிருப்பனேல், ஹிம்சையிலிறங்காமல், அநியாயச் சட்டங்களைத் தொலைக்க உறுதிகொண்டு சத்தியத்துறையில் நின்று ஒரு கூட்டங் கிளம்புமாயின், அக்கூட்டத்தை வரவேற்று, அதை நியாய வரம்புக்கு உட்பட்டதாகவும் கொள்வேன். கவர்னர் என்னும் முறையில், என்னை அவர் நல்வழியில் நடாத்துவோர் என்று கருதி, அக்கூட்டத்தாரை ஆலோசனைக் கர்த்தராகக் கொள்வேன். ’

‘ சத்தியாக்கிரகத்திலுள்ள இரண்டு நுட்பங்களை நன்கு உணர்வதால் ஒருவன் பல ஐயங்களைக் களையலாம். அச்சம் காரணமாகச் சத்தியாக்கிரகி ஒன்றுஞ் செய்ய மாட்டான்

என்பது ஒன்று. அவன் கடவுள் ஒருவருக்கே அஞ்சுவான் என்பது மற்றொன்று. மாற்றான்மாட்டுப் பகைமையையோ கெட்ட எண்ணத்தையோ நெருக்கியோ பெருக்கியோ சத்தியாக்கிரகி தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளான்; அவன் தன்பால் மாறுபட்டுள்ளவனை நண்பனாகக் கருதுவான். அவன் ஆற்றுந் தீமையையும் அவன்மாட்டுக் காழ்ப்பின்றி அன்பால் எதிர்த்தல் வேண்டும்.'

'மூர்க்க சக்தியை மூர்க்க சக்தியால் எதிர்ப்பது வலிமையுடையதாகாது. மூர்க்க சக்தியை ஆன்ம சக்தியால் எதிர்த்தலே வலியுடைமை. இதற்கு அஞ்சாமை வேண்டும். அன்பின்றி மெய்யான அஞ்சாமை நிகழாது. தீய எண்ணம் நிலவும் வரை சத்தியாக்கிரகத்துக்குத் தூய வெற்றி கிடைத்தல் அரிது. தங்களை வலிமையில்லா மெலியார் என்று நினைப்போர் அன்புகொள்ள இயலாதவர். நாள்தோறும் காலையில் கீழ்வரும் உறுதியை வேண்டி நிற்போமாக.

> 'இவ்வுலகில் எவர்க்கும் யான் அஞ்சேன்; ஆண்டவன் ஒருவனுக்கே யான் அஞ்சி நடப்பேன்; எவரிடத்தும் பகை கொள்ளேன்; எவரது அநியாயத்துக்கும் இணங்கேன்; அசத்தியத்தைச் சத்தியத்தால் வெல்வேன்; அசத்தியத்தோடு போராட எல்லாத் துன்பங்களையும் ஏற்பேன்.'

'பகைமை எரித்துக்கொல்லும்; அன்பு என்றும் இறவாது. இரண்டுக்கும் இவ்வளவு வேற்றுமையுண்டு. அன்பால் பெறுவது என்றும் வைப்பாக இருப்பது. பகைமையால் பெறுவது சுமையாக வருத்தும். பகைமை பகைமையையே வளர்க்கும். ஆதலால் உயிர்களின் கடமை பகைமையைத் தேய்த்து அன்பை வளர்ப்பதென்க.'

'ஜெனரல் டையருக்குப் பணிசெய்வதும், அவனோடு கலந்து ஒன்றுமறியா மக்களைச் சுடுவதும் பாவம். அவன்

நோயால் பீடிக்கப்பட்டு வருந்தும்போது, அவனுக்கு ஊழி யஞ் செய்யப் புகுவது, என்பால் மன்னிப்புக் குணத்தையோ அன்பையோ பெருக்கப் பயிற்சி செய்வதாகும்.'

'யான் இந்தியா முழுவதுஞ் சுற்றிவந்தபோது எல்லாச் சாதி சமய அரசியற் கொள்கையுடையாரையுங் கண்டு பேசும் பேறுபெற்றேன். அவர்களில் ஆயிரக்கணக்கான பெண் மக்களும், நூறு நூறு கணக்கான மாணுக்கர்களும் போந்திருந்தார்கள். நாட்டைபபற்றி அவர்களோடு கலந்து பேசினேன். அவர்கள நாட்டின் நடைமுறை நிலையைப் பற்றி மனமார்ந்த உணர்வோடு நினைக்கும் தன்மையை இன் னும் பெறவில்லை என்பது கண்டேன். அந்நிலையைப் பெறத் தக்க ஒழுங்குமுறை நம்மாட்டில்லை. வேண்டப்படும் ஒழுங்கு, தியாக உணர்வு, தாழ்மை, மனே உறுதி ஆகிய இவைகளை அளிக்கவல்லன உபவாசமும் ஜெபமுமென்றும், வேறென்றிற்கும் அவ்வாற்றல் இல்லையென்றும், அவை யன்றி உண்மை வளர்ச்சி இல்லையென்றும் கூறுந் துணிவு நமக்கில்லை. ஆதலால் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் உண்மையாக உபவாசமும் ஜெபமுங் கொள்ளும் முறையால் சத்தியாக்கிரக வாரத்தைத் தொடங்குவார்க ளென்று எதிர்பார்க்கிறேன்.'

'நான் தொழிலாளியாயிருந்தால் * * * நான் அநியாய மாக நடத்தப்படின், நான் எந்த அதிகாரியிடமுஞ் செல் லேன். நான் என் தலைவனிடஞ் சென்று நியாயம் வழங்கு மாறு கேட்பேன். அவன் நியாயம் வழங்காதொழிவனேல், நியாயம் பெறும்வரை, உணவு கொள்ளாமலும் நீர் அருந்தா மலும் அங்கேயே நின்றுகொண்டிருப்பேன். இப் பொறுமைப் போரால் கன்மனமுங் கனியுமென்று நான் உறுதியாகச் சொல்வேன்.'

'சத்தியாக்கிரகம் சமய உலகுக்கு மாத்திரம் உரிய தென்று சிலர் நம்புகிறார். எனது பரந்த அனுபவம் அதற்கு

மாறுபட்டு நிற்கிறது. மற்றத் துறைகளிலும் சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்தி, அதை ஆத்மார்த்தமாக்கி, அதனால் வெற்றி விரைந்து வரச்செய்து, போலித் தன்மையினின்றும் பலரை மீட்கலாம். சத்தியாக்கிரகத்தில் பொருளாதாரம் முதலியனவும் உண்டு. ஆதலால் அஃது அனுபவத்தில் - செயலில் - வருவதாகும்.'

'தேச முழுவதும் சத்தியாக்கிரகத்தை ஒரு பெரும் அழியாக் கருவியாகக் கொள்ளும்போது, நமது இயக்கங்கள் யாவும் ஒரு புதிய படிவம் பெறும். வெறும் ஆரவாரம், வீண் கூச்சல், விண்ணப்பித்தல், தீர்மான நிறைவேற்றம் முதலியவற்றினின்றும் நாமும் தப்பினவராவோம்.'

ஹார்த்தால் (வேலை நிறுத்தம்) பலாத்காரத்தால் நிகழ்த்தப்படின், அது சத்தியாக்கிரகியின் 'ஹார்த்தால்' ஆகாது. எதிலும் சத்தியாக்கிரகிக்குத் தூய எண்ணம் சொல் செயல் இருத்தல் வேண்டும்.'

அநாதியாக உள்ள சத்தியாக்கிரகம், பண்டை நாளில் பிரகலாத ஆழ்வார், கிறிஸ்து, திருநாவுக்கரசர் முதலியோர் வழி வழி வளர்ந்து, சில நூற்றாண்டுகளாக ஒடுங்கி, இந்நாளில் காந்தியடிகள் வாயிலாக ஒருவாறு வளர்ந்து வருகிறது. அரசியல் உரிமை குறித்தெழுந்த போரில் சிலர் தலைப்பட்டுச் சத்தியாக்கிரகம் நிகழ்த்திய நாள் தொட்டு, பல துறைகட்குஞ் சத்தியாக்கிரகம் தொடங்கப்படுகிறது. இயந்திரமும், விதம்விதமான மறக்கருவிகளும் மக்கள் ஆன்ம ஞானத்தைக் கல்லிவரும் இந்நாளில் அவைகளின் ஆக்கத்தைச் செருக்க வல்ல அறக்கருவி சத்தியாக்கிரகமென்று சொல்வது மிகையாகாது. நாகப்பூர் கொடிப்போரிலும், அகாலியர் மத உரிமைப் போரிலும், பிராஞ்சுக்காரர் இராணுவ பலத்தால் ஜெர்மனிக்குரிய

ரூர் பிரதேசத்தைப் பற்றியபோதும், பர்தோலி வரி கட்ட மறுத்தபோதும் எளிய மக்களிடை எழுந்த சக்தி எது? ஆன்மசக்திக்குரிய சத்தியாக்கிரக மன்றோ? இனி சத்தியாக்கிரகம் எளியோரிடைப் பரவிப் பரவி உலகில் சமரச சன்மார்க்கத்தை நிறுத்தவல்ல ஒரு சமயமாகப் போவது உண்மை. இந்நாளில் இதற்குக் கால் கொண்ட காந்தியடிகள் வாழ்க. உலகில் சக்தியாக்கிரகம் ஓங்க.

## கஉ. சமய வாழ்வு

மனிதனிடம் விலங்கு நீர்மையும் உண்டு; தெய்வத் தன்மையும் உண்டு. சத்தியாக்கிரகம் முன்னையதைக் களைந்து, பின்னையதை விளங்கச் செய்வது. தெய்வத் தன்மை முற்றும் விளங்கப்பெற்றவரே முழு-உண்மை-சத்தியாக்கிரகியாவர். கிறிஸ்து, திருநாவுக்கரசர் முதலியோர் முழு-உண்மைச் சத்தியாக்கிரகியர். சத்தியாக்கிரகத்தில் படித்தரங்களிருக்கின்றன.

மனிதன் தெய்வத்தோடு தொடர்பு கொண்டு வாழும் சத்தியாக்கிரக வாழ்வே சமய வாழ்வென்பது. சமயம் என்னுஞ் சொற்குப் பல பொருட்களுண்டு. ஈண்டு இரண்டை மட்டுஞ் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன்.

ஒன்று, 'வேளை' அல்லது 'தருணம்' என்பது; மற்றொன்று, 'நன்றாகச் செய்யப்பட்டது' என்பது.

**சமயப் பொருள்**

மனிதன் தான் சத்தெனுஞ் செம்பொருளோடு கொண்டுள்ள தொடர் புணர்ந்து நிற்குஞ் சமயம் - வேளை - தருணம் - சிறப்பாகச் சமயம் என்று வழங்கப்படுகிறது. மனிதன் அத்தொடர்பை உணராது வேறுபல துறைகள் பற்றி

நிற்குஞ் சமயங்களைச் சமயமென்று சிறப்பாக எவருஞ் சொல்வதில்லை ; அவைகளை உழுஞ் சமயம், ஓதுஞ் சமயம், உண்ணுஞ் சமயம், உறங்குஞ் சமயம் என்று அடைகொடுத்துச் சொல்வது வழக்கம். மனிதன் சத்துடன் கொண்டுள்ள தொடர்பை உணர்ந்து நடக்குஞ் சமயத்தை மட்டும் எவ்வித அடையுமின்றிச் ‘ சமயம் ’ என்று வழங்குதற்குக் காரணம், அவன் இயல்பாக என்றும் நிலைத்து நிற்றற்குரிய சமயம் அதுவே ஆகலின் என்க. அது மனிதப் பிறவிக்கு இன்றியமையாததாகலின், அதற்கு என்றுங் கேடு நிகழாதவாறு, அநாதியாகவே அது ‘நன்றாகச் செய்யப்பட்டுள்ளது. ’

‘ நன்றாகச் செய்யப்பட்டது ’ என்பது பொருள் பொதிந்ததொன்று. அது சமயமென்னுஞ் சொல்லின் தாதுப்பொருள் குறிப்பது. மனிதன் பொருட்டுச் சமயம் அமைக்கப்பட்டது. அச்சமய நெறியில் நின்றொழுக வேண்டுவது மனிதனது கடமை. மனிதன் என்றுதல் சமய வாழ்வைப் பெற்றே தீரல்வேண்டும். அவ்வாழ்வு பெறாதான் இன்னும் பிறவாதவனே யாவன்

மனிதன் ஏன் பிறந்தான் ? மனிதப் பிறவியின் நோக்கமென்னை ? மனிதன் உண்டு கழித்து உறங்கி மாளவா பிறந்தான் ? அஃதா அவனது பிறவி நோக்கம் ?

**உண்மை மனிதன்**

அன்று ; அன்று. மனிதன் யாவன் ? கரமா ? உரமா ? மனமா ? கரணமா ? உடலா ? அல்ல ; அல்ல. பின்னை மனிதன் எவன் ? ‘ பாராதி பூதநீ யல்லை-உன்னிப்-பாரிந்திரி யக் கரணநீ யல்லை, ஆரா உணர்வு நீ என்றான் - ஐயன் - அன்பா யுரைத்தசொல் ஆனந்தந் தோழி ’ என்றார் தாயு

மானும். உண்மை மனிதன் அறிவிலாச் சடப்பொரு ளல்லன். அவன், *'நானார் என்னுள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்' என்று தன்னைத்தான் ஆய்ந்தால் தனது உண்மைநிலை காணப்பெறுவன்.

மனிதன் ஒரு பொருளை ஆராயப் புகும்போது, முதலில் அவன் ஐயந்திரிபால் பிடிக்கப்படுதல் இயல்பு. பின்னை இடையறாத ஆராய்ச்சியானும், சிந்தனையானும், அறிந்தோர் உணர்த்தலானும் அவன் தெளிவு பெறுகிறான். மனிதன்பால் அறிவு விளங்கும் நிலை இருப்பினும், தொடக்கத்தில் அஃது அறியாமையால் மறைக்கப்படுகி றது. இதனால் மனிதனிடம் அறியாமையுண்டு என்பதும், அது விலக விலக அறிவு விளங்குகிறது என்பதும் வெள்ளிடைமலை. மனிதன் எதைப்பற்றி ஆராய்கிறானோ அதைப்பற்றிய அறியாமை நீக்கமும் அறிவு விளக்கமும் பெறுகிறான். இச்சிறு நீக்க விளக்கங்கொண்டு முழுநீக்க விளக்கமுண்டு என்று உறுதி கூறலாம். மனிதன், உலகு உயிர் கடவுள் என்னும் மூன்றையும் ஆராய்ந்து தெளிவனேல், அவனது அறியாமை முற்றுந் தேய்ந் தொழியும். அறியாமை முற்றும் அகன்று முழு அறிவு விளக்கம் பெறுகிறவனே உண்மை மனிதன். இந்நிலை பெற முயல்வது மனிதப் பிறவியின் நோக்கமாகும்.

அறியாமை நீங்கப்பெற்றோர், அறியாமை நீங்கப் பெறாதார்க்குத் தாங்கண்ட மெய்ம்மையை உணர்த்தி அறிவை விளக்குகிறார். இவ்வாறு மெய்ம்மையை உணர்த்துவோரும் ஒருபோது ஒருவரால் அம்மெய்ம்மை உணர்த்தப்பட்டவரா யிருப்பர். இவ்வழி நின்று, ஆய்ந்து

*மாணிக்கவாசகர்

ஆய்ந்து, ஓர்ந்து ஓர்ந்து சென்றால், அறியாமையேயில்லா முற்றறிவுடைய முழுமுதற் பொருள் ஒன்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். அவ்வறிவுப் பொருட்கு இயல்பாக அறியாமை யின்மையான், அதற்குக் காலம் இடம் முதலிய கட்டுக்களில்லை. கட்டில்லா ஒன்று யாண்டும் நிறைந்து நிற்கும் இயல்பினது என்பதை ஈண்டு விரிக்கில் பொருள் பெருகும். எவ்விதக் கட்டுமின்றி எங்கணும் நிற்கும் ஒன்று யாண்டுப் பிறக்கும் ? யாண்டு இறக்கும் ? எனவே அது தோற்றக்கேடுகளின்றி என்றும் இருப்பதென்க. எவ்வித மாறுதலுமின்றி என்றும் ஒரு பெற்றியாயிருக்குமொன்றை முன்னோர் சத் என்னுஞ் சீரிய பெயரால் அழைத்தனர். சத்தென்னுஞ் சொற்கே என்றும் இருப்பது என்பது பொருள். அந்தச் சத்தென்னுஞ் செம்பொருட்கு அறியாமை (அவித்தை) யின்மையால், அதன்மாட்டுச் சித்தும் ஆனந்தமும் நீக்கமின்றி மருவுகின்றன. ஆகவே, நாம் சத் என்னுஞ் செம்பொருளைக் குறிப்பிடும்போதெல்லாம், அதன்பால் சித்தும் ஆனந்தமும் பிரிவின்றி யிருத்தலுங் கோடல் வேண்டும். சத் சித் ஆனந்தமாய் விளங்குஞ் செம்பொருள் எங்கும் நீக்கமற நிற்கும் இறை. அஃதில்லா இடமில்லை. எல்லாம் அதன் மயம்.

முழுமுதற் பொருள்

யாண்டும் நீக்கமற நிற்குஞ் செம்பொருளோடு மனிதன் எங்ஙனந் தொடர்பின்றி வாழ்தல்கூடும் ? தொடர்பு, உண்மை இன்மையைப்பற்றி விரிந்த ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை. உலகிற்கும் உயிருக்கும் செம்பொருட்கும் உற்றுள்ள தொடர்பு என்றும் அறாதது. அத்தொடர்பை மனிதன் உணர்ந்து

கடவுள் மனிதன் தொடர்பு

வாழ்கிறனு இல்லையா என்பதொன்றே ஈண்டு உன்னற் பாலது. மனிதன் சில வேளைகளில் அதை உணர்ந்தும் வாழ்கிறன் ; சில வேளைகளில் அதை உணராதும் வாழ் கிறன். தொடர்பை உணர்தல் உணராமை என்னும் இரண்டும் மனிதனது நிலையைப் பொறுத்திருக்கின்றன. தொடர்பை மனிதன் எப்பொழுது உணர்கிறன் ? எப் பொழுது உணராதொழிகிறன் ? (மனிதப் பிறவி விலங் கினத்துக்கும் தெய்வ நிலைக்கும் இடைப்பட்டதென்று இந்நூற்கண் பல இடங்களில் சொல்லப் பட்டுள்ளது.) மனிதன் அறிவு, விலங்கு நீர்மையில் தோயும்போது, அவன் காம குரோதங்களுக்காளாகி, இக்குற்றங்களின்றித் தன்பால் தோன்றத் துணையாக நின்று, தன்னை நடாத்துஞ் சத்தின் தொடர்பை உணராது வாழ்கிறன். இவ்விலங்கு நீர்மை, அவித்தை - ஆணவம் - சாத்தான் - சீவகரணம் முதலிய பல பெயர்களால் உலகிடை வழங்கி வருகிறது. இவ்விலங்கு நீர்மையினின்றும் விடுதலை அடையக் கற்றல் கேட்டல் உன்னல் தெளிதல் வாயிலாகவும் - மற்ற இயற்கை அறவினை வாயிலாகவும் - முயன்று முயன்று மனிதன் உழைப்பனேல், அவன் தன்னை விட்டு என்றும் பிரியாத சத்தின் தொடர்பை உணர்தல்கூடும். இத் தொடர்புணர்ந்து வாழ்வோரே பிறவியாலாய பயனை அடைந்தவராவர்.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
> செம்பொருள் காண்ப தறிவு.—**திருவள்ளுவர்**

> பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
> பெறுதற் கரிய பிரானடி பேணர்

பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய பேறிழந் தாரே.—திருமூலர்

பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.—அப்பர்

மறந்தேன் உன்னை முன்னம்
மறந்த மதியில் மனத்தால்
இறந்தேன் எத்தனையும் அதனால்
இடும்பைக் குழியில்
பிறந்தேன் எய்த்தொழிந்தேன்
பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்
ணகர் மேயவனே.—திருமங்கையாழ்வார்

சத்தெனுஞ் செம்பொருளின் தொடர்புணர்ந்து வாழ்தலாவது எங்கும் எவ்வுயிரிலுந் தொடர்பு கொண்டு வாழ்வது. என்னை? சத்தெனுஞ் செம்பொருளில்லாத இடமில்லை யாகலின் என்க. இவ்வுண்மை நிலைகண்ட பெரியோர் அருளிய மொழிகளில் இரண்டொன்றை எடுத்துக் காட்டுகிறேன்.

வானும் மண்ணும் மற்றுள்ள பல்லுயிரும்
தானாய பெருமானை * * *.—திருமங்கையாழ்வார்

நீயே உலகெலாம் நின்னருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும்—நீயே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரு மாய இவை.—நம்மாழ்வார்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

*கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.*

**—மாணிக்கவாசகர்**

*அப்பனீ அம்மைநீ ஐய னுநீ*
*அன்புடைய மாமனு மாமியுநீ*
*ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ*
*ஒருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ*
*துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ*
*துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ*
*இப்பொன்னீ இம்மணிநீ இம்முத்துநீ*
*இறைவனீ ஏறூர்ந்த செல்வனீயே.*

**—திருநாவுக்கரசர்**

**சமய வாழ்வு எது?**

*யாண்டுமுள்ள செம்பொருளின் தொடர்பை உணர்வோன் எதற்கும் எவ்வுயிர்க்குந் தீங்கு மனத்திலாதல் நினைப்பனே? நினைப்பனேல் அவ்விடத்தில் சத்துக்கும் தனக்குமுள்ள தொடர்பை அவன் மறந்தவனாகிறான். அம்மறப்பு மனிதனை விலங்காக்கும். விலங்குணர்வுடைய ஒருவன் எப்பாவமுஞ் செய்ய ஒருப்படுவன். ஒருவன் சத்துடன் கொண்டுள்ள தொடர்புணர்ந்து வாழ்கிறானா இல்லையா என்பதற்கு அறிகுறி, அவன் எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமையையும் செய்தலையும் பொறுத்து நிற்கிறது. சத்துடன்கொண்டுள்ள தொடர்பைஉணர்தலாவது அஹிம்சா தர்மம் விளங்கப் பெறுதலன்றி வேறென்னை?* ஆகவே, சத்துடன் தொடர்பு கொள்ளுஞ் சமய வாழ்வில் தலைப்பட்டோன் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனாவனென்க.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.—**திருவள்ளுவர்**

**வாழ்வின் இரு கூறு**

உலகிலுள்ள வாழ்வு முறைகளை இருகூறாகப் பிரிக்க லாம். ஒன்று அஹிம்சா தர்ம வாழ்வு; மற்றொன்று ஹிம்சையெனும் அதர்ம வாழ்வு. முன்னையது சமய வாழ்வு; பின்னையது உலகாயத வாழ்வு. சமய வாழ்வு என்பது அஹிம்சாதர்ம வாழ்வன்றி வேறு வாழ்வன்று. அஹிம்சா தர்மத்தில் எல்லாத் தர்மங்களும் அடங்கும். அதனால் அத்தர்மம், 'பரமோ தர்ம:' என்று போற்றப்படுகிறது. உலகாயத வாழ்வாவது சத்துடன் கொண்டுள்ள தொடர்பை யுணராது வாழ்வது. இது மனிதனுக்குரிய வாழ்வன்று. மக்கள் இவ்வாழ்வில் வீழாதவாறு அவர் களைக் காக்கச் சமய வாழ்வில் நின்ற பெரியோர் எச் சரிக்கை செய்திருக்கிறார். 'உலகாயதமெனும் ஒண்டிறற் பாம்பு' என்றார் மணிவாசகனார். 'தரணி மிசை உலகா யதன் சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதி மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின் வாழ்வித்த ஞான குருவே' என்றார் தாயு மானார்.

**அஹிம்சையே சமயம்**

உலகில் தோன்றிய மெய்ஞ்ஞானிகள் அனைவரும் எவ்வுயிரையும் தம்மைப்போல் கருதி வழிபடுஞ் சமய வாழ்வையே அறிவுறுத்திப் போந்தனர். 'தன்னுயிரைப் போல் பிற உயிரைப் பாவித்தல் வேண்டா' என்று எச்சமய மாதல் சாற்றுகிறதோ? இல்லையே. எச்சமயத்தை எடுத்து ஆராய்ந்தாலும், அதன்கண், 'அஹிம்ஸா

பரமோ தர்ம:' என்னுங் கொள்கை மிளிர்தல் காண லாம். இவ்வறத்தை அறிவுறுத்தாத சமயம் சமய மாகாது. அதனைச் சமயம் என்னும் பெயரால் அழைத் தலுங் கூடாது. உலகிலுள்ள சமயங்களெல்லாம் ஒரு முகமாக அஹிம்சா தர்மத்தை வலியுறுத்துவது பெரி தும் ஆராயத்தக்கது. பெயரளவில் சமயங்கள் பலவாயிலங் கினும் அஹிம்சா தர்மமெனுங் கொள்கையில், அவை யாவும் ஒன்று பொளிர்வதன் நுட்பத்தை உன்னுதல் வேண்டும். இந்நுட்பத்தை உன்னி உணர்ந்து தெளிந் தோர்க்குப் பல சமயத் தோற்றமே நிகழாது. அவர்க்கு அஹிம்சா தர்மம் என்னும் ஒரே சமயம் புலனாகும்.

தர்மம் என்பது அஹிம்சையை உணர்த்துவது. இதுபற்றி அஹிம்சா தர்மம் என்னும் வழக்குப் பிறந்தது. சமயம் அஹிம்சா தர்மமெனில் சமயத்தையும் தர்ம மென்று கூறலாமன்றோ? சமயம் தர்மமென்பது பண்டைய ஆட்சி. ஒரே தர்மத்தை அறிவுறுத்துஞ் சமயங்களுள் பூசல் விளைவானேன் என்று சிலர் வினவ லாம். இக்குற்றம் சமயங்களின் பெய ரால் பூசலில் தலைப்படும் மக்கள்மீது சுமத்தப்படவேண்டுமேயன்றிச் சமயங்கள்மீது சுமத்தப் படலாகாது. சமயமாவது சத்தெனுஞ் செம்பொருட் டொடர் புணர்ந்து மக்கள் வாழும் நெறியென்றும், அஃது அஹிம்சா தர்ம வாழ்வென்றும் மேலே சொல்லப்பட் டிருத்தல் காண்க. அஹிம்சை யாவது, பகைமை பொறாமை காழ்ப்பு முதலியவைகளைக் கடந்து நிற்பது. அவ்விடத்தில் போர் ஏது? பூசல் ஏது?

**சமயப் போர்**

சத்துக்கும் தமக்கும் உள்ள தொடர்பை உணராத சிலர், சமயமென்னும் பெயரால், நூல்களிலுள்ள

எழுத்து, குறிக்கப்பெற்ற சில வடிவம், சின்னம் முதலிய அசத்துக்களைப் பொருளாக்கொண்டு, 'உன் தெய்வம் என் தெய்வம்' என்று உயர்வு தாழ்வு கற்பித்து வாதப் போரிடுகின்றனர். அன்னார், பகைமை பொறாமை முதலிய தத்துவக் காரியங்களைக் கடந்தொளிரும் அன்பை - அருளை - சத்துப் பொருளை வழிபடுவோ ரல்லர். அவர், பகைமை பொறாமை முதலிய பேய்களை வழிபடுவோரே யாவர். அவரையும் உலகாயத வாழ் வினர் என்று கூறுவது பிழையாகாது.

சமயம் சமயம் என்று சமய வேடந்தாங்கி நடிப் போர் அனைவருஞ் சமய வாழ்வுடையோராகார். சத் தெனுஞ் செம்பொருட் டொடர் புணர்ந்து, அஃது எங்கும் பொலிதல்கண்டு, எவ்வுயிர்க்குந் தீங்கு மனத்தி லுங் கருதாத செம்மையாளரே சமய வாழ்வுடையார் என்று ஒரு முறைக்குப் பன்முறை திருப்பித் திருப்பி வலியுறுத்துகிறேன். இச் செந்நெறியில் நின்றோர், நாடு களுக்கேற்ப, மொழிகளுக்கேற்ப, ஆங்காங்குள்ள மக்கள் வழக்க ஒழுக்கங்கட் கேற்பக் கடவுள் பெயர் - முறைகள் முதலியன வகுத்துச் சென்றார். அவைகளைத் துருவி ஆராய்ந்தால், கடவுள் என்று சொல்லப்படுவது யாண்டும் நிறைந்

**சமரசம்**

துள்ள அன்புப் பொருளென்பதும், அதை அடைதற் குரிய வழி அஹிம்சா தர்மமெனும் அருளெறி என்ப துஞ் செவ்வனே விளங்கும். இதைப்பற்றி என்னால் இயற்றப்பெற்ற 'சைவத்தின் சமரசம்', 'சன்மார்க்க போதம்' முதலிய நூல்களில் விரித்துக் கூறியுள்ளேன். சைவம், வைஷ்ணவம், பௌத்தம், ஜைனம், கிறிஸ்துவம்,

இஸ்லாம் முதலிய எச்சமய வாழ்வில் நின்றொழுகினும், அச்சமயம் அஹிம்சா தர்ம மயமாக விளங்குதல் காணலாம். கிருஷ்ணன், புத்தர், கிறிஸ்து, மகம்மது, ஆழ்வார், நாயன்மார் முதலிய பெருங் குரவர், குறிப்பிட்ட ஒரு கூட்டத்தவர்க்கே உரியவரெனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. அவர் அனைவரும் மன்பதைக்குரிய ஒரு கடவுள் நெறியையே அறிவுறுத்திச் சென்றவர்.

வாது செய்து மயங்கு மனத்தராய்
யாது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதேவ னலால் தேவர்மற் றில்லையே. —திருநாவுக்கரசர்

எங்குவந் துறுகோ என்னையாள் வோனே
ஏழுல கங்களும் நீயே
அங்கவர்க் கமைத்த தெய்வமும் நீயே
அவற்றவை கருமமும் நீயே
பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்
அவையுமோ நீயின்னே யானால்
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே
வான்புல னிறந்ததும் நீயே. —நம்மாழ்வார்

பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே யென்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவுங் கண்டபோ தொன்றாஞ் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந் தானே.
—திருமங்கையாழ்வார்

தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவந் தானே
தமருகந்தது எப்பேர்மற் றப்போ—தமருகந்தது
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னும். —பொய்கையாழ்வார்

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

ஆன சமயம் அதுவிது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே. —திருமூலர்

சமய பேதத்தவர்க் கணுகொணு மெய்ப்பொருள்.
—அருணகிரிநாதர்

வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கும்பரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.

தர்க்கமிட்டுப் பாழாஞ் சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தென்னாளோ.

கண்ட விடமெல்லாங் கடவுள்மய மென்றறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற்
[கொண்டிருப்ப தென்னாளோ.—தாயுமானுர்

எவ்வகைச்சார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்

ஐவகைய பூதவுடம் பழிந்திடிலென் புரிவீர்
அழியுடம்பை அழியாமை யாக்கும்வகை அறியீர்
உய்வகைஎன தனிதந்தை வருகின்ற தருணம்
உறறிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவந்தே.
—இராமலிங்க சுவாமி

இத்திருவாக்குகளை நோக்குழிக் கடவுள் ஒருவ
என்பதும், அவரை அடைதற்குரிய நெறியும் ஒன்
என்பதும், அந்நெறி அருணெறி என்பதும் இனி
புலனாகும்.

உண்மை இவ்வாறாக, உலகில் ஏன் பல பெயர
பல சமயங்களிருத்தல் வேண்டும் என்று வினவுவே
ரிருக்கிறார். நீர் என்னும் ஒரு பொருள் எத்தனை
மொழியில் எத்துணையோ பெயர் பெற்றிருக்கிற
அதுபோல அஹிம்சா தர்மமென்னுஞ் சமயநெறி
வேறு பெயர் பெற்றிருக்கிறது. பெயர் பலவாயினு
பொருள் ஒன்றே. பொருளொருமை உணராது, ப
பரைப் பழக்க வழக்கத்தாலோ, சிற்சிலர் கூட்டுறவாலே
வேறெதனாலோ அவ்வச்சமயத்தார் என்று சொல்
பிணங்குவோர் சமய வாழ்வில் நிற்பவரல்லர்.
சமயத்தில் எவரிருப்பினும் அவர் ஜீவகாருண்யமுடை
வராயிருத்தல்வேண்டும். 'தன்னுயிரைப்போல் மன்னு
என்னும் அருளறங் கைவரப்பெறாது, சில புற அ
யாளம் பூண்டு, 'யான் இச்சமயத்தான்-அச்சமயத்தா
என்று சிலர் சொல்லிக்கொள்வதுஞ் சமயஞானம் பெ
தாகாது. 'இச்சமயம்-அச்சமயம்' என்பன யாவும் க
அட்டவணைச் சமயங்களேயாகும். கடவுள் கணிதத்
பதிந்துள்ள சமயம் ஒன்றே. அந்நெறி அருள் நெ

அந்நெறி நில்லாது வேறெக்கோலம் பூண்டு பூசை முதலியன செய்யினும் அச்செய்கை சமயத்தின்பாற் படுவதாகாது.

சமய வாழ்வென்பது எளிதன்று. மனிதன் பல திற வாழ்வெனுங் கடல்களினின்றும் நீந்தி நீந்திச் சத்தென்னுஞ் செம்பொருளுண்மை கண்டு, அது தன்னுடன் தொடர்பு கொண்டுள்ள சமயமெனுங் கரையேறல் எவ்வளவு அரிது என்று சொல்லவேண்டுவதில்லை.

* * * * தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுக டோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி * * *

என்று மாணிக்கவாசகனார் அருளியது காண்க.

மனிதன் தன்பாலுள்ள விலங்கு நீர்மைகளைக் களையவல்ல வாழ்வு முறைகளைக் கொண்டொழுகல்வேண்டும். மனிதனை, விலங்கு தன்பக்கல் ஈர்க்கும் ; தெய்வம் தன்பக்கல் ஈர்க்கும். இப்போராட்டத்திடைத் திகைக்கும் மனிதன் தெய்வத்தின் பக்கமே சார்ந்து நிற்க முயலல் வேண்டும். அம்முயற்சியில் தலைப்படும் அன்பனுக்கு ஆண்டவனது அருள் துணைபுரியக் காத்துக்கொண்டிருக்கிறது. பின்னை அதன் துணையால் விலங்கு நீர்மைகளை அறவே கல்லிவிடலாம். இதற்குச் சரியை கிரியை யோகம் முதலிய வழிபாடுகள் நூல்களிற் சொல்லப் பட்டிருக்கின்றன.

**தெய்வமும் விலங்கும்**

மனிதன் தனது வாழ்நாளில் நாடோறுஞ் சில அற ஒழுக்க முறைகளை ஏற்று, ஒல்லும் வகை அவைகளைச் செயலில் நிகழ்த்த முயன்றுவரின், அவன் சமய வாழ்வு பெறுதல் கூடும். மனிதன் முதலாவது பொய்க்கு அஞ்சி நடக்கப் பழகல் வேண்டும் ; இரண்டாவது நாச்சுவை அடக்கும் பயிற்சி பெறல்வேண்டும் ; மூன்றாவது புறங்கூறலை நிறுத்த முயலல்வேண்டும் ; நான்காவது ஈகைத் தன்மையைப் பெருக்கல்வேண்டும் ; ஐந்தாவது தான் செய்யும் பிழை குறித்து வருந்தி வருந்தி, மீண்டும் அப்பிழை தன்பால் உறாதவாறு ஆண்டவனை நோக்கி வழுத்தல் வேண்டும்.

**படிகள்**

குற்றமுணர்ந்து வருந்தும் பயிற்சி சமய வாழ்விற்குக் கால்கொள்வதென்பது பெரியோர் கருத்து. மனிதன் குற்றஞ் செய்யும் சீரன் என்பதில் ஐயமில்லை. மகன்

தான் செய்யுங் குற்றங்குறித்து நாடோறும் வருந்தும் பயிற்சி பெறுவானாயின், அவன்பாலுள்ள தெய்வம் அவனுக்குத் துணைபுரிந்து அவனைத் தன் மயமாக்கிக் கொள்ளும். நிகழ்த்தும் பிழை குறித்து வருந்தாதொழியும் மனிதன், தன்பாலுள்ள தெய்வத்தை மறந்து, விலங்குணர்விற்காளாகி, விலங்காகி, அருளிழந்து, இன்னா செய்தலையே தன் கடனாகக் கொள்பவனாவன். மனிதன் பிழையுணர்ந்து வருந்தும்போது சமய வாழ்வில் தோய்பவனாகிறான். அப்பயிற்சியால் பின்னைப் படிப்படியாக அவன் தன்னை முற்றுஞ் சமய வாழ்வுடையவனாக்கிக் கொள்வன்.

**சமய வாழ்வு எல்லார்க்கும் உரியது**

சமய வாழ்வு மிக அரியதொன்றாகலின், அது துறவறத்தார்க்கு உரியதென்றும், மற்ற உலகியலார்க்கு உரியதாகாதென்றுஞ் சிலர் சொல்ல யான் கேட்டிருக்கிறேன். இது முற்றுந் தவறு. சமயவாழ்வென்பது மனிதனுக்கு உரிய உலகியலினின்றுந் தனித்து நிற்பதன்று. அது மனிதனது உலக வாழ்வுடன் ஊடுருவி நிற்பது. உலகம், உலகியல், இதனோடியைந்த வாழ்வு என்பன எங்கும் நிறைந்துள்ள இறைவனுக்கு வேறாக நிற்பனவல்ல.

யானுநீ தானே யாவதோர் மெய்யே
அருநர கவையு நீயானல்
வானுயர் இன்ப மெய்திலென் மறறை
நரகமே எய்திலென் எனினும்
யானும்நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்
அஞ்சுவன் நரகம்நான் அடைதல்
வானுயர் இன்பம் மன்னிவீற் றிருந்தாய்
அருளுநின் தாள்களை எனக்கே

எனவரூஉம் நம்மாழ்வார் திருவாக்கு நரகிடையும் ஆண்டவனுண்மையைக் குறித்தல் காண்க. ஆண்டவனுக்கு வேறாக எத்தொழிலுமில்லை; எச்செயலுமில்லை; எவ்வாழ்வுமில்லை ; எதுவுமில்லை. 'எல்லாம் என்னால்' என்னும் முனைப்பின்றி, 'எல்லாம் ஆண்டவனால்' என்று, அவன் வழி நிற்போர்க்கு உலக வாழ்வு சமய வாழ்வு என்னும் வேற்றுமை ஏது ? அன்னார் வாழ்வு முற்றுஞ் சமய வாழ்வேயாகும்.

இவ்வாழ்வு பெற்றோன் சந்நியாசியா யிருத்தல் வேண்டும் என்னும் நியதியில்லை. அவன் எத்தொழிலுஞ் செய்யலாம் ; எவ்வேடமுங் கொள்ளலாம் ; எந்நிலையிலுமிருக்கலாம். அவன் தொழில் முதலியவற்றில் அன்பு, அருள், நீதி, ஒழுக்கம், உண்மை முதலியன செறிந்தே நிற்கும். விரிவு சமயநூல்களிற் காண்க. சமய வாழ்வில் தலைப்பட்ட ஒருவனுடைய இயல்புகளை ஈண்டுச் சில உரைகளால் சுருக்கிக் கூறல் நலமெனத் தோன்றுகிறது.

**சமய வாழ்வினன் இயல்பு**

சமய வாழ்வினன், 'நான் எங்ஙனம் உலகில் வாழ்வேன்' என்று தன் வாழ்வு கருதி நடக்கிறான் ; தன் வாழ்வு கருதிப் பிறரைத் துன்புறுத்தான் ; பிறர் உடைமையைக் கவரான் ; பிறரை ஏமாற்றப் பொய் பகரான் ; எக்காரணம்பற்றியும் பிறரைத் துன்புறுத்தாது, பிறர் துன்பஞ் செய்யினும் அதை இன்போடு ஏற்றுப் பொறுப்பன்; பிறர் குற்றம் பாராட்டிப் புறங் கூறான் ; தன் குற்றங் குறித்து ஆண்டவனை நோக்கி அழுது அழுது உருகுவன்; பிறர் குற்றத்தை மன்னிப்பதில் கண்ணுங் கருத்துமா

யிருப்பன் ; பெண்மக்களைக் காமப் பொருளாகக் கருதான் ; 'பற்று பற்று' என்று உலகைத் துறந்து ஓடான் ; உலகிலிருந்தே தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வன் ; கடனுற்றியவண்ண மிருப்பன் ; எதற்கும் எவர்க்கும் அஞ்சான் ; கடவுளொருவர்க்கே அஞ்சுவன் ; எதையும் எவரையும் கடவுள் வடிவாக் கண்டு வழிபாடு செய்வன் ; சுருங்கக் கூறின் தனது மனச்சான்று வழி நடப்பன் என்னலாம்.

சின்னந் தரித்தல், கோயில் போதல், பூசை செய்தல் முதலியனமட்டுஞ் சமய வாழ்வாகா. நாடோறும் இவைகளை ஒருபோழ்து குறைவற ஆற்றிப், பெரும் பொழுது பொய் சொல்வதிலும், பிறர் பொருள் கவர்வதிலும், இன்னோரன்ன பழிபாவச் செயல்களிலும் ஒருவன் கண்ணுங் கருத்துமாயிருப்பது எங்ஙனஞ் சமய வாழ்வாகும்? இத் தீமைகளினின்றும் விலகி வாழ்வது சமய வாழ்வாகும்.

சத்தெனுஞ் செம்பொருட்டொடர்புணர்த்துஞ் சமயம் உலகில் பலதிறப் பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது. புறப்பெயர் வழக்குகள் மனிதரை மயக்கிச் சிலசமயம் போரில் செலுத்தவுஞ் செய்கின்றன. இனிவரும் உலகம், பொருளொற்றுமை யுணர்த்தவல்ல ஒரு பெயரைக்கொள்வது அன்பு வளர்ச்சியை நாடுவதாகும். சத்துடன் தொடர்புகொண்டு நிற்பதை நமது நாட்டுப் பெரியோர் சத்மார்க்கம் என்று கூறிப்போந்தனர். சத்தென்னுஞ் சொல்லும், மார்க்கமென்னுஞ் சொல்லும் புணரும்போது சன்மார்க்கம் என்பது பெறுகிறோம். சத்துடன் தொடர்புகொள்வதை நேரே சன்மார்க்கம் என்று வழங்கினுல் உலகில் சமயப் போர்கள் பெரிதும் ஒழியலாம்.

சத்மார்க்கம்

சன்மார்க்கம் என்னும் வழக்குப் புதியதன்று. அது தொன்றுதொட்டு வழங்கி வருவது. அஃது ஆன்றோர் ஆட்சி பெற்றிருப்பதற்குச் சில சான்றுகள் காட்டுகிறேன்.

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சுங் கசியக் கசிவித்
தொசியாத உண்மைச் சொருபோ தயத்துற
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.

—திருமூலர்

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்.

—தாயுமானர்

எய்த எளிதாம் இறையருள் இல்லையேல்
எய்த அரிதா மியாவர்க்கும்—மெய்தெளிந்தால்
எம்மார்க்கத் தோடும் இகலற் றிருக்குமதே
சன்மார்க்கம் ஆகுநெறி தான். —அமுதசாரம்

மார்க்கமெலா மொன்றாகு மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலா நீக்கித் துணிந்துளத்தே—எக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீரிந் நாள்.

பன்மார்க்க மெல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்க மொன்றே தழைத்ததுவே—சொன்மார்க்கத்

தெல்லா வுலகு மிசைந்தனவே யெம்பெருமான்
கொல்லா நெறியருளைக் கொண்டு.

தயையுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே யிங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருணெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகவென் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உயலுறுமென் னுயிர்க்கினிய வுறவேயென் னறிவில்
ஓங்கியபே ரன்பேயென் னன்பிலுறு மொளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே.

அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே யாதலினா லவருடனே கூடித்
தெருளுடைய அருணெறியிற் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரு மொளியே
மருளுடையார் தமக்குமரு ணீக்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேயென் மாலையுமேற் றருளே.

—இராமலிங்க சுவாமிகள்

சத்துடன் ஆக்கிரகித்து நிற்கும் சமய வாழ்வு, மனித வாழ்க்கையில் பெறத் தக்கனவற்றுள், முடிந்த தொன்றாகலான், யான் எடுத்துக்கொண்ட மனித வாழ்க்கைக்கு இலக்கியமாக விளங்கும் மகாத்மா காந்தி வாழ்வில், அச் சமயவாழ்வு அரும்பிநிற்குந் திறத்தின்மீது கருத்தைச் செலுத்தவேண்டுவது எனக்குரிய கடமையாகும்.

மகாத்மா காந்தி பிறந்த சமயம் கூர்ஜர வைஷ்ணவம். கூர்ஜர வைஷ்ணவம் மிகக் கடுமையானதென்று சொல்லப் படுகிறது. காந்தியடிகளின் வைஷ்ணவம் எப்படிச் சமரசசன்மார்க்கமாகியது என்பதை ஆராய்ந்து பார்த்தல் நலம். அவ்வாராய்ச்சி இக்காலத்துக்கு இன்றியமையாதது.

**காந்தியடிகள் சமயம்**

தாய் தந்தையர் எச்சமயத்தில் நிற்கிறாரோ அச்சமயத்தில் பிள்ளைகளும் நிற்பது வழக்கம். சிலர் மரணம் வரை அச்சமயத்தையே கடைப்பிடித்து நிற்பர். சிலர் ஆராய்ச்சியில் நுழைந்து தமது உள்ளம் விரும்பும் ஒரு சமயத்தில் புகுவதுண்டு. ஒருவன் தெளிவின்றிப் பரம்பரை வழக்கத்தையொட்டி வெறும் அனுட்டானங்களைப் புறத்தில் செய்யும் அளவோடு நின்று விடுவதும், ஒரு சமயம் பொய்யென்று மற்றொரு சமயம் புகுவதும் போற்றற்குரியனவல்ல. மைந்தன் தான் பிறந்த சமயத்திலிருந்துகொண்டே, கற்றல் கேட்டல் சிந்தித்தல் தெளிதலால், அச்சமயமே எல்லாச் சமயங்களாவும் இருப்பதைக் காண்டல்கூடும்.

வைஷ்ணவ சமயத்தில் பிறந்த ஓருரிமையால் ஒருவன் வைஷ்ணவனாகான். அவன் யாண்டும் நிறைந்துள்ள சத்தாம் விஷ்ணுவுடன் தொடர்பு கொண்டு, அப்பொருளை எங்குங் கண்டு போற்றுநிலை பெறுவனேல், அவன் உண்மை வைஷ்ணவனாவன்; இல்லையேல் அவன் பெயரளவில் வைஷ்ணவனாகவே யிருப்பன். சத்தெனுஞ் செம்பொருளை விஷ்ணு என்று வைஷ்ணவர் போற்றுவதுபோல அப்பொருளை மற்ற மற்ற சம

யத்தாரும் ஒவ்வொரு பெயரால் போற்றுகிறார். 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலா' ஒன்றை எந்நாமத்தால் போற்றினாலென்ன? எவ்வுருவங் கொண்டு ஏத்தினாலென்ன? மகாத்மா காந்தி தாம் பிறந்த வைஷ்ணவ சமயத்தை எச்சமயத்திலுங் காணும் பேற்றை நாளடைவில் பெறலாயினர். அப்பேற்றைப் பெறுதற்கு அவரது தாய் தந்தையர் நிலை, இளமை வாழ்வு, இல்வாழ்க்கை, பின் வாழ்விலுற்ற தியாகம், அவர் கொண்ட அருளறம், கண்ட உண்மை, அடைந்த அநுபவம் முதலியன படிப்படியே அவர்க்குத் துணை செய்தன.

காந்தியடிகளின் தாய் தந்தையர் தெய்வபக்தியிற் சிறந்தவர். அவர் தமது வைஷ்ணவத்தைக் குறுகிய ஓர் இருட்டறையிலிட்டுப் பூட்டி, அவ்விடத்திருந்து மற்ற இடங்களைக் காணாது கிடக்கவில்லை. அவர்க்குச் சமரச நோக்குண்டு.

> 'என்னை ஈன்றோர் விஷ்ணு கோயிலுக்குச் செல்வது போலவே சிவபெருமான் இராமபிரான் கோயில்களுக்குஞ் செல்வர். ஜைன குருமார் என் வீட்டுக்கு அடிக்கடி வருவர். என் தந்தையார்பால் அவர் உரையாடுவர். முஸ்லிம்களும் பார்ஸிகளும் என் தந்தையார்க்கு நண்பர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் சமய உண்மைகளைச் சொல்வார்கள். என் தந்தையார் அன்போடு அவர்கள் மொழிகளைச் செவிமடுப்பார். தந்தையார்க்குப் பணி செய்யும் நேரங்களில் அச்சமய உரையாடல்களை யானுங் கேட்பதுண்டு. இதனால் எனக்குச சமயப் பொறை உண்டாயிற்று.'

'காந்தி குடும்பத்தார் வைஷ்ணவ விரதங்களை மட்டுங் கொண்டொழுகுவோரல்ல. அவர் சைவ நோன்பு

களையும் ஏற்றெழுகுவோர். அவர் திருமால் கோயி லுக்கும் போவா ; சிவன் கோயிலுக்குஞ் செல்வர். அக் குடும்பத்தினர் சிராவண மாத முழுவதும் பிரதோஷ விரதம் அனுட்டிப்பர். யானும் அவ்வாறே செய்ய உறுதி கொண்டேன் '

என்று காந்தியடிகள் தமது வரலாற்றில் சமரசத்தை விளக்கியிருத்தல் காண்க. இவ்வுரைகளான் காந்தியடி கள் வாழ்வு, சமய வாதத்தில் தொடங்கப்படவில்லை யென்பதும், சமரசத்தில் தொடங்கப்பட்ட தென்பதும் அறியற்பாலன.

காந்தியடிகள் நல் வைஷ்ணவ சமயத்தில் தோன்றி யும், சமயப்பற்றுடையார் வயிற்றிற் பிறந்தும், அவரது இளமை வாழ்வு, சிலபோழ்து சிறிது உலகாயத மதத் தில் வீழ்ந்தே கிடந்தது. அப்பருவம் சத்தெனுஞ் செம்பொருட் டொடர்புணராது தாய் தந்தையர் கடைப்பிடித்த ஒரு சமயத்தில் பெயரளவில் பற்றுக் கொண்டிருந்த இளமையது. இருந்தாலும் அடி களின் முன்னைத்தவம் அவரை உலகாயத வாழ்வில் அழுத்தாது காத்து வந்தது. காந்தியடிகளின் பின்னைய சமயப் பெருவாழ்விற்குத் துணை நின்றது அவர் இளமையிலேயே பொய்ம்மைக்கு அஞ்சிய பெருந் தன்மையாகும். ' பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற - செய்யாமை செய்யாமை நன்று ' என்று திருவள்ளுவரும், ' பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே ' என்று தாயுமானுரும் திருவாய்மலர்ந்தரு ளிய மெய்ம்மொழிகளை நோக்குக. வாய்மையில் உறுதி யுடையார் பெரிதும் பாவங்கட்கு ஆளாதல் அரிது.

அடிகளின் இளமை வாழ்வில் அரும்பிய வாய்மை பின்னை அவரைக் கடவுள் நெறியில் நிறுத்தி ஆண்டது.

தீக்கோள் காந்தியடிகளின் இளமையில் தீ நட்புக் காரணத்தால் புலால் உண்டதும், அன்னையார்பால் அதைக் கரந்து கூற மனமெழாது அதை விடுத்ததும் 'பெற்றோர்ப் பேணல்' என்னுந் தலைப் பின்கீழ் எடுத்துக் காட்டப்பட்டன. காந்தியடிக ளிடத்திருந்த விலங்கு நீர்மை, 'புலால் உண்' என்று ஏவிற்று; அவர்பாலுள்ள தெய்வத் திருவருள் 'வாய்மை கா' என்று பணித்தது. இடையில் நின்ற அடிகள் எவ்வழிச் சாய்ந்தார்? இங்கேதான் மனிதனுக்கு உரிமை உணர்வு உண்டு என்பது உன்னற்பாற்று. அடிகள் தெய்வ ஒலிக்கே செவி சாய்த்தார். தெய்வ ஒலிக்குச் செவி சாய்க்கும் பெருந்தகைமை நாளடைவில் மனிதனைத் தெய்வ மாக்கும். தெய்வ ஆணையைமீறி விலங்குணர்வுக்கு இடந் தந்து வாழ்வு நடாத்தினல், ஐயோ! மனிதன் விலங் காவன். அவன்பாலுள்ள தெய்வம் அவனுக்கு விளங் கித் தோன்றுது. அப்பாவி ஏன் பிறந்தான்? வாய்மை, காந்தியடிகளை உலகாயத வாழ்வினின்றுந் திருப்பிச் சமய வாழ்விற்குள் புகுத்திய திறத்தை மனவுணர்வால் ஓர்தல் வேண்டும்.

அடிகள் பலதிறச் சோதனைகட்கு உட்பட்ட வேளை களிலெல்லாம், அவர் பெரிதும் பேயொலிக்குச் செவி சாயாது, தெய்வ ஒலிக்குச் செவி சாய்த்து, நன்னெறி பற்றிய நிகழ்ச்சிகள் இந்நூற்கண் பொருந்திய இடங்

களில் ஆங்காங்கே பொறிக்கப்பட்டுள்ளன. ஈண்டொரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. காந்தியடிகள் இங்கிலாந்திற் படிக்கச் சென்றிருந்த வேளையில் ஓரம்மையார் வீட்டுக்கு அவர் அடிக்கடி போவது வழக்கம். அவ்வீட்டிலிருந்த ஒரு பெண்ணை அடிகட்கு மணஞ் செய்விக்க வேண்டுமென்ற நோக்குடன் அவ்வீட்டுக் கிழவி அடிகளிடம் உரையாடுவதுண்டாம். அதைக் குறிப்பாலுணர்ந்த அடிகட்குச் சோதனை நேர்ந்தது. அடிகள் பேய்க்கு இரையாகாது கடவுள் வழியே நின்றார். தமக்கு மனைவி மக்கள் இந்தியாவிலுள்ளார்களென்றும், மீண்டுமொரு மணத்தில் நுழைதல் அறமன்றென்றும் அடிகள் ஒரு முடங்கல் தீட்டிக் கிழவிக்கனுப்பினார். எவ்விடத்தில் எந்நிலையில் அடிகள் தெய்வ ஒலிக்குச் செவி சாய்த்தார் என்பது கருதற்பாற்று.

பாவத்துக்கு அஞ்சுவதோடு செய்த பாவத்தைக் குறித்து வருந்தி அறிக்கையிடுவது ஒருவரது வாழ்வைத் தூய்மைப் படுத்தும். பாவத்தை முறையிடும் அஞ்சாமை அடிகளின் இளமை வாழ்விலேயே நிலவியிருந்தது. அடிகள் தந்தையாரிடஞ் செய்துகொண்ட பாவ அறிக்கையைப் 'பெற்றோர்ப் பேண'லில் பார்க்க. 'சொல்லப்படாத பாவம் மன்னிக்கப்படாது' என்பது பைபில் மொழி. பாவத்தை மறைப்பவன் பாவத்தை வளர்ப்பவனாவன். காந்தியடிகள் பதினாறு வயதிலேயே பாவத்தை வெளியிடும் உறுதியும் அஞ்சாமையும் பெற்றது அவரைப் பின்னை சமய வாழ்வில் நிறுத்திற்றென்க.

அடிகள் தீயோர் கூட்டுறவால் முதல் முதல் விலைமகளிரில்லம் போந்து கூசத்தால் அவள்பால் வசை

கேட்டுத்திரும்பினர். கூசம் என்பது மக்களிடத்து இருக்கத்தக்க நறுங்குணங்களுள் ஒன்று. அஃது உற்ற சமயத்தில் உறுதுணை செய்வது எனக்குத் தெரியும். இதையும் அடிகள் தம் வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவைகள் அடிகளின் இளமை வாழ்வில் நுழைந்த பாவச் செயல்கள். அவரது இளமையில் நுழைந்த நற்செயல்களில் இரண்டொன்றை ஈண்டுக் குறிக்கிறேன். காந்தியடிகள் இளமையில் பாடபுத்தகங்கள் தவிர மற்ற புத்தகங்களைப் பெரிதும் படிப்பதில்லை. எவ்வாறோ தற்செயலாக ஒரு முறை அவருடைய தந்தையார் படிக்கும் 'சிரவண பித்ரு பக்தி நாடகம்' என்னும் நூல் அவருக்குக் கிடைத்தது. அந்நூலிலுள்ள வரலாறு குறிக்கும் படத்தையும் அடிகள் பார்த்தல் நேர்ந்தது. அப்பொழுது அடிகள், 'மனமே! நன்னடைக்கு இஃதோர் எடுத்துக்காட்டு' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டாராம். காந்தம் இரும்பை ஈர்ப்பது போலத் தூய மனம் நன்மையை ஈர்க்குமன்றோ?

**நற்கோள்**

காந்தியடிகள் ஒரு முறை அரிச்சந்திர நாடகம் பார்க்கப் போந்தனர். அந்நாடகக் காட்சி காந்தியடிகள் அகத்தில் நன்கு பதிந்தது. 'அரிச்சந்திரனைப்போல ஏன் எல்லாரும் சத்தியவான்களாக வாழ்தல் கூடாது' என்று அடிகள் இரவுபகல் இடையீடின்றித் தம்மைத் தாமே கேட்பாராம்.

மற்றொன்று ஒரு கூர்ஜரப் பாட்டு. அதன் கருத்தைச் 'சத்தியாக்கிரகத்' தலைப்பின் கீழ்க் காண்க.

நம் முன்னோர் நாடகங்களையும் பாட்டுக்களையும் எற்றுக்கு யாத்தனர் என்பதன் நுட்பத்தைக் காந்தி

யடிகள் வாழ்வு தெரிவிக்கிறது. இந்நாளில் காம நாவல்களும் தூர்த்த நாடகங்களும் மலிதலால் மக்கள் வாழ்வு கெட்டு வருகிறது. இஃது இருபதாம் நூற்றுண்டாம்! உயர்ந்த நாகரிகமாம்! இது கிடக்க, 'சிரவணன் நாடகம்' 'அரிச்சந்திரன் நாடகம்' என்னும் இரண்டும், பல்லூழி காலம் முயன்று முயன்று பெறத்தக்க ஒன்றைக் காந்தியடிகளுக்கு எளிதில் நல்கினமை கவனிக்கப்படல் வேண்டும். இச்சிறப்பு அந்நாடகங்கட்கா? காந்தியடிகளின் பண்பட்ட மனத்திற்கா? அன்பர்களே! ஆராயுங்கள்.

காந்தியடிகள் பதினாறு வயதுவரை அன்புச் சமய உணர்வின்றி வாழ்ந்தாரென்றும், அவ்வுணர்வு யாண்டும் அறிவுறுத்தப்படவில்லையென்றும் அவரது வரலாற்றில் அவரே சொல்லியுள்ளனர். ஈண்டுச் சமயமென்பது வெறும் ஏட்டுச்சமயத்தையன்று; நெற்றியில் குறி பொறித்தல் - கோயில் போதல் - முதலியவற்றையுமன்று. 'சமயம் என்பதைச் சுவாநுபூதி என்னும் உயரிய பொருளில் ஈண்டுக் குறிப்பிடுகிறேன்' என்று அடிகளே தமது வரலாற்றில் எழுதியிருக்கிறூர்.

**சமய உணர்வுங் கோயில் முதலியனவும்**

காந்தியடிகள் தர்க்க நூல்களையும், பேருரைகளையும், வேறு பல விரிந்த பனுவல்களையும் ஆராய்ந்து பண்டிதராக விரும்பினூரில்லை. அநுபூதி நிலையையே அவர்வேட்டு நின்றூர். அவ்வேட்கை மேலீட்டான் அவர் கோயிலுக்குச் சேவை செய்யச் சென்றூர். அதைப்பற்றி அடிகள்,

'வைஷ்ணவ சமயத்தில் தோன்றிய யான் விஷ்ணு கோயிலுக்குப் போய்வந்தேன். அக்கோயில் வழிபாடு

என்னைத் தன் வயப்படுத்தவில்லை. அங்கே படாடோப மும் ஆரவாரமுமன்றி வேறொன்றுமில்லை. அவ்விடம் தீயொழுக்கத்துக்கு நிலைக்களன் என்றுங் கேள்வியுற் றேன். கோயில் பற்று ஒழிந்தது. அங்கே அடைய வேண்டுவது ஒன்றுமில்லை என்று உணர்ந்தேன் '

என்று கூறியிருக்கிறார்.

தற்கால ஹிந்து கோயில்களைப்பற்றி அடிகள் இழித்துக்கூறிய உரைகள் பற்பல. 1927-ம் ஆண்டு அடிகள் கதர்நிதி திரட்டத் தமிழ் நாடு போந்த வேளை யில், காரைக்குடியில், 'ஹிந்து கோயில்கள் வேசைய நில்லங்களாகி விட்டன' என்று கோயில்களை வெறுத்து உரைத்தார். கோயில்களில் வேசையர் நடம் புரிதல், வாணிபஞ் செய்தல் முதலிய இழிவுகள் காந்தியடிகட் குப் பிடிப்பதில்லை. சத்தெனுஞ் செம்பொருள் வேட்கை கொண்டுள்ளோர்க்குத் தற்காலக் கோயில்கள் ஆவண வீதிகளாகவும், கள்ளர் உறைவிடங்களாகவும், வேசையர் வீடுகளாகவுமே தோன்றும். காந்தியடிகள் கோயில் செல் வதை ஒழித்துவிட்டார்; நெற்றியில் குறி பொறித்தல் முதலியவற்றையும் ஒழித்தார். சுருங்கக்கூறின் சமயப் போலியை அவர் துறந்தார் என்று கூறலாம். அவர்க்குச் சத்தெனுஞ் செம்பொருளினிடத்தே மட்டும் நாளுக்கு நாள் மேலும் மேலும் வேட்கை முருகி முருகி எழுந்தே சென்றது. ஆனால் அவருக்கு முழு அநுபூதி நிலை கூட வில்லை. தமக்குப் பொய்யெனத் தோன்றுவதைப் பொய் யெனக் கொள்ளும் பெருநெறிமட்டும் அவருக்குப் புலனாகியுள்ளது. இது நாளடைவில் முழு அநுபூதியைக் கூட்டுதல் ஒருதலை.

ஓய்ந்த நேரத்தில் இராமாயணம், பாகவதம் முதலிய நூல்களை அடிகள் படிப்பார். ஒருமுறை அவரது தந்தையாரிடமிருந்த மனுஸ்மிருதி அவர் கண்முன் தோன்றிற்று. அதையெடுத்து அவர் படித்துப் பார்த்தார். அந்நூலைப்பற்றி அவர் கொண்ட கருத்து வருமாறு :—

**மூடபக்தி**

> ‘ மனுஸ்மிருதியைப் படித்தல் நேர்ந்தது. அதன்கண் உலகத் தோற்றத்தைப் பற்றியும் அதை யொட்டிப் பிறவற்றைப் பற்றியும் கூறியுள்ள பகுதிகளில் எனக்கு நம்பிக்கை விழவில்லை. அந்நூலைப் படித்ததின் பயனாகச் சிறிது நாத்திக உணர்வுகூட அரும்பிற்று. * * * * மனுஸ்மிருதி அஹிம்சா தர்மத்தைப் போதிக்கவில்லை. புலால் உண்ணலை அந்நூல் ஆதரிப்பதாகத் தோன்றிற்று. * * ’

காந்தியடிகள், அறிவிற்குப் பொருத்தமானவைகளையே கொள்வர்; பிறவற்றைக் கொள்வதில்லை. ‘ நமது வேதம், நமது பாஷை ’ என்னும் பற்றால் ஆபாசங்களை அடிகள் நம்புவதில்லை. காந்தியடிகட்குத் துளசிதாஸர் இராமாயணத்தில் தனியாக் காதலுண்டு. அதன்மாட்டு அவருக்குள்ள அன்பை அவர் பன்முறை வெளியிட்டிருக்கிறார். அந்நூலில் ஓரிடத்தில், ‘ பறை, சூத்திரர், மூடர், பெண்மக்கள் இவர்கள் அடிபடப் பிறந்தவர்கள் ’ என்னுங் கருத்தடங்கிய ஒரு சுலோகமிருக்கிறது. துளசிதாஸரது இராமாயணத்தின் மீதுள்ள பற்றால் காந்தியடிகள் மேற்போந்த கருத்தை ஏற்றுக்கொள்வரோ? ஏற்றுக்கொள்ளின் அது மூடபக்தியின்பாற்

படுவதாகும். காந்தியடிகள் மூடபக்தரல்லர். அது குறித்துக் காந்தியடிகள்,

'* * * இச்சுலோகத்தைப் பிரமாணமாகக் கொண்டு ஒருவன் மனைவியை அடிப்பானாயின், அவன் நிரயம் புகுவன். ஸ்ரீராமபிரான் மனைவியை அடித்ததுமில்லை; மனைவி மனம் சிறிது நோகுமாறு கடிந்ததுமில்லை. துளசிதாசர் நாளில் வழங்கிய ஒரு பழமொழியை நூலினிடை அவர் நுழைத்துவிட்டார். இதைக்கொண்டு மனைவிகளைப் புடைக்கும் விலங்குகள் இருக்குமென்று அவர் எண்ணியேயிருக்க மாட்டார். ஒருவேளை காலவழக்கையொட்டி, அவர் மனைவியை அடித்ததாக வைத்துக்கொள்ளினும், அவர் செயல் தவறுதலுடையது என்றே கோடல்வேண்டும். நாயகன் நாயகியை அடித்தல் நியாயமென்று அறிவுறுத்தவா இராமாயணம் எழுதப்பட்டது? ஆபாசக்கருத்துடைய சுலோகங்கள் இடை இடை காணப்படின், அவைகளை ஒதுக்கிவிடல் வேண்டும்.'

என்று அருளியுள்ளார். இன்னோரிடத்திலும் அடிகள் இதைக் குறித்துவிட்டு, 'நான் துளசிதாஸர் நேயன்; ஆனால் கண்மூடியாக நின்று அவரைத் தொழேன்' என்று உரைத்திருக்கிறார். 'கீதையில் இரண்டாம் அத்தியாயம் கடைசி பத்தொன்பது சுலோகங்களுக்கும், பதினெட்டாம் அத்தியாயம் முழுவதற்கும் மாறுபட்ட கருத்துக்கள் மற்ற அத்தியாயங்களில் யாண்டாயினுமிருப்பின், அவைகள் தள்ளற்பாலனவே' என்ற கருத்தும் அடிகளிடத்திருந்து ஒருபோது பிறக்கலாயிற்று. அடிகள் மூடநம்பிக்கையால் எதையுங் கொள்ளார் தள்ளார் என்று உணர்க. துரபிமானமுடைய ஒருவன் சமய

வாழ்வினனுதல் அரிது. அடிகள் கண்மூடி வழக்கங்களைக் கடிந்துவந்ததும் அவரை உண்மைச் சமய வாழ்வில் நிறுத்தியது என்னலாம். அடிகள் மூடக் கொள்கைகளையும் கண்மூடி வழக்கங்களையும் சமயப் பித்தால் நம்புவதில்லை. இதை,

> 'சமயம் சமயம் என்று எல்லாவற்றையும் யான் கொள்ளேன். சமயத்தின் பெயரால் செய்யப்படுங் கொடுமைகளை யான் வேலேன். பண்டை நூல்கள் தெய்விகமானவைகளே. ஆனாலும் அவைகளிலுள்ள பொருள்கள் என்னறிவிற்குப் பொருந்தியனவாயிருத்தல்வேண்டும். இல்லையேல் நூல்களின் கடவுட்டன்மையையும் யான் மறுப்பேன்.'
>
> 'சம்ஸ்கிருதத்தி லுள்ளனவெல்லாம் வேதமொழிகள் என்னும் மூட நம்பிக்கையில் மயங்கியிருக்கிறோம். அம்மூட நம்பிக்கையை ஒழித்துப் பெண்மக்கள் தாழ்ந்தவர்கள் என்னுஞ் சிறுமை எண்ணத்தைக் களைவோமாக.'
>
> 'சமயமென்றால் எச்சமயம்? கரவும், மூடபக்தியும், கண்மூடி வழக்கமுங்கொண்டது சமயமன்று'

என வரூஉம் அடிகள் அறவுரைகளாற் காண்க.

தம்மைச் சமய வாழ்வில் நிறுத்திய நூல்களுள் சிறந்தது பகவத்கீதை என்று அடிகள் அடிக்கடி சொல்வதுண்டு. பகவத்கீதை இந்தியமக்கள் பலரால் போற்றப்படும் நூல்களுள் ஒன்று.

**பகவத்கீதை**

பிற நாடுகளிலுள்ள அறிஞர் சிலரும் அதைப் போற்றுகிறார். 'கீதா ரகசியம்' என்னுந் தலைப்பின்கீழ் எனது கருத்தை நூற்றொடக்கத்தில் பொறித்திருக்கிறேன்.

கீதையைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்நூல் உள்ளவாறு நிகழ்ந்த

ஒரு வரலாற்றைக் கூறுவது அன்று என்றும், ஒருண்மையை உணர்த்த ஒரு புலவரால் எழுதப்பட்டது என்றுஞ் சிலர் கூறுகிறார். பாரதப் போர் நடந்தது உண்மை என்றும், அர்ச்சுனன் சோர்வுற்ற வேளையில் அவனுக்கு ஊக்கமூட்டவேண்டிச் சில வேதாந்த உரைகள் கண்ணபிரானால் ஓதப்பட்டன என்றும், அக்கருத்தைப் பின் வந்தாரொருவர் அத்தியாயம் அத்தியாயமாக வகுத்து ஒழுங்குபட்ட ஒரு நூலாகத் தொகுத்தாரென்றுஞ் சிலர் சொல்கிறார். ஒருசிலர் கீதை மிகச் சில சுலோகங்களால் ஆக்கப்பட்டிருந்ததென்றும், பின்னை நாளடைவில் இடையிடையே பல சுலோகங்கள் சேர்க்கப்பட்டன என்றும், இக்காரணத்தால் முரண்பட்ட கருத்துக்கள் அதன்கண் நுழைந்தன என்றும் உரைக்கிறார். வேறு சிலர் அர்ச்சுனன் கொண்ட நல்லெண்ணத்தை மாற்ற இராஜதந்திர முறையில் கீதை சொல்லப்பட்டது என்றும், ஒரு காரணம்பற்றி எழுந்த அந்நூலை என்றும் நிலவத்தக்க ஒன்றாகக் கொள்ளுதல் தவறென்றும் இயம்புகிறார். இன்னுஞ் சிலர் பகவத்கீதை உயிர்களைக் கொல்லுமாறு தூண்ட எழுந்ததென்றும், அதைக் கேட்ட பின்னர் அர்ச்சுனன் அருள்ஞானம் பெறாது, கொலைவினை நிகழ்த்தினமையால் அது கொலைநூலேயாகுமென்றும் புகல்கிறார். மற்றுஞ் சிலர் பகவத்கீதையை உபநிடத சாரமாகிய ஞானநூல் என்றும், நிட்காமிய கர்ம நூலென்றும், உலக வாழ்விலிருந்துகொண்டே உயர்ஞானம் பெறும் முறையை அறிவிக்கும் அறிவுநூலென்றும் அறைகிறார். அவரவர் அறிவு, ஆராய்ச்சி, ஆற்றலுக்கேற்றவாறு கீதை விளங்கிக்கொண்டிருக்கிறது.

கீதை பல மொழிகளிலும் பெயர்த்து எழுதப்பட்டுள்ளது. அச் சீரியநூலுக்கு உரை கண்டவர் பலர். சங்கரர், இராமாநுஜர் முதலிய பெரியோர் அதற்குப் பேருரை கண்டனர். பின்னாளில் அதற்கு விரிஉரை கண்டவருள் சிறந்தவர் பூனா நகரளித்த புனிதமூர்த்தி லோகமான்ய பாலகங்காதர திலகர்.

காந்தியடிகள் இளமையில் பரம்பரை வழக்கத்தை யொட்டிக் கீதையைக் கேட்டனர். அதன்மீது அவர் கருத்தூன்றி ஆராய்ச்சிவழி நின்று அதை இங்கிலாந்தில் படித்தல் நேர்ந்தது. அங்கே அவர்க்கு அதன் பெற்றி புலனாயிற்று. அடிகள், அதைப்பற்றி, 'யங் இந்தியா'வில் (12-11-1925) எழுதிய கட்டுரையில்,

> "யான் இங்கிலாந்திலிருந்தபோது இரண்டு நண்பர் சேர்க்கை காரணமாக கீதையைப் படித்தல் நேர்ந்தது. 'படித்தல் நேர்ந்தது' என்று ஏன் சொல்கிறேனெனில், எனது உள்ளத்தெழுந்த விருப்பத்துக்கு இணங்கி அதைப படிக்கப் புகவில்லையாகலின. அவ்விரு நண்பரும் தம்முடன் கீதையைப் படிக்குமாறு * * * கேட்டனர். அதுபோழ்து எனது அறியாமை குறித்து நாணுற்றேன். எனது மத நூல்களைப்பற்றிய எவ்வித அறிவுமின்மை அப்பொழுது என்னைத் துளைத்தது. அத்துன்பக்கடலில் அழுந்தியது நற்பேறளித்ததென்று கருதுகிறேன். கீதையை முற்றும் உதவியின்றிப் படித்துணர எனக்குப் போதிய வடமொழிப் புலமையில்லை. நண்பர்க்கோ முற்றும் அம்மொழி தெரியாது. அவர், ஸர் எட்வின் ஆர்னல்ட் திறம்பட மொழிபெயர்த்த கீதையைக் கொண்டுவந்தனர். பக்கம் பக்கமாக அதன் உள்ளுறையைக் கரைத்துக் கரைத்துக் குடித்தேன். அஃது என் மனத்தைத் தன்வயப்படுத்திற்று. அன்றுமுதல், இரண்

டாம் அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்தொன்பது சுலோகங்கள் எனது உள்ளத்தில் கன்மேலெழுத்தெனப் பதிந்துவிட்டன. எல்லா ஞானக் காட்சிகளையும் அச் சுலோகங்கள் எனக்கு வழங்குகின்றன. அவை அறிவுறுத்தும் உண்மைகள் என்றுமுள்ளவை. நியாய முறைகள் அவற்றிலிருக்கின்றன. அவை அநுபூதி ஞானத்தைத் தெரிவிப்பன"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காந்தியடிகட்குச் சுவாநுபூதியில் உறுதியைக் கோயில் வழிபாடும் பிறவும் அளிக்கவில்லை. அதனை அவர்க்கு இங்கிலாந்தில் அளித்தது ஸர் எட்வின் ஆர்னல்ட் மொழிபெயர்ப்புக் கீதை - சிறப்பாக அந்நூல் இரண்டாம் அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்தொன்பது சுலோகங்களின் உள்ளுறை. அடிகளுக்கு ஞானமளித்த அச்சுலோகங்கள்மீது நேயர்கள் கருத்துச் செலுத்துவார்களாக.

காந்தியடிகளுக்குச் சமயஞான உணர்வளித்த கீதையைப்பற்றி, அவர் கொண்டுள்ள கருத்து, மேற்குறிப்பிட்ட (யங் இந்தியா) கட்டுரையின் முடிவிலிருக்கிறது. அது வருமாறு :—

"தன்னையறிதலையும், அதற்குரிய துறைகளையும் அறிவுறுத்துவது கீதையின் உள்ளக்கிடக்கை. இரண்டு சேனைகளின் போர் அதன்பொருட்டு ஒரு வாய்ப்பாகக் கொள்ளப்பட்டது. கவிஞர், போரிலாதல் கொலையிலாதல் வெறுப்புடையரல்லரென்றும், அவர் தங்கருத்துக்கேற்ப ஒரு போரை முன்னிலைப்படுத்திக் கொண்டாரென்றும் வேண்மோனல் கொள்ளுங்கள். ஆனால் எனது மஹாபாரத

ஆராய்ச்சி எனக்கு வேறுபட்ட கருத்தையே உணர்த்தியிருக்கிறது.

கவி வியாசர் அவ்வழகிய காவியத்தில் போரின் சிறுமையையே வெளியிட்டிருக்கிறார். 'கௌரவர் தோல்வியுற்றதாலென்ன? பாண்டவர் வெற்றியுற்றதாலென்ன? வெற்றியடைந்தவருள் மிகுதியாக வாழ்ந்தோர் எத்துணைபேர்? அவர் கதி என்னவாயிற்று? குந்திமாதா எவ்வாறு முடிவடைந்தாள்? இப்பொழுது யாதவர் எங்கே?' என்று கவி வியாசர் வினவுகிறார். போரின் வருணனையும், கொலையின் போற்றலும் பாரதத்தின் பொருளடக்கமல்ல. அவைகளை வலியுறுத்துவது முற்றுந் தவறு.

அஹிம்சைக்கு மாறுபட்ட சில சுலோகங்களைக் கொண்டு, கீதையே ஹிம்சை நூல் என்று சொல்வது நூலின் முழு நோக்கத்துக்குக் கேடு விளைப்பதாகும். கீதையின் உள்ளக்கிடக்கை ஹிம்சையன்று; அஹிம்சை. இக்கருத்து இரண்டாம் அத்தியாயத்தில் தொடங்கப்படுகிறது; பதினெட்டாம் அத்தியாயத்தில் சுருங்க ஓதப்பட்டிருக்கிறது. இதற்கு மற்ற அத்தியாயங்களும் அரண் செய்கின்றன. சினமின்றி, பற்றின்றி, பகைமையின்றி ஹிம்சை நிகழாது. கீதை, சினம் முதலியவற்றையளிக்கும் சத்வம், ராஜசம், தாமசம் என்னும் முக்குணங்களையுங் கடந்த குணாதீத நிலையில் நம்மைக் கொண்டுபோக முயல்கிறது. அர்ச்சுனன் காதளவு நாணை ஈர்க்கும் ஒவ்வொருபோதும் சினத்தால் அவன் கண் சிவக்குங் காட்சியை இன்றும் என் மனக்கண்ணால் பார்த்தல் கூடும். அஹிம்சா தர்ம நோக்கோடு அர்ச்சுனன் போர்புரிய மறுத்தானில்லை. இதற்கு முன்னே எத்துணையோ போர்களை அவன் நடாத்தியிருக்கிறான். இம்முறை மட்டும் அவனுக்கு ஒருவிதப் போலி இரக்கந் தோன்றிற்று. உற்றார் உறவினரைக் கொல்ல அவன் மனமெழவில்லை.

அர்ச்சுனன் கொல்லாமைபோன்றதைப்பற்றியே பேசவில்லை. ஒருவரையுங் கொல்லமாட்டேன் என்றும் அவன் சொல்லவில்லை. கிருஷ்ணனுக்கு எல்லாருடைய உள்ளமுந் தெரியும். அர்ச்சுனனுக்குத் தற்போதுள்ள மயக்கை உணர்ந்து, அவர் அவனை நோக்கி, 'அர்ச்சுனா! நீ முன்னமே கொலை செய்திருக்கிறாய்; இப்பொழுது திடீரென அஹிம்சையாளனாதல் முடியாது. தொடங்கிய கருமத்தை முடித்துவிடு' என்று சொன்னார்.

ஸ்காச் எக்ஸ்பிரஸ் ரயில்வண்டியில் பிரயாணஞ் செய்யும் ஒருவன் திடீரெனப் பிரயாணத்தால் சோர்வடைந்து, அச்சோர்வு போக்க வெளியே குதிப்பானாயின், அவன் தற்கொலைக் குற்றத்துக்குட்படுவான். அவன் ரயில்வண்டிப் பிரயாணத் தன்மை தெரியாதவன். அர்ச்சுனன் நிலை இவ்வாறிருந்தது.

அஹிம்சா தர்ம கிருஷ்ணன் இதைவிட வேறு செவியறிவுறுத்துதற்கில்லை. ஒரு நிலையில் கொலை செய்யக் கூறியதைக் கொண்டு, கீதை கொலை அல்லது போரைப் புகல்கிறது என்று சொல்வது தவறு. நித்திய வாழ்க்கையில் சிறிதளவு ஹிம்சை அவசியமாயிருத்தல் நோக்கி, ஹிம்சையே மனிதவாழ்வின் நியதி என்று சொல்லலாமோ? கீதையின் நுட்பம் உணர அதை ஆராய்வோன், அஃது அஹிம்சையின் இரகசியத்தையும், மாயா தேகத்தின் வழித் தன்னையறியும் இரகசியத்தையும் போதிப்பதைக் காண்பான்.

திரிதராஷ்டிரன், யுதிஷ்டிரன், அர்ச்சுனன், கிருஷ்ணன் இவர் யாவர்? இவர் சரித்திர சம்பந்தப்பட்டவரா? கீதை அவரை அப்படிச் சொல்கிறதா? அர்ச்சுனன் திடீரென அமர்க்களத்தினிடை நின்று கிருஷ்ணனைக் கேட்டதும், அவன் முன்னிலையில் கிருஷ்ணன், முழுக்

கீதையை அப்படியே ஒப்புவித்ததும் உண்மையா? அர்ச்சுனன், 'மயக்கந் தீர்ந்தது' என்று பொங்கி எழுந்து, 'கீதையை மறந்துவிட்டேன்; மீண்டுஞ் சொல்க' என்று கிருஷ்ணனைக் கேட்க, கிருஷ்ணன் அதற்கு இசையாது, அநுகீதை வடிவாகச் சொற்றது எது?

துரியோதனுதியர் மனிதனிடத்துள்ள விலங்கு நீர்மைகளென்றும், அர்ச்சுனனுதியர் தெய்வ நீர்மைகளென்றும் நான் கொள்கிறேன். நமது உடலே போர்க்களம். இருசாரார்க்கும் நாடோறும் போர் நடக்கிறது. கவிஞர் அப்போரை விரிவாக வருணிக்கிறார். உள்ளமெனும் பெருங்கோயிலில் கிருஷ்ணன் வீற்றிருக்கிறான். ஆண்டிருந்து அவன் கீதையை முழங்கிய வண்ணமிருக்கிறான். கடிகாரத்துக்குத் திருகுபோன்றது நமது மனத்துக்குத் தூய்மை. தூய்மையில்லையேல் தெய்வ கீதை சேராது.

உலகில் மூர்க்கப் போர் ஒழியாது. அஹிம்சை இன்னதென உணராதார்க்குக் கீதை சோர்வைச் சொல்லவில்லை. அச்சமுடையோன், தன்னுடல் காக்க விரும்புவோன், காம குரோதங்கட்கு இடங்கொடுப்போன் ஆகியோர் மூர்க்கப்போர் புரிந்து தீரல்வேண்டும். ஆனால் அஃது அவ்வவனுடைய அறமன்று. அறம் ஒன்றே. அஹிம்சை என்பது மோட்சம்; மோட்சமாவது சத்தை அறிவது. கோழைமைக்கு இங்கு இடமில்லை. இவ்விநோதமான உலகில் ஹிம்சை இருந்துகொண்டேயிருக்கும். அதனின்றும் உய்யக் கீதை வழிகாட்டுகிறது. கோழைமையும், சோர்வும் வழியல்ல என்றுங் கீதை சொல்கிறது. கோழைமையைவிடப் போரில் கொல்லலுங் கொல்லப்படலுஞ் சிறப்பு."

சிலர்க்குக் கொலை நூலாக விளங்குங் கீதை காந்தியடிகட்குக் கொல்லாமை கூறும் அருள் நூலாக விளங்கு

கிறது. அவரவர் மனக்கண்ணுடிக்கேற்ற பொருளைக் கீதை புலப்படுத்துகிறது. உலகோர்,

**கீதை அருள் நூல்**

போர் நூலாகக் கருதும் பாரதம் முதலி யனவும் காந்தியடிகட்குப் போரின் இழி வைக்கூறும் நூல்களாகத் தோன்றுகின்றன.

கீதையின் நுண்பொருளைப்பற்றிக் கல்விக் கடலா கிய திலகர் பெருமானுக்கும் அடிகட்கும் ஒருமுறை விவாதம் நடந்தது. காந்தியடிகள் தங்கருத்தினின்றும் பிறழ்ந்து ஒன்றுஞ் சொல்லவில்லை. குணாதீதத்தையும், அங்கே விளங்குஞ் சாந்தத்தையும் கூறுங் கீதை எங்ஙனம் ஹிம்சையை அறிவுறுத்தும்? என்பது காந்தியடி களின் வினா. முக்குணத்தால் முறை மறைந்தறையப் படும் மூர்க்கர்க்குப் போருங் கொலையுமில்லாமற் போக வில்லை என்பது அடிகளின் உள்ளக்கிடக்கை. கதைகளி லுள்ள அர்ச்சுனன் கிருஷ்ணன் முதலியோரை அடிகள் ஏற்பதில்லை. அஹிம்சைக்கு அறிகுறியாக உள்ள கிருஷ்ணனையே அடிகள் கொண்டுள்ளார்.

காந்தியடிகட்குச் சமய வாழ்வு கால்கொண்ட இடம் தென்னுப்பிரிக்கா என்று எவருங் கூறுவர். அதற்கு

**சமய வாழ்வு**

முன்னே அவர் வாழ்வு உலகாயதத் துடனும் கலந்துநின்றது என்று அவரது வரலாறே அறிவிக்கிறது. காந்தியடிகள் ஏறக்குறைய ஐம்பதாண்டு சத்தெனுஞ் செம்பொருட் டொடர்புடைய சமய வாழ்வு நடாத்தி வருகிறார். தென்னுப்பிரிக்காவில் பொறுமைப்போர் தொடுத்த நாள் முதல், இன்றுவரை, அவர் ஆற்றிவருந் தொண்டுகளும், நிகழ்த்திவரும் அரசியல் போர்களும், பிறவும் சமயத்தொண்டின்பாற்

பட்டன என்று உலகஞ் சொல்லும். அவர் வினைகள் யாவும் மனிதன்மாட்டுள்ள விலங்கைத் தூரத்தும் ஒரு துறையையே குறிக்கொண்டு நிற்றல் காணலாம். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நிகழ்த்திய போர் முறையை நோக்குழி அது தெய்வத்தன்மை வாய்ந்ததாகவே விளங்கும். அதனை,

'அரசாங்கம் நமது கோரிக்கைக்கு இணங்காதொழியுமேல், இத்தீர்மானத்தை இன்று காலை உங்கள் முன்னிலையில் கிடத்த விரும்புகிறேன். புது ஆண்டு முதல்நாள், போரில் வருந்தவும், மீண்டுஞ் சிறையில் துன்புறவும், பின்னை வெளி வரவுஞ் சித்தமாயிருத்தல் வேண்டும். இம்முறையே அகப் புறத் தூய்மைக்கு உரியது; கடவுளுக்கும் நியாயமாயிருப்பது'

'உயிரை, சம்பளத்தை, வாணிபத்தை, குடும்பத்தை, உடலை, எதையும் பொருளாக மதித்தல் கூடாது. இது மனித உரிமையைப்பற்றிய போர். ஆதலால் இது சமயப் போராகிறது. மனச்சான்றுரிமை குறித்துப் போராடுவது சமயப் போராகவே இருத்தல் வேண்டும்'

'எல்லா உலகங்கட்கும் பொதுவாயிருப்பது ஒன்று. அஃது எங்கும் நீக்கமற நிறைந்தது. அது சத்தியப் பொருள். அதை நேராகக் காணவிரும்பும் ஒருவன் என் செய்தல் வேண்டும்? அவன், படைப்பில் இழிந்த ஒன்றையும் தன்னைப்போல் நேசித்தல் வேண்டும். அவ்வாறு நேசிப்பவன் வாழ்க்கைக்கூறுகள் எதினின்றும் விலகி நிற்றல் இயலாது. * * * * சத்தியத்தில் எனக்கு அளவிலா அன்பு உண்டு. அவ்வன்பு என்னை அரசியலிலுஞ் செலுத்தியது. இதனால் அரசியலுக்கும் சமயத்துக்கும் உள்ள தொடர்பு எனக்கு விளங்கியது. இரண்டுக்கும் தொடர்பில்லை என்று சொல்பவன், சமய நுட்பம் இன்னதென்று தெரியாதவன் என்று தியங்காது கூறுவேன் * *'

'யான் ஆத்ம சுயராஜ்யத்துக்கு முயல்கிறேன். இதற்குரிய வழி யாது? நாட்டுக்கும் உயிர்கட்கும் தொண்டு செய்வது உரிய வழியாகும். * * * சமயமின்றி அரசியலில்லை. சமயத்துக்கு அரசியலும் ஒரு துணை. சமயமற்ற அரசியல் கூற்றுவன் போன்றது'

'யான் அரசியல் வாதியா? சமய வாதியா? யான் அரசியல் நாடகம் நடிக்கும் ஒரு சமயவாதி'

'சமயம் ஒரு முதல்; தேச பக்தி ஒரு சினை. சமயத்துக்குத் தேசபக்தி கீழ்ப்பட்டது'

'துன்பக் காலத்தில் உங்கட்குக் கடவுள் துணை செய்வாராக. கடவுள் துணைபெறக்கூடிய நிலையில் உங்கள் செயல் நிகழ்வதாக'

என வரூஉம் அடிகள் உரைகளால் காண்க.

**கடவுளிடத் துறுதி**

மகாத்மா காந்தி முன் செய்த நற்றவப்பயனாலும், இளமையிலேயே மறச் செயல்கட்கு அஞ்சி நடந்தமையாலும், தென்னாப்பிரிக்காவில் மேற்கொண்ட தியாகத்தாலும், இன்ன பிறவாற்றாலும் அவர்க்குக் கடவுள் உண்மையில் உறுதி ஏற்பட்டது.

'எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒரு சக்தி இருக்கிறது. அஃது எல்லையற்றது; மறைந்தொளிர்வது. யான் அதைக் காணவில்லை; ஆனால் அதன் உண்மையை உணர்கிறேன். * * * * * அப்பொருளை ஆராய்ச்சியால் அளந்து கூறல் இயலாது. * * *'

'தங்களை ஆள்வோர் யார்? ஏன் ஆள்கிறார்? எப்படி ஆள்கிறார்' என்று பொதுவாகச் சாதாரண மக்கள் அறிவதில்லை. ஆனாலும் ஏதோ ஒரு சக்தி தங்களை ஆள்கிறது என்ற உணர்ச்சிமட்டும் அவர்களிடை வளர்ந்துகொண்டிருக்

கிறது. சென்ற ஆண்டு யான் மைசூரில் யாத்திரை செய்தேன். அப்பொழுது ஆங்குள்ள ஏழை மக்களுடன் பேசலானேன். மைசூரை ஆள்வோர் யார் என்பது அவர்கட்குத் தெரியவில்லை. ஏதோ ஒன்று ஆட்சி புரிகிறது என்றுமட்டும் அவர்கள் சொன்னார்கள். தங்களை ஆள்வோர் இன்னாரென்று அந்த மக்கட்குத் தெரியவில்லை. அவர்கள் அறிவு அவ்வளவு கட்டுப்பட்டுக் கிடக்கிறது. நிலைமை இவ்வாறாக, அரசர்க்கு அரசராக உள்ள கடவுளை - எல்லையற்றதை - எப்படிக் காண்டல் கூடும்? * * *

* * * அண்டத்தில் ஒருவித ஒழுங்குமுறை இருக்கிறது. அதற்குரிய இயற்கைச் சட்டமும் அதாவது நியதியும் அமைந்துள்ளது. அச்சட்டம் - நியதி - ஒவ்வொன்றையும், ஒவ்வொருவரையும் தன் வழி வழி இயக்குகிறது; அதாவது ஆட்சி புரிகிறது. * * *

அந்த நியதி, கடவுள். நியதியும் அதை அமைத்த பரமும் ஒன்றே. * * *

என்னைச் சூழ்ந்துள்ள ஒவ்வொன்றும் மாறுதல் அடைவதையும் மாள்வதையும் யான் காண்கிறேன். இந்நிகழ்ச்சிகட்கு ஒரு நிலைக்களன் வேண்டுமன்றோ? அது கடவுள்; அஃது என்றும் ஒரு தன்மையாயுள்ள சக்தி. அதற்கு மாறுதலோ அழிவோ கிடையாது. அப் பரம்பொருள் எல்லாவற்றையும் தன்னகத்திலே கொண்டுள்ளது; எல்லாவற்றையும் தோற்றுவிப்பது; நிலைபெறுத்துவது; அழிப்பது; மீண்டும் தோற்றுவிப்பது. இச் சக்திவாய்ந்த ஒன்றே தெய்வம்.

தெய்வம் அன்புடையது. மரணத்தினிடை உயிர்ப்பும், அசத்தியத்தினிடைச் சத்தியமும், இருளினிடை ஒளியும் நிலவாமலில்லை. ஆகவே உயிர்ப்பும், உண்மையும், ஒளியும் பரம்பொருள் என்க. அஃது அன்பு. * * * அதை அடை

தற்கு உறுதி - நம்பிக்கை - விசுவாசம் வேண்டும். வெறும் ஆராய்ச்சி போதாது * * * '

என்றும்,

'கடவுளிடத்திலும், அவரது வல்லமையினிடத்திலும், அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதியை அசைத்தல் முடியாது. குயவன் கையிலுள்ள களிமண்போல நான் இருக்கிறேன்'

என்றும்,

'கடவுளுண்மையிலும் உயிருண்மையிலும் எனது நாட்டார்க்கு உறுதியிருக்குமானால், அவர் தமது உடலைச் சிறைக்கெனவும், நாடு கடத்தலுக்கெனவும் அரசாங்கத்தார் வயப்படுத்தி, மனத்தையும், சித்தத்தையும், உயிரையும் ஆகாயப் பறவையைப்போலக் கட்டின்றி நிலவச் செய்வாராக'

என்றும்,

'கடவுள் வழிகாட்டுவார் என்பது எனக்குத் தெரியும்'

'எனது இயக்கம் நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்டதன்று என்று நான் சொல்லுதல்கூடும். அது கடவுள் உண்மையை மறுப்பதன்று'

'அறியாமை இருள் என்னைச் சூழ்ந்து தடுமாற்றம் உறுத்தும்போதும், சிறைவாசத்தின்போதும் ஆண்டவன் என அருகே இருந்து துணைசெய்கிறான். ஆண்டவன் என்னைக் கைவிட்டான் என்று எனது அனுபவம் கூறாது'

'மனித அறிவுக்கு எட்டாத ஒரு சக்தி இருக்கிறது. அஃது எங்கும் நிறைந்து நிற்கிறது. அதைக் காண்டல் இயலவில்லை. ஆனால் அதன் இருப்பை உணர்கிறேன். * * * நீங்களும் நானும் இவ்வறையில் அமர்ந்திருத்தல்

உண்மை. இதுபோன்றது கடவுள் இருப்பு. காற்றும் நீருமின்றி யான் வாழினும் வாழ்வேன். ஆனால் கடவுளின்றி என்னால் வாழ்தல் இயலவே இயலாது. என் கண்களை நீங்கள் பறியுங்கள்; என் மூக்கை உடையுங்கள். இச் செயல்கள் என்னைக் கொல்லமாட்டா. என்மாட்டுள்ள கடவுள் நம்பிக்கையை நீங்கள் பறித்தால், அஃது உடனே என்னைக் கொன்றுவிடும்'

என்றும் அடிகள் அருளிய இம்மொழிகளை நோக்குழிக் கடவுளிடத்து அவர்க்குள்ள உறுதி புலனாகும். இவ்வுறுதியுடையார் தமது செயல் ஒவ்வொன்றையுங் கடவுள் காண்கிறார் என்னும் எண்ணங்கொண்டு கடவுளுக்கு அஞ்சி அகமும் புறமும் ஒத்து மனச்சான்று வழி நடப்பர்.

'கடவுள் கணிதத்தில் நமது செயல்கள் குறிக்கப்படுகின்றன'

'உலகத்தில் எவர்க்கும் அஞ்சேன்; கடவுள் ஒருவர்க்கே அஞ்சுவேன்.'

'கடவுளுக்கு அஞ்சி நடப்போமாக; மனிதனுக்கு அஞ்சி நடப்பதை ஒழிப்போமாக. நமது உள்ளத்தில் தெய்வமிருப்பதையும், அது நாம் நினைத்தலையும் - நிகழ்த்தலையும் கண்டு வருவதையும், அது நம்மை நேர்மை வழியில் நடத்துவதையும் உணர்வோமானால், நாம் கடவுள் ஒருவர்க்கன்றி உலகில் எதற்கும் அஞ்சுவதை ஒழிப்போம்.'

இம்மொழிகளை அருளிய காந்தியடிகட்கு இவ்வுலகில் கடவுளையன்றி வேறொரு களைகண் உண்டோ? அவர் நினைவெலாங் கடவுள் நினைவு; அவர் பேச்செலாங் கடவுள் பேச்சு; அவர் செயலெலாங் கடவுள் செயல். இக் கடவுள் நெறியாஞ் சமய வாழ்வில் அடிகள் நின்று

வருதலால், தம்மளவிலோ தந்தொடர்புடையார் அள விலோ தீவினை நிகழ்ந்துவிடின், 'கடவுள் எச்சரிக்கை செய்கிறார்' என்று உண்ணா நோன்பு முதலிய கழுவாய் கள் தேட அவர் விரைந்து நிற்கிறார். மாசிலாமணியைக் காணவேண்டுமானால், மனத்தில் மாசிருத்தலாகா தன்றோ? காந்தியடிகள் மாசணுகாதவாறு வாழ்வை நடாத்த முயன்று வருகிறார். செளரி, செளரா கொலை போன்ற கொடுவினைகளாம் மாசுகளைத் துடைக்க அடிகள் எத்துணை முறை, 'கடவுள் எச்சரிக்கை செய்கிறார்' என்று அறப்போரை நிறுத்தினார்! எத்துணை முறை உண்ணா நோன்பிருந்தார்! கோஹத் குழப்பங் காரண மாக இருபத்தொரு நாள் உண்ணா நோன்பிருந்தபோது, நம் பெரியார் 'கடவுள்' 'கடவுள்' என்று கண்ணீர் விடுத்துக் கசிந்துருகினார். அதுபோழ்து அறிக்கை வாயி லாகவும், (25-9-24) 'யங் இந்தியா' வாயிலாகவும் அவர் அருளிய உரைகளில் சில வருமாறு:—

'உள்ளமெனும் அரியாசனத்தினின்றுங் கடவுள் வீழ்த்தப்பட்டனரென்று தோன்றுகிறது. மீண்டும் உள் ளத்தில் அவரை எழுந்தருளச் செய்வோமாக.'

'கோஹத் செய்தி எனது உள்ளத்தில் அனல் மூட் டிற்று. எதாயினுஞ் செய்யவேண்டுமென்று தோன்றிற்று. இரண்டு நாளிரவு அமைதியின்றியும் நோயொடுங் கழித் தேன். புதன்கிழமை மருந்து கண்டேன். நான் கழுவாய் (பிராயச்சித்தம்) தேடவேண்டும். சத்தியாக்கிரக ஆசிரமத் தில் காலை ஜெபத்தில், தெரிந்தோ தெரியாமலோ செய்யப் படும் எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு கருணைக் கடவு ளாகிய சிவபரம்பொருளை நாங்கள் வேண்டுகிறோம். அறி

யாமற் செய்த பாவ மன்னிப்புக்குரிய கழுவாய் செந்நீர் பொங்கும் எனது இதயத்தினின் றெழும் ஜெபமேயாகும்.'

'என்னை நேசிப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இஃதோர் எச்சரிக்கை. உண்மையாக அவர்கள் என்னை நேசிப்பதாயின், அந்நேசத்துக்கு யான் அருகனாயின், தங்கள் உள்ளத்துள்ள கடவுளை மறுத்த பாவங் குறித்து என்னோடு விரதங் கொள்வார்களாக. ஒருவரது சமயத்தை நிந்தித்தலும், வாயில் வந்ததை உளறலும், பொய் பேசலும், ஒன்றும் அறியாத மக்கள் மண்டைகளை உடைத்தலும், கோயில்களையும், மசூதிகளையுங் கெடுத்தலும் கடவுளுண்மையை மறுத்தலாகும்.'

'எனது நோன்பு, கடவுளையும் என்னையும் பொறுத்தது.'

பின்னை தொடர்ந்து வந்த 'யங் இந்தியா' இதழ்களில் அடிகள் எழுதியனவுங் கருதற்பாலன.

'உரிமையை நினைக்கத் துணிதற்கு முன்னர் ஒருவரை ஒருவர் நேசிக்கத் துணிதல் வேண்டும்; சமயப பொறையும் வேண்டும். இதற்கு ஒருவர்க்கொருவரிடம் நம்பிக்கை வேண்டும். இந்நம்பிக்கை, கடவுளிடத்தில் உறுதி கொள்வதாகும்.'

"என்னால் ஒன்றுஞ் செய்ய முடியாதென்பது எனக்குத் தெரியும். எல்லாஞ் செய்ய வல்லவர் கடவுள். 'கடவுளே! அடியேனை நமக்குரிய பொருத்தமான கருவியாக்குக. தேவரீர் விருப்பப்படி சிறியேனைப் பயன்படுத்திக்கொள்க. மனிதன் என்ன? ஒன்றுமே இல்லை; துச்சம். நெப்போலியன் எவ்வளவு மனோராஜ்யஞ் செய்தான்? கடைசியில் செண்ட் ஹெலினாவில் கைதியாகக் கிடந்தான். பெரிய கெய்ஸர் தனது முடியிழந்து சாதாரண மனிதன் நிலையைப் பெற்றான். எல்லாம் தேவரீர் திருவுள்ளம்.'

இவைகளை நாம் சிந்தித்துத் தாழ்வெனும் தன்மை பெறுவோமாக. ”

கடவுளோடு காந்தியடிகள் கொண்டுள்ள தொடர்பை விளக்க இன்னும் பல குறிப்புக்களிருக்கின்றன. அவைகளை விரிக்கில் பொருள் பெருகும்.

ஒரே கடவுள்

‘ காந்தியடிகள் எக்கடவுளைக் கூறுகிறார் ? அக்கடவுள் இயல்பு யாது ? அதன் பெயரென்ன ? ஊரென்ன?’ என்பவைகளைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்ய வேண்டுவதில்லை. உள்ளத்தை ஆண்டவனுக்குக் கோயிலாக்கி, ‘ ஆண்டவன் யாண்டுமிருந்து எங்கணும் கண்கொண்டு நமது செயலைக் காண்கிறான் ’ என்னும் உண்மை கைவரப்பெற்ற ஒருவர்க்குப் பல கடவுளர் உணர்வு எங்கிருந்து பிறக்கும் ? இதனை,

‘ கடவுள் உண்மையாகவே ஒருவரா யிருக்கிறார். இரண்டாவது கடவுளில்லை. கடவுளை அளந்தறிதல் முடியாது ; உணர்தல் முடியாது. அவர் கண்ணின்றிக் காண்பார் ; செவியின்றிக் கேட்பார். அவர்க்கு வடிவமில்லை. அவரைச் சேதித்தல் முடியாது. அவர் எவராலும் படைக்கப்பட்டவரல்ல. அவருக்குத் தந்தை தாய் குழந்தைகளில்லை. ஆனாலும் அவர் அப்பனாக, அம்மையாக, மனைவியாக, பிள்ளையாக வணங்கப்படுகிறார். அவர், மரம் கல் முதலியன அல்லாதவரா யிருந்தும், அவைகளில் வைத்து வணங்கப்படுகிறார். அவரது வியாபக முணராதவர்க்கு அவர் சேயர். ’

‘ வேதங்களில் பல கடவுளரிருக்கிறார். மற்ற சமய நூல்கள் அவர்களைத் தேவதூதர் என்று சொல்கின்றன. ஆனால் வேதங்கள் ஒரே கடவுளைப் பாடுகின்றன * * * * ’

என வரூஉங் காந்தியடிகள் மெய்யுரைகளால் தெளிக.

காந்தியடிகள் ஒரு கடவுள் உண்மையில் உறைந்து நின்று, அக்கடவுள், நெறிநின்றொழுகி வாழ்ந்து வரலால், அவர், பிரமவித்தை காணக் கூடியதென்றும் 'அதைக் காண்பேன்' என்றும், இப்பொழுதும் விழிப்பில் அதாவது ஜாக்கிரதையில் புலன்களும் மனமும் தம் வழி நிற்கின்றன என்றும், கனவில் அதாவது சொப்பனத்தில் அவை சில போழ்து தம்மை மீறி நடக்கின்றன என்றும், அது குறித்து ஸ்ரீராமநாமம் ஜெபித்து வருவதாகவும், தமது அநுபவ நிலையை ஒருமுறை 'நவஜீவனில்' எழுதினார். அவர் எழுதிய உண்மையோடியைந்த வாழ்வெனுஞ் 'சத்திய சோதனை' முன்னுரையிலும், வேறு பல உரைகளிலும் மிளிரும் செம்மொழிகள் அவர்க்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை உலகுக்கு உணர்த்துவனவாம். அவைகளுள் சிலவற்றை அகழ்ந்துதருகிறேன்.

அடிகள் நிலை

'ஆத்மார்த்த உலகில் யானுற்ற சோதனைகளைச் சுருங்கக் கூற விரும்புகிறேன். அவை எனக்கு மாத்திரம் தெரிந்தவை. அவற்றினின்றுமே, யான் அரசியல் உலகில் தொண்டு செய்யவல்ல ஆற்றல் பெற்றிருக்கிறேன்.'

'இம் முப்பதாண்டுகளாக எது பெற விரும்பினேன், எதற்காகப் போராடினேன், எதன் பொருட்டு எக்குற்றேன் எனில், தன்னை அறிய, அதாவது கடவுளை நேருக்கு நேராகப் பார்க்க, அதாவது மோட்சமடைய என்பது விளங்கும். இவ்வொன்றைப் பெறும்பொருட்டு யான் உயிருடன் உலவுகிறேன்; வாழ்கிறேன். யான் பேசுவதும், எழுதுவதும், அரசியற்றுறையில் உழைப்பதும் எல்லாம் இவ்வொன்றன் பொருட்டே.'

'தனக்கும் தன்னைப் படைத்தவனுக்கும் மட்டும் தெரியக்கூடிய நிகழ்ச்சிகள் சில உண்டு. அவை சொல்லொணாதன.'

'கடவுளுக்குரிய மூர்த்த பேதங்கள் பல. நான் கடவுளைச் சத் பொருளாக வழிபடுகிறேன். சத்தாயிருப்பது கடவுளொன்றே. ஏனையவெல்லாம் அசத். அம்மெய்யனை யான் இன்னுங் காணவில்லை. அவனைக் காணத் தொடர்ந்து நிற்கிறேன்; இதன்பொருட்டு எனக்கினிய எல்லாவற்றையுந் தியாகஞ்செய்ய முனைந்து நிற்கிறேன்; அத்தியாகம் எனது உயிரைக் கேட்குமானால் அதையும் இழக்கச் சித்தமாயிருக்கிறேன்; சத்தெனும் செம்பொருளை யான் காணுமட்டும அதற்குரிய சத்திய நெறியில் யான் உறுதிகொண்டு நிற்றல்வேண்டும்.'

'இச்செந்நெறிபற்றி நடந்து ஏற்றமடைவதால் சில சமயத்தில் சத்தெனுஞ் செம்பொருள் மின்னொளிபோல் தோன்றுகிறது. கடவுளொன்றே சத். ஏனையவெல்லாம் அசத் என்னும் உறுதி நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது.'

'சத்தியப் பயிற்சியில் அருமை எளிமை என்னும் இரண்டும் உண்டு. அப்பயிற்சி, செருக்கில் அமிழ்ந்து கிடக்கும் ஒருவனுக்கு அரியது; ஒன்றுமறியா இளங்குழந்தைக்கு அஃது எளியது. சத்திய நெறியில் புகுவோன் தூசியினுந் தாழ்மை பெறல்வேண்டும். உலகோர் தூசியைத் தமது அடிக்கீழ் மிதிக்கிறார். சத்தியத்தை நாடுவோனோ அத்தூசியால் மிதியுண்ணல் வேண்டும். அதன் பின்னர் - முன்னரன்று - அவன் உண்மை ஒளி சிறிது காண்டல் கூடும்.'

"சத்தியாக்கிரக தத்துவத்தைச் சோதிப்பது எனது நோக்கம். 'நான் எவ்வளவு நல்லவன்' என்று வருணிப்பது எனது நோக்கமன்று. என்னை யானே அளந்து

ஆராயும்போது, சூர்தாஸ் என்னும் அன்பர் பாடியவாறு, 'என்னைப்போன்ற கொடும்பாவி - வெறுக்கத்தக்கவன் யார்? என்னைப் படைத்த ஆண்டவனைக் கைவிட்டுவிட்டேன். அவ்வளவு நன்றி கெட்டவனானேன்' என்று ஓலமிடல் வேண்டும்."

'ஆண்டவன் என் வாழ்வை நடாத்துவதையும், யான் அவனிடத்திருந்து வாழையடிவாழையாக வந்தவன் என்பதையும் உணர்ந்தும் இன்னும் அவ்வாண்டவனுக்குச் சேய்மையிலிருக்கிறேன். அஃதெனக்குச் சொல்லொணாத் துன்பமாக இருக்கிறது.'

'யான் குருநாதன் அல்லன். குருவுக்குரிய இயல்பு என்னிடம் இல்லை. என்னிடம் தெரிந்தோ தெரியாமலோ குற்றங்குறைகள் நிகழலாம். ஆனாலும் யான் சத்தியத்தில் குறியுடையவன்.'

'மனிதன் கடவுளின் பிரதிநிதியாக நின்று, தாழ்மையுடன் தொண்டு செய்து, கடவுள் மாண்பை வெளிப்படுத்துவானாக.'

'யான் மகாத்மா அல்லன். என்பொருட்டு ஒன்றும் செய்யாதேயுங்கள். மௌன விரதத்தின்போதும் எனது தரிசனம் விரும்பப்படுகிறது. தரிசனம் அளிக்க யான் அருகனல்லன். யானும் உங்களைப்போன்ற மனிதன்; ஆசை அவாக்களை எழுப்பும் மலப்பாண்டம். இத்தகைய யான் தரிசனம் வழங்குதற்கு எங்ஙனம் தகுதியுடையவனாவன்? ஒரு பொருளின் தரிசனம் தேவை. அது, நாம ரூபமற்ற ஒன்றனுடையது. அப பரம்பொருளை ஏழை வீட்டிலும் அரச மாளிகையிலும், மல அறையிலும் கோயிலிலுங் காண முயலுங்கள். என்னை உங்கள் உள்ளத்தினின்றும் விலக்கி விடுங்கள். எனது தரிசனத்தால் எவ்விதப் பயனும் விளையாது.'

இவ்வாறு சத்தெனுஞ் செம்பொருளினிடத்து உறுதிகொண்டு, அதன் தொடர்புணர்ந்து வாழும் ஒருவரது சமயம் யாது என்பதையும் ஓர்தல்வேண்டும். அச்சமயத்தைச் சத் சமயம் அல்லது சத் மார்க்கம் என்று சொல்லலாம். காந்தியடிகள் அதைச் சத்தியாக்கிரகமென்கிருர். உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் சத் மார்க்கத்தையே அறிவுறுத்துகின்றன. சமயமென்பதைப் புத்தகத்தில், சின்னங்களில், தமக்கு வேருக உள்ள பிறவற்றில் சிறைப்படுத்தித், தமது உள்ளத்திலே பகைமை பொருமை முதலியவற்றை வழிபடுவோரது சமயங்களைப் பற்றிய பேச்சே ஈண்டு வேண்டுவதில்லை. அச்சமயங்கள் சத்தைப்பற்றியனவல்ல. அவை மூர்க்கச் சண்டைச் சமயங்களென்று ஒதுக்கற்பாலன. காந்தியடிகள் கொண்டது, அன்பையும் அஹிம்சையையும் அடிப்படையாக் கொண்ட சத்தை ஆக்கிரகித்து நிற்குஞ் சத் சமயமாகும்; அதாவது சன்மார்க்கமாகும். அதை எப்பெயரால் அழைத்தாலென்ன? காந்தியடிகளின் கருத்தை நோக்குங்கள். உண்மை விளங்கும்.

**அடிகள் சமயம் சன்மார்க்கம்**

'சமயமென்ருல் என்ன? உலகிலுள்ள வேதங்களை யெல்லாம் படிப்பது சமயமன்று; அவைகளை மூளையில் பதியவைப்பதன்று. சமயம், இதயத்தில் இரண்டற நிற்பது. அது நமக்கு வேருகத் தனித்து நிற்பதன்று. அஃதென்றும் நம்மோடு ஒன்றி இருப்பது.'

'சமயமென்பது ஒழுக்கம். நாம் ஒழுக்கத்தை நீத்ததும் சமய நெறியினின்றும் பிறழ்ந்தவராகிறேம்.'

'சமயத்தின் சாரம் ஒழுக்கமே.'

'சமயமில்லா வாழ்வு பற்றுக்கோ டில்லாதது; பற்றுக்கோடில்லா வாழ்வு சுக்கானில்லாக் கப்பல் போன்றது.'

'நமது சமயம் அஹிம்சையை அடிப்படையாகக்கொண்டது. அஃது அன்பன்றி வேறில்லை. அன்பெனில் சுற்றத்தாரையும் நண்பரையும் மட்டும் நேசிப்பதன்று. மாற்றாரையும் நேசிப்பது அன்பு.'

'தென்னாப்பிரிக்கா வெள்ளையர் கருமையரைத் தாக்குகிறார் (1946). அவ்வெள்ளையருள் விலங்கியல்பு நுழைந்துள்ளது. அவ்வியல்பை அன்பால் - தாம் வருந்தலால் - சத்தியாக்கிரகத்தால் போக்கவே கருமையர் முயலல்வேண்டும். வெள்ளையர் என்னும் மக்கள்மீது பகைமை கொள்ளலாகாது. மக்கள்பாலுள்ள விலங்கியல்பை ஒழிப்பது சமயத் தொண்டாகும். விலங்கியல்புடைமை சமய வாழ்க்கையன்று. விலங்கியல்பு அற்ற வாழ்க்கையே சமயத்தின்பாற்பட்டது.'

'ஒருவன் சமயப் பற்றுடையவனாக விரும்புகிறான். அதை நிறைவேற்ற அவன் என்செய்தல் வேண்டும்? அவன் தன் வாழ்நாள் முழுவதும் எல்லா உயிர்வகைகட்கும் தொண்டாற்றிக்கொண்டிருத்தல் வேண்டும்.'

'தன்னையறிவதே சமயம்.'

இம்மொழிகளில் சமய நுட்பம் பொலிதல் காண்க.

காந்தியடிகள் பிறந்த சமயம் வைஷ்ணவமாதலால் அவர் வைஷ்ணவரென்றும், அவர் காலை வேளையில் சிவபெருமானைப் பாவ மன்னிப்பு நோக்கி வழுத்தலால், அவர் சைவத்திலும் பற்றுடையாரென்றும், அவர் பிறவியில் வைஷ்ணவராயிருந்தாலும், 'அவரது வழக்க ஒழுக்கம் முதலியன சமணச் சார்பு கொண்டிருத்தலானும், அஹிம்சா தர்மத்தை அளவுகடந்து அவர் வலியுறுத்த

லானும், இரவில் உணவுகொள்ளாது மாலை வேளைக்கு முன்னரே உணவருந்தலானும், நெற்றியில் குறியொன்றும் பொறியாதிருத்தலானும், ஹிந்து கோயில்களுக்குப் பெரிதும் போகாதிருப்பதானும் அவர் சமணரென்றும், புத்தரென்றும், சத்தியாக்கிரக உணர்வு கிறிஸ்துவின் மலைப்பொழிவைப் படித்தபோது தமக்குப் பிறந்ததென்று அடிகள் சொல்லியிருத்தலானும், அடிக்கடி கிறிஸ்துவின் பெயரையும், பைபிலையும் எடுத்தாளலானும், பாவ மன்னிப்புக் குறித்து ஆண்டவனை வழுத்தலானும் அவர் கிறிஸ்துவரென்றும், காந்தியடிகள் கிலாபத்துக்குழைத்தமையானும், மகமது நபியைப்பற்றி உயர்வாகப் பேசியிருப்பதானும், கொரானிடத்தில் அவருக்குப் பற்றுண்மையானும் அவர் இஸ்லாமானவரென்றும், இன்னும் வெவ்வேறு விதமாகவும், பலர் பலவாறு சொல்வதுண்டு. காந்தியடிகளை எல்லாச் சமயத்தவரென அறிஞர் கோடல் போற்றற்குரியதே.

**வைஷ்ணவம்**

காந்தியடிகள் பிறந்த சமயம் வைஷ்ணவமாயினும் அதை அவர் பிறப்பளவில் மட்டுங் கொண்டு நின்றாரில்லை. அடிகள் வைஷ்ணவம் எல்லாச் சமயங்களாகவும் மிளிர்வது. நெற்றியில் திருமண்ணையோ கோபியையோ சந்தனத்தையோ எதையோ அணிந்து, மற்றச் சமயத்தவரைக் கண்டால் கண்ணை மூடிக்கொள்வது வைஷ்ணவமாகாது. பின்னை வைஷ்ணவம் எது? விஷ்ணு தொடர்புடையது வைஷ்ணவம். விஷ்ணு என்னுஞ் சொல் எதைக் குறிக்கிறது? விஷ்ணு என்னுஞ் சொற்கு எங்கும் நிறைந்த ஒன்று என்பது பொருள். எங்குமுள்ள எம்பெருமான் விஷ்ணு

மூர்த்தி மற்றச் சமய மக்கள் உள்ளத்து இராரோ? எங்குமுள்ள எனைதையனை ஒரு கோயிலிலும், ஒரு கூட்டத்தாரிடத்திலுஞ் சிறைப்படுத்தி, மற்றவரை நிந்திப்பது, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அவனது முழு நிலையை மறுப்பதன்றோ? ஆகவே, குறுகிய கொள்கையுடையவர் உண்மை வைஷ்ணவராகாரென்க.

உண்மை வைஷ்ணவம் எது? எங்கும் எவ்வுயிரிலும் விஷ்ணு உண்மை கண்டு, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யா ஒரு பெரும் அருணெறியே உண்மை வைஷ்ணவம். இது காந்தியடிகள் வைஷ்ணவம். இவ்வைஷ்ணவம் உலகிலுள்ள எவ்வருளாளர்க்கும் உரியது. இஃதொரு கூட்டத்தார்க்குமட்டும் உரியதன்று. கூர்ஜர மொழியில், 'வைஷ்ணவன் யாவன்? என்னுந் தலைப்புடைய ஒரு பாட்டுண்டு. அதைக் காந்தியடிகள் தமக்கினியதாக்கொண்டு பாடுவது வழக்கம். அப்பாட்டு வைஷ்ணவத்தின் உண்மையைப் புலப்படுத்துவது. அது வருமாறு:—

'வைஷ்ணவஜன தோ தேனே கஹியே ஜோ பீடபராயீ ஜாணேரே - பாதுக் கே உபகார கரே தோயே மன அபி மான ந ஆணே ரே.

ஸகல லோக மா ஸௌநே வந்தே நிந்தா ந கரே கேனீ ரே - ஜிஹ்வாத்தகி அஸத்ய ந போலே பர தன நவ ஜாலே ஹாா த்தரே.

ஸமதிருஷ்டி னே திருஷ்ணு த்யாகி பரஸ்திரீ ஜேனே மாதரே - வாசகாச்ச மன நிஸ்சல ராக்கே தன தன ஜனனீ தேநீரே.

மோஹ மாயா வ்யாபே நஹி ஜேனே திருடவைராக்ய ஜேனு மன மாரே - ராம நாம ஸுங் தாலீ ஸகலதீரத தேனு தன்மாரே.

வணலோ பீனே கபட ரஹித ச்சே காம க்ரோத நிவார்
யாரோ - பணே நரசையோங் தேஹுரங் தரபூன கர்தாங் குல
வகோதேர தார்யாரே.'

இப்பாட்டின் கருத்தைத் தமிழில் பாச்செய்யுளாக்கி கண்டுத் தருகிறேன்.

பிறர்துயரைத் தன்துயராப் பேணியவர்க் கேவல்செயுந்
திறனதனைப் பாராட்டாத் திடமுடையான் ஏவனவன்.

எல்லாரை யும்வணங்கி இகழாதான் ஒருமனையான்
சொல்லாரும் மனந்தூயான் தொழுந்தகையாள் அவன்தாயே.

சமநோக்கன் தியாகமுளான் தாயென்பான் பிறமனையை
அமைநாவால் பொய்மொழியான் அந்நியர்தம் பொருள்தீண்டான்.

மோகமொடு மாயைநண்ணான் முழுவைராக் கியமுடையான்
ஏகன்பெய ரின்பந்தோய்ந் திருந்தீர்த்தம் உடலாவான்.

காமவுலோ பஞ்சினமுங் கரவுமிலான் வைணவனே
ஏமநல்கு மவன்காட்சி எழுபானோர் தலைமுறையே.

காந்தியடிகள் சிவபரஞ்சுடரைச் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் பாவமன்னிப்புக் குறித்து நாடோறுங் காலையில் தொழுவது வழக்கம். இதைக் கொண்டு அவரைச் சைவர் என்று கொள்வது தவறாகாது. ஆனால் மற்றச் சமயத்தவரைக் கண்டதும் எரிந்துவிழும் சைவம், காந்தியடிகளுடையதன்று. 'எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்று - எவ்வுயிர்க்கும் அன்பா யிரு' என்று சைவ சமயநெறி சாற்றுகிறது. எவ்வுயிரிடத்திலும் அன்பா யிருத்தல் சைவமென்பது. இக்காரணத்தால் சிவத்தைக் ('Shiva God of mercy') 'கருணைக் கடவுள்' என்று காந்தியடிகள் தொழுகிறார். 'சத்தியாக்கிரக ஆசிரமத்தில்,

சைவம்

காலஜெபத்தில், தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படும் எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு கருணைக்கடவுளாகிய சிவபரம்பொருளை நாங்கள் வேண்டுகிறோம்' என்பது காந்தியடிகள் திருவாக்கு. மேற்கூறிய வைஷ்ணவத்துக்கும் இங்குக் கூறிய சைவத்துக்கும் என்ன வேற்றுமை? சொல்லிலா சண்டை?

சமணம்

காந்தியடிகள் வழக்க ஒழுக்கம் முதலிய பல, சமண சமயத்திற்குரியன என்பதில் ஐயமில்லை. காந்தியடிகள் பிறந்த கூர்ஜரத்தில் பெரிதும் எங்கும் சமண மணங் கமழ்தலுண்டு. ஆங்கே வறக்குறைய எல்லாச் சமயத்தாரும், சமண குருமாரிடத்தில் அன்பு செலுத்துவர். காந்தியடிகள் இங்கிலாந்து செல்லத் தாயாரைக் கேட்டபோது, தாயார் ஒரு சமண முனிவரர் ஆணையிட்டவாறே மூன்று உறுதிமொழிகளை அடிகள்பால் பெற்றனர். அம்மூன்றும் இன்னவென்று முன்னர்க் குறிக்கப்பட்டன. சமணம் ஒரு தனிச்சமயமன்று. 'அஹிம்சா பரமோதர்ம:' என்னும் பேரறத்தை அடிப்படையாக்கொண்டு நிலவுவது அச்சமயம். அஹிம்சா தர்மத்தைமறுக்குஞ் சமயமொன்று உலகிலிருக்குமா என்பது எனக்குத்தெரியவில்லை. அவ்வறத்தை விருஷபதேவர் மஹாவீரர் முதலியோர் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார்க்கு மட்டும் அறிவுறுத்தினரில்லை. அஹிம்சா தர்மம் மன்பதைக்குரியது. அதைக் காந்தியடிகளுங்கொண்டொழுகுகிறார். காந்தியடிகள், 1916 அக்டோபரில் 'மாடர்ன் ரெவியு' என்னுஞ் சஞ்சிகையில் தாம் எழுதிய ஒரு சிறு கட்டுரையில்,

'யான் பிறப்பில் வைஷ்ணவன். இளமையிலேயே எனக்கு அஹிம்சை அறிவுறுத்தப்பட்டது. உலகிலுள்ள மற்

றச் சமய நூல்களிலிருந்து உண்மை பெற்றதுபோல, சமண சமய நூல்களிலிருந்தும் பல உண்மைகள் பெற்றேன். சமண தத்துவ சாஸ்திரியாராகிய இராஜசந்திர கவிக்கு யான் பெரிதுங் கடப்பாடுடையேன்'

என்று குறித்திருப்பதை நோக்குக.

சமண சமயத்தோடு ஒரோவழித் தொடர்புடைய பௌத்த தர்மத்தை அறிவுறுத்திய புத்தர் பெருமான் மீது காந்தியடிகட்கு அளவிறந்த பற்றுண்டு. புத்தர்பெருமான் போதனைக்குச் செவிகொடாதவன் மனிதனுகான். மனிதனுகப் பிறந்து வாழ்வின் நுட்பம் உணர்ந்த ஒருவன், புத்தர் பெருமான் புனித அறத்தை எங்ஙனந் தள்ளுதல்கூடும்? 1924-ம் ஆண்டு மேமாதம் பதினைந்தேதி ஜுஹுவில் கொண்டாடப்பெற்ற புத்தர் பிறந்த திருநாள் விழாவில் தலைமை வகித்து மகாத்மா பொழிந்த சொற்பெருக்கில் அவர் பௌத்த சமயத்தைப்பற்றிக் கொண்டுள்ள கருத்து இனிது வெளியாயிற்று. அப்பொழிவின் சாரம் வருமாறு :—

பௌத்தம்

'பகவான் புத்தர் எவ்வறத்தை உலகில் நம்பினரோ அவ்வறத்தைப் பரப்ப யான் முயன்று வருவதே என்னை இங்குத் தலைமை வகிக்கச் செய்ததற்குக் காரணம். புத்தர் புதியதொரு மதத்தைக் கண்டாரில்லை; உள்ள ஒன்றற்கே உயிர் கொடுத்தார். பிற உயிரைப் பலியிடுவது யாகமன்று. தன்னைத் தியாகஞ் செய்வதே உண்மையான யாகம். ஹிந்து வேதத்தில் சொல்லப்பட்ட யாகத்துக்குப் புத்தர் இப்புதுப் பொருள் கொண்டார். இது வேதத்தைக் குறைகூறியதாக அவர்மீது பழிசுமத்தப்பட்டது. வழக்கம்போலப் புரோகிதர் தீர்க்கதரிசியைச் சாய்த்துவிட்டார். புரோகிதர்

வேதத்தின் எழுத்தைப் பொருளாகக் கொண்டு கருத்தை மறந்துவிட்டார். அன்பும் உண்மையும் முடிவில் வெற்றி தருமென்பது புத்தர்பெருமான் போதனை.'

கிறிஸ்துவைப்பற்றிக் காந்தியடிகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பற்பல. காந்தியடிகள் தமது சத்தியாக்கிரக உணர்விற்குக் காரணமாக நின்றது மலைப்பொழிவென்று சொல்லியிருப்ப தொன்றே சாலும். காந்தியடிகளின் வாழ்விற்கும் கிறிஸ்துவின் வாழ்விற்கும் பெருந்தொடர்புண்டு. கிறிஸ்துவே மீண்டுங் காந்தியடிகளாக வந்தார் என்றுஞ் சிலர் கருதுகிறார். பொறுமை, பிறர்க்கின்னா செய்யாமை, துன்பஞ் சகித்தல், பாவமன்னிப்புக் கருதிக் கடவுளை நோக்கி வழுத்தல், நாளைக்கு என்செய்வோமென்று அஞ்சாதிருத்தல் முதலியன கிறிஸ்துவின் போதனைகளிலுள்ள சாரம். இவை காந்தியடிகள் வாழ்வாம் மலரில் மணமெனக் கமழ்ந்துகொண்டிருத்தல் எவரும் அறிந்த தொன்று. இம்முறையில் காந்தியடிகளைக் கிறிஸ்துவ ரென்று கொள்ளல் தவறாகாது. காந்தியடிகள் கிறிஸ்துவ நேயர் என்பதற்குச் சான்றுகள் பல கூறலாம். இங்கே இரண்டொன்றை எடுத்துக்காட்டல் சாலும். காந்தியடிகள் வாழ்க்கை தியாகத்தை அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்துவம் தியாகத்துக்குரியது. கிறிஸ்துவத்தைத் தியாகம் என்றே சொல்லலாம். கிறிஸ்துவச் சிலுவை தியாகத்துக்கு அறிகுறி. 'சிலுவையைத் தாங்கி என் பின்னே வாருங்கள்' என்பது கிறிஸ்து பெருமான் திருமொழி.

கிறிஸ்துவம்

காந்தியடிகள் ஒருமுறை ரோமாபுரிக்கு எழுந்தருளினார். அதுபோழ்து போப்பைக் காண்டல் வேண்டும்

என்ற அவா அவர்பால் எழுந்தது. அதை நிறைவேற்ற அடிகள் போப்பின் நிலையம் போந்தார். அங்கே கிறிஸ்து அறையப்பெற்ற ஓர் அற்புதமான சிலுவை ஓவியம் காட்சியளித்தது. அக்காட்சி அடிகளின் நெஞ்சை உருக்கியது; கண்ணீரைப் பெருக்கியது. அடிகளின் கால்கள் அப்பெருஞ் சிலுவைக் கோலத்தை வலம் வந்தன. தியாகமூர்த்தியின் நெஞ்சைத் தியாகச் சிலுவை கவர்வது இயல்பே.

ஸர். ராதாகிருஷ்ணனால் தொகுக்கப்பெற்ற ஒரு நூலில் பல அறிஞர் கட்டுரைகள் ஒளிர்கின்றன. அவைகளுள் ஒன்று அறிஞர் ஜான் எஸ் ஹாய் லண்ட் என்பவருடையது. அக்கட்டுரை முழுவதும் காந்தியக் கிறிஸ்துவம் மலர்ந்துள்ளது. அம்மலரில் சிற்சில இடங்களில் சிலுவை மணங் கமழ்கிறது. அம்மணத்தைச் சிறிது முகர்வோம்.

> '* * * இவரால் (காந்தியடிகளால்) கிறிஸ்துவச் சிலுவையின் உட்கிடக்கை மீண்டும் உயிர்த்தெழும் * * * சிலுவையின் உட்கிடக்கையை காந்தியடிகள் இங்குத தெளிவு செய்கிறார். * * * அவர் பர்மிங்காமிலுள்ள எங்கள் நிலையம் போந்தபோது, 'வியக்கத்தக்க அச்சிலுவையை யான் நோக்கும்போது * * *'† என்னும் பாட்டைப் பாடுமாறு கூறினார்.

---

†When I survey the wondrous Cross
On which the Prince of glory died
My richest gain I count but loss,
And pour contempt on all my pride.
* * * *

காந்தியடிகள் தம்மை ஹிந்து என்று சொல்கிறார். ஆனால் அவர் கிறிஸ்துவத்தை நம்மினுஞ் செவ்வனே உணர்ந்துள்ளார் என்பது நன்கு தெரிகிறது'

வேறு சில அறிஞரின் கருத்துக்களையும் சுருங்கிய முறையில் ஈங்கே காட்டுகிறேன்.

"ஏசுவின் வாழ்க்கைத் தத்துவம் காந்தியடிகள் வாழ்க்கையின் ஒழுக்கமாகியது. கிறிஸ்துபெருமான் வாய்மொழி அடிக்கடி அடிகளால் ஓதப்படுகிறது. கிறிஸ்துவத்தின் தன்னலத் தியாகமும், ஏசுவின் மலைப் பொழிவும் காந்தியடிகளின் வாழ்க்கையாய்ப் பரிணமித்தன. 'உலகில் ஒரே கிறிஸ்து உதித்தார். அவ்வொருவர் சிலுவையில் அறையப் பட்டார்' என்று நீட்ஷே சொன்னான். 'இவன் இன்னுஞ் சிலநாள் உயிரோடிருந்தால் தன்கருத்தை மாற்றியிருப்பன்'"
—(வேவெலின்பவிஸ்)

'இக்கால உலகில் ஒரு கிறிஸ்து இருக்கிறார். அவர் ஹிந்து. இது நமக்கு வியப்பூட்டும். * * * இந்நாளில் ஏசுபெருமான் அடியவராகக் காந்தியடிகளே சிறந்து விளங்குகிறார்'—(சகோதரி மாட்ராய்டன்)

"காந்தியடிகள் லண்டனில் தங்கியபோது, சர்ச் ஆப் இங்கிலாந்த் பாதிரியார், அடிகளை நோக்கி, 'நாங்கள் உண்மைக் கிறிஸ்துவ வாழ்க்கையை நடாத்த என்செய்தல்வேண்டும்? சுருங்க எழுதித்தாருங்கள்' என்று வேண்டித் தாள்களை நீட்டினர்."—(சகோதரி கிளேர் ஷெரிடன்)

'எனது வாழ்க்கை பண்படுதற்குத் துணைபுரிந்த பெரியோர் சிலர். அவருள் ஒருவர் ஏசுநாதர். அவர் எனது உள்ளத்தில் ஒரு தனியிடம் பெற்றுள்ளார்' என்று அடிகள் அருளியது ஈண்டு ஊன்றி நோக்கத் தக்கது.

ஸி. எப். ஆண்ட்ரூஸ் உள்ளிட்ட அன்பர்களைப் பார்த்துக் காந்தியடிகள், 'அருட்சோதி ! அழைத்துச் செல்' என்னுங் கிறிஸ்துவப் பாடலைப் பாடுமாறு பணித்தது உலகறிந்ததொன்று.

'நாளைக்கென்று கவலைப்படாதே' என்னுங் கிறிஸ்வின் திருமொழிக்கு முற்றும் மாறுபட்டு, மாதம் மாதம் ஆயிரம் ஆயிரம் பெற்றுக் கூலிக்கு மாரடிப்போர் மதம் காந்தியடிகட்குப் பிடிப்பதில்லை. அதைப்பற்றி அவர் பல இடங்களில் மறுத்திருக்கிறார். கூலிக்கு மாரடிப்போர் மதமாவது எண்ணிக்கையில் ஜனத்தொகையைப் பெருக்க முயல்வது. உடலளவில் மதமாறலால் என்ன பயன் ? இது குறித்துக் காந்தியடிகள்,

> 'இலௌகிக நலத்துக்காக ஒரு மதம் விடுத்து மற்றொரு மதம் புகல் நியாயமெனப்படின் யானும் சிறிதுந் தயங்காது அதை ஆதரிப்பேன். ஆனால் மதமென்பது இதயத்தைப் பற்றியதொன்று. உடல் நலத்துக்காக ஒரு மதத்தை விடலாகாது'

என்று கூறியிருத்தல் காண்க.

இஸ்லாம்

இஸ்லாம் மதத்தின்மீது காந்தியடிகட்குள்ள அன்பு, ஐரோப்பாப் போர் முடிவில் கிலாபத்துக்கு நியாயம் பிறவாதபோது வெளிப்பட்டது. கிலாபத்துக்காகக் காந்தியடிகள் பட்டபாடு சமய உலகில் பதிந்து கிடக்கிறது. 'கிலாபத் காமதேனு' என்று அடிகள் அருளியிருக்கிறார். நபிநாயகத்தைப்பற்றியும் கொரானைப்பற்றியும் அவர் பல நல்லுரை பகர்ந்திருக்கிறார்.

இங்குக் கூறப்படாத* மற்றச் சமயங்களுங் காந்தியடிகட்கு உடன்பாடே. சமயப் பெயர்களில் - எழுத்துக்களில் - மட்டும் காந்தியடிகள் கருத்தைச் செருகினாரில்லை. சமயங்களின் ஒருமைப்பொருள் நுட்பம், அடிகள் வாழ்வில் இரண்டறக் கலந்தமையால், அவருக்கு எல்லாச் சமயங்களும் ஒரே சத் சமயமாக - சத் மார்க்கமாகத் தோன்றுகின்றன. அந்தச் சத்துடன் ஆக்கிரகித்து நிற்றலைச் சத்தியாக்கிரகமென்று அடிகள்கொண்டது உலகம் அறிந்ததொன்று. சத்தியாக்கிரகத்துக்கும் அஹிம்சா தர்மத்துக்கும் உள்ள தொடர்பு முன்னே பல இடங்களில் விளக்கப்பட்டது. இரண்டும் ஒன்றே என்று கூறல் மிகையாகாது. ஒன்று காரணம்; மற்றொன்று காரியம். அஹிம்சையற்ற சத்தியாக்கிரகம் வெறும் போலியேயாகும். அஹிம்சை, பகைமை பொறாமை முதலியவற்றைக் கடந்தொளிர்வது; அங்கே விளங்குவது சமரசம். ஆகவே, அடிகள் சமயத்தைச் சமரச சன்மார்க்கம் என்று கூறல் பொருந்தும். 'தயையுடையா ரெல்லாருஞ் சமரச சன்மார்க்கஞ் சார்ந்தவரே' என்றும், 'அருளுடையா ரெல்லாருஞ் சமரச சன்மார்க்கஞ் சார்ந்தவரே' என்றும் இராமலிங்க சுவாமிகள் அருளியிருத்தல் காண்க. சமய நிலையைப்பற்றிக் காந்தியடிகள் வெளியிட்ட கருத்துக்களுள் சில வருமாறு :—

சமரச சன்மார்க்கம்

---

* விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினால் சொன்ன ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்'

—அப்பர்

'உலகிலுள்ள பெருமைச் சமயங்களில் எதைக் குறை கூறுவதிலும் யான் கலந்து கொள்ளேன்.'

'கொரான், பைபில், கீதை முதலிய பல வாயில்களால் கடவுளைக் காண்பதைக்கொண்டு, ஒருவரோடொருவர் சண்டையிட்டு என் தேவதூஷணைக்கு ஆளாதல் வேண்டும்? ஒரே ஞாயிறு ஹிமயமலைமீதும் நிலத்தின்மீதும் ஒளி வீசுகிறது. ஞாயிற்றின் ஒளி படர்தலில் உறும் வேற்றுமைகாரணமாக மலைப்பக்கமுள்ளவரும் மற்றவரும் போரிட்டுக் கொள்ளல் வேண்டுமோ?'

'ஹிந்து சமயம் முதலியவற்றை யெல்லாம் நிறுத்துப் பார்த்தால், அவைகளின் அடிப்படையான உண்மை ஒன்றே என்பது பெறலாம். கடவுள் ஒருவரே. வேறுபட்ட வழக்க ஒழுக்கங்களால் பிணங்காது, உண்மை என்னுஞ் செம்மை வழிபற்றி நடப்போமாக.'

'கடவுளினிடத்திலும், அவரது அருளினிடத்திலும் உறுதிகொண்டிருப்போர் எம்மனிதர்மாட்டும் பகைமை கொள்ளல் கூடாது, ஆனால் மக்களின் தீய முறைகளை மறுத்தல் வேண்டும்.'

'என்னுடைய சமயம் சிறைக்கூடு போன்றதன்று. கடவுள் படைப்புக்குட்பட்ட எல்லாவற்றிற்கும் அதன்கண் இடனுண்டு.'

'சமயங்களின் உயிர்நாடி ஒன்றே.

'ஒரு கடவுளிடத்தும், அவரது வழிவரும் நபிமார்களிடத்தும் என்றும் உடையாத உறுதிகொள்வது மாத்திரம் இஸ்லாம் மதத்துக்குச் சாலுமானதாயின், நாமனைவரும் முஸல்மான்களே. முஸல்மான்களாயிருப்பதோடு ஹிந்துக்களாகவும் கிறிஸ்துவர்களாகவும் இருக்கிறோம்.'

'சத்தியம் ஒரு சமய வேதத்துக்கு மட்டும் உரிய உடைமையன்று.'

'கொரானைக் கொள்வதில் எனக்குச் சிறிதும் தயக்க மில்லை. பைபில், ஜெந்த அவஸ்தா, கிரந்தசாஹிப் முதலிய எம்மத நூல்களையும் யான் ஏற்பேன். மறைமொழி ஒரு நாட்டுக்கோ ஒரு வகுப்புக்கோ மட்டும் உரியதன்று.'

'நாம் அனைவரும் ஒரே பரம பிதாவின் பிள்ளைகள். அப் பிதாவை ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவன் முதலியோர் வெவ்வேறு பெயரால் போற்றுகிறார்.'

'எம்மதமோ எந்நாடோ அநீதிக்கும், பொய்மைக்கும், கொலைக்கும் இடந்தருமாயின், அது பூமியின்மீது அழிக்கப் படும். கடவுள் ஒளியாயிருக்கிறார்; இருளா யில்லை. கடவுள் அன்பு; பகைமையன்று. கடவுள் உண்மை; பொய்மை யன்று. கடவுள் ஒருவரே பெரியவர்.'

'கடவுள் என்பது சத்தியம். அதை எனக்குக் காட்டும் ஒளி அஹிம்சை. அச்சத்தியத்தின் ஒரு பகுதி யான் குறிக்குஞ் சுயராஜ்யம். சத்தியாக்கிரகம் என்றும் வீழ்ச்சி யடையாததென்றும், சத்தியம் ஓம்ப ஒரு பூரண சத்தியாக் கிரகி சாலுமென்றும் யான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். ஆதலால், நாமனைவரும் பூரண சத்தியாக்கிரகியாக முயல்வோ மாக.'

'எனக்குப் புனிதமானது சமயம். இந்தியாவில் இப் பொழுது சமயப் பற்றுக் குறைந்துவருகிறது. இது குறை. இங்குச் சமயம் என்று யான் சொல்வது ஹிந்து மதத்தையோ, இஸ்லாமையோ, ஜாரதுஷ்டிரத்தையோ அன்று. எல்லாச் சமயங்கட்கும் அடிப்படையாயுள்ள ஒரு சமயத்தையே யான் குறிப்பிடுகிறேன். குறை யாது? கடவுளிடத்திருந்து ஒதுங்கிச் செல்வது.'

சமய வாழ்வு, உலக முன்னேற்றத்துக்கு முட்டாக நிற்கிறதென்றும், இந்தியா அளவுகடந்து ஆத்மஞானத் துறை நண்ணியதே அதன் உரிமை வீழ்ச்சிக்குக் காரண

மென்றுஞ் சிலர் இந்நாளில் சொல்வது வழக்கம். இவ்வாறு ஒரு நிருபர் அடிகளை வினவினார். அதற்குக் காந்தியடிகள் இறுத்த பதில் :—

'யான் அவ்வாறு கருதவில்லை. ஆத்மஞான விளக்கக் குறைவால் ஹிந்துக்கள் தங்களது வளங்குன்றப் பெறுகிறார்கள். இராஜபுத்திரர் சிறுசிறு விடயங்குறித்துப் போர் புரிந்து இந்தியாவை இழந்தனர். அக்காலத்தில அவரிடம் வெளித்தைரியம் மிகுந்திருந்தது; ஆனால் உண்மை ஆத்ம சக்தி மிகவும் அருகியிருந்தது. இராவணன் தோல்விக்கும் ஸ்ரீராமபிரான் வெற்றிக்கும என்ன காரணம்? பின்னவர்பாலிருந்த ஆத்ம ஞானமே சிறந்த காரணம். உயரிய ஆத்மஞானத்தாலன்றோ பாண்டவரும் வெற்றியடைந்தனர்? நாம் அடிக்கடி ஆத்மஞான நூலறிவையும், ஆத்ம ஞானநுபூதியையும் ஒன்றுபடுத்தி மயக்குறுகிறோம். ஆத்மஞானம் என்பது சமய வேதங்களைப் படித்துணர்ந்து வாதஞ்செய்வதன்று. அஃது உள்ளத்தில் ஒன்றிக் கலக்கத்தக்கதாய், அளவிறந்த ஆற்றலுடையதாயிருப்பது. ஆத்மஞான விளைவின் முதற்பொருள் அஞ்சாமை. கோழைகள் என்றும் ஒழுக்கமுடையவர்களாக இருக்கமாட்டார்கள்.'

**அஞ்சாமை**

காந்தியடிகள் சத்தெனுஞ் செம்பொருட்டொடர்பு கொண்டு அன்புநெறி நிற்றலால், அவர் எதற்கும், எவர்க்கும் அஞ்சுவதில்லை. எத்துணை வாள்வலி தோள்வலியுடைய அரசுகளை நம்மடிகள் எதிர்த்தார்? இஃது 'இயற்கை வாழ்வு' என்னுந் தலைப்பிலும் விரிக்கப்பட்டுள்ளது. சத்துடன் தொடர்புடைமைக்கு முதல் அறிகுறி அஞ்சாமை. இதனை,

'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்

மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டோமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே'

'மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள் சுடரான் கழலிணையே'

எனவரூஉம் அப்பர் சுவாமிகள் திருவாக்கிற் காண்க.

மனிதன் என்னும் மரத்துக்குச் சமயம் ஒளி போன்றது. காந்தியடிகள் சத்தியாக்கிரகமெனும் ஒரு பெரும் மரமா யிலங்குகிறார். அவர் தம்மீது சத்தெனும் பேரொளி படருமாறு இயற்கை எளிமை வழியில் தமது வாழ்வை நடாத்தி வருகிறார். அவரைப் போலவே மற்றவரும் அவ்வாழ்வில் தலைப்படுவாராக. இனிவரும் உலகம் அஹிம்சா தர்ம மயமாகும் என்பதில் ஐயமில்லை. அவ்வுலகத் தோற்றத்துக்கு முன்னர் இது போழ்து மூர்க்க சக்திக்கும் ஆத்ம சக்திக்கும் பெரும் போர் நடக்கிறது. அப்போரிடைச் சமய வாழ்வெனுஞ் சத்தியாக்கிரக கீதையை மகாத்மா அறிவுறுத்துகிறார். அது செவியுளோர் செவியில் கேட்டே வருகிறது. உலகில் ஒடுங்கியுள்ள சமய வாழ்வைப் புதுக்கத் தோன்றிய அடிகள் வாழ்க, யாண்டுஞ் சமய வாழ்வு பெருக.

## ௩௯. சாது நிலை

சமய வாழ்வின் முழுத்தன்மை ஒருவனுக்குச் சாது நிலை கூட்டும். மாக்கள் நிலையினின்றும் மக்கள் நிலை எய்துவது சாதுநிலை எய்துவதாகும். சாதுவின் இயல்பு முன்னே சுருங்கச் சொல்லப்பட்டது. மகாத்மா காந்தி ஒரு பெருஞ் சாது என்பது எனது கருத்து. காந்தியடிகள் மக்களிடை வாழ்கிறார்; பேசுகிறார்; தொண்டு செய்கிறார். அவர்க்கு மனைவி மக்களுண்டு. அவர் காவியுடுத்துவதில்லை; தாடி வளர்ப்பதில்லை; மொட்டையடிப்பதில்லை. ஆனால் அவர் சினத்தை வென்றிருக்கிறார்; காமனைக் காய்ந்திருக்கிறார். அவர் உள்ளம் அலையற்ற கடல்போல் அமைதியாயிருப்பதை அவரது முகம் அறிவிக்கிறது. அடிகள் ஓயாது, கைம்மாறு கருதாது, பிறர்க்கு உழைத்து வருகிறார். இந்நிலை சாதுவினுடையது.

காந்தியடிகள் போதனை உலகியலுக்கு உரியதன்றென்றும், அது சாதுக்களுக்கு உரியதென்றும், ஆதலால், காந்தியடிகள் எல்லாவற்றையுங் கட்டிச் சுருட்டிக் காட்டுக்கோட வேண்டுமென்றுஞ் சிலர் சொல்வது எனக்குத் தெரியும். அவ்வாறே ஒரு நிருபர் காந்தியடிகளைக் கேட்டார். அவர் கடிதத்தின் சுருக்கம் வருமாறு:—

**உலகமும் சாதுவும்**

(3-4-1924) 'யங் இந்தியா'

'யான் ஒரு பிராமணன்; டாக்டர்; தங்களைப்போல யானுங் கிழவன். தாங்கள் உலகை நன்றாகப் பயின்றிருக்கிறீர்கள். அதனால் தங்கட்கு நல்ல அனுபவம் ஏற்பட்

டிருக்கிறது. அழிதன்மாலையதான இவ்வுலகில் எவரும் தம் வாழ்நாளில் மேற்கொண்ட ஒன்றைச் செயலில் நிறைவேற்றினரென்று தெரியவில்லை. புத்தர் தமக்குள்ள உயரிய ஒழுக்கத்தானும், இந்தியா முழுவதும் பௌத்த மதத்தைப் பரப்பாதொழிந்தார். சங்கரர் நுண்ணிய கூர்த்த அறிவு பெற்றும் இந்தியாவை வேதாந்த மயமாக்கினரில்லை. கிறிஸ்து மேலான ஆத்மார்த்த ஞானம் பெற்றிருந்தும் யூதர் அனைவரையுங் கிறிஸ்து மதத்தைத் தழுவச்செய்தல் அவரால் முடியாமற் போயிற்று. இவ்வுலகம் பொல்லாதது. எவன் இவ்வுலகில் அழுந்துகிருனே அவன் ஆத்மார்த்த சாந்தத்தையும், அமைதியையும் இழக்கிறன். சிறை வாசமும் நோயும் தங்கள் உடல் வளத்தைக் குலைத்திருக்கின்றன. ஆதலால் தாங்கள், ஒரு குகையில் நுழைந்து, கடவுளைத் தியானஞ்செய்து, தன்னைத் தானறிந்து, சாந்த நிலை வழங்கும் ஆத்மார்த்த வழியில் காலங் கழிப்பீர்களாக. இப்பூமியில் ரிஷிகளும் முனிவர்களும் மற்றப் பெரியோர்களும் புரிந்த ஆத்மார்த்தத் தொண்டைத் தாங்கள் செய்து இந்திய சகோதரரைப் பாரமார்த்திக வழியில் திருப்புவீர்களாக. இதனுல் இவ்வுலக சுயராஜ்யததுக்குப் பதிலாகப் பரலோக சுயராஜ்யமடைவீர்கள்.'

இதற்குக் காந்தியடிகள் இறுத்த பதிலின் சுருக்கம் வருமாறு :—

'புத்தர் நிர்வாணமடையாமற் போகவில்லை. கிறிஸ்து சிலுவையில் தமது நிலையைப் புலப்படுத்தாமற் போகவில்லை. அவர்கள் கொள்கையைப் பிறர் தழுவலும் தழுவாமையும் அவர்களைப் பொறுத்தனவல்ல. அவர்களோடு ஒப்பிடப் படுதற்கு யான் அருகனல்லன். பரலோக ராஜ்யத்தின் பொருட்டே யான் உழைத்து வருகிறேன். எனது நோ

கத்தை நிறைவேற்றிக்கொள்ள யான் குகைக்கு ஓட வேண்டுவதில்லை. குகையில் வாழ்வோன் எந்நேரமும் ஆகாயக்கோட்டை கட்டிக்கொண்டிருப்பன். அரண்மனையில் ஜனகனைப்போல் வாழ்வோன் அக்கோட்டை கட்டமாட்டான். ஒரு ஜனகன் உலக உல்லாச வாழ்விடை உழன்ற போதிலும் மனச்சாந்தி அவன்பால் நிலைத்திருக்கும். விடுதலைக்குரிய வழி, தேச ஊழியத்திலும் சமூக ஊழியத்திலும் பொருந்தியிருக்கிறது. உலகியல்களில் நன்றாகக் கலந்து கொள்ள விரும்புகிறேன்; கீதை கூறுமாறு நண்பரிடத்தும் மாற்றாரிடத்துஞ் சமாதான புத்தியுடன் வாழ விரும்புகிறேன். என் மனைவியோ குமாரனோ என்னை நிந்திப்பினும் அவரை யான் நேசிப்பதுபோல ஹிந்துவோ முஸ்லிமோ கிறிஸ்துவனோ வேறு எவனோ என்னைப் பொருட்படுத்தாது நிந்தித்தாலும் அவனை நேசித்து அவனுக்குத் தொண்டு செய்வேன். அழியா உரிமையும் அமைதியுமுள்ள உலகம் புக எனது தேசபக்தி ஓர் ஏணியாயிருக்கிறது. ஆகவே, சமயத் தொடர்பில்லாத அரசியலிருத்தலரிது. சமய ஞானம் பெறாத அரசியல் படுகுழியாகும். ஏனெனில் அஃது ஆத்மாவை அழிப்பது.'

இவ்வுரைகளால் காந்தியடிகளின் நிலை செவ்வனே புலனாகிறது.

சாதுக்கள் என்போர் தனித்துக் காட்டில் வாழ்தல் வேண்டுமென்று நினைப்பவர் உலகியலையும் நன்கு உணராதவரென்க. தன்னலப் பேய்க்குணமின்றி எங்கு எந்நிலையில் இருந்தாலென்ன? உலக மயக்குகள் எவ்வுருவங் கொண்டு மோதினும் தாக்கினும் கலக்குறாது, எவரிடத்தும் பகைமை பொறாமை கொள்ளாது, அமைதி நிலையிலிருந்து, கைம்மாறு கருதாது ஊழியஞ் செய்வது சாது

நிலையாகும். சோர்வு காரணமாகவோ வேறு எக்காரணங் கொண்டோ சேவையை வெறுத்துத் தனித்து வாழ விரும்புவது சாதுநிலையாகாது. காந்தியடிகள் மருத்துவர் சத்திரத்துக்குட்பட்டு மெலிந்திருந்த வேளையிலுஞ் சேவையினின்றும் பிரிந்து நிற்க விழைந்தாரில்லை. உடல் இடந்தாராதொழியினும் மனவழியிலாதல் சாதுக்கள் தொண்டு செய்துகொண்டிருப்பார்கள்.

**திலகரும் காந்தியும்**

அஹிம்சா தர்மத்தைப்பற்றி லோகமான்ய பால கங்காதர திலகரிடையும், காந்தியடிகளிடையும் ஒருமுறை பத்திரிகை வாயிலாக ஓர் அன்பு வாதம் எழுந்தது. அப்பொழுது திலகர் பெருமான், 'அரசியல் உலகியலாரின் விளையாட்டு. அது சாதுக்களுடையதன்று' என்று கூறினார். அதற்குக் காந்தியடிகள், உலகம் சாதுக்களுக்கு அன்று என்று சொல்வது தவறு என்றும், எல்லாச் சமயக்கோட்பாடுகளும் புருஷார்த்த வளர்ச்சியையே அறிவுறுத்துகின்றன என்றும், புருஷார்த்தமென்பது சாதுவாக முயல்வது என்றும், சாதுவாவது அமைதி நிரம்பிய மனிதனாவது என்றும் பதில் விடுத்தார்.

மற்றோரிடத்தில் அடிகள் இந்தியாவில் பதினைந்து லட்சம் 'சாதுக்கள்' இருக்கிறார்களென்றும், அவர்கள் தங்கள் கடன்களைக் குறைவற ஆற்றினால் இந்தியா பெருநலன் பெறுமென்றுஞ் சொல்லியிருக்கிறார். சாது என்பவன் சோம்பியிருத்தல் கூடாதென்பதும், அவன் உலகியலுக்குரிய கடனாற்றியவண்ணமிருத்தல் வேண்டுமென்பதுங் காந்தியடிகளின் கொள்கை. காந்தியடிகளின் வாழ்வையும், அவ்வாழ்விலுள்ள பொறுமை - தியாகம் - கைம்மாறு

கருதா உழைப்பு - அன்பு முதலியவற்றையும் நன்கு ஆராய்ந்து நோக்கினால், காந்தியடிகள் ஒரு சாது என்பது நனிவிளங்கும்.

காந்தியடிகள் போன்ற அருளாளரையே சாது என்று யானுங் கொள்வேன். இச்சாதுக்களால் இவ்வுலகம் நடைபெறுகிறதென்பது எனது கொள்கை. காந்தியடிகளொனும் ஒரு சாதுவால் உலகம் எவ்வளவு திருந்தி இருக்கிறது! அவரைப்போல் ஆயிரம்பேரிருந்தால் இவ்வுலகம் தெய்வத்திருவருள் கொழிக்கும் மெய்யுலகமாகும். திருவருள் நிலையில் பொல்லாத சினம், செருக்கு, பகைமை, பொறாமை, கொலை முதலியவற்றிற்கு இடமேது? ஆண்டவனே! அருளுலகை விரைவில் நல்குக. அவ்வுலகத்துக்குக் கால்கோள்விழா நடாத்திவரும் எம்பெருமான் காந்தியடிகளை மனமொழி மெய்களால் போற்றுகிறேன்.

## கச. தொகுப்பு

ஆண்டவன் மக்கட்கு இவ்வுலக வாழ்வை ஏன் நல்குகிறான்? மக்கள் அனைவருந் தன்னைப்போலாதல் வேண்டுமென்பது அவனது நோக்கம். இஃது அவன் அருட்குணம். மக்கள் அருட்குணம் பெறுதற்குத் துணைநிற்பது இவ்வுலக வாழ்வு. எனவே, இவ்வுலகில் மக்கள் எங்ஙனம் வாழ்தல்வேண்டும்? ஆண்டவனைப்போல வாழ்தல் வேண்டும். மக்கள் எங்ஙனம் அவ்வாறு வாழ்தல்கூடும்? ஆண்டவன் தனது முற்றறிவிற்கும முழுமுதற்றன்மைக்கும் ஏற்றவாறு பயன் கருதாது கடனாற்றுவதுபோல மக்

பிறர்க்குரிய வாழ்வு

களும் தத்தம் அறிவாற்றலுக்கேற்ற அளவு பயன் கருதாது கடனாற்றல் வேண்டும். பயன் கருதாது கடனாற்றுவோர் கடவுட்டன்மை பெறுதல் இயல்பு. பயன் கருதாது பணிசெய்யும் வாழ்வு ஆண்டவன் வாழ்வுபோன்றது. இப்பணிக்கு அருளுணர்வு தேவை.

**பெரியோர் வருகை**

அருளுணர்வு மக்கள்பால் இயல்பாயமைந்திருக்கிறது. இவ்வமைவுக்கு இடையிடையே பல காரணங்களால் கேடு நிகழ்கிறது. கேட்டால் மனிதன் விலங்கு வாழ்வில் வீழ்ந்து தன்னலங் கருதிப் பிறரைத் துன்புறுத்துகிறான். இத்தகைய மனிதனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தவேண்டி, ஆண்டவனருளால் அவ்வப்போது பெரியோர் தோன்றுவது வழக்கம். பெரியோரின் அறிவுறுத்தல் மனிதனைச் செந்நெறியில் நிறுத்தி ஆளும். பெரியோர் தோன்றிப் பல நூறு நூறு ஆண்டுகளாயின. அத்தோற்றமின்மையால், உலகில் உயிர் உண்மையிலும், கடவுள் உண்மையிலும் உறுதி குன்றலாயிற்று; அறநெறி ஓம்புதற்கென ஏற்பட்ட அரசுகள் மறநெறி பற்றி உழலலாயின; வெறும் வாணிபக் குறியும், அக்குறிகொண்ட போட்டியும், பொறாமையும், பகைமையும், போரும் அரசுகளின் நோக்கங்களாயின. இக்காரணத்தால் மனிதன், பேராசைப் பேயால் பிடிக்கப்பட்டு, இயந்திர வாழ்வால் மோதுண்டு, தனது இயற்கைக் குணமாகிய அருளை மறந்தான்; அருளுணர்வை இழந்தான்; நரகத்தில் வீழ்ந்தான். இதுபோழ்து மனிதன் நரகச் சிறையினின்றும் விடுதலை பெறல்வேண்டும். அவ்விடுதலைக்கெனத் தோன்றிய பெரியார் நம் காந்தியடிகள்.

காந்தியடிகள் யார்? அவரென்சொல்கிறார்? அவரென்செய்கிறார்? அவர்க்கும் மனித வாழ்விற்கும் உள்ள தொடர்பென்னை? இவைகளைப்பற்றிக் கூறுவது இந்நூல். மனிதப் பிறவியின் விழுப்பமும், எவன் மனிதன் என்பதும், ஒருவன் மனிதனாக எத்தகைவாழ்வுநடாத்தல்வேண்டும் என்பதும், மனித வாழ்க்கைக்கு இலக்கியமாக இந்நாளில் வாழும் பெரியார் காந்தியடிகள் என்பதும், அவர்தம் இயல்புகள் இன்ன இன்ன என்பதும் இந்நூலின் பெரும் பிரிவுகள். விலங்குணர்வோடு தோன்றும் மனிதன் எவ்வாழ்வு மேற்கொண்டொழுகினால் சாந்திநிலையெனுஞ் சாதுநிலை எய்தலாம் என்பதைக் காந்தியடிகள் வாழ்வின் வாயிலாக இந்நூல் அறிவுறுத்துகிறது.

**காந்தியடிகள்**

மனித வாழ்விற்குப் பேரிலக்கியமாக விளங்குங் காந்தியடிகள். கொல்லா அறந்தாங்கி, ஆண்டவன் வழி நின்று, இயற்கை வாழ்வு நடாத்துகிறார். இயற்கை வாழ்வைக் குலைத்துவரும் கொடுமைகளை உடைத்தெறிய அவர் முயன்று வருகிறார். அவைகளை உடைத்தெறிய அவர் கொண்டுள்ள முறை சத்தியாக்கிரகம். அஹிம்சைக்கு மாறுபட்ட முறைகளை அஹிம்சையாலேயே தகர்க்கவேண்டுமென்பது காந்தியடிகள் கொள்கை. அஹிம்சா தர்மத்தை அரசியற் போரில் நுழைத்த முதல்வர் காந்தியடிகளேயாவர். அரசியல்வழிச் சமய ஞானத்தைப் பரப்பும் பெருமை காந்தியடிகட்குண்டு. காந்தியடிகள் அரிய யோக நெறிகளையுஞ் சித்துக்களையும் உலகிற்குப் போதிக்கின்றாரில்லை. அவர் போதனை மிக மிக எளியது. ஓதலினுஞ் செயலின்மீது காந்தியடிகட்குக் கருத்து

அதிகம். தம்மால் செய்ய இயலாததை அடிகள் உலகுக்குச் சொல்வதில்லை.

'எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாதே; தீமைக்குத் தீமை செய்யாதே; துன்பம் பொறு; பகைவரிடத்தும் அன்பாயிரு; தீச்செயல்களில் வெறுப்புக் காட்டு; அச்செயல்புரியும் மனிதரிடத்தில் வெறுப்புக் காட்டாதே; இயற்கையோ டியைந்துவாழ்' –இத்தகைப் போதனைகள் காந்தியடிகளிடத்திருந்து பிறந்துள்ளன. இவைகளின்படி தமது வாழ்வை நடாத்தி, இவைகளைச் செயலில் நிகழ்த்திக்காட்டும் பெருமைவாய்ந்தவர் காந்தியடிகள். அவரே கீதை; அவரே திருக்குறள்.

ஒருவர்செயலில் வரும் ஒன்று, மற்றவர் செயலில் ஏன் வாராது? அடிகள் அறிவுறுத்தும் அறம் ஒரு காலத்தில் நமது நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் நிலவி இருந்தது. அத்தகைய ஒன்று இப்பொழுது எங்ஙனம் அரியதாகும்? இடையில் நுழைந்த செயற்கை வாழ்வு மனிதனது பழைய நிலையை மறக்கச் செய்திருக்கிறது. அம்மறப்பாம் இருளோட்ட எழுந்த உண்மை ஞாயிறு நங் காந்தியடிகள். அஞ்ஞாயிறு அருள், அஞ்சாமை, தியாகம், பொறுமை, நோன்பு, பயன் கருதாமை, மன்னிப்பு என்னும் ஏழ்கதிர் பரப்பிக் கான்றிக்கொண்டிருக்கிறது. அவ்வொளியில் மூழ்க உலகீர் எழுமின்! எழுமின்! 'எழுமின் எழுமின்' என்று உரைச்செய்யுளால் உலகோரை அழையாது, முன்னொருபோது யான் காந்தியடிகளை வழுத்திய 'இன்பப் பேறு' என்னும் பாச்செய்யுளால் அவரை அழைக்கிறேன்.

## இன்பப் பேறு

என்னை அறியா என்னுளங் கொண்ட
மயலொடு கலவா இயல்பெனுந் தேவி,
எழுந்தொரு பொழுது செழுந்தமிழ்க் குரலால்
‘உற்ற யாக்கையின் உறுபயன் யாதென’
பொறித்தனள் ஒருவினா; கருத்தினில் நின்றது
அலைத்தும் ஆட்டியும் குலைத்த தென்னை;
உண்மை தெளிய நண்ணினன்; கால்கள்
நடந்தன உணரேன்; கடந்தனன் வழிபல
அந்தி மாலை சிந்தையிற் றோன்றலும
கடற்கரை கண்டேன்; இடமென இருந்தேன்
உருகிய செம்பொன் கருகிய வானும்
பளிங்கு நொய்யென இலங்குவெண் மணலும்
நீனிறக் கடலும் நீளின அலையும்
இறைவன் வடிவா என்னை ஆண்டன
நிறைகாண் போழ்தில் நிலவிழிப் பொழிந்தே
உறக்கம் புகுந்தும் உணர்வழி விலையால்
அவ்வுணர் வொளியில் செவ்விய மெல்லியல்
தும்பை யன்னவோர் தூசணிந் தெதிரே
எழுதரும் வடிவோ டெழில்வெண் டாமரை
பூத்தது போலப் பொலிந்தன ளன்றே;
அன்னவள் அடியை அன்புடன் தொழுதே
என்னிலை யுணர்த்த, எழிலணங் கவளும்
“மைந்த! கேட்டி இந்தமா நிலத்தில்
‘உற்ற யாக்கையின் உறுபயன் யாதென’
வருந்தல் வேண்டா; திருந்து நல்வழி
இன்று கூறுவல், நன்று கேட்டி!
மக்கள் யாக்கையே மிக்கது மிக்கது

அன்னதன் பயனை இன்னதென் றுணரா
இல்லம் விடுத்துச் செல்லவும் வேண்டா
காடுகள் பலவும் ஓடவும் வேண்டா
மலைக ளேறி அலையவும் வேண்டா
காற்றை யீர்த்து மாற்றவும் வேண்டா
மனைவியை மணந்தும் மக்களை யீன்றும்
இனத்தொடு வாழ்ந்தும் இருந்தொழில் செய்தும்
உண்பன உடுப்பன உண்டும் உடுத்தும்
நாட்டை விடாது வீட்டி லுறைந்தும்
பிறவிப் பயனைப் பெற்று வாழலாம் ;
இலக்கிய மிதற்கொன் றியம்புவன் கேட்டி
கலக்கமி லுளத்தைக் காளைநீ பெறுக ;
இந்தியா ஈன்ற மைந்தருள் ஒருவன்
கூர்ஜர நாடன் கூர்த்த மதியினன்
தாய்மொழி காத்து நாய னானவன்
தன்னுயிர் போல மன்னுயிர் போற்ற
நல்லற மென்னும் இல்லற மேற்றோன்
மக்களை யீன்று மிக்கவ னானோன்
செயற்கை வெறுத்த செம்மை யாளன்
இயற்கை இன்பமே இன்பெனக் கொள்வோன்
உண்மை கடைப்பிடித் தொழுகுஞ் சீலன்
உண்மைகா ரணமா உயிரையும் விடுவோன்
வானந் துளங்கினும் மீனம் படினும்
மலைகள் வீழினும் அலைகள் பொங்கினும்
தன்னிலை மாறாத் தன்மை யாளன்
உலகி லுள்ள அலகிலா உயிர்கள்
தன்னுயி ரென்னும் தருமம் பெற்றவன்
பிறர்க்குக் கேடு மறந்துஞ் சூழான்
அன்புடை யார்பிறர்க் கென்பு முரியர் ’

என்னு மொழிக்கு இலக்கிய மானேன்
உண்மைஅஞ் சாமை ஒண்பே ராயுதம்
தாங்கி என்றும் ஈங்கு முரண்படு
தேக சக்தியை ஏக சக்தியாம்
ஆன்ம சக்தியால் அடக்கும் வீரன்
சினத்தை யொழித்த இனத்தவ ருறவோன்
யாண்டுத் துன்பம் எவர்க்கு நேரினும்
ஆண்டே அவனுடல் அணையு மன்றே ;
அவனுடல் மற்றவர் உடலே யாகும்
அவன்பொருள் மற்றவர் பொருளே யாகும்
அவனுயிர் மற்றவர் உயிரே யாகும்
தனக்கென வாழாத தன்மை பெற்றவன்
அன்பே வடிவாய் அமர்ந்த அண்ணல்
இன்பு பிறர்க்கே உழைத்தல் என்போன்'
சாந்த மயமெனுங் காந்திப் பெயரான்
நற்றவன் அடியைப் பற்றுவை யாயின்
ஐய ! யாக்கையின் பயனது விளங்கும்"
நல்லாள் பகர்ந்ததும் பொல்லா விழிப்பால்
ஒழிந்தது உறக்கமும் கழிந்தது இரவும்
அலையொலி யோடு வலைஞர்தம் ஒலியும்
கலைத்தன நிலையை அலைந்த உளத்தொடு
வீட்டைச் சேர்ந்து நாட்டினன் சிந்தையைக்
காந்தி யடிகளின் காந்தி யடிகளில் ;
கேடும் ஆக்கமும் ஓடும் செம்பொனும்
ஒன்றென மதிக்கும் நன்றுசேர் உண்மையும்
பெற்ற யாக்கையால் மற்றவர்க் குழைத்தலில்
இன்பப் பயனுண் டென்னுமோர் உண்மையும்
கண்டு யானுந் தொண்டுசெய் கின்றேன் ;
நம்மை யீன்ற அம்மை உரிமையை

*இழந்து வாடும் இன்னோர் இந்நாள்*
*காந்தி யாணை காந்தி யாணை*
*இன்போ டுழைக்க என்னுடன்*
*சேர வாருஞ் செகத்து ளீரே.*

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

காந்தியடிகள் வாழ்க

# வாழ்த்து

எவ்வுயிர்க் குயிராம் ஈசன் இணையடி வாழ்க ஐயன்
செவ்விய வடிவ மாகுந் திருவருள் இயற்கை வாழ்க
அவ்விரு தொடர்பு கண்ட அடிகளார் காந்தி வாழ்க
இவ்வுல கெங்கும் அன்னார் எழில்நெறி வாழ்க வாழ்க.

—திரு. வி. க.

# திரு. வி. கலியாணசுந்தரனார்
# இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் ... | 12 | 8 |
| பெரியபுராணம் - அரும்பத விசேட ஆராய்ச்சிக்குறிப்புரையும் வசனமும் ... | (அச்சில்) | |
| தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு ... | (அச்சில்) | |
| திருக்குறள் விரிவுரை:(முதற்பகுதி-பாயிரம்நான்கதிகாரம்) | 5 | 0 |
| ,, (இரண்டாம்பகுதி அறத்துப்பால்-ஆறு அதிகாரம்) | 3 | 0 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 5 | 0 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 5 | 0 |
| இந்தியாவும் விடுதலையும் 5 0 உள்ளொளி ... | 3 | 0 |
| தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு ... | 5 | 0 |
| நாயன்மார் வரலாறு ... | 4 | 0 |
| முருகன் அல்லது அழகு ... | 2 | 0 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... | 1 | 8 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் ... | 1 | 4 |
| முடியா ? காதலா ? சீர்திருத்தமா ? ... | 1 | 4 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 1 | 0 |
| சைவத்தின் சமரசம் 0 12 சைவத் திறவு ... | 0 | 8 |
| சன்மார்க்கபோதமும் திறவும் ... | 1 | 8 |
| சமரச சன்மார்க்கத் திறவு ... | 0 | 4 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் ... | 0 | 12 |
| இமயமலை அல்லது தியானம் ... | 0 | 8 |
| காரைக்காலம்மையார் திருமுறை—அரும்பதக் குறிப்புரையுடன் 0 10 ஆலமும் அமுதமும் ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் 0 4 சித்தமார்க்கம் | 0 | 6 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |
| உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் ... | 0 | 8 |
| பொதுமை வேட்டல் 1 8 முருகன் அருள் வேட்டல் | 0 | 8 |
| திருமால் அருள் வேட்டல் 0 4 சிவனருள் வேட்டல் | 0 | 8 |
| கிறிஸ்துவின் அருள்வேட்டல் 0 6 புதுமை வேட்டல் | 0 | 10 |
| கிறிஸ்து மொழிக் குறள் ... | 0 | 12 |
| நாயன்மார் திறம் 0 4 சமரச தீபம் ... | 0 | 6 |
| நினைப்பவர் மனம் 0 4 சைவ சமய சாரம் ... | 0 | 2 |

**சாது அச்சுக்கூடம், (முருகவேள் புத்தகசாலை),**
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை